உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

அருணந்தி தேவநாயனார்

அருளிய

சிவஞான சித்தியார் பரபக்கம்

(மெய்கண்ட சாத்திரம்)

(பரபக்கம் – பிறமதக் கொள்கைகளை விளக்கும் செய்யுள் நூல் மூலமும் உரையும்)

பதிப்பாசிரியர்

டாக்டர் இராச. வசந்தகுமார்

வேந்தர்

கற்பகம் உயர்கல்வி கலைக்கழகம்

(நிகர்நிலைப் பல்கலைக்கழகம்)

பன்னிரு திருமுறை ஆய்வு மையம்

கற்பகம் உயர்கல்வி கலைக்கழகம்

(நிகர்நிலைப் பல்கலைக்கழகம்)

ஈச்சனாரி, கோவை – 21.

நூற்குறிப்பு

நூல் பெயர்	:	**சிவஞான சித்தியார் பரபக்கம்**
உரை நூலாசிரியர்	:	**அருணந்தி தேவநாயனார்**
நூல் வகை	:	மெய்கண்ட சாத்திர நூல் (ஞான நூல்)
வெளியீடு	:	**பன்னிரு திருமுறை ஆய்வு மையம்** **கற்பகம் உயர்கல்வி கலைக்கழகம் (நிகர்நிலைப் பல்கலைக்கழகம்)** **கோயம்புத்தூர்.**
வெளியீட்டு எண்	:	**70**
வெளியிடும் நாள்	:	**24-02-2019**
பக்கங்கள்	:	504
தாள்	:	மேப்லித்தோ 80 gsm
அளவு	:	கிரவுன் 1/8
அச்சகம்	:	**செஞ்சுடர் அச்சகம்** கோ.வா.பாளையம், போத்தனூர், கோவை – 23. செல் : 9843174238

உ

சிவமயம்
திருச்சிற்றம்பலம்

சிவஞான சித்தியார் பரபக்கம்

பொருளடக்கம்

வ. எண்	தலைப்பு	பாடல் எண்கள்	பக்கம்
I	**பதிப்புரை**		7
II	அணிந்துரை		22
III	பதிப்பின் மதிப்பு		26
IV	அருணந்தி சிவாசாரியார் புராணம்		30
V	**நூல்** : 1. விநாயகர் காப்பு		33
	2. மங்கல வாழ்த்து (பாயிரம்)	1-10	35
	3. உலகாயதன் மதம் முன்னுரை		49
	4. 1அ உலகாயதன் மதம் 21 பாடல்கள்	11-31	51
	5. 1ஆ உலகாயதன் மதமறுதலை 31 பாடல்கள்	32-62	73
	6. உலகாயதன் மறுப்புத் தொகுப்பு		105
	7. உலகாயதம் - சைவசித்தாந்தம் ஒப்பீடு		110
	8. 2. பௌத்த மதம் முன்னுரை		112
	9. 2அ சௌத்திராந்திக மதம் முன்னுரை		114
	10. பௌத்தம் 2.அ சௌத்திராந்திக மதம் 31 பாடல்கள்	63-93	116
	11. சௌத்திராந்திக மதத் தொகுப்பு		148
	12. பௌத்தம் 2.ஆ சௌத்திராந்திகன் மதமறுதலை 40 பாடல்கள்	94-133	158
	13. சௌத்திராந்திக மறுப்புத் தொகுப்பு		212
	14. யோகாசார மதம் முன்னுரை		222
	15. பௌத்தம் 3.அ யோகாசார மதம் 1 பாடல்	134	223
	16. யோகாசார மதத் தொகுப்பு		224

	17. பௌத்தம் 3.ஆ யோகாசாரன் மதமறுதலை	2 பாடல்கள்	135, 136	226
	18. யோகாசார மறுப்புத் தொகுப்பு			228
	19. மாத்தியமிகன் மதம் முன்னுரை			229
	20. பௌத்தம் 4.அ மாத்தியமிகன் மதம்	1 பாடல்	137	230
	21. மாத்தியமிகன் மதத் தொகுப்பு			231
	22. மகாயானம், ஹீனயானம் வேறுபாடு			232
	23. பௌத்தம் 4.ஆ மாத்தியமிக மதமறுதலை	2 பாடல்கள்	138, 139	233
	24. மாத்தியமிகன் மறுப்புத் தொகுப்பு			235
	25. வைபாடிகன் மதம் முன்னுரை			236
	26. பௌத்தம் 5.அ வைபாடிகன் மதம்	1 பாடல்	140	237
	27. பௌத்தம் 5.ஆ வைபாடிகன் மதமறுதலை	1 பாடல்	141	238
	28. வைபாடிக மறுப்புத் தொகுப்பு			239
	29. சமணம் முன்னுரை			240
	30. நிகண்டவாதி சமணம் முன்னுரை			243
	31. சமணம் 6.அ நிகண்டவாதி மதம்	8 பாடல்கள்	142-149	244
	32. நிகண்டவாதி மதத் தொகுப்பு			254
	33. சமணம் 6.ஆ நிகண்டவாதி மதமறுதலை	14 பாடல்கள்	150-163	256
	34. நிகண்டவாதி மறுப்புத் தொகுப்பு			272
	35. ஆசீவகன் மதம் முன்னுரை			275
	36. சமணம் 7.அ ஆசீவகன் மதம்	10 பாடல்கள்	164-173	276
	37. ஆசீவகன் மதத் தொகுப்பு			287
	38. சமணம் 7.ஆ ஆசீவகன் மதமறுதலை	6 பாடல்கள்	174-179	290
	39. ஆசீவகன் மறுப்புத் தொகுப்பு			298
	40. சைவம் - சமணம் ஒப்பீடு			300

	41. மீமாம்சை மதம் முன்னுரை		303
	42. பட்டாச்சாரியன் மதம் முன்னுரை		304
	43. மீமாம்சை 8.க பட்டாச்சாரியன் மதம் 13 பாடல்கள்	180-192	305
	44. மீமாம்சை 8.உ பட்டாச்சாரியன் மதமறுதலை 10 பாடல்கள்	193-202	318
	45. பட்டாச்சாரியன் மதமறுப்புத் தொகுப்பு		333
	46. பிரபாகரன் மதம் முன்னுரை		336
	47. மீமாம்சை 9.க பிரபாகரன் மதம் 2 பாடல்கள்	203-204	337
	48. மீமாம்சை 9.உ பிரபாகரன் மதமறுதலை 2 பாடல்கள்	205-206	339
	49. பிரபாகர மீமாம்சம் மதமறுப்புத் தொகுப்பு		341
	50. பட்டமீமாம்சத்திற்கும், பிரபாகர மீமாம்சத்திற்கும் உள்ள வேறுபாடு		342
	51. அத்வைதம்		343
	52. ஏகான்ம வாதம்		344
	53. சத்தப்பிரமவாதி மதம் முன்னுரை		347
	54. ஏகான்மவாதம் 10.க சத்தப்பிரமவாதி மதம் 3 பாடல்கள்	207-210	348
	55. ஏகான்மவாதம் 10.உ சத்தப்பிரமவாதி மதமறுதலை 7 பாடல்கள்	211-218	351
	56. சத்தப்பிரமவாதி மறுப்புத் தொகுப்பு		357
	57. மாயாவாதம் முன்னுரை		358
	58. ஏகான்மவாதம் 11.க மாயாவாதி மதம் 15 பாடல்கள்	219-233	359
	59. ஏகான்மவாதம் 11.உ மாயாவாதி மதமறுதலை 18 பாடல்கள்	234-251	373
	60. மாயாவாத மறுப்புத் தொகுப்பு		392
	61. பாற்கரியன் மதம் முன்னுரை		395
	62. ஏகான்மவாதம் 12.க பாற்கரியன் மதம் 2 பாடல்கள்	252-253	396
	63. ஏகான்மவாதம் 12.உ பாற்கரியன் மதமறுதலை 5 பாடல்கள்	254-258	398
	64. பாற்கரியன் மத மறுப்பு		403

	65. நிரீச்சுரசாங்கியன் மதம் முன்னுரை		405
	66. சாங்கியம் 13.க நிரீச்சுரசாங்கியன் மதம் 1 பாடல்	259	406
	67. சாங்கியம் 13.உ நிரீச்சுரசாங்கியன் மதமறுதலை 3 பாடல்கள்	260-262	408
	68. வைணவம்		412
	69. பாஞ்சராத்திர மதம் முன்னுரை		433
	70. வைணவம் 14.க பாஞ்சராத்திர மதம் 7 பாடல்கள்	263-269	436
	71. வைணவம் 14.உ பாஞ்சராத்திர மதமறுதலை 31 பாடல்கள்	270-300	443
	72. பாஞ்சராத்திரம் மறுப்புத் தொகுப்பு		471
	73. அகப்புறச் சமயங்கள்		476
	74. அகச்சமயங்கள்		479
	75. அகப்புற, அகச்சமய மதமறுப்பு		482
	76. இசுலாம்		486
	77. கிறித்துவம்		492
	78. செய்யுள் முதற்குறிப்பகராதி		500

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

சைவசித்தாந்த சாத்திர நூல்கள்

(மெய்கண்ட சாத்திரங்கள்)

சிவஞானசித்தியார் - பரபக்கம்

வழிபாட்டுக் கருத்தரங்கம்

24.02.2019–ஞாயிறு,
27.04.2019, 28.04.2019–சனி, ஞாயிறு

பதிப்புரை

பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவன்அடி சேரா தார். - திருக்குறள் (10)

1. உயிரின் நோக்கம் / இலட்சியம் - வீடுபேறு, முத்தி, மோட்சம். (சொர்க்க நரகங்கள் அல்ல)

2. எடுத்துக்கொண்ட கொள்கைகள்

அ) எந்நிலையில் நின்றாலும் எக்கோலம் கொண்டாலும் மன்னியசீர்ச் சங்கரன் தாள் மறவாமை.

ஆ) யாதொரு தெய்வங் கொண்மின்; அத்தெய்வமாகி ஆங்கே மாதொரு பாகர் தாம் வருவார் எனத் தெளிதலும்/ உறுதிபட நிற்றலும்.

இ) பூதம் ஐந்தும் நிலையிற் கலங்கினும், மாதொரு பாகர் மலர்த்தாள் மறப்பிலாமை.

ஈ) சிவத்தைத் தவிர மற்றொரு தெய்வத்தைக் கனவிலும் நினையாதிருத்தல்.

உ) "ஞாலம் நின்புகழே மிக வேண்டும் தென் ஆலவாயில் உறையும் எம் ஆதியே" என்று எந்நேரமும் சிவன் புகழையே பாடிக்கொண்டிருத்தல். நம் புகழைப் பாடவோ, பரப்பவோ முயற்சி செய்யாதிருத்தல்.

ஊ) தம்மைத் தாம் முற்றிலும் மறத்தல்.

3. வகுத்துக்கொண்ட நெறிகள்

1) சிவபூசை - விசேட தீக்கை பெற்றுத் தினமும் சூரிய உதயத்தில் ஆன்மார்த்த படிகலிங்க மூர்த்திக்கு ஆனைந்துத் திருமஞ்சனத்துடன் 1008 போற்றி மலர் வழிபாடு.

2) எழில் ஞானபூசை - திருமுறைகளையும், சாத்திரங்களையும் ஓதுதல், ஓதுவித்தல்.

3) சிவாலயத் திருப்பணிகள் - அன்றாட, வாராந்தர, மாதாந்தர, வருடாந்தர பெருஞ்சாந்திப் பெருவிழாக்கள் நடத்த உதவி செய்தல் - நல்விழாப் பொலிவு காணுதல் - காண்பித்தல்.

"சிவன் கழல் போற்றி நிற்கும் சிந்தையின் நிறைவே செல்வம்" என வாழும் அடியார் பெருமக்களே, வணக்கம்.

இறைவனையும் இறைவனால் இயம்புரூலும் ஈண்டளவும் பொருளியல்பும் வேண்டும் செய்தி
முறைமைகளும் பெத்தமொடு முத்தியெல்லாம் மூதுலகில் எமக்கியன்ற முயற்சி யாலே
சிறையுலவும் புனல்நிலவித் தோன்றும் பேய்த்தேர்ச் செய்கை போலுண்டாய பொய்கொள் மார்க்கத்
துறைபலவும் கடாவிடையாற் சொல்லிப் போக்கித் துகள்தீர இந்நூலில் சொல்ல கிற்பாம்.

– சிவஞானசித்தியார் பரபக்கம் 10

சிவஞானபோத நூலுக்கு ஒரு சிறந்த பேருரையாகப் பாட்டு வடிவில் அமைந்துள்ள சிவஞானசித்தியார் என்னும் இந்நூலின் ஆசிரியர் அருணந்திசிவாசாரியார், தமது ஞானாசிரியர் மெய்கண்டாரிடம் உபதேசம் பெற்ற வகையில் இப்பாடலின் மூலம் இயம்பும் கருத்து யாது? சிவபெருமானையும், சிவபெருமானால் அருளிச் செய்யப்பட்ட வேதசிவாகமப் புராணப் பொருள்களையும், இவ்விடத்து உண்டாகிய அளவைப் பிரமாணமும், அவ்வளவையால் அறியும் பொருள்களின் இயல்பும், அப்பொருளின் வழிநின்றோர் செய்யவேண்டிய சரியை, கிரியா, யோக ஞானதவங்களையும், இவ்வுலக வாழ்வுநெறிகளையும், முத்தி நெறிகளையும், பழையதாய் வருமுலகில் எமக்குக் கூடின செயலாலே,

கரையில் அகப்பட்டு நிற்கும் நீரையொப்பத் தோன்றுகின்ற பேய்த்தேரை மெய்யென்று நிரூபிக்கும் பொய்யான தன்மைபோல நூல்களாகவும், வழிகளாகவும் கேட்டார்க்குப் பொருந்தத் தக்கதாக உண்டான பொய்யைக் கைக்கொண்ட வழிகளாகிய உலகாயதன் முதல் பாஞ்சராத்திரி ஈறாகிய பரசமயிகளுடைய பல துறைகளையும் தடைகளாலும், விடைகளாலும் சொல்லி நீக்கி குற்றந்தீர ஞான பாதத்தை அறிய இந்நூலில் சொல்லக் கடவேம். நூற்பயன் வீடுபேறாம்.

நூலாசிரியர் தாம் எழுதிய நூலின் பயன் இதுவென்பதைத் தெள்ளத்தெளிவாகப் பாடலாக இயம்பியதன் காரணத்தாலும், இதைப்போன்ற சொற்சுவை, பொருட்சுவையுடன் விளங்கும் ஏராளமான பாடல்களைத் தன்னகத்தே கொண்ட பெரிய நூலாக இருப்பதாலும்தான் "சித்திக்கு மேல் நூலில்லை; சிவத்துக்கு மேல் தெய்வமில்லை" என்ற பழமொழி எழுந்தது. மற்றும் "பார் விரிந்த நூலெல்லாம் பார்த்தறியச் சித்தியிலே – ஓர் விருத்தப்பாதி போதும்" என்றருளிச் செப்தனர் சிவபோக சாரமுடையார். "பாதி விருத்தத்தால் இப்பார் விருத்தமாக வுண்மை சாதித்தார் பொன்னடியைத் தான் பணிவது எந்நாளோ" என்று தாயுமான சுவாமிகள் அருளினார்.

திராவிட மாபாடிய கர்த்தராகிய மாதவச் சிவஞான சுவாமிகள் இதனைச் "சிவாகமார்த்தங் களுக்கெல்லாம் உரையாணி" எனப் போற்றியருளினார்.

நூல்கள் எத்தனை வகை என்பதற்கு ஒரு அருமையான பாடலை அருணந்தி சிவாசாரியார் இயற்றுகிறார்.

முன்னூலும் வழிநூலும் சார்புநூலும் மூன்றாகும் உலகத்து மொழிந்த நூல்கள்
இந்நூலில் உன்நூல் இங்கு என்நூல் என்னில் இந்நூல்கண் எந்நூல் என்று இயம்பமாட்டா

உன்நூலும் ஒரு நூலாய் உரைப்பது என்னே உலண்டுநூல் பருத்திநூல் சிலம்பிநூல்கள்
அந்நூலும் அல்லாத பொய்ந்நூல் கொண்டிங்கு அறநோற்றுத் திரிந்தவாறு அழகிதாமே.

மேற்கண்ட பாடலில் 16 முறை "நூற்" சொற் பிரயோகம் நடைபெற்றுள்ளது.

ஞானப்பூசையின் உயர்வைக் கீழ்க்காண் சுபக்கப்பாடலில் விளக்குகிறார்.

ஞானநூல் தனையோதல் ஒதுவித்தல் நற்பொருளைக் கேட்பித்தல் தான் கேட்டல்
ஈனமிலாப் பொருளதனைச் சிந்தித்தல் ஐந்தும் நன்றா இறைவனடி யடைவிக்கும் எழின்ஞானபூசை
ஊனமிலாக் கன்மங்கள் தபஞ்செபங்கள் தியானம் ஒன்றுக்கொன்று உயருமிவை யூட்டுவது போகம்
ஆனமையான் மேலான ஞானத்தால் அரனை அர்ச்சிப்பார் வீடெய்த அறிந்தோரெல்லாம்.

ஒரு முறை இம்முழு நூலையும் நாம் உணர்ந்து படித்து விட்டால் வேறு வழிகளுக்குச் செல்லமாட்டோம். இவ்வாறெல்லாம் நாமுய்ய,

முப்பொருளின் ஈரியல்பும் ஓரியல்பா நுவலாது முறை வெவ்வேறாய்
செப்புசிவாகமங்களின்தன் பொருள் ஒருமை பெறவுணர்த்து திறமுன்னூலை
ஒப்பவிரி யாப்பதனாற் சித்தியெனும் வழிநூலா ஒளிர் பிற்காலத்து
இப்புவியோர் தெளித்துய்ய மொழிந்த அருணந்திசிவன் இணைத்தாள் போற்றி போற்றி.

என்று வணங்கி நூலுக்குள் செல்வோம்.

சிவஞான சித்தியார் என்னும் நூலானது சிவஞான போதத்தின் வழிநூலாய் புறச்சமயங்களின் நிலை இனைத்தென அளவிடும் பரபக்கமும் சித்தாந்த சமயத்தின் மெய்ப்பொருள் தெரிக்கும் சுபக்கமும் ஆகிய இரண்டு பெரும்பகுதிகளைபுடையது. பரபக்கம் – பிற மதத்தவருடைய கொள்கை எனப் பொருள் கொள்ள வேண்டும். சிவஞான போதத்துள் அவையடக்கங்கூறிய ஒரு திருப்பாட்டினையே பரபக்கம் அடிப்படையாகக் கொண்டுள்ளது. சுபக்கம், சிவஞானபோதப் பன்னிரண்டு சூத்திரங்களின் பொருளைப் பன்னிரண்டு அதிகாரங்களில் விரித்துவிளக்கும் நூலாகும்.

சமயம் என்றால் என்ன? எந்தச் சூழ்நிலையில் பல்வேறு சமயங்கள் உருவாகின?

அறுவகைச் சமயத் தோர்க்கும் அவ்வவர் பொருளாய் வேறாம்
குறியது உடைத்தாய் வேதாகமங்களின் குறியிறந்து அங்கு
அறிவினில் அருளால் மன்னி அம்மையோடு அப்பனாகிய
செறிவு ஒழியாது நின்ற சிவனடி சென்னிவைப்பாம்.

– சிவஞானசித்தியார் சுபக்கம் – மங்கல வாழ்த்து

"மக்கள்தாம் ஆறறிவுயிரே" என்பது தொல்காப்பியம். "அண்டப்பகுதியின் உண்டைப் பிறக்கம்" என்று மாணிக்கவாசக சுவாமிகள் இவ்வுலகங்களின் மிகப்பெருநிலைகளை விளக்குகிறார். 84 லட்சம் யோனி பேதங்களாகிய நம் போன்ற 725 கோடி மானுடர்களையெல்லாம் படைத்து, காத்து, ஒடுக்கி, மறைத்து, அருளுகின்ற இறைவன் எவ்வளவு பெரிய கருணையாளன் ?

ஆறறிவு கொண்டு வாழ்ந்த மக்கள் தாம் உண்டு, உடுத்து, வாழ்வாங்கு வாழச் சிறுநெல்தானியம் முதல் விளைபாடுவதற்கான பேருலகம் உட்பட அனைத்தையும், வடிவமைத்துக் கொடுத்த மூலப்பொருள் யாது என்பதையும் சிந்திக்க ஆரம்பித்தனர்.

இத்தருணத்தை எதிர்நோக்கியிருந்த இறைவனும் பலவகைப்பட்ட உயிர்களின் ஈடேற்றம் கருதிப் பல சமயங்களை வகுக்க எண்ணித் திருவுள்ளம் கொண்டார். மக்களின் மேற்காண் சிந்தனைக் கூறுகளும் ஒன்ற அச்சிந்தனையின் பயனாக அவரவர்களுக்கும் தோன்றிய கருத்துக்களே, வேண்டுவார்க்கு வேண்டுவதே ஈயும் சிவனருளால் வடிவு பெற்றுச் சமய தத்துவம் என அழைக்கப்பெற்றன.

ஆணவ மல மறைப்பாற்றல் உயிர்தோறும் வேறுபடும். அணுவைவிடப் பன்மடங்கு சிறிதான இந்த உயிருக்கு ஒரு விலாசம் உண்டு. இதனை இயக்க விசேடமான கடவுச் சொல்லும் உண்டு. அதனுள் நினைப்பாற்றல் கருவியும் உண்டு. ஒருமையுள் ஓர் உயிர் கற்ற கல்வி எழுமையும் பயன்படுவது அக்கருவியால் தான். உடலுக்குள் உயிர், உயிருக்குள் சிவம், சிவத்தின் நுண்மையை என்னவென்று சொல்வது?

சமயம் என்ற சொல்லுக்கு, சமைக்கப்பட்டது, கட்டப்பட்டது, பக்குவப்படுத்தப்பட்டது என்று பல பொருள் கூறுவர். உயிர்கள் தத்தம் நிலைக்கேற்பப் பலப்பல சமயங்களைச் சார்ந்து தத்துவ விளக்கம் கண்டு படிமுறையில் சைவசித்தாந்த செந்நெறி சேர்ந்துய்யத் திருவருள் கொண்டு செலுத்தும். இவ்வாறு அவரவர் அறிவு, சிந்தனை ஆற்றலுக்கு ஏற்பத் தோன்றியனவே பல சமயங்கள். இவ்வாறு தோன்றிய சமயங்கள் எண்ணிறந்தனவாக இருந்தாலும் அவற்றை ஆறு பெருவகைச் சமயங்களாக வகைப்படுத்தினர் நமது மூதாதையர்கள். இவற்றை புறப்புறம், புறம், அகப்புறம், அகம் என்ற நான்கு பகுப்புகளாக ஏற்படுத்தி ஒவ்வொன்றின் கீழும் ஆறு சமயங்களை வகைப்படுத்தினர். உயிர்களின் சிற்றறிவு, ஆணவ மலமறைப்புகளின் காரணமாக இச்சமயங்களும் சிறு கருத்து வேறுபாடுகளில் பிரிவுண்டன. இவற்றைப் பற்றி நாம் தெரிந்துகொண்ட பின் சைவம் எவ்வாறு உயர்ந்ததென்ற முடிவுக்கு வரலாம். "களவும் கற்று மற" என்பது போல இவற்றைப் பற்றிய அறிவு விளக்கம் கண்டபின் அவற்றை விட்டொழிந்து, சிவச்சிந்தனைக்கு வந்துவிடவேண்டும். அதன் பின்னால் போக நினைத்தால் தவம்போய் விடும். "யாதொரு தெய்வம் கொண்டீர் அத்தெய்வம் ஆகியாங்கே மாதொரு பாகனார் தாம் வருவர்" என்பது சிவஞான சித்திநெறியாகும்.

"எந்நிலையில் நின்றாலும் எக்கோலம் கொண்டாலும்
மன்னியசீர்ச் சங்கரன் தாள் மறவாமை பொருள்"

என்பது தெய்வச் சேக்கிழார் காட்டும் நன்னெறியாகும். இந்த அடிப்படைக் கோட்பாடுகளை உள்நிறுத்தி அறுவகைச் சமயங்களையும், அவற்றின் உட்பிரிவுகள், தத்துவங்கள், கொள்கைகள் ஆகியவற்றை உணர முற்படுவோருக்குச் சித்தாந்த சைவ சமய சாத்திர நூல்களில் சிவஞான சித்தியார் பரபக்கமும், சங்கற்ப நிராகரணமும் உதவுகின்றன.

இவைகளையெல்லாம் ஆதாரமாக வைத்துச் சிவஞான போத மாபாடியகாரரான மாதவச் சிவஞானயோகிகள் சித்தாந்த சைவத்திற்கு மாறான சமயங்கள் அனைத்தையும் மேற்கண்டவாறு புறப்புறம், புறம், அகப்புறம், அகம் என நான்கு கூறாக்கி ஒவ்வொரு கூறிலும் ஆறு சமயங்களை வைத்து "நாலாறு இருபத்துநான்கு" எனச் சமயங்களை வரையறை செய்து அவற்றுள் ஒவ்வொன்றன் கொள்கைகளையும் சுருக்கமாக, சிவஞானபோத அவையடக்க மாபாடியத்தில் கூறினார். கடந்த அமர்வில் நமது மையம் வெளியிட்டுள்ள சிவஞானபோதப் பொருள்நிலை விளக்க நூலில் அவற்றைக் குறிப்பிட்டுள்ளோம். அவற்றுள் சிவஞானசித்தியார் பரபக்கத்துள் சொல்லப்படாத சில கருத்துக்களும் சொல்லப்பட்டுள்ளன. மாபாடியார் காலத்தால் பிற்பட்டவர். ஆதலின், பிற்காலத்தில் ஏற்பட்ட மாறுதல்கள் அவருடைய பாடியத்தில் காணப்படுகின்றன என நாம் கொள்ளலாம். மாபாடியகாரரின் சமய வகுப்புக் கொள்கையைக் கீழ்க்கண்டவாறு பட்டியலிடுகிறோம்.

சிவஞான மாபாடியகாரர் மாதவச்சிவஞான யோகிகள் வகுத்த சமயங்களின் வகைகள்

வ எண்	பொருள்	புறப்புறச் சமயங்கள்	புறச்சமயங்கள்	அகப்புறச் சமயங்கள்	அகச்சமயங்கள் (சைவ பேதங்கள்)
1.	வேதம்	ஏற்றுக்கொள்ளா	ஏற்றுக்கொள்ளும்	ஏற்றுக்கொள்ளும்	ஏற்றுக்கொள்ளும்
2.	சிவ ஆகமங்கள்	ஏற்றுக்கொள்ளா	ஏற்றுக்கொள்ளா	ஏற்றுக்கொள்ளும்	ஏற்றுக்கொள்ளும்
3.	பின்பற்றும் நூல்கள் / கோட்பாடுகள்	வியாழன் இயற்றிய உலகாயத சித்தாந்த நூல், பிடகம், ஆருகதம்	வேதங்களை ஏற்றுக் கொள்வதால் வைதிக சமயங்கள்	பாசுபதம் முதலான நூல்களையே தந்திரங்களையே சிறப்பாகக் கொள்ளும். ஆணவ மலத்தை ஏற்கமாட்டார்கள்	வீடுபேற்று நிலையில் சைவ சித்தாந்தக் கொள்கையி லிருந்து மாறுபடும். உண்மைப்பொருள் மாறுபடக்கூறும்
4.	வகைகள் நான்கு பௌத்தத்தின் பிரிவுகள்	ஆறுவகை 1. உலகாயதம் (சார்வாகம்) 2. சௌத்திராந்திகம் (ஹீனயானம்) 3. யோகாசாரம் (மகாயானம்) 4. மத்தியமிகம் (ஹீனயானம்) 5. வைபாடிகம் (ஹீனயானம்) 6. ஆருகதம் (சமணம்)	ஆறுவகை 1. தருக்கம் (வைசேடிகம், நையாயிகம்) 2. மீமாம்சை 3. ஏகான்மவாதம் 4. சாங்கியம் 5. யோகம் 6. பாஞ்சராத்திரம்	ஆறுவகை 1. பாசுபதம் 2. மாவிரதம் 3. காபாலம் 4. வாமம் 5. வயிரவம் 6. ஐக்கியவாத சைவம்	ஆறுவகை 1. பாடாணவாத சைவம் 2. பேதவாத சைவம் 3. சிவசமவாத சைவம் 4. சிவசங்கிராந்தவாத சைவம் 5. ஈசுவர அவிகார வாத சைவம் 6. சிவாத்துவித சைவம். இவை சித்தாந்த சைவத்தோடு முரணுதல் முத்தி நிலை பற்றித்தான்.

5.	ஒழுகலாற்றில் இருப்பவை	பௌத்தம் சமணம்	ஏகான்மவாதம் பாஞ்சராத்திரம்		
6.	கொள்கையளவில் இருப்பவை		ஏனையவை		
7.	சித்தாந்தம்	சைவத்திற்கு பெரிதும் தொலைவில் இருப்பன	சைவத்தை நோக்கிச் சிறிது முன்னேறியவை	சைவத்தை அணுகும் நிலையில் உள்ளன	சைவத்தை மிக நெருங்கி விட்ட சமயங்கள்

யாதொரு சமயத்திலும் அதற்கெனவுள்ள சில மரபுகளும் கொள்கைகளும் உள்ளன. அவற்றுள் மரபு என்னும் ஒன்றையே கொண்டு விளங்குகின்ற ஆறு சமயங்களைத் தற்காலத்தவர் பட்டியலிட்டுள்ளனர். அவை சைவம், வைணவம், சாக்தம், காணாபத்தியம், கௌமாரம், சௌரம் என்பன. இச்சமயங்கள் அனைத்தும், தாம் மரபாக வழிபட்டுவரும் கடவுளை வைத்துச் சொல்லப்படுவனவேபாகும். தத்துவம், மரபு என்ற இரண்டில் ஏதாவது ஒன்றின் அடிப்படையில் மதங்களைப் பிரித்து ஆராய்வது தொன்றுதொட்டு நடந்துவருகிறது.

தற்கால அறுவகைச் சமயங்கள் (இந்து மதத்தின் உட்பிரிவுகள்)

சமயம்	கடவுள்
சைவம்	சிவபெருமான்
வைணவம்	திருமால் / மகாவிட்டுணு
சாக்தம்	அம்பாள்
காணாபத்தியம்	விநாயகர்
கௌமாரம்	முருகர்
சௌரம்	சூரியன்

சிற்சில மரபுகளில் சைவத்தை நீக்கி சௌமியம் (சந்திரன்) என்பதைச் சேர்த்து வழிபடுதலும் உண்டு. சைவம் என ஒன்றாகச் சொல்லப்பட்டாலும் அதிலேயும் கொள்கை வேறுபாடுகள் உண்டு. அதனால் சித்தாந்தத்திற்கு மாறுபட்ட சைவங்கள் அகச்சமயங்கள் எனப்பட்டன. சித்தாந்த சைவமே உண்மைச் சைவமாகும்.

சமயங்களில் சிறந்தது சைவம். அதிற் சிறந்தது சித்தாந்த சைவமாகும். இதன் கொள்கையே சைவ சித்தாந்தம். இதைப் பின்பற்றி வாழ்ந்தால்தான் நாம் வீடுபேற்றை அடையமுடியும்.

சிவஞானசித்தியார் பரபக்கத்தில் தொகுத்து உரைக்கப்பட்டவை

புறப்புறச் சமயம்

1. உலகாயதம் 2. பௌத்தம் (i) மாத்தியமிகம்
(ii) யோகாசாரம் (iii) சௌத்திராந்திகம் (iv) வைபாடிகம்

3. ஆருகதம் (அமணமதம்)

(i) நிகண்டவாதி (ii) ஆசீவகன்

புறச் சமயம்

4. மீமாஞ்சை

(i) பட்டாசாரியன் (ii) பிரபாகரன்

5. ஏகான்ம வாதம்

(i) சத்தப்பிரமவாதம் (ii) மாயாவாதம் (iii) பாற்கரியவாதம்

6. சாங்கியம்

நிரீசுவரசாங்கிய மதம்

7. பாஞ்சராத்திர மதம்

சிவஞானசித்தியார் பாடல்தொகை பரபக்கம்

முகவுரையிற் றசமெழுமூன் றதன்முப்பா னொன்று
மூதுலகன்முப்பானொன் றெண்ணைந்தாம் புத்தன்
திகழ்மூவர்க் கோரெட்டாம் நிகண்டனுக்கெட்டீரேழ்
சீவகனுக் கீரைந்தோ டிருமூன்றாம் பாட்டான்
பகர்பதின்மூன் றீரைந்தே பாகரனீ ரிண்டாம்
பரிணாமன் நான்கிருநான் கேமாயா வாதன்
நிகழையும் மூன்றறு மூன்றும் பாற்கரியற் கேழாம்
நிரீசுரற்குச் சதுராத்திரி யெழுமுப்பா னொன்றே.

சிவஞானசித்தியார் பரபக்கப் பகுதியாகிய இந்நூலுள் உள்ள திருவிருத்தங்கள்–301. அவை வருமாறு:

விநாயகர் காப்பு 1

மங்கல வாழ்த்து 10

		மதம்	மறுதலை
1.	உலகாயதன்	21	31
2.	சௌத்திராந்திகன்	31	40
3.	யோகாசாரன்	1	2
4.	மாத்தியமிகன்	1	2
5.	வைபாடிகன்	1	1
6.	நிகண்டாவாதி	8	14
7.	ஆசீவகன்	10	6

8.	பட்டாச்சாரியன்	13	10
9.	பிரபாகரன்	2	2
10.	சத்தப்பிரமவாதி	4	8
11.	மாயாமதவாதி	15	18
12.	பாற்கரியவாதி	2	5
13.	நிரீச்சுரசாங்கியன்	1	3
14.	பாஞ்சராத்திரி	7	31
		117	**173**

பரபக்கத்துள் ஒவ்வொரு மதம் அல்லது அதன் உட்பிரிவின் கொள்கைகளை வைத்துப் பாடிவிட்டு தொடர்ந்து அவற்றைப் பற்றிய மறுப்புக் கருத்துக்களை மறுதலையாகப் பாடி அருள் செய்துள்ளார். பரபக்கத்துள் புறப்புறச் சமயங்களையும், புறச்சமயங்களையும் ஆசிரியர் ஆராய்ச்சிக்கு எடுத்துக்கொண்டார். அவைகள் யாவும் சிவாகமப் பிரமாணத்தை ஒப்புக் கொள்ளாமையால் புறச்சமயங்களெனப்பட்டன. வைதிகச் சார்பில்லாத சமயங்களை புறப்புறமெனவும் வைதிகச் சார்புடைய சமயங்களைப் புறமெனவும் வகுத்துக் கூறினார். புறப்புறச் சமயிகளுள் நாற்பூதங்களை மாத்திரம் உட்பொருளெனக் கொள்ளும் 1) உலோகாயதரும், 2) சௌத்திராந்திகர், 3) யோகாசாரர், 4) மாத்தியமிகர், 5) வைபாடிகர் ஆகிய நால்வகைப் பௌத்தரும், 6) நிகண்டவாதி, 7) ஆசீவகன் என்ற இருவகைச் சமணரும் அடங்குவர். புறச்சமயத்துள் 8) பட்டாசாரியன் மதம், 9) பிரபாகரன் மதம் என இருவகை மீமாஞ்சக மதமும், 10) சத்தப்பிரமவாதம், 11) மாயாவாதம் 12) பாற்காரியவாதம் 13) நிரீச்சுர சாங்கிய மதமும், 14) பாஞ்சராத்திர மதமும் அடங்கும். தருக்கமதம், நியாயமதம், யோகமதம் என்ற மூன்றும், ஆசிரியர் சிவஞான சுவாமிகளாலே புறச் சமயத்துள் வைத்து ஒதப்படினும், அவை ஒரு முதல்வனை யுடைமையால் சிறப்பாக எடுத்துக் கண்டிக்கப்படவில்லை. 301 பாடல்களில் இந்த 14 மதக் கொள்கைகளும் பிறநெறிகளும் தனித்தனியாக ஆய்வாகப் பாடப்பட்டு ஒவ்வொரு மதக் கொள்கைகளும் தனித்தனியாக ஆதாரங்களுடன் மறுக்கப்பட்டுள்ளன.

உயிர்களாகிய நமது குறிக்கோள் வீடுபேறாகும். அந்த வீடுபேற்றைப் பற்றிப் பிறசமயங்கள் என்ன கூறுகின்றன என்று கீழ்க்கண்டவாறு இந்நூல் வழி நாம் ஒப்பிட்டுப் பார்க்கலாம்.

பிற சமயங்கள் கூறும் முத்தி நிலை

சித்தாந்த சைவமல்லாத ஏனைய சமயங்கள் கூறும் முத்திநிலைகள் யாவும் தத்துவங்கள் முப்பத்தாறாகிய நிலம் முதல் நாதம் ஈறாகியவற்றுள் அடங்கிவிடும்.

வ.எண்	சமயம்	சமயத்தின் முத்திநிலைக் கொள்கை
1.	உலோகாயதம்	இவ்வுலகமே உண்மை. சுவர்க்க நரகங்கள் இல்லை. இவ்வுலக இன்பமே சுவர்க்கம். இவ்வுலகத் துன்பமே நரகம். சிற்றின்பமே முத்தி.
2.	பௌத்தம்	உருவம், வேதனை, ஞானம், குறி, பாவனை என்னும் ஐந்து கந்தங்களும் (கந்தம் - கூட்டம்) அடியோடு கெடுதலே முத்தி. சூனிய நிலையே (விளக்கணைத்தலைப் போல) முத்தி.
3.	சமணம்	முடிவில்லா அறிவு, முடிவில்லாக் காட்சி, முடிவில்லா ஆற்றல், முடிவில்லா இன்பம், பெயரின்மை, குடிவழியின்மை, வயதின்மை, அழிவின்மை என்ற எண்குணமும் அடைந்து எல்லா உலகங்கட்கும் மேலான வீட்டுலகம் பெற்று எல்லோராலும் வணங்கப்படும் அருக நிலையை அடைவது வீடாகும்.
4.	மீமாம்சம்	வேதோக்தமான கன்மானுட்டனங்களைச் செய்து இத்தேகம் நீங்கிய பின்னர் மறுமையில் திவ்விய தேகத்தைப் பெற்று சுவர்க்க போகம் அனுபவித்தலே முத்தி.
5.	வைசேடிகம்	சுகதுக்கங்களும் அவற்றின் காரணமான ஞானமும் நீங்கப்பெற்று கல்லைப்போல ஓரறிவு கூட இல்லாதிருப்பதே முத்தி.
6.	சாங்கியம்	பிரகிருதி, புருடன் இவை வேறு வேறு ஆனவை என்று அறிவித்து ஆன்மா பிரகிருதி விகாரங்களுக்கு வேறாகியான், எனது நீங்கி நிற்பதே முத்தி.
7.	மாயாவாதம்	மாயையையும், பிரமத்தையும் விசாரித்து மாயையை நீக்குவதே முத்தி.
8.	பாஞ்சராத்திரம்	திருமாலின் அருளால் இவ்வுடம்பிலிருந்து நீங்கி அழியாத சுத்தசித்து ரூபியாய் விட்டுணுவுக்குரிய திவ்விய தேகம் பெற்றுச் சகல போகங்களும் மகாவிட்டுணுவைப் போலவே நித்தியமாகப் பெற்றிருக்கை முத்தி.
9.	சிவசமவாதம்	சிவனருளால் ஆணவம் முதலிய மும்மலங்களும் நீங்க, சத்தியமும் சுத்தமுமாகிய ஆன்மாவினிடத்தில் ஞானக் கிரியைகள் பிரகாசிக்கப் பெற்று அவற்றின் பிரகாசத்தினால் சருவஞ்ஞத்துவாதி ஆறு குணங்களும் விளங்கப்பெற்ற சிவசமமாய் இருப்பதே முத்தி.

நமது சித்தாந்த சைவ சமயத்தின் முத்திநிலைக் கொள்கை

பிரதான சாலையில் வீடுபேற்றை நோக்கிப் பயணம் செய்து கொண்டிருக்கும் உயிர் முன்வினைகள் காரணமாக பிரிவு சாலைகளில் பிறர் மதம் அறிய விரும்பிச் சென்றாலும் உடனே திரும்பி பிரதான சாலைக்கு வந்துவிடவேண்டும். ஆரியக் கூத்தாடினாலும் காரியத்தில் கண்ணாம் வீடுபேற்றை நோக்கியே நமது பயணம் இருக்க வேண்டும்.

சிவமும், உயிர்களாகிய நாமும் எப்போதும் பிரிப்பற்றே உள்ளோம். ஆணவ மலம் நம் உயிரின் அறிவைத் தடுத்திருப்பதால் அப்பிரிப்பின்மையை உணர முடியவில்லை. சிவத்தின் அருளால் பக்குவ நிலையில் இந்த ஆணவ மல மயக்கம் நீங்கிய பிறகு உயிர்சிவத்தோடு பிரிப்பிலாது நிற்றலைக்கண்டு, சிவானந்தப் பரவசத்தில் 36 தத்துவங்களைக் கடந்து சிவத்தின் திருவடி நிழலில் நீக்கமற நிறைந்திருப்பதே முத்தி. அது பிறப்பு இறப்பு ஆகிய சுழற்சியில் சிக்காத நிலை. உயிர் சிவத்துக்குச் சமமாகாது. சிவமும் ஆகாது. ஐந்தொழில் புரியுமாற்றல் முதலியவற்றைப் பற்றி நினைத்தே பார்க்கக்கூடாது. முத்தியிலும் அடிமை மீளா அடிமையே. மலவாசனை மறுபடியும் ஏதாவதொரு வேளையில் தாக்காதிருக்க இந்த அடிமைத்திற நிலை உறுதியோடு திருவைந்தெழுத்து ஒதும் வழக்கத்தையும் சிக்கெனப் பிடித்துக் கொள்ளவேண்டும்.

இச்சைவசமயக் கோட்பாடுகளை அளவைகளாலும், பொருந்து மாற்றானும் விளக்க வந்தனவே மெய்கண்ட நூல்கள்.

மறுப்புக்கள்

இதுகாறும் நால்வகைப் பகுப்பில் அடக்கிக் கூறப்பட்ட இருபத்து நான்கு சமயங்களின் தத்துவக் கோட்பாடுகள் விளக்கப்பட்டன. இவற்றின் வன்மை, மென்மைகளை எடுத்து ஆராய்ந்த பெரியவர்கள் இருவர். அவர்கள் அருள்நந்தி சிவாசாரியாரும், உமாபதிசிவமும் ஆவர். இவர்களில் அருள்நந்தி சிவாசாரியார் மறுத்த சமயங்கள் உலகாயதம், சௌத்திராந்திகம், யோகாசாரம், மாத்தியமிகம், வைபாடிகம், நிகண்டவாதம், ஆசீவகம், பட்டாச்சாரியன்மதம், பிரபாகரன் மதம்,சத்துப் பிரமாவாதம், மாயாவாதம், பாற்கரியன்மதம், நிரீச்சுரசாங்கியன்மதம், பாஞ்சராத்திரம் எனப் பதினான்காம்.

இவரால் மறுக்கப்பட்ட புறப்புறச்சமயங்கள் ஏழனுள் ஆசீவகம், நிகண்டவாதம் என்பன சமணம் என்ற ஒன்றில் அடக்கப்பட்டுப் புறப் புறச் சமயங்கள் ஆறாகின்றன. இனிப்புறச் சமயங்கள் ஆறனுள் இவரால் மறுக்கப்பட்ட சமயங்கள் நான்கே ஆம். இவற்றுள் மீமாஞ்சை இரண்டாகவும், ஏகான்ம வாதம் மூன்றாகவும் பகுத்து மறுக்கப்பட்டுள்ளன. இவை பற்றிய விளக்கம் முன்னரும் கூறப்பட்டுள்ளது.

உமாபதி சிவம் மறுத்த சமயங்கள் மாயாவாதம், பாடாணவாதம், ஐக்கியவாதம், பேதவாதம், சிவசமவாதம், சிவசங்கிராந்த வாதம், ஈசுவர அவிகாரவாதம், நிமித்த காரண பரிணாமவாதம், சைவ வாதம் என ஒன்பதாம்.

இவற்றுள் மாயவாதம் புறச் சமயமாம். ஐக்கியவாத சமயம் அகப்புறச்சமயம் ஆம். சைவ வாதம் நீங்கலாக எஞ்சிய ஆறும் அகச்சமயங்களாம். சைவவாதம் இவரால் விதந்து எடுத்து மறுக்கப்பட்டுள்ளது.

இவ்விருவராலும் விதந்து எடுத்து மறுக்கப்படாத சமயங்கள் எட்டாம். அவை அகப்புறச் சமயங்கள் ஆறும், புறச்சமயமான தருக்கமும், யோகமும் ஆகிய இரண்டுமாம். இவர்கள் இருவராலும் மறுக்கப்பட்டிருக்கும் சமயம் மாயாவாதம் ஒன்றுமாம். இவ்வகையில் அவர்களாலும் அவர்கள் வழி நின்றும் மேற்கூறிய இருபத்து நான்கு சமயங்களையும் எடுத்து மறுத்தல் என்றைக்கும் இன்றியமையாததாகும்.

இருபத்தொன்றாம் நூற்றாண்டின் சமயங்களும் அவற்றின் நிலைகளும்

சுமார் ஈராயிரம் ஆண்டுகள் நிலவி வந்த சமயக் கோட்பாடுகளையும் இதுகாறும் கண்டோம். 12, 13ஆம் நூற்றாண்டுகளில் அவதாரம் செய்த புறச்சந்தான குரவர்களின் நூல்களையொட்டியே எழுந்துவந்த சமயக் கோட்பாட்டு நிலைகளை ஆய்வு செய்தோம். நாம் வாழும் 21ஆம் நூற்றாண்டில் பழைய நூல்களில் இதுவரை சொல்லப்படாத பல சமயங்கள் நிலவி வருவதை நாமெல்லாம் அறிவோம். "மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே" என்பார் மாணிக்கவாசக சுவாமிகள். அத்தகைய மாற்றங்களை உட்கொண்டு இன்றைய உலகம் கணினி, ஊடகம், அலைபேசி, இணைய, வலைய தளங்களால் ஆளப்பட்டு வருகிறது. இணையதளத்தில் இடம் பெற்றிருந்த உலகச் சமய விளக்கங்களை உங்களோடு பகிர்ந்து கொள்கிறோம்.

இருபத்தொன்றாம் நூற்றாண்டில் உலகச் சமயங்கள்

(மொத்த பூலோக மக்கள் தொகை 725 கோடி)

வ.எண்	சமயத்தின் பெயர்	பின்பற்றும் மக்கள் தொகை	சதவீதம்
1.	கிறித்துவம்	220 கோடி	30
2.	இசுலாம்	160 கோடி	22
3.	இந்து மதம்	100 கோடி	14
4.	புத்த மதம்	50 கோடி	7
5.	ஆதிக்குடிகள் (Folk)	40 கோடி	6
6.	பிற சமயங்கள் + எந்த சமயமும் சாராதவர் + நாத்திகர்	155 கோடி	21
	மொத்தம்	725 கோடி	100%

பத்தாயிரத்துக்கு மேற்பட்ட சிறுசிறு சமயங்கள் பலவாக இருந்தாலும் இவ்வுலகில் வாழும் 725 கோடி மக்களில் 84% விழுக்காடு ஐந்து பெருஞ்சமயங்களையே தழுவி வாழ்கின்றனர். (கிருத்துவம், இசுலாம், இந்து, புத்த, ஆதிக்குடிகள்)

2012ஆம் ஆண்டு 57 பெரிய நாடுகளில் எடுக்கப்பட்ட வேறொரு புள்ளிவிவரத்தின்படி

59% மக்கள் ஏதாவது ஒரு சமயத்தைத் தழுவியுள்ளனர்.

23% மக்கள் எந்தச் சமயத்தையும் தழுவவில்லை.

13% நாத்திகவாதிகள்

5% எந்தக் கொள்கையும் இல்லாதவர்கள்.

இந்தியத் திருநாட்டில்

79.8% இந்துக்கள்

14.2% இசுலாமியர்கள்

6.0% கிருத்துவர்கள், சமணர்கள், சீக்கியர்கள். கிருத்துவ சமுதாயம் இந்தியாவில் மூன்றாவதாக உள்ளது. அதற்கடுத்து பௌத்தர்களும், சீக்கியர்களும், சமணர்களும் இடம் பெறுகின்றனர்.

சைவம், வைணவம் அவற்றின் உட்பிரிவுகள், மற்றுஞ்சில சிற்சமயங்கள் ஆகிய எல்லாவற்றையும் ஒன்று சேர்த்து வெளிநாட்டினர் இந்திய நாட்டை அடிமை கொண்டபோது இந்துக்கள் என்று பெயரிட்டு அழைக்க அதுவே நிலைத்துவிட்டது. சிந்து நதிப்பள்ளத்தாக்கு நாகரீகம் போன்ற தொன்மைக்கால நிகழ்வுகளிலிருந்து இந்துவும், இந்தியாவும் பிறந்ததாக வரலாற்று ஆய்வாளர்கள் கூறுகின்றனர். சிவஞானசித்தியார் 13ஆம் நூற்றாண்டு நூல். ஆரியமும், இந்துத்தத்துவமும் ஒரிரு நூற்றாண்டுகளே பழமையானவை. அவ்வாறே ஏனைய சமயங்களான இசுலாம், கிறித்துவ மதங்களும் 3, 4 நூற்றாண்டுகளுக்கு முன்புதான் நமக்கு அறிமுகமானதால் அவற்றைப் பற்றி நமது நூல்கள் எடுத்தியம்பவில்லை.

பிற மதங்கள் தமிழக எல்லை கடந்து பல்வேறு நாடுகளில் பல்வேறு கால கட்டங்களில் பல்வேறு சமயங்களில் உருவானதால், அந்தந்த நாட்டு மொழிகளின் தாக்கங்களை அம்மதக் கோட்பாடுகளைப் படிக்கும்போது காணமுடிகிறது. வடமொழி உட்பட அவரவர் தாய்மொழிகளில் அவை இடம் பெற்றிருப்பதால் சிற்சில இடங்களில் தூய தமிழைக் காண முடியாது. அடியார்கள் பொறுத்தருள்க.

சிவஞானசித்தியார் பரபக்கத்துக்கு இதுவரை வெளிவந்துள்ள நூல்கள்

வ. எண்	ஆண்டு	நூலின் பெயர்	ஆசிரியர்	பதிப்பகம்
1.	1842	மெய்கண்ட சாத்திரமும் மூலமும் உரையும்	அம்பலவாண முனிவர்	ஓலைச்சுவடி, திருவாவடுதுறை ஆதீனம்
2.	1885	மெய்கண்ட சாத்திரம் முழுதும்	கொன்றை மாநகர் சண்முகசுந்தர முதலியார்	
3.	1892	மெய்கண்ட சாத்திரங்கள் மூலமும் உரையும்	காறுபாறு சுந்தரலிங்கத் தம்பிரான்	காகிதப்பிரதி, திருவாவடுதுறை ஆதீனம்
4.	1897	மெய்கண்ட சாத்திரம் முழுதும்	காஞ்சி நாகலிங்க முதலியார்	அம்பலவாண தேசிகர் சுவாமிகள்

5.	1934	சித்தாந்த சாத்திரம் பதினான்கு மூலமும் உரையும்	சைவ சித்தாந்தப் பெருமன்றம்	மறுபதிப்பு 1940, 1994
6.		சிவஞான சித்தியார் பரபக்கம் மூலமும் உரையும்	வேலப்பப் பண்டாரம்	திருவாவடுதுறை ஆதீனம்
7.		சிவஞான சித்தியார் பரபக்கம் மூலமும் உரையும்	திருவொற்றியூர் ஞானப்பிரகாசர்	திருவாவடுதுறை ஆதீனம்
8.	1955 (மெய்கண்டார் ஆண்டு 732)	சிவஞான சித்தியார் பரபக்கம் மூலமும் உரையும்	திருவொற்றியூர் தத்துவப் பிரகாசர் உரை	திருவாவடுதுறை ஆதீனம்
9.	2013	மெய்கண்ட சாத்திரம்	சரவணபவானந்த தேசிகர்	தமிழக சைவநெறிக் கழகம்
10.	2014	பதினான்கு சித்தாந்த சாத்திரங்களின் மூலமும் உரையும்	காஞ்சி நாகலிங்க முதலியார்	தருமை ஆதீனம்
11.	2016	மெய்கண்ட சாத்திரம் மூலமும் உரையும்	கா.சு. பிள்ளை	சாரதா பதிப்பகம்
12.	2016	மெய்கண்ட சாத்திரம்	அ. அறிவொளி	வர்த்தமானன் பதிப்பகம்

கடந்த பல ஆண்டுகளாக பன்னிரு திருமுறைகளை வெளியிட்டபின் சைவ சமய சாத்திர நூல்களையும் வெளியிடத் திருவருள் கூட்டக் கடந்த சில அமர்வுகளில் மெய்கண்ட சாத்திர நூல்கள் வரிசையில் திருவுந்தியார், திருக்களிற்றுப்படியார், சிவஞானபோதம் ஆகிய நூல்களை உரையோடு சிந்தித்தோம். தற்பொழுது உலகாயதம் முதல் பாஞ்சராத்திரம் ஈறாக 14 மதங்கள் பற்றிச் சிந்திக்கும் பேற்றை 301 பாடல்கள் மூலம் அருணந்தி சிவம் அருளிச் செய்துள்ளார். அதற்காக மேற்காண் வெளிவந்துள்ள நூல்களைத் தழுவி நூலாசிரியர்களுக்கும், பதிப்பகத்தார்களுக்கும் மனமுவந்த நன்றிகளைத் தெரிவித்து விட்டு மூலமும் உரையும் கொண்ட ஒப்பீட்டு நூல் வெளியிடப்பட்டு கீழ்க்கண்ட நிகழ்ச்சி நிரலில் கண்டபடி ஒரு வழிபாட்டுக் கருத்தரங்கம் சிவன் அருளாணையால் நடைபெறும்.

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

சிவஞான சித்தியார் – பரபக்கம்

வழிபாட்டுக் கருத்தரங்கம்

24.02.2019, ஞாயிறு, 27.04.2019, 28.04.2019 சனி, ஞாயிறு

நிகழ்ச்சி நிரல்

வ. எண்	சொற்பொழிவாளர் நாள்/நேரம்	தலைப்பு	பாடல் எண்ணிக்கை
1.	சிவத்திரு **சு. குஞ்சிதபாதம்** அவர்கள் 24.02.2019 ஞாயிறு காலை 9.00 – 11.00	கடவுள் வாழ்த்து, பாயிரம் உலகாயதன் மதம்	11 21 32
2.	சிவத்திரு **சிவ. காந்தி** அவர்கள் 24.02.2019 ஞாயிறு நண்பகல் 11.00 – 01.00	உலகாயதன் மத மறுதலை	31
3.	சிவத்திரு **ப. குமரலிங்கம்** அவர்கள் 24.02.2019 ஞாயிறு பிற்பகல் 02.00 – 04.00	சௌத்திராந்திக மதம்	31
4.	முதுமுனைவர் **ந.இரா. சென்னியப்பனார்** அவர்கள் 24.02.2019 ஞாயிறு மாலை 04.00 – 06.00	சௌத்திராந்திக மத மறுதலை	40
5.	பேராசிரியர் **ம.வே. பசுபதி** அவர்கள் 27.04.2019 சனி காலை 09.00 – 11.00	யோகாசார மதம் யோகாசார மத மறுதலை மாத்தியமிக மதம் மாத்தியமிக மத மறுதலை வைபாடிக மதம் வைபாடிக மத மறுதலை நிகண்டாவாதி மதம் நிகண்டாவாதி மத மறுதலை	1 2 1 2 1 1 8 14 30
6.	சிவத்திரு **ஜானகிராமன்** அவர்கள் 27.04.2019 சனி நண்பகல் 11.00 – 01.00	ஆசீவக மதம் ஆசீவக மத மறுதலை பட்டாசாரிய மதம் பட்டாசாரிய மத மறுதலை	19 6 13 10 39
7.	சிவத்திரு **மதன்முரளி** அவர்கள் 27.04.2019 சனி பிற்பகல் 02.00 – 04.00	பிரபாகரன் மதம் பிரபாகரன் மத மறுதலை சத்தப்பிரமவாதி மதம் சத்தப்பிரமவாதி மத மறுதலை மாயாவதி மதம்	2 2 4 8 15 31

வ. எண்	சொற்பொழிவாளர் நாள்/நேரம்	தலைப்பு	பாடல் எண்ணிக்கை
8.	சிவத்திரு **பவானி தியாகராசன்** அவர்கள் 27.04.2019 சனி மாலை 04.00 – 06.00	மாயாவாதி மத மறுதலை பாற்கரியவாத மதம் பாற்கரியவாத மத மறுதலை நிரீச்சர சாங்கிய மதம் நிரீச்சர சாங்கிய மத மறுதலை பாஞ்சராத்திரி மதம்	18 2 5 1 3 7
			36
9.	சிவத்திரு **சு. குஞ்சிதபாதம்** அவர்கள் 28.04.2019 ஞாயிறு காலை 09.00 – 11.00	பாஞ்சராத்திரி மத மறுதலை	31

அடியார்கள் பங்கு பெற்றுத் திருவருள் பெற வேண்டுகிறோம்.

இரண்டு திங்களுக்கு ஒருமுறை சுமார் பன்னூறு பாடல்கள் கொண்ட பல மெய்கண்ட சாத்திர நூல்களை முறையாகப் படித்து, அச்சுப்பிழை பலமுறை பார்த்துக் கடின உழைப்பின் பயனாக நூலை வெளியிடும் முனைவர் ப. தமிழரசியைத் தலைவராகக் கொண்டு செயல்படும் தமிழ்த்துறையின் முனைவர் இரா. மதன்குமார், முனைவர் செ. ஆறுச்சாமி உள்ளிட்டோருக்கும், நூலாக்க ஒருங்கிணைப்புப் பணியில் செயலாற்றுகின்ற திரு. ப. வெள்ளிங்கிரி, கணினி நிபுணர்களான திரு.மு. மகேஷ், திரு. து. சசி அவர்களுக்கும், நூலைச் சிறப்பாக அச்சிட்டு வழங்கும் செஞ்சுடர் அச்சகத்தார்க்கும் மனமுவந்த நன்றிகள். அவர்கள் இம்மை, மறுமை, இன்பம் பெறுவார்களாக.

அனைவரும் வருக. சிவனருள் பெறுக.

நன்றி.

அன்பன்,

இராச. வசந்தகுமார்

நிறுவன வேந்தர்

கற்பகம் நிகர்நிலைப் பல்கலைக்கழகம்

இடம் : கோயம்புத்தூர்

நாள் : 30.12.2018

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

முனைவர் ந.இரா. சென்னியப்பன்
தலைவர்
மணிவாசகர் அருட்பணி மன்றம்
பேரூர், கோவை-10.

அணிந்துரை

விரிவிலா அறிவினார்கள் வேறொரு சமயம் செய்து
எரிவினாற் சொன்னா ரேனும் எம்பிராற்கு ஏற்றதாகும்
பரிவினாற் பெரியோர் ஏத்தும் பெருவேளூர் பற்றினானை
மருவிநான் வாழ்த்தி யுய்யும் வகையது நினைக்கின்றேனே.

– திருநாவுக்கரசர்

மக்கள் வாழ்க்கையைப் பக்குவப்படுத்துவது சமயம் ஆகும்; அத்தகைய சமயங்களுள் பண்டைக் காலந்தொட்டு நம் நாட்டில் வழக்கில் உள்ளவை, நம் நாட்டில் இடையில் தோன்றியவை, நம் நாட்டில் தோன்றி வெளிநாட்டுக்குச் சென்றவை; வெளிநாட்டிலிருந்து வந்தவை எனப் பலவகைப்படும்; ஒவ்வொரு சமயம் பற்றியும் பல காலத்தில் பல நூல்கள் தோன்றின; அவை தத்தம் சமயக் கோட்பாடுகளையே உயர்வாகப் பாராட்டிப் போற்றக் கூடியன; சில சமய நூல்கள் பிறசமயக் கோட்பாடுகளை எடுத்துக்கூறி அவற்றை மறுக்கும் முறையில் தோன்றின. இவ்வாறு மறுக்கும் முறை சங்க காலத்திலேயே தோன்றிவிட்டது.

உலகப் பொதுமறையாகத் திருக்குறள் செய்த திருவள்ளுவரும்

"உலகத்தார் உண்டென்பது இல்லென்பான் வையத்து
அலகையா வைக்கப்படும்".

என்று கூறிப் போந்தார்.

உள என்பன கடவுளும் மறுபிறப்பும் இருவினைப்பயனும் முதலியன என்று பரிமேலழகர் விளக்கம் கூறினார். கடவுளும் மறுபிறப்பும் இருவினைப்பயனும் உள்ளவை என்று மரபு வழியாகப் பின்பற்றி வரும் குழுவினர் உளர் என்றும் அவற்றை இல்லை என்று கூறும் குழுவினரும் இருந்தனர் என்றும் அறிய வருகின்றது.

"நன்றாய்ந்த நீள்நிமிர்சடை
முதுமுதல்வன் வாய் போகாது
ஒன்றுபுரிந்த ஈரிரண்டின்
ஆறுணர்ந்த ஒருமுதல் நூல்
இகல்கண்டோர் மிகல் சாய்மார்
மெய்யன்ன பொய்யுணர்ந்து
பொய்யோராது மெய்கொளீஇ....".

என்று புறநானூற்றில் ஆவூர் மூலங்கிழார் பாடியுள்ளார். புறநானூற்றுப் பழைய உரையாசிரியர் "பெரிதும் ஆராயப்பட்ட மிக்க நீண்ட சடையினையுடைய முதிய இறைவனது வாக்கைவிட்டு நீங்காது அறம் ஒன்றையே மேவிய நான்கு கூற்றை உடைத்தாய் ஆறங்கத்தாலும் உணரப்பட்ட ஒரு பழைய நூலாகிய வேதத்திற்கு மாறுபட்ட நூல்களைக் கண்டோராகிய புத்தர் முதலாயின புறச்சமயத்தோரது மிகுதியைச் சாய்க்க வேண்டி அவரது மெய் போன்ற பொய்யை உளப்பட்டறிந்து அப்பொய்ம்மையை மெய்யென்று கருதாமல் உண்மைப் பொருளை அவர்களுக்கு ஏற்பச் சொல்லி" என்று உரை கூறியுள்ளார். பிற்காலத் தத்துவ மறுப்புப் பலவற்றிற்கு இஃது அடிப்படையாக அமைந்துள்ளது.

தமிழ் இலக்கியங்களில் மணிமேகலையில்தான் பல்வேறு சமயக் கோட்பாடுகளும் மறுப்புக்களும் காணப்பெறுகின்றன. பிருகற்பதி என்னும் வியாழன் செய்த உலோகாயதம், புத்தன் செய்த பௌத்தம், கபிலன் செய்த சாங்கியம், அக்கபாதன் செய்த நையாயிகம், கணாதன் செய்த வைசேடிகம், சைமினி செய்த மீமாம்சகம் ஆகியவை ஆறு சமயங்கள் என்று கூறப்பெறுகின்றன. சைவம், வைணவம் ஆகிய சமயங்களும் சுருக்கமாகக் கூறப்பெறுகின்றன. சமணத்தின் கூறுபாடாகிய ஆசீவகம், நிகண்டாவாதம் ஆகியன விரிவாகக் கூறப்பெறுகின்றன. சமயக்கணக்கர் தம் திறம் கேட்ட காதையில் இவற்றையெல்லாம் மணிமேகலை கேட்டறிந்து,

> "..... எல்லா மார்க்கமும் கேட்டு
> நன்றுஅல ஆயினும் நான்மாறு உரைக்கிலேன்".

என்று கூறி அங்கிருந்து கச்சி மாநகர்க்குப் புறப்பட்டாள் என்று சீத்தலைச் சாத்தனார் பாடியுள்ளார்.

மணிமேகலையை அடுத்து இருண்ட காலத்தில் தோன்றியது திருமந்திரம் ஆகும். திருமந்திரத்தில் ஆறுவகைச் சமயங்கள் என்று கூறப்பெறுகின்றன; ஆனால் ஆறுவகைச்சமயங்கள் யாவை என்று கூறப்பெறவில்லை. பின்தோன்றிய திருமுறைகளிலும் ஆறுவகைச்சமயங்கள் கூறப்பெறுகின்றன; அவை யாவை என்று கூறப்பெறவில்லை; எனினும் திருஞானசம்பந்தரும், திருநாவுக்கரசரும் புத்தர், சமணர்களை எதிர்த்தே பாடியுள்ளனர்.

> "புத்தரும் சமணரும் புறனுரைக்கப்
> பத்தர்கட்கு அருள்செய்து பயின்றவனே".

என்று புத்தர் சமணர் புறம் உரைப்பதைத் திருஞானசம்பந்தர் குறிப்பிட்டுள்ளார். திருஞானசம்பந்தர் சமணர்களை, அங்கதர், அமணர், அருகர், ஆகதர், ஆரம்பர், கவணர், சமணர், பிராந்தர், குண்டர், ஆருகதர், ஆகதர், ஆதர் முதலிய பெயர்களால் குறித்துள்ளார். "தம் சமயத்தலைவராகிய மகாவீரர் குண்டக் கிராமத்திலிருந்து நிகழ்த்திய மனைவாழ்க்கையில்.... நின்றமை பற்றித் தம்மைக் குண்டரெனக் கூறியிருக்கலாம்; அல்லது குண்டக் கிராமத்திற் பிறந்தருளிய பெரியார் வழியைப் பின்பற்றியவர் என்ற கருத்தால் அங்ஙனம் கூறப்பட்டார் என்றலும் கூடும்" என்று கூறிய ஆய்வை ஒளவை. சு. துரைசாமி பிள்ளை அவர்கள் சைவ இலக்கிய வரலாற்றில் காட்டியுள்ளார். சமணமும் புத்தமும் வடக்கே தோன்றிப் பின் தமிழகத்திற்கு வந்தவை. இலக்கிய இலக்கணத்திற்குப் பெரும் தொண்டாற்றியவை. பண்டு தொட்டே தமிழ் நாட்டில் வழக்கிலிருந்த சைவம், வைணவம் ஆகியவற்றைப் புறங்கூறியதாலும், ஆட்சி செய்யும் மன்னர்களைத் தம் பக்கல் சேர்த்துக் கொண்டு பிற சமயத்தார்க்குத் தீங்கு செய்ததாலும் தமிழ்நாட்டில் எதிர்ப்புத் தோன்றின; நாயன்மார், ஆழ்வார்களால் சமணம், புத்தம் ஆகியவை செல்வாக்கு இழந்தன. பிற்காலச் சோழர் காலத்தில் சைவம் செல்வாக்குப் பெற்று வளர்ந்தது. திருமுறைகள் தொகுக்கப் பெற்றன.

சித்தாந்தச் சாத்திரங்கள் தோன்றின. திருவுந்தியார், திருக்களிற்றுப்படியார் ஆகியவற்றில் நாயன்மார்கள் வரலாற்றை ஒட்டியே சைவக்கருத்துக்கள் கூறப்பட்டன. அடுத்துத் தோன்றிய சிவஞானபோதந்தான் சைவத்திற்கு ஏற்றத்தைத் தந்தது. சிவஞானபோதத்தில் வெளிப்படையாகப் புறச்சமயங்கள் சுட்டப் பெறவில்லை. மெய்கண்டாரின் மாணாக்கரான அருணந்திசிவம் பாடிய சிவஞான சித்தியாரில்தான் புறச்சமயக் கோட்பாடுகளும் மறுப்புக்களும் விரிவாக அமைந்துள்ளன. பரபக்கம், சுபக்கம் எனவிரு பகுதியாகச் சிவஞான சித்தியாரை அமைத்துக் கொண்டுள்ளார். இரண்டும் தனித்தனிநூல் என்ற வகையிலேயே கடவுள் வாழ்த்து, அவையடக்கம், நூற்சிறப்பு ஆகியவற்றை அமைத்துள்ளார்.

பரபக்கம் – முதலாறு பாடல்கள் கடவுள் வாழ்த்து, அவையடக்கம் ஏழு, எட்டுப் பாடல்கள், நூற்சிறப்பு – ஒன்பது, பத்து, பதினொன்று பாடல்கள் என்ற முறையில் அமைந்துள்ளன. 1. உலகாயதன் மதம் – மறுப்பு, 2. சௌந்திராந்திகன் மதம் – மறுப்பு, 3. யோகசாரன் மதம் – மறுப்பு, 4. மாத்தியமிகன் மதம் – மறுப்பு, 5. வைபாடிகன் மதம் – மறுப்பு, 6. நிகண்டாவாதி மதம் – மறுப்பு, 7. ஆசீவகன் மதம் – மறுப்பு, 8. பட்டாச்சாரியன் மதம் – மறுப்பு, 9. பிரபாகரன் மதம் – மறுப்பு, 10. சத்தப் பிரம்மவாதி மதம் – மறுப்பு, 11. மாயாவாத மதம் – மறுப்பு, 12. பாற்கரியன் மதம் – மறுப்பு, 13. நிரீச்சுர சாங்கியன் மதம் – மறுப்பு, 14. பாஞ்சராத்திரி மதம் – மறுப்பு என்ற முறையில் பரபக்க நூல் அமைந்துள்ளது.

அருணந்தி சிவாசாரியார் ஒவ்வொரு மதத்தையும் மறுக்கும் பொழுது முதலில் அவர்களது கொள்கைகளை முழுவதுமாகச் சொல்லி, அதன் பிறகு அதன் பொருந்தாமையைத் தெளிவாக மறுக்கிறார். இஃது அவரது சான்றாண்மைக்கும் மதிநுட்பத்திற்கும் எடுத்துக்காட்டாக அமைந்துள்ளது. சமயக் காழ்ப்பின்றி உண்மைகளின் பொருந்தாமையைத் தருக்க சாத்திரத்தின் வழிநின்று அறிவுபூர்வமாக எடுத்துக்காட்டி மறுக்கும் நாகரிகமான நடைமுறை இக்காலத்தவர் பின்பற்றுவதற்கு உரிய சிறப்பினை உடையது என்று சித்தாந்தச் செம்மணி ச. சௌரிராசன், 'சைவசித்தாந்த நன்னெறி' என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார்.

சிவஞானமாபாடியம் எழுதிய சிவஞான முனிவர் சமயங்களைப் புறப்புறச்சமயம், புறச்சமயம், அகப்புறச்சமயம், அகச்சமயம் எனப் பாகுபாடு செய்துள்ளார். அவற்றையெல்லாம் பதிப்பாசிரியர் இராச. வசந்தகுமார் அவர்கள் பதிப்புரையில் பட்டியலிட்டுத் தந்துள்ளார். திருமுறைகள் நிறைவெய்தி மெய்கண்ட சாத்திரங்கள் தொடங்கித் திருவுந்தியார், திருக்களிற்றுப்படியார், சிவஞானமாபாடியம் – அருணை வடிவேல் விளக்கம் ஆகியன தனித்தனி நூலாக வந்தபின் சிவஞானசித்தியார் – பரபக்கம் – நூலாக உங்கள் கையில் தற்போது திகழ்கின்றது. பாடல்களுக்குரிய விளக்கம், ஒவ்வொரு சமயத்தாரின் மதம், மறுப்புத் தொகுப்பு உரைநடையில் தரப்பெற்றுள்ளன.

அகப்புறச் சமயங்கள், அகச்சமயங்கள் பற்றிப் பிற்பகுதியில் விளக்கம் தரப்பெற்றுள்ளது. அவற்றின் கொள்கைகள் மறுப்புக்கள் ஆகியனவும் தரப்பெற்றுள்ளன. இருபத்தொன்றாம் நூற்றாண்டில் உலகச் சமயங்கள் மக்கள்தொகை பதிப்புரை (பக்கம் 17, 18)யில் தரப்பெற்றுள்ளது. வேற்றுநாட்டில் தோன்றி நம் நாட்டிற்கு வந்த சமயங்கள் இசுலாமும் கிறித்துவமும் ஆகும். அவற்றின் கோட்பாடுகள் பிற்பகுதியில் தரப்பெற்றுள்ளன. இந்நூல் சிவஞான சித்தியார் பரபக்க விளக்கம் மட்டும் அல்லாமல் உலகச் சமயங்கள் பலவற்றையும் அறிந்துகொள்ளும் முறையில் அமைந்துள்ளது. கீழை மேலை நாடுகளின் மெய்ப்பொருள் இயல் வரலாறு – தொகுதி I, இலங்கையைச் சார்ந்த கி. இலட்சுமணன் எழுதிய இந்திய தத்துவஞானம் ஆகிய நூல்கள் தமிழில் தத்துவங்களை அறிந்து கொள்வதற்கு ஏற்ற நூல்களாகும். "சிவஞான சித்தியார்

பரபக்கம்" என்ற இந்நூல் அவற்றைப் போலவே பலவிதத் தத்துவங்களை அறிந்துகொள்ள அடிப்படை நூலாக அமைந்துள்ளது. ஆங்கிலத்தில் சோழவரலாறு எழுதிய கே.ஏ. நீலகண்ட சாஸ்திரியார், பிற்காலச் சோழர் வரலாறு தமிழில் எழுதிய தி.வை. சதாசிவ பண்டாரத்தார் ஆகியோர், சோழமன்னர்கள் சைவ சமயத்தையே தம் சமயமாகக் கொண்டவர்கள் என்றாலும் சமயப்பொறை உடையவர்களாக விளங்கினார்கள் என்று கூறியுள்ளனர். அதுபோலப் பதிப்பாசிரியர் வேந்தர் அவர்களும் குடிமுழுதாண்ட சிவபரம்பொருளையே வழிபடு கடவுளாகக் கொண்டு வாழ்ந்தாலும் சமயப்பொறை உடையவராகப் பிற சமயங்களையும் அறிந்து வெளிப்படுத்தியுள்ளார். வாழ்க அவர்தம் பணி! வாழ்க அவர்தம் செயல்! வளர்க அவர்தம் தொண்டு! அவர்தம் முயற்சிக்குத் துணைநிற்கும் தமிழ்த்துறையினருக்கு நல்வாழ்த்துக்கள்.

எம்மதத்தோர் எவ்வகை நிட்டை சொல்லினும்
சம்மதமே எமக்கு உந்தீபற!
தற்போதம் மாய்க்குமேல் உந்தீபற.

– தவத்திரு. **சாந்தலிங்க சுவாமிகள்**
(அபிரோதவுந்தியார்)

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

பதிப்பின் மதிப்பு

- பேராசிரியர் ம.வே. பசுபதி

மாண்புயர் வேந்தர்

'இதனினும் மேலான, விரிவான, செறிவான, புரிதலுக்கு எளிதான பதிப்பு வேறொன்றில்லை' என்னுமளவுக்குச் சைவத் திருமுறைகள் மற்றும் சாத்திர நூல்களுக்கு உரைப்பதிப்புகள் வழங்குவதில் கற்பகம் உயர்கல்வி, கலைக்கழகத்தின் மாண்புயர் வேந்தர் டாக்டர் இராச. வசந்தகுமார் அவர்கட்கு ஈடு இணை இல்லை.

கற்பகம் உயர்கல்வி கலைக்கழகத்திற்கு மட்டுமன்றிச் சைவநுண்பொருள் ஆய்வுப்பதிப்புகள் வெளியிடுதல், பலநூறு சிவனாலயங்களை உயிர்ப்பித்துத் திருப்பணிகள் செய்து நித்திய நைமித்திக பூசனைகள் செய்வித்தல், கருத்தரங்கத் தொடர்கள் வாயிலாகச் சித்தாந்த சைவச் செந்நெறியைப் பரப்புதல் முதலிய பணிகளினாலும் இவர் வேந்தராகவே விளங்குகிறார். இதனால் இவரின் திருப்பெயருக்கு முன் 'இராச' என்னும் தொடக்கம் அமையுமாறு இவரின் திருத்தந்தையாரின் திருப்பெயர் அமைய இறைவர் திருவுளம் பற்றியருளினார்.

பன்னிரு திருமுறைகட்கு இருபத்தேழு நட்சத்திரப் பதிப்புகள் ஆக்கி வழங்கி வரலாறு படைத்துள்ள இப்பெருமகனார் பல்லாயிரம் அன்பர்களைச் சிவபக்தி நெறிக்கு உட்படுத்துவதும், மேம்படுத்துவதுமாகிய சிவபுண்ணியங்கள் செய்யும் அருளாளரும் ஆவார். இவரின் 70ஆம் நூற்பதிப்பாக இந்நூல் வெளிவந்துள்ளது. சிவனுக்குச் சக்தியேபோல் இப்பெருமகனாரின் அனைத்து அறப்பணிகளையும் ஆர்வமூட்டி ஊக்குவிப்பவர் இவர்தம் இல்லத்தரசியாரும் கற்பகம் உயர்கல்வி, கலைக்கழகத்தின் இணை வேந்தருமாகிய மாண்புயர் அம்மையாரவர்கள் ஆவர்.

பரபக்கம் அறிதலின் தேவை

பரபக்கம் என்பதனைப் பரம் பக்கம் எனப் பிரித்தால் இகமல்லாத பகுதி என்ற பொருள் வரும். பக்கம் – பகுதி; சான்று; 'பொருளின்று உய்த்த பேராண்பக்கமும்' (தொல். 20:7). பரபக்கம் என்பதனை ஒருசொல் நீர்மைத்தாகக் கொண்டு 'சித்தாந்தக் கோட்பாடுகட்குப் புறம்பாகிய கூறுகள்' எனலும் ஒன்று. வேத சிவாகமங்களை ஏற்பனவே இகம் – அகம். அவற்றை முற்றுமாகவோ, ஆகமங்களை ஏலாமையும் வேதத்துள்ளும் ஞானகாண்டத்தையும் ஏலாதன, பரம். இக்கருத்தைப் பதிப்புரை பக்கம் பதினொன்றில் ஒரு பட்டியல் வாயிலாகத் தெளிவு செய்துள்ளார்.

'நான் சைவனாகத்தானே உள்ளேன்; பரசமயங்கள்பற்றி அறிதலும் அவற்றின் குறைகளையும் பிழைகளையும் நானெதற்கு அறிதல் வேண்டும்?' என ஓர் ஐயம், பெறவரும் நல்லூழால் சைவரானோர்க்கு எழுதல் இயற்கையே. இவ்ஐயத்திற்கு விடையாக மாண்புயர் வேந்தரையா அவர்கள்,

> 'இவற்றைப் பற்றி நாம் அறிந்துகொண்ட பின் சைவம் எவ்வாறு உயர்ந்தது என்ற முடிவுக்கு வரலாம். 'களவும் கற்றுமற' என்பதுபோல, இவற்றைப் பற்றிய அறிவு விளக்கம் கண்டபின், அவற்றை விட்டொழித்து, சிவசிந்தனைகளுக்கு வந்துவிட வேண்டும். அதன்பின்னால் போக நினைத்தால் தவம் போய்விடும்'.
>
> **– பதிப்புரை பக்கம் 10**

என்று தெளிவுரையும் அறிவுரையும் வழங்கியுள்ளார். இத்தொடர்களால், 'நம் கைக்குக் கிடைத்திருப்பது ஒரு காசுக்கும் மதிப்புமற்ற உடைந்த கருகமணியன்று; சிந்தாமணிக்கும் மேலான செம்மணி என அறிதற்கும், பெரும்புண்ணியவசத்தால் நாம் பெற்றுள்ள சித்தாந்த சைவத்தின் அளப்பரிய பெருமதிப்பினை உணர்ந்து போற்றுதற்கும், புறப்புறமும் புறமுமான களவுரைகளைப் புறகு எனப் புறந் தள்ளுதற்கும், மறந்தும் புறந்தொழா மாண்பெய்துதற்கும் பரசமயங்கள் பற்றி அறிதல் வேண்டற்பாலது. அவற்றின் பொய்யுரைகளில் மயங்கி அவற்றின் வழியே சார எண்ணினால் முன்னைப் பிறவிகளில் செய்த தவத்தாலாகிய புண்ணியங்கள் மறையும்' என்பனவாகிய செய்திகளை உணர வேண்டும். மறக்க வேண்டிய புறப்புற, புறச்சமயச் செய்திகளைக் களவு எனக் குறித்த நயம் காண்க.

பரசமயங்களின் எண்ணிக்கை – காரணம்

சித்தியார் பரபக்கம் புறப்புறச் சமயங்கள் ஆறு என்கிறது. இந்திய தத்துவ ஆராய்ச்சி நூலாசிரியர்கள், பரபக்கத்துள் ஆறு எனப் பகுக்குப்பட்ட புறப்புறச் சமயங்களை மூன்று எனப் பகுத்துரைப்பர். உலகாயதம், சமணம், பௌத்தம் எனும் அம்முச்சமயங்களை 'அவைதிக சமயங்கள்' எனத் தலைப்பிட்டுரைப்பர்.

அக்கணக்குப்படி சித்தியார் பரபக்கத்துள் மதங்கூறலும், மறுதலை மறுப்புக் கூறலும் ஆன வகைகளில் சமயங்களின் எண்ணிக்கை ஏழு எனலாம். அவை 1. உலகாயதம் 2. பௌத்தம் 3. சமணம் 4. மீமாம்சை 5. ஏகான்மவாதம் 6. சாங்கியம் 7. பாஞ்சராத்திர வைணவம். இவற்றுள் சாங்கியம், மீமாம்சை ஆகிய இரண்டையும் தற்காலத் தத்துவ ஆராய்ச்சியாளர்கள் பஞ்சதரிசனத்துள் அடக்குவர். பஞ்ச தரிசனமாவன: சாங்கியம், யோகம், வைசேடிகம், நியாயம் (நையாயிகம்), மீமாம்சை என்பன.

மாபாடியம் அருளிய மாமுனிவர் நான்கு பெரும் பிரிவுகளில் இருபத்து நான்கு சமயங்களாக வகுத்து, அவற்றுள் பதினெட்டன் உட்கிடை அருளி, 'பாடாண வாதம் முதலிய அகச்சமயங்களாறன் கருத்துச் சங்கற்ப நிராகரணத்தில் விரித்தோதிய வாற்றான் அறிக; ஈண்டும் வந்துழி வந்துழிக் காட்டுதும்' என நிறைவு செய்தார். யோகிகள், சமயங்களின் எண்ணிக்கை இருபத்து நான்காக்கி உரைத்தமைக்கு மாண்புயர் வேந்தரையா அவர்கள் 'பிற்காலத்தில் ஏற்பட்ட மாறுதல்கள் காரணம்' என ஒரு கருத்தைப் பதிவிட்டுள்ளார்.

> "மாபாடியார், காலத்தால் பிற்பட்டவர் ஆதலின் பிற்காலத்தில்
> ஏற்பட்ட மாறுதல்கள் அவருடைய பாடியத்தில் காணப்படுகின்றன
> என நாம் கொள்ளலாம்"

என்பது அவரின் காரணப் பதிவுரை. இக்கருத்து இற்றைநாள் இந்திய தத்துவ ஆராய்ச்சியாளர்கள் கூறும் குறைந்த எண்ணிக்கைக்கான காரணமாகவும் அமைகிறது.

திராட்சா பாகம்

ஒவ்வொரு மதம் பற்றியும் செய்யுட்களுக்கு முன்பாகத் தொடக்கத்தில் அம்மதம் பற்றிய சுருக்கப் பட்டியல் வழங்கும் முறைமை இப்பதிப்பின், குறிப்பிடத்தக்க முதற்சிறப்பாகும் (உ-ம். பக். 41) இவ்வாறான பட்டியல்களுடன், சைவத்துடன் அவ்வச் சமயங்கட்குள் மாறுபாட்டுப் பட்டியல்கள் (உ-ம். பக். 102-103) உட்பிரிவுகளைக் கணித்துச் சொல்லும் பட்டியல்கள் (உ-ம் பக். 224) என இவ்வகைகளில் 24 பட்டியல்கள் தயாரித்து வழங்கியுள்ளார் இப்பதிப்பாசிரியர். இப்பட்டியல்கள் நூற்செய்யுட் கருத்துகளுக்கு நம்மை மிக அணிமைப்படுத்துகின்றன.

பௌத்த சௌந்தராத்திரிக மதம் தொடக்கமாக மதங்களின் செய்தித் தொகுப்புக் கட்டுரைகளும், மத மறுப்புகளின் இறுதியில் மதமறுப்புத் தொகுப்புக் கட்டுரைகளும் உள்ளன. இவற்றை எளிய இனிய உரைநடையில் யாத்தும் பதிப்பாசிரியர் கருணை உள்ளத்துடன் வழங்கியுள்ளார். இவை எவ்வெப்

பக்கங்களில் உள்ளன என அறியப் பொருளடக்கம் காண்க. இக்கட்டுரைகள் செய்யுட்களின் செய்திகளுடன் உடனறியத் தக்கனவற்றையும் உள்ளடக்கித் தருகின்றன.

பதவுரைப் பகுதிகளைக் கட்டங்களில் அடக்கித் தந்திருக்கும் பதிப்புமுறை உத்தி, அழகுமட்டுமன்றி. இன்ன சொல்லுக்கு இன்ன பொருள் எனத் தடுமாற்றமின்றி உணர்தற்கும் உதவுகின்றன.

அருணந்தி சிவாசாரியார் அருளிய சித்தியார் பரபக்க நூலை முதன்முறையாகக் கற்போருக்கு அதன் செய்யுட்கள் நாளிகேரபாகம் போலத் தோற்றுவது இயல்பே. அஃது ஆசாரியரின் மிடுக்கான செய்யுள் நடையினாலுமன்று; அருளிய முறைமையினாலுமன்று. அவர்தம் முறைவைப் பழகும், செய்திகளை எடுத்துமொழியும் நேர்த்தியும், அளவையியற் புலமை ததும்ப மறுத்துரைக்கும் மாட்சியும் ஈர்ப்புடையன. எனினும் பிறமதச் செய்திகள் நாமறியாதவை. அவற்றுள்ளும் வழக்கு வீழ்ந்தன பல. அவை காரணமாகவே நாளிகேரபாகமோ என்ற ஐயம் எழுகிறது. நாளிகேரம் – தேங்காய். தேங்காயை உண்ண விரும்புபவன் உரிய கருவிகளால் மட்டையை அகற்ற வேண்டும். உரிய கல்லில் அல்லது உரிய கருவியால் ஓட்டினை உடைக்க வேண்டும். அதன் பின்னரும் கருவியால் துருவியோ கீறியோ எடுத்து உண்ண வேண்டும். உண்ணும் போதும் பற்கள் பாடுபடும். அறிதல் புரிதல்களுக்குக் கடினமானவற்றை நாளிகேரபாகம் என்பது மரபு.

சித்தியார் பரபக்கச் செய்யுட் செய்திகளை அறிதல் நாளிகேர பாகமோ என்று ஐயப்பட்டவர்களுக்கு இப்பதிப்பில் உள்ள பதவுரைகளும் விளக்க உரைகளும் இந்நூல் நாளிகேர பாகமன்று கதலீபாகம் என்ற எண்ணத்தை உருவாக்குகின்றன. கதலீ – வாழை; ஈண்டு ஆகுபெயராக அதன் பழத்தைக் குறிக்கும். வாழைப்பழத்தை உண்ண விரும்புபவன் அதன் தோலை எளிதாக அகற்றலும், உண்ணுதலும் எளிதே. அறிதல் புரிதலுக்குக் கவனம் செலுத்துதல் மட்டுமே போதும் என்றவாறான செய்திகளை நாளிகேரபாகம் என்பது மரபு.

பதிப்பாசிரியர், முன்னுரை, தொகுப்புரை, பட்டியல்கள், ஒப்பீடுகள் என்று பலப்பல அங்கங்களுடன் அற்புதமாக இப்பதிப்பைச் செய்து சித்தியார் பரபக்கம் நாளிகேர பாகமுமன்று; கதலீபாகமுமன்று; திராட்சா பாகமே என்று ஆக்கித் தமிழ்ச்சைவ உலகிற்கு உதவியுள்ளார்கள் திராட்சையை அப்படியே உண்ணலாமே!

உச்சங்கள்

பதிப்புரை 17, 18களில் 'இருபத்தொன்றாம் நூற்றாண்டின் சமயங்களும் அவற்றின் நிலைகளும்' என்ற தலைப்புள் மாண்புயர் வேந்தரையா அவர்கள் பல அரிய தகவல்களைத் தந்துள்ளார். அவற்றின்படி, உலகின் மொத்த மக்கள் தொகையில் சற்றொப்ப மூன்றில் ஒரு பங்களவுக்குள்ள சமயம் கிறித்துவம் என்று அறிய முடிகிறது. இசுலாம் மார்க்கம் சற்றொப்ப நான்கில் ஒரு பங்கு.

புறப்புறம் என்ற பகுப்புக்கு மாதவச் சிவஞான யோகிகள் அருளிய காரணம், 'வேத சிவாகமங்களை ஏற்காதவர்கள்' என்பது. இந்தக் காரணத்தின்படி இசுலாம், கிறித்துவ சமயத்தினரும் நம் வேத சிவாகமங்களை ஏற்காதவர்களாகையினால் புறப்புறச் சமயத்தினரே ஆவர். புறப்புறச் சமயங்கள் அனைத்தையும் அலசி ஆராய்ந்துரைக்கும் சித்தியார் பரபக்கம் கற்கும்போது உலக அளவில் பெரும்பான்மையோராக விளங்குபவர்களின் சமயங்கள் பற்றிச் சற்றேனும் அறிந்திருக்க வேண்டியது காலத்தின் கட்டாயமாகும். அவ்விரு சமயங்கள் பற்றிக் குறிப்பேதுமின்றி இந்நூலைப் பதிப்பித்திருந்தால் இசுலாமிய மார்க்கமும் கிறித்துவ சமயமும் புறப்புறச் சமயங்கள் என்றறிய நம்மனோர்க்கு வாய்ப்பின்றிப் போயிருக்கும். அஃதன்றியும் பேரெண்ணிக்கையில் உள்ளவர்களின் சமயங்கள் பற்றி மௌனம் சாதிப்பது, சம்மதத்திற்கு அடையாளமாகக் கருத நேரிடும். அல்லது அவற்றின் கொள்கைகள் பற்றி

நம்மிடம் கருத்தேதுமில்லை என்றாகலாம். எனவே இவையும் இவையுள்ளிட்ட காரணங்களாலும் இசுலாம் கிறித்துவம் என்னும் இரு கட்டுரைகளை இயற்றி இந்நூற்பதிப்பின் நிறைவில் (பக். 478-490) இணைத்துள்ளமை வரவேற்கத்தக்கனவாகும்.

பாரத தேசத்தின் மக்கள்தொகை விழுக்காட்டின்படி இந்துக்களுக்கு அடுத்த கூடுதல் எண்ணிக்கையில் (14.2%) இசுலாமியர் உள்ளமையால் இசுலாம் பற்றிய கட்டுரையை முதலிலும், அவர்களுக்கு அடுத்த விகிதத்தினராகையால் கிறித்துவம் பற்றிய கட்டுரையை இரண்டாவதாகவும் வைத்துள்ள முறைவைப்பு அருமையும் கருதி மகிழத்தக்கதாகும்.

மதிப்பு நேர்த்தி

பரசமயங்கள் பற்றிய செய்திகள், சமயாசாரியர் நால்வரின் பனுவல்களிலும் உள்ளன. அவை அவ்வப் பரசமயங்களின் இழிபுகளை எடுத்துரைக்கும் நோக்கில் அருளப் பெற்றன. அவற்றைத் திரட்டிப் பட்டியல்களிலும் உரைவிளக்கங்களிலும் பதிப்பாசிரியர் நல்கியுள்ளார். பிறசமயச் செய்திகள் பற்றிக் கூறும் தமிழ் இலக்கியங்கள், காப்பியங்கள் பற்றியும் இப்பதிப்பால் அறிய முடிகிறது. சான்று பக்கங்கள் 105, 232.

தமிழ் இலக்கண நூல்களில் பிறசமய மறுப்புக்கு மறுப்பான ஆதாரங்கள் உளவெனில் அவற்றையும் பதிப்பாசிரியர் குறிப்பிட்டிருப்பது வியப்பளிக்கிறது.

சான்று:

நிகண்டவாதி 'கல், மரம், இரும்பு முதலியன ஓரறிவுடையன' என்கிறான். அக்கருத்து, பரபக்கம் 159 ஆம் விருத்தத்தில் மறுக்கப்படுகிறது. அச்செய்யுட் கருத்தை 265ஆம் பக்கத்தில் 'கல்லும் மரமும் ஓரறிவன்று' என்ற சிறு தலைப்பிட்டு விவரிக்கிறார் பதிப்பாசிரியர். அதனையொட்டி அடைப்புக்குறிக்குள்,

"எனினும் புல்லும் மரனும் ஓரறிவினவே" எனத் தொல்காப்பியம் குறிப்பிடுகிறது.

என்றெழுதிய நனிநாகரிகத்தைத் தலைவணங்கித் துதிக்கவேண்டும்.

நிறைவாக

இசுலாம், கிறித்துவம் ஆகிய பாரதத்துள் நுழைந்த பிற்காலச் சமயங்கள் உட்பட இருபத்தாறு சமயங்களின் செய்திகள் இந்நூலுள் உள்ளன. இவற்றுள் வேத சிவாகமங்களை ஏலாப் புறப்புறச் செய்திகளையும் அறிந்து கொண்டு அச்சமயங்களை முற்றிலும் புறகு எனத் தள்ளுதற்கும்,

வேதங்களை மட்டும் ஏற்கும் சமயங்களும், வேதங்களில் கர்மகாண்டத்தை மட்டும் ஏற்கும் புறச்சமயங்களும் ஆகிய புறச்சமயங்களை அறிந்து அவற்றின் பிழைகளை உணர்தற்கும்,

வேதங்களை, சிவாகமங்களை ஏற்பதுடன், சைவ ஆசாரங்களிலும் கோட்பாடுகளிலும் சிலவற்றை ஏற்கும் அகப்புறச் சமயங்களின் ஒவ்வாமைகளை ஒதுக்குதற்கும்,

வேத சிவாகமங்களை ஏற்று ஒன்றும், சிலவுமான முடிவுகளில் வேறுபடுவனவாகிய அகச்சமயங்களின் இறக்கங்களைச் சரிசெய்ய வலியுறுத்திச் சித்தாந்த முரண் தவிர்க்க வலியுறுத்துவதற்காகவும்,

இப்பதிப்பு மிகவும் இன்றியமையாததாகும்.

கல்லைப் பிசைந்து கனியாக்கும் கருணையுடன் அரும்பொருள் அனைத்தையும் எளிதாக்கி இப்பதிப்பை வழங்கியுள்ள மாண்புயர் வேந்தர் டாக்டர் இராச. வசந்தகுமார் அவர்களை தமிழ்ச் சைவப் பேருலகம் என்றென்றும் நன்றி பாராட்டிக் கொண்டாடும்.

அருணந்தி சிவாசாரியார் புராணம்

திருவாளர் கா.சு. பிள்ளை அவர்கள் (5.11.1888 - 30.4.1945) மெய்கண்ட சாத்திரத்துக்கு எழுதிய நூலின் முன்னுரைப் பகுதியிலிருந்து தொகுக்கப்பட்டது.

அருணந்தி சிவாசாரிய சுவாமிகள் ஆதிசைவ மரபினர். அவர் நடுநாட்டிலேயுள்ள திருத்துறையூரிலே வாழ்ந்தவர். அருள்நந்தி என்பது அருணந்தி என்றுமியையும். இவரது காலம் பதின்மூன்றாம் நூற்றாண்டாகும். அவர் மெய்கண்ட தேவநாயனாருடைய தந்தையார்க்குக் குலகுருவென்றும் மெய்கண்ட தேவர் பிறப்பதற்குக் காரணமாக தேவாரத் திருப்பாட்டினைக் கயிறு சாத்திக் கண்டவர் என்றும் முன்னமே சிவஞான போத நூலில் கூறப்பட்டது. அவர் சிவாகமங்களனைத்தையுங் கற்றுத் துறைபோகியவராதலால் சகலாகம பண்டிதரென்னும் உயர்ந்த பட்டம் பெற்றிருந்தார். அவர் வடமொழியில் வேத முதலிய கலைகள் யாவற்றையும் நன்கு கற்றதனோடமையாது செந்தமிழிலே பன்னிரு திருமுறைகள் முதலிய பன்னூல்களையும் நுட்பமாக ஆய்ந்து தெளிந்தவர். அவருக்குத் தேவாரத்தின் கணிருந்த பெரும்பற்று அச்சுத களப்பாளர் பிள்ளை வேண்டிய காலத்து வேறு வட நூல்களில் கயிறு சாத்தாது ஞானசம்பந்தப் பெருமான் திருமுறைக் குறிப்பினை உணரப்புகுந்தமையால் இனிது விளங்கும். இற்றைக் காலத்திலே திருக்கோயில்களில் பூசனைபுரியும் குருக்களாகிய ஆதிசைவர்களிற் பலர் தேவாரத் திருமுறைகளிற் சிறிதும் பற்றிலாதவராய் ஆகமநூல் கிடந்த மூலையுந் தெரியாதவராய்த் தம் பெருமையுணராது காலங்கழிக்கும் நிலை எத்துணையோ பரிதாபத்திற் கிடமாக விருக்கிறது! அவர்கள் தங்குல முதல்வராகிய அருணந்தி சிவாசாரிய மூர்த்திகளது சரித்திரத்தைக் கருத்துடன் கற்பார்களாயின் தமது நிலையைத் திருத்திக் கொள்ள முயல்வது திண்ணம். சைவ சமயத்திற்கு ஆசிரியர்களாய் விளங்கும் இவர்கள் இழிந்த நிலையிலிருப்பதனாலேயேதான் அச்சமயத்திற் பிறந்த பலருந் தந்நெறி யீதென உணராது புறச் சமயங்களைத் தம்மதமெனக் கொண்டு மயங்குவதற்கு ஏதுவாயிற்று. அகத்தியர் முதலிய பெருமுனிவர்களும் சுந்தரமூர்த்தி சுவாமிகள், மாணிக்கவாசக சுவாமிகள் முதலிய சமயாசாரியர்களும் ஆதிசைவ மரபைச் சார்ந்தவர்களென்பது, இக்காலத்திலுள்ளவர்கள் மனதில் பதிய வேண்டியதொன்று.

அருணந்தி சிவாசாரிய சுவாமிகள் நம் நாட்டிலுள்ள சைவர்கள் பலருக்கும் குலகுருவாக இருந்து ஐந்தெழுத்து ஓதுவித்தும் தமது பெரும்போதனையால் சைவநெறி நிலைநாட்டியும் சைவசித்தாந்தத்திற்கோர் தலைவராய் விளங்கினார். அவர்பால் ஞான நூல்களைப் பாடங் கேட்டவர்கள் எண்ணில்லாதவர்கள். எவ்விடத்திற்குச் சென்றாலும் தமது மாணவர்க்கு நல்லது போதித்தற் பொருட்டும் சித்தாந்த வுண்மைகளை நிலை நாட்டுதற் பொருட்டும் சிவாகமங்களைத் தனி வண்டியில் ஏற்றிக்கொண்டு போவதாக அவர் புராணங்கள் கூறுகின்றன. அவர் சரியை கிரியை யோகம் ஞானமென்னும் நான்கு பாதங்களையும் கூறும்

மூலாகமங்களையும், உபாகமங்களையும் பாதுகாத்ததுபோல அவர்க்குப் பின் வந்தோர் பாதுகாவாமையால் இப்போது ஆகம இலக்கிய முழுதும் அகப்படாமலும் வெளிப்படாமலுமிருக்கின்றது. மூலாகமங்கள் இருபத்தெட்டு, உபாகமங்கள் இருநூற்றேழு. இவற்றுள் சிற்சிலவே இப்பொழுது கிடைக்கின்றன. அவற்றுள்ளும் ஒவ்வொரு பகுதியே அச்சிற்கு வந்துள்ளது. காமிகம், காரணம் முதலிய மூலாகமங்களுள் கிரியாபாத மாத்திரமே அச்சுவாகனம் ஏற்றப்பெற்றன. ஏனைய பகுதிகள் கிடைக்கப் பெறவில்லை. உபாகமங்களுள் பௌஷ்கரம், மிருகேந்திரம், சர்வஞானோத்திரம், சிவதருமோத்திரம் என்னுஞ் சில நூல்களே வெளிவந்துள்ளன. வடநூல்களை அச்சிடுவோர் தமிழில் அவற்றிற்குச் செம்மையான மொழிபெயர்ப்பில்லாமல் வெளிப்படுத்துதல் தமிழ் மக்களுக்குப் பெரும்பயன் விளைக்காது. **சிவாகம சங்கங்கள் ஆகம நூல்களைத் தேடிக் கண்டுபிடித்தெழுதி அவற்றைச் செவ்வையான மொழிபெயர்ப்போடு திருத்தமான அச்சில் வெளிப்படுத்த முயலுமானால் தமிழ் மக்களுக்கு அது பேருதவியாகும்.** வைதிகப் பக்கத்திலே நூல்களைப் போற்றிப் பாதுகாப்பார்களைப் பார்த்து ஆகமிகளும் அவ்வாறு தங்கள் நூல்களைப் போற்ற ஊக்கங்கொளல் வேண்டும். வைதிகப்பக்கத்திலே வேத நான்கும், ஆயுர்வேத முதலிய உபவேதங்களும் வேதாந்த நூல்களும் வேதாந்தங்களும் உபநிடதங்களும் மிருதி பதினெட்டும் பதினெண் புராணங்களும் அவற்றைச் சார்ந்த பிற நூல்களும் பெரும்பாலும் செம்மையான அச்சில் வெளிப்பட்டு விட்டன. வேதாந்த சூத்திரமும் அதன் பாடியங்களும் பெரும்பான்மையும் மொழிபெயர்ப்போடு வெளிவந்துள்ளன. இவைகளால் தமிழ் மக்களுக்குப் பெரும்பயன் விளைவதில்லை. தமிழ்நாட்டிலுள்ள சிவாலயங்களிலுந் திருமடங்களிலும் செய்யப்படும் சடங்குகள் யாவற்றிற்கும் சைவர்கள் வீட்டிற் செய்யப்படும் எவ்வகைச் சடங்குகட்கும் ஆதாரமாகிய ஆகமங்களும் பத்ததிகளும் வெளிவராமலிருப்பது மிகவும் பரிதாப மெய்துதற்குரிய நம் நிலையைக் காட்டுகின்றது. அருணந்தி சிவாசாரியரைப் போல ஆகமக்கடலைக் கரைகண்டுணர்ந்த ஒருவர்கூட இக்காலத்தில்லை. இனியேனும் சைவர்களும் ஆதிசைவர்களும் ஒருங்குகூடி ஆகமங்களைப் பாதுகாக்க முயலவேண்டும். ஆகமங்கள் யாவற்றையும் மொழிபெயர்த்து கடவுட்டன்மை வாய்ந்த நமது செந்தமிழிலேயே சடங்குகள் யாவற்றையும் நிகழ்த்துதற்குரிய முறைகளை வகுத்துக் கொள்ளுதல் இன்றியமையாததொன்று. 'என்றுமுள தென்றமிழி'லே ஆகமங்கள் நிலைபெறுமாயின் அவைகள் சிதைவுண்டு பழுதுபடா. தமிழ் மக்களும் அவற்றின் நலனை யுணர்ந்து போற்றுவர்.

அருணந்தி சிவாசாரிய சுவாமிகள் சரியை, கிரியை, யோகங்களில் தலைநின்றவராய்த் தமது மாணவராகிய அச்சுதகளப்பாளரின் அருள்ஞானப் புதல்வராகிய மெய்கண்டாரிடம் ஞானோபதேசம் பெறும்பான்மையுடையவ ராயிருந்தார். ஆசிரியர் மெய்கண்டார் குழவிப் பருவத்தினராயிருந்தும் மாணவர் பலர்க்கும் ஞானநூல் கற்பிகின்றார் என்பதை ஆதி சைவ திலகர் கேள்வியுற்று வியப்புக்கொண்டு தூதர் சிலரை முன் விடுத்துத் திருவெண்ணெய் நல்லூருக்கு

தமது பரிவாரங்களோடும் விருதுகளோடும் புறப்பட்டார். அப்பதியிலுள்ள சைவ வேளாளர் யாவரும் தெருக்களெங்கும் வாழை, கமுகு, தெங்கு என்பவற்றால் தோரணம் நாட்டி வீடுதோறும் பூரணகும்பமெடுத்து மங்கல வாத்தியங்களொடு தங்கள் குருவை எதிர்கொண்டு வணங்கினார்கள். மெய்கண்ட முதல்வர் மாத்திரம் அருணந்தியார் வரவை எதிர் கொள்ளாது தமது இருக்கையில் வீற்றிருந்தனர். அதைக்கண்ட சிவாசாரியார் மெய்கண்டார்பால் நேரேசென்று அவர் தமது மாணவர்க்கு ஆவண மலத்தினியல்பினை எடுத்து மொழிவதைக் கேட்டு அவ்வருள் ஞானச் செம்மலை நோக்கிச் செருக்குஞ் சீற்றமும் உடையவராய் ஆணவசொரூபமாவதென்னை என்று அதிர்ச்சியோடு கேட்டவுடனே மெய்கண்டார் இன்முகத்தோடு அருணந்தியாரை நேர் நோக்கித் தமது விரலால் சுட்டிக்காட்டி, அவர் தான்நின்ற நிலையில் ஆணவ வடிவத்தை விளக்கினார் என்பதைக் குறிப்பித்தருளினார். அருணந்தியார் மெய்கண்டாரைக் குருவாக ஏற்றுக் கொண்டதை அனைவரும் ஏற்றுக் கொள்கின்றனர். ஆனால் அங்கு நிகழ்ந்த ஆணவமல விளக்கத்தைப் பற்றிக் கருத்து வேறுபாடு உண்டு. அந்தச் சிவஞானக் கதிரவனது அருளொளி நோக்கால் மலவிருள் அகலப் பெற்றாராய் உண்மையுணர்ந்து அச்சைவ நாதரது திருவடியில் தாழ்ந்திறைஞ்சி தமக்கு ஞானம் நல்கவேண்டுமென்று குறையிரந்தார். அவ்வாதி சைவமுதல்வற்கு நமது சைவ குலதிலகர் உடனே திருநீறளித்து மெய்யுணர்வருளி சிவஞானபோதப் பொருள் தெரித்துத்தமது நாற்பத்தொன்பது மாணவருள் முதல் மாணவராகும் பெற்றி நல்கினர். மெய்கண்டார் தமக்குச் செய்த பெருநன்றியை அருணந்தி சிவம் தாம் சிவஞான போதத்திற்கு வழிநூலாக இயற்றிய சிவஞான சித்தியார்ப் பாயிரத்துள்ளும் இருபாவிருபஃது என்னும் சித்தாந்த நூலினுள்ளும் மிகவும் அழகுபெற வியந்து துதித்துள்ளார்.

இவரியற்றிய சிவஞான சித்தியார், பதினான்கு நூல்களுள்ளும் **விரிந்த நூலாய் புறச்சமய மறுக்கும் பரபக்கமும், அகச்சமயம் விளக்கும் சுபக்கமு முடையதாய் தாயுமானார்** முதலிய பெரியோர்களால் பெரிதும் போற்றப் பெற்றதாயுள்ள அருந்தமிழ் நூல். அதன் பாயிரத்துட் புகுந்த செய்யுள் பின்வருமாறு:

என்னையிப் பவத்திற் சேரா வகையெடுத் தென்சித் தத்தே
தன்னைவைத் தருளி னாலே தாளிணை தலைமேற் சூட்டு
மின்னமர்பொழில்சூழ் வெண்ணெய் மேவிவாழ் மெய்கண் டானூல்
சென்னியிற் கொண்டு சைவத் திறத்தினைத் தெரிக்க லுற்றாம்.

– (சித்தியார் சுபக்கம் – செய்யுள் 2)

சில காலங்கழித்து, சிவாசாரிய மூர்த்திகள் தமது மாணவர்களுட் சிறந்தவ ராகிய மறைஞானசம்பந்த சிவாசாரியாருக்கு ஞானோபதேசஞ் செய்தபின் பரசிவோகபாவனையால் அகண்ட பூரணமான நிலைமை எய்தினர்.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

திருத்துறையூர் – அருணந்தி தேவநாயனார்

அருளிச்செய்த

சிவஞான சித்தியார் பரபக்கம்

மூலமும், உரையும்.

விநாயகர் காப்பு

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

ஒருகோட்ட னிருசெவியன் மும்மதத்தன்
நால்வாயைங் கரத்த னாறு
தருகோட்டம் பிறையிதழித் தாழ்சடையான்
தருமொருவா ரணத்தின் றாள்கள்
உருகோட்டன் பொடும்வணங்கி யோவாதே
இரவுபக லுணர்வோர் சிந்தைத்
திருகோட்டு மயன்றிருமால் செல்வமுமொன்
றோவென்னச் செய்யுந் தேவே.

பதவுரை

ஒரு கோட்டன் இருசெவியன் மும்மதத்தன் நால்வாய் ஐங்கரத்தன்	ஒற்றைக் கொம்பாகிய தந்தத்தையும், முறம் போலும் இரண்டு செவிகளையும், மூன்று மதங்களையும், (நாலும்) அசைகின்ற வாயையும், ஐந்து கைகளையும் உடையவனாகிய விநாயகப் பெருமான்
ஆறுதரு கோட்டம் பிறையிதழித்தாழ் சடையான் தரும்	கங்கையாற்றையும், தன்னால் தரப்பட்ட வளைவான அழகுபெற்ற பிறைநிலாவையும், கொன்றை மாலையும் அணிந்த, விரிந்து தாழ்ந்த சடையை உடைய சிவபெருமான் அளித்தருளிய
ஒரு வாரணத்தின் தாள்கள்	யானை வடிவினன். அவன் தாள்களை

உருகு ஒடு அன்பொடும் ஒவாதே வணங்கி	உருக்கமும், அன்பும் கொண்டு இடைவிடாது வணங்கி
இரவும்பகலும் உணர்வோர் சிந்தை(யில்)	இரவும் பகலும் உள்ளத்தில் இருத்துவோர் சிந்தையில்
திருகு ஒட்டும்	இடம்பெற்றுள்ள குற்றங்களை, மலமாசுகளை நீக்குவான் (அதுவுமேயன்றி)
அவன் திருமால் செல்வமும் ஒன்றோ என்னச் செய்யுந் தேவே.	பிரமன், திருமால் ஆகியோரின் செல்வம் நிறைந்த வாழ்வும் ஒரு பொருளன்று என வெறுக்கச் செய்து சிவமாந்தன்மைப் பெருவாழ்வையும் தருமென்க.

விளக்கவுரை

கங்கையாறும், கோணுதலைத்தரும் அழகிய பிறையும், கொன்றை மாலையும் உடைத்தாய்த் தாழ்ந்த சடையினையுடைய பரமேசுவரன் பிள்ளையாகத் தந்த தேவன்; ஒரு கொம்பையும், இரண்டு செவியையும், மூன்று மதத்தையும், நான்ற வாயையும், ஐந்து கரத்தையும் உடையோனாகிய ஒப்பற்ற யானையினது தாள்கள்; உள்ளம் உருகுதலைச் செலுத்துவதாகிய அன்போடு கூடி வந்தித்து ஒழியாது இரவும் பகலும் நினைப்போரது புத்தியில் திருக்கை ஈண்டு அணுகாதபடி துரக்கும். பிரம விட்டுணுக்கள் பதமும் ஒன்றல்ல என்னும்படி மிக்க வீட்டின்பத்தையும் உண்டாக்கும் என்றவாறு.

கோடும், செவியும், மதமும், வாயும், கரமும் அஃறிணைப் பொருளாகிய யானையினது சினைப்பெயர்கள் ஆயினும், அவ்யானைப் படிவத்தையுடையான் தேவன் ஆதல்பற்றிச் சினைதோறும் 'அன்' இறுதி அடுக்கிக் கூறினார்.

இச்செய்யுள் விநாயகர் வணக்கம் கூறிற்று.

விநாயகன் – தனக்குமேல் தலைவன் (நாயகன்) இல்லாதவர்.

மங்கல வாழ்த்து

———

செய்யுள் - 1

சிவபெருமான்

எண்சீர்க்கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

ஆதிநடு வந்தமிலா வளவில் சோதி
அருண்ஞான மூர்த்தியா யகில மீன்ற
மாதினையு மொருபாகத் தடக்கி வானோர்
மகுடசூ ளாமணியாய் வையம் போற்றப்
பாதிமதி யணிபவளச் சடைக டாழப்
படரொளியம் பலத்தாடும் பரனார் பாதத்
தாதுமலி தாமரைகள் சிரத்தே வைத்துத்
தளராத பேரன்பு வளரா நிற்பாம்.

பதவுரை

ஆதிநடு அந்தமிலா அளவில் சோதி அருள் ஞான மூர்த்தியாய்	தொடக்கம், நடு, நிறைவு ஆகிய மூன்றுமின்றி அநாதியாய், அளவிட முடியாத ஒளிப் பிழம்பாய் அருளும், ஞானமுமே தம்முருவாய்க் கொண்டு
அகிலமீன்ற மாதினை யொருபாகத் தடக்கி	எல்லா வுலகங்களையும் ஈன்ற சிவசத்தியைத் தம் இடப்பாகத்தில் ஏற்று
வானோர் மகுட சூளாமணியாய் வையம் போற்ற	தேவர்களின் முடிமணியாய் உலகவர் போற்றி உரைக்க
பாதிமதி அணிபவளச் சடைகள் தாழப் படரொளி அம்பலத்தாடும்	ஒற்றைக்கலைச் சந்திரனை அலங்கரமாக அணிந்த பவளம் போன்ற சடைகளைத் தாழவிட்டு விரிந்த ஒளியையுடைய திருவம்பலமாம் கோயிலின் கண்ணே திருநடம் செய்யும்
பரனார் பாதத் தாதுமலி தாமரைகள் சிரத்தே வைத்துத் தளராத பேரன்பு வளரா நிற்பாம்	மேலான சிவபெருமானாம் அம்பலவாணன் திருவடிகளாகிய தாதுக்கள் மிக்க திருத் தாமரை மலர்களை நம் தலையின் மீது வைத்து என்றும் தளர்வடையாத பேரன்பு பெருகும்படி வழிபட்டு வாழ்வோம்.

விளக்கவுரை

முதல் நடு இறுதியின்றி ஒருவராலும் அறியப்படாத பரசொரூபப் பிரகாசத்தையுடைய அருளாகிய ஞானமே திருமேனியாகக் கொண்டு தமது கருணையினால் உருவங் கொண்டு பிரபஞ்சத்தையும் உண்டாக்கிய அந்தப் பரமேசுவரியையும் தம் இடப்பாகம் முழுதினும் அடக்கிப் பிரம விட்டுணுக்கள் முதலாகிய தேவர்களுக்கு அவரது மகுடரத்தினம் போலும் மிக்க சத்தி சிவமாகிய சகள நிட்கள சொரூபமாய் உலகத்துள்ளார் துதிப்ப அர்த்த சந்திரனை அலங்காரமாக அணிந்த பவளம் போன்ற சடைகளைத் தாழவிட்டு விரிந்த ஒளியையுடைய திருவம்பலத்தின் கண்ணே நிருத்தம் செய்தருளுகின்ற மேலான பரமசிவனது திருப்பாதங்களாகிய தாதுக்கள் மிக்க தாமரைகளைத் தலையின் மீது வைத்துத் தளர்ச்சியில்லாத மிக்க அன்பு மிகவும் உண்டாம்படி நில்லா நின்றோம் என்றவாறு.

பூமிக்குச் சுழுமுனை திருவம்பலம் ஆகையால், மற்றொரு தலம் அனவரத தாண்டவத்துக்குப் பொறாது என்பது கருத்து.

திருமூலர் திருமந்திரம்:-

"தத்துவம் ஆடச் சதாசிவந் தானாடச்
சித்தமும் ஆடச் சிவசத்தி தானாட
வைத்த சராசரம் ஆட மறையாட
அத்தனும் ஆடினான் ஆனந்தக் கூத்தே". – 2789

தானாடத் தன் தசையாடும் என்பது கருத்து அட்டமூர்த்த மாகையால்.

இச்செய்யுள் சிவ வணக்கம் கூறுமுகத்தால் அச்சிவம் உருவமும் அருவமும் உரூபாரூபமும் என்னும் மூன்று திருமேனியும் அல்ல என்பது கூறிற்று. (1)

செய்யுள் - 2

சிவசத்தி

ஈசனரு ளிச்சையறி வியற்ற லின்பம்
இலயமொடு போகமதி கார மாகித்
தேசருவ மருவுருவ முருவ மாகித்
தேவியுமாய்த் தேசமொடு செல்வ மாகிப்
பேசரிய வுயிரையெலாம் பெற்று நோக்கிப்
பெரும்போக மவையளித்துப் பிறப்பினையு மொழித்திட்
டாசகலு மடியருளத் தப்பனுட னிருக்கும்
அன்னையருட் பாதமலர் சென்னி வைப்பாம்.

பதவுரை

ஈசன் அருள் இச்சை அறிவு இயற்றல் இன்பம் இலயமொடு போகம் அதிகாரம் ஆகி	தலைவனை விட்டு நீங்காத சத்தியானது அவனது திருவுள்ளத்தாலே பராசத்தியும், இச்சாசத்தியும், ஞானாசத்தியும், கிரியா சத்தியும், திரோதானசத்தியும் இவையும் அன்றிச் சங்காரத்தோடு படைப்புக் காப்புக்களுமாய்,
தேசு அருவம் அருவுருவம் உருவம் ஆகி தேவியும்ஆய் தேசமொடு செல்வம் ஆகி	அந்தப் பிரகாசமாகிய கர்த்தாவுக்கு அரூபம் ரூபாரூபம் ரூபம் எனப்பட்ட மூன்று முறைமைக்கும் அம்முறைமைகளாகிய வடிவும் தாமாய்த் தலைவன் அப்படிக்கொண்டருளும் திருமேனிக்கு அந்தந்தச் சத்திகளும் தாமாய்ப் பிரபஞ்சங்களும் பதார்த்தங்களும் தாமாய்,
பேச அரிய உயிரை எலாம் பெற்று நோக்கி	தலைவன் எடுத்துக்கொண்ட திருமேனிக்கு ஏற்ற சத்தியாய் நின்று எண்ணுதற்கு அரிதாகிய சர்வான்மாக்களையும் படைத்து அளித்து,
பெரும்போகம் அவை அளித்து பிறப்பினையும் ஒழித்திட்டு	ஆன்மாக்கள் செய்த புண்ணிய பாவங்களுக்கு ஈடாகச் சொர்க்காதி பதங்களையும் கொடுத்துச் பிறப்புக்களையும் கெடுத்துக் தலைவனோடும் கூடிநின்று முத்தியையும் கொடுத்து,
ஆசு அகலும் அடியார் உளத்து அப்பனுடன் இருக்கும் அன்னை	அஞ்ஞானம் நீங்கின அடியார் இதயத்தினும் அப்பனுடன் கூடியிருக்கும் உலக மாதாவினுடைய
அருள் பாத மலர் சென்னி வைப்பாம்	கருணையாகிய திருவடித்தாமரைகளை எம் தலைமேல் வைத்துக் கொள்ளா நின்றேம் என்றவாறு.

விளக்கவுரை

இறைவனின் அருட் சத்தியாகவும் இச்சா சத்தி, கிரியா சத்தி, ஞானசத்தி யாகவும், இன்பம் தரும் இலயம், போகம், அதிகாரம் எனும் மூன்று பகுதிகளான தாகவும், அருவம் உருவம் அருவுருவம் எனும் மூன்று நிலைகளாகவும் தேவியாகவும், உலகமாகவும், உலகப் பொருள்களாகவும், பல வகையான உயிர்களையும்

பெற்றெடுத்து அவைகளுக்குப் பரிபக்குவம் வருமாறு அருள் நோக்குபவளாகவும், அவற்றின் நல்வினை தீவினைகளின் படி போகங்கள் அளிப்பவளாகவும், பிறப்பை நீக்கி வீடுபேறளிப்பவளாகவும், குற்றமற்ற அடியார் உள்ளத்தில் அப்பனுடன் வீற்றிருக்கும் சிவசத்தியாகவும் விளங்கும் அன்னையின் அருள்மிகு பாதமலர்களைத் தலையில் வைப்போம்.

அதிகாரமும், செல்வமும், தேசமும் பெற்றும் நோக்கியும், பெரும்யோகம் அளித்தும் என உம்மைகள் தொக்குகின்றன.

இச்செய்யுள் சிவசத்தி வணக்கம் கூறுவான் தலைவனுடைய செயல்களுக்கெல்லாம் சத்தியே கருவியாய் நிற்கும் என்பது கூறிற்று. பிரபஞ்சத் தோற்றத்துக்குச் சத்தி உபாதானம் என்றதன்று. (2)

செய்யுள் - 3

விநாயகக்கடவுள்

இயம்புநூ லிருந்தமிழின் செய்யு ளாற்றால்
இடையூறு தீர்ந்தினிது முடிய வேண்டித்
தயங்குபே ரொளியாகி யெங்கும் நின்ற
தலைவனார் மலைமாது தன்னோ டாடிப்
பயந்தவைங் கரநாற்றோள் முக்கணிரு பாதப்
பரியதொரு நீள்கோட்டுப் பெரிய பண்டிக்
கயந்தனடிக் கமலங்கள் நயந்து போற்றிக்
கருத்திலுற விருத்திமிகக் காதல் செய்வாம்.

பதவுரை

இயம்பும் நூல்	இப்பொழுது சொல்லும் நூல்,
இருந் தமிழின் செய்யுள் ஆற்றால் இடையூறு தீர்ந்து இனிது முடிய வேண்டித்	பெரிய தமிழினாற் செய்யும் இச்செய்யுள் நூல் இயற்றிச்சொல்லும் வழியில் வரும் குற்றம் தீர்ந்து இனிது முடிதலை விரும்பி,
தயங்கு பேர் ஒளி ஆகி	விளங்கும் பெரிய ஒளியாகி,
எங்கும் நின்ற தலைவனார்	எவ்விடத்தும் பூரணமாய் நின்ற தலைவன், சிவபெருமான்.
மலை மாது தன்னோடு ஆடிப் பயந்த	அசுரர் வதை நிமித்தமாக இமயமாதோடும் கூடி உண்டாக்கப்பட்ட
ஐங்கரம் நால்தோள் முக்கண் இருபாதம் பரியது ஒரு நீள் கோட்டு	ஐந்து கையினையும், நான்கு தோளினையும், மூன்று கண்ணினையும், இரண்டு பாதத்

பெரிய பண்டிக் கயந்தன்	தினையும், பெரிதாகி நீண்டதொரு கொம்பினையும், பெரிய வயிற்றினையும் உடைய யானை முகவனது,
அடிக் கமலங்கள் நயந்து போற்றிக் கருத்தில் உற விருத்தி மிகக் காதல் செய்வாம்	திருப்பாதக்கமலங்களை விரும்பித் துதித்துச் சித்தத்திலும் உறும்படி வைத்து மிக்க விருப்பத்தைச் செய்யா நின்றேம் என்றவாறு.

விளக்கவுரை

இச்செய்யுள், சிவஞானசித்தி யென்று சொல்லப்பட்ட இந்நூல் விக்கினமின்றி வினவ முடிப்பது காரணமாக விநாயகர் வணக்கம் கூறிற்று. (3)

(முதல் பாடலில் வந்த கணபதி வணக்கம் நூல் நிறைவெய்த முதலில் வணங்கியதாகும். இது பல தெய்வங்களையும் வரிசையாக வணங்கும் செய்கைப்படி வருவதாகும்).

விளங்கும் பேரொளியாகி எங்கும் நிறைகின்ற தலைவனாராகிய சிவன் இமயவான் மகளாக வந்த பார்வதியுடன் இணைந்து பெற்ற ஐந்து கைகள், நான்கு தோள்கள், மூன்று கண்கள், இரு பாதம், ஒரு பெரிய தந்தம் ஆகியன கொண்டு பெருவயிற்றுடன் விளங்கும் விநாயகனின் திருவடிக் கமலங்களை விரும்பிப் போற்றி மனத்தில் நிற்கச் செய்து மிகுந்த காதல் செய்வோம்.

இதனால் இங்கு கூறப்பெறும் நூல் தடை நீங்கித் தமிழின் செய்யுள் ஆற்றலால் நன்கு முடியும்.

செய்யுள் - 4

சுப்பிரமணியக் கடவுள்

அருமறையா கமமங்கம் அருங்கலை நூல் தெரிந்த
அகத்தியனுக் கோத்துரைக்கு மருட்குருவாங் குருளை
திருமறைமா முனிவர்முனி தேவர்கள்தம் தேவன்
சிவனருள்சேர் திருமதலை தவநிலையோர் தெய்வம்
பொருமறையார் கழல்வீரர் வீரன் கையிற்
பூநீர்கொண் டோவாது போற்றுமடி யார்கள்
கருமறையா வகையருளிக் கதிவழங்கும் கந்தன்
கழலிணைகள் எம்சிரத்திற் கருத்தில் வைப்பாம்.

பதவுரை

அருமறை ஆகமம் அங்கம் அருங் கலை நூல் தெரிந்த அகத்தியனுக்கு ஒத்து உரைக்கும் அருள் குரு ஆம் குருளை	தெரிதற்கரிய வேதங்களையும் ஆகமங் களையும் ஆறங்கங்களையும் அரிதாகிய கலை ஞானங்களையும் ஆராய்ந்த அகத்தியமா இருடிக்கு வேத விழுப்பொருளை அருளிச் செய்த ஞானாசாரியனாகிய இளைய பிள்ளையார்,
திரு மறை மா முனிவர் முனி	அழகிய வேதத்தைக் கற்றுவல்ல மிக்க இருடி கட்குத் தலைவனாகிய இருடி,
தேவர்கள்தம் தேவன்	தேவர்கட்குச் சுவாமி
சிவன் அருள் சேர் திரு மதலை	சிவனுக்குக் அருட்கருணையாலுண்டாகிய புத்திரன்,
தவ நிலையோர் தெய்வம்	தவத்தின் மிக்கோர்க்கு வழிபடும் தெய்வம்,
பொரும்அறை ஆர் கழல் வீரர் வீரன்	யுத்தத்தைப் பொருந்தின வீரக்கழலையுடைய வீரர்க்கு வீரன்,
கையில் பூ நீர் கொண்டு ஒவாது போற்றும் அடியார்கள் கரு மறையா வகை அருளி கதி வழங்கும் கந்தன்	ஒழியாது கையில் மலரும் மஞ்சனமும் கொண்டு துதிக்கும் அடியார்கள் கருப்பத்தில் அழுந்தாத வகை அருள்செய்து மோட்சத் தைக் கொடுக்கும் கந்தசுவாமி,
கழல் இணைகள் எம்சிரத்தில் கருத்தில் வைப்பாம்	அவனது திருப்பாதங்கள் இரண்டையும் என் தலை மீதும் இதயத்திலும் வைத்துக் கொள்ளா நின்றேம் என்றவாறு.

விளக்கவுரை

கழல் வீரர் என்றது அசுரரை. இச்செய்யுள் கந்தர் வணக்கம் கூறிற்று.

அரிய வேதம், ஆகமம், வேதத்தின் பகுதியான அங்கங்கள், அரிய சாத்திர நூல்கள் ஆகியவற்றைக் கற்று மேம்பட்ட அகத்திய முனிவருக்கே வேதங்களின் உட்பொருளை உரைக்கும் அருட் குருவான குழந்தை; வேதம் வல்ல மாமுனிவர்களுக்கு எல்லாம் முனிவன்; தேவர் யாவர்க்கும் தேவன்; சிவனின் அருளால் வந்த அவரின் மகன்; தவநிலையில் இருப்பவர்களின் தெய்வம்; வீரர்களுக்கு எல்லாம் வீரன்; பூவும் நீரும் கையில் ஏற்று வழிபடும் அடியார்களின் கருவில் மறைந்து பிறப்பை அடையாமல் நீக்கி வீடுபேறு வழங்கும் கந்தனின் திருவடிகளை எம் சிரத்திலும் கருத்திலும் வைப்போம்.

'ஆதிநடு அந்தமிலா அளவில் சோதி' என்ற செய்யுள் முதல் இச்செய்யுள் காறும் தெய்வ வணக்கம் கூறிற்று. (4)

செய்யுள் - 5

மெய்கண்ட தேவநாயனார்

பண்டைமறை வண்டரற்றப் பசுந்தேன் ஞானம்
பரிந்தொழுகச் சிவகந்தம் பரந்து நாறக்
கண்டவிரு தயகமல முகைக ளெல்லாம்
கண்டிறப்பக் காசினிமேல் வந்தவருட் கதிரோன்
விண்டமலர்ப் பொழில்புடைசூழ் வெண்ணெய் மேவு
மெய்கண்ட தேவன்மிகு சைவ நாதன்
புண்டரிக மலர்தாழச் சிரத்தே வாழும்
பொற்பாத மெப்போதும் போற்றல் செய்வாம்.

பதவுரை

பண்டை மறை வண்டரற்ற	பழைமையான வேத வண்டுகள் ஒலிப்ப
பசுந்தேன் ஞானம் பரிந்தொழுகச்	சிவஞானமாகிய பசுந்தேன் ஒழுகவும்
சிவகந்தம் பரந்து நாறக்	சிவமாகிய மணம் விரிந்து பரவவும்
கண்டவிரு தயக் கமல முகைக ளெல்லாம் கண் திறப்பக்	சகலரில் சத்தினிபாதம் பதிந்து தரிசித்தோரது இதயக் கமலங்கள் எல்லாம் மலரவும்
காசினிமேல் வந்த அருட்கதிரோன் விண்ட மலர்ப் பொழில்புடைசூழ் வெண்ணெய் மேவு மெய்கண்ட தேவன் மிகு சைவநாதன்	பூவுலகின் மேல் விரிந்த மலர்களையுடைய பொழில்கள் சூழ்ந்த திருவெண்ணெய் நல்லூரைத் திருப்பதியாகப் பொருந்தின சுத்த சைவத்துக்கு ஆதியாகிய மெய்கண்ட தேவன் என்னும் திருநாமத்தையுடைய ஞான சூரியனது
புண்டரிக மலர்தாழச் சிரத்தே வாழும் பொற்பாதம் எப்போதும் போற்றல் செய்வாம்	திருவடித்தாமரைகளைச் சிரமேற் கொண்டு எப்போதும் வழிபாடு செய்வோம்

விளக்கவுரை

கண்ட இதய கமல முகைகள் கண் திறந்த விடத்து வண்டு அரற்ற, பசுந்தேன் ஒழுக, பரந்து மணக்க எனக் கூட்டினும் அமையும். (5)

இச்செய்யுள் குரு வணக்கம் கூறிற்று.

பழைய வேதங்களாகிய வண்டுகள் ஒலிக்கவும் சிவஞானமாகிய பசுந்தேன் ஒழுகவும் அதனால் சிவமாகிய மணம் பரவவும் இதை உணர்ந்தவர் இதய தாமரை மொட்டுகள் எல்லாம் மலரவும் பூவுலகின் மேல் திருவெண்ணெய்நல்லூரில் அவதரித்த மெய்கண்ட தேவர் எனும் மிகுசைவத் தலைவனின் திருவடித் தாமரைகள் தலைமேல் கொண்டு வழிபடுவோம்.

குறிப்பு:– சுத்த சைவம் என்ற விடத்துச் சித்தாந்த சைவம் என்றிருக்க வேண்டும். சுத்த சைவத்துக்கும் சித்தாந்த சைவத்துக்கும் உள்ள வேறுபாடு சிறிதாயினும் அதனை உணர்தல் அவசியம். அது வருமாறு:– சித்தாந்த சைவத்தை யொப்பப் பதி பசு பாசங்களின் இயல்புகளை உடம்பட்டு முத்தியில் உயிரானது சிவ பரம்பொருளினிடத்து ஐக்கியமுற்று ஒரு பயனும் ஓர் ஆனந்தமும் இன்றி நிற்கும் என்பது சுத்த சைவம். இதற்கு அப்பாற்பட்ட கடந்த நிலை சித்தாந்த சைவம் ஆம்.

அவையடக்கம்

செய்யுள் - 6

மாலயன்மா மறையறியா ஆதி மார்க்கம்
வையகத்தா கமம்வேதம் மற்று முள்ள
நூலையெலா முணர்ந்திறைவன் கழலே நோக்கு
நோன்மையருந் தவர்முன்யா னுவலு மாறு
வேலையுலா வுந்திரைகள் வீசி யேறி
வேறேழு மொன்றாகி நின்ற போது
சாலவுமான் குளப்படியிற் றங்கி நின்ற
சலமதுதா னேரென்னுந் தன்மைத் தாலோ.

பதவுரை

மால் அயன் மா மறை அறியா ஆதி மார்க்கம்	பிரம விட்டுணுக்களாலும் நான்கு வேதங்களாலும் அறிதற்கு அரிதாகிய பரமேசுவரனை அடையும் வழியைப் பற்றி,
வையகத்து ஆகமம் வேதம் மற்றும் உள்ள நூலை எலாம் உணர்ந்து இறைவன் கழலே நோக்கும் நோன்மை அருந் தவர் முன் யான் நுவலும் ஆறு	இவ்வுலகின் கண்ணே ஆகமத்தையும் வேதத்தையும் அவற்றின் வழியுண்டாகிய சாத்திரங்களையும் கற்றறிந்து பரமேசுரனது திருப்பாதங்களையே பற்றுக்கோடாகவுடைய பெருந்தபோதனர் முன்னே யாதும் அறியாத யான் சொல்லும் நெறி,
வேலை உலாவும் திரைகள் வீசி ஏறி வேறு ஏழும் ஒன்று ஆகி நின்ற போது சாலவும் மான் குளப்படியில் தங்கி நின்ற சலம் அது தான் நேர் என்னும் தன்மைத்து ஆல் ஒ	கடலின் உலாவும் திரைகள் மிகுதலும் வேற்றுமைப்பட்ட ஏழுகடல்கள் ஒன்றுபட நின்றவிடத்து மிகவும், பசுவின் குளப்படியில் தங்கி நிற்கும் நீரை அப்பிரளய நீருக்கு ஒப்பு என்னும் முறைமையுடைத்து என்றவாறு.

விளக்கவுரை

திருமாலும் பிரமனும் பெரிய வேதங்களும் முற்றறிய முடியாத பழைய சைவத்தை, ஆகமம், வேதம், மற்ற சாத்திர நூல் யாவும் உணர்ந்து இறைவன்

திருவடியை மனத்தில் இருத்திடும் அரியதவ சீலர் முன், நான் நூல் மூலம் தெரிவிப்பது எப்படி உள்ளது என்றால் ஏழு கடல்களும் கூடிய இடத்திற்கும் பசுவின் குளம்பு பதிந்த பள்ளத்தில் தேங்கிய நீர் சமம் என்று கூறுவது போலுள்ளது. *(6)*

இச்செய்யுள் அவையடக்கம் கூறிற்று.

செய்யுள் - 7

நீடுபுக ழுலகுதனின் மைந்தர் மாதர்
நேயமொடு தாம்பயந்த புதல்வர் வாயிற்
கூடுமொழி மழலையொடு குழறி யொன்றும்
குறிப்பரிதா யிடினுமிகக் குலவிப் போற்றி
மாடுநமக் கிதுவென்று கொண்டு வாழ்வர்
அதுபோல மன்னுதமிழ்ப் புலமை யோரென்
பாடுகவிக் குற்றங்கள் பாரா ரிந்நூல்
பாராட்டா நிற்பரருட் பரிசி னாலே.

பதவுரை

நீடு புகழ் உலகுதனில் மைந்தர் மாதர் நேயமொடு தாம் பயந்த புதல்வர் வாயில் கூடும் மொழி மழலையொடு குழறி ஒன்றும் குறிப்பு அரிதாயிடினும் மிகக்குலவிப் போற்றி மாடு நமக்கு இது என்று கொண்டு வாழ்வர்	நிலைபெற்ற புகழினையுடைய உலகின்கண் மகளிர் சிநேகத்தோடும் பெற்ற பிள்ளைகளிடத்து உண்டாகிய வார்த்தை இளமையோடு தடுமாறி ஒன்றும் தெரிதற்கு அரிதாயிருந்ததாயினும் அதனை மிகவும் கொண்டாடிப் போற்றி யாம் பெறும் பெருஞ்செல்வம் என்று மகிழ்ந்து வாழா நிற்பார்கள்,
அதுபோல மன்னு தமிழ்ப் புலமையோர் என் பாடு கவிக் குற்றங்கள் பாரார் இந் நூல் பாராட்டா நிற்பர் அருள் பரிசினால் ஏ	அத்தன்மை போல நிலைபெற்ற தமிழ்ப் புலவர் என்னிடத்து உண்டாகிய கவியினது குற்றம் பாரார்; யான் சொன்ன நூலைப் பாராட்டா நிற்பர், ஞானத்தின் முறைமைப் பாட்டினால் என்றவாறு.

விளக்கவுரை

இப்பெரிய உலகில் ஆடவர் பெண்டிர் யாவரும் தாங்கள் பெற்ற குழந்தைகள் வாயில் மழலையைக் கேட்டு அதில் உளறல் இருந்தாலும், சொல்வது புரியாததாக இருந்தாலும், மிகவும் மகிழ்ந்து தமக்கு இது சிறப்பு என்று கொண்டாடுவர்.

அதுபோல, நிலையான தமிழ்ப்புலவர்கள் என் பாட்டின் குற்றங்கள் எதுவும் பாரார். இந்நூலை அருளால் பாராட்டி நிற்பர். *(7)*

இச்செய்யுளும் அவையடக்கம் கூறிற்று.

நூற்சிறப்பு

———

செய்யுள் - 8

சுத்தவடி வியல்பாக வுடைய சோதி
சொல்லியவா கமங்களெலாம் சூழப் போயும்
ஒத்துமுடி யுங்கூட வோரி டத்தே
ஒருபதிக்குப் பலநெறிக ளுளவா னாற்போற்
பித்தர்குண மதுபோல வொருகா லுண்டாய்ப்
பின்னொருகா லறிவின்றிப் பேதை யோராய்க்
கத்திடுமான் மாக்களுரைக் கட்டிற் பட்டோர்
கனகவரை குறித்துப்போய்க் கடற்கே வீழ்வார்.

பதவுரை

சுத்த வடிவு இயல்பு ஆக உடைய சோதி	ஞானமே தனக்குச் சுதந்திர வடிவாகவுடைய சிவபரம்பொருள்
சொல்லிய ஆகமங்கள் எலாம் சூழ போயும் ஒத்து முடியும் கூட ஓர் இடத்தே	சமய பேதங்கள் தோறும் அவர் அருளிச் செய்த ஆகமங்கள் எல்லாம் பலபேதம் ஆயினும் ஞானபாதம் எல்லா ஆகமமும் தம்மில் ஒத்துச் சென்று ஒரு பொருளையே நோக்கி முடியும்,
அஃது என்போல? என்னில், ஒரு பதிக்கு பல நெறிகள் உள ஆனால் போல்	ஓர் ஊருக்கு உண்டாகிய வழிகள் எல்லாம் பலபேதப்பட்டதாயினும் சேர அவ்வூரையே நோக்கிக் கிடந்தாற்போல,
பித்தர் குணம் அதுபோல ஒரு கால் உண்டாய் பின் ஒரு கால் அறிவு இன்றிப் பேதையோராய் கத்திடும் ஆன்மாக்கள் உரை கட்டில் பட்டோர்	எல்லாச் சமயத்திலும் ஞானபாதம் ஒக்கும் என்று கண்டு முத்தியடைந்திருக்கும் ஆன்மாக்கள்போல் ஆகாமல் பித்தேறினர் குணம் போல மருளும் தெருளுமாய் முத்தியடையத் தக்க நெறியைக் காணாமல் அந்நெறியைக் கண்டார்போலக் கூப்பிட்டுத் திரியும் அறிவிலோராகிய பரசமயிகளாகிய ஆன்மாக்களது பசு நூற்கட்டுக்கு உட்பட்டோர்,
கனக வரை குறித்துப் போய்க் கடற்கே வீழ்வார்	மகா மேருவைக் குறித்துப் போக ஒருப் பட்டவன் அவ்வழி போகாமல் மற்றொரு திசையே போய்க் கடற்கே வீழ்ந்து ஆழும் தன்மை போலும் என்றவாறு.

விளக்கவுரை

இயல்பிலேயே தூய்மையை வடிவாகக் கொண்ட சோதியாகிய சிவபெருமான் சொல்லிய ஆகமங்கள் எல்லாம் பொதுவாக ஒன்றையே குறித்துக் கூறுகின்றன. அதனால் பல சமயங்கள் தோன்றினாலும் முடிவில் ஒரு பொருளையே அவை சென்று அடைகின்றன.

ஒரு பெரிய நகருக்குப் பல வழிகள் உள்ளது போலவே, பல சமயங்களும் ஒரு பேருண்மையை நோக்கிப் போகின்றன. இதை உணராதோர் பித்தரே ஆவர். ஒரு சமயம் அறிவுடையராகவும் மறு சமயம் அறிவில்லாதவராகவும் தத்தம் காட்சியே பெரிது எனக் கத்துவர். இத்தகையோர் கைலை மலையை நாடி வழிமாறி ஒரு கடலில் வீழ்ந்திடுவோராவர்.

இச்செய்யுள் பரசமயிகள் கொள்ளும் நூல் பசு நூல் ஆகையால் அவர்கள் முத்தியடையார்கள் என்பது கூறிற்று. *(8)*

———

நூற்கதிகாரியும் நூல்வழியும் நூற்பெயரும்

செய்யுள் - 9

போதமிகுத் தோர்தொகுத்த பேதை மைக்கே
பொருந்தினோ ரிவர்க்கன்றிக் கதிப்பாற் செல்ல
ஏதுநெறி யெனுமவர்கட் கறிய முன்னாள்
இறைவனரு ணந்திதனக் கியம்ப நந்தி
கோதிலருட் சனற்குமா ரற்குக் கூறக்
குவலயத்தி னவ்வழியெங் குருநாதன் கொண்டு
தீதகல வெமக்களித்த ஞான நூலைத்
தேர்ந்துரைப்பன் சிவஞான சித்தி யென்றே.

பதவுரை

போதம் மிகுத்தோர்	சாத்திர ஞானத்தான் மிக்கவர்கள்,
தொகுத்த பேதைமைக்கே பொருந்தினோர்	இந்த வகையாகச் சொல்லப்பட்ட அறியாமையைக் கூடினோர்,
இவர்க்கு அன்றி	இந்த இருவருக்குமன்றி,

கதிப் பால் செல்ல ஏது நெறி எனும் அவர்கட்கு அறிய முன் நாள் இறைவன் அருள் நந்தி தனக்கு இயம்ப	முத்தியின் வழிச் செல்லுதலுக்கு யாது வழி என்று ஆராயும் சத்திநிபாதத்தோர்க்கு அறிய வேண்டி ஆதியிலே பரமேசுரன் தன்னளவில் பத்தி செய்யும் நந்திகேசுர நாயனாருக்கு அருளிச் செய்ய,
நந்தி கோது இல் அருள் சனற் குமாரற்கு கூறக்	நந்திகேசுர நாயனாரும் தம்மளவில் குற்றமற்ற பத்தி செய்யும் சனற்குமார பகவானுக்கு அருளிச் செய்ய,
குவலயத்தின் அவ் வழி எம் குருநாதன் கொண்டு தீது அகல எமக்கு அளித்த ஞான நூலை தேர்ந்து உரைப்பன் சிவஞான சித்தி என்றே	அம்முறையாலே கேட்டருளிச் செய்து பிரபஞ்சத்தில் எழுந்தருளி எம்முடைய சுவாமியாகிய மெய்கண்ட தேவ நாயனார் குற்றமற்ற தமிழாகச்செய்து சிவஞானபோதச் சிறப்பு நாமம் தரித்து எமது அஞ்ஞானம் நீங்க அருளிச் செய்த இந்த நூலை ஓதியுணர்ந்து சொல்லா நின்றேன் சிவஞான சித்தி யென்னும் பெயரினால் என்றவாறு.

விளக்கவுரை

புண்ணியவசத்தால் ஞானம் எய்தியோருக்கு நூல் தேவை இல்லை. பாவத்தால் அறியாமை மிகுந்தோர்க்கும் நூல் தேவை இல்லை. வீடு பேறு பெற விரும்பி எந்த வழி உரியது எனக் கேட்கும் அவர்களுக்கு நூல் தேவையாகும்.

இதற்காக இறைவன் நந்தியெம்பெருமானுக்கு இந்நூலை முதலில் உரைத்தார். நந்தியெம்பெருமான் அருள் சனற்குமாரருக்கு உரைக்க, இப்படி வழி வழியாக வந்ததை எம்குருநாதன் மெய்கண்டார் தீமை நீங்குமாறு எமக்கு (சிவஞான போதம்) அளித்தார். அதைத் தேர்ந்து கொண்டு 'சிவஞான சித்தி' என்ற பெயரில் நான் தருகின்றேன்.

இச்செய்யுள் குருபரம்பரையும், பாரம்பரியமாக நூல் வந்த முறைமையும் கூறிற்று. *(9)*

———

நூற்கருத்து

செய்யுள் - 10

இறைவனைபு மிறைவனா லியம்பு நூலும்
ஈண்டளவும் பொருளியல்பும் வேண்டும் செய்தி
முறைமைகளும் பெத்தமொடு முத்தி யெல்லாம்
மூதுலகி லெமக்கியன்ற முயற்சி யாலே
சிறையுலவும் புனனிலவித் தோன்றும் பேய்த்தேர்ச்
செய்கைபோ லுண்டாய பொய்கொள் மார்க்கத்
துறைபலவும் கடாவிடையாற் சொல்லிப் போக்கித்
துகடீர விந்நூலிற் சொல்ல கிற்பாம்.

பதவுரை

இறைவனையும் இறைவனால் இயம்பும் நூலும்	பரமேசுவரனையும் பரமேசுரனால் அருளிச் செய்யப்பட்ட வேதாகம புராணப் பொருள்களையும்,
ஈண்டு அளவும்	இவ்விடத்து உண்டாகிய அளவைப் பிரமாணமும்,
பொருள் இயல்பும்	அவ் வளவைகளால் அறியும் பொருள்களின் இயல்பும்,
வேண்டும் செய்தி முறைமைகளும்	அப்பொருளியல்பின் வழிநின்றோர் செய்ய வேண்டும் ஆசாரங்களையும்,
பெத்தமொடு முத்தி எல்லாம்	பெத்த முத்திப்பேறுகள் எல்லாம்,
மூது உலகில் எமக்கு இயன்ற முயற்சியாலே	பழையதாய் வரும் வையகத்தில் எமக்குக் கூடின செயலாலே,
சிறை உலவும் புனல் நிலவி தோன்றும் பேய்த்தேர் செய்கைபோல் உண்டாய பொய் கொள் மார்க்கத் துறை பலவும் கடா விடையால் சொல்லிப் போக்கி	கரையில் அகப்பட்டு நிற்கும் நீரை யொப்பத் தோன்றுகின்ற பேய்த்தேரை மெய்யென்று நிருமிக்குமிடத்துப் பொய்யான தன்மை போல நூல்களாகவும் வழிகளாகவும் கேட்டார்க்குப் பொருந்தத் தக்கதாக வுண்டாய்ப் பொய்யைக் கைக்கொண்ட வழிகளாகிய உலகாயதன் முதல் பாஞ்ச

	ராத்திரி ஈறாய சமயிகளுடைய பல துறைகளையும் வினாவாலும் விடையாலும் சொல்லி நீக்கி,
துகள் தீர இந் நூலில் சொல்ல கிற்பாம்	குற்றந்தீர ஞான பாதத்தை அறிய இந்நூலிலே சொல்லக்கடவேம் என்றவாறு.

விளக்கவுரை

கடவுள், அவர் இயம்பிய வேதம், அளவைகள், மெய்ப்பொருள், இவற்றுக்காகக் கடைப்பிடிக்கும் செய்கை முறைகள், பாசத்தால் கட்டப்பெற்ற பெத்த நிலை, அது விடுபட்ட முத்திநிலை போன்றவைகளை எல்லாம் இவ்வுலகில் என்னால் இயன்ற அளவு முயன்று கூறியுள்ளேன்.

தொலைவில் நீர் போல் தோன்றி அருகில் அப்படியில்லாது மறையும் கானல் நீர் போன்று பொய் கொண்ட பிற சமயங்களின் வழி பலவற்றையும் வினா விடைகளால் விளக்கி, அவற்றில் தவறானவற்றை நீக்கி, குற்றமற்றதாக உள்ள ஞானத்தை இந்நூலில் சொல்லியுள்ளேன்.

அளவு என்றது அளவையை. அளவையாவன:- காண்டல் முதலிய. துகள் தீர என்றது அவரவர் அளவை மார்க்கத்தில் நின்ற குற்றம் தீர என்க.

இச்செய்யுள் நூற்கருத்துக் கூறிற்று. (10)

இவை பத்தும் பாயிரம்.

மங்கல வாழ்த்து முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம் – 11.

---

1. உலகாயதன் மதம் முன்னுரை

	வகை	புறப்புறச்சமயம். வேதங்களையும் ஆகமங்களையும் ஏற்றுக்கொள்ளாது. நாத்திக மதம்.	
1.	தோற்றுவித்தவர்	சர்வாகரர்	
2.	உத்தேச காலம்	எக்காலத்தில் இந்தியாவில் எழுந்ததென்று சொல்ல முடியவில்லை. திருவாசகத்தில் இம்மதம் பற்றிக் குறிப்பு உள்ளது.	
3.	பெயர்க்காரணம்	உலகம் மட்டும் உள்பொருள் எனக்கொண்டதால் உலகாயதமதம் எனப்பட்டது.	
4.	மாற்றுப்பெயர்கள்	சார்வாகம், பூதவாதி, நாத்திகமதம்	
5.	உட்பிரிவுகளின் பெயர்கள்	1. இந்திய உலகாயதம் 2. மேனாட்டு உலகாயதம்	
	தேகான்மவாதி	தேகத்தையே	ஆன்மா எனக் கொள்பவன்
	இந்திரியான்மவாதி	இந்திரியங்களையே	ஆன்மா எனக் கொள்பவன்
	பிராணான்மவாதி	பிராணனையே	ஆன்மா எனக் கொள்பவன்
	அந்தக்கரணான்மவாதி	அந்தக்கரணங்களையே	ஆன்மா எனக் கொள்பவன்
6.	கொள்கைகள்		
	அ) பதி (கடவுள்)	கடவுள் இல்லை	
	ஆ) பசு (உயிர்)	இல்லை	
	இ) பாசம் (உயிர்ப் பொருள்கள்)	இன்பம், பொருளென்ற இரண்டே உறுதிப் பொருள்கள். இன்பமே மேலானது. வாழும் வரை இன்பமாக வாழ்.	
	தத்துவங்கள், பூதங்கள்	உலகியல் விளைவுகள் அனைத்தும் நான்கு பூதங்களின் கூட்டுறவாலும், பிரிவாலும் ஆனவை. ஆகாயமான ஐந்தாவது பூதம் இல்லை. வேள்விகள், நீத்தார் கடன் இல்லை. கொடை, தவமில்லை. பூதகுண ஏற்ற இறக்கமே எல்லாவற்றுக்கும் காரணம். கன்மம் அல்ல.	

	ஈ) வீடுபேறு	மகளிரிடத்தில் பெறும் இன்பமன்றி வீட்டின்ப மென்று ஒன்று இல்லை.
	உ) மறுபிறப்பு	இல்லை. சஞ்சித வினைக்கோட்பாடுகள் கிடையாது.
	ஊ) பாலியல்	மங்கையர் இன்பத்தில் மூழ்கி, அவர்களது ஊடலைத் தவிர்ப்பதே அரிய தவமாகும். பேரின்பமும் அதுவே.
7.	அளவைகள்	காட்சி அளவை மட்டும் உண்டு. கருதல், உரையளவைகள் இல்லை. காட்சி 6 வகைப்படும். அநுமான, ஆகமப் பிரமாணங்கள் வேண்டிய தில்லை.
8.	இம்மதம் பற்றி குறிப்பிடும் நூல்கள்	திருக்குறள், மணிமேகலை, திருமுறைகள், மெய்கண்ட நூல்கள், கந்தபுராணம், தாயுமானார் பாடல்கள்.
9.	நூல் குறிப்பு	''உலகாயதனென்னும் ஒண்டிறற் பாம்பின் கலபேதத் தக்கருவிடம் எய்தி'' திருவாசகம் போற்றித் திருவகவல்

எண்கள்	பாடல்கள் எண்ணிக்கை	மதத்தின் பெயர்	பக்கம்
செய்யுள் எண் 11 – 31	21 பாடல்கள்	உலகாயதன் மதம்	43
செய்யுள் எண் 32 – 62	31 பாடல்கள்	உலகாயதன் மதமறுதலை	65

1. (அ) உலகாயதன் மதம்

இனி, உலகாயதன் முதல் பரசமயிகள் பிரமாணமும், பிரமேயங்களும், அவர்களை நிராகரிக்குமாறும் அருளிச் செய்கிறார். (பிரமாணம் - அளக்கும் கருவி; அளவை. பிரமேயம் - பிரமாணத்தால் அளக்கப்படும் பொருள்).

செய்யுள் - 11

கலிவிருத்தம்

இந்திர புரோகித னியம்புமொரு நூலின்
தந்திர மெனாதறிவி னோடருளி லாமல்
சந்தணை புயத்துமண மாலைக டயங்க
உந்தியுல கத்திலுல காயத னுரைப்பான்.

பதவுரை

இந்திர புரோகிதன் இயம்பும் ஒரு நூலின்	வானோர் தலைவன் இந்திரனுக்குக் குருவான வியாழன் இயற்றிய உலகாயத சித்தாந்த நூலை
தந்திரம் எனாது அறிவினோடு அருளிலாமல்	மெய்ப்பொருளுணர்த்தும் நூலல்ல என்பதை அறியும் அருளில்லாமல்
சந்தணை புயத்துமண மாலைக டயங்க	சந்தனம் பூசிய தோளில் மணக்கும் மாலைகள் அணிந்து
உந்தியுலகத்தில் உலகாயத னுரைப்பான்	பெண் போகமே மெய் என்று அனுபவிக்கும் உலகாயத மதத்தைச் சார்ந்தவன் மெய் என்று உரைப்பன்.

விளக்கவுரை

சாந்தம் பொருந்திய தோளிடத்து நாற்றம் பொருந்திய மாலைகள் பிரகாசிக்கும் கர்ப்பாசயம் நீங்காத உலகாயதன், இந்திரபுரோகிதனாகிய வியாழ பகவான் ஆன்மாக்கள் போகம் காரணமாய் அருளிய நூலை இப்பொழுது இடையூறென்று கொள்ளுதற்கு ஞானமும் அருளும் இல்லாமல் அந்த நூலையே மெய் என்று சொல்லா நிற்பன் என்றவாறு. இயம்பு நூல் உலகாயத மதத்தின் சித்தாந்தம். சந்து அணை புயத்து மண மாலைகள் தயங்க என்றது போககாமி யாகையாலே பலன் சுகந்தாதிகளை யுடையன் என்பது நோக்கி என்க. உந்தி யுலகத்தில் உலகாயதன் - பெண் போகமே மெய் என்று அநுபவிக்குமவன்

பிறப்பைக் கைவிடான் என்பது கருத்து. உந்தும் உலகம் என்பது பாடமாயின் கிளம்பினதென்க.

இதனாற் சொல்லியது இந்திரன் தவத்தைப் புரிய விரும்பியபோது வியாழ பகவான் அவனை மயக்கி விடயத்திலே வீழ்வித்த சாத்திரம் என்க. அஃது என்போல? என்னில், அருச்சுனன் தவத்தைப் புரிய வாசுதேவன் தேரிலே யிருந்து கிதை என்னும் சாத்திரத்தினாலே மயக்கிக் கொல்லுவித்ததற்கு ஒக்கும் எனக் கொள்க. உலகாயதன் சாருவாகன் என்னும் பெயர் பெறுவன்.

இச் செய்யுள் உலகாயதன் வியாழ பகவான் விண்ணவர் கோமான் இந்திரனுக்குச் சூழ்ச்சியாக உரைத்த நாத்திக நூலையே பிரமாணமாகக் கொண்டு உரைப்பன் என்பது கூறிற்று.

தேவகுருவாகிய வியாழ பகவான் ஆன்மாக்கள் போகம் காரணமாய் அருளிச் செய்த நூலை மெய் எனக் கொண்டு மகளிர் போகமே முத்தியெனக் கூறுவார் உலகாயதர். ஒருகாலத்து இந்திரன் தவத்தைச் செய்து வீடு பெற எண்ணினான். அதனையறிந்த தேவகுரு அவனைத் தவத்தினின்று விலக்கி, உலக போகத்திலே நிலைபெற வேண்டி மயக்கி, விடயத்திலே வீழ்வித்தார். அஃது எதனைப் போல? என்னில், அருச்சுனன் தவத்தைப்புரிய வாசுதேவன் தேர்ப்பாகனாக இருந்து கிதை என்னும் நூலினாலே அவனை மயக்கிக் கொல்லுவித்தது போல எனக் கொள்க. *(1)*

செய்யுள் - 12

ஈண்டளவை காட்சிமன மாதியிரு மூன்றாய்
வேண்டுமனு மானமுத லானபல வேண்டா
பூண்டபொருள் பூதமவை புகழ்கடின சீதம்
தீண்டரிய வெம்மைசல னத்தினொடு சேர்வே.

பதவுரை

ஈண்டளவை காட்சி	இவ்விடத்து அளவை என்று கொள்ளப்படும் உமது காட்சியை
மனமாதி இரு மூன்றாய் வேண்டும்	அக்காட்சியினை வேறுபடுத்தி ஐயக்காட்சி முதல் ஆறுவகைக் காட்சியாய்க் கோடல் வேண்டும்
அநுமான முதலான பல வேண்டா	இக்காட்சியில் விகற்பகம் (வேறுபாடு) ஒழிந்து அநுமான உரை முதலியன வேண்டுவதில்லை

பூண்ட பொருள் பூதம் அவை	அக்காட்சியானும் அதன் வேறுபாட்டானும் கண்டு கைக்கொண்ட பொருள் பூதங்கள் நான்கும்
புகழ் கடின சீதம் தீண்ட அரிய வெம்மை சலனத்தினொடு சேர்வே	சொல்லப்பட்ட கடுங்குளிர், தொடுதற்கரிய வெப்ப சலனங்களோடும் கூடும் என்றவாறு

விளக்கவுரை

உலகாயதன், வியாழ பகவான் அருளிய நூலையே பிரமாணமாகக் கொண்டு உரைப்பான். பொருளை அறிவதற்குக் கருவி காட்சியே. அக்காட்சி ஆறு வகைப்படும். மனம் என்றது ஐயக்காட்சி; பழுதையைப் பாம்பு என்று ஐயப்படுவது மனம் ஆகலின் மனக்காட்சி என்றார். இனி, காட்சி இரு மூன்றாவன - ஐயக்காட்சி, வாயிற்காட்சி, விகற்பக்காட்சி, அந்வயக்காட்சி, வெதிரேகக்காட்சி, திரிவுகாட்சி என இவை. இனி, நிர்விகற்பக்காட்சியாவது இவ்வாறினோடும் கூடாது குற்றமறக் காண்பது. ஐயக்காட்சியாவது இருளில் பாம்போ பழுதையோ (கயிறோ) என்று ஐயுறுதல், அதுவே மனக்காட்சி. வாயிற்காட்சியாவது **கண்ணொழிந்த** பொறிகளால் காண்பது. விகற்பக்காட்சியாவது பெயர், சாதி, குணம், கன்மம், பொருள் என்னும் ஐந்தினாலும் காண்பது. அந்வயக்காட்சியாவது புகையினால் அனல் அறிதல். வெதிரேகக்காட்சியாவது நாற்றத்தால் பூ அறிதல். திரிவு காட்சியாவது கயிறு அல்லது வைற்கோற்புரியைப் பாம்பு என்று கொள்வது.

காட்சியையன்றி அநுமானப் பிரமாணம், ஆகமப் பிரமாணம் வேண்டுவதின்று. காட்சிப் பிரமாணத்தானும் அதன் விகற்பத்தானும் அறிந்து கைக்கொள்ளப்பட்ட பொருள்கள் நான்கே. அவை நிலம், நீர், தீ, வளி என்னும் பூதங்கள். அவைகளின் குணம் முறையே கடினம், சீதம், வெம்மை, சலனம் என்பனவாம். ஆகாயத்தை ஐந்தாவது பூதமென்று உலகாயதன் ஏற்றுக் கொள்வதில்லை.

இச்செய்யுள் உலகாயதன் சித்தாந்தத்திற்கொள்ளும் காட்சி அளவையும், அதன் விகற்பமும், அதனால் அறியும் பொருளாகிய பூதங்கள் நான்கும், அவற்றின் குணங்களும் கூறிற்று. (2)

செய்யுள் - 13

சாற்றுபெய ரானவை தலம்புனல் கனற்பின்
காற்றுமென லாமிவை கலந்தகுண மோதின்
நாற்றமிர தம்முருவ நற்பரிச மாகும்
போற்றுமிவை நித்தவியல் பாமிவை புணர்ப்பே.

பதவுரை

சாற்று பெயர் ஆனவை	அப்பூதங்கள் நான்கும் அப்படிக் கூடின பின்பு அவற்றுக்குச் சொல்லும் பெயர்களானவை
தலம் புனல் கனல் பின் காற்றும் எனல் ஆம்	பிருதிவியும் அப்பும் நெருப்பும் பின் வாயுவும் என்று சொல்லலாம்
இவை கலந்த குணம் ஒதின்	இப்பூதங்கள் கூடிய குணங்களின் பெயரை முறையானே சொல்லின்
நாற்றம் இரதம் உருவம் நல் பரிசம் ஆகும்	கந்தம் இரதம் உருவம் பரிசம் இவை ஆகும்
போற்றும் இவை நித்த இயல்பாம்	தெய்வமாகத் தொழும் பூதங்கள் அழியாத இயல்புகளை உடையவாம்
இவை புணர்ப்பே	இவை கூடுமிடத்து மேலான வாயுப் பூதத்திலே நின்று மூன்று பூதங்களில் ஒன்றில் ஒன்றாக அடைவே கூட்டப்படும் என்றவாறு

விளக்கவுரை

வாயு கண்ணுக்குத் தெரியாதாயினும் பரிசம் கொண்டு காண்கையால் பின் காற்றும் எனலாம் என்றார் எனினும் அமையும்.

பிருதிவி, அப்பு, தேயு, வாயு எனவும் அப்பூதங்கள் கூறப்படும். அவற்றின் குணங்களும் கந்தம், இரதம், உருவம், பரிசம் என்று பேசப்படும். மேலே கூறிய பூதங்கள் நான்கும் அழியாத இயல்புடையன. இவை கூடுமிடத்து வாயுவுக்குப் பரிசமும், தேயுவுக்கு உருவம் பரிசம் என இவ்விரண்டும், அப்புவுக்கு இரதம் உருவம் பரிசம் என இம்மூன்றும், பிருதிவிக்குக் கந்தம் இரதம் உருவம் பரிசம் என நான்கும் அடைவே கூட்டப்படும். வாயு கண்ணுக்குத் தெரியாததாயினும், பரிசத்தைக் கொண்டு காண்கிறோம். வாயுவின் துணைகொண்டே மற்றைப் பூதங்கள் மூன்றும் தம்முட் கூடுவனவாம்.

இச்செய்யுள் பூதங்கள் நான்கின் பெயரும், அவற்றோடு கூடிய குணங்களின் பெயரும், பூதங்கள் கூடும் முறைமையும் கூறிற்று. (3)

செய்யுள் - 14

ஒத்துறு புணர்ச்சியி னுருக்கள்பல வாகும்
வைத்துறு கடாதிபல மண்ணின்வரு மாபோல்
புத்திகுண நற்பொறி புலன்களிவை யெல்லாம்
இத்தில்வரு நீரினி லெழுங்குமிழி யொத்தே.

பதவுரை

ஒத்து உறு புணர்ச்சியின் உருக்கள் பல ஆகும்	அப்பூதங்களின் சொரூபங்களும் குணங்களும் தம்மில் ஒத்துக்கூடுகிற கூட்டத்திலே வடிவுகள் பலவுண்டாம்
அஃது என்போல்? எனில், வைத்து உறு கடாதி பல மண்ணின் வரும் ஆ போல்	திரிகையிலே வைத்த மண்ணில் கண்ணே பல கடாதிகள் தோன்றுமா போல
புத்தி குணம் நல் பொறி புலன்கள் இவை எல்லாம் இத்தில் வரும் நீரினில் எழும் குமிழி ஒத்தே	(இதனைப் பொருளுக்கேற்ப மாற்றுக) நீரினில் கிளம்பிய குமிழியை ஒத்துப் புத்தியும் குணமும் ஞானேந்திரியம் ஆகிய பொறி புலன்களும் இவையெல்லாம் இவ்வுருவின் கண்ணே உண்டாம் என்றவாறு

விளக்கவுரை

ஒத்துறு புணர்ச்சியின் உருக்கள் பல உண்டாம். எனவே, ஒவ்வாமலுறும் புணர்ச்சியின் உருக்களும் குணமும் ஏறிக் குறைந்து வரும் என்பது கருத்தாயிற்று. உருக்கள் பலவாவன - எறும்புகடை யானை முதலாக உள்ளன. புத்தி முதலாயினவும் இவ்வுருக்களின் வரும் என்பது, புத்தி முதலாயினவை முன்பு இல்லாதவை, இவ்வுருவிலே தோன்றி இவ்வுருவோடே மடியும் என்பது கருத்து.

மண்ணிலிருந்து பலவகையான பாண்டங்கள் உண்டாகின்றன. அதுபோல, இப்பூதங்களும் தம்மில் ஒத்துக்கூடும் புணர்ப்பினால் பலவகை உருக்கள் தோன்றுவன. நீரில் எழும் குமிழியைப்போன்று அவ்வுருக்களிலே புத்தியும், குணமும், பொறியும், புலன்களும் உண்டாம். உருக்கள் பலவாவன:- எறும்பு முதல் யானை ஈறாக உள்ளனவாம்.

இச்செய்யுள் பூதங்களிலே உருத்தோன்றும் முறைமையும், அவ்வுருவிலே புத்தி முதலானவை தோன்றும் என்பதும் கூறிற்று. (4)

குறிப்பு:- முளை முதலான கூட்டத்து மதசத்தியுண்டானாற் போலவும், பெண் ஆண் கூட்டத்திலே வரும் சுகம் போலவும், நீக்கமின்றி நின்ற பூதக்கூட்டத்திலே ஞான சுகாதிகள் தோன்றி அவை வளர வளர்ந்தும் குறையக் குறைந்தும் பிரகாசியா நிற்கும் எனக்கொள்க.

செய்யுள் - 15

பூதமதி னொன்றுபிரி யப்புல னிறக்கும்
நீதியினி னிற்பன நடப்பனவு முற்போல்
ஒதும்வகை யாகியுறு காரிய முலந்தால்
ஆதியவை யாமிதனை யறிவதறி வாமே.

பதவுரை

பூதம் அதின் ஒன்று பிரிய புலன் இறக்கும்	அப்பூதங்களில் வாயுப்பிரிய இந்திரியங்கள் கெடும். புலன் இறக்கும் எனவே, புலன் காரணம் ஆகிய பொறி குணம் புத்தி முதலியவையும் இறக்கும்
நீதியில் நிற்பன நடப்பனவும் முன்போல்	இம்முறைமையாலே தாவர சங்கமங்களும் இறக்கச் செய்யப்படும்
ஒதும் அவை ஆகி உறுகாரியம் உலந்தால் ஆதியவை ஆம்	சொன்ன முறைமையிற் கூடிப்போந்த காரியமாகிய சொரூப குணங்கள் இறந்தால் காரணமாகிய பூதங்களே ஆம்.
இதனை அறிவது அறிவு ஆம் ஏ	இவையிற்றை இம்முறைமைப் பாட்டாலே அறிவதே ஞானமாவது என்றவாறு

விளக்கவுரை

மண், நீர், அனல், வளி ஆகிய நான்கு பூதங்களில் ஒன்றாகிய வாயுப் பிரிய இந்திரியங்கள் கெடும். புலன்கள் கெடவே பொறி குணம் புத்தி முதலியனவும் கெடும். இம்முறைமையால் தாவர சங்கமங்களும் இல்லையாம். வாயுவாகிய பூதம் பிரியவே மற்றைப் பூதங்களும் பிரிந்து, தங்குணமற்றுத் தனி நிலையை அடையும். எனவே, இவற்றை இந்த முறையில் அறிவதே ஞானமாம்.

இச்செய்யுள் பூதம் பிரியுமாறும், பூதத்துடனே இந்திரியாதிகள் நீங்க உருக்கள் கெடுமாறும் கூறிற்று.

'இந்திர புரோகிதன்' என்னும் செய்யுள் முதல் இச்செய்யுள்காறும் உலகாயதன் தம்மதம் கூறி மேல் பிறர் மதம் கூறுகின்றான். *(5)*

செய்யுள் - 16

அறுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்

இப்படி யன்றிக் கன்மம்
உயிரிறை வேறுண் டென்று
செப்பிடு மவர்க்கு மண்ணோர்
செய்திடும் குற்ற மென்னோ
ஒப்பிலா மலடி பெற்ற
மகனொரு முயற்கொம் பேறித்
தப்பிலா காயப் பூவைப்
பறித்தமை சாற்றி னாரே.

பதவுரை

இப்படி அன்றி	இப்படிப் பூதக் கூட்டத்தினால் உருக்கள் தோன்றி வாயுக்கெடக் கெடுதல் அன்றி
கன்மம் உயிர் இறை வேறு உண்டு என்று செப்பிடும் அவர்க்கு மண்ணோர் செய்திடும் குற்றம் என்னோ	முன் செய்த கன்மம் பின் தொடரும் என்றும் இதனைப் புசிக்கத்தக்கது ஓர் ஆன்மா உண்டு என்றும் இவற்றைக் கூட்டுவான் ஒரு கர்த்தா உண்டு என்றும் சமயிகள் உலகத்தாரை மயக்க உலகத்தார் சமயிகளுக்குச் செய்த குற்றம் யாது?
ஒப்பு இல்லா மலடி பெற்ற மகன் ஒரு முயல் கொம்பு ஏறி தப்பு இல் ஆகாயப் பூவை பறித்தமை சாற்றினார் ஏ	உலகத்தாரை மயக்கச் சமயிகள் கூறுமது, 'மலடி பெற்ற ஒப்பில்லாத மகன் ஒரு முயலின் கொம்பிலே ஏறி ஆகாயத்திற் பூத்த பூவைத் தவறின்றிப் பறித்தான்' என்னும் தன்மைக்கு ஒக்கும் என்றவாறு

விளக்கவுரை

பூதமே தெய்வமாவது. பூதக் கூட்டத்தின் மிகுதி குறைவே கன்மமாவது. பூதக் கூட்டத்தின் நிகழும் உணர்வே ஆன்மாவாவது. இதுவன்றி, வேறே தெய்வமும் கன்மமும் ஆன்மாவும் இல்லை என்பது கருத்து.

மலடி பெற்ற ஒப்பிலா மகன் என மாறுக. ஆகாயப் பூவைத் தப்பில்லாமற் பறித்தமை என மாறுக. பொய்யைப் பெருக்கிப் புராணம் செய்து உலகத்துள்ளாரை

மயக்கித் தீர்த்த யாத்திரை, தபசுகள், அக்கினிஹோத்திரம், தானம், தன்மம், ஜபம், தியானம், சமாதி என்றும்; உபவாசம், விரதம் என்றும் பேரிட்டுப் பகற்பொழுது போக்கி உலகத்தார் கைப்பொருள் கவர்ந்து பொய்ப் பொருள் பேசிப் பொழுதுபோக்கி அவமே கழிவது. அந்தோ! என்று நொந்தான் எனக்கொள்க.

இச் செய்யுள் கர்த்தாவும், கன்மமும், ஆன்மாவும் இல்லை என்று இல்பொருள் உவமை கூறி மறுத்துக் கூறிற்று. *(6)*

செய்யுள் – 17

செய்திடும் கன்ம மெல்லாம்
செய்தவர் தம்மைப் பற்றி
எய்திடு மென்னி னிங்கே
மாய்ந்திடு மேய்வ தெங்ஙன்
மெய்தரு தூலம் கெட்டுச்
சூக்கமாய் மேவு மென்னில்
ஐயனே தீபம் போனால்
அதனொளி யாவ துண்டோ.

பதவுரை

செய்திடும் கன்மம் எல்லாம் செய்தவர் தம்மைப் பற்றி எய்திடும் என்னின்	முற்பிறப்பில் ஆன்மாக்கள் செய்த கன்மம் எல்லாம் கெடாமல் ஆன்மாக்களைப் பொருந்தி நின்று இப்பிறப்பிலே ஊட்டும் என்று கூறின்,
இங்கே மாய்ந்திடும் ஏய்வது எங்ஙன்	இப்பிறப்பிற் செய்த புண்ணிய பாவங்கள் இக்காயத்தோடு கெடும் ஆதலால் பிற் பிறப்பில் புக்குக் கூடுமாறு எங்ஙனே?
மெய்தரு தூலம் கெட்டு சூக்கமாய் மேவும் என்னில்	காயத்தோடு தூல முறைமை கெட்டுச் சூக்கம முறைமையாகப் பொருந்தும் என்று கூறின்,
ஐயனே தீபம் போனால் அதன் ஒளி யாவது உண்டோ	திரியோடே கூடிநின்ற விளக்கொளி அத்திரியை நீங்கி வேறே நின்று ஒளிரும் என்னும் தன்மைத்து, காயம் நீங்கிச் சூக்குமமாய்ப் பொருந்தும் முறைமை என்றவாறு.

விளக்கவுரை

ஆன்மாக்கள் முற்பிறப்பில் செய்த கன்மங்களெல்லாம் இப்பிறப்பில் பொருந்தி நின்று ஊட்டும் எனச் சமயிகள் கூறுவர். ஆனால், இப்பிறப்பில் செய்த புண்ணிய பாவங்கள் இவ்வுடம்போடே கெடும். ஆதலால், அவை பிற்பிறப்பில் வந்து கூடுவது எவ்வாறு? காயத்தோடு தூலமாயுள்ள முறைமை கெட்டுச் சூக்குமமாய்ப் பொருந்தும் என அவர் கூறின், திரியிலே கூடிநின்ற விளக்கொளி அத்திரியை நீங்கின் தனியே நின்று ஒளிவிடும் என்று கூறுவதையே அஃது ஒக்கும். ஐயனே என்றது இழிவின் கண் வந்தது. *(7)*

செய்யுள் - 18

மாய்ந்துபின் வயலி லிட்ட
வைதழை பலிக்கு மாபோல்
ஏய்ந்திடும் கன்ம மென்னில்
இட்டிடத் திசையு மேனி
ஒய்ந்துவந் தவரை யுண்ணப்
பண்ணுஞ்சோ றுதரத் தற்றால்
வாய்ந்திடும் பலம்வ யிற்றிற்
கொண்டிடும் வழக்கு வைத்தாய்.

பதவுரை

மாய்ந்து பின் வயலில் இட்ட வை தழை பலிக்கும் ஆபோல் ஏய்ந்திடும் கன்மம் என்னில்	வயலுக்கு இட்ட வைக்கோலும் தழையும் தான் கெட்டுப் பின்பு பயிர்க்கு நன்மையைக் கொடுக்குமாறு போலக் கன்மம் தோன்றாமல் தன்மை கெட்டுப் பொருந்தும் என்று கூறின்
இட்ட இடத்து இசையும்	நீ உவமை கூறிய வைக்கோலும் தழையும் இட்ட இடத்தில் பயிர்க்கு நன்மையைக் கொடுக்கும். அதுபோலப் பிறர் காயத்துக்கு நன்மை கொடுக்கவேண்டும்
அஃது எங்ஙனே ? என்னின், மேனி ஒய்ந்து வந்தவரை உண்ணப் பண்ணும் சோறு உதரத்து அற்றால் வாய்ந்திடும் பலம் வயிற்றில் கொண்டிடும் வழக்கு வைத்தாய்	காயம் தளர்ந்து பசித்து வந்தவரை உண்ணப் பண்ணுவித்தசோறு அவர் உதரத்து மாண்டால் உண்டாம் பிரயோசனம் அவர் வயிற்றின் மலம் கொள்வார் வழக்குக் கூறினாய் என்றவாறு.

விளக்கவுரை

இன்னும், வயலுக்கு உரமாக வைக்கோலும், தழையும் போடுகிறோம். வைக்கோலும் தழையும் அழிந்து உருமாறிப் பின்பு பயிருக்கு நன்மையைச் செய்கிறது. அதுபோல, வினை தோன்றாமல்நின்று பின்பு உயிருக்கு அநுபவமாக வேறு உடம்பில் வந்து பொருந்தும் என்று கூறுவர். அப்படியாயின், உவமையாகக் கூறிய வைக்கோலும் தழையும், இட்ட இடத்திலன்றி வேறு இடத்திற் சென்று பயன்தரா. வினை கெட்டுப் பயன் கொடுக்கும் என்று கூறுவது உணவு கெட்டு மலமாய் ஒழிந்தபின்பு அது உடம்புக்குப் பயன்தரும் என்பது போலாம். *(8)*

செய்யுள் - 19

உருவமு முணர்வும் செய்தி
யொத்திரா கன்ம மென்னின்
மருவுகை விரல்க டம்மின்
வளர்வுடன் குறைவுண் டாகி
வருவதிங் கென்ன கன்மம்
செய்துமுன் மதியி லாதாய்
பெருகுபூ தங்க டம்மின்
மிகுகுறைப் பெற்றி யாமே.

பதவுரை

உருவமும் உணர்வும் செய்தி ஒத்து இரா கன்மம் என்னில்	ஒரு காயத்தின் செய்தியும் ஓர் உணர்வின் செய்தியும் ஒத்திராமல் பேதிக்கப்படுவது கன்மச் செய்தியென்று கூறின்,
மருவு கைவிரல்கள் தம்மில் வளர்வுடன் குறைவு உண்டாகி வருவது இங்கு என்ன கன்மம் செய்து முன் மதி இலாதாய்	அறிவிலாதாய் முன்பு எந்தக் கன்மம் செய்து பின்பு தொழிலை மருவின கைவிரல்கள் ஒன்றுக்கொன்று ஏறியும் குறைந்தும் இருப்பது.
பெருகு பூதங்கள் தம்மில் மிகு குறை பெற்றி ஆம்ஏ	வளரும் பூதங்கள் தாம் மிக்குக் குறைதலால் காயமும் உணர்வும் பேதிக்கப்பட்டது அல்லது கன்மத்தினால் அன்று என்றவாறு.

விளக்கவுரை

பல்வேறு வகைப்பட்ட உருவமும் செயலும் ஒத்திராமல் பேதப்படுவதற்குக் காரணம் கன்மத்தின் பயன் என்னில், கைவிரல்கள் ஒன்றுக்கொன்று ஏற்றமும் குறைச்சலும் ஆகியிருப்பதற்கு அவை என்ன கன்மத்தைச் செய்தன? பூதங்கள்

தம்மில் மிக்கும் குறைந்தும் கூடுதலினால் காயமும் உணர்வும் பேதிக்கப்பட்டன; அல்லாமல், கன்மத்தின் பயன் என்பதில்லை.

கன்மபலம் இல்லை என்பது கருத்து. (9)

செய்யுள் - 20

இன்பொடு துன்ப மெல்லாம்
எய்துவ கன்ம மென்னின்
நல்புனல் சந்த னாதி
நணுகவு நணுக வொண்ணா
மின்பொலி யழலி னோடு
மேவுவ நன்மை தீமை
என்செய்த தியம்பி டாய்நீ
இவையெலா மியல்ப தாமே.

பதவுரை

இன்பொடு துன்பம் எல்லாம் எய்துவ கன்மம் என்னில்	ஒரு பொருட்கு இன்பத்துன்பங்கள் எல்லாம் கன்மத்தால் பொருந்தும் என்று கூறின்
நன்புனல் சந்தனாதி நணுகவும் அணுக ஒண்ணா மின்பொலி அழலினோடும் மேவுவ நன்மை தீமை என் செய்தது இயம்பிடாய் நீ இவை எலாம் இயல்பது ஆம் ஏ	தெளிந்த புனலானது சந்தனம் முதலாகிய நறுநாற்றத்தோடு கூடவும் கூடுதற்கு அரிதாகிய ஒளி மிகுதியையுடைய அனலோடு கூடவும் எந்த நன்மை தீமை செய்தது என்று நீ கூறாய் இவையெல்லாம் ஒரு பொருட்கு இயல்பாம். ஆதலால் பூதகுணம் அன்றி கன்மமில்லை என்றவாறு.

விளக்கவுரை

இன்பதுன்பங்கள் கன்மத்தால் வந்து பொருந்துவன என்னில், நீரானது சந்தனம் முதலிய வாசனைப் பொருளோடு கூடி மண முறவும், நெருப்பின் சார்பைப் பெற்றுச் சுடவும் ஆவியாக மாறவும் எந்த நன்மை தீமைகளைச் செய்தது? ஆதலால், இவை பதார்த்தங்களின் இயல்பு எனவே கொள்ள வேண்டும்.

தோல் முதலானவை நெருப்பைக் கண்டால் சுருண்டும், நீர் கூடினால் நெகிழ்ந்தும் வருவது பதார்த்த இயல்பொழிந்து வேறு கன்மத்தால் அன்று. சர்வமும் பதார்த்த இயல்பு என்று அறிவாயாக.

'செய்திடும் கன்மம்' என்னும் செய்யுள் முதல் இச்செய்யுள் காறும் முறையானே கன்மமில்லை என்று மறுத்துக் கூறிற்று. *(10)*

செய்யுள் - 21

காயத்தின் குணம தன்றிக்
கண்டதான் மாவுண் டாயின்
மாயத்திற் சொல்லி டாதே
மனமுத லாறி னுக்கும்
நேயத்த தாக வேண்டு
மன்றியே நிகழ்த்து முண்மை
தேயத்தின் முயற்கொம் பெல்லை
செப்புவோர் செய்தி யாமே.

பதவுரை

காயத்தின் குணமது அன்றி	*தூறு காய் அடை கூடவே ஒரு சிவப்பு உண்டாமாறுபோல பூதக்கூட்டத்தில் ஓர் உணர்வு உண்டாம் (அஃதன்றி)*
கண்டது ஆன்மா உண்டாயின்	*மற்றோர் ஆன்மா என்று தனியே காணப்பட்டது உண்டாயின்*
மாயத்தில் சொல்லிடாதே	*உன் மயக்க நூலில் சொல்லாதே*
மனம் முதல் ஆறினுக்கும் நேயத்தது ஆக வேண்டும்	*மனக்காட்சி முதலாய ஆறு காட்சிக்கும் பொருந்தச் சொல்ல வேண்டும்*
அன்றியே நிகழ்த்தும் உண்மை	*காட்சி விகற்பத்தால் ஒழிந்து கருதலானும் உரையானும் கூறுமது*
தேயத்தின் முயல் கொம்பு எல்லை செப்புவோர் செய்தி ஆம் ஏ	*உலகத்தில் கோடில்லாத முயலுக்குக் கோடும் அதற்கு அளவும் பெருமையும் கூறுவோரது கூற்றாம் என்றவாறு. கோடு - கொம்பு.*

விளக்கவுரை

உடம்பின் வேறாக உயிர் என்பது ஒன்றுமில்லை. பாக்கும் வெற்றிலையும் சுண்ணாம்பும் கூடிய கூட்டத்தில் முன்பு இல்லாத ஓர் சிவப்பு நிறம் உண்டாம். அதுபோல, பூதப்புணர்ப்பால் உடம்பு உண்டாயபோது உள்ள அதன் குணமே அறிவு என்பதாம். உடம்பின் வேறாக உயிர் உள்ளது எனக்கொள்ளின் அது காட்சிக்குப் புலனாக வேண்டும். அஃது எப்படிப்பட்ட காட்சிக்கும் புலனாவதில்லை. அத்தகைய உயிரைக்கருதல் அளவையானும், உரையளவையானும்

கூறிவிரித்தல் கொம்பில்லாத முயலுக்குக் கொம்பு உளதாகக் கூறி அதற்கு அளவும் வடிவும் விரிப்பதுபோலாம்.

இச்செய்யுள் முறையானே காயத்தின் குணமன்றி, ஆன்மா இல்லை என்று மறுத்துக் கூறிற்று. *(11)*

செய்யுள் - 22

அருவமே யிறைவ னாகில்
அறிவின்றா காய மாகும்
உருவமே யென்னிற் பூதக்
கூட்டத்தி லொருவ னாகும்
மருவிய விரண்டுங் கூடி
நிற்பவ னென்னின் மண்மேல்
இருவிசும் பொருகல் லேந்தி
நிற்குமோ வியம்பி டாயே.

பதவுரை

அருவமே இறைவன் ஆகில் அறிவு இன்று ஆகாயம் ஆகும்	கர்த்தா அரூபி என்று கூறில் அறிவும் இல்லையாம் ஆகாயம் போலவாம்
உருவமே என்னில் பூதக்கூட்டத்தில் ஒருவன் ஆகும்	அந்தக் கர்த்தா உருவம் உடையவன் என்று கூறில் பூதக்கூட்டத்தில் தோன்றும் சரீரி ஆதல் வேண்டும்
மருவிய இரண்டும் கூடி நிற்பவன் என்னில்	பொருந்திய ரூபாரூபத்தோடும் கூடிநிற்பன் என்று கூறில்,
மண்மேல் இரு விசும்பு ஒரு கல் ஏந்தி நிற்குமோ இயம்பிடாய் ஏ	மிக்க ஆகாயமாகிய அரூபத்திலே ரூபமாகிய கல்லைவிட்டால் தம்மில் கூடி நிற்குமோ? பிரபஞ்சத்தில் நில்லாது ஆகையால் ரூபாரூபம் கூடி நில்லாது என்றவாறு

விளக்கவுரை

கடவுள் உண்டு, அஃது அருவப் பொருள் என்று கூறின், அறிவு இல்லாததாய் ஆகாயம்போன்று அது சூனியப் பொருளாம். கடவுள் உருவப் பொருள் என்னில், பூதக்கூட்டத்தினால் உண்டாகிய பொருள்களுள் ஒன்றாதல் வேண்டும். அஃது அருவுரு என்னில், அருவமாகிய ஆகாயத்தில் எறிந்த உருவமுள்ள கல் தம்மில்

கூடிநிற்கக் காணோம். ஆதலால், அருவமும் உருவமும் கூடிநில்லா. எனவே, பூதமே தெய்வமன்றி மற்றொரு தெய்வமில்லை என்று அறிக.

இச்செய்யுள் முறையானே **'பூதமே தெய்வ மன்றி மற்றொரு தெய்வமில்லை'** என்று மறுத்துக் கூறிற்று. *(12)*

செய்யுள் - 23

பூதத்தே அன்ன மாகி
அன்னத்தா லுடம்பு புத்தி
பேதித்தே மனமு மாகிப்
பிரிந்தமை திருந்த வின்று
வேதத்தே யுரைக்க வென்னோ
மேதினி யோர்க ளெல்லாம்
கேதத்தே வீழ்ந்து வேறு
நெறியல கேட்கு மாறே.

பதவுரை

பூதத்தே அன்னம் ஆகி அன்னத்தால் உடம்பு புத்தி பேதித்தே மனமும் ஆகி பிரிந்தமை திருந்த இன்று வேதத்தே உரைக்க	பிருதிவி பூதத்தே உணவு தோன்றி அவ்வுணவால் உடலும் அவ்வுடலிலே புத்தியும் புத்தியிலே பேதிக்கப்பட்ட மனமும் உண்டாய் வேறுபட்டவற்றை இப்பொழுது தெரியத் தங்கள் வேதம் சொல்லும் வழியும்
என்னோ மேதினியோர்கள் எல்லாம் கேதத்தே வீழ்ந்து வேறு நெறி அல கேட்கும் ஆறு ஏ	தங்கள் வேதம் அப்படிச் சொல்லவும் பிரபஞ்சத்தில் உள்ளோர்கள் எல்லாம் வருத்தத்திலே வீழ்ந்து வேறு வழியல்லா வகையைக் கேட்டு அதனை மேற் கொள்ளுமாறு என்னோ? என்றவாறு

விளக்கவுரை

பூதக்கலப்பால் உணவு உண்டாகிறது. அவ்வுணவால் உடம்பும், உடம்பிலே புத்தியும், புத்தியிலே பேதிக்கப்பட்ட மனமும் உண்டாகின்றன. இவையாவும் பூதத்திலே தோன்றுகின்றன. பின்பு ஒடுங்கின்றன. இம்முறைமையை உலகாயத வேதம் கூறும். உலகத்தால் அவ்வேதவுண்மையை உணராமல் வழியல்லா வழியைக் கேட்டு வருத்தத்திலே வீழ்தல் என்ன காரணம்?

இச்செய்யுள் 'பூதத்திலே யாவையும் தோன்றி அதனிலே ஒடுங்கும் முறைமையே யன்றி வேறு ஒரு பொருளில்லை' என்பது கூறிற்று. பிரிதல் - வேறுபட்டு இறத்தல். *(13)*

செய்யுள் - 24

போகத்தை மண்ணிற் கண்டு
விட்டுப்போய் விண்ணிற் கொள்ள
மோகத்த ராகி யல்லல்
முயன்றுழல் மூட ரெல்லாம்
தாகத்திற் றண்ணீர் கண்டு
விட்டுப்போய்த் தண்ணீர் கேட்டுச்
சோகித்தே யுண்ண வெண்ணித்
துயருறு வார்க ளந்தோ.

பதவுரை

போகத்தை மண்ணில் கண்டு விட்டுப்போய்	பூமியிலே மெய்யாக மகளிர் போகத்தைக் கண்டிருந்தும் அதனை அநுபவியாது கைவிட்டுப்போய்.
விண்ணில் கொள்ள மோகத்தார் ஆகி அல்லல் முயன்று உழல் மூடர் எல்லாம்	சுவர்க்கத்திலே போகம் உண்டென்று கேட்டு அதனைக் கைக்கொள்ளுதற்கு ஆசையுடையராய்த் தவம் என்னும் சிறையிலே முயற்சிப்பட்டுத் தடுமாறும் அறிவில்லாதவர் எல்லாம்
தாகத்தில் தண்ணீர் கண்டு விட்டு போய் தண்ணீர் கேட்டுச் சோகித்தே உண்ண எண்ணி துயர் உறுவார்கள் அந்தோ	தாகித்த விடத்தே தண்ணீரை மெய்யாகக் கண்டிருந்தும் அதனை உண்ணாமல் கைவிட்டுப் போய் மற்றொரு தண்ணீரை ஒருவன் தூரத்திலே உண்டென்ன அதனைக் கேட்டு அத்தண்ணீரை உண்டு தாகந் தீர வேண்டும் என்று சென்று வழியிலே துயரம் உறுவோர் தன்மை போலும், ஐயோ! என்றவாறு.

விளக்கவுரை

வாமதந்திரி ஒருவனை உலகாயதன் கண்டு மகிழ்ந்தான். வாமதந்திரியே! வருக. எம்மைப்போல நீயும் இவ்வுலகத்திலே வாழவல்லவன். என் உயிர்க்குத் தோழன் நீயே. வேறு எவரும் இல்லை. மானம் என்பது சிறிதும் இல்லாத மானிடர் சிலர்

கொலை, களவு முதலியவற்றைப் பொல்லாங்கு என்பர். நீ எம்மைப் போலவே அவைகளையெல்லாம் நன்று எனக் கொண்டு மகளிர் குழுவின் மத்தியிலே மாபெருஞ்சுடர் எனப் பிரகாசிக்கின்றாய். ஆதலால், மகிழ்ச்சிக்கு அறிகுறியாக எனக்கு உன் வலக்கையைத் தா.

இச்செய்யுள் 'காணப்படும் பெண் போகத்தைக் கைவிட்டுக் காணப்படாத சுவர்க்காதி போகத்தைக் கேட்டு அதற்கு வருந்துதல் அறிவன்று' என்று கூறிற்று. அந்தோ என்பது இரக்கக்குறிப்பு. (14)

செய்யுள் - 25

வாழவே வல்லை வாமி
வலக்கைதா வென்னு யிர்க்குத்
தோழனீ யுன்னை யொப்பார்
சொல்லிடி னில்லை கண்டாய்
கோழைமா னுடர்தீ தென்னும்
கொலைகள வாதிகொண்டே
சூழும்வார் குழலார் மொய்ப்பச்
சுடரெனத் தோன்றி னாயே.

பதவுரை

வாழவே வல்லை வாமி வலக்கை தா	இவ்வுலகத்துள் எம்மைப்போல் நீயும் வாழ வல்லை வாமதந்திரியே! உன் வலக்கையைத் தருவாயாக.
என் உயிர்க்கு தோழன் நீ உன்னை ஒப்பார் சொல்லிடின் இல்லை கண்டாய்	என் உயிர்க்குத் தோழன் நீயே அன்றிச் சொல்லுங்காலத்து வேறு இல்லை கண்டாய்
கோழை மானுடர் தீது என்னும் கொலை களவு ஆதி கொண்டே	மானமில்லாத மானுடர் பொல்லாங்கு என்று சொல்லப்பட்ட கொலை, களவு முதலிய வற்றை யாம் கைக்கொள்ளும் முறைமை போலக் கைக்கொண்டு
சூழும்வார் குழகார் மொய்ப்பச் சுடரெனத் தோன்றினாய் ஏ	சுற்றும் ஒழுங்கு நீண்ட குழலினையுடைய மடவார் சேவித்துப் போத விளக்குப் போலத் தோன்றினாய் ஆதலால் தோழன் நீயே என்றவாறு

விளக்கவுரை

கண்ணாற் காணப்பட்ட பேரின்ப சுகமாகிய பெண்ணின்பத்தை அநுபவித்து இன்புறாமல், இதனினும் வேறாகிய பேரின்பம் உண்டு என நம்பி, அவ்வீட்டின்பத்தைப் பெற விரும்பி, தடுமாறித் தவஞ்செய்து வருந்துவது யாது காரணம்? அந்த வீட்டைக் காட்டினவர் யார்? கண்டோர் யார்? கேட்டோர் யார்? அவைகட்கெல்லாம் சான்று தான் யாவர்? என ஒன்றும் காட்டமாட்டீர். ஆகையால், நாட்டில் அரசன் ஆணைவழி நடத்தல், நாடோறும் தேடும் பொருள் கொண்டு கண்கண்ட பேரின்பமாகிய பெண்போகத்தை நன்கு அநுபவித்தல் முதலியனவே செய்யத்தக்கனவாம் என்று அறிவீராக.

வலக்கை என்றது பிரியவசனம் சொல்லியது. கொலை களவு ஆதியாவது - கொலை, களவு, கள், காமம், பொய் இவையும்; காமம், குரோதம், உலோபம் மோகம், மதம், மாற்சரியம் முதலிய பிறவுமாம்.

மது, மச்சம், மாமிசம், மைதுனம், நித்திரை என்ற பஞ்சமாபாதகத்துடனே அருந்திச் சுகிக்கிறவன் சமர்த்தன் என்பது கருத்து.

இது 'வாம தந்திரியும் கொலைகளவாதியோடு கூடுகையால் அவனும் தன்னோடுகூடிய சமயத்தான்' என்று கூறிற்று. *(15)*

செய்யுள் - 26

ஈசனா ரயனார் மாலோ
டிந்திரன் தெரிவை மார்பால்
போசொணா வகைக ளெல்லாம்
செய்தன்றோ பெரியோ ரானார்
ஆசையா லவர்போ னாமும்
ஆகவே வேண்டு மாயின்
வாசமார் குழலா ரோடும்
வல்லவா கூடி வாழ்மின்.

விளக்கவுரை

ஈசனார் அயனார் மாலோடு இந்திரன் தெரிவைமார் பால் பேசஒணா வகைகள் எல்லாம் செய்து அன்றோ பெரியோர் ஆனார்	உருத்திரன் பிரமா விட்டுணு இவருடன் இந்திரனும் பெண்களிடத்துச் சொல்ல வொண்ணாதபடி தலையில் தரித்தும் நாவில் தரித்தும் மார்பில் தரித்தும் கௌதமர் சாபம் தரித்தும் மற்றும் செய்துமன்றோ பெரியோர் என்று எல்லோராலும் சொல்லப்பட்டார்கள் (ஆகையால்)

ஆசையால் அவர் போல் நாமும் ஆகவே வேண்டும் ஆயின் வாசம் ஆர் குழலாரோடும் வல்லவா கூடி வாழ்மின்	அப்படி அவர்களைப்போல எல்லாராலும் பெரியோர் என்று கொண்டாடப்படுதற்கு நமக்கும் ஆசையுண்டாயின் மணம் பொருந்தின குழலினையுடைய மடவாரோடு வல்லவண்ணம் வருந்தியும் பொருந்தி வாழ்மின் என்றவாறு

விளக்கவுரை

ஈசுவரன் பாகத்திலே ஒருத்தியைக் கரந்தும் சடையிலே ஒருத்தியைக் கரந்து வைத்தும், பிரமா நாவிலே ஒருத்தியை வைத்தும் திலோத்தமை காரணமாகப் பிரமித்துத் தேடி நான்முகனாயும், விட்டுணு மார்பிலே ஒருத்தியை வைத்தும் பதினாறாயிரம் கோபிகை மகளிரைப் போகித்தும் மற்றும் பரதாரகமனம் பண்ணியும், இந்திரன் அகலிகை காரணமாக உடம்பு முழுவதும் பெண் குறிகளாம் ஆயிரங்கண்ணன் ஆகியும் (உள்ள) இவ்வர(லா)றெல்லாம் காண்க. சமணனும் இயக்கியைக் கூடிக்கொண்டான் தான் தலைவன் ஆகவேண்டும் என்பது கருதி என்க. மற்றுமுள்ள தேவர் முனிவர்கள் கதைகளும் அறிந்து கொள்க என்பது கருத்து.

இச்செய்யுள் 'பெண் போகமே திவ்வியமான பதம்' என்பது கூறிற்று. (16)

செய்யுள் - 27

தையலா ரூட லாடத்
தாமவ ரோடுங் கூடிச்
செய்யதா மரையை வென்ற
சீறடி செம்பஞ் சூட்டி
மெய்யெலாம் பாதஞ் சூடும்
வேடத்தார் மெய்யிற் கூடா
மையன்மா னுடர்பொய்ம் மார்க்க
வேடத்தே மாய்கின் றாரே.

பதவுரை

தையலார் ஊடல் ஆட தாம் அவரோடும் கூடி	மகளிர் ஊடின காலத்து அவ்வூடலை நீக்கி அவரோடும் கூடி
செய்ய தாமரையை வென்ற சிறு அடி செம்பஞ்சு ஊட்டி	தாமரையினது சிவப்பை ஒப்பழித்த பாதத்தை செம்பஞ்சு ஊட்டி,

மெய் எலாம் பாதம் சூடும் வேடத்தார் மெய்யில் கூடா மையல் மானுடர்	அவரது அடிகளால் தமது காயமெங்கும் புனைந்து கொள்ளும் வேடத்தில் நிற்பவராகிய உலகாயதர் உண்மையில் கூடாத மயக்கத்தையுடைய மானுடர்
பொய் மார்க்க வேடத்தே மாய்கின்றார் ஏ	பொய் வழியாகிய தவவேடத்திற் புகுந்து மாயா நின்றார்கள் என்றவாறு

விளக்கவுரை

இச் 'செய்யுள் தவ வேடத்தை இழித்துப் பொய் என்றும், மகளிர்க்குப் பலவாறும் இன்பமூட்டுதலென்ற உலகாயதமே மெய் என்றும்' கூறிற்று. (17)

செய்யுள் - 28

வாசமார் குழலி னார்கண்
மணியல்குற் றடத்தே மூழ்கி
நேசமார் குமுதச் செவ்வாய்
அமுதினை நிறைய வுண்டு
தேசுலா மணிமென் றோண்மேற்
சேர்ந்துவீற் றிருந்தி டாதே
மாசுலா மனத்தோ ரெல்லாம்
மறுமைகொண் டழிவர் மன்னோ.

பதவுரை

வாசம் ஆர் குழலினார்கள் மணி அல்குல் தடத்தே மூழ்கி	மணம் பொருந்திய குழலினையுடைய மடவார்களது இரத்தினத்தினால் அமைக்கப்-பட்ட மேகலை பொருந்தின அல்குல் (பிறப்புறுப்புக்கள்) என்னும் துறையில் மூழ்கி,
நேசம் ஆர் குமுதம் செவ்வாய் அமுதினை நிறைய உண்டு	சிநேகம் மிகுதியை உடையவரது ஆம்பல் போலும் சிவந்த வாயினில் ஊறும் அமுதத்தைப் பருகி
தேசு உலாம் மணி மெல்தோள் மேல் சேர்ந்து வீற்றிருந்திடாதே	ஒளி வீசிய மணியினையுடைய மெல்லிய தோள்கள் மீது அணைந்து வாழ்ந்திடாதே
மாசு உலாம் மனத்தோர் எல்லாம் மறுமை கொண்டு அழிவர் மன் ஒ	குற்றம் சேர்ந்த மனத்தையுடைய பரசமயிகள் எல்லாம் மறுமைப் பயன் உண்டு என்று அழிவார்கள் என்றவாறு

விளக்கவுரை

நேசமாதல் - சிநேக மிகுத்தல். தேசு - விளக்கம். மாசு உலாம் - மாசு சேர்தல், மன்னும் ஒவும் அசை. நீராடிப் போசனம் பண்ணிச் சுகத்துடன் இராது பிறப்பு உண்டென்று வியாகூலப்படுவது என் என்பது கருத்து.

இச்செய்யுள் 'இம்மைப் பயனாய பெண் போகம் மெய் என்றும், மறுமைப் பயனாய சுவர்க்கம் பொய்' என்றும் கூறிற்று. (18)

செய்யுள் - 29

மதிநிலா நுதலா ரோடு
மணிநிலா முன்றி லேறி
முதிர்நிலா வெறிப்பச் செவ்வாய்
இளநிலா முகிழ்ப்ப மொய்த்த
கதிர்நிலா வடங்கொள் கொங்கைக்
கண்கள்மார் பகல மூழ்கும்
புதுநிலா வியநன் போகம்
விடுவர்புன் சமயத் தோரே.

பதவுரை

மதிநிலா நுதலாரோடும் மணிநிலா முன்றில் ஏறி	மதி பொருந்திய நுதலினையுடைய மாதரோடும் கூடி ஒளியையுடைய முன்றிலிற் சென்றேறி. முன்றில் - முற்றம், வீட்டு முன்னிடம்.
முதிர்நிலா எறிப்ப செவ்வாய் இளநிலா முகிழ்ப்ப மொய்த்த கதிர் நிலா வடம் கொள் கொங்கைக் கண்கள் மார்பு அகலம் மூழ்கும் புது நிலாவிய நன் போகம் விடுவர் புன் சமயத்தோர் ஏ	பூரண சந்திரன் (ஒளி) விட்டு விளங்க அவரது சிவந்தவாயில் நகையொளி தோன்றச் செறிந்த ஒளிமிக்க முத்துவடத்தைத் தாங்கிய முலைக் கண்கள் நமது மார்பகத்தே மூழ்கும்படி அழுந்தி அனுபவித்து நாடோறும் புதுமை தங்கிய நல்ல அநுபோகத்தைக் கை விடுவார்கள், இவ்வழி நில்லாத அவமாய சமயத்தார் என்றவாறு

விளக்கவுரை

இச்செய்யுள் மகளிர் போகமாகிய அநுபவ சுகத்தைக் கூறிற்று. பிற சமயத்தவர்கள் இதை அனுபவிக்கத் தெரியாதவர்கள் என்றவாறு. (19)

செய்யுள் - 30

ஊடுவ துணர்வ துற்ற
கலவிமங் கையரை யுள்கி
வாடுவ தடியில் வீழ்ந்து
வருந்துவ தருந்த வம்பின்
கூடுவ துணர்வு கெட்டுக்
குணமெலாம் வேட்கை யேயாய்
நீடுவ தின்ப முத்தி
இத்தினின் றார்கள் முத்தர்.

பதவுரை

ஊடுவது உணர்வது உற்ற கலவி மங்கையரை உள்கி வாடுவது அடியில் வீழ்ந்து வருந்துவது அருந்தவம்	*கலவி பொருந்தின மாதர் தம்முடன் புதிதாகக் கூடிய மாதரை நினைத்துத் தம்முடன் ஊடுவதனால் அவரை ஊடல் தீர்ப்பது பொருட்டாகத் தளர்தலும் அவர்கள் அடிகளிலே வீழ்ந்து வருந்துவதுமே அரிதாகச் செய்யும் தவமாவது*
பின் கூடுவது உணர்வு கெட்டு	*அப்படித் தவத்தில் நின்றபின்பு அந்த மகளிரோடும் தன் அறிவுகெட்டுக் கூடுவது (முத்திஆம்)*
குணம் எலாம் வேட்கையே ஆய் நீடுவது இன்பம் முத்தி இத்தில் நின்றார் முத்தர்	*இந்திரியங்களெல்லாம் ஒருமைப்பட விருப்பம் நிலைபெறுவது முத்தியின்பம் ஆவது இவ்வழியில் நின்றவர்களே முத்தராவர் என்றவாறு*

விளக்கவுரை

இச்செய்யுள் மகளிர் போகத்தில் தவமும், முத்தியும், முத்தியின்பம் என்னும் முறைமையும், இதில் நின்றவர்களே முத்தராவர் என்பதும் கூறிற்று.

இதனாற் சொல்லியது அறிவும் தவமும் மோட்சமும் இது என்பது. (20)

செய்யுள் - 31

வீட்டினை யுளதென் றோடி
மெலிவதிங் கென்னை வீடு
காட்டினோர் கண்டோர் கேட்டோர்
கரியவை யுண்டேல் காட்டீர்

நாட்டினில் அரச னாணைக்
கிசையவே நடந்து நாளும்
ஈட்டிய பொருள்கொண் டிங்கே
இன்பத்து ளிசைந்தி டீரே.

பதவுரை

வீட்டினை உளது என்று ஒடிமெலிவது இங்கு என்னை வீடு காட்டினோர் கண்டோர் கேட்டோர் கரி அவை உண்டேல் காட்டீர்	காணப்பட்ட பெண் போகத்தை அனுபவியாது வேறே வீட்டின்பம் உளது என்று தடுமாறி மெலியும் தவத்தைச் செய்வது யாது காரணம்? அந்த வீட்டினைக் காட்டின வர்களையும் அதனை கேட்டவர்களையும் உண்டாகில் சான்று காட்டீர். அது காட்ட மாட்டீர் ஆகையால்
நாட்டினில் அரசன் ஆணைக்கு இசையவே நடந்து நாளும் ஈட்டிய பொருள்கொண்டு இங்கே இன்பத்துள் இசைந்திடீர் ஏ	உலகத்தின்கண் அரசன் ஆக்கினை வழியில் நடந்து நாடோறும் தேடிய பொருள் கொண்டு இப்பிரத்தியட்சமான இன்பத்தை இவ்விடத்திலே பொருந்துவீராமின் என்றவாறு

விளக்கவுரை

கண்ணாற் காணப்பட்ட பேரின்ப சுகமாகிய பெண்ணின்பத்தை அநுபவித்து இன்புறாமல், இதனினும் வேறாகிய பேரின்பம் உண்டு என நம்பி, அவ்வீட்டின்பத்தைப் பெற விரும்பி, தடுமாறித் தவஞ்செய்து வருந்துவது யாது காரணம்? அந்த வீட்டைக் காட்டினவர் யார்? கண்டோர் யார்? கேட்டோர் யார்? அவைகட்கெல்லாம் சான்று தான் யாவர்? என ஒன்றும் காட்டமாட்டீர். ஆகையால், நாட்டில் அரசன் ஆணைவழி நடத்தல், நாடோறும் தேடும் பொருள் கொண்டு கண்கண்ட பேரின்பமாகிய பெண்போகத்தை நன்கு அநுபவித்தல் முதலியனவே செய்யத்தக்கனவாம் என்று அறிவீராக.

'இந்திர புரோகிதன்' என்னும் செய்யுள் முதல் இச்செய்யுள்காறும் இருபத்தொன்றினாலும் உலகாயதன் மதம் கூறிற்று.

தத்துவமும், குணமும், அவத்தைகளும், கரணங்கள் முதலானவையும் மதன நூலில் கண்டுகொள்க. (21)

முதலாவது – உலகாயதன் மதம் முற்றிற்று.

பாயிரம் உள்படத் திருவிருத்தம் – 31 நிறைவுற்றது.

---

1. (ஆ) உலகாயதன் மதமறுதலை

(31 திருவிருத்தங்கள்)

செய்யுள் - 32

எழுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்

(அனுமானம் உண்டு என்று 3 பாடல்களில் நிரூபித்தல்)

உள்ள தாவது கண்ட தென்றுரை
கொண்ட தென்னுல கத்துநீ
பிள்ளை யாய்வளர் கின்ற நாளுனைப்
பெற்ற தாயொடு தந்தையைக்
கள்ள மேபுரி கால னாருயி
ருண்ண வின்றொரு காளையாய்
மெள்ள வேயுள ரென்று கொண்டு
விரும்பு மாறு விளம்பிடே.

பதவுரை

உள்ளதாவது கண்டது என்று உரை கொண்டது என் உலகத்து	*உலகாயதா! நீ உலகத்துக் காட்சியே மெய் என்றும் அநுமானம் முதலிய பொய் என்றும் கொள்ளப்பட்டது என்னை?*
நீ பிள்ளையாய் வளர்கின்ற நாள் உனை பெற்ற தாயொடு தந்தையை கள்ளமே புரி காலனார் உயிர் உண்ண இன்று ஒரு காளை ஆய் மெள்ளவே உளர் என்று கொண்டு விரும்பும் ஆறு விளம்பிடு ஏ	*நீ பிறந்து வளர்கின்ற நாளில் உன் மாதாவின் உயிரையும் பிறப்பதன் முன் உன் பிதாவின் உயிரையும் கட்புலனால் காணாத தொழிலைப் புரியும் இயமன் கொண்டுபோக நீ இளமை நீங்கி அறிந்த பின்பு மாதா பிதா நமக்கு உண்டு என்று மெல்லக் கருதிய நெறி நீ கூறிய காட்சி அன்று அநுமானமே! காண் என்றவாறு*

விளக்கவுரை

உலகாயதனே! உனக்குக் காட்சியளவையே பிரமாணம், அதுவே மெய். அநுமானப் பிரமாணம், ஆகமப்பிரமாணம் முதலியன வேண்டா. அவை பொய் எனக் கூறுகின்றாய். நீ அவ்வாறு கொள்ளுமிடத்து உன்னைப் பெற்ற தாய் உன்னைப் பெற்றவுடனேயே இறந்தாள், உன் தந்தை நீ கருவில் வந்த காலத்தே நீ பிறக்கு முன் இறந்தான். பிறந்து வளர்ந்து உரிய பருவம்வர உன் தாய் தந்தையைப்

பற்றிய செய்தியைப் பிறர்கூற நீ அறிகின்றாய். அதனால் தாய் தந்தையர் உளர் என்று கருதுகின்றாய். இது நீ கூறிய காட்சி அளவை யன்று, கருதலளவையே ஆம். ஆகையால், காட்சியளவையுடன் கருதலளவையும் உண்டு என அறிவாய்.

இச்செய்யுள் உலகாயதன் கூறிய மதத்தை முறையே மறுப்பான் எடுத்துக்கொண்டு, அவன் 'காட்சி அளவையே உள்ளது' என்பதனை மறுத்து 'அநுமானம் உண்டு' என்பது கூறிற்று. (1)

செய்யுள் - 33

இடித்து மின்னி இருண்டு மேகம்
எழுந்த போதிது பெய்யுமென்
றடுத்த தும்மகில் சந்த முந்தி
அலைத்து வார்புன லாறுகொண்
டெடுத்து வந்திட மால்வ ரைக்க
ணிருந்து கொண்டல் சொரிந்த தென்று
முடித்த தும்மிவை காட்சி யன்றனு
மான மென்று மொழிந்திடே.

பதவுரை

இடித்து மின்னி இருண்டு மேகம் எழுந்தபோது இது பெய்யும் என்று அடுத்ததும்	மேகமானது முழங்கியும் மின்னியும் இருண்டும் பரந்து எழுந்தவிடத்து இதனால் மழை பெய்யும் என்று நினைப்பு உண்டானதும்
அகில் சந்தம் உந்தி அலைத்துவார் புனல் ஆறு கொண்டு எடுத்து வந்திட	ஆறானது அகில் சந்தனம் முதலியவற்றைத் தள்ளி அலைத்து ஒழுகும் நீரைக்கொண்டு வந்திட,
மால்வரை கண் இருந்து கொண்டல் சொரிந்தது என்று முடித்ததும்	அதனைக்கண்டு பெரிய மலையினிடத்தே மேகமிருந்து மழைபொழிந்து என்று நினைந்து நிச்சயித்ததும்,
இவை காட்சி அன்று அநுமானம் என்று மொழிந்திடு ஏ	இவை இரண்டும் நீ கூறிய காட்சி அன்று அநுமானம் என்று கூறுவாயாக என்றவாறு

விளக்கவுரை

மற்றும், மேகமானது இடித்து மின்னிக் கறுத்து எழுந்தபோது மழை பெய்யும் என்று நினைவுண்டாகின்றது. ஆற்றுவெள்ளமானது அகிற்கட்டை, சந்தன

மரத்துண்டு இவைகளை வாரி அடித்து எடுத்துக் கொண்டுவர அதனைக்கண்டு மலையினிடத்தே மழை நன்கு பெய்துளது என்று துணிகின்றோம். இது கருதுதலே அன்றிக் காட்சிப்பிரமாணம் அல்லவே!

இச்செய்யுள் மேகத்தின் தோற்றமும், அதனுடைய விகற்பமும் காரணானுமானம் என்றும், வெள்ளம் கண்டு மலைத்தலையில் வருடம் உண்டு என்று காண்கை காரியானுமானம் என்றும் கூறிற்று. (2)

செய்யுள் - 34

காண்ட லோவநு மான மாவதும்
காட்சி முன்னதும் காட்சியேல்
பூண்ட பூத வுடம்பி னுள்ளெழு
போத மென்கொடு கண்டனை
மாண்ட வாயில் மனங்கொள் ஞானம்
உணர்ந்த தும்மநு மானமென்
றீண்டு பூத மியைந்த திவ்வுடல்
என்ப தென்பிர மாணமே.

பதவுரை

காண்டலோ அநுமானம் ஆவதும் காட்சி முன்னதும் காட்சியேல்	நீர் அநுமானம் என்று கூறப்பட்டதும் காட்சியே, அது பூர்வக்காட்சி ஆகையால் பூர்வக்காட்சியும் காட்சி என்று நீ கூறில்
பூண்ட பூத உடம்பினுள் எழு போதம் என் கொடு கண்டனை	பூதக்கூட்டத்தினுள் ஓர் அறிவு எழும் என்று கூறியது அநுமானம் அன்றி யாது கொண்டு கண்டனை, அன்றியும்,
மாண்ட வாயில் மனம் கொள்ஞானம் உணர்ந்ததும் அநுமானம் என்று	சத்தாதிகளைப் பொறி இடமாக நின்று அறியும் என்னும் அறிவும் காட்சியல்ல, அநுமானம் என்று கொள்வாயாக.
ஈண்டு பூதம் இயைந்தது இவ்வுடல் என்பது என் பிரமாணம் ஏ	இஃதன்றிப் பிரமாணமும் இல்லை என்று கூறுவை, அங்ஙனம் கூறில், பூதக் கூட்டத்தின் உருத்தோன்றும் என்று கூறியது யாது? உன் காட்சியும் அநுமானப் பிரமாணமே என்று அறிவாயாக என்றவாறு

விளக்கவுரை

'பூதக்கூட்டத்தினுள் ஓர் அறிவு எழும்' என்று நீ கூறினாய். பூதங்கள் சேர்ந்து

இவ்வுடம்பு உண்டானது என்பதைக் கண்டார் யார்? பூதக் கூட்டத்தினுள் ஓர் அறிவு உண்டாவதைக் கண்டார் யார்? பூதங்களாகிய உருக்களையே நாம் காண்கிறோம், அவைகட்குக் காரணமாய தனிநிலையில் உள்ள பூதங்களைக் கண்டார் யாவர்? பூதங்கள் அழிவில்லாதன என்று நீ கூறுவது எதனால்? இவையெல்லாம் அநுமானத்தினால்தானே கூறப்படுகின்றன. நீ கூறும் காட்சியளவையுடன் கருதலளவையும் இப்போது உனக்குத் துணைசெய்வதைக் காண்க. ஆதலால், நீ காட்சியளவை மட்டுமே பிரமாணம் எனக் கூறுதல் தவறாகும்.

இவைகளால் காட்சியளவையுடன் அநுமான அளவையும் உண்டு என்பது சாதிக்கப்பட்டது.

இச்செய்யுள் அநுமானம் இல்லை என்று கூற, மீளவும் மறுத்து, அதனை அநுமானம் உண்டு என்று கூறிப் பிரமாணம் உண்டு என்பதற்கு ஓர் எல்லை கூறிற்று.

இவ்விடத்துப் பூதங்களின் கூட்டத்து உடம்பாம் என்று சொல்லியது எந்தப் பிரமாணத்தால்? அநுமானத்தால் எனக் கொள்க. ஆதலால், இலிங்கத்தைக்கொண்டு இலிங்கியை ஊகிக்கிற ஞானம் அநுமானம் எனப்படும்.

இம்மூன்று பாட்டானும் 'அநுமானம் உண்டு' என்று சாதித்தது எனக்கொள்க. *(3)*

செய்யுள் - 35

பழுதி லாமறை கண்ட நூல்பழு
தின்றி யுண்டது பாரின்மேல்
மொழிவர் சோதிட முன்னி யின்னது
முடியு மென்பது முன்னமே
அழிவி லாதது கண்ட னம்மவை
அன்றி யுஞ்சிலவா கமங்களின்
எழுதி யோர்படி யேன்று கொண்டிரு
நிதியெ டுப்பது மெண்ணிடே.

பதவுரை

பழுது இலா மறைகண்ட நூல் பழுது இன்றி உண்டு அது பாரின் மேல் மொழிவர் சோதிடம் முன்னி இன்னது முடியும் என்பது முன்னமே அழிவிலாது அதுகண்டனம்	குற்றமில்லாத வேதம் முதலாகிய நூல்கள் குற்றமின்றிச் சொல்வன உள, அவை எங்ஙனம்? என்னில், பூமியின்கண் சோதிட நூலோர் கருதி நிகழ்காலத்தில் நின்றும் எதிர்காலத்து வினையை முன்பு கூறா நிற்பார்கள். பின்பு அதுவும் அழிவில்லாத தாகக் கண்டனம்

அவையன்றியும் சில ஆகமங்களில் எழுதிய ஓர் படி ஏன்று கொண்டு இரு நிதி எடுப்பதும் எண்ணிடு ஏ	அவை ஒழிந்ததும் சில நூற்பிரமாணத்தின் உள்ளபடியை எடுத்துக்கொண்டு இறந்த காலத்தில் வைக்கப்பட்டுப் பூமியின்கண் மறைந்து கிடக்கும் பொருள்களையும் எடுக்கப்படும். அவை நூற்பிரமாணமே என்று அறிவாயாக என்றவாறு.

விளக்கவுரை

இனி, ஆகம அளவையும் பொருளாராய்ச்சிக்கு வேண்டப்படும். சோதிட நூல்வல்லோர் எதிர்காலத்து நிகழ்ச்சிகளை முன்னரே அறிந்து நிகழ்காலத்திலே கூறுவர். அவை தவறாமல் பலிக்கக்காண்கிறோம். அதுவன்றியும், சில நூற் பிரமாணங்களைக் கொண்டு பூமியில் புதைக்கப்பட்டு மறைந்து கிடக்கும் பொருள்களையும் எடுக்கக் காண்கின்றோம். இவையெல்லாம் நூற்பிரமாணமே யன்றிக் காட்சிப்பிரமாணம் அன்று.

இச்செய்யுள் 'ஆகமப் பிரமாணம் உண்டு' என்று கூறிற்று.

'உள்ளதாவது' (32ஆவது) என்னும் செய்யுள் முதல் இச் செய்யுள் காறும் ஒரு தொடர். (4)

செய்யுள் - 36

பூத மானவை நித்த மென்று
புகன்ற தென்னை யுருக்களாப்
ஆத லோடழி வாகு மாதலின்
ஆக்கு வோரவர் வேண்டிடும்
காத லோடு கடாதி மண்கொ
டியற்று வோருளர் கண்டனம்
சீத நீரி லெழுந்த கொப்புள்
நிகழ்ந்த மாருதச் செய்கையே.

பதவுரை

பூதம் ஆனவை நித்தம் என்று புகன்றது என்னை	பூதங்கள் நான்கும் நித்தம் என்றும் அழியாத இயல்பை யுடைத்து என்றும் கூறியது என்னை?
உருக்கள் ஆய் ஆதலோடு அழிவு ஆகும் ஆதலின் ஆக்குவோர் அவர் வேண்டிடும்	பூதக்கூட்டத்தில் உருத்தோன்றுதலும் கெடுதலும் உண்டு ஆதலால் இவை நித்தம் அன்றி இவை கூட்டுவான் ஒரு கர்த்தா வேண்டும்; அஃது என்போல்? என்னில்

காதலோடு கடாதி மண் கொடு இயற்றுவோர் உளர் கண்டனம்	நீ உவமை கூறிய கடாதிகளையும் மண்ணைக் கொண்டு உண்டாக்குவானைக் காண்டலால்,
சீதம் நீரில் எழுந்த கொப்புள் நிகழ்ந்த மாருத செய்கையே	நீரினிடமாகக் குமிழி தோன்றுமாபோல் மனம் முதலாயின தோன்றும் என்று கூறினாய்; குமிழியும் வாயுவால் உண்டாம் ஆகையால், உருவிடத்திலும் மனம் முதலானவற்றைக் கூட்டுதற்கு ஒரு கர்த்தா வேண்டும் என்று அறிவாயாக என்றவாறு

விளக்கவுரை

பூதங்கள் நான்கும் நித்தம் என்றும், அழியாத இயல்பையுடையன என்றும் கூறினாய். பூதக் கூட்டத்தில் உருத்தோன்றுதலும் கெடுதலும் உண்டு. இவற்றைக் கூட்டுவான் ஒரு கர்த்தா வேண்டும். மண்ணிலிருந்து பலவகையான பாண்டங்கள் உண்டாகின்றன என்று சொன்னாய். மண்ணிலிருந்து குட முதலிய பல பாண்டங்களும் தாமாகத் தோன்றக் கண்டிலம். அவையெல்லாம் குயவனாலே மண்ணிலிருந்து உண்டாக்கப்படுகின்றன. அதுபோல, பூத வடிவங்களையும் தோற்றுவிப்பதற்கு ஒரு கர்த்தா வேண்டப்படும். இவை இயற்கை என்னில், தோன்றுதலும் கெடுதலும் ஆகிய இருவேறு செயல்கள் காணப்படுதலின் இயற்கையாகா. ஆதலின், அவற்றைத் தோற்றுவிக்கவும் ஒடுக்கவும் ஒரு முதல்வன் வேண்டும். நீரினிடமாகக் குமிழி தோன்றுமாறு போல மனம் முதலாயின தோன்றும் என்று கூறினாய் குமிழியும் வாயுவால் உண்டாம். ஆகையால், உருவிடத்திலும் மனம் முதலியவற்றைக் கூட்டுதற்கு ஒரு கர்த்தா வேண்டும் என அறிக.

இச் செய்யுள் முறையானே 'பூதங்கள் நித்தம்' என்பதனையும், 'அவற்றின் கூட்டத்தால் உருக்கள் தோன்றி அவ்வுருக்களில் புத்தி முதலாயின தோன்றும்' என்பதனையும் மறுத்து, இதனை ஆக்குவான் 'ஒரு கர்த்தா உண்டு' என்றும் கூறிற்று. *(5)*

செய்யுள் - 37

நீரின் வந்தெழு கொப்புள் நீரது
வாயெ ழும்நிகழ் பூதமும்
ஓரின் வேறுணர் வாயெ ழாஅவை
பூத மாகி யுதித்திடும்
தேரி னூறடை காய்செ றிந்தவை
சேர வேறு சிவப்பெழும்
பாரி னிற்பிரி யாது புந்தி
பழிப்பு டம்பு கிடக்கவே.

பதவுரை

நீரின் வந்து எழு கொப்புள் நீர் அது ஆய் எழும் நிகழ்பூதமும் ஒரின் வேறு உணர்வு ஆய் எழா அவை பூதம் ஆகி உதித்திடும்	நீரின் கண்ணே தோன்றும் குமிழியும் நீர் ஆமாறு போல விளங்கிய பூதமும் விசாரிக்கு மிடத்து வேறாக அறியும் அறிவு ஆகாது அவை காய பூதமே ஆம்.
தேரின் நூறு அடைகாய் செறிந்து அவை சேர வேறு சிவப்பு எழும்	அன்றியும், ஆராயும் வழி நூறும் காயும் அடையும் கூடி அவை கலந்த விடத்து ஒரு சிவப்பு உண்டாமாறு போலப் பூதக் கூட்டத்தின் ஓர் அறிவு எழும் எனக் கூறியது
பாரினில் பிரியாது	பூமியிடத்துச் சிவப்புச் சேர்வையை நீங்காது
புந்தி பழிப்பு உடம்பு கிடக்க ஏ	அச் சேர்வைபோலப் புத்தியும் அவ்வுடலை விட்டு நீங்காததாக வேண்டும், அங்ஙனம் அன்றி, உடல் கிடக்கப் புத்தி நீங்குகையால் நீ கூறியது பழிப்பாம் என்றவாறு

விளக்கவுரை

நீரினிடத்துத் தோன்றுகின்ற குமிழியும் நீரே ஆம்; அதுபோல, விசாரிக்குமிடத்துப் பூதங்களில் தோன்றுவதும் பூதம் ஆமே அன்றி அறிவாகாது. சுண்ணாம்பும் பாக்கும் வெற்றிலையும் கூடிக் கலந்தவிடத்து ஒரு சிவப்புண்டாம். அதுபோல, பூதக் கூட்டத்திலே ஓர் அறிவு எழும் என்னில்; சிவப்பு நிறம் அம்மூன்றின் கலவையை விட்டுப் பிரிதல் இல்லை. அதுபோல, புத்தியும் அவ்வுடலைவிட்டு நீங்காதாக வேண்டும். அவ்வாறின்றி, உடல் கிடக்கும்போதே புத்தியானது அதனைவிட்டு நீங்குகிறது. ஆகலின், நீ கூறியது பழிப்புக்கு இடமாம்.

பழிப்பு என்றதனைப் பின்னே கூட்டுக. கொப்புள் விகாரம், பிரியாது என்னும் சொல்லைப் புத்தியுடனும் கூட்டுக.

இச்செய்யுள் 'பூதத்தின் கூட்டத்தில் அறியும் அறிவு தோன்றும்' என்பதனை மறுத்துப் 'பூதத்தில் தோன்றியது காய பூதமேயாம்' எனக் கூறிற்று. (6)

செய்யுள் - 38

கூறு சேர்வையின் வந்த போது
சிவப்பெ னுங்குண மொன்றுமே
வேறு வேறு புலன்கு ணங்கள்
உடற்கண் வந்து விளைந்ததென்
நூறு காயடை கூடும் வேறொரு
வன்ற ணாலென நோக்கிநீ
தேறுபூத செயற்கும் வேண்டும்
ஒருத்த னென்று தெளிந்திடே.

பதவுரை

கூறு சேர்வையின் வந்தபோது சிவப்பு என்னும் குணம் ஒன்றுமே வேறு வேறு புலன் குணங்கள் உடற்கண் வந்து விளைந்தது என்?	நூறும் காயும் அடையும் என்று கூறப்பட்ட சேர்வையின்கண் வந்தவிடத்துச் சிவப்பு எனும் ஒரு தன்மையே காணப்படும். அப்படி ஒரு தன்மையே ஆகாது புலன் என்றும் பொறி என்றும் குணங்கள் என்றும் தனித்தனி உடற்கண் வந்து உண்டாகியது என்னை? அஃதன்றியும்,
நூறு காய் அடை கூடும் வேறு ஒருவன் தனால் என நோக்கி நீ தேறு பூத செயற்கும் வேண்டும் ஒருத்தன் என்று தெளிந்திடு ஏ	நூறும் காயும் அடையும் சிவப்பு ஏறக் கூட்டுதற்கு ஒருவன் வேண்டும் என்பதனை நீ கருதியது போலப் பூதச் செயற்கும் ஒருத்தன் வேண்டும் என்று நிச்சயமாகத் தெளிந்திடு வாயாக என்றவாறு

விளக்கவுரை

சுண்ணாம்பும் பாக்கும் வெற்றிலையும் கூடிக் கலந்த கலவையிலே சிவப்பு என்னும் ஒரு குணமே காணப்படும். அப்படி ஒரு தன்மையின்றிப் புலன், பொறி, குணம் எனத் தனித்தனி உடலில் வந்து பொருந்தக் காரணம் யாது? அன்றியும், நூறு காய் அடை முதலியவற்றைச் சிவப்பேறக் கூட்டுதற்கு ஒருவன் வேண்டப்படுவதுபோல, பூதச் செயலுக்கும் ஒருவன் வேண்டும் எனத் தெளிக.

தேறித் தெளிந்திடு எனக் கூட்டுக.

இச்செய்யுளும் 'பூதக்கூட்டத்து அறிவு முதலிய தோன்றாது' என மறுத்துத் 'தோற்றுவிப்பான் ஒரு கர்த்தாவுண்டு' எனக் கூறிற்று. (7)

செய்யுள் - 39

ஆன வைம்பொறி யுண்டி நித்திரை
அச்ச மைதுன மாதியாய்
ஊனில் வந்திடு முன்பி லாதவை
என்று ரைக்கின் உலூதைபோல்
வானின் வந்திடு மாதர் ஆணலி
ஆதி மானுட ராதியாய்
யோனி பன்மையு மின்று பூதம்
உறும்பு ணர்ச்சியொர் தன்மையே.

பதவுரை

ஆன ஐம்பொறி உண்டி நித்திரை அச்சம் மைதுனம் ஆதி ஆய் ஊனில் வந்திடும் முன்பு இலாதவை என்று உரைக்கின் உலூதைபோல்	சிலம்பியிடத்து நூல் தோன்றுமா போல முன்பு இலாதவையான ஐம்பொறி உணவு துயில் பயம் புணர்ச்சி முதலியவை காயத்தின் குணமாக இப்போது உண்டாம் என்று நீ சொல்லில்,
வானின் வந்திடும் மாதர் ஆண் அலி ஆகி மானுடர் ஆதி ஆய்	மாதர் ஆண் அலியாகியும் மானுடராதி யாகியும் ஆகாயத்தினின்றும் தோன்றல் வேண்டும்.
யோனி பன்மையும் இன்று பூதம் உறும் புணர்ச்சி ஓர் தன்மையே	பூதக்கூட்டம் ஒரு தன்மையாகலான் மிருக பசு பட்சி தாவராதிகள் ஆகிய யோனி பேதமும் இல்லையாம். ஆகையால் நீ கூறியது பொருளன்று என்றவாறு

விளக்கவுரை

ஆன ஐம்பொறி என்றது முன்பு இல்லவையாய் இப்பொழுது உண்டானவை என்க. உலூதை - சிலம்பி. மைதுனம் - ஒன்றிப்பு, திருமணம், புணர்ச்சி.

இச்செய்யுள் 'ஐம்பொறி, உணவு, துயில், பயம், புணர்ச்சி முதலிய முன்பு இல்லவையாய் இப்போது உண்டாம் என்னின், மாதர் ஆண் அலி ஆகிய பேதங்களும் இப்பொழுது ஆகாயத்திலிருந்து உண்டாம் எனப்படும். ஆகையால் அவை இப்போது உண்டானவை அன்று' என மறுத்துக் கூறிற்று.

'நீரின் வந்தெழும்' என்னும் செய்யுள் முதல் இச்செய்யுள்காறும் முறையானே புத்தி முதலியன இப்போதுண்டாம் என்பதனைக் கூறிற்று. (8)

செய்யுள் - 40

ஐந்து நான்கொரு மூன்றி ரண்டுட
னொன்ற தாயுட லங்களின்
வந்தி டாவுணர் விந்திரி யங்களும்
வன்ன பன்மையு மின்மையாம்
புந்தி யோடிய வன்ன போக
குணங்கள் பூத புணர்ச்சிதான்
தந்தி டாதிவை பேத மாயிட
வந்த வாவினை தந்தவா.

பதவுரை

ஐந்து நான்கு ஒரு மூன்று இரண்டு டன் ஒன்றது ஆய் உடலங்களின் வந்திடா உணர்வு இந்திரியங்களும் வன்ன பன்மையும் இன்மையாம்	நீ முன்பு இல்லையென்று கூறிய கன்மம் இல்லையாயின் யோனி பேதமும் இல்லையாய் அவ் யோனி பேதங்களின் உண்டாம் உடலங்களின் இந்திரியங்களும் ஐந்து நான்கு மூன்று இரண்டு மூன்று ஒன்று என்னும் அறிவுகளும் இல்லையாம்; அஃதன்றியும்,
புந்தி ஒடிய வன்ன போக குணங்கள் பூத புணர்ச்சிதான் தந்திடாது	புந்தியால் அறியும் அட்சரங்களும், புசிப்புகளும் குண பேதங்களும் பூதக்கூட்டம் தரமாட்டாது.
இவை பேதம் ஆயிட வந்த ஆ வினை தந்த ஆ	இந்திரியம் மிகக் குறைவாகவும் சாதி பேதமாகவும் குணபேதமாகவும் இப்படிப் பேதித்திட வந்த அதனைக் கன்மம் தந்தது என்று அறிவாயாக என்றவாறு

விளக்கவுரை

முன்னர் வன்னம் - சாதி; பின்னர் வன்னம் - எழுத்து.

நீ 'கன்மம் இல்லை' என்று கூறுகின்றாய். உன் கொள்கைப்படியே கன்மம் இல்லையாயின் யோனி பேதங்களும் இல்லையாய், அவ்வவயோனியே தங்களின் உண்டாம் உடலங்களின் இந்திரியங்களும் ஒன்று முதல் ஐந்து என்னும் அறிவுகளும் இல்லையாய் முடியும். புத்தியால் அறியும் வன்னமும் புசிப்பும் குணபேதமும் ஆகிய இவற்றைப் பூதக் கூட்டம் தரமாட்டாது. ஆகலின், இந்திரியம் மிகக் குறைவாகவும் சாதிபேதமாவும் குணபேதமாகவும் வரும் பலவகைப் பேதங்களும் உண்டாதற்குக் காரணம் 'கன்மமே' என்று நன்றாக அறிவாய்.

இச்செய்யுள் 'கன்மமில்லை' என்பதனை மறுத்து கன்மம் உண்டென்று கூறிற்று. (9)

செய்யுள் - 41

அறிவு பூதம தென்னில் வேறு
புறத்த றிந்தமை கண்டிலம்
செறிவு தானுட லத்தெ னிற்சவ
மான போதுடல் தேருமோ
குறிகொ ளாதுடல் வாயு வானது
கூடி டாமையி னென்னினீ
பிறித ராதுயிர் நிற்கஞான
முறக்க மென்பிற வாததே.

பதவுரை

அறிவு பூதம் அது என்னில் வேறு புறத்து அறிந்தமை கண்டிலம்	பூதங்களே அறிவாம் என்று நீ கூறில் புலப்படக் காணப்பட்ட மண்ணிலும் நீரிலும் நெருப்பிலும் காற்றிலும் அறிவு கண்டிலமன்றோ
செறிவுதான் உடலத்து எனில் சவம் ஆன போது உடல் தேருமோ	உடலிலே செறிந்தபோது காணும் தோன்றுவது என்னில், சவமாய்க்கிடந்த காலத்து அறிவு கண்டதில்லையே.
குறிகொளாது உடல் வாயு ஆனது கூடிடாமையின் என்னில் நீ	குறிக்க மாட்டாது காணும் வாயுப் பிரிந்தவாறே என்று நீ கூறில்,
பிறிதராது உயிர் நிற்க ஞானம் உறக்கம் என் பிறவாதது ஏ	அந்த வாயுவானதும் உறக்கத்திலே பிரியாது நிற்க அறியாமல் நிற்பானேன்? ஆகையால், பூதக்கூட்டத்தே அறிவு தோன்றாது, வேறோர் அறிவுண்டு என்று அறிவாயாக என்றவாறு

விளக்கவுரை

பூதங்களே அறிவாம் எனக்கூறின், காணப்பட்ட மண், நீர், நெருப்பு, காற்று ஆகிய இவற்றில் ஓர் அறிவும் கண்டிலம். உடலிலே செறிந்தபோது அறிவு தோன்றும் என்னில், பிணமாய்க் கிடந்த காலத்து அறிவு கண்டதில்லை. வாயுப் பிரிந்தவாறே அறிவில்லை என்பையாயின், உறக்கத்திலே வாயுப் பிரியாது நிற்கவும் அறியாமலிருப்பானேன்? ஆகையால், பூதக் கூட்டத்திலே அறிவு தோன்றாது; வேறோர் அறிவுண்டு என்று அறிவாயாக.

இச்செய்யுள் 'ஆன்மா இல்லை' என்பதனை மறுத்துக் கூறிற்று. *(10)*

செய்யுள் - 42

அறிவு டற்குண மென்னில் ஆனைய
தாதி யந்த மெறும்பதா
உறுமு டற்பெரி தான வற்றின்
உதித்தி டும்பெரி தாகவே
சிறுவு டற்செறி ஞான மும்சிறி
தாயி டும்பரி ணாமமும்
பெறுமு டற்சிறி தாவ தென்பெரி
தாவ தென்சில பேசிடே.

பதவுரை

அறிவு உடல் குணம் என்னில்	அறிவென்று வேறொரு முதல் இல்லை, உடற்குணமே காணும் அறிவு என்று நீ கூறின்,
ஆனை அது ஆதி அந்தம் எறும்பு அதா உறும் உடல் பெரிது ஆனவற்றின் உதித்திடும் பெரிது ஆகவே சிறு உடல் செறிஞானமும் சிறிது ஆயிடும்	ஆனை முதல் எறும்பு ஈறாக எடுத்த உடலில் பெரிதானவற்றின் உதிக்கும் அறிவு பெரிதாயும், சிறிதானவற்றின் உதிக்கும் அறிவு சிறிதாயும் இருக்கவேண்டும். அங்ஙனமின்றி
பரிணாமமும் பெறும் உடல் சிறிது ஆவது என் பெரிது ஆவது என் சில பேசிடு ஏ	பரிணாமத்தையுடைய யானையுடற்கு அறிவு சிறிதாயும் சிறிய உடலையுடைய மானுடற்கு அறிவு பெரிதாயும் இருப்பது ஏன்? ஆகையால் அறிவு உடற்குணம் அன்று; வேறு நீ சொல்லத்தக்கது உண்டாயிற் சொல் என்றவாறு.

விளக்கவுரை

அறிவென்று வேறொரு முதல் இல்லை, உடற் குணமே அறிவு என்று நீ கூறின், ஆனை முதல் எறும்பு ஈறாக எடுத்த உடலில் பெரிதானவற்றின் உதிக்கும் அறிவு பெரிதாயும், சிறிதானவற்றின் உதிக்கும் அறிவு சிறிதாயும் இருக்கவேண்டும். அவ்வாறன்றி, பரிணாமத்தையுடைய யானை உடலுக்கு அறிவு சிறிதாயும் சிறிய உடலையுடைய மானுடருக்கு அறிவு பெரிதாயும் இருப்பதற்குக் காரணமென்ன? ஆகையால், அறிவு உடற்குணம் அன்று; வேறுண்டாயிற்சொல்.

இச்செய்யுள் 'அறிவு உடற்குணம்' என்பதனை மறுத்து 'ஆன்மாவின் குணம்' என்று கூறிற்று.

இது கன்மத்தால் என்பது கருத்து. *(11)*

செய்யுள் - 43

போத மும்மெலி வாகி யும்மலி
பூத மானவை கூடலிற்
பேத மோடு பெருத்து டற்கள்
சிறுத்த பெற்றிமை யென்றிடின்
ஒது டற்பெரி தான வும்சிறி
தாயி டாசிறி தானவும்
நீதி யிற்பெரி தாயி டாமுன
முள்ள தன்மையி னீடுமே.

பதவுரை

போதமும் மெலிவு ஆகியும் மலிபூதம் ஆனவை கூடலில் பேதமொடு பெருத்து உடல்கள் சிறுத்த பெற்றிமை என்றிடின்	அற்றன்று, உடற்குணமே காணும் அறிவு என்றது; பூதமானவை கூடுங்காலத்துப் போதம் மெலிவாகியும் பூதம் மலிவாகியும் கூடலில் அறிவு சிறுத்துக் காயம் பெருத்தது என்றும் போதம் மலிவு ஆகியும் பூதம் மெலிவு ஆகியும் கூடலில் அறிவு பெருத்துக் காயம் சிறுத்தது என்றும் அங்ஙனம் முறைமை என்றும் நீ கூறின்,
ஒது உடல் பெரிது ஆனவும் சிறிது ஆயிடா சிறிது ஆனவும் நீதியில் பெரிது ஆயிடா முனம் உள்ள தன்மையின் நீடும் ஏ	பூதக்கூட்டத்தால் தோன்றும் என்று நீ கூறிய பெரிதானவுடல் சிறிதாயிடாது, சிறிதான வுடல் பெரிதாயிடாது முன்னம் உள்ள முறைமைப்பாட்டில் நிற்கவேண்டும்; அங்ஙனம் நில்லாது பெரியவுடல் காலம் சென்றால் சிறியதாயும் சிறிய உடல் காலம் சென்றால் பெரிதாயும் இருத்தலால் பூதக் கூட்டத்தில் தோன்றும் அறிவன்று; கன்மத்துக்கு ஈடாக வடிவெடுத்துக் கோடலாமென்று கருதுவாயாக என்றவாறு.

விளக்கவுரை

இச்செய்யுளும் 'அறிவு உடற்குணமே, பூதங்களினுடைய புணர்ச்சி விசேடங்களினாலே காயமும் அறிவும் ஏறிக் குறைந்திருந்ததென்று' கூறுவதனை 'அல்ல' என்று மறுத்துக் கூறிற்று. கன்மத்துக்கு ஈடாகவே வடிவங்கள் கொடுக்கப்படும் என்றவாறு.

நீடுதல் - நிலைபெறுதல். (12)

செய்யுள் - 44

இயல்பு காணிவை யென்னின் வேறிசை
பெண்ணொ டாணிரு தன்மையாம்
செயல்கொ ளாவிவர் செய்தி காரண
மாக வந்து செனிப்பதென்
இயல்ப தாமுடல் பூத காரிய
மாவ தும்மிலை யாகுமான்
மயல தாம்வினை யாலொ ருத்தன்
வகுத்த தன்மையின் வந்ததே.

பதவுரை

இயல்பு காண் இவை என்னின்	கன்மம் உடலாக எடுத்துக் கோடற்கு அறிவில்லை. இவை எல்லாம் பூத இயல்பு என்று நீ கூறின்,
வேறு இசை பெண்ணொடு ஆண் இருதன்மை ஆம் செயல் கொளா	இயல்பு ஒரு தன்மைப்பட்டிருத்தலின்றி வேற்றுமைப்படப் பொருந்தி இரண்டு தன்மையாகிய பெண் ஆண் என்னும் முறைமையைக் கொள்ளாது
இவர் செய்தி காரணம் ஆக வந்து செனிப்பது என்	இஃதன்றியும், பூதகாரணம் ஆகில் இரண்டு தன்மைப்படப் பெண் ஆண் என்னும் முறைமை காரணமாகப் பிறப்பது என்னை
இயல்பது ஆம் உடல் பூத காரியம் ஆவதும் இலை ஆகும் ஆல்	ஆகையால், இயல்பாம் என்ற உடல் பூத இயல்பும் அல்லவாய்ப் பூதகாரியம் ஆவது இல்லையாம்.
(அதனால்) மயல் அது ஆம்	நீ கூறியது மயக்கத்தை உடைத்தாம்
வினையால் ஒருத்தன் வகுத்த தன்மையின் வந்தது ஏ	கன்மத்துக்கு ஈடாக ஒருத்தன் உண்டாக்கப் பட்ட தன்மையிலே வரும் உருக்கள் என்று அறிவாயாக என்றவாறு.

விளக்கவுரை

கன்மமானது தானே உடலை எடுத்துக் கொள்ளுவதற்கு அறிவில்லாதது. இவைகளெல்லாம் பூத இயல்பும் அல்ல.

இச்செய்யுள் காயம் பேதப்படுவது இயல்பு என்பதனை மறுத்துக் கூறிற்று. கன்மத்துக்கு ஈடாக ஒரு முதல்வனால் உண்டாக்கப்பட்ட தன்மையிலே உருக்கள் வருவனவாம். (13)

செய்யுள் - 45

காரணம்மவை யென்ற தென்னை
கடாதி போனிகழ் காரியம்
நேர ணைந்து சமைந்து நின்றிடு
மென்ப தும்மது நேர்கிலோம்
போர ணைந்திடு மொன்றொ டொன்று
பொருந்து மாகில் வருந்தியும்
நீர ணைந்தொரு தீயி னின்றது
கண்ட தாயி னிகழ்த்திடே.

பதவுரை

காரணம் அவை என்றது என்னை கடாதிபோல் நிகழ்காரியம் நேர் அணைந்து சமைந்து நின்றிடும் என்பதும் அது நேர்கிலோம்	உருக்கட்குப் பெண் ஆண் செய்தி காரணம் என்று நீ கூறியது என்னை? மண்ணின்கண் கடாதிகள் தோன்றுமாறு போலப் பூத காரணத்தினால் பெண் ஆண் காரியப்பட்டுத் தம்மில் கூடிய கூட்டத்தே உருச்சமைந்திடும் என்று நீ சொல்லுகிற இது யாம் பொருந்துகிறோமில்லை, அஃது எங்ஙனம்? என்னில்,
போர் அணைந்திடும் ஒன்றோடு ஒன்று பொருந்தும் ஆகில் வருந்தியும் நீர் அணைந்து ஒரு தீயின் நின்றது கண்டது ஆயின் நிகழ்த்திடு ஏ	நீ கூறிய பூதங்கள் நான்கும் தம்மில் மாறுபடும். அவை மறுதலையாகாமல் கூடுமாயின் நீரும் தீயும் ஓரிடத்திற் கூடிநின்ற தன்மையை உன் காட்சியளவையிற் கண்டது உண்டாயின் வருந்தியும் சொல்வாயாக என்றவாறு

விளக்கவுரை

இச்செய்யுள் பூத காரணத்தால் பெண் ஆண் என்னும் காரியம் உண்டாகாது என்று மறுத்துக் கூறிற்று.

அப்படியாகில் நீரிலே சித்தர்கள் விளக்கு எரிக்கக் கண்டோம், சமுத்திரத்திலே வடவாமுகாக்கினி நிற்கும் எனக்கேட்டோம் என்பையாகில், சித்தர்களும் ஒளடதத்திலே நிறுத்தினதல்லது நீரில் விளக்கு நில்லாது, நிற்கில் எவ்விடத்திலும் நிற்கவேண்டும். வடவாமுகாக்கினியும் சமுத்திரத்திலே நிற்கும். அது நாலு மலைக்கு நடுவே நிற்கும். அது சாத்திரங்களிற் காண்க. விரிக்கிற் பெருகும். (14)

செய்யுள் - 46

பூத மேவு புணர்ச்சி யேபுரி
காய காரண மாகுமேல்
காத லாணொடு பெண்ணு மேவு
புணர்ச்சி காரண மாவதென்
ஆதி யேயுல கத்தி லாணொடு
பெண்ணு மாயணை காரியம்
நாத னாயகி யோடு கூடி
நயந்த காரண மென்பரே.

பதவுரை

பூதம் மேவு புணர்ச்சியே புரிகாய காரணம் ஆகுமேல்	பூதக்கூட்டமே பொருந்தப்பட்ட காயத்துக்குக் காரணமாயின்,
காதல் ஆணொடு பெண்ணும் மேவு புணர்ச்சி காரணம் ஆவது என்	பெண் ஆண்கள் காதலோடு புணரும் புணர்ச்சி காரணமாக உருக்கள் காரியப் படுவானேன்?
ஆதியே உலகத்தில் ஆணொடு பெண்ணும் ஆய் அணை காரியம் நாதன் நாயகியோடு கூடி நயந்த காரணம் என்பர் ஏ	அநாதியே கர்த்தா நாயகியோடு கூடிப் போகத்தை விரும்ப அது காரணமாக ஆதியே உலகின்கண் ஆண் பெண் காரியப்பட்டது காரணமாக உருக்கள் காரியப்பட்டு வருதலன்றிப் பூதக்கூட்டம் காரணம் எனப்படாது என்றவாறு

விளக்கவுரை

இச்செய்யுள் உருக்கட்குப் பூதம் காரணம் அன்று. கர்த்தாவே நிமித்த காரணன் என்பது கூறிற்று.

சிவனும் உருக்களை வகுத்துக் கொள்ள அறியாது. ஆண் பெண்களும் அப்படியே. கர்த்தாவும் சத்தி சிவமாக வடிவுகொள்ளச் சந்நிதிமாத்திரத்திலே கன்மத்துக்கு ஈடாக உருக்கள் தோன்றும் என்றறிக.

'இயல்புகாண் இவை' என்னும் செய்யுள் முதல் இச்செய்யுள்காறும் 'உருக்கட்குப் பூதம் காரணமன்று' என்று மறுத்துக் கூறியதாம். (15)

செய்யுள் – 47

கந்தம் வெம்மை கலந்தி டும்புனல்
கன்ம மென்செய்த தென்றனை
சந்த னந்தழல் சார நீரிரு
தன்மை யுற்றிடு மாறதோர்
தந்த கன்ம மிரண்ட ணைந்து
தருஞ்சு கத்தொடு துக்கமும்
சிந்தி யாவெழு சீவ னுற்றிடும்
வேறு டற்கிலை தேறிடே.

பதவுரை

கந்தம் வெம்மை கலந்திடும் புனல் கன்மம் என் செய்தது என்றனை	புனலானது சந்தனாதிகளைக் கூடிக் குளிர்ந்தும் நெருப்பைக்கூடி வெப்பம் கலந்தும் இருத்தலால் இஃது என்ன கன்மம் செய்தது? ஆதலால் கன்மம் இல்லை என்று கூறினாய்
சந்தனம் தழல் சார நீர் இருதன்மை உற்றிடும் ஆறு அது ஓர்	நீ உவமம் கூறிய நீர் சந்தனத்தையும் தழலையும் சார ஒரு பொருட்கு இரண்டு தன்மை உண்டானவாறு போல விசாரிப்பாயாக
தந்த கன்மம் இரண்டு அணைந்து தரும் சுகத்தோடு துக்கமும்	கன்மம் இரண்டுவகைப்படப் பொருந்திச் சுகதுக்கங்களைக் கொடுக்கும்
சிந்தியா எழு சீவன் உற்றிடும் வேறு உடற்கு இலை தேறிடு ஏ	அந்தச் சுகதுக்கங்களை உற்று அறிந்திடுவது சேதனமான உயிருக்கு அல்லது அசேதனமான - உருக்கட்கு இல்லை என்று அறிவாயாக என்றவாறு

விளக்கவுரை

தந்த கன்மமாவது - முற்பிறப்பில் அறிவு உண்டாக்கிக் கொண்டதாய்ப் பின் மறுபிறப்பில் வந்து கூடிய கன்மம். சிந்தியா எழு சீவன் என்றது சுகதுக்கங்களுக்குப் பிரியாப்பிரியப்படுதலை.

இச்செய்யுள் கன்மமில்லை என்பதனை மறுத்துக் கூறிற்று.

நீரானது சந்தனம் முதலிய பொருள்களைக் கூடிக் குளிர்ச்சியடைகிறது. நெருப்பைக் கூடி வெப்பத்தை அடைகிறது. ஆதலின் அவை செய்த கன்மம் யாது? எனவே கன்மம் என்பது ஒன்றில்லை என்று நீ கூறினாய். உவமானமாகக் கூறிய நீர் சந்தனத்தையும் தீயையும் பொருந்த ஒருபொருள் இரண்டுபட்ட தன்மை

அறிந்தாய். கன்மம் இருவேறு வகைப்படப் பொருந்தி நின்று இன்பதுன்பங்களைக் கொடுக்கும். அந்த இன்பதுன்பங்களை உற்றறிவது சேதனமான உயிருக்கோ? அன்றி அசேதனமான உருக்களுக்கோ இல்லை என்று அறிவாயாக! (16)

செய்யுள் - 48

இன்ப மெய்தி யிருந்து நீவினை
இல்லை யிங்கியல் பென்றிடில்
துன்ப மெய்திடு வானென் மற்றிது
சொல்லி டாய்சொல வல்லையேல்
முன்பு செய்திடு கன்ம மென்றறி
கன்ம மும்முதல் வன்னறிந்
தன்பி னாலுறு விக்கு மப்பய
னாங்க மைப்பொ டநாதியே.

பதவுரை

இன்பம் எய்தி இருந்தும் நீ வினை இல்லை இங்கு இயல்பு என்றிடில்	நீ மகளிருடன் கூடிப்போக இன்பத்தை அனுபவித்திருந்தும் இயல்பு ஒழியக் கன்மமில்லை என்று கூறில்,
துன்பம் எய்திடுவான் என்	அந்தப் பெண்கள் நீங்கினவிடத்துத் துக்கப் படுவானேன்
மற்று இது சொல்லிடாய் சொல வல்லையேல்	இஃது எத்தால் வந்தது என்று சொல்ல வல்லையாகில் சொல்லுவாயாக.
முன்பு செய்திடு கன்மம் என்று அறி	மகளிருடன் கூடிப் போகத்தை அநுபவிப்பதும் அவரை நீங்கித் துன்பத்தை அநுபவிப்பதும் நீ முன் செய்த புண்ணிய பாவங்கள் என்று அறிவாயாக.
கன்மமும் முதல்வன் அறிந்து அன்பினால் உறுவிக்கும்	அந்தப் புண்ணிய பாவங்களும் தாமாக அணைவனவல்ல, கர்த்தாவானவன் அறிவுகள் செய்த கன்மத்துக்கு ஈடாக அறிந்து அநுக்கிரகத்தாலே ஊட்டுபவன்
அப்பயன் ஆங்கு அமைப்பொடு அநாதியே	அறிவும் கன்மமும் அதனைக் கூட்டுதலும் அநாதியே உள்ளது என்றவாறு

விளக்கவுரை

மற்று - அசை. அறிவு அதிகார முறைமையால் வந்தது. பயன் - கன்மம்.

இச்செய்யுள் 'புண்ணியபாவம் உண்டு' என அறிவித்தலைக் கூறிற்று.

துன்பம் மடலேறுகை முதலானவை. வேம்பு கைப்பதும், கரும்பு தித்திப்பதும் இயல்பு என்னில் தித்தித்தது என்றும் கைத்தது என்றும் சொல்லுகிற அறிவு என்று உண்டு காண், அவன் கன்மத்துக்கு ஈடாகச் சுகதுக்கப்படுவன் எனக்கொள்க.

(17)

செய்யுள் - 49

அநாதி யேலமை வின்றெ னின்மலம்
மாயை கன்ம மணுச்சிவன்
அநாதி கன்ம மணுக்கள் செய்ய
அறிந்து கன்ம முடற்செயா
அநாதி காரிய மாமு டற்கள்
அசேத னம்மணை யாவறிந்
தநாதி யாதி யமைக்க வேண்டு
மமைப்பி னோடு மநாதியே.

பதவுரை

அநாதியேல் அமைவு இன்று எனின்	நீர் கூறியவை அநாதியே யாமாகில் ஒருவனால் கூட்டுதல் இல்லை என்று கூறின்,
மலம் மாயை கன்மம் அணுச் சிவன் அனாதி	மலமும் மாயையும் கன்மமும் ஆன்மாவும் கர்த்தாவும் அநாதி,
கன்மம் அணுக்கள் செய்ய அறிந்து கன்மம் உடல் செயா	கன்மத்தை ஆன்மாக்கள் செய்ய அந்தக் கன்மம் தானாய் அறிந்து ஆன்மாக்களுக்கு உருவை எடுத்துக் கூட்டமாட்டாது.
அநாதி காரியம் ஆம் உடற்கள் அசேதனம் அணையா அறிந்து	அநாதியே காரியப்பட்டு வரும் உடற்கள் அசேதனம் ஆகையால் ஆன்மாவை அறிந்த கூடமாட்டா.
அநாதி ஆதி அமைக்க வேண்டும்	ஆகையால் அநாதியாகிய கர்த்தா ஆன்மாவையும் கன்மத்தையும் அதற்குப்

	பொருந்தின உருவையும் ஆதியாகக் கூட்டல் வேண்டும்.
அமைப்பினோடும் அநாதியே	அப்படி அவன் கூட்டின கூட்டும் அநாதியாகையால் இவையும் அநாதிதான் என்றவாறு

விளக்கவுரை

இச்செய்யுள் 'கன்மமும், உயிரும், உடலும் ஒருவன் கூட்டப்படுதலால் அநாதியன்று' என்றவிடத்து இவையெல்லாம் அநாதியாகும், இவை அசேதனம் ஆகையாலே ஒருவன் கூட்டவேண்டும், அதுகொண்டு ஆதியென்று கூறப்படும், அக்கூட்டரவும் அநாதிப்பட்டு வருகையால் எவையும் அநாதி என்பது கூறியது.

'கந்தம்வெம்மை' என்னும் செய்யுள் முதல் இச்செய்யுள்காறும் 'கன்மம் உண்டு' என்னும் அதற்குப் பிரமாணம் கூறியது. *(18)*

செய்யுள் - 50

காணொ ணாகர ணங்க ளுக்குயிர்
கண்டி டாமையி னின்றெனிற்
காணு மோகடங் கண்ட கண்ணினைக்
கண்டு நிற்பதுங் கண்ணதே
காணொ ணாதுயிர் தானு மிப்படி
கண்டி டுங்கர ணங்களைக்
காணொ ணாகர ணங்க ளுக்குயி
ருண்மை யாவதுங் கண்டிடே.

பதவுரை

காண ஒணா கரணங்களுக்கு உயிர் கண்டிடாமையின் இன்று எனின்	புறக்கரணங்களுக்கு உயிர்காண ஒண்ணாது ஆகையால் காட்சிக்குப் புலப்படாமையின் ஆன்மா என்று ஒன்றில்லை என்று கூறின்
காணுமோ கடம் கண்ட கண்ணினை கண்டு நிற்பதும் கண் அதே	உடலானது தன்னைக்கண்ட கண்ணைத் தான் காண வற்றோ? அவ்வுடலைக் கண்டு நிற்பதும் கண்ணுக்குள்ள தொழிலே காண்.
காண ஒணாது உயிர் தானும் இப்படி	காட்சியளவையாகிய கண்ணுக்குக் காண ஒண்ணாது என்ற உயிரும் இத்தன்மைத்து.

கண்டிடும் கரணங்களை	உயிர்சேதனம் ஆகையால் கரணங்களைக் கண்டு நிற்கும்
காண ஒணா கரணங்களுக்கு	கண்களை உடல் அறியாதவாறுபோலக் கரணங்களும் அவ்வான்மாவைக் காண வொண்ணா.
உயிர் உண்மை ஆவதும் கண்டிடு ஏ	ஆகையால் ஆன்மாவை உண்மையாக உண்டு என அறிவாயாக என்றவாறு

விளக்கவுரை

இச்செய்யுள் 'காட்சியளவைக்குக் காணப்படாது ஆகையால் ஆன்மா இல்லை' என்றவனை 'உண்டு' என மறுத்துக் கூறிற்று. *(19)*

செய்யுள் - 51

அங்கி யானது தானு மொன்றை
அணைந்து நின்று நிகழ்ந்திடும்
பங்கி யாதுயிர் தானு மிப்படி
பற்றி யல்லது நின்றிடா
தெங்கு மார்தயி லத்தை யுண்டெழு
தீப மான தெரிந்திடும்
அங்க தாமுட னின்று கன்மம்
அருந்தி யாருயி ராவதே.

பதவுரை

அங்கி ஆனது தானும் ஒன்றை அணைந்து நின்று நிகழ்ந்திடும் பங்கியாது உயிர்தானும் இப்படி பற்றி அல்லது நின்றிடாது	நெருப்பானது ஓர் விறகைப்பற்றி நின்று தன் வடிவைக் காட்டும் தன்மையன்றித் தனித்துநின்று தன் வடிவைக் காட்டும் தன்மையை உடைத்தன்று. அதுபோல, ஆன்மாவும் ஓர் உருவைக் கூடியன்றி நிற்கமாட்டாது.
எங்கும் ஆர் தயிலத்தை உண்டு எழு தீபம் ஆனது எரிந்திடும்	தகளி எங்கும் நிறைந்த எண்ணெயைப் பருகி ஓங்கிய தீபமானது எரியாநிற்கும்.
அங்கு அது ஆம் உடல் நின்று கன்மம் அருந்தி ஆர் உயிர் ஆவது ஏ	அப்படிக் கன்மத்தால் எடுத்துக்கொண்ட காயத்தினின்றும் கன்மத்தைப் புசிப்பது ஆன்மாவாம் என்றவாறு

விளக்கவுரை

திரி காயத்திற்கும் எண்ணெய் கன்மத்திற்கும், தீபம் ஆன்மாவிற்கும் உவமை. பங்கியாது - அழியாது.

இச் செய்யுள் ஆன்மா ஒன்றோடு கூடியல்லது தனித்து நில்லாது என்பது கூறிற்று. *(20)*

செய்யுள் - 52

அறிவு தானுட லத்தின் வேறது
வாயி றந்து பிறந்திடின்
அறிவு முன்புள தாங்கு வந்து
மறிந்தி டாமைய தின்றெனின்
அறிவை யோகன வத்து நீநன
வத்தை யன்றுத ரத்திருந்
தறியு மவ்வறி வோம யக்கறி
வாத லாலறி யாதுகாண்.

பதவுரை

அறிவு தான் உடலத்தின் வேறு அதுவாய் இறந்து பிறந்திடின் அறிவு முன்பு உளது இங்கு வந்தும் அறிந்திடாமையது இன்று எனின்	அறிவானது இவ்வுடலத்தின் வேறுபட்டு இறந்தும் பிறந்தும் திரியுமாயின் அவ்வறிவு முன்பு உள்ள தாயின் இப்பிறப்பிலும் அறியாமையின்றி அறிவேயாய் இருக்க வேண்டும். அஃது இல்லையே என்று நீ கூறின்
அறிவையோகனவைத்து நீ நனவத்தை	நீ கனவு காணுமிடத்து அக்கனவை நனவு என்பதன்றிக் கனவு என்பது அறிதியோ? அஃதன்றியும்
அன்று உதரத்து இருந்து அறியும் அவ்வறிவோ மயக்க அறிவு	நீ மாதா உதரத்தில் முந்து அறிந்த அறிவோ பூததேகமான பின்பு மயங்கின அறிவு
ஆதலால் அறியாது காண்	ஆகையால் இறந்தும் பிறந்தும் திரிகையால் ஆன்மாவுக்கு அறியாமையே குணம் காண் என்றவாறு

விளக்கவுரை

இச்செய்யுள் 'ஆன்மா அறிவாகில் எப்பொழுதும் அறிய வேண்டும்' என்பதனை மறுத்து 'ஆன்மாவுக்கு அறிவும் அறியாமையும் குணம்' எனக் கூறிற்று. *(21)*

செய்யுள் - 53

இறந்தி டும்மறி வேயி றந்திடும்
என்ப திங்கிசை யாதெனின்
உறங்கி டும்பொழு தின்றி நின்றுணர்
விங்கு தித்திடு மாறதோர்
பிறந்த விவ்வுடல் போக வேறுடல்
பின்பு வந்தமை பேசிடின்
மறந்தி டுங்கன வத்தின் வேறுடல்
வந்த வாறு மதித்திடே.

பதவுரை

இறந்திடும் அறிவே பிறந்திடும் என்பது இங்கு இசையாது எனின்	இறந்த அறிவே பிறக்கும் என்று இவ்விடத்துக் கூறியது பொருத்தமுடைத்தன்று என்று நீ கூறின்
உறங்கிடும்போது இன்றி நின்று உணர்வு இங்கு உதித்திடுமாறு அது ஓர்	நீ துயில் செய்யுமிடத்து முகத்திற்பாம்பு ஏறவும் அறிவின்றிக் கிடந்து விழித்தவிடத்து உணர்வில் நின்று பாம்பைக் காணவும் பயப்படுமாறு விசாரிப்பாயாக
பிறந்த இவ்வுடல்போக வேறு உடல் பின்பு வந்தமை பேசிடின்	இப்போது எடுத்துக்கொண்ட காயம் கெட்டால் பின்பு மற்றொரு காயம் உண்டாம்படி எப்படி? என்று சொல்லின்
மறந்திடும் கனவத்தின் வேறு உடல் வந்த ஆறு மதித்திடே	நனவை மறந்திடும் கனவில் உன்னை எடுத்துக் கொண்டு திரியும் உடல் உன்னைக் கூடியவாறு எத்தன்மை அத்தன்மையாக என்று அறிவாயாக என்றவாறு

விளக்கவுரை

இச்செய்யுள் 'இறந்த அறிவு பிறவாது' என்னும் அதனையும், 'முன்பு உள்ள சூக்கும தேகம் வந்து பின்பு உடல் ஆகாது' என்பதனையும் மறுத்துக் கூறிற்று.

அன்றியும், ஒரு பிறப்பில் வைத்த பொருளைப் பிறிதொரு பிறப்பில் சாத்திரப் பிரமாணத்தால் அறிந்து காட்டுதலும், பிசாசாதி சனனமரண காலத்து விருத்தாந்தத்தை அடுத்தவர்க்கு அறிவித்தல் உளவாகவும் காணா நின்றாய் இதனை அறிவாயாக என்க. (22)

செய்யுள் - 54

கரணம் வாயு விடத்த டங்க
அடங்கி வந்தெழு காரியம்
மரண மான விடத்து மற்றிவை
மாய்ந்து பின்பு வருஞ்செயல்
கிரண மார்கலை கெட்டு திப்ப
இறப்பி னோடு பிறப்பையும்
தரணி யோர்கண் மதிக்கு ரைப்பர்
உயிர்க்கு மிப்படி சாற்றினே.

பதவுரை

கரணம் வாயு இடத்து அடங்க அடங்கி வந்து எழு காரியம் மரணம் ஆன இடத்து மற்று இவை மாய்ந்து பின்பு வரும் செயல்	ஒருவன் மரணமான இடத்து இந்திரியங்கள் கெட்டுப் பின்பு அவை வரும் முறைமைப்பாடு எத்தன்மைத்து? என்னில் ஒருவன் மூர்ச்சித்த விடத்து அக்கரணங்கள் சேட்டைப் பட்டாற் போலும்; இஃதன்றியும்
கிரணம் ஆர் கலை கெட்டு உதிப்ப இறப்பினோடு பிறப்பையும் தரணியோர்கள் மதிக்கு உரைப்பர்	மதியினது கிரணம் பொருந்தின கலைகள் தன்னிடத்துக் கெட்டும் தோன்றியும் உலகத்துள்ளோர் அதனை மதிக்கும் இறப்பும் பிறப்புமாகக் கூறி நிற்பார்கள்; அதுபோல
உயிர்க்கும் இப்படி சாற்றிடு ஏ	ஆன்மாவுக்கும் இப்படிக் கூறுவாயாக என்றவாறு

விளக்கவுரை

இச்செய்யுள், 'ஆன்மாவினுடைய தூல காயத்தினுள்ள கரணங்கள் சூக்கும காயத்திலும் பொருந்தும்' என்பதும், 'ஆன்மா நித்தியம்' என்பதும் கூறிற்று.

காணொணா கரணங்களுக்கென்னும் செய்யுள் முதல் இச்செய்யுள்காறும் மீளவும் 'ஆன்மா இல்லை என்றும், ஆன்மாவுக்கு அறிவில்லை' என்றும், 'இறந்த அறிவு பிறவாது' என்றும், கூறுவதனை மறுத்துக் கூறியதாம். இதனால் 'வாயு இயங்காத காலத்துக் கரணம் இயங்காது' எனக்கொள்க. (23)

செய்யுள் - 55

பூத மானவை காரி யங்கள்
பொலிந்து மன்னி யழிந்திடும்
ஆத லாலொரு நாத னிங்குளன்
என்ற றிந்துகொ ளையனே
பேத மான கடாதி மண்ணினில்
வந்த வாறு பிடித்திடிற்
கோதி லாத குலால னால்வரு
செய்கை யென்று குறிப்பரே.

பதவுரை

பூதம் ஆனவை காரியங்கள் பொலிந்து மன்னி அழிந்திடும் ஆதலால் ஒரு நாதன் இங்கு உளன் என்று அறிந்துகொள் ஐயனே	நீ கூறிய பூதங்கள் காரியப்பட்டுப் பொலிவினையுடைத்தாய்ப் புகிப்பளவும் நிலைபெற்று மீளவும் அழியாநிற்கும்; ஆதலால் இதனை ஆக்கியும் அழித்தும் செய்வான் ஒரு கர்த்தா உண்டு என்று அறிவாயாக.
பேதம் ஆன கடாதி மண்ணில் வந்த ஆறு பிடித்திடில்	மண்ணினிடத்துக் கடாதி பேதம் வந்தாற் போலப் பூதகாரியமே காயம் என்னில்
கோது இலாத குலாலனால் வருசெய்கை என்று குறிப்பர் ஏ	அம்மண்ணும் குற்றமில்லாத குலாலனது செய்கையால் காரியப்பட்டாற்போலக் கர்த்தாவினுடைய செய்கையால் பூதமும் காரியப்பட்டது என்று அறிவாயாக என்றவாறு

விளக்கவுரை

ஐயனே என்றது இழிவின்கண் வந்தது.

அறிவில்லாத மண்ணும் அறிவுடையவனாகிய குலாலனாலே காரியப்படுமாறு போல, உலகம் ஈசுரனாலே காரியப்படும் என்று அறிவாயாக என்க. (24)

செய்யுள் - 56

வேத னாரண னார ணம்மறி
யாவி ழுப்பொருள் பேதைபால்
தூத னாயிரு கான டந்திடு
தோழன் வன்மைசெய் தொண்டனுக்
காத லாலடி யார்க ளுக்கெளி
யான டிக்கம லங்கணீ
காத லாலணை யீண்டன் வேண்டின
இம்மை யேதருங் கண்டிடே.

பதவுரை

வேதன் நாரணன் ஆரணம் அறியா விழுப்பொருள்	பிரமாவும், விட்டுணுவும், இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் என்னும் நான்கு வேதமும் அறிதற்கு அரியதாகிய விழுமிய பொருள்
பேதைபால் தூதன் ஆய் இருகால் நடந்திடு தோழன் வன்மைசெய் தொண்டனுக்கு	வலிந்து ஆட்கொண்ட சுந்தரமூர்த்தி நாயனாருக்குத் தூதனாய்ப் பரவை நாச்சியாரிடத்து இரவின்கண் இருகால் நடந்த துணைவன்
ஆதலால் அடியார்களுக்கு எளியான்	அப்படிப் பிரம விட்டுணுக்களுக்கு அரியன் ஆயினும் அடியார்களுக்கு எளியனாய் எண்ணியவை இம்மையிலே கொடுக்கத் தக்கவன் ஆகையால்.
அடிக்கமலங்கள் நீ காதலால் அணை	அவன் சிபாத கமலங்களை நீ விருப்பத்தோடும் வழிபடுவாயாக
ஈண்டன் வேண்டின இம்மையே தரும் கண்டிடு ஏ	விரும்பிய போகத்தையும் இம்மையிலே தருவன் ஆதலால் அவனை மெய்யாகக் காண்பாயாக என்றவாறு

விளக்கவுரை

வன்மை செய் தொண்டன் என்பதனைக் கர்த்தாவை ஏவல் கொள்ளும் தொண்டன் எனினும் அமையும்.

'பூதமானவை' என்னும் செய்யுளும், இச்செய்யுளும் பூதங்களைக் கூட்டிப் போக மோட்சங்களைக் கொடுப்பன் கர்த்தா என்பது கூறின.

இதனால், வேண்டும் விடயமும், பத்திபண்ணுவையாகில் இம்மையினும் அநுபவிப்பை. கடுகெனச் சிவனை வழிபடுக என்பதும் உணர்த்தப்பட்டது. (25)

செய்யுள் - 57

பொன்கு லாவு மணிக்க லன்கள்
மலம்பு கிற்கை பொருந்திடா
மின்கு லாமிடை யார்க டாமுல
கத்தின் வேட்கை விடும்பொருள்
புன்பு லான்மல மூத்தி ராதி
பொசிந்து நாறு புலைக்கலம்
என்கொ லாமிவர் மேல்வி ழுந்த
திவற்றி னென்பெற வெண்ணியே.

பதவுரை

பொன் குலாவு மணி கலன்கள் மலம் புகில் கை பொருந்திடா	பொன்னால் விளங்கப்படா நின்ற மணிகள் அழுத்திய அணிகள் மலத்திடை விழுந்தால் அம்மலத்தின் அசுத்தத்தால் கையால் எடுத்தல் பொருந்தாது
மின் குலாம் இடையார்கள் தாம் உலகத்தின் வேட்கை விடும் பொருள் (அதுபோல)	உலகத்து மின்போல நுடங்கின இடையை யுடைய மகளிர் பால் மிக்க விருப்பமும் செயற்கை மணம் நீங்கினால் உண்டாகிய அசுத்த மிகுதி கண்டு ஆசையை விடத்தக்க பொருளாம். அஃது என்போல? என்னில்
புன் புலால் மலம் மூத்திராதி பொசிந்து நாறு புலைக் கலம்	புல்லிதாய இரத்தம் மலம் மூத்திராதிகள் முதலானவை கசிந்துமிகவும் துர்க்கந்தத்தை யுடைத்தாகிய பொல்லாக்காயம் ஆகையால்,
என்கொலாம் இவர் மேல் விழுந்தது இவற்றின் என்பெற எண்ணி ஏ	இம்மல மூத்திராதிகளில் என்ன பெறுதற்கு விசாரித்து இவர்களிடத்து விருப்பம் உண்டாயது. அஃது அல்லவாயின் யாது உண்டாம் என்றவாறு

விளக்கவுரை

உடம்பும் இரத்தம், மலம், சிறுநீர் என்பவை நிறைந்த கசியும் பாண்டம் போன்றதே. அவைகளில் விழுந்து, கிடந்து முழுகி எழுவது என்ன பெற எண்ணியோ? ஆதலின் அதனை நீங்குவதே அறிவுடைமையாம். (26)

செய்யுள் - 58

தோலி ரத்த மிறைச்சி மேதை
எலும்பு மச்சை சுவேதநீ
ராலெ டுத்த முடைக்கு ரம்பை
யழுக்கி னோடு புழுக்குழாம்
நூலொ ழுக்கிடு கோழை யீரல்
நுரைக்கு மூத்திர பாத்திரம்
சேல டர்த்தகண் ணார்க ளென்பது
தேர்ம லத்திர டிண்ணமே.

பதவுரை

தோல் இரத்தம் இறைச்சி மேதை எலும்பு மச்சை சுவேத நீரால் எடுத்த முடைக் குரம்பை	துவக்கு உதிரம் மாம்சம் மேதை அத்தி மச்சை சுக்கிலசலம் இவையிற்றினாலே எடுத்துக் கொண்ட துர்க்கந்தமாகிய காயம்
அழுக்கினோடு புழுக்குழாம் நூல் ஒழுக்கிடு கோழை ஈரல் நுரைக்கும் மூத்திரபாத்திரம்	அன்றியும், ஊத்தையுடன் கிருமித்திரள் நூலொழுகும் கோழை ஈரல் இவைகளால் பொங்கிய மூத்திர பாண்டம் ஆதலால் அப்படிப்பட்ட காயத்தையுடைய மகளிர்
சேல் அடர்த்த கண்ணார்கள் என்பது தேர் மலத்திரள் திண்ணம் ஏ	சேல் இரண்டு அடுத்தாற் போலும் கண்ணையுடையார் என்று சொல்லுவது எத்தால் என்று விசாரிப்பாயாக. விசாரிக்கு மிடத்துச் சர்வமும் நிச்சயமாக மலத்தொகுதியாம் என்றவாறு

விளக்கவுரை

'பொன்குலாவும்' என்னும் செய்யுளும் இச் செய்யுளும் பெண் போகத்தை மெய் என்பதனை மறுத்துக் கூறின. *(27)*

செய்யுள் - 59

ஆசை யுற்றுழல் சூக ரங்கள்
அசுத்த மேவி யளைந்துதின்
றேசு கித்தன வாயி டுஞ்சுகம்
ஏழை யோடுறு மின்பநீ

மாச தற்றொளிர் நித்த சுத்த
வளந்த ருஞ்சுக வாரிகாண்
ஈச னுக்கடி மைத்தி றத்தின்
இசைந்து நாம்பெறு மின்பமே.

பதவுரை

ஆசை உற்று உழல் சூகரங்கள் அசுத்தம்மேவி அளைந்து தின்றே சுகித்தன ஆயிடும் சுகம் ஏழையோடு உறும் இன்பம் நீ	அறிவில் மகளிரோடு நீ இன்பசுகம் உறுவது ஆசை மிகுத்துத் தடுமாறும் பன்றிகள் மலத்திற் புக்கு, அதனைப் புசித்து, அதனிற் புரண்டு, மிகவும் சுகத்தை அடைந்தனவாய் நிற்பன போலும்; அங்ஙனமன்றியும்,
மாசு அது அற்று ஒளிர் நித்த சுத்த வளம்தரும் சுக வாரி காண் ஈசனுக்கு அடிமைத் திறத்தின் இசைந்து நாம் பெறும் இன்பம் ஏ	கர்த்தாவுக்கு அடிமைத்திறம் செய்து யாங்கள் பெறும் இன்பமாவது குற்றமற்று விளங்கும் படியாய் அழியாததாய் நின்மலமாய் இருக்கும் சிறப்பினை யுடைத்தாகிய இன்பசமுத்திரம் காண் என்றவாறு

விளக்கவுரை

மகளிர் சிற்றின்பத்தைக் கைவிட்டுச் சிவப்பரம் பொருளுக்கு அடிமை செய்யின் பேரின்பம் பெறலாம் என்றுணர்ந்து அக்கொள்கையைப் பின்பற்றுவோமாக. *(28)*

செய்யுள் - 60

குரோத மேகுண மாயி ருந்தவர்
சாந்தி நன்மை குறிக்கொளார்
அராக மேயணை வார்க ளாசை
அறுத்த வின்ப மறிந்திடார்
பராவு தேவர் பராவு தூய
பராப ரன்னடி பற்றிநீ
விராவு மெய்யில் விடாத வின்பம்
விளைந்தி டும்மிது மெய்ம்மையே.

பதவுரை

குரோதமே குணமாய் இருந்தவர் சாந்தி நன்மை குறி கொளார்	கோபமிகுதியை இயல்பாகவுடையார் பொறையினால் உண்டாகிய நன்மையை அறியமாட்டார்

அராகமே அணைவார்கள் ஆசை அறுத்த இன்பம் அறிந்திடார்	ஆசையே தமக்குக் குணமாக உடையவர்கள் அவ்வாசையை அறுத்தவர்களுக்கு உண்டாகிய சுகத்தை அறியமாட்டார்கள். அவர்களைப் போல, நீயும் சிற்றின்பமாகிய அரிவையர் போகத்தைக் கைக்கொண்டு பேரின்பமாகிய பிரமானந்தத்தை அறியாய், அஃது அறிய விரும்பின்,
பராவு தேவர் பராவு தூய பராபரன் அடிபற்றி நீ விராவுமெய்யில் விடாத இன்பம் விளைந்திடும் இது மெய்ம்மையே	இந்திராதி தேவர்களாற் பரவப்பட்ட பிரம விட்டுணுக்களால் போற்றி செய்யப்படும் சுத்தமான பரைக்கு மேலானவனது திருப்பாதங்களைப் பற்றுக்கோடாகக் கொள்வாயாக. அதனால் அப்பொழுதே உன்னுடைய உடலிலும், உள்ளத்திலும் ஒருக்காலும் நீங்காத சுகானந்தம் பிரகாசிக்கும். இது சத்தியம் என்றவாறு.

விளக்கவுரை

பராவு விராவு என்ற சொல் நீட்டும்வழி நீட்டல் என்க. *(29)*

செய்யுள் - 61

காம மாதி குணங்க ளைச்சுகம்
என்று கொண்டனை காதலால்
தூம மாரழ லங்கி சீத
மலிந்த போது சுகந்தரும்
நாம மார்தரு சீதம் வெம்மை
நலிந்த போது தருஞ்சுகம்
சேம மாகிய வின்ப மாமிகு
தெய்வ நன்னெறி சேரவே.

பதவுரை

காமம் ஆதி குணங்களை சுகம் என்று கொண்டனை	காமக் குரோத லோப மோக மத மாற்சரியம் இடம்பம் அகங்காரம் என்கின்ற இவை யிற்றைச் சுகமென்று கொண்டாய், அஃது எத்தன்மை? எனில்

காதலால் தூமம் ஆர் அழல் அங்கி சீதம் மலிந்த போது சுகம் தரும்	குளிர்மிக்க காலத்து வெப்பவிருப்பத்தால் புகைபொருந்தின அழல்கின்ற அக்கினி சுகத்தைத் தருவது போலவும்
நாமம் ஆர் தரு சீதம்வெம்மை நலிந்தபோது தரும் சுகம்	வெப்பம் மிகுந்த விடத்துப் புனல் என்று பெயரையுடைய நீரின் குளிர்ச்சியை அடைந்த போது சுகத்தைத் தருவது போலவும் ஆம், காமமாதிகளால் உண்டாகிய சுகம், இஃதன்றி,
சேமம் ஆகிய இன்பம் ஆம் மிகு தெய்வநல்நெறி சேரவே	கர்த்தாவினுடைய ஞான மார்க்கத்திலே கூடினால் ஒருக்காலும் விடாத இன்பம் உண்டாம்; ஆதலால் அதனோடு கூடுவாயாக என்றவாறு.

விளக்கவுரை

காமமாதி என்றதனால், காமச்சுகம் இருவகைத்து; அவை சாங்கம், உபாங்கம் என்பன. சாங்கமாவது - ஆலிங்கனமும், முத்தமும், மிடற்றினால் உண்டாம் ஒலிபேதங்களும், நகக்குறிகளும், பல்லிடு குறியும், அங்கதாடனமும், சும்பனம் முதலிய இவை போல்வன. உபாங்கமாவது - அன்னம், வஸ்திரம், பூஷணம், சந்தனம், தாம்பூலம் முதலியன. *(30)*

செய்யுள் - 62

படிக்கு நூல்கள் சிவாக மம்பசு
பாச மோடு பதித்திறம்
எடுத்தி யம்புவ தீசன் வார்கழல்
ஏத்தி டுந்தொழி லென்றுமே
விடுத்தி டும்பொருள் காம மாதிகள்
வேண்டி டும்பொரு ளீண்டருள்
முடித்து மும்மலம் விட்டு நின்மல
னோடு நின்றிடல் முத்தியே.

பதவுரை

படிக்கும் நூல்கள் சிவாகமம்	சிவநெறியாகிய பேரின்பம் எய்துவோர் படிக்கும் நூல்களாவன வேதசிவாகமங்கள்
பசு, பாசமோடு பதி திறம் எடுத்து இயம்புவது	அவர்கள் எடுத்துச்சொல்லும் சொல்லாவன பதி பசு பாசத்திறங்கள்

ஈசன் வார் கழல் ஏத்திடும் தொழில்	அவர்கள் கிரியையாவன பரமேசுவரனுடைய திருப்பாதங்களை வணங்குகை
என்றுமே விடுத்திடும் பொருள் காமம் ஆதிகள்	எப்போதும் அவர்கள் கைவிடும் பொருளாவன காமக் குரோதம் முதலானவை
வேண்டிடும் பொருள் ஈண்டு அருள்	அவர்கள் வேண்டும் பொருளாவது மிக்க அருள்
முடித்து	ஆகையால் இப்படி மூன்று பதார்த்தத்தையும் முற்றுப்பெற நிறுத்தி
மும்மலம் விட்டு நின்மலனோடு நின்றிடல் முத்தி ஏ	மலத்திரயங்களையும் விட்டுக் கர்த்தாவோடு கூடுதல் முத்தியின்பம், ஆதலால் நீயும் இச்செயலிலே நிற்பாயாக என்றவாறு

விளக்கவுரை

இதனுள் நாலு பாதமும் அடங்கியவாறு கண்டுகொள்க.

'ஆசையுற்றுழல்' என்னும் செய்யுள் முதல் இச்செய்யுள்காறும் உலகாயதனை நிராகரித்துப் 'பேரின்பத்தை அநுபவி' என்று கூறிற்று.

'உள்ளதாவது' என்னும் செய்யுள் முதல் இச்செய்யுள் காறும் செய்யுள் முப்பத்தொன்றினாலும் உலகாயதன் மதத்தை மறுத்துக் கூறியது.

பிருகஸ்பதி இந்திரனை மயக்கிய வழியை நீக்கிப் பரமேசுவரனை வழிபடுவாய் என்பது கருத்து.

உலகாயதர் மிச்சிர சார்வாகர், இரணிய கர்ப்ப சார்வாகர் என்று இருதிறத்தர் என்க. (31)

உலகாயதன் மதமறுதலை முற்றிற்று.

பாயிரம் உள்பட ஆகத்திருவிருத்தம் – 63.

உலகாயதன் மறுப்புத் தொகுப்பு

இம்மத மறுப்பு சிவஞான சித்தியார் பரபக்கத்தில் முப்பத்தொரு பாடல்களில் கூறப்படுகிறது.

1) அளவை - மறுப்பு :

இந்திய தத்துவங்களில் உரையளவையை மறுத்த மதங்களும் சில உள்ளன. ஆனால் இவ்வுலகாயதமோ கருதலளவையையும் மறுத்துரைக்கிறது. இவ்விதம் காட்சி அளவை மட்டுமே கொண்டு கருதல், உரைஅளவைகளை மறுத்துரைப்பது பொருத்தமானதன்று. ஒருவன் சிறுவயதில் தாய் தந்தையை இழக்கிறான். இளமை நீங்கி அறிவு பெற்றபின் தனக்கும் தாய் தந்தையர் உண்டென்பதை உணருகிறான். கருதலளவையாலேயே இவ்வுண்மை உணரப்படுகிறது. இக்கருத்தினை மணிமேகலை உலகாயதர் என்று அழைக்கப்படும் பூதவாதியைப் பார்த்து,

..... 'நின்
தந்தை தாயரையனு மானத் தாலலது
இந்த ஞாலத் தெவ்வகை யறிவாய்'

என்று கேட்கிறாள். இதனால் கருதலளவையின் இன்றியமையாமையை உணர முடிகிறது.

2) மேகம் முழங்கி, மின்னி, இருண்டு எழுந்த இடத்து இதனால் மழைபெய்யு மென்று கருதுவர். ஆறானது அகில், சந்தனம் முதலியவற்றை அலைத்துக் கொண்டு வந்திட அதனைக் கண்டு பெரியமலையின் கண் மழை பெய்தது என்று கருதுவர். இவ்வாறெல்லாம் கருதுவது கருதலளவையன்றிப் பிறிதில்லை.

3) கருதலும் காட்சியுள் அடங்கும். இவ்வுடம்பாகிய பூதக் கூட்டத்தினுள் அறிவு எழுமென்று கூறியது கருதலேயன்றிக் காட்சியன்று. பூதங்களாலாய உருவுகளைக் காணுகின்றோமே ஒழியக் காரண நிலையாய தனிநிலையிலுள்ள பூதங்களைக் காணுவது இல்லை. ஆதலால் உலகாயதர் கொள்கைக்குக் கருதலளவையும் துணைநிற்கிறது.

4) உரையளவையின் தேவையும் வேண்டப்படுகிறது. குற்றமற்ற வேதங்கள் குற்றமின்றிச் சொல்வனஉள. அவை யாவை எனில் சோதிடநூலோர் எதிர்காலத்து நிகழ்வதைத் தவறாமல் முன்கூட்டியே கூறுகின்றனர். பின்பு அதுவும் அழிவில்லாது நடப்பதைக் காண்கிறோம். அதுவன்றிச் சில நூல் அளவையால் பூமியில் மறைந்து கிடக்கும் பொருள்களையும் அகழ்ந் தெடுக்கின்றோம். இவை உரையளவையின் பாற்பட்டதேயாகும்.

இறைவன் உளன்

1) பூதம் நான்கும் அழியாத்தன்மைத் தென்பர் உலகாயதர். பூதக் கூட்டத்து உருத்தோன்றலும், கெடுதலும் ஏற்படுதலால் இவற்றை ஆக்குவான் ஒருவன் உண்டு. அஃது எது போன்றதெனின் குடம் முதலிய பொருள்கள் செய்தற்கு ஒருவன் வேண்டப்படுதல் போன்ற தன்மையதாம்.

2) நீரில் தோன்றுங் குமிழி நீராகும். அதுபோல, பூதங்களிலிருந்து தோன்றுவதும் பூதமேயாகும்; அறிவாகாது. அன்றியும் சுண்ணாம்பும் அடைக்காயும், வெற்றிலையும் கலந்தவிடத்துச் சிவப்புண்டாமாறு போலப் பூதக் கூட்டத்தில் அறிவு எழுமென்பர். சிவப்பு நிறம் எவ்வாறு மாறுபடாதோ அதுபோல அறிவும் உடலை விட்டு நீங்காதிருக்க வேண்டும். ஆனால் உடல்கிடக்க அறிவு நீங்குவது அவர் கருத்துக்கு மாறாகிறது. அன்றியும் மூன்றும் சேர்ந்தவிடத்துச் சிவப்பு என்னும் ஒருதன்மையே காணப்படுவது போல, உடலிடத்தும் ஒரு தன்மை தோன்றாது புலனென்றும், பொறியென்றும், குணங்களென்றும் தனித்தனியே பல தன்மைகள் காணப்படுகின்றன. அன்றியும் இம்மூன்றையும் சிவப்பேறக்கூட்ட ஒருவன் வேண்டுவது போலப் பூதக் கூட்டிற்கும் ஒருவன் உறுதியாக வேண்டும் என்பது தெளிவாகிறது.

3) சிலந்தியிடத்து நூல் தோன்றுவது போல உடம்பில் முன்பில்லாதவையான ஐம்பொறி, உணவு, துயில், பயம், சிற்றின்பம் முதலிய செயல்களும், உடம்பின் குணங்களாக இப்போது உண்டாம் என்று சொன்னால், மாதர், ஆண், அலி என்ற மானுடர் முதலாயினாரும் ஆகாயத்தினின்றும் தோன்றல் வேண்டும். பூதக் கூட்டம் ஒரு தன்மையாகலான் மிருகம், பசு, பறவை முதலாகிய பிறப்பு வகையும் இல்லையாக வேண்டும். ஆகையால் அவர்கள் கூறும் கருத்துப் பொருத்தமின்றாம்.

4) எனவே இறைவன் ஒருவனே பூதக் கூட்டிற்கும் உயிரது வாழ்விற்கும் காரணமாவன். அவன் வலிந்து ஆட்கொண்ட சுந்தரர்க்குத் தூதனாய்ப் பரவையாரிடத்தே நடந்த துணைவனானான். அத்தகையோன் அரியயனுக்கு அரியனாய், அடியார்க்கு எளியனாய் இம்மையிலே எண்ணியதை எண்ணி யாங்குக் கொடுக்கத் தக்கவன். இத்தகையோனை மணிவாசகர்,

"வானொர்க்கரிய மருந்தே போற்றி
ஏனோர்க் கெளிய இறைவா போற்றி"[1]

எனப் புகழ்ந்துரைப்பர். அப்பரடிகளும்,

"வேண்டுவார் வேண்டுவதே ஈவான் கண்டாய்"[2]

என்பர்.

---

1. திருவாசகம், போற்றித்திருவகவல், அடி 116-117.
2. ஆறாந்திருமுறை, பாடல் - 232.

வினை உண்டு

1) வினை இல்லை என்றால் பிறப்பு வகையும், உடற்பொறிகளும், ஐந்து, நான்கு, மூன்று, இரண்டு, ஒன்று என்னும் அறிவுகளும் இல்லையாகும். வினையாலன்றிப் புந்தியால் அறியும் அக்கரங்களும், புசிப்புக்களும், குணபேதங்களும் பூதக் கூட்டம் தாராது.

2) உடலாக உருக்கொள்ளச்செய்ய வினைக்கு அறிவில்லை; அவை பூத இயல்பே என்பர். அங்ஙனமாயின் இயல்பு ஒருதன்மைத்தே யன்றிப் பெண், ஆண் எனும் இரு தன்மைத்தாகாது. எனவே கன்மத்துக் கிடாக ஒருவன் உண்டாக்கிய தன்மையில் தான் உருக்கள் வேறுபட்டு வருகின்றன.

3) பூதச் சேர்க்கையே ஆண், பெண்ணிற்குக் காரணமாயின் காதலர் இருவர் சேர்க்கையால் அவை உருப்பெறுவானேன்? அவ் ஆண், பெண்ணிற்கும் பூதச் சேர்க்கையே காரணமெனின் பூதங்கள் தாமே கூடி ஆணையும் பெண்ணையும் படைத்தலைப் பார்த்தவர் யார்? எனவே இறைவனும் இறைவியும் இயைந்து நிற்பதாலேயே உயிர்களும் ஆணும் பெண்ணுமாய் இயைந்து இன்புறுகின்றன என்பது கருதத்தக்கதாம். இதுவன்றிப் பூதப் புணர்ப்புக் காரணம் இல்லை.

4) நீர் சந்தனத்தையும், தழலையும் சார இரண்டு தன்மை பெறுகிறது. அதுபோல வினையும் இருவகைப்பட இன்ப துன்பங்களைத் தருகிறது. அந்த இன்ப துன்பங்களை உயிர் நுகருமே யன்றி உடல் நுகராது.

5) மகளிர் இன்பமும் வினையால் இல்லையென்று கூறுவர். மகளிரைக் கூடி இன்பமும், அவரை நீங்கித் துன்பமும் நுகர்வது முன்செய்த புண்ணிய பாவங்களாலே யாம். அவையும் தாமாக அணையாது. முதல்வனானவன் அவை செய்த கன்மத்துக்கிடாக அறிந்து அருள்பாலிப்பன். இதனைக்

> "கன்மத்துக்(கு) ஈடாய்க் கறங்கும் சகடமும் போற்
> சென்மித்(து) உழலத் திரோதித்து - வெந்நிரய
> சொர்க்காதி போக மெலாம் துய்ப்பித்து"[1]

எனவரும் கந்தர் கலிவெண்பாப் பகுதியும் மெய்ப்பிக்கும்.

6) வினையை உயிர்கள் செய்ய அந்தவினை தானாக உயிர்க்கு உருவத்தைக் கொடுக்காது. உடல் அறிவற்றது. ஆகையால் அவ்வுடல் உயிரை அறிந்து கூடமாட்டாது. எனவே அநாதியாகிய இறைவன் உயிரது. வினைக்குப் பொருந்தின உருவைக் கூட்டுவிப்பன்.

---

1. கந்தர் கலிவெண்பா, கண்ணி 16-17.

பூதங்கள் அறிவற்றன

1) உலகாயதர் பூதங்களே அறிவுடையன என்பர். அவ்விதம் கொண்டால் மண்ணிலும், நீரிலும், நெருப்பிலும், காற்றிலும் அறிவு காணப்படவேண்டும். அவ்வாறில்லை. அக்கூட்டாலாய உடலில்தான் அறிவு தோன்றும் என்று கூறினால், உயிர் இறந்த காலத்து அறிவினைக் கண்டதில்லை. பின்னும் உடலில் காற்றுப் பிரிந்தவாறே அறிவு பிரியும் என்றாலும், அந்தக் காற்றானது உறக்கத்திலே பிரியாது நிற்கிறது. அந்நிலையாலும் உயிர் அறிவதில்லை. எனவே பூதக் கூட்டத்திடத்து அறிவு தோன்றாது.

2) உடற்குணமே அறிவென்பர். அங்ஙனம் கூறில் ஆனை முதல் எறும் பீறாகக் காணப்படும். உடலில், பெரிய உடலில் பெரிய அறிவும், சிறிய உடலில் சிறிய அறிவும் தோன்ற வேண்டும். அங்ஙனமின்றி வளர்ச்சியுடைய யானை உடற்கு அறிவு சிறிதாயும், சிறிய உடலை உடைய மானுடற்கு அறிவு பெரிதாயு மிருக்கிறது. எனவே அறிவு உடற்குணமன்று.

3) பூதமானவை கூடுங்காலத்து ஒரோவொரு பூதமிகுதிப் பட்டால் பெரிய உடம்பும், பூதக்குறைவு பாட்டால் சிறிய உடம்பும் உண்டாகின்றன என்றால், பெரிதான உடல் பெரிதாகவும், சிறிதான உடல் சிறிதாகவும் முன்னுள்ள முறைப்பாட்டில் நிற்க வேண்டும். அங்ஙனமில்லாது காலஞ்செல்லச் செல்ல பெரியவுடல் சிறிதாயும், சிறிய உடல் பெரிதாயும் மாறுதலால் பூதக் கூட்டத்தில் அறிவு தோன்றுவதில்லை. வினைக்கீடாகவே அறிவு தோன்றுகிறது என்பது புலனாகும்.

உயிர் உண்டு

1) புறக் காரணங்களால் உயிரைக் காண முடியாது. ஆகையால் உயிர் இல்லை என்பர். உடலானது தன்னைக் கண்ட கண்ணைக் காண முடியாது. ஆனால் அவ்வுடலைக் கண்டு நிற்பது கண்ணுக்குத் தொழிலாகும். அது போன்றதே உயிருமாகும். உயிர் அறிவுள்ளது ஆகையால் பொறிகளைக் கண்டு நிற்கும். பொறிகளோ அறிவில்லாதனவாதலால் அவ்வுயிரைக் காணமாட்டா. மேலும் நெருப்பானது ஒன்றைச் சார்ந்து தன் வடிவைக் காட்டுமே யன்றி அதற்கென வடிவம் கிடையாது. அதுபோல உயிரும் ஒருருவைக் கூடியன்றி நிற்கமாட்டாது. தகளியெங்கும் நிறைந்த எண்ணெயை உண்டு விளக்கு எரிவது போல வினையை எடுத்துக் கொண்ட உடம்பினின்றும் வினையை நுகர்வது உயிராகும்.

2) இறந்திடுமறிவே பிறந்திடும் என்பது எவ்வாறு எனில் துயிலுமுன் உள்ள

அறிவே துயின்ற போது மறைந்திருந்து பின் விழித்தவிடத்துப் புலனாவது போலாம். மேலும் பொறிகள் இறந்தவிடத்து மறைந்து, பின் தோன்றுவது எத்தன்மைத் தெனின்? மூர்ச்சித்தவிடத்துச் செயலிழந்து பின் மூர்ச்சி தெளிந்தவிடத்துச் செயலாற்றுவது போலாகும். இஃதன்றியும் மதியானது தேய்ந்து பின் நாள்தொறும் ஒவ்வொரு கலையாய் வளர்ந்துவருதலையும் இதற்கு எடுத்துக்காட்டுவர்.

மகளிர் இன்பம் இன்பமன்று

1) பொன்னால் விளங்கும் மணிகள் பொருந்திய அணிகள் மலத்திடை விழுந்தால் அதனைக் கையால் எடுத்தல் பொருத்தமன்று. அது போன்று இவ்வுலகத்து மின்போலும் இடையுடைய மகளிர்பால் கொள்ளும் விருப்பமும், அவரிடத்துளதாய செயற்கை மணம் நீங்கினால் அவர்தம் தூய்மையின்மை விளங்கும். இதனை மணிமேகலையும்,

"புனைவன நீங்கிற் புலால் புறத்திடுவது"[1]

என்றுரைக்கிறது. மேலும் இவ்வுடலானது புழுக்கனுடைப் புன்குரம்பை யுடையது. அத்தகைய உடலையுடைய மகளிர் சேலிரண்டு கண்ணையுடையார் என்று சொல்வது பொருந்தாது. அனைத்தும் மலத்தொகுதியாம்.

2) இவ்வித மகளிரோடு இன்புறுவது ஆசை மிகுதியால் பன்றிகள் மலத்திற்புக்கு அதனைப் புசித்து அதிலேயே புரண்டு இன்பத்தைப் பெறுதல் போலாகும். இதனைக் கைவிட்டு இறைவனுக்கு அடிமை பூண்டு அதன்வழிப் பெறும் இன்பமே இன்பமாகும்.

3) சினத்தைப் பொருள் என்று கொண்டார் பொறையாலுண்டாகும் நன்மையை அறியமாட்டார். அவாவெனும் துன்பம் உடையார் அவ்வவா அறுத்தலின் இன்பத்தை அறியார். அவர்களைப் போன்றே உலகாயதரும் சிற்றின்பமாகிய மகளிர் போகத்தைக் கொண்டதால் பேரின்பமாகிய சிவநுகர்வை அறியார். அஃதறிய விரும்பின் இந்திரன் முதலிய தேவர்களாலும், அயன் மாலாலும் வணங்கப்படும் இறைவனைப் பற்றினால் ஒருகாலும் நீங்காத இன்பம் கிடைக்கும். மேலும் சிவநெறியில் பேரின்ப மெய்துவோர் படிக்கத்தகும் நூல்களாவன வேதாகமங்கள்: அவை எடுத்தியம்புவன இறை, உயிர், தளை என்பன. அவற்றைப் படிப்போரின் செயலாவது இறைவனுடைய திருவடிகளை வணங்குதல், கைவிடும் பொருளாவன செருக்கு முதலாய

1. மணிமேகலை, பளிக்கறை புக்க காதை, அடி 114.

அறுவகைக் குற்றங்கள். வேண்டும் பொருள் மிக்க அருள். இவ்விதம் மும்மலங்களையும் அகற்றி முதல்வனோடு கூடுவதே வீடுபேற்றின்பம். அத்தகைய முதல்வனும், சிவபெருமானே ஆவர்.

வீழ்ச்சி

இக்கொள்கை பண்டுதொட்டு நிலவி வரினும், இன்றும் அங்கும் இங்குமாக நிலவிவரினும், போதிய வலிமை பெற்று நிற்கவில்லை. காரணம் அறிவுக்குப் புறம்பானதாகவும், மக்களின் பண்பாடு, ஒழுக்கம் ஆகியவற்றின் வளர்ச்சிக்கு ஏதுவாகாமையானும், நீதிநூற் கருத்துக்களுக்குப் புறம்பாகச் செல்வதாலும் விஞ்ஞானிகளில் சிலர் ஏற்பினும் உயர்ந்த விஞ்ஞானிகள் ஏலாமையானும் காலப்போக்கில் வலியிழந்து வருவதாயிற்று.

உலகாயதம் – சைவசித்தாந்தம் ஒப்பீடு

உலகாயதம்	சைவசித்தாந்தம்
1. அளவை: காண்டலளவை மட்டும் கொள்வர்.	காண்டல், கருதல், உரை ஆகிய மூன்றும் கொள்வர்.
2. இறை, தளை: காணப்படும் உலகும் உடலும் தவிர ஏனைய இறை தளை என்பன எல்லாம் இல்லை என்பர்.	காணப்படும் உலகும் உடலும் ஒரு கால எல்லையில் அழிவனவே. ஆனால் இவற்றிற்குக் காரணமான மாயை, ஆணவம், கன்மம் முதலான தளைகளும், இறைவனும் என்றும் உள்பொருள் என்பர்.
3. உயிர்: நான்கு பூதங்களின் கூட்டுறவால் உளதாகும் உணர்வே உயிர் என்பர்.	உயிர் எவற்றின் கூட்டுறவாலும் உருவாயதன்று. அது என்றும் இறையும் தளையும்போல் நிலையானது என்பர்.
4. பூதங்கள் : விண் நீங்கலாக ஏனைய நான்கு பூதங்களுமே உள என்பர்.	விண் முதலிய ஐம்பெரும் பூதங்களும் உள என்பர்.

5. மறுமை, வீடுபேறு : இவை எவையும் இல என்பர்.	துறக்கம், நிரயம் ஆகியவையும், இவற்றிற்கு மேலாயதான வீடுபேறும் உள என்பர்.
6. உறுதிப்பொருள்: இன்பமும் பொருளுமாகிய இரண்டுமே உறுதிப்பொருள் என்பர்.	அறம், பொருள், இன்பம், வீடுபேறு ஆகிய நான்கும் உறுதிப்பொருள் என்பர்.

தவம் என்பதொன்று உளதாயின் அது மகளிர் கொள்ளும் ஊடலைத் தீர்ப்பது ஒன்றுமேயாம். வீடுபேறென்பது ஒன்று உளதாயின் அது மகளிர்பால் கூடும் இன்பம் ஒன்றுமேயாம் என்பர் இவர். இவ்வாறு சைவ சித்தாந்தக் கோட்பாட்டோடு முற்றிலும் வேறுபட்டு நிற்கும் இக்கொள்கையையும் ஒன்றாக எடுத்துக் கொள்வதற்குரிய காரணம், அரசு ஆணையின் வண்ணம் ஒழுக வேண்டும் என்னும் கொள்கையை இவர்களும் கொண்டிருப்பதாலேயாம்.

2. பௌத்த மதம் முன்னுரை

	வகை	புறப்புறச்சமயம். வேதங்களையும் ஆகமங்களையும் ஏற்றுக்கொள்ளாது
1.	தோற்றுவித்தவர்	ஆதி புத்தர். புத்தர் – நிறைந்த ஞானம் உடையவர்.
2.	உத்தேச காலம்	இரண்டு / மூன்றாம் நூற்றாண்டில் மகேந்திரராலும், ஐந்து பௌத்த பிக்குகளாலும் மகத நாட்டின் தலைநகர் பாடலிபுத்திரத்திலிருந்து இங்கு வந்திருக்கலாம். தமிழ் மண்ணுக்குச் சொந்தமானதன்று. வந்தேறிய மதமாகும்.
3.	இம்மதத்தின் மூன்று நிலைகள்	1. புறத்தே காணத்தகும் பொருள்களும் உண்டு – இழிந்த கொள்கை. 2. எந்தப்பொருளைப் பற்றியும் எதுவும் சொல்ல இயலாது – உயர்ந்த கொள்கை. 3. அறிவு ஒன்றே உள்பொருள் – அஃது ஒழிந்த எல்லாம் சூனியம். உயர்ந்த கொள்கை
4.	உட்பிரிவுகள்	அ) ஹீனயானம் – தாழ்ந்த வழி 1) சௌத்திராந்திகம், 2. வைபாடிகம் ஆ) மகாயானம் – உயர்ந்த வழி. 1. யோகாசாரம், 2. மாத்தியமிகம்
5.	தத்துவக் கொள்கைகள்	புத்தர் தெளிவாகக் கூறவில்லை. காலம் என்ற பொருள் இல்லை. எல்லாமே சூனியம். சூனியவாதக் கொள்கைக்கு முதலிடம்
6.	புத்தமத நூல்	பிடகம். பிடகம் என்றால் கூடை என்று பொருள். கூடைகள் அவர்தம் ஏடுகளைக் கொண்டிருந்தன. பிடகம் 3 தொகுதிகளை உடையது. அ) விநயபிடகம், ஆ) சுத்தபிடகம், இ) அவித்தம்ம பிடகம். சுத்த பிடகம் மிகப்பெரியது. புத்தமதக் கொள்கைகள், உரைநடைகள், கதைகள், கவிதைகள் மூலம் விளக்கப்பட்டுள்ளன. வேத வாக்கல்லாத இதை தினமும் ஓதுவர்.

7.	பௌத்த துறவிகளின் நான்கு படி நிலைகள்	1. மகாதேரர் / பெருந்தேரர் / முதுதேரர் - முதல் படியினர். 2. தேரர் - 2,3,4 படிநிலையில் விளங்கிய குருமார்கள் 3. பிக்குகள் / இளந்துறவிகள் 4. இருபதாண்டுக்குக் கீழுள்ள இளம்பிக்குகள் - சாமனேரர்
8.	மும்மணிகள்	புத்தம், தர்மம், சங்கம் என்ற மூன்றும் தலையாய கொள்கைகள். மும்மணிகளும் திரிரத்தினம் என்றழைக்கப்பட்டன. புத்தம் - முதல்வன் தர்மம் - அவன் அருளிய அறங்களான மூவகைப் பிடயங்கள் சங்கம் - பௌத்தர்களின் துறந்தோர் கூட்டம் (இருபாலாரும் உண்டு). பெண்கள் ஆண்கள் வழி வணங்கி நடக்க வேண்டும்
9.	இம்மதம் பற்றிக் குறிப்பிடும் நூல்கள்	சிலப்பதிகாரம், மணிமேகலை, திருமுறைகள், நாலாயிரத் திவ்விய பிரபந்தம், பெரியபுராணம், நீலகேசி
10.	பௌத்த சமயப் புலவர்கள்	இளம்போதியார், கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார், சிறுவெண் தேரையார், தேரதரன்.
11.	மும்மையின் வணங்கல்	1. புத்தம் சரணங்கச்சாமி 2. தர்மம் சரணங்கச்சாமி 3. சங்கம் சரணங்கச்சாமி
12.	அளவைகள்	காட்சி, கருதல் என்ற இரண்டு மட்டுமே

பௌத்தம் - 2அ. சௌத்திராந்திக மதம் முன்னுரை

	வகை	புத்தமதத்தின் நான்கு பிரிவுகளில் ஹீனயான மதத்தைச் சார்ந்தது.
1.	தோற்றுவித்தவர்	குமாரலப்தர்
2.	உத்தேச காலம்	இரண்டாம் நூற்றாண்டு
3.	பெயர்க்காரணம்	பிடகத்தின் கருத்துக்களின் அந்தங்களை புத்தரிடத்து வினவியர் சௌத்திராந்திகர். சூத்திரம் + அந்தம் = சூத்திராந்தம். சௌத்திராந்திகம் எனத் திருந்தியது.
4.	ஆடை	துவராடை போர்த்து அரசமரத்தைத் தெய்வமெனத் தொழுவர்.
5.	கடைபிடிக்க வேண்டிய வாழ்க்கை அறங்கள்	கல்லாமை, பொய்யாமை, புறங்கூறாமை, வெகுளாமை
6.	அளவைகள்	காட்சி, கருதல் என்ற இரண்டு அளவைகள் மட்டுமே
7.	பூதக்கொள்கை	வானந்தவிர்த்து ஏனைய 4 பூதங்கள் மட்டும் உண்டு. வான், உயிர், காலம், திசை, கடவுள் இல்லை. நிலையற்றவை.
8.	தத்துவக் கொள்கை	உரு, அரு, வீடு, வழக்கு என்னும் நான்கும் அவற்றின் விரியுமே நிலையானவை. நால்வகை வாய்மையும், ஐவகை ஒழுக்கமும், எண்வகை நெறியும் குறிக்கப்பட்டுள்ளன.
9.	பிறப்பு	உருவம், வேதனை, ஞானம், குறி, பாவனை என்னும் ஐந்து கந்தங்களும் (கந்தம் = கூட்டம்) காரண காரியத் தொடர்ச்சியாய்க் கெட்டுத் தோன்றுவன. இவற்றால் வருவது பிறப்பு நிலையாகும். பிறந்தோர் உறுவது பெருகிய துன்பமாகும்.
10.	வீட்டின்பம்	அக்கூட்டங்கள் முற்றும் அழிதலே பிறவாமையாகிய வீட்டின்பமாகும்.
11.	மேல் எல்லை	பிடகத்தின் சூத்திர முடிவுகளை மட்டும் தமக்கு மேல் எல்லையாகக் கொண்டவர்
12.	வீடுபேறு	சூனியமான நிலைவிளக்கை அணைத்துவிட்டால் ஏற்படும் நிலை போன்றது.

எண்கள்	பாடல்கள் எண்ணிக்கை	மதத்தின் பெயர்	பக்கம்
செய்யுள் எண் 63 - 93	31 பாடல்கள்	சௌத்திராந்திகம்	108
செய்யுள் எண் 94 - 133	40 பாடல்கள்	சௌத்திராந்திகம் மதமறுதலை	150

பௌத்தம் 2.(அ) சௌத்திராந்திகன் மதம்

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரியவிருத்தம்

செய்யுள் - 63

நீதியார் வேத நூலின்
நெறியலா வறங்கள் நாளும்
ஒதியோ ரைந்து சீலம்
உடையராய் உடல மூடிப்
போதிநீள் மரத்தின் மேவும்
புத்தர்நால் வரினும் வைத்துச்
சாதிதா னிலாத கொள்கைச்
சௌத்திராந் திகன்முன் சாற்றும்.

பதவுரை

நீதி ஆர் வேத நூலின் நெறி அலா அறங்கள் நாளும் ஒதி	நீதிசாத்திரத்தைத் தனக்கு அங்கமாகப் பொருந்திய வேதநூல் நெறியல்லாத வாக்கிய நெறியாகிய பிடகநூலை நாடோறும் ஓதி,
ஓர் ஐந்து சீலம் உடையர் ஆய்	உருவம், வேதனை, குறிப்பு, பாவனை, விஞ்ஞானம் என்னும் ஐந்து கந்தங்களின் குணங்களையுடையராய்,
உடலம் மூடி	உடலைத் துவராடையால் போர்த்து
போதி நீள் மரத்தில் மேவும் புத்தர் நால்வரினும் வைத்து	அரசினைத் தெய்வம் போலப் பேணி அதன் கீழ்ப் பொருந்தியிருக்கும் பௌத்தர் நால்வகையுள்ளவர்களையும் வைத்து அவர்களில்
சாதி தான் இலாத கொள்கை சௌத்திராந்திகன் முன் சாற்றும்	வருணபேதம் அறக் காணும் சாதியில்லாத சௌத்திராந்திகன் முன்னே சொல்லா நின்றான் என்றவாறு.

விளக்கவுரை

வேத வாக்கல்லாத பிடக நூலை நாடோறும் ஓதி, உருவம், வேதனை, குறிப்பு, பாவனை, விஞ்ஞானம் என்னும் ஐந்து கந்தங்களின் குணமுடையவராய், உடம்பைத் துவராடையால் போர்த்து, அரசமரத்தைத் தெய்வமாக மதித்து வாழும் பௌத்தர் நால்வகையினரில் சௌத்திராந்திகன் என்னும் பகுதியினனை முதலில் வைத்து ஆராய்வாம். பௌத்தர் நால்வராவார் - சௌத்திராந்திகன், யோகாசாரன், மாத்துமிகன், வைபாடிகன் என்பவர்.

புத்தர் நால்வரினும் வைத்து என்பது பௌத்தர் நால்வரினும் உட்கோளாகக் கொண்டு என்க.

மேல் பௌத்தமதம் கூறுவான் எடுத்துக்கொண்டார். அதனுள் இச் செய்யுள் அவர்கள் நால்வகையர் என்பதூஉம், அவரின் முன்னர்ச் சொல்லப்படுவான் **சௌத்திராந்திகன்** என்பதூஉம் கூறிற்று.

நீதி ஆர் வேதமாவது - உலகியல் நடப்புக்களான சோதிடம், வியாகரணம், சிற்பம், பரதம், சிக்ஷை, சந்தசு எனக் கொள்க. நெறியலா அறங்களாவன - ஐராத்மவாதமும், அகர்த்திருவாதமும், ஆகாசம் காலம் திக்கு காரணாத்பாவமும் இல்லை என்றும் குணியும் அவயவியும் இல்லை என்றும் கொள்ளும் கொள்கையும் பிறவும் எனக் கொள்க. ஐந்து சீலமாவன - அஹிம்சை, சத்தியம், அஸ்தேயம், பிரமசரியம், சங்கிரகம் எனக்கொள்க. இவ்வைந்து சீலமும் சாரதற்கும், சாரணற்கு தெசசீலம், உபசம்பன்னற்கு நூறுசீலம், சுவவீரருக்குக் கோடிசீலமும் ஆகம் இப்படி நிலைதோறும் சீலம் பலவாம். இவையெல்லாம் புத்த மதத்தின் உட்பிரிவான சௌத்திராந்திகத்தின் கோட்பாடுகள். ஒழுகலாறுகள் இன்மையால் தமிழ்ப்படுத்தத் திருவருள் கூட்டவில்லை. *(1)*

செய்யுள் - 64

முழுதுணர்ந் துலகிற் கோறல்
முதற்செயல் முனிந்து மற்றும்
பழுதிலா அருளி னாலே
பரதுக்க துக்க னாகித்
தொழுதுவா னவரும் போற்றத்
தொல்பிட கங்க ளான
வழுவிலா கமங்கள் சொன்ன
மாதவன் நாத னாவான்.

பதவுரை

முழுது உணர்ந்து உலகில் கோறல் முதல் செயல் முனிந்து	சர்வத்தையும் அறிந்து பிரபஞ்சத்தில் பொய், கொலை, களவு, கள், காமங்களை வெறுத்து,
மற்றும் பழுது இலா அருளினாலே பர துக்க துக்கன் ஆகி	குற்றமில்லாத கிருபையாலே எவ்வுயிர்த் துன்பமும் தன்னுயிர்த் துன்பம் போல் கொண்டு,
தொழுது வானவரும் போற்ற தொல்பிடகங்கள் ஆன வழு இல் ஆகமங்கள் சொன்ன மாதவன் நாதன் ஆவான்	தேவர்களும் தொழுது துதிக்கப்பட்டு வரும் பழைய பிடகநூலாகிய இகழ்ச்சியில்லாத ஆகமங்களை அருளிய புத்தமுனியே கர்த்தா ஆவான் என்றவாறு

விளக்கவுரை

பழுதிலா அருள் என்பது - இராச்சியத்தைக் கொடுத்தும், பிள்ளைகளைக் கொடுத்தும், தன் கண்ணைக் கொடுத்தும், உதிரம், இறைச்சி முதலாயின புறாவுக்கு அரிந்து கொடுத்தும் வையங்காத்தல் முதலியவை.

இச்செய்யுள் பரதுக்க துக்கனாய்ப் பிடகநூலை அருளிய சர்வஞ்ஞன் ஆகிய புத்தமுனியே கர்த்தாஎன்பது கூறிற்று. சர்வஞ்ஞன் - முற்றறிவுடையோன் / கடவுள். (2)

செய்யுள் - 65

மருவிய அளவை காட்சி
மானமென் றிரண்டி வற்றால்
கருதிய பொருள் கள் ஞான
ஞேயமாய்க் கணத்திற் பங்கம்
வருமுரு வருவம் வீடு
வழக்கென நான்க தாகித்
தருமவை ஒன்றி ரண்டாய்த்
தான்விரிந் தெட்டி னாமே.

பதவுரை

மருவிய அளவை காட்சி மானம் என்று இரண்டு	பிடகநூலிற் பொருந்திக் கொள்ளப்படும் அளவையாவன காட்சியும் அநுமானமும் என இரண்டாம்
இவற்றால் கருதிய பொருள்கள் ஞானம் ஞேயம் ஆய் கணத்தில் பங்கம் வரும்	இக்காட்சியாலும் அநுமானத்தாலும் அறியப்படும் பொருள்கள் அறிவும் அறியப்படும் பொருளுமாய் ஒரு மாத்திரை யிற்கெட்டு வரும்,
உரு அருவம் வீடு வழக்கு என நான்கது ஆகி தரும் அவை ஒன்று இரண்டு ஆய் தான் விரிந்து எட்டின் ஆம் ஏ.	ஞான ஞேயங்களினால் உருவும், அருவும், வீடும், வழக்கும் என நான்காகி அந்நான்கும் ஒன்று இரண்டாக விரிந்து எட்டாகத் தரும் என்றவாறு.

விளக்கவுரை

பிடக நூலில் பொருந்தக் கொள்ளப்படும் அளவைகள் காட்சி, அனுமானம் என்ற இரண்டாம். இக்காட்சியாலும், அநுமானத்தாலும் அறியப்படும் பொருள்கள் அறிவும், அறியப்படும் பொருளுமாம். கணத்திற் கெடுகை நால்வகை. அவையாவன - கெட்டு வர்த்தித்தலும், கெட்டு சுயித்தலும், கெட்டு ஒத்து நிற்றலும் கெட்டுக்

கெட்டே போதலும் ஆம். கணம் - தாமரையிதழை அடுக்கி உளியிட்டடித்தால் எட்டிதழ் அறும் எல்லை. ஞானம் - அறிவு. ஞேயம் - அறியப்படும் பொருள். வர்த்தித்தல் - உளதாதல், பெருகுதல், சம்பவித்தல். கூடியிருத்தல் - குறைதல்.

இச்செய்யுள் பௌத்த சமயத்திற் கொள்ளும் அளவை இன்னது என்று நால்வகைப் பாரிப்பும் கூறிற்று. (3)

செய்யுள் - 66

உருவியல்பூத மோடங்
குபாதாய ரூப மாகும்
அருவியல் சித்தங் கன்ம
மென்றிரண் டாகும் வீட்டின்
மருவியல் குற்றம் கந்தம்
எனவழங் கிடும்வ ழக்கின்
இருவிய லுள்ள தோடங்
கில்லதா மியம்புங் காலே.

பதவுரை

உருஇயல் பூதமோடு அங்கு உபாதாய ரூபம் ஆகும்	உருவினது இயல்பு பூத உருவத்து டனே உபாதாய ரூபம் என இரண்டு ஆம்,
அருஇயல் சித்தம் கன்மம் என்று இரண்டு ஆகும்	அரு இயல்பு சித்தஅரு என்றும் கன்மஅரு என்றும் இரண்டாகும்,
வீட்டின் மருவு இயல் குற்றம் கந்தம் என வழங்கிடும்	வீட்டினது பொருந்திய இயல்பு குற்ற வீடென்றும் கந்தவீடென்றும் இரண்டு எனப்படும்
வழக்கின் இரு இயல் உள்ளதோடு அங்கு இல்லதாம் இயம்பும் கால் ஏ	வழக்கு இரண்டு இயல்புள்ளது; அவை உள் வழக்கு என்றும் இல்வழக்கு என்றும் வழங்கப்படும் சொல்லுமிடத்து என்றவாறு.

விளக்கவுரை

இச் செய்யுள் உருவம், அருவம், வீடு, வழக்கு என்னும் நான்கு பொருள்களும் ஒன்று இரண்டான பகுதியை உணர்த்திற்று.

இயல் - இயல்பு, உபாதானம் - உபாதாயம் என்றும் பேராம். உபாதாயம் - பற்றப்படுவது, உரு இயல்பாவது சைதன்னிய ரூபம் என்றும், அசை தன்னியரூபம் என்றும் இரண்டாம். சைதன்னியரூபம் பதினெட்டுக் கூடியது. அவை பஞ்சேந்திரியங்களும், அவற்றின் விஷயங்களும், ஸ்திரீபும்ஸகமான பாவ ரூபம் இரண்டும், இருதயம் ஒன்றும், பூதம்நாலுமாம். சித்த அரு, கன்ம அரு என்று அரு இருவகையாம். குற்றவீடு, கந்தவீடு என வீட்டின் இயல்பும் இரண்டாம். வழக்குகள்

உள்வழக்கு, இல் வழக்கு என இருவகைப்படும். அசை தன்னியரூபம் முன் சொன்ன எட்டாம். சைதன்னியம் - அறிவு. (4)

செய்யுள் - 67

மண்புனல் அனல்கால் பூதம்
வலிகந்தம் இரதம் வன்னம்
எண்டரு முபாதா யந்தான்
இவையிரு நான்கும் கூடி
உண்டொரு பொருளு ரூபம்
உறுபுல னுபாங்க மோடக்
கண்டது சித்தம் கன்மம்
நன்றுதீ தென்றல் காணே.

பதவுரை

மண் புனல் அனல் கால் பூதம்	பூதவுருவானது பிருதிவி, அப்பு, தேயு, வாயு, என நான்காம்,
வலி கந்தம் இரதம் வன்னம் எண் தரும் உபாதாயம் தான்	உபாதாயரூபமாவது கடினம், கந்தம், இரதம், வன்னம் என நான்காக எண்ணத்தகும்,
இவை இரு நான்கும் கூடி உண்டு ஒரு பொருள் உரூபம்	இவை எட்டும் கூடியவிடத்தில் யாதொரு பொருள் உண்டாயது அஃது உருவாம்,
உறுபுலன் உபாங்கம் ஒடக் கண்டது சித்தம்	புலன்கள் பொறிகளின் வழியே ஓடி அறிய அதனைக் கண்டது சித்த அருவாம்
கன்மம் நன்று தீது என்றல் காண் ஏ	அப்படிக் கண்ட பொருளை நன்றென்றும் தீதென்றும் காண்டல் கன்ம அருவாம் என்றவாறு

விளக்கவுரை

கன்மம் - கன்மபலம். பூதங்கள் நான்கு மட்டுமாம். ஆகாயம் கிடையாது.

இச்செய்யுள் முன்னுரைத்த எண்வகை உருக்களும் அருக்களும் இரண்டும் கூறிற்று. (5)

செய்யுள் - 68

குற்றவீ டராக மாதி
குணங்களைக் குறைத்த லாகும்
மற்றவீ டுருவ மாதி
யைந்தையும் மாய்த்த லாகும்

சொற்றருந் தொகைதொ டர்ச்சி
மிகுத்துரை யென்று மூன்றாய்
உற்றிடும் வழக்கி ரண்டும்
ஒன்றுமூன் றாகி யாறாம்.

பதவுரை

குற்ற வீடு அராகம் ஆதி குணங்களை குறைத்தல் ஆகும்	அராகாதி குணங்கள் பொன்றக் கெட்டு முத்தியின்பம் அடையாது சேட்டைகெட முத்தியின்பம் அடையும் என்றது குற்றவீடாம்
மற்ற வீடு உருவம் ஆதி ஐந்தையும் மாய்த்தல் ஆகும்	உருவம், வேதனை, குறிப்பு, பாவனை, விஞ்ஞானம் என்னும் ஐந்து கந்தங்களும் சந்தானத்துப் பொன்றக் கெட்டடைவது கந்தவீடாம்,
சொல்தரும் தொகை தொடர்ச்சி மிகுத்துரை என்று மூன்று ஆய் உற்றிடும் வழக்கு இரண்டு ஒன்று மூன்று ஆகி ஆறு ஆம்	உள்வழக்கு இல்வழக்கென்று கூறப்பட்ட வழக்கு இரண்டும் தொகையுண்மை வழக்கும் தொகையின்மை வழக்கும், தொடர்ச்சி யுண்மை வழக்கும் தொடர்ச்சியின்மை வழக்கும், மிகுத்துரை யுண்மைவழக்கும் மிகுத்துரை யின்மைவழக்கும் என ஆறாகி விரியும் என்றவாறு

விளக்கவுரை

அராகாதி குணங்கள் பொன்றக்கெட்டு முத்தியின்பம் அடையாமல், சேட்டைகெட முத்தியின்பம் அடையும் என்றல் குற்றவீடு ஆம். உருவம் வேதனை குறிப்பு பாவனை விஞ்ஞானம் என்னும் ஐந்து கந்தங்களும் சந்தானத்தில் பொன்றக் கெட்டு அடைவது கந்த வீடாம்.

உருவக்கந்தமாவது: உருவங்கட்கெல்லாம் காரணம் ஆகிய பொருளைத் தெரிவிக்கின்றது. இந்த உருவக்கந்தத்தில் பிருதிவி, அப்பு, தேயு, வாயு ஆகிய நான்கு பூதங்களும், ஐந்து ஞானேந்திரியங்களும், ரூப ரச கந்த சந்த பரிசங்களாகிய ஐந்து புலன்களும், ஆண்மை பெண்மை வேறுபாடுகளும் இவைபோல்வன பிறவுமாகிய இருபத்தெட்டுத் தத்துவங்கள் அடங்கியிருக்கின்றன. ஆகாயத்தை ஒரு பூதமாக அவர்கள் கொள்ளார்.

வேதனைக்கந்தமாவது: இந்திரியங்களுக்கும் புலன்களுக்கும் உள்ள சம்பந்தத்தினால் உண்டாகும் உணர்வு. பொறிகள் ஐந்தும் மனம் ஒன்றும் ஆகிய அறுவகை வாயில்களால் இவ்வுணர்வு அறுவகைப்படும்; இந்த ஆறும் தனித்தனியே

குசலம், அகுசலம், குசலாகுசலம் என மூன்று வகைப்படுதலால் வேதனை பதினெட்டு வகைப்படும்.

குறிப்புக்கந்தமாவது: மெய் வாய் கண் மூக்குச் செவி மனம் என்னும் ஆறு இந்திரியங்களால் உண்டாகிற அறுவகை உணர்வுக்குச் சம்பந்தமுற்று அவ்வுணர்வினால் உண்டாகும் பொது அறிவையும், சிறப்பு அறிவையும் கொண்டு பொருள்களைப் பெயரிட்டுக் குறித்துக் காட்டுவதற்கு வேண்டிய ஞானமாகும். இந்தக் கந்தம் ஆறு இந்திரியங்களின் வாயிலாகத் தோன்றுதல் பற்றி அறுவகையினதாகும். 'ஸம்ஜ்ஞாஸ்கந்தம்' எனக் கூறுவர் வடநூலார்.

பாவனைக்கந்தமாவது: மனம் வாக்குக் காயம் என்கிற முக்கரணங்களால் செய்யப்படும் தொழில் வேறுபாடுகளால் அக்கரணங்களுக்கு உண்டாகும் பரிபாக விசேடம். இந்தக் கந்தம் ஐம்பத்திரண்டு வகைப்படும் என்பர். இதனை ஸம்ஸ்காரஸ்கந்தம் என்று கூறுவர்.

விஞ்ஞானகந்தமாவது: தூங்குவோருடைய உணர்வானது கர்த்திருத்துவம், போக்கிருத்துவம் இன்றிச் சாட்சிமாத்திரமாய் நிற்றல்போலச் சேதனங்களுடைய சரீரத்துள்ளிருந்து அவர்களுடைய அறிவுக்கெல்லாம் ஆதாரமாய் நிற்கும் சைதன்னிய தத்துவம் ஆகும். இந்த விஞ்ஞானக்கந்தம் தன்னுடைய காரியங்களாகிய பல வகைப்படும் எண்ணங்களால் உண்டாகும் நல்வினை தீவினைகளைக்கொண்டு எண்பத்தொன்பது வகையாக வகுக்கப்பட்டுளது.

"இந்தக் கந்தங்களெல்லாம் நிலையற்றன; ரூபம் நுரையைப்போன்று தோன்றி உடனே மறைவதென்றும், வேதனை நீரின்மீது அசைந்து தோன்றும் குமிழியைப் போன்றது என்றும், ஸம்ஜ்ஞை வெயிலில் தோன்றும் பேய்த்தேர் போல்வது என்றும், ஸம்ஸ்காரம் வாழைபோல வன்மையும் நிலையும் இல்லாதது என்றும், விஞ்ஞானம் இந்திரஜாலத்தோற்றம் போல்வது என்றும் சொல்லப்பட்டுள்ளன". ஸம்ஸ்காரம் - சுத்திக்கிரியை. ஸம்ஜ்ஞை - மனமும், 5 கந்தங்களும்.

"ஒருவன் மரணம் அடையும்பொழுது அவனைச் சேர்ந்த ஐந்து ஸ்கந்தங்களும் தங்களுடைய பழைய சேர்க்கையினின்றும் பிரிக்கப்படுகின்றன. மேற்கூறிய ஸ்கந்தங்கள் இவ்வாறு பிரிக்கப்பட்டிருக்கும் நிலையிலே அவன் ஜீவித்திருக்கின்ற காலத்தில் செய்து வந்த நல்வினை தீவினைகளாகிய செய்கைகள் எல்லாம் விஞ்ஞானஸ்கந்தத்தில் வித்துப்போன்று உள்ளடங்கியிருந்து அந்த விஞ்ஞானஸ்கந்தத்தைத் தமக்குத் தகுதியுள்ள கதி (பிறப்பு)யில் மற்றை நான்கு ஸ்கந்தங்களோடு கலப்பித்து மறுபிறப்பை அடையச் செய்கின்றன. இவ்வகையான கருமப்பிரவாகம் மறுபிறப்பின் மூலம் ஒரு தீபத்தினின்றும் பல தீபங்கள் எவ்வாறு ஏற்றப்படுமோ அவ்வாறே ஒரு பிறப்பினின்றும் பல பிறப்புக்கள் உண்டாக்கப்படும். ஓர் ஆற்றில் நீர் ஓடிக்கொண்டிருக்கும்பொழுது ஓரிடத்தில் ஒரு விநாடியிற்கண்ட நீர் அவ்விடத்தில் அடுத்த விநாடியில் இல்லாவிட்டாலும் அவ்வாற்றொழுக்கம் ஒன்றாகக் கருதப்படுமாறு போல வரும்பிறப்புக்களின் தொடர்ச்சி ஒன்றாகவே இருக்கும். இதனை விளக்குதற் பொருட்டே இத்தொடர்ச்சிக்கு வாயுசந்தானம்,

தீபசந்தானம், தாராசந்தானம், பிபீலிகாசந்தானம் என்னும் இந்த நான்கினை உதாரணமாகக் கூறுவர்".

இனி, உள்வழக்கு இல்வழக்கு என்று கூறப்பட்ட இருவகை வழக்கும் தொகையுண்மை வழக்கு தொகையின்மை வழக்கு, தொடர்ச்சியுண்மை வழக்கு தொடர்ச்சியின்மை வழக்கு, மிகுத்துரையுண்மை வழக்கு மிகுத்துரையின்மை வழக்கு என விரியான் ஆறாம் என்க.

அராகாதி குணங்களைக் குறைத்தல் குற்றவீடென மாறுக. உருவமாதி ஐந்தையும் மாய்த்தல் மற்றவீடென மாறுக.

இச்செய்யுள் இருவகைக் குற்றமும் வீடு வழக்கு வருத்தம் என்பதும் கூறிற்று.

தொகை - கூட்டம். தொடர்ச்சி - சந்தானத்தொடர்ச்சி. மிகுத்துரை - தோற்றநாசம். (6)

செய்யுள் - 69

ஒருவனென் றோதப் பட்டான்
உருவாதி ஐந்தும் கூடி
வருபவன் என்று ரைத்தல்
தொகையுண்மை வழக்க தாகும்
உருவமங் காதி யாய
ஐந்தையும் ஒருவன் நின்று
தருவது தொகையின் இன்மை
வழக்கதாம் சாற்றுங் காலே.

பதவுரை

ஒருவன் என்று ஒதப்பட்டான் உரு ஆதி ஐந்தும் கூடி வருபவன் என்று உரைத்தல் தொகைஉண்மை வழக்கு அது ஆகும்	ஒரு கர்த்தா என்று உரைக்கப்பட்டவன் உருவம் முதலிய ஐந்தோடும் வடி வருபவன் என்று கூறுதல் தொகையுண்மை வழக்காம்,
உருவம் அங்கு ஆதி ஆய ஐந்தையும் ஒருவன் நின்று தருவது தொகையின் இன்மை வழக்குஅது ஆம் சாற்றுங்கால் ஏ	உருவம் முதலிய ஐந்தையும் ஒரு கர்த்தா அதனோடும் கூடாமல் நீங்கி நின்று உண்டாக்குவன் என்பது தொகையின்மை வழக்காம் சொல்லுங்காலத்து என்றவாறு.

விளக்கவுரை

அவற்றுள், ஒரு கர்த்தா என்று சொல்லப்பட்டவன் உருவக்கந்தம் முதலிய

ஐந்தனோடும் கூடி வருபவன் என்பது தொகையுண்மை வழக்காம்; உருவம் முதலிய ஐந்தனையும் அதனோடும் கூடாமல் நீங்கி நின்று ஒரு கர்த்தா உண்டாக்குவன் என்பது தொகையின்மை வழக்காம்.

இச்செய்யுள் முற்கூறிய அறுவகை வழக்கினுள் தொகையுண்மை வழக்கும் தொகையின்மை வழக்கும் கூறிற்று. *(7)*

செய்யுள் - 70

காரண காரி யத்தின்
தொடர்ச்சியாய்க் காலம் மூன்றின்
சோர்வறத் தோன்றும் கெட்டு
வழியென்கை தொடர்ச்சி யுண்மை
ஓர்தரி னொருவ னேயெக்
காலத்து முள்ளா னென்று
தேர்வது தொடர்ச்சி யின்மை
வழக்கதாம் செப்புங் காலே.

பதவுரை

காரண காரியத்தின் தொடர்ச்சி ஆய் காலம் மூன்றின் சோர்வு அற தோன்றும் கெட்டு வழி என்கை தொடர்ச்சியுண்மை	காரண காரியம் என்னும் தொடர்ச்சியுடைய வாய்க் காலம் மூன்று என்னும் மயக்கம் அறக் கெட்டுத் தோன்றும் என்னும் வழித் தொடர்ச்சியுண்மை வழக்காம்;
ஓர்தரின் ஒருவனே எக்காலத்தும் உள்ளான் என்று தேர்வது தொடர்ச்சி யின்மை வழக்குஅது ஆம் செப்புங்கால் ஏ	ஒரு கர்த்தாவே காரண காரியத்தின் தொடர்ச்சியாய் எக்காலத்தும் உள்ளான் என்று சொல்லுவது தொடர்ச்சியின்மை வழக்காம் உணர்வினால் சொல்லுமிடத்து என்றவாறு.

விளக்கவுரை

காரண காரியத் தொடர்ச்சியாய்ப் பொருள்கள் எப்போதும் அழிந்து தோன்றும் என்பது தொடர்ச்சியுண்மை வழக்காம்; ஒரு கர்த்தாவே காரண காரியத் தொடர்ச்சியாய் எக்காலத்தும் உள்ளான் என்பது தொடர்ச்சியின்மை வழக்காம்.

ஓர் தரின் செப்புங்காலே எனக் கூட்டுக.

இச்செய்யுள் தொடர்ச்சியுண்மை வழக்கும், தொடர்ச்சியின்மை வழக்கும் கூறிற்று.

காலம் மூன்றாவன - செல்காலம், வருகாலம், நிகழ்காலம். பொருளின் திரிபு ஒழியக் காலம் என்பது கற்பனா நாமம் என்க. *(8)*

செய்யுள் - 71

தோற்றிய பொருள்க ளெல்லாம்
நாசமா மென்று சொல்லும்
மாற்றமுன் உரைத்தல் மற்றை
மிகுத்துரை வழக்கி னுண்மை
போற்றிய பொருள்கண் கட்குப்
போனது போன்மு திர்ந்து
வேற்றுமைப் பட்ட தென்கை
மிகுத்துரை யில்வ ழக்கே.

பதவுரை

தோற்றிய பொருள்கள் எல்லாம் நாசம் ஆம் என்று சொல்லும் மாற்றம் முன் உரைத்தல் மற்றை மிகுத்துரை வழக்கின் உண்மை	தோன்றப்பட்ட பொருள்கள் எல்லாம் கெடும் என்னும் உத்தரத்தை முன்னர்ச் சொல்லுமது மிகுத்துரையுண்மை வழக்காகும்,
போற்றிய பொருள் கண்கட்கு போனது போல் முதிர்ந்து வேற்றுமைப்பட்டது என்கை மிகுத்துரை இல்வழக்கே	தோற்றி இரட்சைப்பட்ட பொருள்கள் காரியம் கெட்டுக் காரணமாய் நின்றது என்று கூறல் மிகுத்துரையின்மை வழக்காம் என்றவாறு.

விளக்கவுரை

தோன்றிய பொருள்கள் எல்லாம் அழியும் என முற்கூறுவது மிகுத்துரையுண்மை வழக்கு; தோன்றி நின்ற பொருள்கள் காரிய வடிவம் கெட்டுக் காரணமாய் நின்றது என்றல் மிகுத்துரையின்மை வழக்காம் என்பர்.

கண்கட்குப் போனதுபோன் முதிர்ந்து வேற்றுமைப் படுகை - காரியம் அழிந்து காரணம் கிடக்கை. மிகுத்துரை மூன்றும் உள்வழக்கு இல்வழக்கு இரண்டினும் வழங்கும்வழி எனக் கொள்க.

இச்செய்யுள் மிகுத்துரை யுண்மை வழக்கும், மிகுத்துரை இன்மை வழக்கும் கூறிற்று.

தோற்றிய பொருள்கள் எல்லாம் நாசம் என்பது 'சர்வம் க்ஷணிகம் அசத்வாதம் இதி வசனா' எனக்கொள்க. இவை தொகை தொடர்ச்சி மிகுத்துரை மூன்றும் உள் வழக்கில் வழக்கு இரண்டினும் வழங்கும் வழி எனக்கொள்க. (9)

செய்யுள் - 72

உள்வழக் கில்வ ழக்குள்
ளதுசார்ந்த உள்வ ழக்கோ
டுள்ளது சார்ந்த வின்மை
வழக்குட னின்மை சார்ந்த
உள்வழக் கின்மை சார்ந்த
இல்வழக் கென்றோ ராறாம்
உள்வழக் குளதுண் டென்கை
முயற்கோடின் றில்வ ழக்கே.

பதவுரை

உள்வழக்கு இல்வழக்கு உள்ளது சார்ந்த உள்வழக்கோடு உள்ளது சார்ந்த இன்மை வழக்குடன் இன்மை சார்ந்த உள்வழக்கு இன்மை சார்ந்த இல்வழக்கு என்று ஓர் ஆறு ஆம்	முற்கூறிய உள்வழக்கும் இல்வழக்கும் உள்ளது சார்ந்த உள்வழக்கும் உள்ளது சார்ந்த இல்வழக்கும் இல்லது சார்ந்த உள்வழக்கும் இல்லது சார்ந்த இல்வழக்கும் என்னும் நான்கோடு கூடி ஆறு வகையாம்,
உள் வழக்கு உளது உண்டு என்கை	அவற்றுள் உள்ளதை உண்டு என்பது உள் வழக்காம் அது யானைக்கோடு உண்டு என்கை,
முயற்கோடு இன்று இல்வழக்கே	இல்லதனை இல்லை என்கை இல்வழக்கு ஆம்; அது முயற்குக் கொம்பு இல்லை என்கை என்றவாறு.

விளக்கவுரை

முற்கூறிய உள்வழக்கும் இல்வழக்கும் உள்ளது சார்ந்த உள்வழக்கு, உள்ளது சார்ந்த இல்வழக்கு; இல்லது சார்ந்த உள்வழக்கு, இல்லது சார்ந்த இல்வழக்கு என்னும் நான்கனுடன்கூடி ஆறு வகையாம். உள்ளதை உண்டு என்பது உள்வழக்கு, அது யானைக்கோடு உண்டு என்பது. இல்லதனை இல்லை என்பது இல்வழக்கு, அது முயற்குக் கொம்பில்லை என்பது. அறிவைச் சார்ந்து அறிவுண்டாம் என்பது உள்ளது சார்ந்த உள்வழக்கு; அறிவு கெட்டால் பின்பு அறிவு உண்டாகாது என்பது உள்ளது சார்ந்த இல் வழக்கு. அறிவு முன்பு இல்லாததாய்ப் பின்பு உண்டாம் என்பது இல்லது சார்ந்த உள்வழக்கு. உள்ளங்கையில் மயிர் உண்டு என்பதும், அந்த மயிரால் செய்த கயிறு உண்டு என்பதும் இல்லது சார்ந்த இல்வழக்கு. இவைகளேயன்றிப் பேதைமை, செய்கை, உணர்ச்சி, உருவருவவாயில், நுகர்ச்சி, வேட்கை, பற்று, கருமத்தொகுதி, முற்றோற்றம், பிணி, மூப்பு, சாக்காடு எனச் சார்பு பன்னிரண்டு உள என்பர்.

இது வரையில் சௌத்திராந்திகன் தன் மதம் கூறினான். மேல் பிறர் மதம் கூறி மறுக்கத் தொடங்குகின்றான்.

இச்செய்யுள் முன்னர்க் கூறிய உள்வழக்கில் வழக்கினது இயல்பும் இவ்விரண்டினாலும் முன் விரிந்த பகுதி நீக்கி மேல் விரியும் பகுதியும் கூறிற்று. (10)

செய்யுள் - 73

உணர்வுசார்ந் துணர்வு திக்கை
உள்ளது சார்ந்த வுண்மை
உணர்வுபின் இன்றா மென்கை
உள்ளது சார்ந்த இன்மை
உணர்வுமுன் பின்றித் தோன்றல்
இல்லது சார்ந்த வுண்மை
உணரினில் லதுசா ரின்மை
உள்ளங்கை யுரோம நாணே.

பதவுரை

உணர்வு சார்ந்து உணர்வு உதிக்கை உள்ளது சார்ந்த உண்மை	அறிவைச் சார்ந்து அறிவுண்டாம் என்கை உள்ளது சார்ந்த உள்வழக்கு
உணர்வு பின் இன்றாம் என்கை உள்ளது சார்ந்த இன்மை	அறிவு கெட்டால் பின்பு அறிவு உண்டாகாது என்பது உள்ளது சார்ந்த இன்மை வழக்கு
உணர்வு முன்பு இன்றி தோன்றல் இல்லது சார்ந்த உண்மை	அறிவு முன்பு உள்ளதல்ல வாய்ப் பின்பு உண்டாம் என்பது இல்லது சார்ந்த உள்வழக்கு
உணரின் இல்லது சார் இன்மை உள்ளங்கை உரோமம் நாணே	உள்ளங்கையில் மயிர் உண்டு என்பதும் அம்மயிரால் செய்த கயிறு உண்டு என்பதும் இல்லது சார்ந்த இல்வழக்கு என்றவாறு

விளக்கவுரை

இச்செய்யுள் உள்ளது சார்ந்த உள்வழக்கும், உள்ளது சார்ந்த இன்மை வழக்கும் இல்லது சார்ந்த உள்வழக்கும், இல்லது சார்ந்த இல்வழக்கும் என்னும் நான்கையும் கூறிற்று.

இத்தனையும் தன்மதம் கூறி, மேல் பிறர் மதம் கூறி மறுக்கின்றது. (11)

செய்யுள் - 74

சொன்னநால் வகையு மின்றிச்
சொல்லிடும் பொருள்கள் எல்லாம்
என்னையோ அறிகி லோம்பித்
தேறியோ வானம் ஆன்மா
மன்னுகா லங்கள் திக்கு
மனமுடன் வாக்கி றந்திட்
டுன்னுமோ ரிறையு முண்டென்
றுரைப்பது நித்த மன்றே.

பதவுரை

சொன்ன நால்வகையுமின்றிச் சொல்லிடும் பொருள்கள் எல்லாம் என்னையோ அறிகிலோம்	இதுவரை நாம் கூறின உரு, அரு, வீடு, வழக்கு என்று சொல்லப்படும் நான்கு வகையும் அவற்றின் விரிவுமன்றி சொல்லப்படும் பொருள்கள் என்னவென்று அறிகிலோம்.
பித்தேறியோ வானம் ஆன்மா மன்னு காலங்கள் திக்கு மனமுடன் வாக்கிறந் திட்டுன்னுமோர் இறையுண் டென்றுரைப்பது நித்த மன்றே	சிலர் ஆகாயம், உயிர், காலம், திக்கு முதலிய வற்றுடன் மனம் வாக்குக்கெட்டாத ஒரு கர்த்தா உண்டு என்றும் சொல்லுகின்றனர். அவை நிலைபெற்றனவாகா. அவர்கள் பித்துக் கொண்டதனால் இவ்வாறு பிதற்று கின்றாரோ? விளங்கவில்லை.

விளக்கவுரை

இச்செய்யுள் முன் சொன்ன நால்வகை யொழிந்து பிறர் சொல்லும் வான் முதலிய பொருள்கள் அல்ல என்று கூறுவான் அவையிற்றின் தொகை கூறிற்று. பஞ்ச கந்தங்களும், மற்றுமுள்ள விவகாரங்களும் இந்நால்வகையினுள்ளும் அடங்கும் என்க. *(12)*

செய்யுள் - 75

ஈங்குவான் செயற்கு வாரா
இயம்பிய பொருள்க ளெல்லாம்
தாங்குவா னுளதே யென்னில்
தரித்திடா தருவ மாதல்
ஓங்குவா னோசைக் காதி
யெனிலதங் குருவின் கூட்டம்
நீங்குவா னின்றி யெங்கும்
நின்றதே லெங்கு மின்றே.

பதவுரை

ஈங்கு வான் செயற்கு வாரா	இவ்விடத்துக் கூறப்பட்ட வான் என்னும் பொருள் தொழிலிற்கூடாது,
இயம்பிய பொருள்கள் எல்லாம் தாங்குவான் உளதே என்னில் தரித்திடாது அருவம் ஆதல்	பூதம் நான்கு முதலாகச் சொல்லப்பட்ட பொருள்கள் எல்லாவற்றையும் தாங்குவதற்கு ஆகாசம் உளது என்று கூறின் அஃது அருவம் ஆதலால் பொருள்களைத் தரிக்கற் பாற்றன்று,
ஒங்கு வான் ஒசைக்கு ஆதி எனில் அது அங்கு உருவின் கூட்டம்	பெரியவானானது சத்தத்துக்கு முதல் என்று கூறின் அவ்வோசையும் உருக் கூட்டத்து அன்றித் தோன்றாது
நீங்குவான் இன்றி எங்கும் நின்றதேல் எங்கும் இன்று ஏ	அந்த ஆகாயம் நீங்குதலின்றி எங்கும் நின்றதென்று கூறின் அஃது எங்கும் இல்லையாம்; ஆகையால், ஆகாயம் என்று ஒரு பொருள் இல்லை என்றவாறு.

விளக்கவுரை

இவ்விடத்துக் கூறப்படும் ஆகாயம் தொழிற்படாது. ஆகாயம் மற்றைப்பூதங்களை யெல்லாம் தாங்கி நிற்கும் என்னில், அஃது அருவம் ஆதலால் பொருள்களைத் தரிக்கும் தன்மையுடையதன்று. ஆகாயம் ஒலி தோன்றுதற்கு இடமாம் என்னில், அவ்வொலியும் உருக்கூட்டத்தினன்றித் தோன்றாது. ஆகாயம் எங்கும் நிறைந்தது என்னில், அஃது எங்கும் நிறைந்த தொன்றன்று. ஆகலின், ஆகாயம் என்று ஒரு பொருளில்லையாம் என்க.

இச்செய்யுள் முன்கூறிய ஐவகையுள் ஆகாயம் இல்லை என்று மறுத்துக் கூறிற்று. *(13)*

செய்யுள் - 76

போதமுண் டுயிர்க்கட் கென்னில்
வாயிலைம் புலனும் நூலும்
ஆய்தலின் றொட்டுத் தீட்டுக்
கலப்பினி லறியு மென்னில்
ஏதமுண் டிரவிற் பச்சை
சிவப்புட னோப்ந்த போது
கேதநின் றென்னோ வென்னும்
ஐயமுன் கிடத்த லாலே.

பதவுரை

போதம் உண்டு உயிர்கட்கு என்னில்	உயிர்கட்கு அறிவுண்டு என்று சொல்லின்
வாயில் ஐம்புலனும் நூலும் ஆய்தல் இன்று	இந்திரியங்களும் விடயங்களும் சாத்திரங்களும் கொண்டு அறிவானேன்,
ஒட்டு தீட்டு கலப்பினில் அறியும் என்னில்	அப்படியல்ல இந்திரியங்களைக் கலந்தும் புலன்களைப் பரிசித்தும் சாத்திரங்களைப் பொருந்தி நின்றும் அறிவன் என்பையாகில்,
ஏதம் உண்டு இரவில் பச்சை சிவப்புடன் ஏய்ந்தபோது கேதம் நின்று என்னோ என்னும் ஐயம் முன் கிடத்தலாலே	இருளினிடத்துப் பச்சை சிவப்பு என்னும் வன்னம் கிடக்க அவற்றைத் தொட்டும் தீண்டியும் கலந்தும் அறியாமல் கிலேசமுற்று என்னோ என்னும் ஐயம் கிடத்தலால் கூறியது குற்றம் உண்டு என்றவாறு.

விளக்கவுரை

உயிர்களுக்கு அறிவுண்டு என்னில், இந்திரியங்களும், விடயங்களும், சாத்திரங்களும் கொண்டு அறிவானேன். அற்றன்று; இந்திரியங்கள் வாயிலாகப் புலன்களை யுணர்ந்தும் நூல்களைப் பொருந்தியும் உயிர் அறியும் என்னில், இருட்டில் பச்சை சிவப்பு முதலிய வன்னங்கள் கிடக்க அவற்றின் வேறுபாட்டைத் துணிந்து அறிதலின்றி ஐயுற்றுத் துன்புறுதற்குக் காரணம் யாது? ஆகலின், ஆன்மாவுக்கு அறிவில்லை என்பதன்றி ஆன்மா என ஒரு பொருளின்று என்க.

இந்திரியம் புலன் நூலினுக்கு ஒட்டுந் தீட்டுக் கலப்பு மொழிமாற்று நிரனிறை எனக்கொள்க.

இச்செய்யுள் "ஆன்மாவுக்கு அறிவில்லை; ஆதலால் ஆன்மா இல்லை", என மறுத்துக் கூறிற்று. *(14)*

செய்யுள் - 77

அறிந்திடா வாயி லின்றேல்
அறிவின்றா மைந்தும் பற்றி
அறிந்திடு மறிவுண் டென்னில்
ஐந்தினு மறிவொன் றாக
அறிந்திட வேண்டும் சார்பின்
அறிந்திடு மென்னி லுன்னை
அறிந்திலோம் புத்தன் என்றிங்
கழகிது சொன்ன வாறே.

பதவுரை

அறிந்திடா வாயில் இன்றேல்	இந்திரியங்கள் இல்லையாயின் உயிர் ஒன்றையும் அறியமாட்டாது,
அறிவு இன்றாம் ஐந்தும் பற்றி அறிந்திடும் அறிவு உண்டு என்னில்	இந்திரியங்கட்கு அறிவில்லையாதலால் அவ்விந்திரியங்கள் ஐந்தையும் பற்றி நின்று அறிந்திடும் அறிவு உயிருக்கு உண்டு என்று கூறில்
ஐந்தினும் அறிவு ஒன்றாக அறிந்திட வேண்டும்	உயிர் அறியுமாயின் புலன்கள் ஐந்தாலும் அறியும் அறிவை ஒரு புலனால் அறிய வேண்டும்.
சார்பின் அறிந்திடும் என்னில்	அற்றன்று உயிர் அறியுமிடத்துப் பொறிகளின் வழிகளிலே நின்றும் அவ்வவற்றின் புலன்களாகிய குணங்களை அறியும் எனக் கூறின்,
உன்னை அறிந்திலோம் புத்தன் என்று இங்கு அழகிது சொன்ன ஆறு ஏ	உன்னை ஆன்மவாதி என்று அறிந்தோம்; நீ சார்பில் தோன்றும் என்கையால் புத்தன் ஆனாய்; இஃது அறிந்திலோம்! நீ உயிர் அறியும் என்று சொன்னது அழகிது என்றவாறு.

விளக்கவுரை

இந்திரியங்கள் இல்லையாயின் உயிர் ஒன்றையும் அறியமாட்டாது. இந்திரியங்கள் அறிவில்லாதன ஆகலின், அவைகளைப்பற்றி நின்று உயிரே அறியும் தன்மையுடையது என்னில், உயிர் அறிவுடையதாயின் ஐம்புலன்களாலும் அறியும் அறிவை ஒரு புலனே அறிதல் வேண்டும். அன்றியும், உயிர் அறியுமிடத்துப் பொறிகளின் வாயிலாகவே அவ்வவற்றின் புலன்கள் சார்ந்து வெவ்வேறு குணங்களையறியும் எனக் கூறின், நல்லது ஐம்புலனைச் சார்ந்து நின்றே ஐவகை அறிவுண்டாவன என்று தானே புத்தனும் கூறுகின்றான். அவ்வாறாயின் உயிர் அறியும் என்று சொன்னது மிகவும் அழகாயிருந்தது!

அழகிது என்றது இகழ்ச்சிக் குறிப்பு.

இச்செய்யுள் இந்திரியங்கள் இல்லையாயின் ஆன்மா அறியாது ஆகையால் 'ஆன்மா இல்லை' என்று கூறிற்று. *(15)*

செய்யுள் - 78

ஞானஞே யங்க ளன்றி
ஞாதிரு வென்று சொல்ல
ஆனதிங் கறிவோ வன்றோ
அன்றெனில் அவனி போலும்
தானதிங் கறிவே யென்னில்
சமைந்திடு நன்ப ருப்புப்
போனக மதற்குத் தானே
கறியெனப் புகன்ற தாமே.

பதவுரை

ஞான ஞேயங்கள் அன்றி ஞாதிரு என்று சொல்ல ஆனது இங்கு அறிவோ அன்றோ	அறிவும் அறியப்படும் பொருளும் அன்றி அறியும் பொருள் உண்டு என்று இவ்விடத்தில் கூறில் அதற்கு உண்டாயது அறிவோ அறியாததோ
அன்று எனில் அவனிபோலும்	அறிவில்லாதது என்று சொல்லின் மண் போலும் அசேதனமாம்
தான் அது இங்கு அறிவே என்னில்	அறியும் பொருள்தான் அறிவு என்று கூறின்,
சமைந்திடும் நன் பருப்பு போனகம் அதற்குதான் ஏ கறி என புகன்றது ஆம் ஏ	பருப்பாற் கூட்டிச் சமைத்த சோற்றுக்கு அப்பருப்புச் சோறுதானே கறியென்று கூறிய தன்மைத்து ஆகும் என்றவாறு.

விளக்கவுரை

அறிவும், அறியப்படு பொருளும் ஆக இரண்டு மன்றி அறியும் பொருளும் உண்டு எனக்கூறின் அஃது அறிவுடைப்பொருளோ? அறிவிலாப்பொருளோ? அறிவிலதாயின் மண்போன்று அசேதனமேயாம்; ஆகலின், பூதங்களின் வேறாக உயிர் உண்டு என இடமில்லை. அறியும் பொருள்தான் அறிவு என்று கூறின் அறியும் பொருளின் வேறாக அறிவு என்பது ஒன்று இல்லையாய் முடியும். எனவே, பருப்புச்சோறு உண்ண அதுவே கறி என்றதனோடு இஃது ஒக்கு. பருப்புச்சோறு என உணவுக்குப் பெயராயிருக்கக் கறியும் பருப்புச்சோறு என்னலாமா? ஆகலின், ஆன்மா என ஒன்றில்லை என்க.

இதனுள் பருப்புச்சோறு என்று அதற்குப் பெயராயிருக்கக் கறியும் பருப்புச்சோறு என்பது புனருத்தியாய தோடமாம். அதுபோல, ஞானம் அறிவாயிருக்க ஞாதிருவும் அறிவாகலிற்றனியும் வேண்டா என்பது கருத்து.

இச்செய்யுள் ஞான ஞேயங்களொழிந்த ஞாதிரு என்பதில்லை; ஆதலால், ஆன்மா இல்லை என்ற மறுத்துக் கூறிற்று. (16)

செய்யுள் - 79

உயிரினை அருவ தென்னில்
உருவுட னுற்று நில்லா
துயிரினை உருவ தென்னில்
உடலினி லுடல டங்கா
துயிரினை அணுவ தென்னில்
உடல்பல துவார மோடும்
உயிரினை நித்த மென்னில்
உணர்வுத யாந்த மின்றே.

பதவுரை

உயிரினை அருவது என்னில் உருவுடன் உற்று நில்லாது	நீ உண்டென்று கூறிய ஆன்மாவை அருவம் என்று சொல்லின் உருவம் ஆகிய உடலோடு அருவமாகிய ஆன்மாப் பொருந்தி நில்லாது; ஆதலால், அருவமன்று,
உயிரினை உருவது என்னில் உடலினுள் உடல் அடங்காது	ஆகையால் அந்த ஆன்மா உருவம் என்று கூறின் ஓர் உருவின் ஓர் உரு அடங்காது; ஆதலால், ஆன்மா உருவமன்று,
உயிரினை அணுவது என்னில் உடல்	அந்த ஆன்மாவை அணு என்று கூறின் உடலில் நில்லாது; பல துவாரத்தாற் போக வேண்டும்; ஆதலால், ஆன்மா அணு அன்று,
உயிரினை நித்தம் என்னில் உணர்வு உதயம் அந்தம் இன்று ஏ	அந்த ஆன்மாவை நித்தம் என்று கூறில் அறிவு தோற்றமும் கேடும் இல்லையாக வேண்டும்; இவையிற்றை யுடைத்தாகையால் ஆன்மா நித்தமும் அன்று என்றவாறு.

விளக்கவுரை

இச்செய்யுள் ஆன்மாவானது அரு, உரு, அணு, நித்தம் என்பவை அல்ல; ஆகையால், ஆன்மா இல்லை என மறுத்துக் கூறியது. (17)

செய்யுள் - 80

எங்குமாய் நின்ற தான்மா
என்றிடின் எங்கு மின்றாம்
தங்கிடும் நிறைவு தத்தம்
சரீரங்கள் தோறும் என்னின்
மங்கிடும் உடலத் தோடே
வடிவினில் ஓரி டத்தே
அங்கது நின்ற தென்னில்
அடிமுடி யறிவின் றாமே.

பதவுரை

எங்குமாய் நின்றது ஆன்மா என்றிடின் எங்கும் இன்றாம்	ஓர் ஆன்மா எங்கும் நிறைந்து நின்றது என்று கூறின் உடல் தோறும் பலபேதப்படும் ஆகையால் ஓர் ஆன்மா எவ்விடத்தும் உண்டாகாது,
தங்கிடும் நிறைவு தத்தம் சரீரங்கள் தோறும் என்னின் மங்கிடும் உடலத்தோடே	அந்த ஆன்மா தத்தம் உடல்கள்தோறும் நிறைந்து நிற்கும் என்று கூறின் உடல் கெடுமிடத்துத் தானும் கூடக் கெடவேண்டும்
வடிவினில் ஓர் இடத்தே அங்கு அது நின்றது என்னில் அடி முடி அறிவு இன்றாம் ஏ	அந்த ஆன்மா உறுப்பில் ஓர் இடத்தைத் தனக்கு இடமாகக் கொண்டு நின்று அறியும் என்று கூறின் தான் நின்ற இடம் அன்றி பாதாதிகேசமட்டாக அறியமாட்டாது; ஆகையால், அறியும் பொருளாகிய ஆன்மா இல்லை என்றவாறு.

விளக்கவுரை

இச்செய்யுள் ஆன்மா சம்பூரணன் அல்ல ஆகையாலும், உடலில் வியாபியல்ல ஆகையாலும், ஏகதேசியல்ல ஆகையாலும் ஆன்மா இல்லை என மறுத்துக் கூறிற்று.

'போதமுண்'டென்னும் செய்யுள் முதல் இச்செய்யுள் காறும் ஆன்மா இல்லை என மறுத்தது. *(18)*

செய்யுள் - 81

சாற்றிய கால மிங்குத்
தங்கிய வாறி தென்னை
தோற்றுவித் தளித்துப் போக்கும்
தொழிலிவை கால மென்னில்
போற்றிய பொருளிற் புக்குப்
பிணங்கிடும் பொருட்பி னின்றாம்
தேற்றிய இல்வ ழக்குத்
திரவியத் தியல்பி னாமே.

பதவுரை

சாற்றிய காலம் இங்கு தங்கிய ஆறு இது என்னை	*முன் சொல்லப்பட்ட காலம் இங்கு நின்றபடி எப்படி?*
தோற்றுவித்து அளித்துப் போக்கும் தொழில் இவை காலம் என்னில்	*பதார்த்தங்களைப் படைத்து அளித்து அழிக்குந் தொழிலை யுடைத்துக் காலம் என்று கூறின்,*
போற்றிய பொருளில் புக்குப் பிணங்கிடும்	*அப்படி மூன்றுவிதப்பட்ட பொருளிலே காலம் கூடி மயங்கும்,*
பொருட்பின் இன்றாம்	*அப்பொருட்குக் கேடு வந்தால் காலமும் இன்றாம்,*
தேற்றிய இல் வழக்கு திரவியத்து இயல்பின் ஆம் ஏ	*பொருள் மூன்று விதப்பட்டதன்றிக் காலம் மூன்றுண்டு என்று கூறப்பட்டது தெளிவை யுடைய இல்வழக்காம் என்றவாறு.*

விளக்கவுரை

பொருளியல்பாய வழக்குப் பெயரே காலம் எனக் கொள்க. "கற்பனை யாய் வழங்குகின்றது காலமென்று ரைத்தார்" இஃது அவர் வசனம். இல்வழக்கு - முயற்குக் கோடுண்டு என்கை.

இச்செய்யுள் முன்கூறிய முறையே காலமில்லை என மறுத்துக் கூறிற்று. *(19)*

செய்யுள் - 82

எனக்குநீ கிழக்கி ருந்தா
யாகின்மேற் கென்றா யென்பால்
எனக்குமேற் கிருந்தா னென்பால்
கிழக்கென வியம்பும் திக்குத்
தனக்குநாம் கொள்வ தெப்பால்
சாற்றிடாய் இல்வ ழக்குத்
தனக்குள தாகு முண்மை
தானில தாகு மன்றே.

பதவுரை

எனக்கு நீ கிழக்கு இருந்தாய் ஆகில் மேற்கு என்றாய் என்பால் எனக்கு மேற்கு இருந்தான் என்பால் கிழக்கு என இயம்பும்	*நீ எனக்குக் கிழக்கிருந்தாயாகின் என்னை மேற்கிருந்தான் என்று சொல்லுவை, எனக்கு மேற்கிருந்தான் ஒருவன் யான் இருந்த இடத்தைக் கிழக்கிருந்தான் என்று கூறுவன்,*
திக்குத் தனக்கு நாம் கொள்வது எப்பால் சாற்றிடாய்	*ஆதலால் திக்கு நாம் கொள்வது எப்பகுதி? நீ கூறிய கிழக்கையோ? அவன்கூறிய மேற்கையோ? சொல்லாய்,*
இல் வழக்கு தனக்கு உளதாகும் உண்மை தான் இலதாகும் அன்று ஏ	*நீ கூறிய இல்வழக்குக்கு உளதாம்; உள்வழக்கு இல்லையாம் என்றவாறு.*

விளக்கவுரை

பிரதிபேதம் - நீ கூறியதில் வழக்குன்ன தாமுண்மை வழக்கில்லையா மென்றவாறு.

இச்செய்யுள் முன் கூறிய முறையே 'திக்குமில்லை' என மறுத்துக் கூறிற்று. (20)

செய்யுள் - 83

உலகினைப் படைத்தா னென்றாய்
ஒருவனிங் குள்ள தாயின்
உலகினைப் படைக்க வேண்டா
இல்லையேற் படைக்க வொண்ணா
துலகினுக் குபாதா னந்தான்
உள்ளதாய்க் காரி யத்தாம்
உலகினைப் படைக்கி லங்கு
முளதில தாவ துண்டே.

பதவுரை

உலகினை படைத்தான் என்றாய் ஒருவன்	உலகத்தைப் படைத்தான் ஒரு கர்த்தா என்று கூறினாய்,
இங்கு உள்ளது ஆயின் உலகினை படைக்க வேண்டா	இவ்வுலகம் முன்பு உள்ளதாய்ப் பின்பு படைத்தானாயின் முன்பு உள்ளதை ஒருவன் படைக்க வேண்டுவதில்லை,
இல்லையேல் படைக்க ஒண்ணாது	இவ்வுலகம் முன்பு இல்லையாயின் ஒருவன் படைக்க உள்ளதாகாது,
உலகினுக்கு உபாதானம்தான் உள்ளதாய் காரியத்து ஆம் உலகினை படைக்கில்	அவ்வுலகினுக்குக் காரணம் உள்ளதாய்க் காரியம் கெடுமாதலால் காரியப்படும் உலகினைப் படைத்தான் என்று கூறின்,
அங்கும் உளது இலது ஆவது உண்டே	யாதொரு பொருள் உள்ளதும் இல்லதுமாக உண்டாமோ என்றவாறு.

விளக்கவுரை

பிரதிபேதம் - அவ்வுலகினுக்குக் காரணம் முன்பு உள்ளதாய்க் காரியங் கெடுதலால்,

அங்கு என்றது சுட்டு. ஏகாரம் வினா.

இச்செய்யுள் 'வையகம் படைக்கப்படாது' என்றும் அதனால் 'படைப்பானும் இலன்' என்றும் மறுத்ததாயிற்று. *(21)*

செய்யுள் - 84

உள்ளது கடாதி போல
உதிப்பித்தான் என்று ரைக்கின்
மெள்ளவே எங்கும் நின்று
விதித்தனன் உலகின் மீது
வள்ளல்தான் நின்றா னென்னில்
வந்ததா முலகம் முன்னே
தள்ளிடா தெங்கும் நிற்கின்
எங்குமுன் தந்த தாமே.

பதவுரை

உள்ளது கடாதி போல உதிப்பித்தான் என்று உரைக்கின்	மண்போல உலகிற்கு மூலம் உள்ளதாய்க் கடாதிகளைக் குலாலன் தோற்றுவிக்குமாபோல இவ்வுலகங்களை ஒருவன் உண்டாக்கினான் என்று நீ கூறின்,
மெள்ளவே எங்கும் நின்று விதித்தனன்	இவ்வுலகத்தை உண்டாக்குமிடத்து எவ்விடத்து நின்று உண்டாக்கினான்,
உலகின் மீது வள்ளல்தான் நின்றான் என்னில் வந்தது ஆம் உலகம் முன்னே	பிரபஞ்சத்திலே நின்று கர்த்தா உண்டாக்கினான் என்று கூறின் பிரபஞ்சம் முன்னே உண்டானதாம்,
தள்ளிடாது எங்கும் நிற்கின் எங்கும் முன் தந்தது ஆம் ஏ	நீங்கப்படாமல் எங்கும் நிறைந்து நின்று உண்டாக்கினான் என்று நீ கூறின் எங்கும் என்பது ஒருமுதலாய்க் கர்த்தாவைப் பின்பு தந்ததாம் என்றவாறு.

விளக்கவுரை

இச்செய்யுள் பிரபஞ்சம் படைப்பானொருவன் பிரபஞ்சத்தை நீங்கி வேறே நிற்குமிடம் இன்மையான் கர்த்தா இல்லை என்று மறுத்துக் கூறிற்று.

மண் முதற்காரணம், சக்கரம் சிவராதி துணைக்காரணம், குலாலன் நிமித்த காரணம் என்னில்? துணைக்காரணமின்றிக் குலாலனால் செயல் முடியாது. ஆதலால் ஒருவன் பிரபஞ்சத்தைப் படைக்கமாட்டான் என்க. (22)

செய்யுள் - 85

இல்லது கருணை யாலே
இயற்றினன் இறைவன் என்னில்
கொல்லரி உழுவை நாகம்
கூற்றமும் கொண்டு தோற்ற
வல்லவன் கருணை என்னோ
வலியினால் வேண்டிற் றெல்லாம்
பல்கவே படைத்தா னாயிற்
பித்தரைப் பணிந்தி டாயே.

பதவுரை

இல்லது கருணையாலே இயற்றினன் இறைவன் என்னில்	எல்லாவற்றிற்குங் கர்த்தாவானவன் இருக்குமிடம் நியமிக்கப்படாமையின் அப்படி அந்நியமான கர்த்தா காருண்ணியத்தினாலே இல்லாதது ஒன்றைப் படைத்தான் என்று கூறின்,
கொல் அரி உழுவை நாகம் கூற்றமும் கொண்டு தோற்ற வல்லவன் கருணை என்னோ	கொலைத்தொழிலைப் பொருந்தின சிங்கத்தையும் புலியையும் யானையையும் கூற்றத்தையும் உண்டாக்கிக்கொண்டு தோற்ற வல்லவனுக்குக் காருண்ணியம் என்னோ,
வலியினால் வேண்டிற்று எல்லாம் பல்கவே படைத்தான் ஆயின் பித்தரை பணிந்திடாய் ஏ	கர்த்தா வல்லவன் ஆகையாலே எல்லா ஆன்மாக்களும் வர்த்திக்கும்படி படைத்தான் என்று கூறின் அஃது ஓர் காரண காரியப்படாமல் பித்தர் செய்யும் குணம் ஆதலால் கர்த்தா என்று வணங்குவாயாக என்றவாறு. வர்த்திக்கும் - இருக்கும்; வர்த்தித்தல் - உளதாதல்.

விளக்கவுரை

இதுவும் பிரபஞ்சம் ஒருவன் படைக்கப்படாதது ஆதலால் கர்த்தா இல்லை என்று மறுத்தது. *(23)*

செய்யுள் - 86

பெறுவதிங் கென்ப டைத்துப்
பெற்றது விளையாட் டென்னில்
சிறுமழ விறைய தாகும்
செய்திடும் கன்மத் தென்னின்
உறுபெருங் கன்மம் செய்வோர்
முன்புள ராவ ருண்மை
அறிவுறின் ஞால மெல்லாம்
அநாதியென் றறிந்தி டாயே.

பதவுரை

பெறுவது இங்குஎன் படைத்து பெற்றது விளையாட்டு என்னில்	சர்வான்மாக்களையும் இவ்விடத்துப் படைத்துப் பெறும்பேறு என் என்று கேட்டவிடத்துப் பெறும்பேறு விளையாட்டு என்று கூறின்,

சிறு மழவு இறை அது ஆகும்	உன் கர்த்தா இள அறிவினனாய்ச் சிறு பிள்ளையாக வேண்டும்
செய்திடும் கன்மத்து என்னின் உறு பெரும் கன்மம் செய்வோர் முன்பு உளர் ஆவர்	கன்மத்துக்கு ஈடாகப் படைத்தான் என்று கூறின், கன்மம் செய்வோர் அநாதியாவர்,
உண்மை அறிவு உறின்	இதனை மெய்யாக அறியின்,
ஞாலம் எல்லாம் அநாதி என்று அறிந்திடாய் ஏ	பிரபஞ்சமெல்லாம் அநாதியே உள்ளது என்று அறிவாயாக என்றவாறு

விளக்கவுரை

இச்செய்யுளும் பிரபஞ்சம் ஒருவன் படைக்க உண்டாவதில்லை. அதனால் படைப்பானும் இல்லை என மறுத்துக் கூறிற்று. *(24)*

செய்யுள் - 87

உருவொடு நின்றா னென்னின்
உருவமுன் படைத்தார் வேண்டும்
உருவவன் இச்சை யென்னின்
உலகெலாம் இச்சை ஆகும்
உருவுல கத்து ளோர்கட்
குறுவது கன்மால் என்னின்
உருவுடை யோர்கட் கெல்லாம்
உற்றது கன்மத் தாமே.

பதவுரை

உருவொடு நின்றான் என்னின் உருவம் முன் படைத்தார் வேண்டும்	உன் கர்த்தா உரூபி என்று சொல்லின் அவ்வுருவத்தை முன்பு உண்டாக்கினார் வேண்டும்,
உருவு அவன் இச்சை என்னின் உலகு எலாம் இச்சை ஆகும்	அவனது இச்சையாலே உருவத்தையெடுத்துக் கொண்டான் என்னின் உலகத்துள்ளோரும் தமது இச்சையாலே உரு எடுத்துக் கொண்டார் ஆவார்,

உரு உலகத்து உளோர்கட்கு உறுவது கன்மால் என்னின் உருவுடையோர் கட்கு எல்லாம் உற்றது கன்மத்து ஆம்ஏ	உருவம் உலகத்திலுள்ளவர்க்கு வருவது அவரவர் கன்மத்தால் என்று நீ சொல்லின் உருவமுடையவர்கள் எல்லார்க்கும் உருவம் உறுவது கன்மத்தாலேயே ஆகவேண்டும் என்றவாறு.

விளக்கவுரை

கன்மத்தால் என்பது கன்மால் என விகாரப்பட்டது
இச்செய்யுள் கர்த்தா உரு என்பதனை மறுத்தது. *(25)*

செய்யுள் - 88

அருவெனிற் பவத்தி னின்று
மெடுத்திடான் ஆகா சம்போல்
மருவினன் நிழல்போ லென்னில்
மருவினோர்க் காகு மாட்சி
பெருகிய அறிவுண் டென்று
பேசிடின் நேசத் தோடும்
கருதிட வுருவம் வேண்டும்
இல்லையேற் கருத லின்றே.

பதவுரை

அரு எனில் பவத்தில் நின்றும் எடுத்திடான் ஆகாசம் போல்	உன் கர்த்தா அரூபி என்று கூறில் ஆகாசம் போல் சேட்டையிலன் ஆகையால் ஆன்மாக்களைப் பிறவித்துன்பத்தினின்றும் எடுத்திட மாட்டாதவன் ஆவன்,
மருவினன் நிழல்போல் என்னில் மருவினோர்க்கு ஆகும் மாட்சி	யாவரும் சென்று அடையத்தக்க நிழல் போல்வன் என்னில், அந்நிழல் தன்னிடத்து வந்து மருவினோர்க்கே நன்மையைக் கொடுத்தலால் அவனும் வியாபி அல்லன்,
பெருகிய அறிவு உண்டு என்று பேசிடின் நேசத்தோடும் கருதிட உருவம் வேண்டும்	ஏகதேசி ஆயினும் நிறைந்த அறிவினையுடையன் என்று கூறின் விருப்போடும் சிந்தித்து அறியத்தக்கதோர் உருவு உண்டாதல் வேண்டும்,
இல்லையேல் கருதல் இன்று ஏ	அப்படி அறியத்தக்க உரு இல்லையாயின் அறிவும் இல்லையாம் என்றவாறு.

விளக்கவுரை

இச்செய்யுள் கர்த்தா அருபி என்பதனை மறுத்துக் கூறிற்று. *(26)*

செய்யுள் - 89

எங்கள்நூல் அநாதி யாக
இறைவனுண் டென்னும் என்னின்
உங்கள்நூல் உரைப்பா ரின்றி
ஒதுவ தழகி தாகும்
அங்கவன் தன்னை நூல்கொண்
டறிந்தனம் அவனைக் கொண்டே
இங்குநூல் அறிந்தோ மென்னில்
ஈதொராச் சரிய மாமே.

பதவுரை

எங்கள் நூல் அநாதியாக இறைவன் உண்டு என்னும் என்னின் உங்கள் நூல் உரைப்பார் இன்றி ஒதுவது அழகிது ஆகும்	*எங்கள் நூலாகிய வேதாகமங்கள் அநாதியும் ஆகிக் கர்த்தா உண்டு என்று சொல்லும் என்று கூறின் உங்கள் நூலாகிய வேதாகமங்கள் சொல்லுவாரும் இன்றித் தோன்றும் என்பது அழகிதாய் இருக்கும்,*
அங்கு அவன் தன்னை நூல் கொண்டு அறிந்தனம் அவனைக் கொண்டே இங்கு நூல் அறிந்தோம் என்னில் ஈது ஓர் ஆச்சரியம் ஆம் ஏ	*அவ்விடத்துக் கர்த்தா உண்டு என்று வேதங் கொண்டு அறிந்தனம் என்றும், அந்தக் கர்த்தாவைக் கொண்டே வேதம் கேட்கப்பட்டது என்றும் கூறின் இஃது இங்ஙனமே மயங்கினது இதனை முன்கேட்டும் கண்டும் அறிந்தன அல்லவாம் என்றவாறு.*

விளக்கவுரை

ஆச்சரியம் என்றது இகழ்ச்சிக் குறிப்பு.

எங்கள் நூல்கள் வேதாகமங்கள், அவை அநாதியாகிய கர்த்தா ஒருவர் உண்டு எனக் கூறுவன என்னில், அவ்வேதாகமங்கள் அநாதியா? ஒருவரால் உண்டாக்கப்பட்டனவா? சொல்லுவார் இன்றி நூல்கள் உளவாமா? அவைகளைச் சொன்னவன் கர்த்தா என்னில், கர்த்தாவை அறிந்து அவனால் அவை சொல்லப் பட்டன என்று அறிந்ததா? நூல்களை வைத்துக் கர்த்தாவை அறிந்ததா? இது மயக்கந்தருவதாம். இவ்வாறு கேட்டதுமில்லை, கண்டதுமில்லையாம் என்க. *(27)*

செய்யுள் - 90

உற்றெழு மரங்க ளாதி
உயிரின்றிப் பூத ரூபம்
பற்றியிப் பாரின் மீது
பாங்கினாற் பலவு மாகிப்
புற்றொடு மயிர்கொம் பாதி
போலவே தோன்றி மாயும்
மற்றுள யோனி கட்குப்
பயனென வழங்கு மன்றே.

பதவுரை

உற்று எழு மரங்கள் ஆதி உயிர் இன்றி பூத ரூபம் பற்றி இப்பாரின் மீது பாங்கினால் பலவும் ஆகி புற்றொடு மயிர் கொம்பு ஆதி போலவே தோன்றி மாயும்	*பூமியினிடமாக நின்று வளரும் மரங்கள் முதல் புல் ஈறாக உள்ளன தாவரங்களாம், அவை உயிர்வர்க்க மல்லவாய்ப் பிருதிவி அப்புத் தேயு வாயு என்னும் பூத ரூபத்தைப் பொருந்திய பகுதிகளாகப் பலபேதப்பட்டுப் புற்றுப் போலவும் மயிர் போலவும் கொம்பு போலவும் உண்டாய் வளர்ந்து மீளவும் தோன்றின முறைமைப் பாட்டிலே கெடும்; இஃது யாது? காரணமாய் உண்டாயது என்னின்?*
மற்று உள யோனிகட்கு பயன் என வழங்கும் அன்றே	*அண்டசம் சுவேதசம் சராயுசம் என்னும் மூன்று பேதத்திலும் உண்டாகிய ஆன்மாக்களுக்குப் பிரயோசன காரணத்தால் அநாதியே உண்டாய் வழங்கும் என்றவாறு.*

விளக்கவுரை

இச்செய்யுள் உற்பீச வர்க்கம் ஆன்மவர்க்கத்தது அல்ல என்று மறுத்துக் கூறிற்று. *(28)*

செய்யுள் - 91

கொன்றிட லாகா தென்றும்
கொன்றவை கொண்டு நாளும்
தின்றிட லாகும் மண்ணோ
டொத்திடும் செத்த வெல்லாம்

ஒன்றிய வாசம் ஊட்டி
உண்ணுநீர் வைத்த வர்க்கோ
சென்றுநின் றுண்ட வர்க்கோ
புண்ணியம் செப்பி டாயே.

பதவுரை

கொன்றிடல் ஆகாது என்றும்	தான் ஓர் ஆன்மாவைக் கோறல் ஒருக்காலும் நியாயமன்று,
கொன்றவை கொண்டு நாளும் தின்றிடல் ஆகும் மண்ணோடு ஒத்திடும் செத்த எல்லாம்	மாண்ட எல்லாம் மண்ணோடு ஒக்கும்; ஆதலால், ஒருவர் கொல்லப்பட்டவற்றைக் கைக்கொண்டு எப்பொழுதும் புசிக்கலாம்; அதனால், பாவம் உண்டாகாது,
ஒன்றிய வாசம் ஊட்டி உண்ணு நீர் வைத்தவர்க்கோ சென்று நின்று உண்டவர்க்கோ புண்ணியம் செப்பிடாய் ஏ	மணங்களாலே கட்டப்பட்டு நீர் அருமையாய வழிகளிலே வைக்கப்பட்ட தண்ணீரதனை உண்டாக்கி வைத்தவர்க்குப் புண்ணியம் உண்டாயதோ? வழிநடந்து தாகித்துக் குடித்தவர்க்குப் புண்ணியம் உண்டாயதோ? சொல்லாய்; வைத்தவர்க்கே புண்ணியம் உண்டாம்; ஆதலால், கொன்றவர்க்கே பாவம் உண்டாவது, தின்றவர்க்குப் பாவம் இல்லையாம் என்றவாறு.

விளக்கவுரை

இச்செய்யுள் உயிர்களைக் கொல்லலாகாது, தின்னலாகும்; தின்றாற் பாவமில்லை என்பது கூறிற்று. கொன்றவனுக்கே பாவம்.

தின்றவர்க்கும் ஏவல் உடம்பாடுண்டாகிற குற்றமாம் அல்லது குற்றமில்லை எனக்கொள்க. கொண்டு தின்றவனுக்குக்கொலைப்பாவம் வரும் என்னில், ஓர் ஆற்றுக்குள்ளே கருவாட்டுப் பொதி இட்டுவைத்தால் இரவு ஆற்று நீர் வந்து எடுத்துப்போக நாட்டில் கொள்ள இருந்தவர்க்குப் பாவம் ஆமோ? பாவ வரலாறு யாவர்க்குளதாம்? ஆதலாற் கொண்டு தின்றவர்க்குப் பாவமில்லை என்க.

செய்யுள் - 92

ஒங்கிய வுருவ மோடும்
வேதனை குறிப்பி னோடும்
தாங்குபா வனைவிஞ் ஞானம்
தாமிவை ஐந்தும் கூடிப்
பாங்கினாற் சந்தா னத்திற்
கெடுவது பந்த துக்கம்
ஆங்கவை பொன்றக் கேடாய்
அழிவது முத்தி யின்பம்.

பதவுரை

ஒங்கிய உருவமோடும் வேதனை குறிப்பினோடும் தாங்கு பாவனை விஞ்ஞானம் தாம் இவை ஐந்தும் கூடிப் பாங்கினால் சந்தானத்தில் கெடுவது பந்த துக்கம்	மிக்க உருவம், வேதனை, குறிப்பு, பாவனை, விஞ்ஞானம் என்னும் ஐந்து கந்தமும் ஒருமைப்பட்டு ஒழுங்கிலே காரியம் கெடக் காரணம் கிடக்கும் என்பது மிகுத்துரையில் வழக்குமாய்ப் பந்த துக்கமும் ஆம்; ஐந்து கந்தமும் (கூட்டமும்) காரணக் காரியத் தொடர்ச்சியாய்க் கெட்டுத் தோன்றுவன. இது குற்றவீடு,
ஆங்கு அவை பொன்ற கேடு ஆய் அழிவது முத்தி இன்பம்	அவ்விடத்துச் சொல்லப்பட்ட கந்தங்கள் ஐந்தும் நேராகக்கெட்டு வீட்டை அடையும் என்பது முத்தியின்பமாம்; இது கந்தவீடு என்றவாறு.

விளக்கவுரை

இனி, உருவமாவது எட்டு. அவை பூதவுருநாலும், உபதானவுரு நாலும் ஆம். மேல் வரலாறு:- பிருதிவி, அப்பு, தேயு, வாயு எனும் நாலும் பூதவுரு. வலி, கந்தம், இரதம், வன்னம் எனும் நாலும் உபாதானவுரு. ஆக. 8. வேதனையாவது மூன்று. அவை வருமாறு:- குசலாவேதனை, அகுசலா வேதனை, குசலாகுசலாவேதனை ஆக - 3. குறிப்பாவது ஆறு. அவை வருமாறு:- சோத்திரம், துவக்கு, சகூ™சிங்குவை, ஆக்கிராணம், மனம் ஆக - 6. பாவனை இருபது அவை வருமாறு:- தீக்குணம் பத்து, நற்குணம் பத்து. தீக்குணங்களாவன:- பொய் சொல்லல், கோட்சொல்லல், கோபித்துச் சொல்லல், பயனில சொல்லல் என வாக்கின் குணம் - 4. களவிற்குப் போகுதல், வறிதே தொழில் செய்தல், கொலை செய்தல் எனக் காயத்தின் குணம் - 3. கொலை நினைக்கை, காமப்பற்று, ஆசை என மனத்தின் குணம் - 3. ஆகப்பத்து.

இனி, நற்குணங்களாவன - மெய்யுரை, நல்வார்த்தை, இனியன கூறல், பயன்படுசொல் என வாக்கின் குணம் - 4. பள்ளி வலம்வரல், தவம்புரிதல், தானம் செய்தல் எனக் காயத்தின் குணம் - 3. அருள் நினைவு, ஆசையறுத்தல், தவப்பற்று என மனத்தின் குணம் - 3. ஆக நற்குணம் பத்து; ஆகப்பாவனை இருபதும் மானச வாசிக காயங்களான் வருவனவாம். விஞ்ஞானம் ஆறு. அவையாவன:- சத்தம், பரிசம், ரூபம், ரசம், கந்தம், சித்தம் - ஆக 6. ஆகப் பஞ்சகந்த பேதம் நாற்பத்து மூன்று. இதற்கு அவன் வசனம் - "எட்டிவை யுருவ மூன்று வேதனை யாறு ஞானம், ஒட்டிய குறிப்போ ராறு செய்கையும் இருப தாகக், கட்டிய பஞ்ச கந்தம் கணத்தினில் பங்க மாகும், தொட்டநாற் பத்து மூன்றும் சுகதநூற் றுணிவு தானே" என்பதாம். சந்தானமாவது - தொடர்ச்சி. அந்தத் தொடர்ச்சி நால்வகையாம். அவை வாயுசந்தானம், தீபசந்தானம், தாராசந்தானம், பிபீலிகாசந்தானம் என்பனவாம்.

இச்செய்யுள் குற்றவீடும், கந்தவீடும் கூறிற்று. விஞ்ஞானகந்தம் ஆறாவன - இந்திரியங்களையும், மனத்தையும் பற்றிப்பிறக்கும் அறிவுகள். (30)

செய்யுள் - 93

அழித்திடும் அராக மாதி
அகற்றிநல் லறங்கள் பூரித்
திழித்திடும் புலன்கள் போக்கி
இன்பொடு துன்பம் வாட்டிப்
பழித்திடாப் பழுதில் வாழ்க்கை
எட்டையும் பாரித் தெல்லாம்
ஒழித்திடும் ஞான சீலம்
சமாதியின் உறுதி யாமே.

பதவுரை

அழித்திடும் அராகம் ஆதி அகற்றி	நன்மையைக் கெடுக்கும் காமக் குரோத லோப மோக மதமாற்சரியங்களை நீக்கி,
நல் அறங்கள் பூரித்து	நன்றான தன்மங்களை நிறையச் செய்து,
இழித்திடும் புலன்கள் போக்கி	பொல்லாங்கைச் செய்யும் புலன் வழிச் சேறலைக் கைவிட்டு,
இன்பொடு துன்பம் வாட்டி	துன்ப இன்பங்களை ஒழித்துப் புண்ணிய பாவங்களைக் கெடுத்து,

பழித்திடா பழுது இல் வாழ்க்கை எட்டையும் பாரித்து	பிறரால் பழிக்கப்படாத குற்றமில்லாத எட்டையும் விரித்து (எனவே பழிபடு தீவாழ்க்கை எட்டையும் சுருக்கி),
எல்லாம் ஒழித்திடும் ஞான சீலம் சமாதியின் உறுதியாமே	மற்றும் தோஷங்களானவையெல்லாம் ஒழித்திடும் ஞானகுணமாவது (தீவாழ்க்கை எட்டையும் கெடுத்திடும் அறிவின் குணம்) சமாதியின் உறுதியாம் என்றவாறு.

விளக்கவுரை

பழுதிலா வாழ்க்கை எட்டாவன - நற்காட்சி, நல்லூற்றம், நல்வாய்மை, நற்செய்கை, நல்வாழ்க்கை, நன்முயற்சி, நற்கடைப்பிடி, நல்லுளத்தோர் தலைப்பாடு என்பன. தீ வாழ்க்கை எட்டாவன - நற்காட்சி முதலாயினவற்றை மாறிக்கொள்க. சமாதியின் உறுதி வாழ்க்கை இவை எட்டும் கெட இருத்தல். இதற்கு அவன் வசனம்:

"ககனமும் ஆன்மாவும் காரணனு மில்லை
சகலமு மாமநித்தம் சார்வாற் பிறவி
வகைவினை யுண்டா மதுபொன்ற மாய்தல்
சுகதனூன் முத்தித் துணிவு" என்பதாம்.

நல்லனவற்றை யெல்லாம் கெடுக்கும் காமக் குரோதம் முதலிய தீக்குணங்களை அகற்றி, நல்லறங்களை ஆற்றி, ஐம்புல அடக்க முடையனாய் இன்ப துன்பங்களை விடுத்துப், புண்ணியபாவங்களைக் கெடுத்துக், குற்றமில்லாத நல்வாழ்வுக்குரிய எட்டுப் பண்புகளையும் கைக்கொண்டு, அவற்றிற்கு மாறானவற்றையெல்லாம் ஒழிக்கும் ஞான நிலையே சமாதியென்று பேசப்பட்டுளது.

இச்செய்யுள் சமாதியின் முறைமை கூறிற்று.

'நீதியார்' என்னும் செய்யுள் முதல் இச்செய்யுள்காறும் செய்யுள் முப்பத்தொன்றானும் பௌத்த மதம் கூறிற்று. (31)

இரண்டாவது சௌத்திராந்திகன் மதம் முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் – 93.

.....

சௌத்திராந்திக மதத் தொகுப்பு

புத்தரின் அறிவுரைகளும், அருட்செயல்களும் அடங்கிய நூல் பிடகமென்றழைக்கப்படும். பிடக மென்பதற்குக் கூடை என்பது பொருள். இக்கூடைகள் அவர்தம் ஏடுகளைக் கொண்டிருந்தன என்பர். இப்பிடகம் விநயபிடகம், சுத்தபிடகம், அபிததம்மபிடகம் என மூன்று தொகுதிகளாக உள்ளது. இவை கி.மு. முதல் நூற்றாண்டில் இலங்கையரசனான வட்டகாமணியின் ஆதரவு பெற்ற தேரர்களால் வடிவம் பெற்றன. இவற்றுள் சுத்தபிடகம் என்பது சூத்திர பிடகம் என்றும் அழைக்கப்படும். இது புத்தரின் புனிதக் கொள்கைகளை உரையாடல் அடிப்படையில் உரைநடை, கதைகள், மூதுரைகள், கவிதைகள் என்னும் பலவடிவங்களால் அமைந்த மிகப்பெரிய பிடகமாகும். இதில் கூறப்பட்ட கருத்துக்களின் அந்தங்களை (முடிவுகளை) புத்தரிடத்து வினவியவர்கள் சௌத்திராந்திகர் எனப்பட்டனர். (சூத்திரம் + அந்தம் = சூத்திராந்தம் - சூத்திரத்தின் முடிவு. இம்முடிபை வினவியோர் சௌத்திராந்திகர் என அழைக்கப்பட்டனர்). 'இந்நெறியை உருவாக்கியவர் குமாரலப்தர். இவர் நாகார்ச்சுனரின் சம காலத்தவராதலால் கி.பி. 2-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவராவர்'[1]. இம்மதம் ஹீனயான பௌத்தத்தின் முக்கியமான பிரிவாகும்.

மேலும் இம்மதம் மக்கள் அன்றாட வாழ்க்கையில் கடைப்பிடிக்க வேண்டிய அறவுரைகளையும் கூறுகிறது. அவையாவன கொல்லாமை, கல்லாமை, பொய்யாமை, புறங்கூறாமை, வெகுளாமை என்பன. இம்மதத்தார் அறிவுரை பகர்வதைச் சம்பந்தர் தமது தேவாரத்தில்,

'புத்தரொ டமணர்க ளறவுரை புறவுரை'[2]
'சாக்கியர்கள் குன்றிய அறவுரை'[3]

என்று குறிப்பிடுகின்றார்.

சௌத்திராந்திகன் முதலிய நால்வரும் நீதிசாத்திரங்களைக் கொண்ட பிடகநூலை ஓதுவர். உருவம் (உடல்பொருள் கூறுகள்), வேதனை (உணர்ச்சி), குறிப்பு (கருத்தமைவு, பொதுக்கூறுகளின் தேர்வு), பாவனை (உள்ள உறுதியும், பிற ஆற்றல்களும்), விஞ்ஞானம் (தூய உணர்வு அல்லது அறிவு) என்னும் ஐந்து சேர்க்கைகளின் குணங்களையுடையராய், உடலைத் துவராடையால் போர்த்து அரச மரத்தினைத் தெய்வமெனத் தொழுவார்[4].

---

1. இந்திய தத்துவ ஞானம், பக். 165
2. முதல் திருமுறை, 125-10
3. முதல் திருமுறை, 113-10
4. கீழை மேலை நாடுகளின் மெய்ப்பொருள் இயல்வரலாறு, தொகுதி-1, பக். 327.

கொள்கைகள்

இவர்களது கொள்கைகள் சிவஞான சித்தியார் பரபக்கத்தில் முப்பத்தொரு பாடல்களில் எடுத்துரைக்கப்படுகின்றன:

புத்தனே இறைவன்

இவ்வுலகத்தில் பொய், கொலை, களவு, கள், காமமென்ற ஐவகைத் துன்பங்களை வெறுத்தவனும், எவ்வுயிர்த் துன்பத்தையும் தன்னுயிர்த் துன்பம் போல் கருதுபவனும், தேவர்களால் வணங்கப்படும் பிடகநூலை அருளியவனுமாய புத்தனே இறைவனாவன். இக்கருத்தினை மணிமேகலையும்,

> "தன்னுயிர்க் கிரங்கான் பிறவுயிரோம்பும்
> மன்னுயிர் முதல்வன்"[1]

என்றும்,

> "புலவன் தீர்த்தன் புண்ணியன் புராணன்
> உலக நோன்பின் உயர்ந்தோ யென்கோ
> குற்றங் கெடுத்தோய் செற்றஞ் செறுத்தோய்
> முற்ற உணர்ந்த முதல்வா என்கோ
> காமற் கடந்தோய் ஏம மாயோய்
> தீ நெறிக் கடும்பகை கடிந்தோய்"[2]

என்றும் எடுத்தியம்புகிறது.

அளவை யியலும் தத்துவக் கருத்துக்களும்

பௌத்தசமயம் காட்சி, கருதல் என்ற இரண்டு அளவைகளை மட்டுமே கொள்கிறது. இவ்விரண்டாலும் விளங்குவன அறிவும், அறியப்படும் பொருளுமாகும். இவை கணந்தோறும் தோன்றி அழிந்துவரும். இவ்வறிவு உரு, அரு, வீடு, வழக்கு என நால்வகைப்படும். இவற்றுள் ஒவ்வொன்றும் இரண்டாய் விரியும். ஆகவே அறியப்படுவன எட்டாகும்.

உரு என்பது புறத்தே காணும் பொருள்களும் அவற்றின் தன்மையுமாகும். புறத்தேகாணும் பொருள்களைப் பூதம் எனவும் அவற்றின் தன்மையை உபாதேயம் (பற்றப்படுவது) எனவும் அழைப்பர். அருவென்பது சித்த அருவெனவும் கன்ம அருவெனவும் இரண்டாகும். வீடானது குற்றவீடு, கந்த வீடென இரண்டாகும். வழக்கு உள்வழக்கு இல்வழக்கு என இரண்டாகும்.

---

1. மணிமேகலை, காதை - 25, அடி. 116-117.
2. மணிமேகலை, காதை - 5, அடி. 98-103.

பூதமானது மண், புனல், அனல், காற்று என நான்காம். உபாதாயங்கள் வலிமை, நாற்றம், சுவை, நிறம் என நான்காம். இவை எட்டினாலும் பொருளும் உடம்பும் உண்டாகும். பொருள்களைப் பொறிவாயிலாகக் காண்பது சித்த அருவாகும். அப்பொருளை நன்று தீதென்றறியற் பாலது கன்ம அருவாகும்.

காம, வெகுளி மயக்கங்களை விடுதல் குற்ற வீடாகும். உருவம், வேதனை, குறிப்பு, பாவனை, விஞ்ஞானமென்னும் ஐந்து கந்தங்களும் அற்றொழியப் பெறுவது கந்த வீடாகும். இவ்வைந்து கந்தங்களையும் மணிமேகலை,

"உருவு நுகர்ச்சி குறிப்பே பாவனை
உள்ள வறிவிவையைங் கந்தமாவன"[1]

என்றும், மெய்ஞ்ஞான விளக்கம்,

"உருவம் வேதனை குறிப்புப் பாவனை விஞ்
ஞானம் என உரைத்த ஐந்தும்
மருவியே சந்தானத்தால் கெடுதல்
பந்தத்துக்கம் மற்றிவ் வைந்தும்
பொருவிலாவகை முற்றக் கெடுதல் முத்தி"[2]

என்றும் குறிப்பிடுகின்றன. வழக்கிரண்டும் தொகையுண்மை வழக்கு, தொகையின்மை வழக்கு, தொடர்ச்சியுண்மை வழக்கு, தொடர்ச்சியின்மை வழக்கு, மிகுத்துரையுண்மை வழக்கு, மிகுத்துரையின்மை வழக்கு என ஆறாம். இவ்வழக்கினை மணிமேகலை,

"அறுவகை வழக்கு மறுவின்று கிளப்பிற்
றொகையே தொடர்ச்சி தன்மை மிகுத்துரை
இயைந்துரை யென்ற நான்கிது மியைந்த
உண்மை வழக்கு மின்மை வழக்கும்"[3]

எனக் குறிப்பிடுகிறது.

ஒருவனாகிய இறைவன் உருவக்கந்தம் முதலாகிய ஐங்கந்தங்களுடன் கூடி வருபவன் என்றுரைத்தல் தொகையுண்மை வழக்கு. இறைவன் ஐங்கந்தங்களோடு கூடாமல் உண்டாக்குவன் என்பது தொகையின்மை வழக்காம். காரணகாரியத் தொடர்ச்சியாய்ப் பொருள்கள் எப்பொழுதும் அழிந்து தோன்றுவன என்பது தொடர்ச்சியுண்மை வழக்காம். கர்த்தாவே எக்காலத்துமுள்ளான் என்பது தொடர்ச்சியின்மை வழக்காம். தோன்றிய பொருள்கள் அழியுமென்று கூறுதல் மிகுத்துரையுண்மை வழக்காம். தோன்றிய பொருள்கள் காரியங் கெட்டு காரணமாய் நிற்குமென்பது மிகுத்துரையின்மை வழக்காம்.

---

1. மணிமேகலை, காதை - 30, அடி 189-190.
2. மெய்ஞ்ஞான விளக்கம், சருக்கம் 32, பாடல் 31.
3. மணிமேகலை, காதை - 30, அடி 191-194.

மேலும் வழக்கென்பது உள்வழக்கும், இல்வழக்கும், உள்ளது சார்ந்த உள்வழக்கும், உள்ளது சார்ந்த இல்வழக்கும், இல்லது சார்ந்த உள்வழக்கும், இல்லது சார்ந்த இல்வழக்குமென ஆறாம். அவற்றுள் உள்ளதை உண்டென உரைத்தல் உள்வழக்கு. அஃது யானைக்குக் கோடு உண்டென்பது. இல்லதனை இல்லென்றுரைப்பது இல்வழக்கு. அது முயற்குக் கொம்பில்லை என்பது. அறிவைச் சார்ந்து அறிவுண்டென்பது உள்ளது சார்ந்த உள்வழக்கு. அறிவு கெட்டால் பின் அறிவு உண்டாகாது என்பது உள்ளது சார்ந்த இல்வழக்கு. அறிவு முன்பு இல்லாததாய்ப் பின் உண்டென்பது இல்லது சார்ந்த உள்வழக்கு. உள்ளங்கையில் உண்டாய மயிரால் கயிறு செய்யப்பட்டது என்பது இல்லது சார்ந்த இல்வழக்கு. இதனை மணிமேகலை,

"உள்ளது சார்ந்த வுண்மை வழக்கும்
இல்லது சார்ந்த இன்மை வழக்கும்
உள்ளது சார்ந்த இன்மை வழக்கும்
இல்லது சார்ந்த வுண்மை வழக்குமெனச்
சொல்லிய தொகை"[1]

என்றும், மெய்ஞ்ஞான விளக்கம்,

"ஓதியிடின் உள்வழக்கில் வழக்குண்மை
சார்ந்தவுண்மை உண்மை சார்ந்த
ஏதமுறு மில் வழக்கில்லது சார்ந்த வுண்மை
யின்மை சார்ந்த வின்மை
பேதமிவை யாறாமுள் வழக்குளதை
யுளதென்று பேசலாகும்
மூதுலகினில் வழக்குச் சொலின் முயற்
கோடில்லையென மொழிவதாமால்"[2]

என்றும்,

"அறிவினைச் சார்ந்தறி வுதிக்கு மென்ப துண்மை
சார்ந்த வுண்மையறிவைச் சார்ந்தே
யறிவுபின் னருதியா தென்றுரைப் பதுண்மை
சார்ந்த வின்மை யறிவில்லாம
லறிவுபின் னருதிக்கு மென்ன தில்லது சாருண்மை
யின் மையது சாரின்மை
யறிவினைக் கொண்டறிந்திட லுள்ளங்கை
மயிர்க் கயிறென்பதாகு மென்றாம்"[3]

என்றும் எடுத்துக்காட்டோடு விளக்குகிறது. இவையன்றி இதன்சார்பாகப்

1. மணிமேகலை, காதை - 30, அடி 191-194.
2. மெய்ஞ்ஞான விளக்கம், சருக்கம் 32, பாடல் 12.
3. மெய்ஞ்ஞான விளக்கம், சருக்கம் 32, பாடல் 13.

பன்னிரண்டுள. அவை பேதைமை, செய்கை, உணர்ச்சி, உருவருவவாயில், நுகர்ச்சி, வேட்கை, பற்று, கருமத்தொகுதி, முற்றோற்றம், பிணி, மூப்பு, சாக்காடு[1] என உரையாசிரியராகிய தத்துவப் பிரகாசர் குறிப்பிடுகிறார். இதனை மணிமேகலை ஆசிரியரும்,

> "பேதைமை செய்கை யுணர்வே யருவுரு
> வாயி லூறே நுகர்வே வேட்கை
> பற்றே பவமே தோற்றம் வினைப்பயன்
> இற்றென வகுத்த வியல் பீராறும்
> பிறந்தோ ரறியிற் பெரும்பே றறிகுவர்
> அறியா ராயி னாழ்நர கறிகுவர்"[2]

என்று குறிப்பிடுகிறார். இவ்விதம் முற்கூறிய உரு, அரு, வீடு, வழக்கு என்னும் நான்கும் அவற்றின் விரியுமே நிலையானவையாகும். இவற்றுக்கு மாறான வான், உயிர், காலம், திக்கு, கடவுள் என்பவை நிலையானவையன்று என்று இம்மதத்தார் குறிப்பிடுகின்றனர்.

பிறர் கோள் மறுத்தல்

1. வான் இல்லை

மண் முதலிய நான்கும் தொழிற்படுகின்றன. வானம் தொழிற்படுவதில்லை. அது பூதம் நான்கினையும் தாங்குமெனின் அருவமாதலால் தாங்காது. அது ஒலி தோன்றுதற் கிடமென்றுரைப்பினும் அவ்வொலி வானின் குணமன்று. உருக்கூட்டத்தால் ஒலிக்கிறது. அஃது எங்கும் நிறைந்ததென்று கூறின் அது எங்குமில்லை யென்றும் கூறலாம். எனவே வானம் என்றொரு பொருளில்லை.

2. உயிர் இல்லை

உயிர்கட்கு அறிவுண்டெனில் ஐம்பொறி, ஐம்புலன், சாத்திரம் கொண்டு அறிய வேண்டிய தில்லை. அவ்விசமின்றி ஐம்பொறி வாயிலாக ஐம்புலன்களை யுணர்த்தும், நூல்களைப் பொருந்தியும் அறியுமெனில் இருளிடத்துப் பச்சை சிவப்புடன் கலந்து நின்ற போது அவற்றின் வேறுபாட்டை அறிய முடியாது ஐயுறுகிறது. எனவே உயிர்க்கு அறிவில்லை என்பர். பொறிகளில்லையாயின் உயிர் ஒன்றையும் அறியாது. பொறிகட்கறிவின்மையால் அவற்றைப் பற்றிநின்று உயிர் அறியுமெனில், ஐம் பொறிகளும் ஒரு தன்மையான அறிவை அறிய வேண்டும். அவ்வாறின்றி ஒவ்வொரு பொறிக்கும் புலன்களாகிய குணம் வேறு படுதலின் அவற்றைச் சார்ந்து வெவ்வேறு புலன்களை அறியும். எனவே அறிவுண்டென்பது பெறப்படுமேயன்றி உயிர் என்பதில்லை.

---

1. சிவஞானசித்தியார் - பரபக்கம், தத்துவப் பிரகாசர் உரை, ப. 35.
2. மணிமேகலை, காதை - 24, அடி. 105-110; 45-50.

அறிவும், அறியப்படு பொருளுமன்றி அறியும் பொருளில்லை. அறியும் பொருளுண்டாயின் அதற்கு அறிவு உண்டா? அறிவில்லையா? அறிவில்லாததாயின் மண்போல் அறிவற்றதாகும். அறிவுள்ளதாயின் அறிவுதானே அஃதாகும். பருப்பால் கூட்டிய சோற்றுக்குப் பருப்புச்சோறு எனினும், பருப்புக்கறி எனினும் ஒக்கும். எனவே அறிவும், உயிரும் ஒன்றுதான். இக்கூற்றை மணிமேகலையும்,

"எப்பொருளுக்கு மான்மா விலையென
இப்படி யுணரு மிவை வீட்டியல்பாம்"[1]

என்றுரைக்கிறது. உயிரை அருவமென்று கூறின் உருவமாகிய உடலுடன் பொருந்தாது. அதனையே உருவமென்று கூறின் ஒருருவில் ஒருரு பொருந்தாது. ஆதலால் உயிர் உருவமன்று. அந்த உயிரையே அணுவென்று கூறின் பல துவாரங்களுடைய உடலில் நில்லாது. எனவே உயிர் அணுவன்று. அழியாப் பொருளென்றால் அறிவுத் தோற்றமும் கேடின்றி அழியாப் பொருளாக வேண்டும்.

ஒருயிர் எங்கும் நிறைந்துள்ளதெனில் உடல்தோறும் பல வேற்றுமை காணப்படுதலின் எவ்விடத்தும் நிற்ப தென்றல் பொருந்தாது. மேலும் அந்த உயிர் உடல்தோறும் நிறைந்து நிற்கு மென்று கூறின் உடல் கெடும் போது தானும் கெட வேண்டும். அந்த உயிர் உறுப்பில் ஓரிடத்தைத் தனக்கிடமாகக் கொண்டு நிற்குமெனில், உடம்பில் அடி முதல் முடிவரையுள்ளதை அறியமாட்டாது. ஆதலால் அறியும் பொருளாகிய உயிர் இல்லை. அறிவென்பதேயுண்டு.

3. காலம் இல்லை

பொருள்களைத் தோற்றுவித்தும், நிறுத்தியும், போக்கியும் நிற்பது கால மெனில், அஃது அந்த மூன்று பொருளுடன் கலந்து நிற்பதாகும். அப்பொருட்குக் கேடு வந்தால் காலமில்லையாகும். பொருளினியல்பு மூவகைப்படுமே யன்றிக் காலம் மூவகைத்தென்றல் இல்வழக்காம்.

4. திசை இல்லை

திசையும் இல்வழக்காம். ஒருவனை ஒருபொருளிடமாகக் கொண்டு கிழக்குள்ளான் என்றால் அவனையே மற்றொரு பொருளிடமாகக் கொண்டு மேற்கிலுள்ளான் என்றும் கூறலாம். இதனுள் எதனை உண்மையென்று கொள்வது? எனவே திசையென்பது ஒன்று தனியாக இல்லை.

5. கடவுள் இல்லை

உலகத்தைப் படைத்தவன் ஒருமுதல்வன் உண்டெனில், இவ்வுலகம் முன்புள்ளதாய்ப் பின்னர்ப் படைத்தானாயின் முன்புள்ளதை ஒருவன் படைக்க

1. மணிமேகலை, காதை 30, அடி 117 - 178.

வேண்டியதில்லை. இல்லையாயின் அதனைப் படைக்க முடியாது. உலகம் காரண நிலையில் உள்ளதைக் காரியப்படுத்துவதே படைப்பாமெனில் உள்ளதும், இல்லதுமாகிய ஒருபொருள் உலகத்திலில்லை.

மண்ணிடத்துக் குடம் முதலியவைகளைக் குயவன் உண்டாக்குவது போலக் கடவுள் உலகத்தையுண்டாக்கினானென்று கூறின், இவ்வுலகத்து எவ்விடத்து நின்று படைத்தான்? உலகத்தினின்று அவன் படைத்தானெனில் அவன் படைப்பதின் முன்னே உலகம் உண்டானதாம். எங்கும் நிறைந்து நின்று உண்டாக்கினானென்று கூறின், எங்குமென்பதொரு இடம் ஏற்பட்டபின்னே இறைவன் தோன்றினா னென்றாகும். எனவே உலகம் ஒன்றே உண்மையாகும்.

முதல்வன் கருணையினால் இல்லாததொன்றைப் படைத்தானென்று கூறின், கொலைத் தொழிலைப் பொருந்தின சிங்கத்தையும், புலியையும், யானையையும், கூற்றத்தையும் உண்டாக்கியது ஏன்? முதல்வன் வல்லமை யுடையவனாதலால் எல்லா உயிர்களையும் படைத்தானென்று கூறின், அஃது காரண காரியப்படாமல் பித்தர் செய்யும் செயலாகும்.

எல்லா உயிர்களையும் இவ்விடத்துப் படைத்தல் பெரும்பேறாகிய விளையாட்டெனில், முதல்வன் சிறுபிள்ளையாக வேண்டும். கன்மத்துக் கிடாகப் படைத்தா னெனில், கன்மஞ் செய்வோரும் இவ்வுலகும் அநாதியாகும்.

கடவுள் அருவ மாயின் வான் போல அவனுக்குத் தொழிற்பாடு இல்லையாதலால் உயிர்களைப் பிறவிக் கடலிலிருந்து எடுத்திடான். யாவரும் சென்றடையும் நிழல் போல்வனெனில், நிழல் தன்னடைந்தார்க் கின்பங் கொடுப்பது போல அவனும் தன்னிடத்து வந்தார்க்கு இன்பம் கொடுத்தல் வேண்டும். அன்னன் ஆயின் அவன் யாண்டும் நிறைந்தவன் அல்லன் என்பது பெறப்படும். ஏகனாய் நிறைந்த அறிவினையுடையனென்று கூறின், ஆராய்ந்தறியத் தக்கதோர் உருவுண்டாதல் வேண்டும். உருவமில்லையாயின் அறிதலுமில்லை.

வேதாகமங்களால் கடவுள் உண்டென்று கூறின், அந்நூல்கள் அநாதியா? ஒருவனாலாக்கப் பட்டனவா? சொல்லுவாரின்றி நூல் உண்டா? சொன்னவன் கடவுளெனில், கடவுளையறிந்து நூலென்றறியப் பட்டதா? நூலினால் கடவுள் உண்டென்றறியப் பட்டதா? பின்கூறியது உண்மை யென்றால் கடவுள் நூலினாலுண்மை அறிவித்தானென்பது பொருந்தாமையின் நூல் ஆதாரமின்றாம்.

தன் கோள் நிறுவுதல்

1. அறக் கோட்பாடு

பூமியின்கண் புல், செடி, கொடி, மரம் முதலிய தாவரங்கள் உண்டாதல் போல, உடம்பில் நகம், உரோமம், கொம்பு முதலியன உண்டாகின்றன. பின்

கெடுகின்றன. இவை பூத வடிவங்களேயன்றி உயிருள்ளனவல்ல. இவை ஏனைய பிறப்பு வகைகட்குப் பயன்படுகின்றன.

ஓருயிரைக் கொல்லுதல் பாவமாகும். மாண்டவை மண்ணோ டொத்தலால் ஒருவன் கொன்றதை மற்றொருவன் தின்றால் அவனுக்குப் பாவமில்லை. ஒருவன் தண்ணீர்ப் பந்தர் அமைத்து நறுநீரை அளிக்கிறான். இதனால் ஏற்படும் புண்ணியம் தண்ணீர்ப்பந்தர் வைத்தவனுக்கே யாகும். தண்ணீர் அருந்தின வனுக்கு ஆகாது. இது போன்றே தின்றவர்க்குப் பாவமில்லையாம். இத்தகைய கொல்லாமையை இன்றியமையாக் கொள்கையாகக்,

> "கள்ளும், பொய்யும், காமமுங், கொலையு
> முள்ளக் களவு மென் றுரவோர் துறந்தவை"[1]

என்றும்,

> "தீவினை என்பது யாதென வினவின்
> ஆய் தொடி நல்லாய் ஆங்கது கேளாய்
> கொலையே களவே காமத்தீ விழைவு"[2]

என்றும் மணிமேகலை எடுத்தியம்புகிறது.

நால்வகை வாய்மையும், ஐவகை ஒழுக்கமும், எண்வகை நெறியும்

உருவம், வேதனை, ஞானம், குறி, பாவனை என்னும் ஐந்து கூட்டங்களும் காரணகாரியத் தொடர்ச்சியாய்க் கெட்டுத் தோன்றுவன. இவற்றால் வருவதே பிறப்பு நிலையாகும். பிறந்தோர் உருவது பெருகிய துன்பமாகும். அக்கூட்டங்கள் முற்றிலும் அழிதலே பிறவாமையாகிய வீட்டின்ப மாகும். இதனை மணிமேகலை,

> "பிறந்தோ ருறுவது பெருகிய துன்பம்
> பிறவா ருறுவது பெரும் பேரின்பம்
> பற்றின் வருவது முன்னது பின்ன
> தற்றோ ருறுவதென்றறிக"[3]

என்ற அடிகளில் துன்பம், துன்பம் துடைத்தல், துன்ப வருவாய், துன்பம் துடைத்தற்குரிய நெறி என்ற நான்கு வாய்மைகள் குறிக்கப்படுகின்றன. மேலும் இக்கருத்தினை,

> "பிறப்பிற் றுன்பமும் பிறவா யின்பமும்
> அறத்தகை முதல்வ னருளிய வாய்மை"[4]

என்றும்,

---

1. மணிமேகலை, காதை 24, அடி 77 - 78.
2. மணிமேகலை, காதை 24, அடி 123 - 125.
3. மணிமேகலை, காதை 2, அடி 64 - 67.
4. மணிமேகலை, காதை 28, அடி 119 - 120.

"துன்பம் தோற்றம் பற்றே காரணம்
இன்பம் வீடே பற்றிலி காரணம்"[1]

என்றும் எடுத்தியம்புகிறது.

நன்மையைக் கெடுக்கும் காம, வெகுளி, மயக்கம் என்பவற்றை அகற்றி ஐவகை ஒழுக்கங்களைக் கடைப்பிடிக்க வேண்டும் என்பர். இக்கருத்தினை மணிமேகலை,

"யாமேலுரைத்த பொருள் கட்கெல்லாம்
காமம் வெகுளி மயக்கங் காரணம்"[2]

என்றும், உய்யும் நெறியாக,

"ஐவகைச்சீலத் தமைதியுங் காட்டி
உய்வகை இவை கொளென்றுர வோனருளினன்"[3]

என்றும் உரைக்கிறது. ஐவகைச் சீலமாவன கொல்லாமை, கள்ளுண்ணாமை, பொய்யாமை, காமமின்மை, கள்ளாமை என்பவையாகும். ஐம்பொறிகளை அடக்கித் துன்ப இன்பங்களை ஒழித்துப் பாவ புண்ணியங்களைக் கெடுத்து நல் வாழ்விற்குரிய எண்வகை நெறிகளான "நற்காட்சி, நல்லூற்றம், நல்வாய்மை, நற்செய்கை, நல்வாழ்க்கை, நன் முயற்சி, நற்கடைப்பிடி, நல்லுளத்தோர் தலைப்பாடு"[4] எனுமிவற்றால் பயின்று வரும் ஞான நிலையே சமாதியாகும்.

இனிச் சௌத்திராந்திகராவார்; அங்ஙனம் ஆசிரியனுணர்த்திய வழிப் புறப்பொருள் முழுதுஞ் சூனியம் என்பதென்னை? யான் இது கண்டேனென்று உணர்வுழி யான் என்னும் ஞானம் அகத்துப் பொருளும் இது எனறு சுட்டி யறியப்படுவது புறத்துப் பொருளு மாகலான் அவற்றிற்கு வேறுபாடு தெற்றென விளங்கு தலானும், இரண்டும் ஒருங்குணர்தலே பற்றி ஒன்றென்றல் பொருந்தாமையானும், இரண்டும் ஒருங்கு உணர்தல் எனவே வேறுபாடு உண்மை தானே பெறப்படு தலானும், ஞானமே குடம்படம் முதலியனவாகத் தோன்றா நின்றனைக் கோடல் பொருத்தமன்று என வினாயினார்க்கு நன்றே வினாயினீர்! புறத்துத் தோன்றுவனவும் உள்பொருளேயாம். அவை காட்சிப் பொருளல்ல. குட வடிவிற்றாகிய ஞானம் உணர்ந்த பின் அன்றிக் குடம் உணர்தல் கூடாமையின் கணத்தில் தோன்றி அழியும் குடம் முதலாயின அங்ஙனம் உணருங்கால் நிலை பெறுதலின்மையால் குடம் முதலாயின தத்தம் வடிவினை ஞானத்தின் வைத்திட்டு அழிந்த பின்னை ஞானத்துள் பற்றிய வடிவானே அங்ஙனம் இறந்துபோய குடம் முதலாயின வழி அளவையின் வைத்து உணரப்படும். இவற்றிற்குக் காரணம் என்னையெனில் புறம் அகம் என்னும் இருவகைச் சமுதாயமுமாம். அவற்றுள்

1. மணிமேகலை, காதை 30, அடி 186 - 187.
2. மணிமேகலை, காதை 30, அடி 252 - 253.
3. மணிமேகலை, காதை 2, அடி 68 - 69.
4. மணிமேகலை, உவே. சாமிநாதய்யர் உரை, ப. 381.

புறச்சமுதாயம் நிலம் முதலாயின: அவற்றிற்குக் காரணம் பரமாணுக்கள். அவை நிலவணு, நீர்அணு, தீயணு, வளியணு என நால்வகைப்படும். அவை ஒருங்குபல தொக்கவழிப் புறச்சமுதாயம் தோன்றும். இனி, அகச்சமுதாயம் சித்தமும், சித்தப் பகுதியுமாம். அவற்றிற்குக் காரணம் ஐவகைப்படும் கந்தங்கள்: அவை உருவம், வேதனை, ஞானம், குறி, வாசனை என்பனவாம். கந்தம் என்பது சமூகம் என்னும் பொருட்டு. அவற்றுள் சித்தத்தால் சிந்திக்கப்படும் சத்தம் முதலாயின உருவ கந்தம். இவை புறத்து உள்ளனவாயினும் அகத்தில் சித்தத்தால் சிந்திக்கப்படுதலின் அகச் சமுதாயத்தில் வைத்து எண்ணப்பட்டன. இனி, அகச் சமுதாயத்திற்கு உட்பட்ட உடல், பொறி முதலியவற்றை உருவ கந்தம் என்றலும் ஒன்று. அவ்வுருவ கந்தத்தை உணரும் உணர்வு ஞானகந்தம். அது சாகாரம் நிராகாரம் என்னும் வேறுபாட்டால் பிரவருத்தி விஞ்ஞானம் என்றும் ஆலய விஞ்ஞானம் என்றும் இருவகைப்படும். சாகாரம் சவிகற்பமாம். நிராகாரம் நிருவிகற்பமாம். இனி இவ்வுணர்வால் தோன்றும் இன்பத்துன்ப நொதுமல்கள் வேதனை கந்தம், சாத்தன், கொற்றன் முதலிய பெயர்கள் குறிகந்தம். அப்பெயர்களால் பகுத்துணரும் சவிகற்ப உணர்வு குறிகந்தம் எனவும் நிர்விகற்பம் ஒன்றே ஞானகந்தம் எனவும் கோடலும் ஒன்று. அவற்றின் வாசனை கந்தமாம். வாசனை எனினும் செய்கை எனினும் ஒக்கும். குறியெனினும் சஞ்ஞை எனினும் ஒக்கும். இவ்வைந்தும் ஒருங்கு தொகுதலான் அகச்சமுதாயம் தோன்றும். இவற்றுள் உருவகந்தம் புறச் சமுதாயத்துள் வைக்கப்படும். ஏனை நான்குமே சித்தமும் சித்தப்பகுதியுமாகிய அகச்சமுதாயம் என்பாரும் உளர். சகமுழுதும் இவ்விருவகைச் சமுதாயத்துள் அடங்கும் என்று ஆசிரியன் உணர்த்தினான். அது கேட்ட மாணாக்கர், இங்ஙனம் மாணாக்கர் வினாவிய கடாவிற்கேற்ப அறிவுறுக்குஞ் சூத்திரங்கள் எவ்வளவின் முடிவு பெறும் எனக் கடாயினார். அவ்வழி ஆசிரியன் சூத்திராந்தம் கடாவிய நீர் சௌத்திராந்திகர் எனப் பெயர் பெறுக என்றமையின் அவர்க்கு அது பெயராயிற்று[1].

1. சிவஞான போதப் பேருரை, பக். 11.

பௌத்தம் 2.(ஆ) சௌத்திராந்திகன் மதமறுதலை

எண்சீர்க்கழி நெடிலடி யாசிரியவிருத்தம்

செய்யுள் - 94

அனைத்தினையும் உணர்ந்தானெம் இறைவ னென்றிங்
கறியாது புத்தநீ அறைந்தாய் என்றும்
அனைத்தினையும் அறிந்திடான் அளவி லாமை
ஒன்றொன்றா அனைத்தினையும் அறிந்தான் என்னின்
அனைத்தினையும் அளவிறந்த தென்ன வேண்டா
அளவிலா ஞானத்தால் அறியின் ஞானம்
அனைத்தினையும் அறியாது கணத்தில் தோன்றி
அழிதலால் அறிந்தமையின் றாகு மன்றே.

பதவுரை

அனைத்தினையும் உணர்ந்தான் எம் இறைவன் என்று இங்கு அறியாது புத்த நீ அறைந்தாய்	*புத்த! நீ முழுவதையும் உணர்ந்தான் எம்முடைய சுவாமி என்று அறியாமற் கூறினாய்,*
என்றும் அனைத்தினையும் அறிந்திடான் அளவு இலாமை	*எப்போதும் சர்வமும் உணர்ந்தறிய மாட்டான் பிரபஞ்சபேதம் அளவிட அரிது ஆகையால்,*
ஒன்று ஒன்றா அனைத்தினையும் அறிந்தான் என்னின் அனைத்தினையும் அளவு இறந்தது என்ன வேண்டா	*முழுவதையும் ஒரொன்றாக அறிந்தான் என்று நீ கூறின் அப்படி அறியுமிடத்துச் செலவு கலப்பு நீக்கத்தால் அறிய வேண்டும்; ஆதலால், அதனை அளவிறந்தது என்று கூறவேண்டா,*
அளவு இலா ஞானத்தால் அறியின் ஞானம் அனைத்தினையும் அறியாது	*எல்லையில்லாத ஞானத்தால் அறிந்தான் என்று நீ கூறின் உனது ஞானம் அனைத்தினையும் அறியமாட்டாது; அஃது யாங்ஙனம்? என்னில்,*
கணத்தில் தோன்றி அழிதலால் அறிந்தமை இன்று ஆகும் அன்று ஏ	*ஒரு மாத்திரையில் அறிவுதோன்றிக் கெடும் என்று நீ கூறுகையால் அனைத்தினையும் அறிந்தான் என்கை இல்லையாம் என்றவாறு.*

விளக்கவுரை

இச்செய்யுள் புத்தனுக்கு சர்வஞ்ஞத்துவம் இல்லை என்பது நிற்கிற மலையினையும், குளிர்கிற நீரையும், சுடுகிற நெருப்பையும், உலரும் காற்றினையும் கணமொன்றில் அறியக்கூடாது ஆகையால் என்று கூறிற்று. (1)

செய்யுள் - 95

சிலபொருளை அறிந்தவற்றின் திறத்தே ஒட்டிச்
சிந்திப்பன் எப்பொருளும் என்னிற் சென்று
பலபொருளாய் ஒன்றுபல பேத மாகிப்
பயின்றுவரும் ஆதலால் பார்க்கு மாறென்
உலகுதனில் ஒருபொருளங் குணரும் போதின்
உற்றுணர்தல் ஆராய்தல் தெளிதல் உண்டாய்
நிலவுமத னால்உணர்வு பன்மை முன்பின்
நின்றிடா தென்பையெல்லாம் நினைப்ப தெங்கே.

பதவுரை

சில பொருளை அறிந்து அவற்றின் திறத்தே ஒட்டிச் சிந்திப்பன் எப்பொருளும் என்னில்	பிரபஞ்சத்தில் சில பொருள்களை அறிந்து அவற்றின் பகுதியிலே எல்லாப் பொருள் களையும் ஒட்டிச் சிந்திப்பன் என்று புத்த! நீ கூறின்,
சென்று பல பொருள் ஆய் ஒன்று பல பேதம் ஆகி பயின்றுவரும் ஆதலால் பார்க்கும் ஆறு என்	அறிவால் அறியும் பொருள் பலவாய்ச் சென்று அவற்றின் பகுதி பல பேதமாகிப் பொருந்தி வரும் ஆகையால் ஒன்றைக்கொண்டு அதன் பேதம் அறியுமாறு எத்தன்மைத்து? அன்றியும்,
உலகுதனில் ஒருபொருள் அங்கு உணரும் போதின்	உலகத்திலே ஒரு பொருளைப் பற்றி உணரும் போது
உற்று உணர்தல் ஆராய்தல் தெளிதல் உண்டாய் நிலவும் அதனால் உணர்வு பன்மை முன்பின் நின்றிடாது என்பை எல்லாம் நினைப்பது எங்கே	பிரபஞ்சத்தில் ஒரு பொருளை அறியு மிடத்துக் கூடி அறிந்து ஆராய்து தெளிதல் வேண்டும்; ஆதலால், ஒன்றை அறியும் பொழுதுபலபேதப்படுகையாலும் நீ முன்பு உண்டான அறிவு பின்பு இல்லை என்ற சொல்லுவை ஆகையாலும் ஒரு பொருளை அறிந்து அதனோடு மற்றொரு பொருளைச் சேர்த்து அறியும் நெறி எவ்விடத்தே உளது என்றவாறு.

விளக்கவுரை

உலகில் உள்ள சிலபொருள்களை அறிந்து அவற்றின் பகுதிகளிலே வைத்து ஒட்டிப் பல பொருள்களையும் அறிவன் என்னில், அறிவால் அறியும் பொருள்கள் பலவாய், அறிவும் பலவாய், அவற்றின் பகுதிகளும் பல பேதமாய் முரணும்; ஆகலின், ஒன்றைக்கொண்டு முழுவதையும் அறிதல் எப்படியாம்? அன்றியும், பிரபஞ்சத்தில் ஒருபொருளை அறியுமிடத்து அறிந்து, ஆராய்ந்து, தெளிதல்

வேண்டும். ஒன்றை அறியும்போது பல பேதப்படும். அதனால், உன்னுடைய கணபங்கவாதம் இடர்ப்பாடு விளைக்கும். ஏனெனில், ஒரு பகுதி தோன்றுமுன் அதற்கு முந்திய பகுதி அழிந்துபோமே! ஆகலின், ஒரு பொருளை அறிந்த அறிவுடன் மற்றைப்பொருளை அறிந்த அறிவையும் சேர்த்து அறிதற்கு இடமில்லையாம்.

இச்செய்யுள் இரண்டும் புத்தர் இருபத்து நால்வரில் ஒருத்தன் முழுவதும் உணர்ந்தான் என்றதனை மறுத்துக் கூறிற்று.

புண்ணியபாவம் மறுமையிலே பலிக்கையாலும், "யான் கண்டீர் நோன்பு தான்முற் பிறப்பினா லவண் முய லாதோன்" என்கையாலும் எல்லாம் கணபங்கம் அல்ல என்க. (2)

செய்யுள் - 96

முத்திநிலம் கண்டறங்கள் மொழிந்தா னாயின்
முதல்முழுதும் பொன்றிப்பின் மொழிந்த வண்ணம்
ஒத்திடும்தேன் நெய்கூட்டி உண்டிறந்தோன் ஒருவன்
உலகினில்வந் திதுதீதென் றுரைத்தால் ஒக்கும்
செத்ததுபின் என்றுரைக்கில் கதியில் செல்லாத்
தேரைநுரை நீர்பெருகிச் சென்றா றாகும்
அத்தினள வறியாதிக் கரையோர் தம்மை
அக்கரைக்கே செல்லவிடும் ஆசை யாமே.

பதவுரை

முத்திநிலம் கண்டு அறங்கள் மொழிந்தான் ஆயின் முதல் முழுதும் பொன்றி பின் மொழிந்த வண்ணம் ஒத்திடும்	வீட்டின்பத்தைக் கண்டு பின்பு அறம் முதலியவற்றைச் சொன்னான் என்று புத்த! நீ கூறினாய்; ஒரு பொருள் சேரக் கெட்டுப் போய்ப் பின் வந்து சொன்னது என்னும் முறைமையை ஒக்கும்; அஃது என்போல? என்னில்,
தேன் நெய் கூட்டி உண்டு இறந்தோன் ஒருவன் உலகினில் வந்து இது தீது என்று உரைத்தால் ஒக்கும்	தேனையும் நெய்யையும் கூட்டிக்குடித்துச் செத்தோன் மீள உலகின்கண் வந்து தேனும் நெய்யும் கூடின்விடம் என்று சொன்ன தன்மைத்து,
செத்தது பின் என்று உரைக்கில் கதியில் செல்லா	(இதனைப் பொருளுக்கேற்ப மாறுக) அறம் தேனையும் நெய் முதலியவற்றையும் கூறிப்

	பின்பு வீட்டின்பத்தை அடைந்தான் என்னில் அவன் முத்தியை அறிந்தவன் அல்லன்; ஆதலால், அவன் சொன்ன அறமும் கதியில் செலுத்தமாட்டாது,
தேரை நுரை நீர் பெருகி சென்று ஆறு ஆகும் அத்தின் அளவு அறியாது இக்கரையோர் தம்மை அக்கரைக்கே செல்லவிடும் ஆசை ஆம் ஏ	தவளை வாயினுண்டாகிய நுரை நீர் வெள்ள மாய்ச் சென்று பொருந்திய ஆறாகும்; அதன் அளவு அறியாமல் இக்கரைக்கே நிற்போரை அக்கரைக்கே போகவிடுவோம் என்பார் மயக்க ஆசை உனக்கு உண்டாம் என்றவாறு.

விளக்கவுரை

அச்சுப்பிரதிகளில் 'தேரன் உரை' எனப் பிரித்து புத்தனுரையானது நீரானது பெருகிச்சென்று ஓடும் ஆற்றின் அளவு அறியாதான் ஒருவன் இக்கரையில் நின்றோரை அக்கரையிலே செலுத்திவிடுவேன் என்று ஆசைப்படுதற்கு ஒக்கும் என்று எனக் காணப்படுகிறது.

இச்செய்யுள் புத்தர் இருபத்து நால்வரில் ஒருவன் முத்தியின்பமும் கண்டு இவ்விடமும் கண்டு அறம் முதலியன கூறினான் என்பதனை மறுத்துக் கூறிற்று.

தேரை நுரை நீர் பெருகி என்றது பாடம். (3)

செய்யுள் - 97

நீர்போல நின்றுயிர்கட் களித்தி டாதே
நெருப்பாய துயர்ப்பிறப்பின் நிகழ்ந்து நின்று
பாரோருக் களித்தபடி வலையிற் பட்ட
பலகலைமான் கண்டொருநீள் கலைபாய்ந் தோடி
நேரேசென் றவ்வலைக்கே நேர்ந்தா லொக்கும்
நீள்பாவக் குழியில்விழும் நீர்மை யாகும்
ஆரோவிங் குனையொப்பார் அறத்தை ஆக்கப்
பிறந்தறமாக் கினனென்னில் அடங்க வாமே.

பதவுரை

நீர்போல நின்று உயிர்கட்கு அளித்தி டாதே நெருப்பு ஆய துயர் பிறப்பின் நிகழ்ந்து நின்று பாரோருக்கு அளித்தபடி வலையில் பட்ட பல	கர்த்தா சலமும் அதன் இரதமும் போலச் சர்வான்மாக்களிடத்திலும் நீங்காமல் நின்று இரட்சிப்பன் என்னாதே கொடிதாகிய தீத் தன்மையையுடைய துன்பப் பிறவியின்

கலைமான் கண்டு ஒரு நீள் கலை பாய்ந்து ஒடி நேரே சென்று அவ் வலைக்கே நேர்ந்தால் ஒக்கும்	கண்ணே தோன்றி நின்று பிரபஞ்சத்தார்க்கு அருள் செய்வன் என்னும் அது வலையிடைப் பட்ட பலமான் கலையைக் கண்டு ஒருகலை குதித்தோடித் தவறாமற் சென்று அந்தவலைக்குள் அகப்பட்ட படியை ஒக்கும்,
நீள் பாவக் குழியில் விழும் நீர்மை ஆகும் ஆதலால்,	அது மிக்க நரகத்திற் செல்லும் இத்தனை ஆதலால்,
ஆரோஇங்கு உனைஒப்பார்	மெய்யே இரட்சிக்கும் வழி என்று சொல்லுகிற உன்னை ஒப்பார் யார்,
அறத்தை ஆக்க பிறந்து அறம் ஆக்கினன் என்னில்	அறம் முதலியவற்றை உண்டாக்க வேண்டித் தான் பிறந்து அறத்தை உண்டாக்கினான் என்னில்,
அடங்க ஆம் ஏ	சர்வான்மாக்களும் தருமத்தை உண்டாக்க வேண்டிப் பிறந்தார்களாம் என்றவாறு.

விளக்கவுரை

கர்த்தா பிறவியில் அகப்பட்ட உயிர்களைக் காக்கும் பொருட்டுத்தான் பிறவியெடுத்தான் என்பது, பல கலைமான்கள் வலையிற் சிக்குண்டன, அவைகளை ஒரு கலைமான் கண்டது, அவற்றை விடுவிக்க எண்ணிக் குதித்தோடியது, வலையிற்புக்கது என்று கூறுவதனோடு ஒக்கும். அன்றியும், அறத்தை ஆக்குதற்கே புத்தன் பிறந்தான் என்னில், எல்லா உயிர்களும், அறத்தை ஆக்குதற்கே பிறந்தன என்பதாய் முடியும்.

ஆரோ - இகழ்ச்சிக் குறிப்பு.

இச்செய்யுளால் இரட்சை காரணமாயினும் தன்மம் காரணமாயினும் கர்த்தா பிறந்தான் என்னில், கர்த்தா அன்று என்பது தோடம் என மறுத்துக் கூறிற்று.

நீர்போல நின்று உயிர்கட்கு என்பது, பானீயம் ஆன்மாக்களுக்கு இரட்சை சலமாம் என்கையால், நீள் பாவக்குழியில் என்றதனால் மாமிசம் தின்று தன்மம் சொல்லுதல் நரக ஏதுவாம் என்க. (4)

செய்யுள் - 98

அலகிறந்த யோனிகளில் புகுந்த தெல்லாம்
அறத்தையளித் திடவென்னில் அவற்றின் எல்லாம்
நிலவுவது கன்மத்தால் ஆகு மன்றி
நினைந்ததோ ரிச்சையினால் நிகழ்ந்தா னாகில்

உலகுதனில் உள்ளோர்க்கும் அதுவே யாகும்
ஒருத்திவயிற் றினிலிருந்தங் குதரம் தள்ளித்
தலமதில்வந் தானென்னில் தாயைக் கொன்றான்
தருமத்தை இன்றெனக்குச் சாற்றி டேலே.

பதவுரை

அலகு இறந்த யோனிகளில் புகுந்தது எல்லாம் அறத்தை அளித்திட என்னில்	எண்ணிறந்த யோனிகளில் சாதனான தெல்லாம் தன்மத்தை உண்டாக்கவேண்டி என்று புத்த! நீ கூறின்,
அவற்றின் எல்லாம் நிலவுவது கன்மத்தால் ஆகும்	அங்ஙனம் பல யோனிகளில் சாதனானது கன்மத்தால் ஆக வேண்டும்,
அன்றி நினைந்தது ஓர் இச்சையினால் நிகழ்ந்தான் ஆகில்	அற்றன்று, தான் கருதிய விருப்புக் காரணத்தால் காயம் எடுத்துக் கொண்டான் என்று கூறின்,
உலகுதனில் உள்ளோர்க்கும் அதுவே ஆகும்	பிரபஞ்சத்தில் உள்ளோர் காயம் எடுத்ததுவும், தன்மம் செய விரும்பி எடுத்துக்கொண்டதே யாம்,
ஒருத்தி வயிற்றினில் இருந்து அங்கு உதரம் தள்ளி தலம் அதில் வந்தான் என்னில்	அங்ஙனம் ஆன்மாக்கள் போல யோனி சாதன் ஆனதில்லை, மாதாவின் உதரத்தே இருந்து அவ்வுதரத்தைப் பிளந்து பூமியின் கண்ணே வந்து அறத்தை உண்டாக்கினான் என்று நீ கூறின்,
தாயைக் கொன்றான் தருமத்தை இன்று எனக்கு சாற்றிடேல் ஏ	அங்ஙனம் மாதாவைக் கொன்று அறத்தை உண்டாக்கினான் என்னில், அத்தாயைக் கொன்றான் கூறிய தருமத்தை இப்போது எனக்குக் கூறுவாயல்லை என்றவாறு.

விளக்கவுரை

புத்தன் பிறக்கிற காலத்து மாதாவினுடைய வலமருங்குலால் (மாதா உதரத்திலிருந்து அவ்வுதரத்தைப் பிளந்து கொண்டு) பிறந்தான். அவளும் ஆறுநாள் குற்றுயிரோடே கிடந்து ஏழாம்நாள் இறந்தாள். இது புத்தர் மாதாக்கள் இருபத்து நால்வர்க்கும் ஒக்கும். இதனை,

"உலும்பிலி வனத்துள் ஒண்குழைத் தேவி
வலம்படு மருங்குல் வடுநோய் உறாமல்

ஆன்றோன் அவ்வழித் தோன்றினன் ஆதலின்
ஈன்றோள் ஏழாநாள் இன்னுயிர் வதைத்தான்"

என்னும் விம்பசாரகதையால் தெளிக. இக்காவியம் பௌத்தருடைய நூல்.

"முத்தராம் புத்தர் தோன்றித் தாய்பழுவை முறித்தே விட்டார், கொத்துவாழ் குழலா ளாகும் குண்டல கேசி தானும், கத்திருவாம் கணவ னக்காள் தனையுங் கொன்றிட்டார், இத்துணையா ரிருவ ரும்வந் திங்ஙனே தவமு ரைப்பார்" இது சிவபத்தர்கள் வசனம். *(5)*

செய்யுள் - 99

அரியினொடு நரியுழுவை ஆதி யாக
ஆனபோ தறம்திரிந்து கோற லாதி
பரிவினொடும் செய்தனனாம் இல்லை யாகில்
பசிதனக்குத் தின்பதவன் பழுதை யோதான்
கருதிலவன் பரதுக்க துக்க னாகில்
கணவனிழந் தோர்கட்கும் கண்ணி குத்தித்
திரியுமவர் துயரினுக்கும் இரங்கு வோன்தன்
செயலறத்துக் கழகியதாம் செப்புங் காலே.

பதவுரை

அரியினொடு நரி உழுவை ஆதி ஆக ஆனபோது அறம் திரிந்து கோறல் ஆதி பரிவினொடும் செய்தனன் ஆம்	உன் ஆதிபுத்தன் அலகிறந்த யோனிகளில் பிறந்தான் என்றும், அப்படிப் பிறந்தது கொலை முதலிய பாவங்களை நீக்கித் தன்மத்தைப் பரிபாலிக்க விரும்பி என்றும் கூறினாய், அங்ஙனமாயின் புத்தன் சிங்கம் நரி புலி முதலிய யோனிகளிலே சாதனான விடத்துத் தன்மத்தைவிட்டுக் கொலையை விரும்பிப் பல ஆன்மாக்களையும் கொன்று தின்ற இது பிரியத்தோடும் செய்தானாக வேண்டும்,
இல்லையாகில் பசி தனக்கு தின்பது அவன் பழுதையோ தான்	அப்படிக் கொன்று தின்றானில்லை என்று சொல்லுவையாமாயின் அந்த யோனி சாதனாய்த் திரிந்தவிடத்து உண்டான பசிக்குப் புத்தன் தின்பது பழுதையோ? அன்றேல், மாமிசம் அன்றோ! இஃதன்றியும்,

கருதில் அவன் பரதுக்க துக்கன் ஆகில் கணவன் இழந்தோர்கட்கும் கண்ணி குத்தித் திரியும் அவர் துயரினுக்கும் இரங்குவோன் தன் செயல் அறத்துக்கு அழகியது ஆம் செப்பும் கால் ஏ	பரதுக்கன் என்று நீ சொல்லின் பூகேதனாய்ப் பல ஆன்மாக்களைக் கோறலால் பொல்லாதவன் ஆனதன்றியும், கணவனை நீங்கிச் சோரத்திற் செல்லும் மகளிர் உறும் துயரத்தினுக்கும், கண்ணி முதலிய கொண்டு கொலைத்தொழில் புரிவோர் துயரத்தினுக்கும் இரங்குவன் என்னில் அச்செய்தி அவன் தன்மத்துக்கு அழகிதாம் சொல்லும் காலத்தும் கருதும் காலத்தும் என்றவாறு.

விளக்கவுரை

உன்னுடைய ஆதிபுத்தன் எண்ணில்லாத யோனிகளிற் பிறந்தான், அவன் பிறந்தது கொலை முதலிய பாவங்களை நீக்கித் தர்மத்தைப் பரிபாலிக்க வேண்டி என்றாய் அவ்வாறாயின், அப்புத்தன் சிங்கம் நரி புலி முதலிய யோனிகளில் பிறந்தானன்றோ! அப்பொழுது தர்மத்தைவிட்டுக் கொலையை விரும்பிப் பல உயிர்களையும் கொன்று தின்றானன்றோ! அப்படி இல்லையாயின், அப்பிராணிகளாகப் பிறந்தபோது பசிக்கு எதனை உண்டான்? அவன் பரதுக்கன் என்னில், பல உயிர்களையும் கொன்று உண்டமையால் பொல்லாதவனே; அன்றியும், கணவனை நீங்கிச் சோரம் செய்யும் பெண்டிர் துயருக்கும் கண்ணி முதலிய கொண்டு கொலை செய்வோர் துயருக்கும் இரங்குவன் என்னில், சொல்லினும் கருதினும் இச்செயல்கள் மிக அழகிது ஆம். இதனால், கொலைகடிந்து தன்மம் பாலித்தான் என்பதும் பரதுக்கன் என்பதும் மறுத்தவாறாயிற்று.

ஊனுண்டு உயிர்களிடத்து அருளுடையோம் என்போர் கூற்று எத்துணை இழிந்ததென்க.

ஆதி என்பதனை ஆதிபுத்தன் என்று முன்னே கூட்டுக. கருதில் என்பதனைக் கருதும் காலத்து என்று பின்னே கூட்டுக. ஆம் என்பதனை அல்ல என்க. அழகிதாம் என்பது இகழ்ச்சிக் குறிப்பு.

'அலகிறந்த யோனிகளும்' என்னும் செய்யுளும், இச்செய்யுளும் ஒரு தொடர்.

அலகிறந்த யோனிகளிற் பிறந்து, கொலை முதலியன கடிந்து, தன்மம் பாலித்தான் என்பதனையும், பரதுக்கன் என்பதனையும் மறுத்துக் கூறிற்று.

'கணவன் இறந்த'தென்றும் பாடம்.

ஊன் உண்டு உயிர்க்கு அருளுடையோம் என்கை மித்தியாவாதம் எனக் கொள்க. 'கோறல் பொருளல்ல தவ்வூன் தினல்' என்றும் பெரியோர் சொல்லுகையால். *(6)*

செய்யுள் - 100

ஒருபொருளைத் தேடியதற் குரையுந் தேடி
உரைப்பதன்முன் னுணர்விறக்குமுனக்குநூலென்
மருவிவருஞ் சந்தான வழியி லென்னில்
வாயுரைத்த தேயுரைத்து வழங்கு மாகும்
பெருகுவது கெட்டென்னி லதுபோ லாம்பின்
பித்துரைக்க தறியாது பேதை சொல்லும்
தருவதுநூ லெப்பரிசு முதனடுவோ டிறுதி
தான்விருத்த மின்றியது சாற்றி டாயே.

பதவுரை

ஒரு பொருளைத் தேடி அதற்கு உரையும் தேடி உரைப்பதன்முன் உணர்வு இறக்கும் உனக்கு நூல் என்	ஒரு பொருளைத்தேடி அதற்கு ஏற்றதோர் சொல்லையும் தேடிச் சொல்லொடு பொருளைக் கூட்டி நூலாகக் கூறுதன் முன்னே உன் ஞானம் கெடும் ஆதலால் உனக்கு நூல் உண்டாம்படி என்? அற்றன்று,
மருவி வரும் சந்தான வழியில் என்னில் வாய் உரைத்ததே உரைத்து வழங்குமாகும்	அவ்வறிவு பொருந்திவரும் தொடர்ச்சிவழித் தோன்றின நூல் ஆம் என்ற புத்த! நீ கூறின், முன் சொன்ன அக்கரம் ஒன்றையே பின் சொல்லி நிற்கவேண்டும்; அற்றன்று,
பெருகுவது கெட்டு என்னில் அதுபோல் ஆம் பின்	முன் அறிவு கெட்டுப் பின் தோன்றும் அறிவு மிக்க அறிவாம் என்று கூறின் அங்ஙனம் பின் தோன்றும் அறிவும் கணத்தில் கெடுகையாலே முன்னறிவேயாம்,
பித்து உரைத்தது அறியாது பேதை சொல்லும் தருவது நூல்	உனது நூல் பித்தர் சொல்லும் சொல்லிற்றாம்,
எப்பரிசு முதல் நடுவோடு இறுதிதான் விருத்தம் இன்றி அது சாற்றிடாய் ஏ	நூலாவது முதல் நடு இறுதி மாறுபாடு இல்லாதது ஆதலால் எப்பெற்றியது? உனது நூல், உன்னுடைய பழுதுநூலை என்னுடன் சொல்வாயல்லை என்றவாறு

விளக்கவுரை

ஒரு பொருளைக்குறித்து அதற்குரிய சொல்லைத் தேடிச் சொல்வதன் முன் உன் கொள்கைப்படி உன்ஞானம் கெடும். ஆகலின், உனக்கு நூல் உண்டாம்படி

எப்படி? அற்றன்று, அவ்வறிவு பொருந்திவரும் தொடர்ச்சி வழி நூல் தோன்றினவாம் என்னில், முன்சொன்ன சொல்லே பின்னும் சொல்ல நேரும். முன் தோன்றிய அறிவு கெட்டுப் பின்தோன்றிய அறிவு சிறந்தது என்னில், அம்முறையே பின்தோன்றுவதும் கணத்திற் கெடும். ஆகலின் முன்னறிவே ஆம். எனவே, பித்தர் சொன்னதை அறியாது பேதை சொல்லிய ஒன்றைத் தெரிவிக்கும் நூலாம் அது. முதல் நடு இறுதி முரண்படாமல் நூல் அமைதல் வேண்டும். உன் கொள்கைப்படி முதலில் தோன்றிய அறிவு நடுவில் உண்டாம் அறிவுக்கு முன் அழியும், அதுவும் இறுதிப்பகுதி தோன்றுமுன் இறுதியாம்; ஆகலின், மாறுபாடில்லாத நூல் புத்தன் கூறினான் என்பது எவ்வாறு பொருந்தும்?

பித்துரையும் என உம்மை விரிக்க.

சந்தான வழியாவன நால்வகை; அவை தீபசந்தானம், வாயுசந்தானம், தாராசந்தானம், பிபீலிகாசந்தானம் என்க. பெருகுவது கெட்டென்பது - கெடுதல் நால்வகையில் கெட்டு வர்த்தித்தல்.

இச்செய்யுள் முதற்புத்தன் பிடகநூலை மறுத்துக் கூறிற்று. (7)

செய்யுள் - 101

முன்னாகப் பலவறங்கள் பூரித்தெம் மிறைவன்
முழுதுணர்த்திங்கருளினாலுயிர்கண் முத்தியடையப்
பின்னாகப் பிடகநூ லுரைத்தா னென்று
பேசினா யிவன்முன்பு பேரறங்கள் புரிநூல்
சொன்னாரா ரிவனைப்போன் முன்னொருவ னென்னில்
அவனுக்குச் சொன்னாரா ரெனத்தொடர்ச்சி யாகி
அன்னாய்பி னனவத்தைப் படுமொருவ னின்றாம்
ஆரோவுன் பாழியிருப் பாரிதனை யறையே.

பதவுரை

முன் ஆக பல அறங்கள் பூரித்து எம் இறைவன் முழுது உணர்ந்து இங்கு அருளினால் உயிர்கள் முத்தி அடைய பின் ஆகப் பிடகநூல் உரைத்தான் என்று பேசினாய்	ஆதியிலே எம்முடைய சுவாமி பல தருமங்களைச் செய்து நிறைந்து சருவஞ் ஞனாய்க் கிருபையாலே ஆன்மாக்கள் வீட்டின்பம் அடைதற்கும் பின்பு அறம் செய்தற்கும் வழியாகிய பிடகநூலை அருளினான் என்று புத்த! நீ சொன்னாய்,

இவன்முன்பு பேர் அறங்கள் புரி நூல் சொன்னார் ஆர் இவனை போல் முன் ஒருவன் என்னில்	பெரிய அறங்களை உண்டாக்க இவனுக்கு முன்பு நூல் சொன்னவர் ஆர் என்று கூறின்,
அவனுக்கு சொன்னார் ஆர் எனத் தொடர்ச்சி ஆகி அன்னாய் பின் அனவத்தை படும் ஒருவன் இன்றாம்	அவன் ஆசாரியன் தனக்குச் சொன்னார் ஆர் என மேல்மேல் தொடர்ச்சிப்பட்டுப் பின் சொற்கு உத்தரம் இன்றி முட்டுப்படும்; ஆகையால், கர்த்தாவும் இல்லையாம்,
(இஃதன்றியும்) ஆரோ உன் பாழி இருப்பார் இதனை அறை ஏ	உன் பள்ளியுள் நீ தெய்வமென்று ஏத்த இருப்பார் ஆரோ? நீ கூறுவாயாக என்றவாறு.

விளக்கவுரை

உன்னுடைய புத்தன் ஆதியிலே பல தருமங்களைச் செய்து, முழுதுணர்ந்து பின்பு பிடகநூலைச் செய்தான் என்னில், அவன் முன் செய்யப்பட்ட தருமங்களை யாவர்பால் அறிந்து செய்தான்? அவ்வறங்களை அவனுக்குமுன் ஒருவன் கூறினான் என்னில், அவனுக்குக் கூறினான் யாவன்? என்னும் வினா வரம்பின்றி ஓடும்; அஃது அனவத்தை என்னும் தோஷமாம். விடையும்கூற இயலாமல் முட்டுப்படும். ஆகையால், கர்த்தாவும் இல்லையாம். உன்னுடைய பள்ளியுள் நீ தொழும்படி நின்ற தெய்வம் எது? கூறுவாயாக.

அனவத்தைப் படும் ஒருவன் என்றாய், அநவத்தை என்பது ஒரு தோடம் கொண்டு நின்று சொன்னான் ஒருவன் என்றாய் என்பது. அநவத்தையாவது - தலை காணாதது அல்லது முடிவு காணாதது. அன்னாய் - அசை. *(8)*

செய்யுள் - 102

இந்நூலைச் சொன்னவன்றா னிங் கிருந்தா னென்னில்
இவனிருத்தி யேத்துமவ னெங்கிருந்தா னெவனோ
அந்நூலோ குருவந்த வடைவுமுனக் கில்லை
யடைவுதரின் முடிவின்க ணநாதி போதன்
சொன்னானா மவைவேதா கமங்க ளாகும்
சுருக்கியுண்ட வம்புரியச் சொல்லுவ தெல்லோரும்
முன்னூல்கண் கழுவாதே யுதிப்பதன்முன் புலாலோ
டுண்பானோ ரூன்பிரிய னுரைத்ததொரு நூலே.

பதவுரை

இந்நூலை சொன்னவன் தான் இங்கு இருந்தான் என்னில்	இந்தப்பிடக சாத்திரம் சொன்ன புத்தா சாரியன் இப்பள்ளியில் இருந்தானாகில்,
இவன் இருத்தி ஏத்தும் அவன் எங்கு இருந்தான் எவனோ அந்நூலோ குரு வந்த அடைவும் உனக்கு இல்லை	இவன் ஆசாரியனாக ஏத்தப்பட்டவன் ஆவான் எவ்விடத்தான்? கடவுளாவான் எவன்? அவனால் சொல்லப்பட்ட நூல் எவ்விடத்தது? அவை காணப்பட்டதில்லை ஆதலால் குருசந்தான அடைவும் உனக்கு இல்லையாம்,
அடைவு தரின் முடிவின் கண் அநாதி போதன் சொன்னானாம் அவை வேத ஆகமங்கள் ஆகும்	நூலடைவு சொல்லப் புகின் சங்காரத்தின் கண் அழிவில்லாத பரமேசுவரன் சொல்லப் பட்டனவாம், அவை வேதாகமங்கள் என்பர்,
சுருக்கி ஊண் தவம் புரிய சொல்லுவது எல்லோரும்	இவ் ஆகமங்களின் சார்வுளார் சொல்லுவது உணவைச் சுருக்கித் தவத்தைப் புரிதலை; இங்ஙனம் அன்றி,
உன் நூல் கண் கழுவாதே உதிப்பதன் முன் புலாலோடு உண்பான் ஓர் ஊன் பிரியன் உரைத்தது ஒரு நூலே	உன்னுடைய பிடகநூல் கண் கழுவாது உதிக்கும் முன்னே புலாலுடன் உண்பான் ஒரு போசனப்பிரியன் சொல்லப்பட்ட நூலாம் என்றவாறு.

விளக்கவுரை

இனி, இந்தப்பிடக நூலைச் சொன்னவன் புத்தாசாரியன், அவனே அப்பள்ளியில் இருந்தான் என்னில், அவனால் ஆசாரியன் என்று சொன்னப்பட்டவன் யாண்டிருந்தான்? அவனுக்குக் கடவுளாவான் யாவன்? அவனால் சொல்லப்பட்ட நூல் யாண்டுளது? என்னும் வினாக்களுக்கெல்லாம் விடையில்லையாம். ஆதலால், குருசந்தான முறைமையும் உனக்கு இல்லையாய் முடியும். எனவே, நூலின் அடைவுகூறின் சங்கார காலத்தில் அழிவில்லாத பரமேசுவரனால் சொல்லப்பட்டனவாம்; அவை வேதாகமங்கள். ஆகமச் சார்புள்ளோர் கூறுவது உணவைச் சுருக்கித் தவத்தைப் பெருக்குவதே. உன்னுடைய பிடகநூல் கண் கழுவாமல் சூரியன் உதிக்கும் முன்னமே புலாலுடன் உண்ணும் போசனப்பிரியன் ஒருவனால் சொல்லப்பட்டதன்றோ!

ஊண் சுருக்குதல் தபசு பண்ணுமவர் முத்திரையும் பார்த்து, வாயுவுக்கு வழக்கமும் சலத்துக்கு இடமுமாக ஊணைச் சுருக்குவது என்க. (9)

செய்யுள் - 103

முன்னூலும் வழிநூலுஞ் சார்பு நூலும்
மூன்றாகு முலகத்து மொழிந்த நூல்கள்
இந்நூலி லுன்னூலிங் கெந்நூ லென்னில்
இந்நூல்கா ணென்னூலென் றியம்ப மாட்டாய்
உன்னூலு மொருநூலா யுரைப்ப தென்னே
யுலட்டுநூல் பருத்திநூல் சிலம்பி நூல்கள்
அந்நூலு மல்லாதே பொய்ந்நூல் கொண்டிங்
கறநோற்றுத் திரிந்தவா றழகி தாமே.

பதவுரை

முன்னூலும் வழிநூலும் சார்நூலும் மூன்று ஆகும் உலகத்து மொழிந்த நூல்கள்	பரமேசுவரனால் அருளிச் செய்யப்பட்டு இவ்வுலகின்கண் வழங்கும் நூல்கள் முதல் நூலும் வழிநூலும் சார்புநூலும் என மூன்று விதமாம்: அவை வேதாகம புராணங்கள்,
இந்நூலில் உன்நூல் இங்கு எந்நூல் என்னில் இந்நூல் காண் என் நூல் என்று இயம்பமாட்டாய்	இங்ஙனம் மூன்று விதமான நூல்களில் உன் நூல் எந்த நூல் என்று கேட்டால் இந்த நூல்களில் என்னுடைய நூல் இந்நூல் என்று சொல்லவல்லாய் அல்லை; ஆதலால்,
உன் நூலை ஒரு நூலாய்ச் உரைப்பது என்னே	உன்நூலை ஒரு நூலாய்ச் சொல்வது எப்படி?
உலட்டு நூல் பருத்தி நூல் சிலம்பி நூல்கள் அந்நூலும் அல்லாதே பொய் கொண்டு இங்கு அறம் நோற்று திரிந்தவாறு அழகிது ஆம் ஏ	உலண்டாற் செய்த நூல் பருத்தியாற் செய்தநூல் சிலம்பியாற் செய்த நூல் என்று செய்யப்பட்ட நூல்களின் தகுதியும் அல்லாத உனது பொய்யாகிய நூலைக் கொண்டு இங்கு அறத்தை உண்டாக்கி நடந்தது ஆச்சரியம் என்றவாறு

விளக்கவுரை

முதல்நூல் வழிநூல் சார்புநூல் என நூல் மூவகைப்படும். அவை பரமேசுவரனால் அருளிச் செய்யப்பட்டு உலகில் வழங்குவன. இம்மூவகை நூல்களில் உன்னுடைய நூல் எவ்வகையைச் சார்ந்தது? ஒன்றுமின்று: ஆகலின், உன் நூலும் ஒரு நூலாகுமோ? உலண்டாற் செய்யப்பட்ட நூல், சிலம்பி செய்த நூல், பருத்தி நூல் ஆகிய இவற்றின் தகுதிகூடச் சிறிதுமில்லாதது உன் பொய்ந்நூல்; அதனால் அறத்தை உண்டாக்கி நடத்தியதும் அம்மம்ம! ஆச்சரியமே!!

'ஒரு பொருளைத்தேடி' என்னும் செய்யுள் முதல் இச்செய்யுள்காறும் பிடகநூலை மறுத்துக் கூறிற்று. (10)

செய்யுள் - 104

புத்தனவன் பொன்றக்கெட் டுப்போனா னென்று
போற்றுவதிங் காரைநீ பொய்த்தவஞ்செய் புத்தா
செத்தவர்க்குச் சிலகிரியை செய்ய விங்குச்
செய்தவர்க்கும் புண்ணியமா மென்று செப்பில்
நித்தமுயி ராதலாற் பலிக்குஞ் செய்தி
நினைந்துதரு வானுமுள னுனக்கிவ்வா றில்லை
வைத்தசுடர்த் தீபமற மாய்ந்தக்கா லதற்கு
மருவுதிரி நெய்கூட்டு மதிகேடுன் வழக்கே.

பதவுரை

புத்தன் அவன் பொன்றக் கெட்டுப் போனான் என்று போற்றுவது இங்கு ஆரை நீ பொய்த்தவம் செய் புத்தா	பொய்த்தவத்தைச் செய்யும் புத்தா! நீ உன் ஆசாரியன் முதலறக் கெட்டுப்போயினான் என்று சொல்லி இவ்விடத்துப் போற்றுவது யாவரை,
செத்தவர்க்கு சில கிரியை செய்ய இங்குச் செய்தவர்க்கும் புண்ணியம் ஆம் என்று செப்பின்	இறந்தோரை நோக்கிச் செய்த சில நன்மை இருந்தோர்க்கும் புண்ணியம் ஆம் என்று கூறின்,
நித்தம் உயிர்	உயிர்கள் நித்தம் ஆதல் வேண்டும்,
ஆதலால் பலிக்கும் செய்தி நினைந்து தருவானும் உளன் உனக்கு இவ்வாறு இல்லை	ஆகையால் நீ கொடுக்கும் பலியால் உண்டாகிய புண்ணியம் இத்தன்மை என்று நினைந்து அப்புண்ணிய பலம் அருளுவானாகிய ஒரு கர்த்தாவும் உண்டாக வேண்டும்; இந்நெறி உன் நூல் நெறியன்று.
வைத்த சுடர்த் தீபம் அற மாய்ந்தக் கால் அதற்கு மருவு திரி நெய் கூட்டும் மதிகெடு உன் வழக்கு ஏ	பொன்றக் கெட்டவர்க்குச் செய்யும் சிறப்பாகிய உனது வழக்கு, தீபம் பொன்றக் கெட்ட இடத்து இறந்த தீபத்துக்கு உபகாரம் என்று கருதி நெய்யும் திரியும் கூட்டும் அறிவின்மைபோலும் என்றவாறு.

விளக்கவுரை

பொய்த்தவனே! உன்னுடைய ஆசாரியன் பொன்றக் கெட்டான் என்றாய். இங்குப் போற்றுவது யாவரை? இறந்தோரை நோக்கிச் செய்யும் சில கிரியைகள்

இருந்தோருக்கும் நன்மையைச் செய்யுமே! என்னில், உயிர்கள் நித்தமாதல் வேண்டும். ஆகையால், நீ கொடுக்கும் பலியால் உண்டாம் புண்ணியம் இத்தன்மையுடையது என நினைந்து அப்புண்ணிய பலத்தைத் தருதற்கு ஒரு கர்த்தாவும் வேண்டும். இவைகள் உன் நூலில் சொல்லப்படா. பொன்றக் கெட்டவர்க்குச் செய்யுள் சிறப்பாகிய உள் வழக்கு தீபம் பொன்றக் கெட்டவிடத்து அழிந்த தீபத்துக்கு உபகாரமாம் எனக்கருதி நெய்யும் திரியும் கூட்டும் அறிவின்மை போன்றதேயாம்.

இச்செய்யுள் புத்தன் 'கர்த்தா இல்லை' என்கையால், 'செய்யும் கன்மத்தாலும் பலம் இல்லை' என்று மறுத்துக் கூறிற்று.

உருவ கந்தமாகிய புத்தர் என்பு தாதநாயார் என்றும், தாடக நாயனார் என்றும் இன்றும் நினையக் காட்டுகிறார் என்கையால் உருவகந்தம் கெட்டதில்லையாம். ஆகவே, மற்ற நாலுகந்தமும் கெடா. அதனால், அவர் பொன்றக் கெடலாகிய முத்தியும் அடைந்திலர் என்க. புத்தன் சுகதன் மகன்.

உன் நூல் நெறியன்று என்றதனால் எமது மதக்கோள் நெறி என்பது கருத்து. *(11)*

செய்யுள் - 105

நூலுரைத்தா னொருவனுள னென்றநுமா னத்தால்
நூல்கொண்டிங் கறிந்தாற்போல் நூலா நூலின்
பாலுரைத்த பொருள்களெல்லா மநுமான மென்னில்
பரலோக பாதாள லோகங்க ளொருசொல்
லாலுரைத்த நூலின்றிபறையா யின்றேல்
அவையறிந்த படியெனுன தநுமான மன்றே
மேலுரைக்கும் பிரமாண முனக்கில்லை காட்சி
அநுமானம் விட்டபொருள் விளக்குவதா கமமே.

பதவுரை

நூல் உரைத்தான் ஒருவன் உளன் என்று அனுமானத்தால் நூல்கொண்டு இங்கு அறிந்தால்போல் நூலா நூலின் பால் உரைத்த பொருள்கள் எல்லாம் அநுமானம் என்னில்	நூலைச் சொன்னவன் ஒருவன் உண்டு என்று நூலைக்கொண்டு அனுமித்தாற் போல, சிறந்த நூலின் பகுதியிற் சொன்ன பொருள்கள் எல்லாம் அறிகை அனுமானம் என்று புத்த! நீ கூறின்,
பரலோக பாதாள லோகங்கள் ஒரு சொல்லால் உரைத்த நூல் இன்றி	பூமிக்கு மேலான உலகங்களின் செய்தியும் கீழான உலகங்களின் செய்தியும் நூல்கொண்டு

அறையாய்	சொல்லுவதின்று அநுமித்துச் சொல்ல லாமாயிற் சொல்லாய்,
இன்றேல் அவை அறிந்தபடி என் உனது அநுமானம் அன்றே	அந்த நூல் இல்லையாயின் அந்த உலகங்களின் செய்தி அறிந்தபடி என்? உனது அனுமானத்தால் அறியும் பகுதியன்றே! ஆகையால்,
மேல் உரைக்கும் பிரமாணம் உனக்கு இல்லை காட்சி அனுமானம் விட்ட பொருள் விளக்குவது ஆகமமே	காட்சியானும் அனுமானத்தாலும் அறியாத பொருளை அறிவிப்பது நூல்; அந்நூற் பிரமாணம் உனக்கு இல்லை என்று நீ கூறின், நீ முன் சொன்ன பிடகநூற் பிரமாணமும் உனக்கு இல்லையாம் என்றவாறு.

விளக்கவுரை

நீ அளவைகளுள் காட்சியும் அனுமானமும் ஆகிய இவற்றையே கொண்டாய். நூலைக் கண்டான் ஒருவன் அந்நூலைச் செய்தான் ஒருவன் உளன் என்று அனுமித்தறிவான். அதுபோல, நூலிற் சொல்லப்பட்ட பொருள்கள் எல்லாம் அநுமித்தறிவனவேயாம் என்று கூறுவாய். ஆனால், பூமிக்குமேல் உள்ள உலகங்களும், கீழ்உள்ள உலகங்களும் அநுமானத்தால் கூறமுடியுமாயின் கூறுவாயாக. நூல் இல்லையாயின் அவ்வுலகங்களைப்பற்றிய செய்திகள் எவ்வாறு அறிவாய்? அவை உன் அநுமானத்தால் அறிவதின்று. காட்சியளவை, அநுமான அளவைகளால் அறியப்படாமல் விட்ட பொருள்களை எல்லாம் ஆகமப்பிரமாணமே அறிவிக்கும். அவ்வாகமப் பிரமாணம் இல்லையாயின், உன்னுடைய பிடகநூற்பிரமாணமும் இல்லையாய் முடியும்.

இச்செய்யுள் 'பிரமாணம் இல்லை' என்பதனை மறுத்துக் கூறிற்று.

'நூல் உண்டேல் அறையாய்' என்பது பாடபேதம். (12)

செய்யுள் - 106

எப்பொருளு மநித்தமென இயம்பிடுவை யநித்தம்
இல்லதற்கோ வுள்ளதற்கோ வுளதிலதா னதற்கோ
செப்பிடினில் லதற்கில்ல தென்றுமில்லை
சென்றடைவதுள்ளதற்கேலுள்ளதென்றுமுண்டாம்
அப்படித்தா னுளதிலதா மப்பொருளுக் கென்னில்
உளதிலதா காதிலது முள்ள தாகா
திப்பொருளுக்கநிமித்தமிலையென்றொன்றைக் காட்டாய்
எனிற்றோன்றும் பொருணின்றிங் கிறுதி யாமே.

பதவுரை

எப்பொருளும் அநித்தம் என இயம்பி டுவை	எல்லாப் பொருளும் நித்தமில்லை அநித்தம் என்று புத்தா! நீ சொல்லா நிற்பை,
அநித்தம் இல்லதற்கோ உள்ளதற்கோ உளது இலது ஆனதற்கோ	நீ கூறிய அநித்தம் இல்லாத பொருளுக்கோ அல்லது உள்ள பொருளுக்கோ? உளது இலதான பொருளுக்கோ
செப்பிடின் இல்லதற்கு இல்லது என்றும் இல்லை சென்று அடைவது உள்ளதற்கேல் உள்ளது என்றும் உண்டாம் அப்படி தான் உளது இலதாம் அப்பொருளுக்கு என்னில் உளது இலதாகாது இலதும் உள்ளது ஆகாது	அநித்தம் இல்லாததற்கு என்று நீ கூறின் இல்லாதது என்றும் இல்லையாம்; ஆகையால், இல்லாததற்கு உண்டாவதில்லை; உள்ளதற்கு என்று கூறின் உள்ளது இல்லை ஆகாது என்றும் உண்டாகவேண்டும்; உளது இலதாம் பொருட்டு என்று கூறின் அதுவும் உளதிலது ஆகையால், உள்ளது இல்லை ஆகாது, இல்லாதது உண்டாகாது; அதனால், இவை அநித்தியம் அன்று,
இப்பொருளுக்கு அநித்தம் இல்லை என்று ஒன்றைக் காட்டாய் எனில்	தோன்றும் பொருள்களின் இப்பொருள் அநித்தம் அல்லாத நித்தம் என்று ஒன்றைக் காட்டாய் என்று கூறின்,
தோன்றும் பொருள் நின்று இங்கு இறுதி ஆம் ஏ	தோன்றும் பொருளாகிய தூலவுடல் தோன்றி நின்று கெடுதலை உடைத்தாம் என்றவாறு.

விளக்கவுரை

எல்லாப் பொருளும் அநித்தமாம், அவை நித்தப்பொருளன்று என்று உரைத்தாய். நீ கூறிய அநித்தம் உள்ள பொருளுக்கோ? இல்லாத பொருளுக்கோ? அல்லது உளதிலதான பொருளுக்கோ? உள்ள பொருள் சூனியமாகாது, இல்லாத பொருள் உண்டாகாது, உளதும் இலதுமான பொருள் இல்லாததாகாது. ஆதலால், நீ கூறும் கருத்தினை நன்றாக விளக்கிக் காட்டுக. அநித்தமில்லாத பொருளைக் காட்டுக என்னில், தோன்றும் பொருள் நின்று கெடுதலை யுடைத்தாம்; ஆகலின், அநித்தமே எனினும் அழிந்து சூனியமாகாது. எனவே, அநித்தப் பொருள் யாதொன்றுமில்லை. தூலம் கெடுமே யன்றிச் சூக்குமம் கெடுமாறில்லை என்க.

ஆதலால், சூக்கும உடலுக்கு அநித்தமில்லை என்பது கருத்து. அன்றியும், தோன்றியிடும் தூலதேகமும் வன்னபேதமும் ஒருக்காலும் இடையறாமல் தொன்று தொட்டு வருதலால் அதுவும் நித்தியம் என்னும் கருத்தாகக் கொள்ளினும் அமையும்.

செய்யுள் - 107

அங்குரம்வித் தின்கேட்டிற் றோன்றுமது போல
அனைத்துருவுங் கெட்டுவழி யாகு மென்னின்
அங்கவற்றுக் காக்கக்கே டறைந்தா யெல்லாம்
அநித்தமெனு முரைமறந்தா யருகனுமா னாய்நீ
இங்குமுளை யிலைமரமா யெழுந்தீண்டிச் செல்லா
திறந்ததே யெழுந்தபடி நில்லா தென்னின்
மங்கியிடா தேபால தருணவிருத் தையாய்
வரும்வடிவு திரிந்துநின்று மாயுங் காணே.

பதவுரை

அங்குரம் வித்தின் கேட்டில் தோன்றும் அதுபோல அனைத்து உருவும் கெட்டு வழி ஆகும் என்னின்	முளையானது வித்துக்கெடத் தோன்றும் அதுபோல எல்லா உருவங்களும் கெட்டுப் பின்பு அவ்வழியே தோன்றும் என்று புத்த! நீ கூறின்,
அங்கு அவற்றுக்கு ஆக்கக்கேடு அறைந்தாய் எல்லாம் அநித்தம் எனும் உரை மறந்தாய் அருகனும் ஆனாய் நீ	எல்லாம் அநித்தம் எனும் சொல்லை மறந்து உருக்களுக்கு ஆக்கக்கேடு கூறினாய், அதனால் நீயும் சமணன் மத வழியிலே ஆயினாய், அற்றன்று,
இங்கு முளை இலை மரம் ஆய் எழுந்து ஈண்டிச் செல்லாது இறந்ததே எழுந்தபடி நில்லாது என்னின்	இவ்விடத்து அம்முளை இலையும் மரமுமாய் வளர்ந்து செல்லாத வளர்ச்சியைக் கை விடுவானேன்; ஆதலால், எழுந்தபடி நில்லாது என்று நீ கூறின்,
மங்கியிடாதே பால தருண விருத்தை ஆய் வரும் வடிவு திரிந்து நின்று மாயும் காண் ஏ	தோன்றின வடிவு உருவம் கெடாமல் நின்று பால தருண விருத்த அவத்தைகளைப் பொருந்தி அவ்அவ் அவத்தைகள்தோறும் பேதப்பட்டுப் பின்பு தூல உடல் கெட்டுப்போம் என்றவாறு.

விளக்கவுரை

வித்துக் கெட முளைதோன்றும். அதுபோல எல்லா உருவங்களும் கெட்டுப் பின்பு அவ்வழியே தோன்றும் என்னில், அவ்வாறு ஒரு பொருட்கு ஆக்கக்கேடு கூறுதல் புத்தன் கொள்கையன்று; அது சமணன் கொள்கையாம்; உன் கொள்கை எல்லாம் அநித்தம் என்பது. இனி, முளையானது இலையும் மரமுமாய் வளர்ந்து அவ்வளர்ச்சியுடன் நில்லாது பல அவத்தைகளையும் பொருந்தி வரும். வடிவு

மாய்வானேன்? என்னில், அவ்வாறு கெடுவது காரியப்பட்ட பகுதியே; காரணப்பகுதியன்று; எனவே, அக்காரணப்பகுதி என்றும் சூனியமாவதின்று என்க.

எனவே, தூல உடல் கெட்டுச் சூக்கும உடல் நிற்கும் என்பது கருத்து.

'எப்பொருளும் அநித்தம்' என்னும் செய்யுளும் இச்செய்யுளும் 'அநித்தியம்' என்பதனை மறுத்துக்கூறின.

சமணன் ஆதல் அஸ்திநாஸ்திவாதம் சொல்லலால். (14)

செய்யுள் - 108

உடல்பூத மெனினொன்றுக் கொன்றுபகை யொன்றா
உதிரசுக் கிலமென்னின் மரத்தினுளுக் கல்லின்
இடமாகத் தவளையுரு வந்தவா றியம்பாய்
இருவினைகாணெனின் வினைகளிரண்டுருவாய்நிற்கும்
திடமாக வன்னமுரு வெனினுண்ண வுண்ணைச்
சென்றுவள ருங்காயந் தேயுமுணர் வென்னின்
மடவோனே யருவுணர்விங் கசேதனமா யுருவாய்
வளராது வருமில்லா தெனின்மலர்வான் வருமே.

பதவுரை

உடல்பூதம் எனின் ஒன்றுக்கு ஒன்று பகை ஒன்றா	புத்த! நீ உருக்கள் பூதரூபம் என்று கூறின் பூதங்கள் ஒன்றோடொன்று பகையாதலால் அவை தம்மிற் கூடி உரு ஆகா,
உதிர சுக்கிலம் என்னின் மரத்தின் உளு கல்லின் இடமாக தவளை உரு வந்த ஆறு இயம்பாய்	சுக்கில சுரோணி தங்கள் கூடி உருவாம் என்று நீ கூறின் மரம் இடமாகத் தோன்றும் உளுவும், கல்லினிடமாகத்தோன்றும் தவளையும் உருப்பெற்றதற்குச் சுக்கில சுரோணி தங்கள் கூடிவந்தவாறு சொல்லாய்,
இருவினை காண் எனின் வினைகள் இரண்டு உருவாய் நிற்கும்	புண்ணியபாவங்கள் தாமே உருவமாம் என்று கூறில் புண்ணியமும் பாவமும் இரண்டும் தம்மிற்கூடி ஓர் உருவம் திரண்டதாக வேண்டும்; அது கூடாது,
திடம் ஆக அன்னம் உரு எனின் உண்ண உண்ணசென்று வளரும் காயம் தேயும்	நிச்சயமாகவே அன்னசாரமே உருவாம் என்று கூறில் போசனத்தால் வளரும் காயம் விருத்த அவத்தையில் வளராது தேய்தல் காண்டும்; அதனால், அன்னசாரமும் அன்று,

உணர்வு என்னின் மடவோனே அரு உணர்வு இங்கு அசேதனம் ஆய் உரு ஆய் வளராது	உணர்வுதானே உருவம் எடுத்துக்கொண்டது என்று கூறின் அறியாதவனே! அருவமாய் இருக்கும் அறிவு அசேதனமாயிருக்கும் உருவமாய் இவ்விடத்து வளராது,
வரும் இல்லாது எனின் மலர் வான் வரும் ஏ	இல்லாதது ஒன்று உருவமாய் வரும் என்று கூறின் இல்லையாயது இல்லையேயாம்; ஆகையால், நீ கூறிய இது ஆகாயப் பூப்போலப் பொய்யாக வரும் என்றவாறு
அசேதனம்	அறிவில்லாதது; சடம்; தானே இயங்காது.

விளக்கவுரை

புத்தனே! நீ உருக்கள் எல்லாம் பூதவடிவம் என்னின், அவை ஒன்றுக்கொன்று பகைமையுடையன; ஆகலின், அவை தம்முட் கூடி உரு ஆகா. ஆண் பெண்களுடைய சுக்கில சுரோணிதக் கலப்பே உரு என்னின், மரத்தினிடமாக உருத் தோன்றுவதும் கல்லினிடமாகத் தேரை தோன்றுவதும் சுக்கில சுரோணிதக் கலப்புத்தானோ? அன்று. புண்ணிய பாவங்கள் தாமே உருவமாம் என்னில், புண்ணியமும் பாவமும் தம்முட்கூடி உருவுண்டானதாக வேண்டும்; அது கூடாது. உண்மையாக அன்னசாரமே உருவாம் என்னில், கிழப்பருவத்தில் அன்னமுண்ணவும் அவ்வுரு வளராது தேயக்காண்கின்றோம்; ஆகலின், அதுவும் அன்றாம். அறிவு தானே உருவெடுத்துக் கொண்டது என்னில், அறிவு அருவானது, அது அசேதமான உருவாய் வளராது. இல்லாதது ஒன்று உருவமாய் வரும் என்னில், இல்லாதது இல்லாததேயாம். ஆகலின், நீ கூறியது ஆகாயப்பூப் போல்வதாம் என்க.

இச்செய்யுள் பூதங்கள், சுக்கில சுரோணிதங்கள், கன்மம், அன்னமயம், உணர்வு என இவை தனித்தனியே உடல் எடுக்கும் என்பதனை மறுத்துக் கூறிற்று.

'மலர் வான் வருமே' என்று பாடம்; ஆகலால், ஆகாயத்தே புட்பம் வர வேண்டும் என்க. புண்ணியமும் பாவமும் மாறாகையால் இரண்டும் கூடி ஓர் உரு வாராது என்றார். *(15)*

செய்யுள் - 109

என்றுமிலா தொன்றின்றாய் வருமுருவம் வித்தின்
எழுமரம்போ லெனின்வித்தி னுண்டாய்நின் றெழுக்காண்
நின்றதேல் வித்தின்மரங் கண்டதில்லை யென்னி
நெற்கமுகாய் நீளாது நெல்லாயே நீளும்
ஒன்றிலொன்றங் கிலாமையினால் உதியாகா ரணம்பெற்
றுதிப்பதுகா ரியமதுவும் உள்ள தாகும்
மன்றமதிக் கலைபோலக் கந்த மைந்தும்
மருவியுள தெனுமுரையு மறந்தனையோ வின்றே.

பதவுரை

என்றும் இலாது ஒன்று இன்றாய் வரும் உருவம் வித்தின் எழும் மரம் போல் எனின்	யான் கூறியது பொய்யன்று, என்றும் இல்லாதது ஒன்று உண்டாய் வரும்; அஃது எங்ஙன் எனின், வித்தினிடத்திலே மரம் தோன்றுமாபோல என்று புத்த! நீ கூறின்;
வித்தின் உண்டாய நின்று எழும் காண்	அம்மரம் வித்தினிடத்திலே உண்டாய் நின்று எழுதலன்றி, இல்லையாய் நின்று எழாது காண்,
நின்ற தேல் வித்தின் மரம் கண்டதில்லை என்னின் நெல் கமுகு ஆய் நீளாது நெல்லாயே நீளும்	அப்படி வித்திலே மரமுண்டாமாயின் வித்தினிடத்திலே காணவேண்டும், வித்தினிடத்தின் மரம் கண்டதில்லை என்று கூறின் நெல்வித்துக் கமுகாய் வளராது நெல்லே ஆம் இத்தனை,
ஒன்றில் ஒன்று அங்கு இலாமை யினால் உதியா	ஒரு மரத்தில் ஒருமரம் உண்டாகாது ஆகையால் இல்லாதது உண்டாகாது,
காரணம் பெற்று உதிப்பது காரியம் அதுவும் உள்ளது ஆகும்	வித்துக் காரணமாக மரம் காரியப்படுதல் உள்ளதாம்,
மன்ற மதிக்கலை போல கந்தம் ஐந்தும் மருவி உளது எனும் உரையும் மறந்தனையோ இன்று ஏ	நிச்சயமா மதியும் கலையும் போலக் கந்தங்கள் ஐந்தும் பொருந்தி உருவுண்டாம் என்னும் உரையும் இன்று மறந்தாயோ என்றவாறு

விளக்கவுரை

ஐய! என்றும் இல்லாததொன்று உண்டாய் வரும் என்றது பொய்யன்று; வித்தினிடத்து முன்பு இல்லாத மரம் தோன்றியது எப்படி? அப்படியே ஆம்; என்று கூறின், நன்று! அம்மரம் வித்தினிடத்து உண்டாய் நின்றே எழும், இல்லையாய் நின்று எழாது. அப்படி வித்திலே மரம் உண்டாயின் வித்தினிடத்திலே அது காணப்படவேண்டும், வித்தினிடத்திலே மரம் காணப்படவில்லையே! என்னில், நெல்வித்துக் கமுகாய் வளராது; நெல்லாயே வளரும். ஒரு மரத்தில் வேறொரு மரம் உண்டாகாது; ஆகலின், இல்லாதது உண்டாகாது. வித்துக் காரணமாக மரம் காரியப்படுதல் உள்ளது. மதியும் கலையும் போலக் கந்தங்கள் ஐந்தும் பொருந்தி உருவுண்டாம் என்னும் உன்கொள்கையையும் மறந்தனை போலும். அதற்கு மாறாக இப்பொழுது சூனியத்திலிருந்து உருத்தோன்றும் என்றது எவ்வாறு பொருந்தும்?

மதியும் கலையும் என்ற உம்மை தொக்கது. அது காரணத்திலே காரியம்

தோன்றும் என்று அறிவித்தது. உதியாது என்றது ஈறுகெட்டது.

இச்செய்யுள் இல்லாதது உண்டாம் என்பதனை மறுத்துக் கூறிற்று. (16)

செய்யுள் - 110

உருவமெலாம் பூதவுபா தாய சுத்தாட்
டகவுருவ மென்னினீ யுலவத் துக்கு
மருவுமன லோடுநீர் மண்கந்த மிரதம்
வன்னமிலை வன்னிக்கு வளிநீர்மண் வாசம்
தருமிரத மிலைநீர்க்குத் தழல்கான்மண் கந்தம்
தானில்லைத் தலத்தினுக்குச் சலமனல்கால் கூடி
வருவதிலை யிந்திரிய விடய மான
மாபூதங் களுமறியாய் மதிகெட் டாயே.

பதவுரை

உருவம் எலாம் பூத உபாதாய சுத்த அட்டக உருவம் என்னின் நீ	*புத்த! நீ உருவமெல்லாம் பூதஉரு நான்கும் உபாதாயஉரு நான்கும் ஆகிய எட்டும் கூடியே வரும் என்று கூறின்,*
உலவத் துக்கு மருவும் அனலோடு நீர் மண் கந்தம் இரதம் வன்னம் இலை	*அவை எட்டும் ஒன்றோடொன்று கூடா, அஃது எங்ஙனம்? என்னில், காற்றுக்குத் தன் குணம் ஆகிய சலித்தல் ஒழிந்து அனலும் நீரும் மண்ணும் இவையிற்றின் குணமாகிய உருவம் இரதம் கந்தங்களாகிய இவையும் கூடுவ தில்லையாம்*
வன்னிக்கு வளிநீர் மண் வாசம் தரும் இரதம் இலை	*அக்கினிக்குத் தன் குணமாகிய உருவம் ஒழிந்து வாயுவும் நீரும் மண்ணும் இவையிற்றின் குணமாகிய பரிச ரச கந்தங்கள் கூடுவ தில்லையாம்,*
நீர்க்கு தழல் கால் மண் கந்தம் தான் இல்லை	*அப்புவுக்குத் தன் குணமாகிய இரதம் ஒழிந்து அக்கினியும் வாயுவும் பிருதிவியும் இவையிற்றின் குணமாகிய ரூப சலன கந்தம் என்னும் இவை கூடுவதில்லையாம்;*
தலத்தினுக்கு சலம் அனல் கால் கூடி வருவது இலை	*பூமிக்குத் தன் குணமாகிய கந்தம் ஒழிந்து சலமும் அக்கினியும் வாயுவும் இவையிற்றின் குணமாகிய இரதமும் உருவமும் சலித்தலும் என்னும் இவையும் கூடுவதில்லையாம்;*

	ஆகையால், இவை எட்டும் கூடி உரு ஆகா,
இந்திரிய விடயமான மாபூதங்களும் அறியாய் மதி கெட்டாய் ஏ	அந்த மகாபூதமும் குணமும் இந்திரிய விடயங்கள் என்பதும் அறியாய் புத்தியில்லாதாய் என்றவாறு

விளக்கவுரை

நீருக்குப் பரிசம் இல்லை என்பது நெருப்புக்கே பரிசம் என்று நீ சொன்ன நூலிலே கண்டுகொள்க. கூடிவருவது - கடைநிலைத் தீபகம்.

இச்செய்யுள் பூதவுருநாலும் உபாதாய உருநாலும் கூடித் தூலவுடல் எடுக்கும் என்றதனை மறுத்துக் கூறிற்று. (17)

செய்யுள் - 111

மருத்தெண்ணெய் தனின்மருந்து நின்றாற் போல
மறைந்தெட்டுஞ் சூக்குமமாய் மருவு மென்னில்
திருத்துமவன் மருந்தெண்ணெய் சேர்த்தாற் போலச்
சேர்ப்பவன்வே றுண்டெல்லா வுருவு மெட்டும்
பொருத்தியதே லொருதன்மை யாம்பொருள்க ளொன்றின்
குணமொன்றிற் புகாதறைகை பொருள றியாய்பூத
உருப்பொருள்வே றுபாதாயப் பொருள்வேறு காட்டாய்
உபாதாயம் பூதகுணங் குணகுணியா முலகே.

பதவுரை

மருத்து எண்ணெய் தனில் மருந்து நின்றாற்போல மறைந்து எட்டும் சூக்குமம் ஆய் மருவும் என்னில்	மருத்தெண்ணெயில் மருந்து தோன்றாமல் கரந்து நின்று நன்மையைத் தருமாபோலப் பூதவுருவும் உபாதாய உருவும் ஆகிய எண்வகையும் தூலங்கெட்டுச் சூக்கும உருப்பெற்று நிற்கும் என்று புத்த நீ கூறின்,
திருத்தும் அவன் மருந்து எண்ணெய் சேர்த்தாற்போல சேர்ப்பவன் வேறு உண்டு	வியாதியைத் தீர்க்கும் மருத்துவன் அவ் எண்ணெயையும் மருந்தையும் சேர்த்தாற் போல பூதவுருவையும் உபாதாய உருவையும் கூட்டி உண்டாக்குவான் ஒரு கர்த்தா வேண்டும்,
எல்லா உருவும் எட்டும் பொருத்தியதேல் ஒரு தன்மை ஆம் பொருள்கள்	எல்லா உருவத்தையும் இவ்வெட்டுமே உண்டாக்குகின்றன என்று கூறின் அப்பொருள்கள் எல்லாம் ஒரு தன்மைப்பட வேண்டும்,

ஒன்றின் குணம் ஒன்றில் புகாது அறைகை பொருள் அறியாய்	அவ்வுருக்களின் குணங்களில் ஒன்றின் குணம் ஒன்றில் கூடாது ஆகையால், சொல்லுகைக்குப் பொருள் அறியாய்,
பூத உருப்பொருள் வேறு உபாதாயப் பொருள்வேறு காட்டாய் உபாதாயம் பூதகுணம் குணகுணி ஆம் உலகு ஏ	அன்றி, பூதவுருப் பொருளையும் உபாதாயவுருப் பொருளையும் வேறுகாட்டவல்லையாயிற் காட்டாய்; உபாதாயமாவது பூதகுணமாம், அந்தக் குணத்தையுடையது பிரபஞ்சமாம் என்றவாறு.

விளக்கவுரை

மருந்தெண்ணெயில் மருந்து தோன்றாமல் கரைந்து நுட்பமாகக் கலந்திருப்பது நன்மையைத் தரும். அதுபோல, பூதவுருவும் உபாதாயவுருவும் ஆகிய எட்டும் தூலப்பகுதி கெட்டுச் சூக்கும உருவாய்க் கலந்திருக்கும் எனப் புத்த! நீ கூறுகின்றாய். வியாதியைத் தீர்க்கும் மருத்துவன் ஒருவன் அவ்எண்ணெயையும் மருந்தையும் கூட்டும் முறைமையிற் கூட்டிடுவான். அதுபோல, பூதஉருவையும் உபாதாயவுருவையும் கூட்டியுண்டாக்கும் ஒரு முதல்வன் வேண்டும். எல்லா உருவங்களையும் இவ் எட்டுமே உண்டாக்குகின்றன என்னில், அப்பொருள்கள் எல்லாம் ஒருதன்மைப்பட்டனவாக வேண்டும் அவ்வாறின்றி, ஒன்றன் குணம் மற்றொன்றில் கூடியிருக்கக் காண்கிலேம். பூதவுருப் பொருளையும், உபாதாயவுருப்பொருளையும் தனித்தனி காட்டமுடியுமா? உபாதாயம் என்பது பூதகுணம் - அந்தக்குணத்தை யுடையது பிரபஞ்சமாம். குணமானது குணியோடு பிரிப்பின்றியிருப்பது. அதனைத் தனித்துக்காட்ட இயலாது.

இச்செய்யுள் பூதவுருவும் உபாதாயவுருவும் ஆகிய எட்டும் தம்மிற் கூடி, சூக்குமமாக நின்று, பின்பு தூலவுடல் எடுக்கும் என்பதனை மறுத்துக் கூறிற்று. *(18)*

செய்யுள் - 112

அழிந்துணர்வை யுணர்வுதரு மெனினழிந்த தாக்கா
தாமுணர்விற் பொருள்வினைக ளணையா வாகும்
அழிந்திடுவ தாக்கியெனின் முன்னொருகா லத்தே
அறிவிரண்டு நில்லாதங் கறக்கே டின்றி
அழிந்துணர்வை யுணர்வுதரு மெனினித்தா நித்தம்
அடையுமுணர் வுனக்கநித்த மாயே செல்லா
தழிந்தெருவை யாக்குவது போலாக்கு மென்னின்
ஆம்பொருள் வேறழிந்துசத்திகிடந்தாக்குமவையே.

பதவுரை

அழிந்து உணர்வை உணர்வு தரும் எனின்	தோன்றிய அறிவு கெட்டுப் பின் ஓர் அறிவை உண்டாக்கும் என்று புத்த! நீ கூறின்,
அழிந்தது ஆக்காதாம் உணர்வில் பொருள் வினைகள் அணையா ஆகும்	கெட்ட அறிவு மற்றோர் அறிவை உண்டாக்க மாட்டாது, அன்றியும் ஆகிற அறிவும் முன் அறிவு கெடுதலால் கெட்ட அறிவும் அறியும் பொருளையும் செய்யும் வினையையும் அறிந்து செய்யவும் மாட்டாது,
அழிந்திடுவது ஆக்கி எனின் முன் ஒரு காலத்தே அறிவு இரண்டும் நில்லாது	முன்னை அறிவு பின்னை அறிவை உண்டாக்கிக் கெடும் என்று கூறின் ஒரு காலத்தே இரண்டு அறிவு தோன்றி நில்லா,
அங்கு அறக்கேடு இன்றி அழிந்து உணர்வை உணர்வுதரும் எனின் நித்த அநித்தம் அடையும் உணர்வுக்கு அநித்த மாயே செல்லாது	அவ்விடத்து முன் அறிவு முற்றக் கெடாது சிறிது நின்று மேல் ஓர் அறிவையுண்டாக்கிப் பின் இறந்திடும் என்று நீ கூறின், உணர்வுக்குச் சுபாவம் நித்த அநித்தம் ஆதலால் உணர்வு அநித்தம் என்று கூறியது பொருந்தாதாம்.
அழிந்து எருவை ஆக்குவதுபோல் ஆக்கும் என்னின் ஆம் பொருள் வேறு அழிந்து சக்தி கிடந்து ஆக்கும் அவையே	பயிருக்கு இடும் எருவும் வைக்கோலும் தாம் கெட்டுப் பயிருக்கு நன்மை கொடுப்பதுபோல முன்னை அறிவுகெட்டுப் பின்னை அறிவையும் உண்டாக்கும் என்று கூறின், அவ்வெருவும் வைக்கோலும் தூலம் கெட்டுச் சூக்குமமாகிய வீரியம் கிடந்து பயிர்க்கு நன்மை கொடுக்கும்; அதுபோல, உன் அறிவு சேரக்கூடாது என்னவேண்டும் ஆகையால், நீ கூறிய அதற்கு நித்தியமில்லை என்ன வேண்டா என்றவாறு.

விளக்கவுரை

ஆம்பொருள் வேறு என்றதனால் எருவால் நன்மை பெறும் பயிர் வேறானாற்போல அறிவாலாம் பொருளும் வேறு என்க.

இச்செய்யுள் அறிவு அநித்தம் என்பதனை அநித்தம் அல்ல என மறுத்துக் கூறிற்று. *(19)*

செய்யுள் - 113

கேடிலாச் சந்தானத் தேபலிக்கு மென்று
கிளக்குநீ சந்தான நித்த மாகும்
ஒடுநீர் போலழிந்தா முணர்வொழுக்க மென்னின்
ஒழுகுநீ ரிட்டதெல்லா முடன்கழிதல் போலத்
தேடுபொருள் சீலம்பா வனைகுறிவிஞ் ஞானம்
சென்றவுணர் வோடேகு நின்றுணர்வி னேயா
நீடுநீர் முன்னொழுகிக் கெடாதுநிறைந் தோடும்
நிகழுணர்வுங் கேடின்றி நிறைந்துசெலுங் காணே.

பதவுரை

கேடு இலா சந்தானத்தே பலிக்கும் என்று கிளக்கும் நீ சந்தானம் நித்தம் ஆகும்	உணர்வு கெடாத தொடர்ச்சியாலே உணர்வு தோன்றும் என்று புத்த! நீ கூறின் அந்தத் தொடர்ச்சிதான் நித்தம் ஆக வேண்டும்,
ஒடும் நீர்போல் அழிந்து போம் உணர்வு ஒழுக்கம் என்னின்	ஆற்றின்கண் ஒடும் நீர் முன் சென்றது வற்றப் பின் சென்றது அவ்வெல்லையின் இறந்து போமாறு போல, முன்னை அறிவுகெடப் பின்னை உண்டாகிய அறிவு மிக்க அறிவாம் என்று நீ கூறின்,
ஒழுகுநீர் இட்டது எல்லாம் உடன் கழிதல்போல தேடு பொருள் சீலம் பாவனை குறி விஞ்ஞானம் சென்ற உணர்வோடு ஏகு நின்று உணர்வினேயா	ஓடுகின்ற நீரின்கண் உண்டானவை எல்லாம் அந்நீரோடு கூடக்கழிந்துபோகப் பின்னர்ச் செல்லும் நீர் அவற்றைக் கூடமாட்டா; அது போல, முந்தை அறிவால் தேடும் பொருள்கள் சீலம் பாவனை குறி விஞ்ஞானம் இவை யெல்லாம் முன்னை அறிவோடு கெடும்; ஆகையால் பின்னை உண்டாம் அறிவில் கூடமாட்டா,
நீடுநீர் முன் ஒழுகி கெடாது நிறைந்து ஒடும் நிகழ் உணர்வும் கேடு இன்றி நிறைந்து செலும் காண் ஏ	விடாமல் ஓடும் நீர் முன் ஒழுகிய தன்மை கெடாமல் நிறைந்து ஓடியவாறு போல அறிவு இடையறாமல் தோன்றும் என்று நீ கூறின் அப்படி உண்டாம் அறிவு அநித்தியம் அன்று; நித்தியமாய் நிறைவு பெற்றுச் செல்ல வேண்டும் என்றவாறு.

விளக்கவுரை

புத்த! நீ உணர்வு கெடினும் அதன் தொடர்ச்சி கெடாது; அத்தொடர்ச்சியால் புதிய உணர்வு உதிக்கும் எனக்கூறின், நீ கூறும் அத்தொடர்ச்சியே நித்தமாம். ஆற்றில் ஓடும் நீர் முன்னே சென்றது ஒழியப் பின்னே சென்றதும் அதனைத் தொடர்ந்தே ஓடும். அதுபோல, முன்னை அறிவு கெடப் பின்னை அறிவும் அதனைத் தொடர்ந்துண்டாம் என்னில், ஓடும் நீரில் இட்டதெல்லாம் அதனோடு தொடர்ந்து சென்றொழியும்; பின்வரும் நீரினைப்பற்றா. அதுபோல, முந்தை அறிவால் தேடும் பொருள்கள் ஆகிய சீலம் பாவனை குறி விஞ்ஞானம் முதலிய எல்லாம் முன்னை அறிவோடு கெடும்; பின்னை அறிவினில் பொருந்தாவாம். விடாமல் ஓடும் நீர் முன் ஒழுகிய தன்மை கெடாமல் நிறைந்து பின்னீரும் ஒரொழுக்காகச் செல்லும்; அதுபோல, அறிவு இடையறாமல் தோன்றும் என்னில், அப்படியுண்டாகும் அறிவு அநித்தியன்று; நித்தியமே.

இச்செய்யுளும் அநித்தம் என்பதனை மறுத்துக்கூறிற்று. *(20)*

செய்யுள் – 114

சந்தானங் காரணமோ காரியமோ விரண்டின்
தன்மையதோ காரணமுங் காரியமு நித்தம்
வந்தாருஞ் சந்தானத் தொடர்ச்சியெனி னதற்கும்
வருநித்தந்தோற்றக்கேடடைதலின் மற்றொன்றேல்
ஐந்தான கந்தங்க ளன்றாய் நித்த
மடைபொருளா மறிவுமறி வடைவு மின்றிச்
சிந்தாமுன் பின்னாகிப் பின்முன் னாகித்
திரிந்துவருந் திரிவறிந்து தேரா தேரே.

பதவுரை

சந்தானம் காரணமோ காரியமோ இரண்டின் தன்மையதோ	*நீ தொடர்ச்சி என்றது காரணமாய் நின்றதோ? காரியமாய் நின்றதோ? காரணகாரியமாய் நின்றதோ?*
காரணமும் காரியமும் நித்தம்	*காரணம் என்னில் என்றும் காரணப்பட்டு வருகையால் நித்தமாம், காரியம் என்னில் என்றும் காரியப்பட்டு வருகையால் அதுவும் நித்தமாம்,*
வந்து ஆரும் சந்தானத் தொடர்ச்சி எனின் அதற்கும் வரும் நித்தம்	*காரணகாரியமாகிய தொடர்ச்சி மீளவந்து பொருந்தும் என்று நீ கூறின் அப்படிக் காரண*

தோற்ற கேடு அடைதலின்	காரியப்படுதலுமாய்த் தோன்றுதலும் கெடுதலுமாய்த் தொன்றுதொட்டு வருதலால் அதற்கும் நித்தியத்துவம் உண்டாம்,
மற்று ஒன்றேல் ஐந்து ஆன கந்தங்கள் அன்றாய் நித்தம் அடைபொருள் ஆம்	மற்றோர் அறிவு என்னில் அப்படிக் காரண காரியப்படுதற்கு இந்திரியங்களோடு ஒரு பொருள் ஆகாமல் அவ்வறிவு வேறொரு பொருள் ஆகலானும் இந்திரியங்கள் அவ்வறிவுக்கு மூலம் அல்ல ஆகையாலும் அவ்வறிவு நித்தியமாக அடையும் பொருளாம்; அங்ஙனமாயின்,
அறிவும் அறிவு அடைவும் இன்றி சிந்தா முன்பின் ஆகி பின்முன் ஆகி திரிந்துவரும் திரிவு அறிந்து தேரா தேரே	ஆன்மாவும் ஆன்மாவால் அடையும் பொருளுமாக அறிதலின்றி முறையே கெட்டு இந்திரியங்கள் அறிவாகவும் அறிவு இந்திரியங்களாகவும் முறை பிறழ்ந்துவரும்; இவையிற்றின் திரிவை அறிந்து விசாரியாய்; புத்தனே! என்றவாறு

விளக்கவுரை

நீ தொடர்ச்சி என்று கூறியது காரணமாய் நிற்பதோ? காரியமாய் நிற்பதோ? அன்றிக் காரண காரியமாய் நிற்பதோ? காரணம் என்னில், என்றும் காரணப்பட்டு நிற்றலின் நித்தமாம்; அன்று காரியம் என்னில், அதுவும் என்றும் காரியப்பட்டு வருதலின் நித்தமாம்; காரணகாரியத்தொடர்ச்சி மீளவும் வந்து பொருந்தும் என்னில், அப்படிக் காரணகாரியப்படுதலுமாய்த் தோன்றலும் கெடுதலுமாய்த் தொன்றுதொட்டு வருதலின் நித்தமே; அதற்கிழுக்கில்லை. முன்னறிவையும் பின்னறிவையும் சேர்ப்பதே தொடர்ச்சி என்னில், தோற்றக்கேடுடைய பொருள்களுக்கு யாம் கூறியது இதற்கும் ஒக்கும்; ஆகலின், அதுவும் நித்தமாய் முடியும். மற்றோர் அறிவு என்னில், அத்தொடர்ச்சியே நீ கூறும் அறிவாதல் வேண்டும்; அல்லது அறியப்படும் ஐந்து கந்தங்களுள் ஒன்றாதல் வேண்டும். அவ்வறிவு இந்திரியங்களோடு ஒரு பொருள் ஆகாமல் வேறொரு பொருளாம் ஆகலானும், இந்திரியங்கள் அவ்வறிவுக்கு மூலமன்று ஆகலானும் அறிவு நித்தியப் பொருளாம். ஆதலால், ஆன்மாவும் ஆன்மாவால் அடையப்படும் பொருளுமன்றி முறையே கெட்டு இந்திரியங்கள் அறிவாகவும் அறிவு இந்திரியங்களாகவும் முறை பிறழ்ந்து வரும். இதனை விசாரித்தறிவாயாக.

இச்செய்யுள் அறிவு அநித்தியம் என்பதனை மறுத்துக் கூறிற்று. *(21)*

செய்யுள் - 115

ஒருகாலத்துணர்வுகெட்டாமெனினுதிப்பீ றொன்றாம்
ஒருபொருளின் றிரிவுனக்குக் கால மானால்
வருகால நிகழ்காலங் கழிகால மென்று
வழங்குவதென்பொருள்வரவு நிலைகழிவாலின்றேல்
திரிகாலஞ் செப்பிடாய் பொருட்செயலு மொன்றாம்
செயன்மூன்று மொருகணத்தே சேரு மென்னில்
தருகால மூன்றாகுந் தாமரைநூ றிதழில்
தள்ளுசி யுங்கால மூன்றினையுந் தருமே.

பதவுரை

ஒரு காலத்து உணர்வு கெட்டு ஆம் எனின் உதிப்பு ஈறு ஒன்று ஆம்	காலம் பேதப்படாது ஒரு காலத்திலே அறிவு கெடுதலும் உண்டாதலும் செய்யும் என்று புத்த! நீ கூறில் சங்காரமும் சிருட்டியும் ஒரு தொழில் ஆகவேண்டும்,
ஒருபொருளின் திரிவு உனக்கு காலம் ஆனால்	ஒரு பொருளின் திரிவே உனக்குக் காலம் என்று சொல்லுவையானால்,
வருகாலம் நிகழ்காலம் கழிகாலம் என்று வழங்குவது என்	எதிர்காலம் என்றும் நிகழ்காலம் என்றும் கழிகாலம் என்றும் வழங்குவானேன்,
பொருள் வரவு நிலை கழிவால் இன்றேல்	அப்படி வழங்கியது பொருள்களானவை வருதலும் நிற்றலும் கழிதலும் ஆதலால் காலம் இல்லை என்று சொல்லுவையாயின்,
திரிகாலம் செப்பிடாய் பொருட் செயலும் ஒன்றாம்	மூன்று விதமான காலத்தின் பெயரை நீ சொல்லுவாயல்லை, அங்ஙனம் காலபேதம் இல்லையாயின் இருது பேதாதிகளும் குண பேதாதிகளும் இல்லையாய்ப் பொருள்கள் எல்லாம் ஒரு செயலாகவேண்டும்,
செயல் மூன்றும் ஒரு கணத்தே சேரும் என்னில்	அப்படிப் பேதித்த மூன்று செயலும் ஒரு கணத்திலே சேரும் என்னில்,
தரு காலம் மூன்று ஆகும் தாமரை நூறு இதழில் தள்ளுசியும் காலம்	அப்படிக் கணத்திலே உண்டாயதுவும் காலம் மூன்றினையும் உடைத்தாம் அஃது எங்ஙன்?

காலம் மூன்றினையும் தரும் ஏ	என்னில், தாமரை இதழ் நூறு அடுக்கில் செலுத்தின ஊசியும் இதழ்தோறும் பற்றுகையும் உருவுகையும் கழிகையுமாய் மூன்று காலத்தைத்தரும் ஆதலால் பொருட்செயல் அல்ல காலம் உண்டாம் என்று அறிவாயாக என்றவாறு.

விளக்கவுரை

இனி, காலம் பேதப்படாதது; ஒரு காலத்திலேயே அறிவு கெடுதலும் உண்டாதலும் ஆம் என்னில், சங்காரமும் சிருட்டியும் ஒரு தொழிலாக வேண்டும். ஒரு பொருளின் திரிவே காலம் என்னில், எதிர்காலம் நிகழ்காலம் கழிகாலம் என வழங்குவானேன்? அப்படி வழங்குவது பொருள்களின் வருதல் நிற்றல் கழிதல்களே ஆம் என்னில், காலம் என்பதை வைத்துத் தானே தொழில் மூன்றாகக் கூறப்படும். காலபேதம் இல்லையாயின் இருது பேதங்களும் குணபேதங்களும் இல்லையாம்; பொருள்களெல்லாம் ஒரு செயலுக்குரியனவே. மூன்று செயலும் ஒரு கணத்தில் நிகழும் என்னில், ஒரு கணத்திலே காலம் மூன்றுளதாம். அது காட்டுதும்; நூறு தாமரை இதழ்களை ஒன்றன் மேல் ஒன்றாக அடுக்கி ஒரு ஊசியால் குத்த அவ்வூசி இதழ்தோறும் பற்றுதல் உருவுதல் கழிதல் ஆகிய முற்செயற்படுகிறது. அச்செய்கை வெவ்வேறாம் ஆகலின், காலம் மூன்றும் கணத்துள் அமைதல் காண்க.

பஞ்சகந்தம் ஒரு கணத்திலே கெடும் என்பதனை மறந்தாயோ, இதனைக் கருதிக் கொள்வாய் என்க.

இச்செய்யுள் காலம் இல்லை என்பதனை மறுத்துக் கூறிற்று. (22)

செய்யுள் - 116

உணர்வுகா ரணமுணர்வுக் கென்னி னித்தம்
உணர்வுக்குண் டாகிநின் றுணர்வையுதிப் பியாதிங்
குணர்வுசந் தானவிடத் தொழிந்தாற் பின்னை
உண்டாகா துடலுணர்வுக் குபாதான மென்னில்
உணர்வுடலி னிடையறா துதிக்க வேண்டும்
உடலுணர்வின் வினையினாலுணர்வுதிக்கு மென்னில்
உணர்வினை யுளதொடுங்கா துணர்வுதருஞ் செய்தி
உணர்வைவினைதரினொருவன் செயல்வினைபின்றாமே.

பதவுரை

உணர்வு காரணம் உணர்வுக்கு என்னின்	அறிவு காரணமாக மற்றோர் அறிவு உண்டாம் என்று புத்த! நீ கூறின்,
நித்தம் உணர்வுக்கு உண்டாகி நின்று உணர்வை உதிப்பியாது இங்கு	நீ அநித்தியம் என்று கூறுகையால் அறிவுக்கு நித்தியம் உண்டாகி நின்று மற்றோர் அறிவை உண்டாக்கமாட்டாது; அன்றியும்,
உணர்வு சந்தான இடத்து ஒழிந்தால் பின்னை உண்டாகாது	அவ்வறிவு தான் வருகிற தொடர்ச்சியிலே கெட்டால் பின்னை அறிவு தோன்றாது,
உடல் உணர்வுக்கு உபாதானம் என்னில்	உணர்வுக்கு மூலகாரணம் ஆகிநின்று ஊடலம் தோற்றுவிக்கும் என்னில்,
உணர்வு உடலின் இடையறாது உதிக்கவேண்டும்	அவ்வறிவு உடலின் உறக்கத்தின் கண்ணும் இடையறாமல் உண்டாகவேண்டும்,
உடல் உணர்வின் வினையினால் உணர்வு உதிக்கும் என்னில்	உடல் உணர்வின் வினையாலே உணர்வு தோற்றும் என்று கூறின்,
உணர்வு வினை உளது ஒடுங்காது	இந்திரியங்கள் எப்பொழுதும் கன்மத்தை உடைத்தாதலால் அதனால் உண்டாகும் அறிவு அழியப்படாது,
உணர்வு தரும் செய்தி உணர்வை வினை தரின் ஒருவரின் செயல் வினை இன்றாம் ஏ	அதுவன்றி உணர்வு வினையைத்தரும் என்றும் வினை உணர்வைத்தரும் என்றும் நீ கூறின் ஒருவர்க்குச் செய்யப்பட்ட கன்மம் என்பது அன்றே என்றவாறு.
சந்தானம்	தொடர்ச்சி

விளக்கவுரை

அறிவு காரணமாக மற்றோர் அறிவுண்டாம் என்னில், நீ அநித்தம் எனக்கூறும் அறிவு நின்று மற்றோர் அறிவை உண்டாக்காது. அறிவு தான் வரும் தொடர்ச்சியிலே கெட்டால் பின்னை அறிவு தோன்றாது. உணர்வு உண்டாதற்கு உடம்பே மூலகாரணம் என்னில், உடம்பில் நின்று உணர்வு எப்போதும் உதிக்க வேண்டும். தூங்கும்போது உணர்வு உண்டாதல் இல்லை. உடல் அறியும் தொழிலைச் செய்வதினின்று அறிவுண்டாம் என்னில், இந்திரியங்கள் எப்போதும் கன்மத்தைச் செய்தலால் அறிவு அழிவதில்லை. அதுவன்றி, அறிவுக்கும் செயலுக்கும் வேறுபாடில்லையாம்; செயலே அறிவாம். அறிவு செயலுக்குக் காரணம் என்பது இல்லையாம். எனவே, உணர்வு உடலினிடத்தும் வினையினும் தோன்றாது; ஆன்மாவினிடத்தே தோன்றும் என்க.

இச்செய்யுள் உணர்வு ஆன்மாவிடத் தொழிந்து உடலினும், வினையினும் தோன்றாது என மறுத்துக் கூறிற்று. (23)

செய்யுள் - 117

வினையுணர்வு தரும்வினையை யுணர்வுதரு மென்று
விளம்பினீ யுணர்வுபோல் வினையி னுக்கு
நினைவுவரு மொன்றையொன்று நிகழ்த்தி டாபின்
நிலையின்மை யானிகழ்த்திக் கெடுதல் செய்யா
கனல்விறகிற் பிறந்ததனைப் பொடிசெய் தாற்போல்
கருத்துவினையிற்றோன்றிக் கழிக்கும் வினையென்னின்
முனமுணர்வு பிறந்தளவே வினைகெடுக்கு முன்பின்
உதியாது முகிழ்நெருப்பின் விறகுதியா வாறே.

பதவுரை

வினை உணர்வு தரும் வினையை உணர்வு தரும் என்று விளம்பில் நீ	கன்மம் அறிவை உண்டாக்கும் என்றும் கன்மத்தை அறிவு உண்டாக்கும் என்றும் புத்த! நீ கூறின்,
உணர்வுபோல் வினையினுக்கும் நினைவு வரும்	அறிவுக்கு நினைவு உண்டானாற்போலக் கன்மத்துக்கும் நினைவு உண்டாகவேண்டும்,
ஒன்றை ஒன்று நிகழ்த்திடா பின்	அப்படிக் கன்மத்துக்கு அறிவில்லை ஆகையால் ஒன்றையொன்று உண்டாக்க மாட்டாது,
நிலையின்மையால் நிகழ்த்தி கெடுதல் செய்யா	அவை அநித்தியம் என்று சொல்லுகையால் ஒன்றையொன்று உண்டாக்கிக் கெடமாட்டா,
கனல் விறகில் பிறந்து அதனை பொடி செய்தால் போல் கருத்து வினையில் தோன்றி கழிக்கும் வினை என்னின்	விறகிலே நெருப்புத் தோன்றி அந்த விறகைத் தகித்தாற்போல அறிவு கன்மத்திலே பிறந்து மீளவும் அக் கன்மத்தையே கெடுக்கும் என்று நீ கூறின்,
முனம் உணர்வுபிறந்த அளவே வினை கெடுக்கும் முன்பின் உதியாது முகிழ் நெருப்பின் விறகு உதியா வாறே	முன்பிறந்த அறிவு பிறந்தபோதே கன்மத்தைக் கெடுக்கும், பின் அக்கன்மம் அறிவை உதிப்பிக்கமாட்டாது, அறிவும் பின்னர்க் கன்மத்தை உதிப்பிக்கமாட்டாது, அஃது என்போல? என்னில், விறகில் உண்டாம் தீ அவ்விறகைச் சுட்டால் மீண்டும் ஒரு விறகை உண்டாக்கமாட்டாது அதுபோல் என்றவாறு.

விளக்கவுரை

புத்தனே! நீ "கன்மம் அறிவையுண்டாக்கும். அறிவு கன்மத்தையுண்டாக்கும்" என்னில், அறிவுக்கு நினைவு உண்டு செயலுக்கு நினைவில்லை. ஆகலின், ஒன்றையொன்று உண்டாக்கமாட்டாது. மற்றும், அவை அநித்தம் என நீ கூறுதலின் ஒன்றையொன்று உண்டாக்கிக் கெடமாட்டா. விறகிலே தீத்தோன்றி அவ்விறகைச் சாம்பராக்கினாற்போல அறிவு கன்மத்திலே தோன்றி மீளவும் அக்கன்மத்தைக் கெடுக்கும் என்னில், விறகில் உண்டாகும் தீயானது அதனைச் சாம்பராக்கின் மீட்டும் ஒரு விறகை உண்டாக்க மாட்டாது; அதுபோல், முன்பிறந்த அறிவு பிறந்த போதே கன்மத்தைக் கெடுக்கும், பின்பு அக்கன்மம் அறிவை உதிப்பிக்கமாட்டாது; அறிவும் கன்மத்தை உதிப்பியாது. ஆதலால், கன்மம் அறிவினை உண்டாக்கும்; அறிவு கன்மத்தை உண்டாக்கும் என்னும் உன் கொள்கை பொருந்தாதாம்.

இச்செய்யுள் கன்மம் அறிவினை உண்டாக்கும் என்பதனையும் அறிவு கன்மத்தை உண்டாக்கும் என்பதனையும் மறுத்துக் கூறிற்று. *(24)*

செய்யுள் - 118

பேயுநர கருஞ்சுரரும் பிரமருமா யுலகில்
பிதாமாதா வாதார மொன்று மின்றிக்
காயமொடு தாம்வருவ ரென்றுரைப்பை காயம்
காரியமாய் வருதலினாற் காரணமுண் டாகும்
ஆயுமுணர் வோசுத்த வட்டகமோ கன்மம்
வடித்ததோ வடிவுசெய்து வைத்தாரு முண்டோ
ஆயுமுணர் வுண்டாகி லறைந்திடா யுலகுக்
காதிதுணை நிமித்தகா ரணமறிவ தறிவே.

பதவுரை

பேயும் நரகரும் சுரரும் பிரமரும் ஆய் உலகில் பிதா மாதா ஆதாரம் ஒன்றும் இன்றிக் காயமொடு தாம் வருவர் என்று உரைப்பை	*பேய் என்றும் நரகர் என்றும் தேவர் என்றும் பிரமர் முதலாயினோர் என்றும் சொல்லப் படுவார் உலகின் மாதா பிதாக்களும் இன்றி இருப்பும் இன்றிக் காயத்தோடு கூடின வடிவம் உடையராய் வருவர் என்று புத்த! நீ கூறுவை,*
காயம் காரியம் ஆய் வருதலினால் காரணம் உண்டாகும்	*அக்காயம் காரியப்பட்டு வருகையினால் ஒரு காரணத்தான் அன்றி உண்டாகாது, அக்காரண காரியம் நீ அறியாய், அறிவையாகில்,*

ஆயும் உணர்வோடு சுத்த அட்டகமோ கன்மம் வடித்ததோ வடிவு செய்து வைத்தாரும் உண்டோ ஆயும் உணர்வு உண்டாகில் அறைந்திடாய்	அக்காயங்கள் நீ ஆராய்ந்த உணர்வுதானோ? சுத்தாட்டகமோ? அன்றிக் கன்மம் உண்டாக்கியதோ? அன்றி அவ்வடிவை உண்டாக்கினார் ஒருவர் உண்டோ? உனக்கு ஆராயத்தக்க அறிவு உண்டாயின் சொல்லாய்,
உலகுக்கு ஆதி துணை நிமித்த காரணம் அறிவது அறிவே	அவற்றை உண்மையாக அறியும் காலத்துப் பிரபஞ்ச உற்பத்திக்கு ஆதிகாரணம் என்றும் துணைக்காரணம் என்றும் நிமித்தகாரணம் என்றும் உண்டாம்; அதனை அறிவதுகாண் அறிவு என்றவாறு.

விளக்கவுரை

பேய், நரகர், தேவர், பிரமர் முதலியோர் தாய் தந்தையர் இன்றி இருப்பும் இன்றி உடம்பெடுத்து வருவார் என்று சொல்லுவாய். அக்காயம் தோன்றுதற்குக் காரணம் இருத்தல் வேண்டும். அந்தக் காரண காரியங்கள் உன்னால் அறியப்படாது. அக்காயங்கள் நீ ஆராய்ந்த உணர்வுதானோ? பூதம் நான்கும் உபாதாயம் நான்கும் கூடிய சுத்தாட்டகமோ? அல்லது கன்மந்தான் தோற்றுவித்ததோ? அவ்வடிவை உண்டாக்கினோர் உண்டோ? இவைகளை ஆராய்ந்துகூற இயலுமாயின் கூறுக. உண்மையாக ஆராயுமிடத்து உலகம் தோன்றுவதற்கு முதற்காரணம், துணைக் காரணம், நிமித்தகாரணம் எனக் காரணங்கள் மூன்றுள; அவற்றை ஆராய்ந்தறிவதே அறிவாம்.

இச்செய்யுள் பேய் முதல் பிரமர் ஈறாகிய நால்வகைக் காயத்திற்கும் காரணத்தான் அன்றிக் காயம் உண்டாம் என்பதனை மறுத்துக் கூறிற்று. (25)

செய்யுள் - 119

உருவாதி கந்தங்க ளைந்துங் கூடி
ஒருவன்வேறொருவனிலையென் றுரைக்கும்புத்தா
உருவாதி யைந்தினையு முணர்பவன்வே றென்ன
உணரும்விஞ்ஞானமென்றா யஞ்ஞானமுணர்ந்தவரார்
உருவாதிபொருள் காட்டித்தனைக்காட்டுஞ்சுடர்போல்
உணர்வுபிறி தினையுணர்த்தித்தனையுணர்த்து மென்னின்
உருவாதி பொருளினையுஞ் சுடரினையுங் காணும்
உலோசனம்போ லுணர்வுபொரு ளுணர்வதுவேறுண்டே.

பதவுரை

உரு ஆதி கந்தங்கள் ஐந்தும் கூடி ஒருவன் வேறு ஒருவன் இலை என்று உரைக்கும் புத்தா!	உருவம் வேதனை குறிப்பு பாவனை விஞ்ஞானம் என்கின்ற கந்தங்கள் ஐந்தும்கூடி ஆன்மா அன்றித் தனித்து ஓர் ஆன்மா இல்லை என்று கூறும் புத்தா!
உரு ஆதி ஐந்தினையும் உணர்பவன் வேறு என்ன உணரும் விஞ்ஞானம் என்றாய்	அவ்வுருவம் முதலிய கந்தங்கள் ஐந்தையும் அறிவான் ஒருவன் உளன் என்று நாம் கூறுவது அல்ல, அவற்றை அறிவது சித்தமே என்று கூறினாய்,
அஞ்ஞானம் உணர்ந்தவர் ஆர்	அந்தச் சித்தத்தை உணர்ந்தவர் ஆர் என்று வினாயவிடத்து,
உரு ஆதி பொருள் காட்டி தனை காட்டும் சுடர்போல் உணர்வு பிறிதினை உணர்த்தி தனை உணர்த்தும் என்னில்	உருவங்கள் முதலாய பொருள்களையும் காட்டித் தன்னையும் காட்டும் விளக்குப் போல, சித்தமும் பிறிதுண்டாகியவற்றையும் அறிவித்துத் தன்னையும் அறிவித்து நிற்கும் என்று கூறின்,
உரு ஆதி பொருளினையும் சுடரினையும் காணும் உலோசனம் போல் உணர்வு பொருள் உணர்வது வேறு உண்டே	உருவங்கள் முதலாகிய பொருள்களையும் அவற்றைக் காட்டி நிற்கும் விளக்கையும் கண்டு நிற்கும் கண்போல, சித்தத்தையும் விடயத்தால் அறியும் இந்திரியங்களையும் உணர்வான் ஒருவன் வேறு உண்டு என்று அறிவாயாக என்றவாறு.

விளக்கவுரை

உருவக்கந்தம் முதலிய ஐந்து கந்தங்களின் கூட்டமே ஆன்மா என்பதன்றித் தனியே ஆன்மா என்பது ஒன்றில்லை என்று கூறுவாய். அவ்வுருவக் கந்தம் முதலிய ஐந்தனையும் அறிவது விஞ்ஞானமே என்பாய். அவ்விஞ்ஞானத்தை அறிந்தது யாவர் என்னில், விளக்குப் பிறபொருள்களை அறிவித்துத் தன்னையும் அறிவித்து நிற்கும்; அதுபோல, விஞ்ஞானம் பிறவற்றையும் உணர்த்தித் தன்னையும் உணர்த்தி நிற்கும் என்கின்றாய். விளக்குக்கும் பிற பொருள்களுக்கும் வேறாக அவற்றை அறியும் கண் இருத்தல்போல விஞ்ஞானத்துக்கும், பிறவற்றுக்கும் வேறாக அவற்றை அறியும் ஒருவன் உண்டு என அறிவாயாக. அறிவு வேறு, அறிபவன் வேறு; இது முன்னரும் கூறப்பட்டது.

இச்செய்யுள் உருவாதிகளாகிய கந்தங்களும் அவற்றின் விஞ்ஞானமும் ஆன்மா என்றதனை மறுத்துக் கூறிற்று. *(26)*

செய்யுள் - 120

காயமுட னிந்திரிய மனநா னென்று
கதறுவாய் காயமுறக் கத்தறியா வாகும்
வாயில்களு மப்படியி லொன்றையொன்றங் கறியா
மனங்கணத்திற் கெடுங்கால மூன்றின் வரவறியா
தாயுமறி வாகியுடல் பொறிமனமூன் றறிந்தாங்
கவைநானல் லேனென்று மறிந்துமனத் தாலே
ஏயுமொரு பொருள்கருதி யிந்திரியப் பாலே
இசைவித்துக் காயத்தா லியற்றுவதான் மாவே.

பதவுரை

காயமுடன் இந்திரியம்மனம் நான் என்று கதறுவாய்	உடம்புடன் இந்திரியங்களும் மனமுமே ஆன்மா, வேறே ஆன்மா என்று ஒன்றில்லை என்று கூப்பிடும் புத்தா,
காயம் உறக்கத்து அறியா ஆகும்	அக்காயம் உறக்கத்தினிடத்து அறியாமையை உடைத்தாம்,
வாயில்களும் அப்படியில் ஒன்றை ஒன்று அங்கு அறியா	இந்திரியங்களும் உறக்கத்திலும் வியாத்தியிலும் அக்காயம்போல் ஒன்று அறிந்த விடயத்தை ஒன்று அறியமாட்டா,
மனம் கணத்தில் கெடும் காலம் மூன்றின் வரவு அறியாது	மனமும் கணத்தில் கெடும் ஆகையால் காலம் மூன்றின் செய்தியையும் அறியமாட்டாது, ஆகையால் இவை ஆன்மா அன்று,
ஆயும் அறிவு ஆகி உடல்பொறி மனம் மூன்று அறிந்து ஆங்கு அவை நான் அல்லேன் என்றும் அறிந்து மனத்தாலே ஏயும் ஒரு பொருள் கருதி இந்திரியப்பாலே இசைவித்து காயத்தால் இயற்றுவது ஆன்மா ஏ	உடல் முதலாயின மூன்றையும் ஆராயத்தக்க அறிவாய் அவற்றின் குணங்களை அறிந்தும் அவையிற்றை என் உடல் என் பொறி என் மனம் என்று சொல்லியும் அவையும் நான் அல்லேன் என்று அறிந்து மனத்தால் பொருந்தத்தக்கதொரு பொருளைக் கருதி இந்திரியங்களின் பகுதி காட்டக்கண்டு காயத்தாலே தொழிலைச்செய்வது ஆன்மா என்று அறிவாயாக என்றவாறு.

விளக்கவுரை

உடம்பும் பொறியும் மனமும் ஆகிய இவற்றை ஆன்மா எனக் கதறுவாய்.

புத்தனே! உறங்கும் காலத்து உடம்பு ஒன்றனை அறியாது. இந்திரியங்களும் ஒன்று அறிந்ததை ஒன்று அறியமாட்டாது. மனமும் கணத்தில் கெடும்; ஆகையால், காலம் மூன்றின் செய்தியையும் அறியமாட்டாது ஆகலின், இவை ஆன்மா அன்று. உடல் முதலிய மூன்றனையும் ஆராயத்தக்க அறிவுடையதாய், அவற்றின் குணங்களை அறிந்தும் என்உடல் என்பொறி என்மனம் எனச்சொல்லி அவை நான் அல்லேன் என்று அறிந்து மனத்தால் ஒன்றை நினைந்து பொறிகளால் ஒவ்வொன்றைக் கண்டு உடம்பால் தொழிலைச் செய்வது ஆன்மா என்று அறிவாயாக.

காலம் மூன்றாவன - பூத பௌஷிய வர்த்தமானமாம்; (நேற்று, இன்று, நாளை)

இச்செய்யுள் காயமும், இந்திரியமும், மனமும் ஆன்மா அன்று என்று மறுத்துக் கூறிற்று. *(27)*

செய்யுள் - 121

கழிந்தவுணர் வேபின்னு மியானறிந்தே னென்று
கருதலினவ் வுணர்வறிந்த தென்னின் முன்னே
மொழிந்தமொழி நான்மொழிந்தே னென்றால் வாய்தான்
மொழிந்ததோ மொழிந்தவன்வே றானாற் போல
எழுந்தவுணர் வெல்லாங்கொண் டியானறிந்தே னென்ற
தெதுவதுகா ணுயிருணர்வால் வாக்கான் மற்றை
ஒழிந்தகா யந்தன்னா லுணர்ந்துரைத்துச் செய்தங்
குணர்வினுக்கு மாதார மாய்நிற்கு முயிரே.

பதவுரை

கழிந்த உணர்வே பின்னும் யான் அறிந்தேன் என்று கருதலின் அவ்வுணர்வு அறிந்தது என்னின்	*முன் ஒரு பொருளை அடுத்துக் கெட்ட அறிவு தானே பின்பு உண்டாகியவற்றை யான் அறிந்தேன் என்று விசாரிக்கையாலே அவ்வறிவே காணும் அறிவதன்றி ஆன்மா என்று ஒன்று இல்லை என்று புத்த! நீ கூறின்,*
முன்னே மொழிந்த மொழி நான் மொழிந்தேன் என்றால் வாய்தான் மொழிந்ததோ மொழிந்தவன் வேறு ஆனால் போல	*முன்னே சொல்லுதல் வாயாற் பிறத்தலால் வாய் சொன்னதோ? அன்றே, அச்சொல்லைச் சொன்னவன் ஒருவன் உண்டானாற்போல,*
எழுந்த உணர்வு எல்லாம் கொண்டு யான் அறிந்தேன் என்றது எது? அதுகாண் உயிர்	*உண்டாய அறிவுகள் எல்லாவற்றையும் கொண்டு அறிந்து அதனை யான் அறிந்தேன் என்றதுஎது? அதுகாண் ஆன்மா,*

உணர்வால் வாக்கால் மற்றை ஒழிந்த ஒழிந்த காயம் தன்னால் உணர்ந்து உரைத்து செய்து அங்கு உணர்வினுக்கும் ஆதாரமாய் நிற்கும் உயிர் ஏ	மனத்தாலும் வாக்காலும் ஒழிந்ததாகச் சொல்லப்பட்ட காயத்தாலும் அறிந்தும் சொல்லியும் தொழில் செய்தும் அம்மனத் திற்குப் பற்றாய் நிற்கும் ஆன்மா என்றவாறு.

விளக்கவுரை

முன்பு ஒன்றனை அறிந்த அறிவுதானே பின்பு உண்டாகியவற்றை யான் அறிந்தேன் என்று உணரும்; ஆகலின், அவ்வுணர்வுக்கு வேறாக உயிர் என்று ஒன்று இல்லை என்னில், முன்னே ஒன்றனை மொழிந்தேன் என்ற இடத்து வாய்மொழிந்ததோ? வாய்க்கு வேறாகவுள்ள ஒருவன் மொழிந்ததோ? அது வாயால் ஒருவன் மொழிந்தது எனத் துணிகின்றோம். அதுபோல, மனத்தால் அறிவன எல்லாவற்றையும் அறிந்து அதனை யான் அறிந்தேன் என்றது எது? அதுதான் ஆன்மா. மனத்தாலும் வாக்காலும் காயத்தாலும் ஒன்றை நினைந்தும் சொல்லியும் செய்தும் அம்மனத்துக்குப் பற்றுக்கோடாய் நிற்பது ஆன்மாவாம் என அறிக.

ஈண்டு உணர்வு என்றது மனத்தை.

இச்செய்யுள் மனது ஆன்மா அல்ல என்று மறுத்துக் கூறிற்று. *(28)*

செய்யுள் - 122

இந்திரிய வீதியெழுஞ் சித்த நெஞ்சத்
தெழுஞ்சித்த மென்றிரண்டு மொன்றுகெட்டே யொன்று
வந்தெழுவ தெனிற்கனவிற் கண்டபடி நனவின்
வாய்திறவார் நனவுகண்ட படிகனவிற் காணார்
அந்தனுரு வன்னங்க ளறிந்திடா னின்றேல்
அறிகனவு மிறந்துணர்வு மழிந்துறக்கமடைந்தால்
உந்துவதோர் சந்தான மில்லையுணர் வுதிப்ப
உயிர்கனவு நனவினையு முணருங் காணே.

பதவுரை

இந்திரிய வீதி எழும் சித்தம் நெஞ்சத்து எழும் சித்தம் என்று இரண்டும் ஒன்று கெட்டே ஒன்று வந்து எழுவது எனில்	இந்திரிய வியாபாரத்தால் உண்டாம் அறிவு என்றும், மனத்தில் உண்டாம் அறிவு என்றும் இரண்டாய் ஒன்று கெட்டு ஒன்று தோன்றும் என்று புத்த! நீ கூறின்,

கனவில் கண்டபடி நனவில் வாய் திறவார் நனவு கண்டபடி கனவில் காணார்	கனவில் கண்டதெல்லாம் நனவில் சொல்ல மாட்டார், நனவில் கண்டதெல்லாம் கனவில் காணமாட்டார்; அன்றியும்,
அந்தன் உரு வன்னங்கள் அறிந்திடான்	பிறவிக்குருடன் பிறர் வடிவத்தையும் வன்னத்தையும் அறியமாட்டான்,
இன்றேல்	இந்திரியக்குறைவாலே அறிவு தோன்றிற் றில்லை என்று நீ கூறின்,
அறி கனவும் இறந்து உணர்வும் அழிந்து உறக்கம் அடைந்தால் உந்துவது ஓர் சந்தானம் இல்லை	அறியத்தக்க கனவும் அழிந்து, உணர்வும் அழிந்து, உறக்கத்தையும் அடைந்தால் உண்டாகத்தக்க தொடர்ச்சி இல்லை,
உணர்வு உதிப்ப உயிர் கனவும் நனவினையும் உணரும் காண் ஏ	ஆன்மாக்களுக்கு இச்சா ஞானக்கிரியைகள் உண்டாகக் கனவினையும் நனவினையும் அறியா நிற்கும் என்றவாறு.

விளக்கவுரை

இந்திரிய வியாபாகத்தால் உண்டாகும் அறிவு, மனத்தின் உண்டாம் அறிவு என இரண்டாம்; அஃது ஒன்று கெட்டு ஒன்று தோன்றும் எனக் கூறும் புத்தனே! கனவில் கண்ட எல்லாவற்றையும் நனவில் சொல்லார், நனவில் கண்ட எல்லாவற்றையும் கனவில் காணார்; பிறவிக்குருடன் புறத்துள்ள வடிவத்தையும் வன்னத்தையும் அறியமாட்டான் அது போல என்க. இந்திரியக் குறைவாலே அறிவு தோன்றவில்லை என்னில், அறியத்தக்க கனவும் அழிந்து உணர்வும் அழிந்து உறக்கத்தையும் அடைந்தபோது இரண்டின் தொடர்பும் அற்றுவிடுகிறது. ஆன்மாவுக்கு உணர்வு உதிப்ப மீண்டும் கனவினையும் நனவினையும் உணரும். எனவே, இந்திரியம் ஆன்மாவுக்கு அறிதற் கருவியாதல் அன்றி இந்திரியம் ஆன்மா வல்ல என்க.

இன்றேல் எனவே இந்திரியங்கள் அறிவிக்கும் என்பது புலப்பட்டது. வீதி - நேரே செல்லுதல். அந்தன் - அந்தகன்.

இச்செய்யுள் இந்திரியம் ஆன்மாவுக்குக் கருவியாக உள்ளதன்றி, இந்திரியம் ஆன்மா அல்ல என்று மறுத்துக் கூறிற்று. *(29)*

செய்யுள் - 123

ஒருகாலத் தோரிடத்தி லோருணர்வேற் செவிதான்
ஒன்றுணரா திருசெவியு முணரு மோசை

ஒருகாலத் திருகண்ணு மிருசெவியு மனமும்
ஒருவனைக்கண் டவனுரைகேட் டுணர்ந்திடுமைம் பொறியும்
ஒருகாலு முணராவுள் ளுணர்வின்றிப் பொறிகள்
ஒன்றொன்றாவுணர்வதுமுள்ளுணர்வைந்துமுணரா
ஒருகாலும் பொறிவிகற்பித்துணராவுள் ளுணர்வுக்
குள்ளதுகாண் விகற்பமிரண் டும்முணர்வ துயிரே.

பதவுரை

ஒரு காலத்து ஓர் இடத்தில் ஓர் உணர்வு ஏல்	ஒரு காலத்திலே ஒரு பொறியிடத்திலே ஓர் உணர்வாக அறியும் என்று புத்த! நீ கூறினாய்; அப்படி ஆயின்,
செவிதான் ஒன்று உணராது இரு செவியும் உணரும் ஓசை	இரண்டு செவியும் அறியும் ஓசையை ஒரு செவியாக அறியமாட்டாது, இரண்டு செவியாலும் அறியவேண்டும்; அஃதன்றியும்,
ஒரு காலத்து இரு கண்ணும் இரு செவியும் மனமும் ஒருவனை கண்டு அவன் உரை கேட்டு உணர்ந்திடும்	ஒரு காலத்தே இரண்டு கண்ணும் இரண்டு செவியும் மனமும் கூடி ஒருவனைக் கண்டு அவன் வார்த்தை கேட்டு அதனை அறியா நிற்கும்,
ஐம்பொறியும் ஒருகாலும் உணரா உள் உணர்வு இன்றி	ஐம்பொறிகளும் மனம் கூடாமல் தனித்து ஒருகாலும் அறியமாட்டா,
பொறிகள் ஒன்று ஒன்றா உணர்வது	பொறிகள் ஒரோவொன்றாகத் தாம் அறிவும் விஷயத்தை அறியும் அத்தனையே,
உள் உணர்வு ஐந்தும் உணரா	அம்மனமும் ஏககாலத்து ஐம்பொறியின் விஷய அறிவுகள் ஐந்தும் கூடி அறியமாட்டா; அதுவுமன்றி,
ஒருகாலும் பொறி விகற்பித்து உணரா	பொறிகள் ஒருக்காலும் தாம் அறியும் அறிவின்றி விகற்பித்து அறியமாட்டா,
உள் உணர்வுக்கு உள்ளதுகாண் விகற்பகம்	அந்தப் பொறிகளுடனே கூடிநின்று விகற்பித்தறிவது மனத்துக்குள்ள குணம் காண்,
இரண்டும் உணர்வது உயிரே	இப்பொறிகளையும் மனத்தையும் கொண்டு அறிவது ஆன்மாவாம் என்றவாறு.

விளக்கவுரை

புத்தனே! ஒருகாலத்து ஒரு பொறியினிடத்திலே ஓர் உணர்வாக அறியும் எனக் கூறினாய். செவிப்பொறி என்பது இரு செவியிலும் உள்ளதாகையால் இரு செவிகளும் சேர்ந்தே ஒரு ஓசையைக் கேட்டல் கூடும். ஒருகாலத்தே இரண்டு கண்களும் இரண்டு காதுகளும் மனமும் கூடிநின்றே ஒருவனைக் கண்டு அவன் சொற்களைக் கேட்டு அறியும். ஐம்பொறிகளும் மனத்தோடு கூடாமல் தனித்துநின்று தத்தம் விடயங்களை அறியா. பொறிகள் ஐந்தனுள் ஒன்று அறிந்ததை மற்றொன்று அறியாது. மனமும் ஒருகாலத்து ஐம்பொறிகளில் ஒவ்வொன்றோடு கூடி நின்றே அவ்விடயத்தை அறியும்; மற்றொரு பொறியுடன் கூடிநின்று பிறிதொரு விடயத்தை அது உணரமாட்டாது. பொறிகளுடன் கூடிநின்று விகற்பித்து அறிவது மனத்தின் குணமாம். இப்பொறிகளையும் மனத்தையும் கருவியாகக் கொண்டு அறிவது ஆன்மாவே.

இச்செய்யுள் பொறிகளையும், மனத்தையும் கொண்டு அறிவது ஆன்மா என்று கூறிற்று. *(30)*

செய்யுள் - 124

அருவுணர்வு மாயாறு மாறி மாறி
அங்கங்கே தோன்றியிடி னகத்துநிலை யின்றி
உருவினொடு பாலதரு ணவிருத்தா வத்தை
உண்டாகா துறக்கத்தி னுடறட்ட வழைப்ப
வருவதுணர் வெங்கிருந்து நெஞ்சிலிருந் தென்னில்
வாயில்வினை யறிந்தெழுப்ப வாயுவறி யாதாம்
திரிபொழிய விடிஞ்சிறொடத் தீபமெழா வடக்கம்
சென்றபொழு தாலுணர்வு நின்றநிலை செப்பே.

பதவுரை

அரு உணர்வும் ஆய் ஆறும் மாறி மாறி அங்கங்கே தோன்றியிடின் அகத்து நிலை இன்றி உருவினொடு பாலதருண விருத்த அவத்தை உண்டாகாது	*மனமானது அருவுமாய் உணர்வுமாய்ப் பொறிகள் ஐந்தோடும் கூடி ஆறுவிதமாய் மாறிமாறித் தோன்றிடுவது என்று புத்த! நீ கூறின், மனம் அருவம் ஆகையால், உருவினும் நிலையுடையதுமன்றாய், காயத்தோடு கூடி, பால தருண விருத்தாவத்தையும் உண்டாகாது ஆதல் வேண்டும்; அஃதன்றியும்,*
உறக்கத்தின் உடல் தட்ட அழைப்ப வருவது உணர்வு எங்கு இருந்து	*அவத்தைப்பட்ட இடத்து உடலில் தட்டவும் அழைப்பவும் அறிந்து வரும் அறிவு*

நெஞ்சில் இருந்து என்னில்	எவ்விடத்திருந்து? என்று சொல்லாய்; நெஞ்சிலிருந்து என்று நீ கூறின்,
வாயில் வினை அறிந்து எழுப்ப ஆயு அறியாதாம்	சத்தாதிவிடயங்களிலே செல்லும் தொழிலை அறிந்து செலுத்த மனம் அறியாதாம்; அஃது என்போல்? என்னில்,
திரி ஒழிய இடிஞ்சில் தொட தீபம் எழா	திரியைப் பற்றி நின்ற ஒளி அத்திரி மாய்ந்தால் உடன் மாய்தல் அன்றி இடிஞ்சிலைப் பற்றித் தோன்றாது ஆகையால்,
அடக்கம் சென்றபொழுது ஆல் உணர்வு நின்ற நிலை செப்பு ஏ	உணர்வுக்கு மூர்ச்சை வந்தபொழுது அறிவு நின்ற நிலை சொல்வாயாக என்றவாறு.

விளக்கவுரை

புத்தனே! மனமானது அருவாய், உணர்வாய், பொறிகள் ஐந்தனோடும் கூடி ஆறுவிதமாய் மாறி மாறித் தோன்றும் என்கின்றாய், மனம் அருவப் பொருள் ஆகலின், உருவிலும் நிலையுடையதன்றாம்; காயத்தோடுகூடிப் பால தருண விருத்த அவத்தைகளையும் அடைதல் இன்று. உறங்கின இடத்து அழைத்தாலும் உடலில் தட்டினாலும் அதனை அறிந்து வரும் அறிவு எவ்விடத்துளது? அது நெஞ்சினிடத்துளது என்னில், திரியைப் பற்றி நின்ற ஒளி அத்திரியானது மாய்ந்தால் உடன் மாயும்; அல்லாமல் இடிஞ்சிலைப் பற்றித் தோன்றாது; அதுபோல, சத்தாதி விடயங்களில் செல்லும் தொழிலை அறிந்து செலுத்த மனம் அறியாது. மனம் நெஞ்சினிடமாக இருத்தல் வேண்டும். மனம் அழிந்துபோயின் அஃது எப்படி உண்டாம்? உணர்வுக்கு மூர்ச்சை வந்தபொழுது அறிவு நின்றநிலை யாது? எனவே, பொறியும் மனமும் கருவியாகக் கொண்டு நின்று அறிவது ஆன்மா என்க.

ஆயு - மனம். உரு - தேகம். ஆல் - அசை. இடிஞ்சில் - அகல்.

இச்செய்யுள் பொறியும் மனமும் கூடி அறுவகையாய் அறியும் என்பதனை மறுத்து அவை கருவியாகக்கொண்டு அறிவது ஆன்மா என்று கூறிற்று. (31)

செய்யுள் - 125

இச்சைவெறுப் பியற்றலின்பத் துன்பம் ஞானம்
இவைபஞ்சுவின் குறியாகு மிவற்றி லிச்சை
நச்சிநுகர்ந் தொருபழத்தி னினங்கண்டு முன்பு
நானுகர்ந்த கனியினின மென்றுநச்சல் பின்பும்

எச்சவெறுப் பாதிகளு மிப்படியே யாகும்
இவைமுன்பும் பின்புமுணர்ந் திடுத லாலே
நிச்சயகர்த் தாவொருவ னுளனென்று நல்லோர்
நிறுத்திடுவர் வெறுத்திடுவர் நின்னுடையபொருளே.

பதவுரை

இச்சை வெறுப்பு இயற்றல் இன்பம் துன்பம் ஞானம் இவை அணுவின் குறி ஆகும்	ஆசை, வெறுத்தல், தொழில்செய்தல், சுக துக்கப்படுதல், அறிவு இவை முதலிய எல்லாம் ஆன்மாவின் குணங்களாம்,
இவற்றில் இச்சை நச்சி நுகர்ந்து ஒரு பழத்தின் இனம் கண்டு முன்பு நான் நுகர்ந்த கனியின் இனம் என்று நச்சல் பின்பும்	இவையிற்றில் ஆசையாவது முன் ஒரு பழத்தை ஆசைப்பட்டு நுகர்ந்து பின்பு அதனை ஒப்பது ஒரு கனியைக்கண்டு முன்பு நான் நுகர்ந்த கனியின் இனம் ஈது என்று பின்பும் அதனை ஆசைப்படுதல்,
எச்ச வெறுப்பு ஆதிகளும் இப்படியே ஆகும்	ஒழிந்த முதலாயினவும் இத்தன்மையே ஆகும்,
இவை முன்பும் பின்பும் உணர்ந் திடுதலாலே நிச்சய கர்த்தா ஒருவன் உளன் என்று நல்லோர் நிறுத்திடுவர் வெறுத்திடுவர் நின்னுடைய பொருள் ஏ	அவ்விச்சா ஞானக்கிரியை முதலாயினவற்றை ஆன்மா முன்பும் பின்பும் அறிகையாலே நிச்சயமாக ஆன்மா ஒருவன் உளன் என்று சொல்லுவர் பெரியோர்; நீ ஆன்மா இல்லை என்று சொல்லும் சொல்லை அப்பெரியோர் தள்ளாநிற்பர் என்றவாறு.

விளக்கவுரை

விருப்பு, வெறுப்பு, இன்பதுன்பம், தொழில் செய்தல் முதலியன அறிவுக்கு இல்லை, அவற்றையுடையது ஆன்மா. ஒருகாலத்திலே ஒருவன் ஒரு பழத்தைத் தின்றான். பின்னொருநாள் அத்தகைய வேறொரு பழத்தைக் கண்டான். முன்பு அப்பழத்தின் சுவையை உண்டறிந்த அவன் பின்னும் அதனை உண்ண ஆசைகொள்ளுகிறான். வெறுப்பு முதலியனவும் அப்படிப்பட்டனவே. இச்சை ஞானக் கிரியை முதலியவற்றை முன்னும் பின்னும் உணர்தலால் அவ்வாறு உணரும் பொருள் ஆன்மாவே ஆம் என்பர் பெரியோர். நீ ஆன்மா இல்லை என்று கூறும் கூற்றை அறிவுடையோர் கொள்ளார்.

இவ்விடத்துக் கர்த்தா என்பது ஆன்மாவை; கன்மத்துக்குக் கர்த்தா என்றபடி.

'உருவாதி' என்ற செய்யுள் முதல் இச்செய்யுள்காறும் 'ஆன்மா இல்லை' என்பதனை மறுத்து உண்டு என்று கூறிற்று. (32)

செய்யுள் - 126

எப்பொருட்கு மிரந்தரமா யிடங்கொடுத்து நீங்கா
திருளொளிதானன்றி யிரண்டினுக்குமிட வகையாய்
ஒப்பில்குணஞ் சத்தமதாய் வாயு வாதி
உதித்தொடுங்கநிற்கும் வானுயிர்முன்னே சொன்னோம்
செப்பிடுங்கா லம்பொழுது நாளாதி யாகித்
திரிவிதமாய்த் தீமைநன்மை செய்யுந் திக்குத்
தப்பில்குணக் குக்குடக்குத் தெற்குவடக் காதி
தானாகித் திரியாதே நின்றுபலந் தருமே.

பதவுரை

எப்பொருட்கும் இரந்தரம் ஆய் இடம் கொடுத்து நீங்காது இருள் ஒளி தான் அன்றி இரண்டினுக்கும் இடவகை ஆய் ஒப்பு இல் குணம் சத்தம் அது ஆய் வாயு ஆதி உதித்து ஒடுங்க நிற்கும் வான்	முன்னர் வானமும் ஆன்மாவும் காலமும் திக்கும் இல்லை என்ற புத்தனே! நீ கேட்பாயாக; எல்லாப் பொருளும் செல்லுதற்கு வழியுமாய் இடம் கொடுத்து நீக்கம் இன்றி இருளும் வெளியும் அல்லவாய் இரண்டும் நிற்கத்தக்க இடமுமாய் உவமை இல்லாத குணம் சத்தமாய் வாயு முதலிய பூதங்கள் நாலும் தோன்றி ஒடுங்கிதற்குத் தாரகமுமாய் நிற்கும் வானம்,
உயிர் முன்னே சொன்னோம்	ஆன்மா உண்டு என்று முன்னமே சொன்னோம்,
செப்பிடும் காலம் பொழுது நாள் ஆதி ஆகி திரிவிதமாய் தீமை நன்மை செய்யும்	சொல்லத்தக்க காலமானது காலையும் உச்சியும் மாலையும் என்னும் பொழுதாயும், நெருநல் இன்று நாளை என்னும் நாளாயும், இத்தன்மையிலே மூன்றுவிதமாய் வேற்றுமைப் பட நன்மை தீமைகளைச் செய்யும்,
திக்குத் தப்பு இல் குணக்குக் குடக்கு தெற்கு வடக்கு ஆதிதான் ஆகி திரியாது ஏ நின்று பலம் தரும் ஏ	திக்கானது கிழக்கு மேற்கு தெற்கு வடக்கு என்று தவறில்லாததாய் அநாதியிலும் ஆதியிலும் உள்ளதாய்ப் பிறழாமல் அத்திசைகளை நோக்கிக் கன்மம் செய்தோர்க்குக் கன்ம பலத்தைக் கொடுக்கும். ஆகையால் ஆகாசமும் ஆன்மாவும் காலமும் திக்கும் உண்டு என்று அறிவாயாக என்றவாறு.

விளக்கவுரை

வானமும், ஆன்மாவும், காலமும், திக்கும் இல்லை என்று முன்னர்ச் சொன்ன புத்தனே! கேள். எல்லாப் பொருள்களும் போக்கு வரவு செய்தற்கு வழியுமாய் இடங் கொடுத்து நின்று அவற்றை நீங்காமல், இருளும் ஒளியும் ஆகாமல், அவ்விரண்டற்கும் இடமாய் இருப்பது வான். அவ்வானின் குணம் சத்தம். அது வாயு முதலிய பூதங்கள் நான்கும் தோன்றி ஒடுங்குதற்குத் தாரகமுமாய் நிற்கும். ஆன்மா உண்டென்பது முன்னர்க் கூறப்பட்டது. காலம் என்பது காலை நண்பகல் மாலை என்னும் பொழுதாயும், நேற்று இன்று நாளை என்னும் நாளாயும் இத்தன்மையில் மூன்று விதமாய் வேற்றுமைப்பட நன்மை தீமைகளைச் செய்யும். திக்கு என்பது கிழக்கு மேற்கு தெற்கு வடக்கு என்னும் பிரிவுகளையுடைத்தாய் முறை பிறழாமல் என்றும் நிலைபேறுடையதாய் அவ்வத்திசைகளை நோக்கிக் கன்மம் செய்வோருக்கு அவ்வக்கன்ம பலத்தைக் கொடுப்பதாய் உள்ளது. ஆகையால், ஆகாயம் ஆன்மா காலம் திக்கு முதலியன உண்டு என்று அறிவாயாக.

நெருநல் இன்று நாளை - பூத பௌஷிய வர்த்தமானம்; இதுவே இறந்தகால எதிர்கால நிகழ்காலங்கள்.

இச்செய்யுள் ஆகாசமும் ஆன்மாவும் காலமும் திக்கும் உண்டு என்று கூறிற்று. *(33)*

செய்யுள் - 127

காரியமா யுலகமெலா மிருத்த லாலே
கடாதிகள் போற்காரியகர்த்தா வொருவன்வேண்டும்
ஆரியமா யறம்பொருளோ டின்பவீ டெல்லாம்
அறைந்துயிர்கட் கறிவுசெய லளிப்பதுநூ லந்நூல்
கூரியரா யுள்ளவர்க ளோத வோதிக்
கொண்டுவர லான்முன்னே குற்ற மின்றிச்
சீரியபே ரறிவுடையோன் செப்ப வேண்டும்
செயலினுக்குங் கரிவேண்டுஞ் சிவனுள னென்றறியே.

பதவுரை

காரியம் ஆய் உலகம் எலாம் இருத்தலால் ஏ கடாதிகள் போல் காரிய கர்த்தா ஒருவன் வேண்டும்	கர்த்தாவும் நூலும் இல்லை என்று கூறிய புத்தனே! பிரபஞ்சம் எல்லாம் கடாதிகள் போலக் காரியப்பட்டு வருதலாலே இதனைச் செய்வான் ஒரு கர்த்தா வேண்டும்,

ஆரியம் ஆய் அறம் பொருளோடு இன்பம் வீடு எல்லாம் அறைந்து உயிர்கட்கு அறிவு செயல் அளிப்பது நூல்	வடமொழியாய் அறம் பொருள் இன்பம் வீடு என்னும் நான்கு காரியமும் சொல்லி ஆன்மாவுக்கு அறிவையும் செயலையும் கொடுப்பது வேத ஆகமங்கள் காண்,
அந்நூல் கூரியர் ஆய் உள்ளவர்கள் ஒத ஒதிக்கொண்டு வரலால் முன்னே குற்றம் இன்றி சீரிய பேர் அறிவு உடையோன் செப்ப வேண்டும் செயலினுக்கும் கரிவேண்டும் சிவன் உளன் என்று அறி ஏ	அவ்வேதாகமங்கள் குசலராய் உள்ள பிரமாதிகள் ஒதுவிக்க மகா இருடிகளாலே ஓதப்பட்டு அவர்கள் வழியாகத் தொன்று தொட்டு வருதலால் தவறின்றி மிக்க பெரிய அறிவை உடையோராலே சொல்லப்பட வேண்டும்; அவ்வேதாகமங்களால் சொல்லப் பட்ட கன்மத்துக்குக் காண்பான் ஒரு சாட்சியும் வேண்டும் ஆகையாலே சிவனாலே நூல் சொல்லப்பட்டது என்றும், அவனே கர்த்தா என்றும் அறிவாயாக என்றவாறு. கரி - சாட்சியம், கூரியர் - கூர்மை உடைய வராய் இருத்தல்.

விளக்கவுரை

புத்தனே! நீ கர்த்தா இல்லை, நூல் இல்லை எனக் கூறுகின்றாய் அன்றோ? குடம் முதலிய பாண்டங்களை வனைவதற்குக் குயவன் வேண்டப்படுவது போல, உலகம் காரியப் பொருள் ஆதலின் அதனைக் காரியப்படுத்தற் பொருட்டு ஒரு வினை முதல் வேண்டும். அறம் பொருள் இன்பம் வீடு என்னும் உறுதிப் பொருள் நான்கனையும் கூறி ஆன்மாவுக்கு அறிவையும் செயலையும் அளிக்கவல்லது நூலே; அவை வேத சிவாகமங்களாம். அவ்வேதாகமங்கள் கூர்த்த அறிவுடைய பிரமன் முதலியோர் ஓதுவிக்க மகா இருடிகளாலே ஓதப்பட்டு அவர்கள் வழியாகப் பரம்பரையே தொன்றுதொட்டு ஓதி வரப்படுகின்றன. ஆதலின், குற்றமின்றி அவற்றைக் கூறிய முற்றறிவுடையோன் ஒருவன் இருத்தல் வேண்டும். அவ்வேதாகமங்களில் கட்டளையிட்டருளியபடி நடப்பதை அறிந்து பயன் கொடுக்கும் சான்றாவானும் ஒருவன் வேண்டப்படும். ஆகலின், அவ்வேத சிவாகமங்கள் முற்றறிவும் முற்றுத்தொழிலும் உடைய சிவபெருமானால் சொல்லப்பட்டன எனவும் அவனே முழுமுதற் கடவுள் எனவும் அறிவாயாக.

இச்செய்யுள் கர்த்தாவும் சாத்திரமும் உண்டு என்பதனைக் கூறிற்று. (34)

செய்யுள் - 128

மரங்களுயி ரல்லவென்று மறுத்துச் சொன்னாய்
வாடுதல்பூ ரித்தலான் மரங்களுயி ராகும்
திரங்குநீர் பெறாதொழியிற் பெறிற்சிரத்தை சேரும்
சீவனல வெனினுலகிற்சீவ னெல்லாம்
உரங்கொள்வ தூண்பெறிற்சோ ருமூண்பெ றாவேல்
உலர்ந்தமர நீர்பெற்றா லுய்யாதுள் ளுயிர்கள்
கரந்தசினை முட்டைகட்கு வாயிலின்று வாயில்
கண்டிலதேற்பூத்துக் காய்த்தெழன் மரங்களுயிரே.

பதவுரை

மரங்கள் உயிர் அல்ல என்று மறுத்து சொன்னாய் வாடுதல் பூரித்தலால் மரங்கள் உயிர் ஆகும்	மரம் முதலியன உயிர் உள்ளனவல்ல என்று புத்த! நீ சொன்னாய், அவை மெலிதலாலும் பருத்தலாலும் மரம் முதலியவை உயிர் உள்ளன ஆகும்,
திரங்கும் நீர் பெறாது ஒழியின் பெறின் சிரத்தை சேரும் சீவன் அல எனின்	மரம் முதலியன நீர் பெறாது ஒழியில் வாடுதலும் அந்நீர் பெற்றால் பூரித்தலும் இயல்பு, ஆன்மா அல்ல என்று நீ கூறில்,
உலகில் சீவன் எல்லாம் உரம் கொள்வது ஊண் பெறில் சோரும் ஊண்பெறாவேல் உலர்ந்த மரம் நீர் பெற்றால் உய்யாது	உயிருள்ளவற்றிற்கெல்லாம் ஊண் பெற்றால் பருத்தலும் ஊண் குறைந்தால் மெலிதலும் குணம்; ஆகையால் உலர்ந்த மரத்துக்கு நீரை விட்டால் பரிணாமம் இல்லை; ஆதலால் மரம் முதலிய உயிர் உடைத்தாம்; அற்றன்று, மரம் முதலியவற்றுக்கு இந்திரியங்கள் இல்லை ஆகையால் உயிர் அல்ல என்று கூறின்,
உள் உயிர்கள் கரந்த சினை முட்டை கட்கு வாயில் இன்று	ஆன்மாவை உள்ளடக்கி நிற்கும் முட்டை சினை முதலியவற்றிற்கு வாயில் தோன்றா வாறு போல மரம் முதலியவற்றுக்கும் வாயில் தோன்றாது,
வாயில் கண்டிலது ஏல்	அம்முட்டை சினை முதலியவற்றுக்கு வாயில் பின்பு தோன்றக் கண்டனம். இதற்கு வாயில் தோன்றக் கண்டதில்லை என்று கூறில்,

பூத்து காய்த்து எழலால் மரங்கள் உயிர் ஏ	அம்மரம் முதலியவற்றுக்கு இந்திரியம் கட்புலன் ஆகாதாயினும் பூத்துக் காய்த்து வளர்தலும் காண்டலால் இந்திரியமும் உயிரும் மரம் முதலியனவற்றுக்கு உண்டென்று அறிவாயாக என்றவாறு.

விளக்கவுரை

அன்றியும், மரங்கள் முதலியன உயிருள்ளன அல்ல என்றாய். அவை வாடுகின்றன, பருக்கின்றன, மெலிகின்றன, தளிர்க்கின்றன ஆகலின் உயிருள்ளனவே. உயிருள்ளனவெல்லாம் ஊண் பெற்றால் பருத்தலும் ஊணின்றேல் வாடுதலும் இயல்பு. பட்டமரத்துக்கு நீர் விட்டால் பருத்தலும் நீர் இன்றேல் சிறுத்தலும் வாடுதலும் இன்றாம். மரம் முதலியவற்றிற்கு இந்திரியங்கள் இன்று என்னில், உயிரை உள்ளடக்கிய கருப்பை முட்டை முதலியவற்றிற்கும் வெளிப்பட்டில எனக. முதிர்ச்சியடைந்தபின் வெளியாம். மரம் முதலியவற்றிற்குள்ள இந்திரியம் கட்புலன் ஆகாவிடினும் அவை பூத்துக் காய்த்து வளரக் காண்கின்றோம். ஆகலின், மரம் முதலியவற்றிற்கு உயிரும் இந்திரியமும் உண்டு என அறிவாயாக.

மரம் முதலியன எனவே புல் ஈறாயின கொள்க. *(35)*

செய்யுள் - 129

ஒருமரத்தினுயிரொன்றேற்கொம்பொசித்துநட்டால்
உய்யுமுயி ரொன்றுபல வாமோ வென்னிற்
கருமரத்தின் வித்துவேர் கொம்புகொடி கிழங்கு
கண்கலந்து கொள்ளுமுயி ரண்டம் வேர்ப்புத்
தருபிறப்புச் சராயுசங்கள் சனனமும்பெற்றாற்போல்
தானடையு முற்பீசந் தலநடவா வென்னில்
பெருநிலத்திற் காலிலார் நடப்பரோ பேதாய்
பிறப்பின்வித மநேகங்காண் பேசுங் காலே.

பதவுரை

ஒரு மரத்தின் உயிர் ஒன்றேல் கொம்பு ஒசித்து நட்டால் உய்யும் உயிர் ஒன்று பல ஆமோ என்னில்	மரத்துக்கு ஆன்மா உண்டாகின் ஒரு மரத்தின் கொம்பை முறித்து நட்டால் அதனைப் போல வளர்தலால் ஓர் உயிர் ஆமோ என்று புத்த! நீ கூறில்,

கரு மரத்தின் வித்து வேர் கொம்பு கொடி கிழங்கு கண் கலந்து கொள்ளும் உயிர்	மரத்தின் உண்டாகிய வித்து வேர் கொம்பு இவையிற்றையும் கருப்பமாகக் கொண்டு ஆன்மாக்கள் தோன்றும்,
அண்டம் வேர்ப்பு தரு பிறப்பு சராயுசங்கள் சனனமும் பெற்றால் போல் தான் அடையும் உற்பீசம் தலம் நடவா என்னில்	முட்டையிலும் கசிவிலும் தோன்றிய ஆன்மாக்கள் பையில் தோன்றும் ஆன்மாக்கள் போல நடைபெற்று வித்தில் தோன்றும் மரம் முதலியன பூமியிடத்து நடைபெறா ஆகையால் ஆன்மா அன்று என்று நீ கூறில்,
பெரு நிலத்தில் கால் இலார் நடப் பரோ பேதாய் பிறப்பின் விதம் அநேகம் காண் பேசும் கால் ஏ	சொல்லுங் காலத்துக் கால் இலார் பெரிய பூமியிடத்து நடக்கவல்லரோ? அப்படி இந்திரியம் குறைவான ஆன்மபேதம் அநேகமாக உண்டுகாண் அறியாதாய்! என்றவாறு.

விளக்கவுரை

புத்தனே! மரத்துக்கு ஆன்மா உண்டாயின் ஒரு மரத்தின் கிளையை வெட்டி நட்டால் அதனைப் போன்ற வேறு ஒரு மரம் வளரக் காண்கின்றோம். ஆகலின், அஃது உயிர் ஆமோ? எனக் கூறுகின்றாய். மரத்தில் உண்டாகிய வித்து, வேர், கொம்பு முதலியவற்றையும் கருப்பமாகக் கொண்டு உயிர்கள் பிறக்கும். முட்டையிலும் கசிவிலும் தோன்றிய ஆன்மாக்களையும், பையில் தோன்றும் ஆன்மாக்களையும் போல வித்தில் தோன்றும் ஆன்மாக்கள் நடக்கமாட்டா ஆகலின், அவை உயிருடையன அல்ல என்கின்றாய். உலகத்தில் பிறப்பின் பேதம் மிகப்பல எனவும், உறுப்புக்குறைகளும் பலஉள எனவும் அறிவாயாக. கால் இல்லாதார் நடக்கின்றனரோ? இல்லையன்றோ! ஆகலின் படைப்புக்களும் பலவாம் என்க.

கண் - கணு.

இச்செய்யுள் இரண்டும் மரங்கட்கு உயிர் உண்டு என்று கூறிற்று. (36)

செய்யுள் - 130

தின்னுமது குற்றமிலை செத்ததெனும் புத்தா
தின்பையெனக்கொன்றுனுக்குத் தீற்றினார்க்குப்பாவ
மன்னுவதுன் காரணத்தாற் றின்னா தார்க்கு
வதைத்தொன்றையிடாமையினால் வதைத்தவர்க்கே பாவம்

என்னிலூனை யூட்டினர்க்குப் பாவஞ் சேர
என்னதவம் புரிகின்றாய் புலால்கடவுட் கிடாயோ
உன்னுடல மசுசியென நாணி வேறோர்
உடலுண்ணி லசுசியென வுணர்ந்திலைகா ணீயே.

பதவுரை

தின்னும் அது குற்றம் இலை செத்தது எனும் புத்தா	தான் கொல்லுமது குற்றமுடைத்து செத்தது தின்னும் அது குற்றம் இல்லை என்று கூறும் புத்தா!
தின்பை எனக் கொன்று உனக்கு தீற்றினர்க்கு பாவம் மன்னுவது உன் காரணத்தினால் தின்னாதார்க்கு வதைத்து ஒன்றை இடாமையினால்	நீ தின்பை என்று கருதி உனக்கு ஒன்றைக் கொன்று ஊட்டினார்க்குப் பாவம் உன் காரணத்தால் உண்டாம்; அஃது எங்ஙனம்? என்னில். தின்னாதார்க்குக் கொன்று ஊட்டுவார் இல்லை; ஆகையால்,
வதைத்தவர்க்கே பாவம் என்னில்	என் காரணத்தால் பாவம் உண்டாகாது கொன்றவர்க்கே பாவம் உண்டு,
ஊனை ஊட்டினர்க்கு பாவம் சேர என்ன தவம் புரிகின்றாய்	உன்னைப் பரிந்து ஊட்டினர்க்குப் பாவம் உண்டாக நீ என்ன தவத்தைச் செய்கின்றாய்; அஃதன்றியும்,
புலால் கடவுட்கு இடாயோ	நீ புலால் நுகருங்காலத்து உன் கடவுளுக்கும் புலாலை ஊட்டுவை; அஃதன்றியும்,
உன் உடலம் அசுசி என நாணி வேறு ஓர் உடல் உண்ணில் அசுசி என உணர்ந்திலை காண் நீ ஏ	உன் உடம்பு சுத்தம் இல்லை என்று வெட்கி நீ பிற ஊனை நுகரும் அது சுத்தம் இல்லை என்று அறிந்தாய் இல்லை என்றவாறு.

விளக்கவுரை

மற்றும், புத்தனே! கேள்; கொல்வது குற்றம், செத்ததைத் தின்பது குற்றமின்று என்பாய். நீ தின்பாய் எனக்கருதிக் கொன்று ஒருவன் உன்னை உண்பித்தான். அவனுக்கு உன்னால் கொல்லும் குற்றம் உண்டாயிற்று. ஊனைத் தின்னாதாருக்குக் கொன்று ஊட்டுவாரும் இன்றன்றோ! என் காரணத்தால் பாவம் உண்டாகாது, அப்பாவம் கொன்றவருக்கே உரியது என்னில், உனக்கு ஒருவன் விருப்புடன் ஊன் ஊட்ட, அதனால்வரும் பாவம் அவனுக்கு உண்டாக, நீ செய்யும் தவம் தவம் ஆகுமா? நீ புலால் உண்ணுங்காலத்து உன் கடவுளுக்கும் அப்புலாலை நிவேதிப்பாய் அன்றோ? மேலும், உன் உடம்பே அசுத்தமானது, வெறுக்கத்தக்கது என்று

பேசுவாய். அத்தகைய நீ பிறிதொரு உடம்பின் அசுத்தத்தை உணராமல் புலால் உண்பது என்ன காரணம் பற்றியோ? அதனைச் சொல்லுக.

நாணி என்றது தொழிற்பெயர்.

இச்செய்யுள் பிறர் கொன்றிடத் தின்னலாம் என்பதை மறுத்துக் கூறிற்று.

(37)

செய்யுள் - 131

குடைநிழலுங் கண்ணாடிச் சாயையும்போற் பிறப்புக்
கொள்ளுமுணர் வென்னிற்கா ரணமழிய வழியும்
அடைநிழல்போற் கந்தமைந்து மழியுமுனக் கிங்கே
அவையழிந்தா லருங்கதியினணையுமுணர் வின்றாம்
இடைகன விலெழுமுணர்வு நனவுணர்வானாற்போல்
எழுமுணர்வு கன்மத்தா னினைந்துகதியென்னின்
மிடைசினையு மந்தனுமுட் டையுமுயிர்விட் டக்கால்
மேவுவதென் பிறப்பினுடல் விடாதுகன்ம வுணர்வே.

பதவுரை

குடைநிழலும் கண்ணாடிச் சாயையும் போல் பிறப்பு கொள்ளும் உணர்வு என்னில்	குடையின்கண் குடைபோல நிழல் தோன்றும் தன்மையும் கண்ணாடியில் காட்டின உருப்போல உருத் தோன்றும் தன்மையும் போலவும், இக்காயம் விட மற்றொரு காயத்தை எடுத்துக்கொள்ளும் என்று புத்த! நீ கூறின்,
காரணம் அழிய அழியும் அடைநிழல் போல் கந்தம் ஐந்தும் அழியும் உனக்கு இங்கே	குடையும் கண்ணாடியும் ஆகிய காரணங் கெட அதில் பொருந்திய நிழலாகிய காரியம் கெட்டாற் போலக் கந்தங்கள் ஐந்தும் உனக்கு இவ்விடத்தே கெடும்; அவை கெடவே இந்திரியம் காரணமாகக் காரியப்படும் அறிவும் இங்கே அழியும் ஆகையால்,
அவை அழிந்தால் அருங்கதியின் அணையும் உணர்வு இன்றாம்	காரணமாகிய கந்தங்கள் ஐந்தும் அழிந்தால் கதியை அடையும் அறிவும் இல்லையாம்,
இடை கனவில் எழும் உணர்வு நனவு உணர்வு ஆனால் போல் எழும் உணர்வு கன்மத்தால்	கனவிடை எழும் அறிவு மெய்யறிவாய்ப் பரிணமித்தாற்போலக் கன்மங்கட் கிடாக நினைந்து உண்டாம் உணர்வு கதியிற் கூடும்

நினைந்து கதி என்னில்	என்று நீ கூறின்,
மிடை சினையும் அந்தனும் முட்டையும் உயிர் விட்ட கால் மேவுவது என்	இந்திரிய அறிவு கெட்டால் தம்மில் நெருங்கிய சினையும் பிறவிக் குருடனும் முட்டையும் உயிர் போனால் பெறும் கதி யாது? அதனால்,
பிறப்பின் உடல் விடாது கன்ம உணர்வு ஏ	பிறப்பின் உடலைக் கன்ம உணர்வு விடாது காண் என்றவாறு.

விளக்கவுரை

இப்போதுள்ள உடம்பு குடையைப் போன்றது, மற்றோருடம்பு அக்குடையின் நிழலை ஒத்தது. அன்றியும், கண்ணாடியில் தோன்றும் சாயையையும் அஃது ஒக்கும். அத்தகைய உடம்பை அறிவு சென்று பற்றுதலே பிறப்பாம் என்னில், குடையும் கண்ணாடியில் உருவமும் ஆகிய காரணம் கெட அவற்றின் நிழலாகிய காரியமும் இல்லையாம். அதுபோல, கந்தங்கள் ஐந்தும் இங்கே உனக்குக் கெடும்; அவை உடன் கெடும். ஆகையால், கதியை அடையும் அறிவும் உண்டாகாது. அன்றியும், கனவினிடத்துத் தோன்றும் அறிவு மெய்யறிவாய்ப் பணிமித்தாற்போல, கன்மங்களுக்கு ஈடாக எழும் அறிவு கதியிற் கூடும் என்னில், இந்திரிய அறிவு கெட்டால் செயலில்லாத உறுப்புக்களுள்ள உடம்பு முட்டை குருட்டுப்பிறப்பு ஆகிய இவற்றை விட்டு உயிர் பிரிந்தால் பெறும் கதி யாதாம்? ஆகலின், கன்மங்களுக்கு ஈடாக எழும் உணர்வு பிறப்புக்கு ஏதுவாய் உடலைப்பற்றியே நிற்கும்; அது முத்திக்கு ஏதுவாதல் இல்லை. எனவே, கன்மமும் உணர்வும் கெட்டுக் கதியடைதல் இல்லையாம் என்க.

கன்ம உணர்வு என்பது ஆன்மஞானம். சினையும் அந்தகனும் முட்டையும் பூர்வகன்மத்துக்கு ஈடாகத் தொழிலை மறந்து நிற்கையால் கதி அடையார் என்பது ஆயிற்று.

கதி என்றது நற்பிறப்பு.

இச்செய்யுள் கன்மமும் உணர்வும் கெட்டுக் கதியடையும் என்பதனை மறுத்துக் கூறிற்று. *(38)*

செய்யுள் - 132

ஐந்துகந்தஞ் சந்தானத் தழிதல்பந்த துக்கம்
அறக்கெடுகைமுத்தியின் பமென்றறைந்தாய்கந்தம்
ஐந்துமழிந் தான்முத்தி யணைபவர்பா ரென்ன
அணைபவர்வேறில்லை யென்றாயார்க்கு முத்தியின்பம்

ஐந்தினுணர் வினுக்கென்னி லழியாத வுணர்வுண்
டாகவே யவ்விடத்து முருவாதி கந்தம்
ஐந்துமுள வாமதுவும் பந்த மாகி
அரந்தைதரு முத்தியின்ப மறிந்திலைகா ணீயே.

பதவுரை

ஐந்து கந்தம் சந்தானத்து அழிதல் பந்த துக்கம் அறக் கெடுகை முத்தி இன்பம் என்று அறைந்தாய்	கந்தங்கள் ஐந்தும் தொடர்ச்சியிலே சேட்டை கெடுதல் பந்ததுக்கம் என்றும் அவை கற்பூர தீபம்போலச் சேரக்கெடுகை முத்தியின்பம் என்றும் புத்த! நீ கூறினாய்,
கந்தம் ஐந்தும் அழிந்தால் முத்தி அணைபவர் யார் என்ன அணைபவர் வேறு இல்லை என்றாய்	கந்தம் ஐந்தும் கெட்டால் முத்தியிற் செல்வார் யார் என்றுழிச்செல்வார் ஒருவரும் இல்லை என்று கூறினாய்,
ஆர்க்கு முத்தி இன்பம்	முத்தி பெறுவார் இல்லையாயின் முத்தி யின்பம் யாவர்க்கு,
ஐந்தின் உணர்வினுக்கு என்னில்	கந்தங்கள் ஐந்தில் தோன்றும் அறிவிற்கு என்று கூறின்,
அழியாத உணர்வு உண்டாகவே அவ்இடத்து உரு ஆதி கந்தம் ஐந்தும் உள ஆம் அதுவும் பந்தம் ஆகி அரந்தை தரும் முத்தி இன்பம் அறிந்திலை காண் நீ ஏ	மனத்தால் அறியும் அறிவு கெடாது இருக்குமாயின் அவ்விடத்திலும் உருவம், வேதனை, குறிப்பு, பாவனை, விஞ்ஞானம் எனும் கந்தங்கள் ஐந்தும் உண்டாதல் வேண்டும்; அவை உண்டாகவே முத்தி யிடத்திலும் பந்த துக்கம் உண்டாய்க் கிலேசத்தையும் தரும், ஆதலால் நீ மோட்ச சுகத்தை அறிந்திலை. அதனைக் கேட்பாயாக என்றவாறு.

விளக்கவுரை

புத்தனே! இன்னும், கந்தங்கள் ஐந்தும் தொடர்ந்து செல்வன, அவை தொடர்ச்சி கெட்டுத் தொழில் ஒழிதல் பந்தத்துக்கு ஏதுவாகிய துக்கமாம், அவை கருப்பூர தீபம் போல முற்றும் அழிதலே முத்தியின்பமாம் என்று கூறினாய். கந்தம் ஐந்தும் முற்றுக் கெட்டால் முத்தியிற் சேர்வார் யார்? ஒருவரும் இல்லை என்னில், இலராயின் முத்தியின்பம் யாருக்கு? கந்தங்கள் ஐந்தினும் தோன்றும் அறிவினுக்காம் என்னில், அவ்வறிவு கெடாதிருக்குமாயின் உருவம் வேதனை குறிப்பு பாவனை விஞ்ஞானம் என்னும் கந்தங்கள் ஐந்தும் உண்டாம். அவை உண்டாகவே

முத்தியிலும் பந்ததுக்கம் உண்டாம்; துன்பத்தையும் தரும். ஆகலின், முத்தியின்பம் இன்னதென்பதை நீ அறிந்திலை; கேட்பாயாக.

கேட்பாயாக என்ற தொடர்ச்சி பின்னர் வரும் செய்யுளின் கருத்துப்பற்றி.

இச்செய்யுள் கந்தங்கள் ஐந்தின் அறிவே அறிவுமாய் மோட்ச சுகத்தை அடையும் என்பதனை மறுத்துக் கூறிற்று. (39)

செய்யுள் - 133

அநாதிமுத்த னாய்ப்பரனா யசலனா யெல்லா
அறிவுதொழி லநுக்கிரக முடையவரன் கன்ம
நுனாதிகமற் றொத்தவிடத் தேசத்தி நிபாதம்
நுழைவித்து மலங்களெல்லா நுங்க நோக்கி
மனாதிகர ணங்களெல்லா மடக்கித்தன்னை
வழிபடுநல் லறிவருளி மாக்கருணைக் கையால்
இனாதபிறப் பினினின்று மெடுத்து மாறா
இன்பமுத்திக் கேவைப்ப னெங்கள் முத்தி யிதுவே.

சௌத்திராந்திகன் மதமறுப்பு நிறைவுரை

அநாதியிலேயே மலம் இல்லாதவனாய்த் தூயனாய், எப்பொருட்கும் மேலானவனாய், சஞ்சலம் இல்லாதவனாய், முற்றுணர்வும் முற்றுத்தொழிலும் பேரருளுடைமையும் உடையனாய் உள்ளவனே கர்த்தா. அவன் பரமேசுவரன் ஒருவனே. அப்பரமேசுவரனாகிய பசுபதி ஆன்மாக்களிடத்து வைத்த அளவில்லாத பெருங்கருணையினாலே, ஆன்மாக்களின் புண்ணியபாவங்கள் மிகுதி குறைவுகள் இன்றித் தலையொத்த விடத்துக், குருவடிவாகக் குவலயத்தில் தோன்றிச், சத்திநிபாதம் வருவித்து, மலங்கள் கெடத் திருக்கண் சாத்தியருளி, மனம் முதலிய உட்கருவிகளையும் இந்திரியம் முதலிய புறக்கருவிகளையும் கெடுத்து, தன்னை வழிபடும் சரியை கிரியை யோகம் ஞானம் என்னும் நால்வகை வழிபாட்டையும் தந்தருளி, மிகுந்த கருணையாகிய கைகளினாலே பொல்லாத துன்பத்தைத் தரும் பிறவிக் கடலில் விழுந்து வருந்தாமல் எடுத்து, ஒழியாத இன்பத்தைத் தரும் முத்திக்கரையிலே வைத்தருளுவன். இதுவே எங்கள் முத்தி. நீயும் இந்த சன்மார்க்கத்தினின்று முத்தியின்பத்தை அடைவாயாக.

நூனாதிகம் நுனாதிகம் என விகாரப்பட்டது.

இச்செய்யுள் பௌத்தரில் சௌத்திராந்திகன் மதத்தை மறுத்து மோட்சுகம் கூறிற்று. (40)

இரண்டாவது சௌத்திராந்திகன் மதமறுதலை முற்றிற்று.

பாயிரம் உள்பட திருவிருத்தம் – 133.

;

சௌத்திராந்திக மறுப்புத் தொகுப்பு

இவர்கள் கொள்கையைச் சிவஞான சித்தியார் பரபக்கம் நாற்பது பாடல்களில் மறுத்துரைக்கிறது.

பொருந்தா இறைக் கொள்கை:- புத்தனே முழுதும் உணர்ந்தவன்: எம்முடைய கடவுளென்று கூறினாய். ஓரிடத்து வாழ்ந்த நின் கடவுள் உலகம் முழுவதையும் எவ்வாறு அறிய முடியும்? ஒவ்வொன்றாய் அறிந்தானெனின் அவ்வாறறியுமிடத்து ஒவ்வொன்றினுடைய தோற்றமும், அழிவும், பிறவற்றின் தொடர்பும் அறியவேண்டும். அப்படி அறிதலும் முழுதாய உலகத்தினை அறிந்ததாகாது. புத்தனின் அறிவு அனைத்தையும் அறிதற்குரியது எனில், அவ் அறிவு கணந்தோறும் தோன்றிக் கெடுவதால் அனைத்தினையும் அறிய முடியாது.

இவ்வுலகத்துச் சில பொருள்களை அறிந்து அவற்றால் பல பொருள்களையும் அறிந்தானெனின், முரணுடைய பொருள்கள் உலகில் காணப்படுவதாலும், பொருள்கள் அளவற்றன வாதலாலும், சிலவற்றால் பலவற்றை அறிதலாகாது. ஒரு பொருளை அறியுமிடத்து அதனை ஆராய்ந்து தெளிதல் வேண்டும். ஆதலால் பல பகுதிகளை அறிவதற்குக் கண பங்கவாதம் இடர்தரும். ஏனெனில் ஒரு பகுதி தோன்றுமுன் அதற்கு முந்தியது அழிந்துவிடும். எனவே ஒரு பொருளையறிந்து அதனை மற்றொரு பொருளோடு சேர்த்து உணர முடியாது.

வீடு பேற்றினை யறிந்து கடவுள் நூலினைக் கூறினானென்றால் அறிவு கெட்ட பின்பே வீடுபேறு கைகூடும். இங்ஙனம் வீடெய்தியவன் பின்பு தோன்றி அறநூல் சொன்னானென்பது, தேனும் நெய்யும் தவறாகக் கூட்டிக் குடித் திறந்த ஒருவன் மீண்டும் இவ்வுலகத்து வந்து அக்கலவை நஞ்சென்று சொன்ன தன்மைத்தாகும். அறத்தை முதலாகக் கூறிப் பின் வீடுபேறெய் தினானெனின் அவன் அவ்வீடுபேற்றை அறிந்தானல்லன். அத்தகையோன் ஆற்று வெள்ளத்தின் அளவறியாது இக்கரையில் உள்ளோரை அக்கரைக்குச் செலுத்துவேனென்பவனோடு ஒப்பான்.

பிறவிக் கடலில் அகப்பட்ட உயிர்களைக் காத்தற் பொருட்டுப் பிறவியெடுத்தானென்பது வலையிலகப்பட்ட பல கலைமான்களை விடுவிக்க ஒருகலைமான் அவ்வலையில் சிக்கிய தன்மையாகும். நரகிற் செல்லும் வழியாமிதனை மெய்யென்ற புத்தரை ஒப்புவோர் யாவருமிலர். அறத்தை அருளப் பிறந்தானெனில் அனைத்து யிர்களும் அவ்விதமே பிறந்தவைகளாகும்.

உயிர்கள் உடலெடுப்பதற்கு வினை காரணமெனில் அஃது புத்தனுக்கும் ஒக்கும். அஃதன்றித் தன் விருப்பப்படி பிறந்தானெனில் பிற உயிர்களும் அவ்வாறே பிறந்தனவாகும். மேலும் புத்தன் தாயின் வயிற்றிலிருந்து பிறக்கும் போதே தாயைக்

கொன்று பூமியில் அவதரித்தான். அத்தகையோன் கூறிய அறம் அறமன்று. இத்தகைய புத்தரின் பிறப்பினை.

'உலும்பிலி வனத்து ளொண் குழைத்தேவி
வலம்படு மருங்குல் வடு நோயுறாமல் - அன்றோ
னவ்வழித் தோன்றி னாதலினீன்றோ
ளேழா நாளின்னுயிர் வதைத்தான்'

என்றும்,

'முத்தராம் புத்தர் தோன்றித் தாய் பழுவை முறித்தே விட்டார்'

என்றும் இந்நூல் எடுத்தியம்புகின்றது.

ஆதிபுத்தன் பாவங்களை நீக்கி அறத்தை நிலைநாட்டப் பல பிறவிகள் எடுத்தானென்று கூறுவர். அங்ஙனமெனின் சிங்கம், நரி, புலி முதலிய கொடிய விலங்குகளாகப் பிறந்து உயிர்களைக் கொன்றே உயிர் பிழைத் திருக்க வேண்டும். அவ்விதம் கொலை செய்ய வில்லை யாயின் அப்பிறவியில் அவனது உணவு யாது? எவ்வுயிர்களிடத்தும் கருணையுடையான் என்னில் கணவனை நீங்கித் தவறான வழியில் செல்லும் மகளிர் உறுந் துயரத்தினுக்கும், கண்ணி முதலிய கொண்டு கொலைத் தொழில் செய்வோர்க்கும் இரங்குவது அறம் ஆகுமா?

2. கணபங்க வாத மறுப்பு (கணபங்கம் - கணத்தில் தோன்றி அழிவது)

ஒரு பொருளுக்குரிய சொல்லைத் தெரிந்து பொருளைக் கூட்டி நூலாகக் கூறு முன்னே அவ்வறிவு கெடுதலால் நூல் எவ்வாறு இயற்றமுடியும்? முன்னறிவின் தொடர்ச்சி பின்னறிவெனில் முன் சொன்ன சொல்லே பின்னுரைத்தல் வேண்டும். முன்னுள்ள அறிவு கெட்டுப் பின் தோன்றுமறிவு மிக்க அறிவாமெனில் அங்ஙனம் தோன்றும் அறிவும் கணத்தில் கெடுகையில் முன்னறிவேயாகும். நூலானது முதல், நடு, இறுதி மாறுபாடில்லாதிருக்க வேண்டும். இதற்குக் கண பங்கவாதம் மாறுபடும்.

3. பிடக நூலும் அதன் சிறப்பின்மையும்

புத்தன் பல அறங்களைச் செய்து பின் பிடகநூல் செய்தானெனில் அறங்களை இயற்ற அவனுக்கு முன்பு நூல் சொன்னவர் யார்? அவனுக்கு முன்பு அவனாசிரியன் சொன்னானெனின், அவனாசாரியனுக்குச் சொன்னார் யாரென மேன்மேல் தொடர்ச்சிப்பட்டுத் தலைவன் இல்லையாம். இஃதன்றிப் புத்தப்பள்ளியுள் தொழப்படும் தெய்வம் யார்? புத்தனெனில் அவனுடைய ஆசிரியன் யார்? என்பதற்கும் மேற்கூறிய முறை ஒக்கும். உண்மையை ஆய்ந்தால் அறங்களை அறிவித்தோன் பிறவா முதல்வனென்பதும், நூல் என்பவை வேதாகமங்கள் என்பதுமாகும். **இவ்வாகமங்கள் உணவைச் சுருக்கித் தவம்**

புரிதலைக் கூறுகின்றன. ஆனால் பிடக நூலோ கண் கழுவாது சூரியனுதிக்கு முன்னே புலாலுடன் உண்ணும் உணவு விருப்பன் சொல்லியதாகும்.

இவ்வுலகில் வழங்கும் முதல் நூல், வழிநூல், சார்புநூல் எனும் மூன்றிலும் பிடகநூல் அடங்காது. காரணம் முதல்நூல் எனில் முதல்வன் செய்ததாதல் வேண்டும். அஃதின்மை முன்பெறப்பட்டது. ஏனைய இருவகை நூல் என்றல் நினக்கு உடன்பாடாகாது. எனவே அந்நூல் உலண்டால் செய்த நூல். பருத்தியாற் செய்த நூல். சிலம்பியால் செய்த நூலென்று சொல்லப்படும் நூல்களினும் தகுதியற்றதாகும்.

4. புத்த வழிபாடு

புத்தன் வீடுபேறடைந்த பொழுது அழிந்தானாயின் இப்பொழுது வழிபடும் புத்தன் யார்? இறந்தவர்க்கு நாட்கடன் செய்தல் இருந்தவர்க்குப் புண்ணியமெனின் உயிர்கள் நிலைத்த பொருளாதல் வேண்டும். வழிபாட்டிற்குத்தகப் புண்ணியத்தை அருள முதல்வன் வேண்டும்.

இந்நெறி பௌத்த நெறியன்று. புத்தரை வழிபடும் நெறி அணைந்த விளக்கிற்கு நெய்யுந் திரியுமிடுதல் போன்றது.

5. உரையளவையின் உறுதிப்பாடு

பௌத்தம் காட்சி அளவை, கருதலளவை எனும் இரண்டு அளவைகளை மட்டுமே கொண்டது. பூமிக்கு மேலான உலகங்களின் செய்தியும், கீழான உலகங்களின் செய்தியும் கருதலளவையாலறிய முடியாது. அவற்றைப் பற்றித் திரிபிடகம் கூறுவதால் பௌத்த சமய நூலே உரையளவைக்கு உறுதி செய்கிறது.

6. பொருள்கள் சூனியமன்று

புத்தர், பொருள்கள் நிலையில்லாதனவென்று கூறுவர். அத்தகைய நிலையாமை இல் பொருளுக்கா? உள் பொருளுக்கா? உளதிலதான பொருளுக்கா? இல்லாத பொருளுக்காயின் இல்லாதது என்றும் இல்லையாகும். உள்ளதற் காயின் உள்ளதில்லையாகாது. உளது இலதாம் பொருட்களாயின் உள்ளது இல்லையாகாது. இல்லாதது உண்டாகாது. தோன்றும் பொருள் அழிதல் பற்றி நிலையாதெனினும் அஃது அழிந்து சூனியமாகாமையின் நிலையாப் பொருள் என்று ஒன்றில்லை.

விதையழிய முளையானது உண்டாதல் போல உருவமழிந்து பின் அவ்வழியே எப்பொருளும் தோன்றுமெனில், நிலையாமையும் கூறி உருவங்களுக்கு ஆக்கக் கேடும் கூறுதல் சமணத்தின் வழிப்பட்டதாம். நின்கொள்கையன்று. மேலும் முளையானது இலையுமரமுமாய் வளர்ந்து பின் கெடுவது காரியப்படும் பகுதியேயாகும். காரணநிலையில் உள்ள அவ்விதை என்றும் சூனியமாவதில்லை.

முரண்பாடுடைய பூதக் கூட்டுறவால் உருக்கள் தோன்றாது. ஆண் பெண் சத்துக்களின் கலப்பால் உடல் உண்டாவ தெனின் மரத்தின் உளுவும், கல்லிடத்துத் தவளையும் மக்களுடம்பு போல உண்டாவதில்லை. வினை உடலாகின்றதெனின் இருவினையும் கூடி உருவாக்க முடியுமா? மேலும் அன்னமே உடலாவதென்றால் வயதான காலத்து அன்னம் உண்டாலும் உடம்பு வளர்வதில்லை. அறிவு உடம்பாய் உருப்படும் எனின் அருவாய் உள்ள அறிவு அறிவற்ற உருவாக முடியுமா? உடம்பு புதிதாய்த் தோன்றுமெனின் இல்லாதது இல்லையாகும்.

வித்தினின்று இல்லாத மரம் வருதல் போன்று இல்லாததினின்று உள்ளது உண்டெனில், மரம் வித்திலே நுட்பமாய் இருத்தலின்றிப் புதிதாய்த் தோன்றவில்லை. நெல்லினது வித்தில் நெல் தோன்றுமேயன்றிக் கழுகு தோன்றுவதில்லை. எனவே நெல்லின் காரணவடிவு வித்திலே உள்ளது. ஆதலின் சூனியத்தினின்று உருவம் தோன்றுவதில்லை.

பூதம் நான்கும், உபாதாயம் நான்கும் கூடிய கூட்டத்தில் உருக்கள் தோன்றுமெனின், அவை எட்டும் ஒன்றோடொன்று கூடா. அஃதெங்ஙனமெனில் காற்றினோடு அனல், நீர், மண் என்பனவும், நிறம், சுவை, மணம் என்பனவும் கூடா. நெருப்பினோடு காற்று, நீர், மண் என்பனவும் சுவை, மணம் என்பனவும் கூடா. நீரினோடு நெருப்பு, காற்று, மண் என்பனவும் மணமும் கூடா. நிலத்தினோடு நீர், தீ, காற்று என்பனவம் கூடா. எனவே பூதகுணமும், பொறிகளின் இயல்பும் மாறுபடும். பூத அணுக்களைப் பற்றி நீ அறிவதன்றித் தன்மாத்திரைகளின் இயல்பினை நீ அறியாய். மருந்தெண்ணெயில் மருந்து மறைந்து நின்று நன்மை தருதல் போல, மேற்கூறிய எட்டும் நுண்ணுருவாய் நிற்குமெனில் போலப் பூத உருவையும் உபாதாய உருவையும் கூட்ட முதல்வன் ஒருவன் வேண்டும். மேலும் எல்லா உருக்களையும் இவ்வெட்டும் உண்டாக்குமெனில் எல்லாம் ஒருதன்மைத்தாக இருக்க வேண்டும். அவ்வுருக்களின் குணங்களில் ஒன்றின் குணம் ஒன்றில் கூடாது. ஆதலின் அக்கூற்றுப் பொருந்தாதாம்.

7. அழியா அறிவு

தோன்றிய அறிவு கெட்டுப் பின் னோரறிவை உண்டாக்க மாட்டாது. மேலும் அறிவினால் அறிந்த பொருள் புதிதாய் வரும் அறிவில் பொருந்தாது. அழியுமறிவு பின்னறிவையுண்டாக்குமெனில் முன்னறிவும், பின் தோன்றிய அறிவும் ஒருகணத்து நிலைபெறாது. கெடாத அறிவின் ஒருபகுதியில் புதிய அறிவு தோன்றுமெனின், அறிவு நிலைத்த பொருளாயும் நிலையாப் பொருளாயும் தோன்றும். வயலிடத்து இட்ட எருவும், வைக்கோலும் கெட்டுப் பயிரை யுண்டாக்குவது போல அழியுமறிவு புதிய அறிவை யுண்டாக்குமெனில் எரு, வைக்கோல் என்பவை தமது சக்தியை இழக்கவில்லை. எனவே அவை அழிவனவல்ல.

உணர்வு கெடினும் அதன் தொடர்ச்சி புதியஉணர்வாதலின் அத்தொடர்ச்சி நிலையானதாகும். ஆற்றில் ஒடும் நீரினைப் பின்வரும் நீர் தொடர்தல் போல, முன்னுணர்வு கெடப் பின்னுணர்வு தோன்றுமெனில் ஓடுகின்ற நீரில் உண்டானவை அந்நீரோடு ஓடுவதன்றிப் பின் வருவதைப் பற்றாது. முந்தை அறிவால் தேடிய சிலம், பாவனை, குறி, விஞ்ஞானம் இவையெல்லாம் முன்னறிவிலேயே கெடும். நீர்போன்று ஒரொழுக்காகச் செல்லுமெனின் அறிவு நிலையானதாகும்.

மேலும் அத்தொடர்ச்சி காரணமாய் நின்றதா? காரியமாய் நின்றதா? காரண காரியமாய் நின்றதா? காரணமாயின் நிலைத்த பொருளே, காரியமெனினும் நிலைத்த பொருளாம். காரண காரியத் தொடர்ச்சியெனினும் நிலைத்த பொருள் என்பதில் இழுக்கில்லை. முன்னறிவையும், பின்னறிவையும் சேர்ப்பதே தொடர்ச்சி யெனில் தோற்றக் கேடுடைய பொருளுக்கும் இஃது பொருந்துதலான் நித்தப் பொருளாம். அத்தொடர்ச்சி அறிவாகவோ, ஐங்கந்தமாகவோ இருத்தல் வேண்டும். அஃது இரண்டும் இல்லையெனின் பொறிகள் அறிவாகவும், அறிவு பொறியாகவும் முறை பிறழும்.

அறிவானது அழியுமென்பர். முன்னறிவுக்கும் பின்னறிவுக்கும் தொடர்ச்சி அறுமாயின் தொடர்ந்த அறிவு காரணமாகாது. உணர்வுக்கு உடம்பு காரணமெனின் அவ்வுணர்வு உடம்பில் எப்பொழுதும் உதிக்க வேண்டும். ஆனால் தூங்கும் பொழுது உணர்வு ஏற்படுவதில்லை. உடல் அறியும் தொழிலைச் செய்வதால் அறிவுண்டெனில் உடலுள்ள போதெல்லாம் அத்தொழில் நிகழ வேண்டும். மேலும் பொறிகள் தொழிலை உடையதால் அதனாலுண்டாய அறிவு அழியாது.

வினை அறிவையும் அறிவு வினையையும் தரும் என்பர். அறிவுக்கு நினைவுண்டு வினைக்கு நினைவில்லை. எனவே ஒன்று மற்றொன்றை உண்டாக்காது. மேலும் அவை நிலையாததெனில் ஒன்றைஒன்றை உண்டாக்கிக் கெடாது. நெருப்பானது விறகிலே தோன்றி விறகையே எரிப்பது போல வினையால் தோன்றும் அறிவு அவ்வினையையே அழிக்குமெனில் அறிவு பிறந்தவுடன் வினையை அழிக்கும். ஆனால் அவ்வினை கெட்டு அறிவை உண்டாக்காது. அஃது நெருப்பு விறகை யழிப்பதேயன்றிப் புதிதாக விறகை யுண்டாக்காமை போல் அறிவும் வினையை அழிப்பதோடு புதிய வினையை உண்டாக்காது.

8. காலம் உண்டு

ஒருகணத்தே அறிவு தோன்றுதலும் கெடுதலும் நிகழ்ந்தால் படைப்பும் அழிப்பும் ஒரு தொழிலாக வேண்டும். பொருள்களின் மாறுதல்களே காலமெனில்

எதிர் காலம், நிகழ்காலம் கழிகாலமென்று வழங்குவதேன்? பொருள்களின் வரவு, நிலை, கழிவு எனும் மூன்றே முக்காலமெனப் பட்டனவெனில் கால மென்பதைக் கொண்டு தான் செயல் மூன்றாகும். கால மின்றேல் செயல் ஒன்றே எப்பொருளுக்குமுரியதாகும். முச்செயலும் ஒரு கணத்தே உண்டாயினும் கால மூன்றினையும் உடைத்தாம். அஃதெங்ஙனமெனில் தாமரையிதழ் நூறடுக்கிற் செலுத்தின ஊசி இதழ் தோறும் பற்றுதலும், உருவுதலும், கழிதலுமாய மூன்று காலத்தைத் தருதலால் ஒருகணத்துளும் கால முண்டென்பதாம்.

மேலும் காலமானது காலையும் உச்சியும், மாலையுமென்னும் பொழுதாயும், நெருநல், இன்று, நாளை என்னும் நாளாயும் இத்தன்மையில் மூன்றுவிதமாய் வேறுபட்ட நன்மை தீமைகளைச் செய்யும்.

9. திசை உண்டு

திசையானது கிழக்கு, மேற்கு, தெற்கு, வடக்கென்று தவறில்லாததாய், அநாதியிலும், ஆதியிலும் உள்ளதாய், பிறழாமல் அத்திசை நோக்கிச் செயல் பட்டோர்க்கு அச்செயலின் பலனை நல்கும்.

10. அழியா உயிர்

உருவம், வேதனை, குறிப்பு, பாவனை, விஞ்ஞானமென்ற ஐந்தின் சேர்க்கையே உயிரென்றும், உருவம் முதலியவற்றை அறிவது சித்தமென்றும் கூறுவர். சித்தத்தை உணர்ந்தவர் யாரென வினவின் விளக்கு, உருவம் முதலாய பொருள்களையும், தன்னையும் காட்டுவது போல சித்தமும் உருவம் முதல் ஐந்தையும் தன்னையும் அறிவிக்கும் என்பர். உலகியல் பொருட்களையும், அப்பொருளைக் காட்டும் விளக்கையும் காணும் கண்போல சித்தத்தையும், பொறிகளையும் உணர்வான் ஒருவன் உண்டென அறிதல் வேண்டும்.

உடம்பும், பொறியும், மனமுமே உயிரென்பர். உடம்பு உறக்கத்தினிடை அறியாமை யுடைத்து. பொறிகளும் உடம்பு போன்று உணர்வில் ஒன்றறிந்ததை ஒன்றறியாது. மனம் கணந்தோறும் கெடுதலால் கால மூன்றையும் அறியாது. எனவே இம் மூன்றுமல்லாது மனத்தால் ஒன்றைக் கருதி பொறியால் அதனைக் கண்டு உடம்பால் தொழிலைச் செய்வது உயிராகும்.

உணர்வே அறிவென்பர். ஒன்றைச் சொன்னேன் என்ற போது வாய் அவ்வாறு சொல்லியதா? அன்று. அச்சொல்லைச் சொன்னவன் ஒருவனுண்டானாற் போல மனத்தால் அறிந்து நான் அறிவேன் என்றது உயிராகும். வாயால் மொழிந்ததும், உடம்பால் செய்ததும் அவ்வுயிரேயாகும். மேலும் அவ்வுயிரே அறிவுக்கு ஆதாரமானது.

பொறியாலுண்டாகும் அறிவு, மனத்தாலுண்டாகும் அறிவு என்ற இரண்டில்

ஒன்றுகெட்டு மற்றொன்று உதிக்குமென்பர். அவ்விதம் கொண்டால் நனவில் கண்டது கனவில் புலப்படாது. கனவில் கண்டது நனவில் புலப்படாது. அஃது எது போன்றதெனில் பிறவிக் குருடன் பிற வடிவத்தையும், நிறத்தையும் அறியமாட்டாமை போலாம். நனவும், கனவும் ஒழிந்து உறக்கம் ஏற்படும்பொழுது இரண்டின் தொடர்பு அற்றுப் போதலின் அவை தோன்றா. உணர்வு மீண்டும் தோன்றலின் அதற்கு ஆதாரமாய் உயிர் உண்டு.

ஒரு காலத்து ஒரு பொறியிடத்து ஒருணர்வு தோன்றுமென்பர். அப்படியாயின் ஓசையை ஒரு செவி அறியாது இரண்டுமறிய வேண்டும். மாறாக ஒரு செவியே ஒருணர்வவை அறிதலின் அக்கருத்துப் பொருந்தாது. ஐம்பொறிகளும், மனத்தொடு கூடாது தனித்து அறிய மாட்டா. ஐம்பொறிகளுள் ஒன்றறிந்ததை ஒன்று அறியா. ஆனால் மனம் ஐம்பொறிகளுள் ஒவ்வொன்றோடு கூடி அது அறிவதை அறியும். மேலும் அது ஒரு பொறியோடு கூடி ஒன்றை அறியும் பொழுது பிறிதொரு பொறியோடு கூடுவதில்லை. இம்மனத்தால் அறிவதே உயிராகும்.

மனமானது அருவாய், உணர்வாய், பொறிகள் ஐந்தோடும் கூடி ஆறுவிதமாய் மாறிமாறித் தோன்றுமென்பர். மனம் அருவாயின் உடம்போடு கூடி குழந்தை, இளமை, முதுமை எனும் நிலை உண்டாகாதாதல் வேண்டும். மேலும் அறிவு நெஞ்சிடத்து இல்லையாயின் பொறியின் கண் நிகழும் செயலை அறிந்து எங்ஙனம் செயற்படும்? திரியைப் பற்றி நின்றவொளி அத்திரிமாய்ந்தால் உடன் மாயுமேயன்றி அகழியைப் பற்றி நிற்காது. அதுபோல மனம் அழியின் அறிவும் இல்லையாம்.

ஆசை, வெறுத்தல், தொழிற்படுதல், இன்பதுன்பப்படுதல் முதலியவை உயிரின் குணங்களாகும். இவற்றில் ஆசையாவது ஒரு காலத்து ஒரு பழத்தைத் தின்றவன் அதன் சுவையை மீண்டும் அத்தகைய பழத்தைக் காணும் போது நினைத்தல் உண்டு. வெறுப்பு முதலிய குணங்களும் அத்தன்மையனவேயாகும். இவற்றை முன்பின் உணரும் ஒரு பொருள் உயிராகும்.

11. வான் உண்டு

எல்லாப் பொருளும் செல்லுதற்கு வழியாய் அமைந்து இடம் கொடுத்தும், நீக்கமற இருளும், ஒளியுமல்லாது இரண்டும் நிற்கத்தக்க இடமாய் ஒலிக்கும் குணமுடைத்தாய்க் காற்று முதலிய பூதங்கள் நான்கும் தோன்றி யொடுங்குதற்கு அடித்தளமாய் நிற்பது வானமாகும்.

12. ஓரறிவுயிர்கள்

மரம் முதலானவை உயிருள்ளனவல்ல என்பர். அவை மெலிதலாலும், பருத்தலாலும் உயிருண்டு. ஏனெனில் உணவு பெற்றால் பருத்தலும் பெறாவிடில் வாடுதலும் இயல்பு. மரத்திற்குப் பொறிகள் இல்லையாதலால் உயிரில்லை யெனின்,

உயிரை யுள்ளடக்கி நிற்கும் முட்டை, சினை முதலியவற்றிற்குப் பொறிகள் வெளிப்படாமை போல மரம் முதலியவற்றிற்கும் வெளிப்படாது, முதிர்ச்சியில் வெளிப்படும். மேலும் மரங்கட்குப் பூத்தலும், காய்த்தலும், வளர்தலும் உளவாகலின் அச்செயற்குரிய பொறிகளும், உயிரும் உண்டு.

ஒரு மரத்தின் கிளையைப் பிடுங்கி வேறிடத்தில் நட்டபோது அதுவும் மரமாய்க் கிளைத்தலின் ஒருயிர் பல உயிராகுமா என்றால், வித்து, வேர், கொம்பு, கொடி, கிழங்கு என்பவற்றைக் கருப்பமாகக் கொண்டு உயிர்கள் பிறக்கும். கருப்பையில் பிறப்பது போன்று முட்டையிலும் வியர்வையிலும் உயிர்கள் பிறக்கின்றன. மரம் முதலியன பூமியில் நடவாமையால் உயிரற்ற தெனின், காலில்லாதவர்கள் பூமியில் நடக்காததால் உயிரற்றவர் எனக் கொள்வதில்லை. எனவே பொறிகள் குறைவான உயிர்களின் படைப்புப் பலவிதமாகும்.

13. கொல்லாமை

இறந்ததைத் தின்றால் குற்றமில்லை என்பர். தின்பர் என்று கருதி ஒன்றைக் கொல்லுவதால் ஏற்படும் பாவம் தின்பவராலேயாம். ஏனெனில் தின்னாதார்க்குக் கொன்றூட்டுவாரில்லை. எனவே பாவமுமில்லை. பாவஞ் செய்தால் தவமாகுமா? அஃதன்றியும் புத்தக் கடவுளுக்குப் படைப்பதும் புலாலேயாகும். உடல் தூய்மையற்றதாகக் கருதும் புத்தமதத்தவர் பிறவூனைக் கொள்வது தூய்மையற்ற தென்று கருதார் போலும்.

14. சிவபெருமானும் சிவாகமமே முதன்மை யானவை

உலகம் காரியப் பொருளாயிருத்தலால் இதனைச் செய்வானொரு முதல்வன் வேண்டும். குற்றமற்ற அறம், பொருள், இன்பம், வீடென்பவற்றைக் கூறி உயிர்கட்கு நல்லறமும், நற்செயலு மளிப்பது வேதாகமங்களாகும். அவற்றை அறிவுடையோர் வழிவழியாக ஓதி வருதலால் அவற்றைச் சொன்ன பேரறிவுடையோன் ஒருவன் இருத்தல் வேண்டும். நூலில் சொன்னதையறிந்து காண்பான் ஒரு சான்றும் வேண்டும். ஆகையால் உலகமுதல்வனாய் மெய்யறிவு நல்குபவன் சிவபெருமானாவன்.

15. வீடுபேற்றின்பம்

குடையிடத்துக் குடைநிழல் தோன்றும் தன்மையும், கண்ணாடியில் உருவம் தோன்றும் தன்மையும் போல, இவ்வுடம்பு கெட மற்றொரு உடம்பினைக் கொள்ளுமென்று கூறுவர். குடையுங் கண்ணாடியுமாய காரணம்கெட அவற்றின் நிழலாகிய காரியமும் கெட்டாற் போல, கந்தங்களைந்தும் கெடப் பொறிகாரண மாகக் காரியப்படும் அறிவும் அழியும். கனவிடை எழும் அறிவு மெய்யறிவாய்த் தோன்றல் போல வினைக்கிடாக எழுமறிவு வீடுபேறடையுமெனில் செயலற்ற

உறுப்புக்களையுடைய உடம்பு, முட்டை, குருட்டுப்பிறவி என்பவை உயிர்நீத்தால் பெறும் கதியாது? மேலும் வினைபற்றிய உணர்வு உடல்பற்றி நிற்குமேயன்றி வீடுபேற்றிற்கேது வாகாது.

கந்தங்களின் தொடர்ச்சி யறுதலே வீடுபேறெனின் அவை முற்றுமழிந்த விடத்து அறிவு அழியவே வீடுபேறடைவார் யார்? ஒருவருமில்லை யெனின் வீட்டின்பம் யார்க்குரியது? கந்தங்களில் தோன்றும் அறிவிற் கெனின், அவ்வறிவு நிலைக்குமெனின் கந்தங்களும் நிலைக்கும். அவையுண்டாகத் துக்கமுண்டாகும். ஆகையால் வீடுபேறு என்றுமில்லை.

எனவே அநாதியாய், எப்பொருட்கும் மேலாய், அனைத்துயிர்க்கும் அருள்வழங்கும் இறைவன் உயிர்கள் செய்யும் புண்ணிய பாவங்களுக் கேற்பக் குரு மூர்த்தியாய் எழுந்தருளி, மலங்கள் கெட மன முதலாகிய உட்கரணங்களையும் பொறி முதலாகிய புறக்கரணங்களையும் கொடுத்து நால்வகை வழிபாட்டையும் அருளி பிறவிக் கடலில் வீழாது ஒழியாத வீட்டின்பத்தினைக் கொடுப்பன். இதுவே சைவ சித்தாந்திகள் குறிப்பிடும் முறையாகும். இதனைப் பின்பற்றி வீட்டின்பத்தை அடைதல் சிறந்த வழியாகும்.

பௌத்தம் - சைவசித்தாந்தம் ஒப்பீடு

பௌத்தம்

பௌத்தத்தில் நான்கு வகைகளுக்கும் இவ்வொப்பீடு பொருந்தும்.

பௌத்தம்	சைவசித்தாந்தம்
1. அளவை: காண்டல், கருதல் எனும் இரு அளவைகளையே கொள்வர். வினை உண்டு. ஆனால் அது தானாக உயிரைச் சென்றடையும்	இவ்விரண்டுடன் உரையையும் கொள்வர். இறைவன் கூட்டவே வினை உயிரைக் கூடும்.
2. இறை இறை இல்லை. எனினும் புத்தரைக் கடவுளாகக் கொள்வர்.	இறை உண்டு. அது உயிரினங்களுள் ஒன்றானதன்று. அவற்றினும் மேம்பட்டது.
3. உயிர் உயிர் என்பதொன்றில்லை (சௌத்திராந்திகர் கருத்து)	உயிர் என்பதொன்றுண்டு.

4. தளை வினை உண்டு. ஆனால் அது தானாக உயிரைச் சென்றடையும்	இறைவன் கூட்டவே வினை உயிரைக் கூடும்.
5. பொருள்கள் கணந்தோறும் மாறுமேல் குற்றம் செய்தவன் வேறு; தண்டனை பெறுபவன் வேறு என்றாகும். ஆனால் அவ்விடத்து முற்றிலும் பொருள் மாறுபடுவ தில்லை. குற்றம் செய்வதனுக்கும் தண்டனை பெறுபவனுக்கும் இடையே தண்டனை பெறுவதற்குரிய தொடர்பு உண்டென்பர்.	பொருள்கள் பலவும் ஒருகால எல்லையில் தோன்றி ஒருகால எல்லையில் நிலைபெற்று, ஒரு கால எல்லையில் அழிவதன்றிக் கணந்தோறும் அழிதல் என்பது இல்லை என்பர்.
ஒற்றுமை	
பேரின்ப நிலையை உடல் அழிந்தபின்பெற வேண்டு மென்பதில்லை. கௌதமர் தம் முப்பத்தைந்தாவது வயதிலேயே இந்நிலையைப் பெற்றார் என்பர்.	இந்நிலையைச் சீவன் முத்திநிலை என்பர்

புத்தர்கள் தமக்குள் உயிர் உண்டா இல்லையா என்பதிலும், நிர்வாணம் என்பது சூனியமா, பேரின்ப நிலையா என்பதிலும் கருத்து வேற்றுமை கொள்வது போலச் சைவசித்தாந்திகள் கொள்வதில்லை. இவர்கள் கொள்கை மிகத் தெளிவானது.

3. யோகாசாரன் மதம் முன்னுரை

	வகை	நால்வகை பௌத்த மதத்தில் ஒன்று. மகாயானப் பிரிவைச் சார்ந்தது.
1.	பெயர்க்காரணம்	பௌத்த மதத்தில் ஆசிரியர் கூறுவதற்கு உடன்படுதலை ஆசாரம் என்பர். மேன்மேலும் கேள்வி கேட்டலை யோகம் என்பர். இவ்விதம் ஆசிரியன் கூறியதற்கு உடன்பட்டு மேலும் வினவியதால் இம்மதத்தினர் யோகாசாரர் எனப்பட்டனர்.
2.	குறிக்கோள்	யோக நெறியில் நின்று புத்தனை வழிபடுவது
3.	உத்தேச காலம்	நான்காம் நூற்றாண்டு
4.	தோற்றுவித்தவர்	ஆசங்காவா, வசுபந்துவா
5.	இம்மதநூல்	சாத்திரம்
6.	புதுப்பிடகங்கள்	சூத்திரம், சாத்திரம், தருக்கம்
7.	கொள்கைகள்	அறிவே உள்பொருள். அதுவே நிலையானது. அதுவே புறத்தே காணும் பொருள்களாய்த் தோன்றுகிறது.
8.	பகரும் ஞானம்	ஞானம், சாகாரம், நிராகாரம் என்று இருவகைப்படும். வட்டம், சதுரம், கருப்பு, சிவப்பு முதலிய வடிவிற்றாய் அகத்தே தோன்றும். ஞானம் - சாகார ஞானம். பந்தம் நீங்கிய வழி அங்ஙனம் வேறுபாடின்றித் தொடர்ச்சியாய் எழுவது நிராகாரம். இத்தன்மையாகிய ஞானமே அன்றிப் பொருளென வேறில்லை.
9.	திருஞான சம்பந்தர் வாக்கு	தர்க்க சாத்திரத்தவர் சொல் 1-62-10 சடங்கொண்ட சாத்திரத்தர் சாக்கியர் 1-118-10
10.	கடவுள்	புத்தர்
11.	வீடுபேறு	உலகனைத்துக்கும் மூல நிலைக்களனாக விளங்கும் மேலான நிலை. தம் முயற்சியே தமக்குதவி எனக் கருதி முயல வேண்டுமென நினைப்பர்

வளத்தம் 3.(அ) யோகாசாரன் மதம்

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரியவிருத்தம்

செய்யுள் - 134

போதமே பொருளாய்த் தோன்றும்
பொருளதா யெழலாற் போதம்
வாதனை யதனாற் கூடி
வருதலால் வடிவி லாமை
ஆதலாற் கனவே போலும்
சகமுள தறிவே யாமென்
றோதினா னோதா னாய
உணர்வினால் யோகா சாரன்.

பதவுரை

போதமே பொருள் ஆய் தோன்றும் பொருளதாய் எழலால் போதம் வாதனை அதனால் கூடி வருதலால் வடிவு இலாமை ஆதலால் கனவே போலும் சகம்	அறிவே இந்திரியங்களுமாய் தோன்றப்பட்ட உருக்களுமாய் வருதலானும், அவ்வறிவு இந்திரிய வாதனையினாலே கூடி வருதலானும் அவ்வறிவு அரூபம் ஆதலானும் அநித்திய ரூபம் ஆகிய பிரபஞ்சம் சொப்பனம் போலும்,
உளது அறிவே ஆம் என்று ஒதினான் ஒதான் ஆய உணர்வினால் யோகாசாரன்	யோகாசாரன் சாத்திரத்தை உணராத அறிவினாலே சௌத்திராந்திகனின் வேறுபட்டு இந்திரிய வாதனையால் அறிவு உண்டாம் என்றும், பிரபஞ்சம் கனவே போலும் என்றும், அறிவே உள்ளது என்றும் கூறினான் என்றவாறு.

விளக்கவுரை

'அறிவே உள்ள பொருள். அவ்வறிவே இந்திரியங்களுமாய், காணப்படும் வடிவங்களுமாய் வரும். அவ்வறிவு இந்திரிய வாதனையினாலே கூடிவரும். அஃது அருவமானது. அநித்தியமான பிரபஞ்சம் சொப்பனம் போன்றது' என்பது யோகாசாரன் கொள்கையாம்.

இச்செய்யுள் யோகாசாரன் மதம் கூறிற்று. (1)

மூன்றாவது – யோகாசாரன் மதம் முற்றிற்று.

பாயிரம் உள்படத் திருவிருத்தம் – 134.

யோகாசாரன் மதத்தொகுப்பு

தோற்றம்

பௌத்த மதத்தில் ஆசிரியன் கூறுவதற்கு உடன்படுதலை ஆசாரம் என்பர். மேன்மேலும் கேள்வி கேட்டலை யோகம் என்பர். இவ்விதம் ஆசிரியன் கூறியதற்கு உடன்பட்டு மேலும் வினவியதால் இம்மதத்தார் யோகாசாரர்[1] எனப் பெயர் பெற்றனர். யோக நெறியில் நின்று புத்தனை வழிபடுவது இவர்கள் குறிக்கோளாகும். உள்ளத்தின் விரிவே இவ்வுலகமாகும். உள்ளத்துத் தோன்றும் உணர்ச்சியே பல்வேறு பொருள்களாகத் தோன்றுகின்றன. இம்மதம் மகாயானப் பிரிவைச் சார்ந்தது. கி.பி. நான்காம் நூற்றாண்டில் அசங்காவாலும், வசுபந்துவாலும் வரையறை செய்யப் பெற்றது.

ஞானசம்பந்தர் காலத்து யோகாசார பௌத்தர்கள் தழைத்திருந்தனர். இவர்கள் தம்முடைய கருத்துக்களை நிலைநிறுத்தப் புதுப்பிடகங்களை அமைத்துக் கொண்டனர். அவற்றைச் சூத்திரம், சாத்திரம், தருக்கம் என்றழைத்தனர். இதனை ஞானசம்பந்தர் தமது தேவாரத்து,

'தர்க்க சாத்திரத்தவர் சொல்'[2]

'சடங் கொண்ட சாத்திரத்தார் சாக்கியர்'[3]

என்று குறிப்பிடுகிறார். பௌத்தமதத்தில் யோகாசாரர்களுக்குரிய நூல்களைச் சாத்திரம் என்றழைக்கும் மரபுண்டு.

கொள்கைகள்

இவர்களது கொள்கை சிவஞானசித்தியார் பரபக்கத்தில் ஒரு பாடலில் எடுத்துரைக்கப்படுகிறது. இவர்கள் அறிவே உள்பொருள்; அதுவே புறத்தே காணும் பொருள்களாய்த் தோன்றுகிறது என்பர். மேலும் அவ்வறிவு பொறிகளினுணர்ச்சியாற் கூடிவருதலானும், அருவ மாதலானும், வடிவொடு தோன்றும் புறவுலகம் கனவு போன்றது ஆதலானும் அறிவே நிலையானதாகும் என்பர்.

இனி யோகாசாரராவர்:- அங்ஙனம் ஆசிரியன் உணர்த்தியவழிப் புறப்பொருள் பாழென்பதனை உடம்பட்டு ஞானமும் அவ்வாறு சூனியமாயின் வழங்கற்பாடு கூடாதன்றோ! என வினாயினார்க்கு. நன்றே வினாயினீர்; ஞானமாத்திரம் உள்ளது அந்த ஞானம் சாகாரம் நிராகாரம் என்று இருவகைப்படும். அவற்றுள் வட்டம், சிவப்பு முதலிய வடிவிற்றாய் அகத்தே தோன்றும் ஞானம் சாகாரமெனவும், பந்தம்

---

1. சிவஞானபோத மாபாடியம், ப. 10.
2. முதல் திருமுறை, பதிகம் 62, பாடல் 10.
3. முதல் திருமுறை, பதிகம் 118, பாடல் 10.

நீங்கியவழி அங்ஙனம் வேறுபாடு இன்றித் தொடர்ச்சியாய் எழுவதாகிய ஞானம் நிராகாரம் எனவுங் கூறப்படும். இத்தன்மைத்தாகிய ஞானமே அன்றிப் பொருளென வேறில்லை. கனவின்கட் புறப்பொருளை அவாவாது கேவல ஞானத்தானே வழங்கக் காண்டலான் நனவின் கண் வழங்குவதும் அவ்வாறேயாம். அவ்வுணர்வு அகத்தின் நிகழ்வதேயாயினும் அநாபி வாசனை வயத்தாற் புறத்தே காணப்படுவது போலத்தோன்றா நின்றதெனக் கொள்க என்று ஆசிரியனுணர்த்தினான். அங்ஙனம் உணர்த்தப்பட்டோர் ஆசிரியன் மொழிந்ததனை உடன்பட்டு அதற்கு மேல் வினாயினாராகலின் யோகாசாரரென்றாயினார் என்பது.

வௌத்தம் 3.(ஆ) யோகாசாரன் மதமறுதலை

செய்யுள் - 135

போதமுந் தவிர வேறோர்
வாதனை புகன்றாய் போதம்
வாதனை யிரண்டுண் டென்னாய்
போதவா தனையு மென்னிற்
காதலாற் பொருளி னோடு
கலந்தபி னெழுங்க ருத்தாம்
வாதனை கனவு கண்ட
பொருளின்மேல் வருங்க ருத்தே.

பதவுரை

போதமும் தவிர வேறு ஓர் வாதனை புகன்றாய்	யோகாசார! நீ அறிவொழிய வேறொரு வாதனை உண்டு என்று சொன்னாய்; அப்படியாயின்,
போதம் வாதனை இரண்டு உண்டு என்னாய்	போதம் என்றும் வாதனை என்றும் இரண்டுண்டு என்று கூறாய்,
போதம் வாதனையும் என்னில்	வாதனை தானும் அறிவே என்று கூறின்,
காதலால் பொருளினோடு கலந்தபின் எழும் கருத்து ஆம் வாதனை	அறிவு சத்தாதி விடயத்திலே கலக்கவேண்டும் என்னும் இராகத்தால் கலக்க அக்கலப்பிலே பலகால் கருத்தைச் செலுத்துதலே வாதனை; ஆகையால், வாதனை அறிவன்று,
கனவு கண்ட பொருளின்மேல் வரும் கருத்தே	கனவாவது நனவிற் கண்ட பொருளின்மேல் கருத்துச் செலுத்துவது ஆதலால் பிரபஞ்சம் கனவும் அன்று; அதனால், நீ கூறியது மித்தையே ஆம் என்றவாறு.

விளக்கவுரை

யோகசாரனே! நீ அறிவு ஒன்றும், வாதனை ஒன்றுமாக இரண்டு உண்டு என்று கூறினாயல்லை, அறிவே ஒன்றே நிலையுள்ளது என்றாய். வாதனை என்பதும் அறிவே என்னில், அறிவு, விருப்பத்தோடு சத்தம் முதலிய விடயங்களிலே கலக்கவேண்டும் எனக் கருதிக் கலக்க, அக்கலப்பிலே பலகாலும் கருத்தைச் செலுத்துதலே வாதனையாம். ஆகலின், வாதனை என்பது அறிவன்று. மற்றும், கனவானது நனவிற் கண்ட பொருள்களின்மேல் கருத்தைச் செலுத்துவதே. நனவைக்

கனவென்னில், அந்த நனவுக்கும் வேறாய் நனவு ஒன்று உண்டு என்பது பெறப்படும் படவே, அறிவுக்கு வேறாகப் புறவுலகமும் உண்டு எனப்படும்; அதுவே பிரபஞ்சமாம். ஆதலால், பிரபஞ்சம் கனவன்று. நீ கூறியதே பொய் ஆம்.

மித்தை - பொய். (1)

செய்யுள் - 136

அறிவதே பொருள தாயின்
அகஞ்சட மென்ன வேண்டும்
பிறிபொரு ளாகும் பேதித்
திதம்பிர பஞ்ச மென்னில்
உறுபொரு ளுருவந் தோய்ந்தால்
உணர்வுமவ் வுருவாய் நிற்கும்
செறிபொரு ளதுவாய் நிற்கும்
தெளிபளிங் கதுவே போல.

பதவுரை

அறிவு அதே பொருளது ஆயின்	யோகாசார! நீ கூறிய அறிவு தானே பிரபஞ்சரூபம் என்று கூறின்,
அகம் சடம் என்ன வேண்டும்	நான் உடம்பு என்று சொல்லவேண்டும் சடங்கள்,
பிறி பொருள் ஆகும்	அறிவும் உருவும் வேறுபாட்டையுடையன,
பேதித்து இதம் பிரபஞ்சம் என்னில்	அறிவும் உருவும் வேறுபாட்டையுடைத்தாம் என்னில் உருவை நீங்கி நின்று அறிவுதானே நான் பொருள் என்று கூறும் பகுதியாம்,
உறு பொருள் உருவம் தோய்ந்தால் உணர்வும் அவ்வுருவாய் நிற்கும்	அறிவு உருவத்தோடு கூடினால் அவ்வறிவு உருவந்தானாய் நிற்கும்; அஃது என்போல என்னில்,
செறிபொருள் அது ஆய் நிற்கும் தெளி பளிங்கு அதுவே போல	அடுத்த வண்ணத்தோடு கூடிய பளிங்கு அவ்வண்ணம் தானாகத் தோன்றுமாறுபோல அறிவு உருவத்தோடு கூடினால் உருவம் தானாக நிற்கும் காண் என்றவாறு.

விளக்கவுரை

நீ கூறிய அறிவே பிரபஞ்சம் என்னில், நான் என்பது உடம்பு என்று சொல்ல வேண்டும். உடம்பின் வேறாய் அறிவின்று என்னில், உடம்பே உள்ள பொருளாம்;

அறிவு என்பது இல்லை என்ன வேண்டும். உருவப் பொருளின் வேறாய் அறிவு உண்டு, அஃது அருவானது என்பது உன் கொள்கை. அறிவு தான் பற்றிய பொருள் உருவமுடையதாயின் தானும் அவ்வுருமயமாய் நிற்பதாம். பளிங்கானது தன்னை அடுத்த வன்னத்தைக்காட்டி அவ்வன்னமே தானாய்த் தோன்றி நிற்பது போல்வது அது என்க. எனவே, உண்மையை ஆராயுமிடத்து அறிவு வேறு, அறியப்படு பொருள் வேறு ஆம் என உணர்க.

இச்செய்யுள் இரண்டும் யோகாசாரன் மதத்தை மறுத்துக் கூறியதாம். (2)

மூன்றாவது யோகாசாரன் மதமறுதலை முற்றிற்று.

பாயிரம் உள்படத் திருவிருத்தம் – 136.

யோகாசார மறுப்புத் தொகுப்பு

இவர் கொள்கை சிவஞான சித்தியார் பரபக்கத்தில் இரண்டு பாடல்களில் மறுத்துரைக்கப்படுகிறது.

1. அறிவேயன்றி வேறொரு வாதனையும் உண்டென்பர். அவ்விதமாயின் பொருள் இரண்டாகும். வாதனையாவது அறிவு விருப்பத்தோடு ஒரு பொருளைப்பற்ற, அப்பற்றுக் காரணமாய் வரும் கருத்தாதலின் புறப் பொருளின்றி வாதனையில்லையாகும். எனவே வாதனை அறிவாகாது. கனவானது நனவிற் கண்ட பொருளில் கருத்தைச் செலுத்துவதால் இவ்வுலகம் கனவுமன்று.

2. அறிவே காணப்படும் பொருளென்றால் நானென்பதை உடம்பென்று சொல்லுதல் வேண்டும். அறிவும், உருவும் வேறுபாடுடையன. உருவை நீக்கிய அறிவே பொருளாகுமெனில் அவ்வறிவு உருவத்தோடு கூடினால் உருவமாய் நிற்கும். அஃதென்போலவெனில் பளிங்கு தன்னைச் சார்ந்த உருவின் தன்மையைப் பெறுவது போலாகும். எனவே அறிவும், அறியும் பொருளும் வேறாகும்.

4. மாத்தியமிகன் மதம் முன்னுரை

	வகை	நால்வகை பௌத்த மதத்தில் ஒன்று. மகாயானப் பிரிவைச் சார்ந்தது.
1.	பெயர்க்காரணம்	புத்தர் உலகத்துப் பொருள்கள் உள்ளவாயின் அழியா. இலவாயின் தோன்றா. உள்ளதும் இல்லதுமாயின் முரணும். இரண்டுமல்லவெனின் உணர்ச்சி கூடாது. எனவே இப்பகுதிகளின்மையால் எல்லாப் பொருளும் மொழிந்தனவற்றைப் பொருளெனக் கொண்டமையால் - தலை மாணாக்கர் அதற்குமேல் வினா நிகழ்த்தாதலால் - கடை மாணாக்கர் என்ற இரண்டு தன்மைகளையும் ஒருங்கு பெற்று நின்றமையின் மத்திம மாணாக்கராய் மாத்தியமிகர் எனப்பெயர் பெற்றனர்.
2.	உத்தேச காலம்	இரண்டாம் நூற்றாண்டு
3.	தோற்றுவித்தவர்கள்	நாகார்ச்சுனரும், ஆரிய தேவரும்
4.	கொள்கைகள்	பொறிகளே பொருளாய்த் தோன்றுகின்றன. பொறிகள் கெட்டால் பொருளுமில்லை. பொருளில்லாமையால் பொருளைக் கூடி நின்றறியும் அறிவுமில்லை. எனவே எல்லாம் சூனிய மென்பர்.
5.	திருஞானசம்பந்தர் வாக்கு	தேரருண்டிலை யென்றே நின்றே 1-97-10 .....பொருளுரை மருவிய பொருள்களுமில திணமெனுமவ ரொடு 1-21-10
6.	கடவுள்	புத்தர்.
7.	வீடுபேறு	உலகனைத்துக்கும் மூல நிலைக்களனாக விளங்கும் மேலான நிலை. தம் முயற்சியே தமக்குதவி எனக் கருதி முயல வேண்டுமென நினைப்பர்

வளத்தம் 4. (அ) மாத்தியமிகன் மதம்

செய்யுள் - 137

அவயவம் பொருளாய்த் தோன்றும்
அவயவ மொழிந்தாற் பின்னை
இவைபொரு ளென்ன வேறொன்
றிலாமையாற் பொருள்க ளின்றாம்
அவைபொரு ளிலாமை யாலே
அறிவுமின் றாகு மென்று
நவைதரு மொழியி னாலே
நவிலுமாத் தியமி கன்றானே.

பதவுரை

அவயவம் பொருள் ஆய் தோன்றும்	இந்திரியம் பத்தும் பொருளாய்த் தோன்றும்,
அவயவம் ஒழிந்தால் பின்னை இவை பொருள் என்ன வேறு ஒன்று இலாமையால் பொருள்கள் இன்றாம்	இந்திரியங்கள் கெட்டால் பொருள் இவையென்று அறிதற்கு இலாமையால் பொருளும் இல்லையாம்,
அவை பொருள் இலாமையாலே அறிவும் இன்றாகும்	அந்தப் பொருள்கள் இலாமையாலே பொருளைக் கூடி நின்று அறியும் அறிவும் இல்லையாம்,
என்று நவை தரு மொழியினாலே நவிலும் மாத்தியமிகன் தான் ஏ	என்று இப்படிக் குற்றத்தைத் தரும் சொல்லாலே மாத்தியமிகன் சொல்லுவான் என்றவாறு.

விளக்கவுரை

பொருள் எனத் தோன்றுவன அதன் அவயவங்களே; அவை இந்திரியம் பத்தாம். இந்திரியங்கள் கெட்டால் பொருள் இவை என அறிதற்கில்லை; ஆகலின், பொருளும் இல்லையாம். பொருள்கள் இல்லையாகவே அப்பொருள்களைக் கூடிநின்று அறியும் அறிவும் இல்லையாம். இது மாத்தியமிகன் கொள்கை.

பொருள் - சரீரம். அவயவி இல்லை என்பது கருத்து.

இச்செய்யுள் மாத்தியமிகன் மதம் கூறிற்று. (1)

நான்காவது மாத்தியமிகன் மதம் முற்றிற்று.

பாயிரம் உள்படத் திருவிருத்தம் – 137.

மாத்தியமிகன் மதத் தொகுப்பு

தோற்றம்

புத்தர் உலகத்துப் பொருள்கள் உள்ளனவாயின் அழியா, இலவாயின் தோன்றா, உள்ளதும் இல்லதுமாயின் முரணும், இரண்டுமல்ல வெனின் உணர்ச்சி கூடாது. எனவே இப்பகுதிகளின்மையால் எல்லாப் பொருளும் சூனியமே என்பர். இவ்விதம் ஆசிரியர் மொழிந்தவற்றைப் பொருளெனக் கொண்டதால் தலைமாணாக்கர், அதற்கு மேல் வினா நிகழ்த்தாததால் கடை மாணாக்கர், என்ற இரண்டு தன்மைகளையும் ஒருங்கு பெற்று நின்றமையின் மத்திம மாணாக்கராய் மாத்தியமிகர் எனப் பெயர் பெற்றனர்[1].

இம்மதம் மகாயானப் பிரிவைச்சார்ந்தது. கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் நாகார்ச்சுனராலும் ஆரியதேவராலும் நிறுவப்பட்டது. இவர்கள் கொள்கையினைச் சம்பந்தர் தமது தேவாரத்து,

'தேரருண்டிலை யென்றே நின்றே'[2]

என்றும்,

'..... பொருளுரை மருவிய பொருள்களுமில
திணமெனுமவ ரொடு'[3]

என்றும் குறிப்பிடுகிறார்.

கொள்கைகள்

இம்மதத்தவர் கொள்கையை ஒருபாடலில் சிவஞான சித்தியார் பரபக்கம் எடுத்தியம்புகின்றது. பொறிகளே பொருளாய்த் தோன்றுகின்றன. பொறிகள் கெட்டாற் பின் பொருளென்றறிதற்கு ஒன்றுமில்லையாற் பொருளுமில்லையாம். அந்தப் பொருளில்லாததால் பொருள்களைக்கூடி நின்றறியும் அறிவு மில்லையாகும். எனவே எல்லாம் சூனிய மென்பர்.

உயர் வழிக்கும் இழிவழிக்கும் (மகாயான ஹீனயான) உள்ள வேற்றுமை

மேற்காட்டிய நால்வகை நெறிகளுள் முன்னைய இரண்டும் இழிவழியையும் பின்னைய இரண்டும் உயர்வழியையும் சார்ந்தன என்று முன்னரும் கூறப்பட்டது. இவ்விரண்டிற்கும் இடையேயுள்ள வேற்றுமைகளும் ஈண்டு எண்ணத்தகும்.

---

1. சிவஞானபோதப் பேருரை, பக். 9.
2. முதல் திருமுறை, பதிகம் 97, பாடல் 10.
3. முதல் திருமுறை, பதிகம் 21, பாடல் 10.

உயர்வழி (மகாயானம்)	இழிவழி (ஹீனயாணம்)
1. உயர்வழியினர் அறிவென்பதன்றி வேறொன்றும் இல்லையென்பர். ஆதலின் இவர்கள் கருத்துவாதிகள் எனப்பட்டனர்.	1. புறத்தே காணப்படும் பொருளும் உண்டென்பர். ஆதலின் இவர்கள் மெய்ம்மைவாதிகள் எனப் பட்டனர்.
2. இவர்கள் வீடுபேறடைய முயல்வது உலகுயிர்களின் துன்ப நீக்கத்திற்கே என்பர். தாம் செய்த புண்ணியத் தைப் பிற உயிர்களுக்கும் பகிர்ந்தளித்து அவர்களையும் உய்யக் கொள்ள வேண்டுமென்பது இவர்க்குக் கருத்தாகும்.	2. தம் முயற்சியே தமக்கு உதவி எனக் கருதித் தாமும் வீடுபேறடைய முயல வேண்டும் என்பர்.
3. புத்தரைக் கடவுளாகக் கொள்வர்.	3. புத்தரைக் கடவுளாகக் கொள்ளார்.
4. இம்மதத்தினர் வீடுபேறு என்பது இவ்வுலகனைத்துக்கும் மூல நிலைக்களனாக விளங்கும் ஒரு மேலான நிலை என்பர்.	4. வீடுபேறு என்பது (நிர்வாணம்) சூனியமான நிலை. அதாவது விளக்கை அணைத்து விட்டால் ஏற்படும் நிலைபோல்வது என்பர்.
5. யோகாசாரம், மாத்தியமிகம் என்ற இரண்டு பிரிவுகளும் இவ்வழியைச் சார்ந்தனவாகும்.	5. சௌத்திராந்திகமும் வைபாடிக-மும் இவ்வழியைச் சார்ந்தனவாகும்.

வளத்தம் 4. (ஆ) மாத்தியமிகன் மதமறுதலை

செய்யுள் - 138

கடத்தினி லவய வங்கள்
படத்தினிற் புகாமற் காத்தும்
படத்தினி லவய வங்கள்
கடத்தினிற் புகாமற் கொண்டும்
இடத்தினி னிற்கு மாகும்
அவயவி யிரண்டுங் கூடி
உடைத்தொரு பொருளுண் டாகப்
பொருளுமுண் டுணர்வு முண்டே.

பதவுரை

கடத்தினில் அவயவங்கள் படத்தினில் புகாமல் காத்தும் படத்தினில்அவயவங்கள் கடத்தினில் புகாமல் கொண்டும் இடத்தினில் நிற்கும் ஆகும் அவயவி	மாத்தியமிக! நீ அவயவமே பொருளாவது அவயவி இல்லை என்று கூறினாய்; கடாதிகளின் அவயவங்கள் படாதிகளில் செல்லாமை நீக்கிக்கொண்டும், படாதிகளின் அவயவங்கள் கடாதியில் செல்லாமை நீக்கிக் கொண்டும் அவ்வவ் அவயவங்களிலே அவ்வவ் அவயவி நிற்கும் ஆகையால்,
இரண்டும் கூடி உடைத்து ஒரு பொருள்	அவயவமும் அவயவியும் கூடியே ஒரு பொருளாக உண்டாவது,
உண்டாக பொருளும் உண்டு உணர்வும் உண்டு ஏ	அப்படி உண்டாகவே அது போலப் பொருளாகிய சரீரமும் உண்டு உணர்வும் உண்டு என்று அறிவாயாக என்றவாறு.

விளக்கவுரை

மாத்தியமிகனே! நீ அவயவமே பொருள், அவயவி இன்று என்றாய். குடம் முதலியவற்றின் அவயவம் ஆடை முதலியவற்றில் செல்லாது; ஆடை முதலியவற்றின் அவயவம் குடம் முதலியவற்றினும் செல்லாது. ஆகலின், அவ்வவ அவயவங்களில் அவ்வவற்றின் அவயவியே உண்டு. அவயவமும் அவயவியும் கூடியே பொருளாவது. அதுபோல, பொருளாகிய உடம்பும் உண்டு; உணர்வும் உண்டு. மண் அவயவி, குடம் முதலியன அவயவம்; நூல் அவயவி, ஆடை அவயவம். உணர்வு அவயவியாகிய ஆன்மா; இந்திரியம் அவயவம். அவயவம் - உடலின் உறுப்பு.

கடாதிகட்கு அவயவி மண். படாதிகட்கு அவயவி நூல். பொருள் - அவயவம்; மூலப்பொருள். உணர்வு - அவயவி ஆகிய ஆன்மா. அவயவி - உறுப்புள்ளது; உடல். (1)

செய்யுள் - 139

கருவியு மொளியும் வேறு
கருதிடுங் கருத்தும் நிற்கப்
பொருள்புண ராமை யாலே
போதம்வந் தெழுவ தின்றாம்
மருவிடும் பொருளுண் டாக
வந்தெழும் புத்தி யானாற்
பொருளுள தாகு மாகப்
போதமு முள்ள தாமே.

பதவுரை

கருவியும் ஒளியும் வேறு கருதிடும் கருத்து நிற்கப் பொருள் புணராமையாலே போதம் வந்து எழுவது இன்றாம்	இந்திரியங்களும் இந்திரிய விடமாகிய சத்தாதியும் அதனால் காணப்படும் பொருள்களை வேறுபட ஆராயும் அந்தக் கரணங்களும் உண்டாய் நிற்கவும் ஆன்மா வந்து கூடாதது கொண்டு ஒரு பொருளையும் துணிந்து அறியும் அறிவு இல்லையாம்,
மருவிடும் பொருள் உண்டாக வந்து எழும் புத்தி ஆனால் பொருள் உளதாகும்	இந்திரிய விடயங்களோடும் அந்தக் கரணங்களோடும் கூடி நின்று அறியும் ஆன்மா உண்டாக அறிவும் உண்டாம் ஆகையால் பொருள் உளது ஆகும்,
ஆக போதமும் உள்ளது ஆம் ஏ	ஆன்மா உண்டாகும் அஃது உண்டாகவே அறிவும் உள்ளதாம் என்றவாறு.

விளக்கவுரை

பொறிகள் ஐந்தும், புலன்கள் ஐந்தும், அவைகளால் அறியப்படும் பொருள்களை வேறுபட ஆராயும் அந்தக் கரணங்களும் உளவாகவும், உயிர் வந்து கூடாதவிடத்து ஒரு பொருளையும் துணிந்து அறியும் அறிவு உண்டாகாது. புலன்களோடும் அந்தக் கரணங்களோடும் கூடிநின்று அறியும் ஆன்மா உண்டாகவே அறிவும் உண்டாகும். ஆகையால், பொருள் உளதாம். பொருளாகிய ஆன்மா உண்டாகவே அறிவும் உள்ளதாம் என்று அறிவாயாக.

இவ்விடத்துப் பொருள் என்றது ஆன்மாவை.

இச்செய்யுள் இரண்டும் மாத்தியமிகன் மதத்தை மறுத்துக் கூறிற்று. (2)

நான்காவது மாத்தியமிகன் மதமறுதலை முற்றிற்று.

பாயிரம் உள்படத் திருவிருத்தம் – 139.

மாத்தியமிகன் மறுப்புத் தொகுப்பு

இம்மதக்கொள்கையைச் சிவஞான சித்தியார் பரபக்கம் இரண்டு பாடல்களால் மறுத்துரைக்கிறது.

உறுப்புக்களே பொருளென்றும், உறுப்புக்களை உடைய உயிர் இல்லையென்றும் கூறுவர். ஆடை, குடம் என்ற இரண்டனுள் ஆடையிலே குடத்தினுறுப்புக்களில்லை. குடத்திலே ஆடையினுறுப்புக்களில்லை. ஒரு தொகுதியின் உறுப்பு மற்றொரு தொகுதியில் காணப்படாது. உறுப்புக்களும் உறுப்புக்களை யுடையதும் கூடியே ஒரு பொருளாகும். அதுபோலப் பொருளாகிய உடம்பும், உணர்வும் கூடவே அறிவு தோன்றும்.

கருவியாகிய பொறிகளும், அவற்றை ஆராயும் மனமும் இருப்பினும் உயிர் கூடாதவிடத்துப் பொருளையறியும் அறிவில்லையாகும். உயிர் உள்ள போது அறிவு செயல்படும் ஆதலால் அறிவும் அதனையுடைய உயிரும் உண்டென்பர் சைவ சித்தாந்திகள்.

5. வைபாடிகன் மதம் முன்னுரை

	வகை	புத்த மதத்தின் நான்கு பிரிவுகளின் ஹீனயானப் பிரிவைச் சார்ந்தது.
1.	பெயர்க்காரணம்	புத்தரின் தத்துவ விளக்கங்களைக் கொண்டிருக்கும் அபிதம்ம பிடகத்தை அடிப்படையாகக் கொண்டு அதன் பேருரையைக் கடைப்பிடித்தமையால் வைபாடிகர் எனப்பட்டனர்
2.	மேல் எல்லை	பிடகத்தின் சூத்திரங்களுக்கு ஏனைய மக்களால் செய்யப்பட்ட உரையினையும் (விபாடை) மேல் எல்லையாகக் கொண்டவர்.
3.	உத்தேச காலம்	இரண்டாம் நூற்றாண்டு
4.	தோற்றுவித்தவர்கள்	தின்னாகரர், தருமகீர்த்தி
5.	கொள்கை	மஞ்சளும், சுண்ணாம்பும் கூடச் சிவப்பு நிற முண்டாதல் போல காணப்படும். புறப்பொருள்களும் அறிவும் கூடியதே இவ்வுலகம். இதனையறிதலே ஞானம். இஞ்ஞானத்தைத் தெளிந்திடுவதே வீடுபேறாகும். புத்தரைக் கடவுளாகக் கொள்ளார்.
6.	அழைக்கப்படும் பெயர்	தேரர்
7.	வேறுபெயர்	விபாடை - மாறு கோளுரை
8.	காட்சிப்பொருள்	புறப்பொருள்
9.	திருஞானசம்பந்தர்	"புத்தர்கள் தத்துவர் மொய்த்து" - தேவாரம்
7.	வீடுபேறு	சூனியநிலை. விளக்கை அணைத்து விட்ட நிலை போன்றது.

வளத்தம் 5 .(அ) வைபாடிகன் மதம்

செய்யுள் - 140

அரிசன நூறு கூட
வருணம்வந் தெழுந்தாற் போல
விரிசகம் பொருள்கண் ஞானம்
விரவிட மேவித் தோன்றும்
தெரிசன மிதுவே யென்று
தெளிந்திடுந் தேரர் வீடு
பரிவொடு அடைவீ ரென்று
பகரும்வை பாடி கன்றான்.

பதவுரை

அரிசனம் நூறு கூட வருணம் வந்து எழுந்தால் போல	மஞ்சளும் சுண்ணாம்பும்கூட ஓர் சிவப்புத் தோன்றுமாபோல,
விரி சகம் பொருள்கள் ஞானம் விரவிட மேவித் தோன்றும்	காணப்பட்ட பொருள்களும் இந்திரிய விடயமான அறிவும் கூடின போது பிரபஞ்சப் பொருள்கள் தோன்றும்,
தெரிசனம் இதுவே என்று தெளிந்திடும்	இதுவே ஞான தெரிசனம் என்று தேர்வீராக,
தேரர் வீடு பரிவொடும் அடைவீர் என்று பகரும் வைபாடிகன் தான்	அப்படித் தெளிந்தீராயின் புத்தர் வீடு தரும் இன்பத்தை அடைவீர் என்று பரிவோடும் சொல்லா நிற்பன் வைபாடிகன் என்றவாறு.

விளக்கவுரை

மஞ்சளும் சுண்ணாம்பும் கூட ஓர் சிவப்புத் தோன்றும். அதுபோல, காணப்படும் பொருள்களும் இந்திரிய விடயமான அறிவும் கூடிய போது பிரபஞ்சம் தோன்றும்; இதுவே ஞானதரிசனம் என்பது. அப்படித் தெளிந்தோருக்குப் புத்தபகவான் வீட்டினைத் தந்தருளுவர். இன்பத்தை அநுபவிக்கலாம். இதனைக் கூறுபவன் வைபாடிகன்.

இச்செய்யுள் வைபாடிகன் மதம் கூறிற்று. (1)

ஐந்தாவது வைபாடிகன் மதம் முற்றிற்று.

பாயிரம் உள்படத் திருவிருத்தம் – 140.

வளத்தம் 5. (ஆ) வைபாடிகன் மதமறுதலை

செய்யுள் – 141

பொருளது புறம்ப தாகும்
போதமந் தரம தாகும்
தெருளிடி னிரண்டுஞ் சென்று
சேர்ந்திடு மாற தின்றாம்
அருவுணர் வுருவ ஞேயம்
ஆதலி னாலுங் கூடா
உருவரு வுடைய வைபா
டிகற்கினி மாற்ற மின்றே.

பதவுரை

பொருள் அது புறம்பது ஆகும் போதம் அந்தரமது ஆகும் தெருளிடின் இரண்டும் சென்று சேர்ந்திடுமாறு அது இன்றாம் தெருளிடின்	அறியப்படும் பொருள் புறத்தது ஆகும், அறியும் அறிவு அகத்தது ஆகும்; ஆதலால் தெளிய அறியுமிடத்து இரண்டும் சென்று கூடும் தொழில் இல்லையாம்,
அரு உணர்வு உருவம் ஞேயம் ஆதலினாலும் கூடா	அன்றியும் ஞானமாகிய அறிவு அரூபம் ஆகையாலும் ஞேயமாகிய பொருள் உருவம் ஆகையாலும் கூடா,
உரு அரு உடைய வைபாடிகற்கு இனி மாற்றம் இன்றே	உருவும் அருவும் கூடும் என்ற வைபாடிகனுக்கு இனிச் சொல்லும் உத்தரம் இல்லையாம் என்றவாறு.

விளக்கவுரை

அறியப்படும் பொருள் புறத்தே உள்ளது, அறியும் அறிவு அகத்தே உள்ளது, இரண்டும் ஓர் இனம் உடையதன்று. அன்றியும், அறிவு அருவமானது, அது ஞானம் எனப்படும். அறியப்படும் பொருள் உருவமுடையது, அது ஞேயமாம். ஆதலால், இவை தம்முட்கூடா. மஞ்சளும் சுண்ணாம்பும் புறத்துப் பொருள்கள் ஆதலின் ஓர் இனத்தன; அவை தம்முள் இயைந்து ஒன்றாம். இதனை அறியின் வைபாடிகனுக்குச் சொல்ல வாயில்லை.

உணர்வுடையான் என்றது இழிவின் கண் வந்தது. பொருள் - பிரபஞ்சம், ஞேயமும் அது.

இச்செய்யுள் வைபாடிகன் மதத்தை மறுத்துக் கூறிற்று. *(1)*

இதுவரையில் புத்த சமயத்தைச் சார்ந்த நால்வகையினராகிய சௌத்திராந்திகன், யோகாசாரன், மாத்தியமிகன், வைபாடிகன் என்பவர் கொள்கைகளைக் கூறி, அவர் கொள்கையில் கொண்ட மாறுபாடுகளையும் உடன் சொல்லி மறுக்கப்பட்டன காண்க.

ஐந்தாவது – வைபாடிகன் மதமறுதலை முற்றிற்று.

பாயிரம் உள்படத் திருவிருத்தம் – 141.

வைபாடிக மறுப்புத் தொகுப்பு

இம்மதத்தார் கொள்கை சிவஞானசித்தியார் பரபக்கத்தில் ஒருபாடலால் மறுத்துரைக்கப்படுகிறது.

அஃதாவது அறியப்படும் பொருளோ புறத்ததாகும். அறியும் அறிவோ அகத்ததாகும். ஆதலால் இவை இரண்டும் தம்முள் கூடா. அன்றியும் அறிவு அருவமாதலாலும் பொருள் உருவமாதலாலும் அவ்வாற்றானும் கூடா என்று சைவ சித்தாந்தம் மறுத்துரைக்கிறது.

6. சமணம் முன்னுரை

	வகை	புறப்புறச் சமயங்களுள் ஒன்று. வேதாகமங்களை ஏற்றுக் கொள்ளாது.
1.	பெயர்க்காரணம்	துறவிகளே வீடுபேறு பெறுவர் என்று இம்மதம் கூறுவதால் துறவு என்று பொருள்படும் சமணம் என்ற பெயர் ஏற்பட்டது.
2.	தோற்றுவித்தவர்	முதல் தீர்த்தங்கரரான ரிஷபதேவர்
3.	காலம்	ஆரியர் இந்தியாவிற்கு வருவதற்கு முன்னர். 3ஆம் நூற்றாண்டு
4.	புதுப்பித்தவர்	இருபத்து நான்கு தீர்த்தங்கரரில் இறுதியாக வந்த மகாவீரர்
5.	வேறு பெயர்கள்	சைனம், ஆருகதம், அநேகாந்தவாதம், சியாத் வாதம், பரமாணு காரண வாதம்
6.	சமணைக் குறிப்பிடும் நூல்கள்	சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவகசிந்தாமணி, தேவாரம், நாலாயிரத் திவ்விய பிரபந்தம், பெரியபுராணம்
7.	கொள்கைகள் பரப்பப்பட்ட விதம்	சமண சமயத்தார் எந்த நாட்டில் வாழ்ந்தாலும் அந்தந்த நாட்டு மக்கள் பேசும் மொழியிலேயே தம் மதநூல்களை எழுதினர். அவ்வம்மொழியில் நீதிநூல்களையும் நிகண்டுகளையும் செய்தனர். உணவு, கல்வி, மருந்து, அடைக்கலம் என்னும் நான்கு கொடைகளுடன் கொல்லாமையும் பேரறமாகக் கொண்டிருந்தனர். உயர்வு தாழ்வின்றி எவ்வினத்தாரும் தமது மதத்தைப் பின்பற்றினால் அவர்களைச் சமணராக்கினர். சமண மதத்துறவிகள் ஊர் ஊராய்ச் சென்று தமது கொள்கைகளைப் பரப்பினர்.
8.	வளர்ச்சி பெற்ற நிலையில் பிரிந்த மூன்று வகைகள்	சுவேதாம்பர சமணம் - சுவேதாம்பரம் என்றால் வெண்ணிற ஆடை என்பது பொருள். எனவே இப்பிரிவினர் வெண்ணிற ஆடை அணிவர். உருவ வழிபாட்டினர்.

		திகம்பர சமணம் - திசைகளையே ஆடையாக உடையவர். எந்த ஆடையும் அணியமாட்டார்கள். உருவ வழிபாட்டினர். ஜைனர்(ஜி)ன் - வெற்றி / பொறிகளை அடக்கி வெற்றி பெற்றவர். சமணர், ஆருகதர் எனப்படுவர். ஸ்தானகவாசி சமணம் - உருவ வழிபாடு உடன்பாடன்று. சமண ஆகம நூல்களையே தீர்த்தங்கராகவும், அருகக் கடவுளாகவும் வணங்குவர்.
9.	பிங்கல நிகண்டு கூறும் கூறும் விதம்	சமணர் - சாவக ரருவர் சமணரமணர் சமணத் துறவிகள் - ஆசிவகர் தாமதரத்தவத்தோரே
10.	மும்மணிகள்	நற்காட்சி, நன்ஞானம், நல்லொழுக்கம் - ரத்தின திரயம் எனப்படும். மும்மணிகளும் வீடுபேற்றிற்கு இன்றியமையாதன.
11.	நல்லொழுக்கம்	5 விரதங்களாகப் பகுக்கப்படும் (துறவிகளுக்கு) 1. அகிம்சை 2. வாய்மை 3. களவு செய்யாமை 4. பிரமசரியம் 5. தவம். முதல் மூன்றுடன் கற்புடைமையும், பொருள் விரும்பாமையும் துறவிகள் அல்லாதவர்களுக்கு. துறவிகளுக்கு - அதியொழுக்கம். மற்றவர்களுக்கு - சிராவக ஒழுக்கம்
12.	தத்துவக் கொள்கைகள்	1. உயிர்கள் எண்ணிறந்தன. அநாதி, ஓரறிவு முதல் ஆறறிவு வரை பகுக்கப்பட்டுள்ளன. 2. மும்மணிகள் மூலம் வீடுபேறு அடைவர் 3. பூதங்கள் நான்கே. ஆகாயம் பூதமன்று. 4. நொடித்தல் ஆகிய சிறுகாலம் முதல் கற்பகாலம் வரை கால எல்லைகள் உண்டு. 5. ஆகாயம் இருவகைப்படும். இப்பிறப்பில் அ) லோகா காயம் - உலக ஆகாயம் இப்பிறப்பில் உயிர்கள் வாழுலகம். ஆ) அலோகாகாயம் - உலகடைந்த ஆகாயம். வீடுபேறுற்ற உயிர்கள் மேலே செல்லுதற்குரிய இடம். 6. நல்வினை, தீவினை என்ற வினைக் கொள்கை உண்டு.

		7. அருகனை அடைவது வீடாகும். 8. சமணம் கடவுள் பற்றிக் கூறாது வீடுபேறடைந்த உயிரையே கடவுளாகக் கொள்கிறது. அருகனும் வீடுபேறடைந்தவன்.
13.	ஐம்பூதங்கள்	திகம்பர சமணர்களும் சைவரைப்போல ஐந்தெழுத்து மந்திரம் ஒதுவர். இதனை ஐம்பதம் என்பர். அதாவது, அ, சி, ஆ, உ, சா என்பன. இவை முறையே அருகர், சித்தர், ஆசாரியர், உபாத்தியாயர், சாதுக்கள் என்ற ஐவகை பெரியவரைக் குறிக்கும். இவர்களை வணங்குவதே இம்மந்திரத்தின் பொருளாகும். திகம்பரத் துறவிகளுக்கு குரு முதன்முதலில் இம்மந்திரத்தை ஒதுவிப்பர். சீவகன் இம்மந்திரத்தை ஒதியே நாயைத் தேவனாக மாற்றினான். அரவு தீண்டிய பதுமையை உயிர்ப்பித்தனன் என்று சீவகசிந்தாமணி கூறுகிறது. எனவே சமணரின் உயிரினும் மேலான மந்திரம் இதுவாகும். இதனைச் சிலப்பதிகாரம் 'மெய்வகை உணர்ந்த விழுமியோர் குழீஇய ஐவகை நின்ற அருகத் தானத்து'' என்றுரைக்கிறது.
14.	மூவகை உயிர்	1. சித்தர் – விடுபட்ட உயிர்கள். இவர்களுள் தீர்த்தங்கரர் முதன்மையானவர். சாமானிய சித்தர்கள் அடுத்த நிலை பெறுவர். 2. முழுத்தன்மை அருகர் 3. சிரமணர் – இவர்கள் மூவகையினர் அ) ஆசாரியர், ஆ) உபாத்தியாயர், இ) சாதுக்கள்
15.	நால்வகை வணக்கம்	அருகர், சித்தர், தன்மம், சாது என்ற நால்வரையும் வணங்குதல் சமண சமய வழிபாடாகும். அருகர், சித்தர் – சமயத்தலைவர் அவர்தம் அறிவுரைகள் – தன்மம் அவற்றைப் பின்பற்றுவோர் – சாது
16.	சமணர்தம் பெயர்கள்	சமண், அமண், பிண்டியர், அருகர், குண்டர். இல்லறத்தார் – சாவகர்.
	வீடுபேறு	இல்லறத்தார்க்கன்றித் துறவறத்தார்க்கே வீடுபேறு.
17.	பிறசமயக் கோட்பாடு	சைவ, வைணவக் கோயில்களைக் காண்பதும், அக்கடவுளர்களைப் பற்றி பேசுவதும் பாவம் எனக் கருதி கண்டு முட்டு, கேட்டு முட்டு என்பர்.

6.அ நிகண்டவாதி சமணம் முன்னுரை

	வகை	புறப்புறச் சமயங்களின் ஒன்றான சமணத்தின் ஒரு பிரிவு.
1.	தோற்றுவித்தவர்	வர்த்தமான மகாவீரரால் 2500 ஆண்டுகளுக்கு முன் தோற்றுவிக்கப்பட்டது.
2.	வழங்கும் பெயர்	திகம்பர சமணர் என்றழைக்கப்படுவர்.
3.	பெயர்க்காரணம்	கண்டம் - உடை. நிகண்டம் - உடையின்மை. ஆடையற்ற சமணர்கள்
4.	திருஞானச்சம்பந்தர் பாடல்	உடையினை விட்டுளோரும் 2-86-10 வெற்றரை யுழல்பவர் 2-120-10
5.	வழிபட்ட கோயில்	நிக்கந்த கோட்டம்
6.	வழிபட்ட மரம்	அசோக மரம். நீராடமாட்டார். வயிறார உண்டு பாயுடுத்து, மயிற்பீலியினைக் கையில் பிடித்திருப்பர்.
7.	கொள்கைகள்	1. முடிவில்லா அறிவு, காட்சி, ஆற்றல், இன்பம், வயதின்மை, அழிவின்மை, பெயரின்மை, குடிவழியின்மை எனும் எண்குணங்களையும் இயற்கையாகப் பெற்றுத் தீக்குணங்கள் எட்டையும் கைவிட்டு இந்திரன் முதலிய தேவர்களால் வணங்க நீடு வாழ்கின்ற அருகனே இறைவன் ஆவான். பொறிகளால் அறிதடை நீங்கி முக்காலமும் உணர்பவன். வழிபட்டார்க்கும், வழிபடாதார்க்கும் ஒரே தன்மையன். கொல்லாமையைப் பின்பற்றுவர். அருகனிடம் அருளுபதேசம் பெற்றவன் சித்தபரமேட்டி, அருகன் வாக்கிற்கேற்ப அவன் யோக நூல் செய்தான். உயிர், தன்மம், பாவம், வீடு உட்பட பத்தும் ஒருவரால் படைக்கப்படாது அநாதியே உள்ளன என்றுரைக்கப்பட்டது.

சமணம் 6.(அ) நிகண்டவாதி மதம்

எழுசீர்க்கழி நெடிலடி யாசிரியவிருத்தம்

செய்யுள் - 142

வாச மாமல ரசோகு பேணிமறை
நீதி யோடுமலை யுந்தவத்
தாசை யாலுடை யகன்று மாசினை
யடைந்தில் வாழ்தரு மறத்தினில்
பாச மானது தவிர்ந்து பண்டிபட
வுண்டு பாயினொடு பீலிமேல்
நேச மாயவை தரித்து ளோர்களில்
நிகண்ட வாதியை நிகழ்த்துவாம்.

பதவுரை

வாசமாமலர் - வாசம்நாற்றத்தையும் மாவண்டையும் உடைய மலர். கண்டை - உடை நிகண்டம் - உடையின்மை. அஃது சமணரில் நிகண்டவாதியெனக் கொள்க. ஆசிவகர்க்கு உடை உளதாம். மறை நீதியோடு மலையும் தவம். எக்கியாதி கர்மம் கொள்ளாமையாலும் கர்த்திருவாதம் சொல்லாமையாலும் பஸ்ம ருத்திராட்சம் இல்லாமையாலும் எனக் கொள்க.

மணமும் வண்டும் பொருந்திய மலர்களை உடைய அசோக விருட்சத்தைத் தெய்வம் போலப் பேணி வேத மார்க்கத்தோடு மறுதலைப் பட்டு உரைக்கும் தவத்தினை ஆசைப்பட்டு உடுக்கையை விட்டுக் குளிக்கும் தன்மை யின்மையின் அழுக்கடைந்து பிரமசரியம் முதலாகிய ஆச்சிரமம் மூன்றுக்கும் பற்றாயிருக்கிற கிருகத்த ஆச்சிரமத்தை விட்டு வயிறு பெருக்க உண்டு பாய் உடுத்துப் பீலி கைப்பிடித்து இங்ஙனம் சொல்லியவற்றிலே சிநேகமாய் அவையிற்றைத் தரித்துளோர்களின் நிகண்டவாதி மதத்தைச் சொல்லுகின்றேம் என்றவாறு.

இச்செய்யுள் நிகண்டவாதி மதம் கூறுவான் அவன் இத்தன்மையன் என்று கூறிற்று.

விளக்கவுரை

நிகண்டவாதியின் கொள்கையாவன:- அசோக மரத்தைத் தெய்வம் போலப் பேணல், வேத வழக்கொடு மாறுபட்டு நிந்தித்தல், தவத்தில் ஆசை மிகுதல், ஆடையுடுத்தலின்மை, நீரில் குளித்து முழுகாமை, மாசடைந்த உடம்புடனிருத்தல், இல்லற வாழ்க்கையை விடுத்தல், வயிறு புடைக்க உண்ணல், பாய் உடுத்துத் திரிதல், மயிற்பீலியைக் கையிலேயே கொண்டு கொல்லாமையை மேற்கொண்டொழுகுதல்

முதலியனவாம். நிகண்டவாதி சமணரில் ஒருவகையார். ஆசீவகர்க்கு உடையுளதாம் என்க. வேதவழக்கொடு மாறுபட்டொழுகுதலாவது வேதத்திலே விதிக்கப்பட்ட வேள்வி முதலிய கன்மங்களைச் செய்யாமை, கர்த்திருவாதம் சொல்லாமை, திருநீறு அக்கமணி இல்லாமை என்பன. (1)

செய்யுள் - 143

ஈறி லாதன வனந்த ஞானமுதல்
எண்கு ணங்களெனு மொண்குணம்
மாறி லாதமதி மேவு சீதமென
மன்னி வானவர் வணங்கவே
வேறு லாவுகுண ஞான வாவரணி
ஆதி யெட்டினையும் விட்டசீர்
ஏறு பான்மையுடை நீடு வாழருகன்
எங்க ளுக்கிறைவ னென்றனன்.

பதவுரை

ஈறு இலாதன அனந்த ஞானம் முதல் எண்குணங்கள் எனும் ஒண்குணம் ஆறும் இலாத மதிமேவு சீதம் என மன்னி	கேடு இல்லாதனவான அநந்தஞானம் முதலிய நற்குணம் எட்டையும் மதிக்குக் குளிர்ச்சி தன்னிடத்திலே தோன்றினாலொப்பத் தோற்றுவித்து,
வானவர் வணங்கவே வேறு உலாவு குணம் ஞானம் ஆவரணி ஆதி எட்டினையும் விட்ட சீர்	அந்த நற்குணங்களோடு கூடாது பரந்த தீக்குணங்கள் என்று சொல்லப்பட்ட ஞானாவர்ணியம் ஆதியாகிய எட்டுக் குணங்களையும் விட்ட அழகினையும்
ஏறு பான்மை உடை நீடுவாழ் அருகன் எங்களுக்கு இறைவன் என்றனன்	இந்திராதி தேவர்கள் போற்ற மிக்க பான்மையை யுடைத்தாய் நெடிது வாழ்கின்ற அருக பரமன் எங்கள் கர்த்தா என்று கூறினான் என்றவாறு.

நற்குணம் எட்டாவன:- அநந்தஞானம், அநந்த தரிசனம், அநந்த வீரியம், அநந்த சுகம், நிர்நாமம், நிர்க்கோத்திரம், நிராயுஷியம், சம்மியதாபாவம் என்பன. சம்மியதாபாவம் - அழிவின்மை. **ஞானாவர்ணியம் எட்டாவன:-** ஞானாவர்ணியம், தரிசனாவர்ணியம், வேதநீயம், மோகநீயம், ஆயுஷியநாமம், கோத்திரநாமம், ஆயவந்தராயம், காயவந்தராயம் என்பன. இவையே தீக்குணங்கள் என்றும் பெயர் பெறும். சிரேறு பான்மை என்பது - நின்மலத்துவம் முதலியன.

விளக்கவுரை

கடையிலா அறிவு, கடையிலாக்காட்சி, கடையிலா வீரியம், கடையிலா இன்பம், நாமம் இன்மை, கோத்திரம் இன்மை, ஆயு இன்மை, அழியா இயல்பு என்னும் நற்குணம் எட்டையும் சந்திரனிடத்துக் குளிர்ச்சியானது தோன்றினாற் போலத் தோற்றுவித்துக்கொண்டு ஞானாவர்ணியம் முதலிய தீக்குணங்கள் எட்டையும் விட்டொழித்து இந்திரன் முதலிய விண்ணோர் வணங்கிப் போற்றும் பெருமையினையுடைய நீண்டவாழ்நாளையுடைய அருகதேவனே எங்கள் கடவுள் ஆவான். *(2)*

செய்யுள் - 144

கருவி கண்படு தொடக்கொ ழிந்துவரு
கால மூன்றினிகழ் காரியம்
பெருக நின்றொரு கணத்தி லேயுணர்
பெருந்த வக்கடவுள் பீடினான்
மருவி நின்றுவழி பட்ட வர்க்குமலை
வுற்ற வர்க்குமன மொத்திடும்
குரிசி லெங்களிறை யென்று பின்னுநிகழ்
குற்ற மின்மையது கூறுவான்.

பதவுரை

கருவி கண்படு தொடக்கு ஒழிந்து வருகாலம் மூன்றின் நிகழ் காரியம் பெருக நின்று ஒரு கணத்திலே உணர் பெருந்தவக்கடவுள்	இந்திரிய விடயத்தால் வரும் தொடக்கைத் தன்னிடத்து நின்றும் கைவிட்டுப் பெருங்காலம் முதலாக மூன்று காலத்திலும் உள்ள காரியங்களை மிகவும் ஒரு கண மாத்திரத்திலே அநந்த ஞானத்தாலே அறியத்தக்க பெரிய தவத்தையுடைய தேவன்,
பீடினால் மருவி நின்று வழிபட்ட வர்க்கும் மலைவு உற்றவர்க்கும் மனம் ஒத்திடும் குரிசில்	தனது பெருமையினாலே பொருந்த நின்று வழிபாடு செய்தவர்க்கும் மாறுபட்டவர்க்கும் ஒரு நீர்மையான தலைவன்,
எங்கள் இறை என்று பின்னும் நிகழ் குற்றம் இன்மையது கூறுவான்	எங்கள் சுவாமி என்று கூறி அவனுக்குக் குற்றமில்லாத தன்மையைப் பின்னும் சொல்லுவான் என்றவாறு.

விளக்கவுரை

பொறி, புலன்களால் வரும் தொடக்கைக் கைவிட்டு முக்கால நிகழ்ச்சிகளையும் கணப்பொழுதிலே அநந்த ஞானத்தால் அறியத்தக்க பெருந்தவத்தையுடைய தேவன் அவன். தம்மை வழிபட்டவர்க்கும், தம்மை மாறு கொண்டவர்க்கும் ஒரு தன்மையாக அருள் செய்யும் பெருமையையுடையோனாகிய அவனே எங்கள் கடவுள்.

மனம் ஒத்திடுகை சமதரிசனமாகை. *(3)*

செய்யுள் - 145

பசித்தல் தாகபய செற்ற மோடுவகை
மோக சிந்தனை பழித்தனோய்
நசித்தல் வேர்வினொடு கேத மோடுமதம்
வேண்ட லீண்டதி சயித்தலும்
புசிப்பு வந்திடு பிறப்பு றக்கமிவை
விட்டொ ரட்டகுண பூதனாய்
வசித்த வன்னுலகின் மேலி ருந்தொருசொல்
இகல னுக்கருளு மென்றனன்.

பதவுரை

பசித்தல் - பசியுண்டாதல், தாகம் - ஆசை, பயம் - அச்சம், செற்றமோடு - மாற்சரியம் ஆகிய இவற்றுடனே, உவகை - ஒன்றன்மேல் பிரியப்படுகை, மோகம் - மயக்கம், சிந்தனை - ஒன்றைச் சிந்தித்தல், பழித்தல் - ஒன்றை நிந்தித்தலை, நோய் - வாதபித்த சிலேட்டுமம், நசித்தல் - சாதல், வேர்வினொடு - வியர்வோடும், கேதமோடு - கிலேசப்படுதலோடும், மதம் வேண்டல் - கர்வத்தை விரும்பல், ஈண்டு அதிசயித்தலும் - இவ்விடத்து அதிசயப்படுதலும், புசிப்பு - உணவு, வந்திடு பிறப்பு - ஜனித்தல், உறக்கம் - மூவகை நித்திரை, இவை விட்டு - இவை பதினெட்டையும் முற்றக் கைவிட்டு, ஓர் அட்டகுண பூதன் ஆய் - அநந்தகுணம் ஆதியாகச் சொல்லப்பட்ட எட்டுக்குணங்களை உடையனாய், வசித்தவன் உலகின் மேல் இருந்து ஒரு சொல் இகலனுக்கு அருளும் என்றனன் - உலகத்துக்கு மேலாகிய பொன்எயில் வட்டத்திருந்து சித்த பரமேட்டிகள் கேட்டதொரு சொல்லினுக்கு உத்தரம் அருளும் என்று கூறினான் என்றவாறு.

விளக்கவுரை

பசி, தாகம், பயம், மாற்சரியம், உவகை, மயக்கம், கவலை, பழித்தல், நோய், சாக்காடு, வியர்வை, துன்பம், செருக்கு, வியப்பு, ஊண், பிறப்பு, நித்திரை

முதலியவற்றைக் கைவிட்டோன் அவன். முற்கூறிய அநந்தகுணம் முதலியவற்றை யுடையோன். எல்லா உலகங்களுக்கும் மேலாகவுள்ள பொன்னெயில் வட்டத்து இருந்த முதல்வன் சித்தபரமேட்டிகள் கேட்ட சொல்லுக்கு விடையாக ஒருமொழி பகர்ந்தருளினான். சித்தபரமேட்டிகள் - சித்தர். இது ஜைன நூல் வழக்கு.

அருகர், சித்தர், ஆசாரியர்கள், உபாத்தியாயர்கள், சாதுக்கள் இவர்களைப் பஞ்சபரமேட்டிகள் என்பர். "தன்மம் பகவ" என்பது வினா; "பஞ்சாஸ்தமயம்" என்பது அதற்கு விடையாக வந்த மொழி.

ஓடு எண்ணின் கண் வந்தது. ஈண்டு என்பதனை எல்லாவற்றோடும் கூட்டுக. வசித்தல் - சொல்லுதல். பிறப்பு - தேவமனுஷிய நரக விலங்கு என நால்வகை. மூவகை நித்திரையாவன - நித்திராநித்திரை, பிரசலாப்பிரசலை, நிக்கிரககதி அநுக்கிரககதி என்க.

இதற்கு அருகன் கூறிய சொல்லாவது பொன்னெயில் வட்டத்து இருக்கிற சித்தபரமேட்டி என்னும் சகலாத்தரை இகலாத்தர் "தன்மம் பகவ" என்று கேட்க முரசுதாக்கச் சத்தம் கிளம்பினாற்போல ஒரு சொல் "பஞ்சாஸ்தமயம்" என்று சகலாத்தர் சொல்ல, இதுகொண்டு விசாரித்தான் எனக்கொள்க.

உலகின்மேல் இருந்து ஒரு சொல் இகலனுக்கு அருளும் என்றனன். பொன் னெயில் முதல்வனைச் சித்த பர மேட்டி கேட்ப.

இச்செய்யுள்கள் மூன்றும் நிகண்டவாதி தனது கர்த்தாவினுடைய நிர்ணயம் கூறியவாறு கூறிற்று. *(4)*

செய்யுள் - 146

அந்த வாய்மொழியி னாலவன் சரணம்
ஆதி யோகமுத லானநூல்
இந்த மாநில மயங்கி டாதவகை
இங்கி யம்பின னிதன்பொருள்
வந்த காலமுயிர் தன்ம தன்மியறம்
மற்றும் விண்மருவு புற்கலம்
பந்தம் வீட்டினொ டநாதி யாயிவை
படைப்ப தின்றியுள பத்துமே.

பதவுரை

அந்த வாய் மொழியினால் அவன் சரணம் ஆதியோகம் முதலானநூல்	அந்தப் பஞ்சாஸ்தமயமாகிய வாக்கியத் தினாலே அந்தச் சித்த பரமேட்டி சரணமாதி

இந்த மா நிலம் மயங்கிடாத வகை இங்கு இயம்பினன்	ஆகிய முதல்நூலை இப்பெரிய நிலத்துள்ளோர் மயங்காதவகை இவ்விடத்துச் சொன்னான்,
இதன் பொருள்	இந்த நூலிற் கூறிய பொருள்,
வந்த காலம் உயிர் தன்மதன்மி அறம் மற்றும் விண் மருவு புற்கலம் பந்தம் வீட்டினொடு அநாதி ஆய் இவை படைப்பது அன்றி உள பத்தும் ஏ	உண்டான காலம், ஆன்மா, தன்மம், அதன்மம், புண்ணியம், பாவம், ஆகாசம், அணுவாய்த் திரண்டு ஆன்மத் தன்மை பொருந்தின புற்கலம், பந்தம், வீட்டோடு கூடப் பத்தும் ஒருவரால் படைக்கப்படாததாய் அநாதியே உள்ளனவாம் என்றவாறு.

விளக்கவுரை

மேலே கூறிய 'பஞ்சாஸ்தமயம்' ஆகிய வாக்கியத்தினாலே அந்த சித்தபரமேட்டி சரணம் ஆதியாகிய முதனூலை நிலவுலகத்துள்ளோர் மயங்காதவகை அருளிச் செய்தான். இந்நூலிற்கூறிய பொருள்: காலம், ஆன்மா, தன்மம், அதன்மம், புண்ணியம், பாவம், ஆகாசம், புற்கலம், பந்தம், வீடு என்பன. இவை பத்தும் ஒருவராற் படைக்கப்படாதன, அநாதியே உள்ளன.

சரணம் நால்வகை: அருகசரணம், சித்தசரணம், சாதுசரணம், தன்மசரணம் என்பனவாம்.

தன்மம் என்பது தன்மாத்திகாயத்தை, தன்மி என்பது அதன் மாத்திகாயத்தை, சரணம் - ஆதிசரணம், சித்த சரணம், ஆசாரிய சரணம், தன்மசரணம் என நான்கு. மற்றுள்ளனவும் கொள்க.

இச்செய்யுள் நிகண்டவாதி சாத்திரம் தோன்றின முறைமையும், அந்தச் சாத்திரத்தில் கூறும் பத்துவகைப் பதார்த்தமும் கூறிற்று. (5)

செய்யுள் - 147

நிற்ற லோடுதலை போத லன்மையை
நிகழ்த்து நீடுவெதி ரேகமும்
உற்ற தாமிவை கணத்தி லேமருவி
யுள்ள வாபுரியு மா றுதான்
கற்ற காலமள வெய்தி வாழுமுயிர்
காய மேவிநிறை வானதே
பெற்று வேறுவரு தன்மை நேரறிவு
பெற்ற தாகியுள பேசிலே.

பதவுரை

நிற்றலோடு தலை போதல் அன்மையை நிகழ்த்தும் நீடு வெதிரேகமும் உற்றது ஆம்	அநாதிப் பொருள் பத்திலே காலமானது நிகழ்காலமும் இறந்தகாலமும் இவை அல்லாமையை விளக்கா நின்ற நிலை பெற்ற எதிர்காலமும் ஆகிய மூன்றையும் நிலைபெற்றுப் பொருந்தியதாம்,
இவை கணத்திலே மருவி உள்ளவா புரியுமாறு தான் கற்ற காலம்	அதுவன்றியும், இம்மூன்று காலத்தையும் ஒரு கணப் பொழுதிலே பொருந்தி உண்டான தகுதியைச் செய்யும் தொழிலையும் அந்தக் காலம் கற்றதாம்,
அளவு எய்தி வாழும் உயிர் காயம் மேவி நிறைவு ஆனதே பெற்று வேறு வரு தன்மை நேர் அறிவு பெற்றது ஆகி உள பேசில் ஏ	அக்காலத்து எல்லையைப் பொருந்தி வாழும் ஆன்மாவானது சரீரியாய் அந்தச் சரீரம் முழுதும் நிறைந்த தன்மையைப் பொருந்திப் பால தருணவிருத்த அவத்தைகளினும் வேறுவேறாக வரும் தன்மையோடு, பொருந்தின அறிவு பெற்றதாகி உள்ளதாம் சொல்லும் காலத்து என்றவாறு.

விளக்கவுரை

அநாதிப்பொருளாகிய பத்தில் காலமானது நிகழ்காலம் இறந்தகாலம் எதிர்காலம் என மூவகைப்படும். அதுவன்றியும், ஒரு கணத்திலே முக்காலத்தையும் பொருந்திச் செயலும் நிகழ்தற்கு ஏதுவாயுளது. அக்காலவரையறைப்பட்டு வாழும் உயிர்கள் சரீரத்தையுடையனவாய், எடுத்த உடம்பு முழுவதும் நிறைந்துள்ள தன்மையுடையனவாய், பால தருண விருத்த அவத்தைகளிலும் வேறு வேறாகப் பொருந்தும் தன்மையினவாய், அவ்வவ் வவத்தைகளுக்கு ஏற்ற அறிவு பெற்று விளங்குவனவாம்.

இதனால், காலத்தின் பகுதியும் உயிரின் பகுதியும் கூறப்பட்டது.

இச்செய்யுள் அநாதிப்பொருள் பத்தில் காலத்தின் பகுதியையும் உயிரின் பகுதியையும் கூறிற்று. *(6)*

செய்யுள் - 148

பரந்து மீதுதரு மாத்தி காயமழி
வித்த நித்தமது பண்ணிடும்
நிரந்து கீழதரு மாத்தி காயமது
நித்த மாய்மிக நிறுத்திடும்

புரந்த புண்ணிய மிதற்கு நன்மைபுகல்
பாவ மானவது தீமையே
தரும்பொ ருட்கிடம தாகும் வானமிகு
புற்க லன்களவை சாற்றுவாம்.

பதவுரை

பரந்து மீது தருமாத்தி காயம் அழி வித்து அநித்தம் அது பண்ணிடும்	விரிந்து மேலாகத் தரப்பட்ட தன்மாத்தி காயமானது பூதகாயத்தை மேலும் எடாதபடி அழிவித்து அதனை அநித்தியத்தைச் செய்யும்,
நிரந்து கீழ் அதருமாத்திகாயம் அது நித்தம் ஆய் மிக நிறுத்திடும்	நிரைபட்டுக் கீழாகத் தரப்பட்ட அதன் மாத்திகாயமானது ஆன்மாவோடு கூடி நித்தமாய் மிகவும் நிலைபெறுவித்திடும்,
புரந்த புண்ணியம் இதற்கு நன்மை	மன வாக்குக்காயங்களாற் செய்யப்பட்ட புண்ணியமானது இத்தன்மாத்தி காயத்தைத் தருவதற்கு நன்மையாம்,
புகல் பாவம் ஆன அது தீமையே தரும்	சொல்லப்பட்ட மனவாக்குக் காயங்களால் உண்டான பாவமானது தீமைகளையே தரும் அதன்மாத்தியாத்துக்கு ஏதுவாம்,
பொருட்கு இடம் அது ஆகும் வானம்	எல்லாப் பொருட்கும் இடங்கொடுத்து நிற்கும் ஆகாயம்,
மிகு புற்கலன்கள் அவை சாற்றுவாம்	இதனிடத்தில் தோன்றும் புற்கலப் பொருளை மேலே சொல்லுவாம் என்றவாறு.

விளக்கவுரை

புண்ணியத்தால் எடுத்த உடம்பானது மேலும் பூத உடம்பை எடுக்காதபடி அழித்து அதனை அநித்தமாக்கும். பாவத்தாலே எடுத்த உடம்பு மேலும் மேலும் பூத உடம்பை நிலைபெறச் செய்து மிகுவிக்கும். மனம் வாக்குக் காயங்களாற் செய்யப்பட்ட புண்ணியம் புண்ணிய உடம்பைத் தருதற்கு உபகாரமாம். மனம், வாக்குக் காயங்களாற் செய்யப்பட்ட பாவங்கள் மீட்டும். மீட்டும் பாவவுடம்பையே எடுத்தற்குப் பெரிதும் ஏதுவாம். ஆகாயம் எல்லாப் பொருட்கும் இடங்கொடுத்து நிற்கும். இதனிடத்திலே தோன்றும் புற்கலப்பொருள்கள் மேலே சொல்லப்படும்.

இதனால், தன்ம தன்மி, புண்ணிய பாவம், ஆகாயம் என்னும் ஐந்து பகுதிகளை கூறப்பட்டுள்ளமை காண்க.

தன்மாத்திகாயமாவது - புண்ணியத்தால் எடுக்கும் தேகம். அதன் மாத்திகாயமாவது - பாவத்தால் எடுக்கும் தேகம்.

இச்செய்யுள் முன் அநாதியென்று கூறிய பத்தினுள்ளும் தன்மதன்மி அறம் பாவம் ஆகாசம் என்னும் ஐவகைப் பதார்த்தங்களைக் கூறிற்று. (7)

செய்யுள் - 149

ஏணு மொன்றுடைய வாகி யெங்குமணு
வாயி ரும்புகன் மரங்களும்
பூணு மங்குருவெ லாமு மாகுமிவை
புற்க லப்பொருள்க ளென்னலாம்
காணு மங்கறு வகைத்தொ ழில்களவை
கட்டு விட்டநெறி கன்மமேல்
மாண நின்றுவரு மாறி மாறிமுன்
வகைந்த துண்டுவிட மாட்சியே.

பதவுரை

ஏணும் ஒன்று உடைய ஆகிஎங்கும் அணு ஆய் இரும்பு கல் மரங்களும் பூணும் அங்கு உருஎலாமும் ஆகும் இவை புற்கல பொருள்கள் என்னலாம்	ஓர் வலியும் உடையவாய் எவ்விடத்திலும் உருவமாய்த் திரண்டு இரும்பு கல் மரங்கள் முதலியனவுமாய் இவை ஒழிந்து எடுத்துக் கொள்ளப்பட்ட உருக்கள் எல்லாமுமாய்த் திரிய அணுபூர்வம் என்னும் ஆன்மப் பெயரையும் உடையவாய் நிற்கும்; அவை யிற்றைப் புற்கலப்பொருள் என்று சொல்லலாம்,
காணும் அங்கு அறுவகைத் தொழில்கள் அவை கட்டு	பொல்லாங்காய்க் காணப்பட்டுள்ள அறுவகைத் தொழில்களே பந்தம்,
விட்டநெறி கன்மம்	அந்தப் பந்தத்தை விட்ட ஒழுங்கே தவம்,
மேல் மாண நின்று வரும்	அத்தவத்தான் உடல் மேன்மேல் வரும் தவ மாட்சிமை உண்டாய் நிலைபெற்று வர்த்திக்கும்,
மாறி மாறி முன் வகைந்தது உண்டுவிட மாட்சி ஏ	ஆன்மாவுக்கு முன்பே புசிப்பதாக உண்டாக்கப்பட்ட புண்ணிய பாவங்கள் தொலையப் புசித்துவிட்ட மாட்சிமையே வீட்டைத் தரும் என்றவாறு. ஏண் - வலி.

அணுபூர்வமாவன: தெய்வகதியாவைபூர்வம், மனுஷியகதியாவைபூர்வம், நரககதியாவைபூர்வம், பசுஷிமிருககதியாவைபூர்வம், திரியக்காதியாவைபூர்வம் என இவை. இவற்றுள் திரியக்காதி யாவைபூர்வம் - புற்கலப் பொருள். அறுவகைத் தொழிலாவன - கந்தம், ரசம், ரூபம், பரிசம், சத்தம், பரிணாமம் என இவை: காமாதி அறுவகையும் ஆம்.

விளக்கவுரை

வலியையுடைய அணுக்கள் பல திரண்டு எவ்விடத்திலும் உருவம் உடையனவாய், இரும்பு கல் மரம் முதலிய பொருள்களாய், இவை ஒழித்து ஒழிந்த உருக்கள் எல்லாமுமாய், திரிய அணுபூர்வம் என்னும் ஆன்மப் பெயரை யுடையனவுமாய் நிற்கும். அவற்றைப் புற்கலப் பொருள் எனவும் சொல்லுவர். திரியக்யாவை பூர்வம் என்பதும் அது. தெய்வகதி, மனுடகதி, நரககதி, பசுஷிமிருக கதி, திரியக்காதி கதி என அணுபூர்வம் பலவகைப்படும். கந்தம் ரசம் ரூபம் பரிசம் சத்தம் பரிணாமம் என்னும் அறுவகைத் தொழில்களும் பந்தமாவன. காமம், குரோதம், உலோபம், மோகம், மதம், மாற்சரியம் என்னும் ஆறுமே பந்தத்துக்கு ஏதுவாவன. அந்தப் பந்தத்தை விட்ட ஒழுங்கே தவமாம். அத்தவத்தால் உடல் மேலும் மேலும் உண்டாகும் தவமாட்சிமையுடைத்தாய் நிலைபெற்றுத் தோன்றும். உயிர்களுக்கு முன்னமே புசிப்பாக உள்ள புண்ணிய பாவங்கள் புசித்துத் தொலையவே அம்மாட்சி வீட்டைத் தரும்.

இதனால், புற்கலப் பொருளும் பந்தமும் வீடும் ஆகிய மூன்றும் கூறப்பட்டுள்ளமை காண்க.

இச்செய்யுள் முறையானே முன்னர்ப் பத்தினுள் புற்கலப் பொருளும், பந்தமும், வீடும் ஆகிய பொருள்கள் மூன்றையும் கூறிற்று.

வாசமாமலர் என்னும் செய்யுள் முதல் இச் செய்யுள் காறும் நிகண்டவாதி மதம் கூறிற்று. *(8)*

ஆறாவது – நிகண்டவாதி மதம் முற்றிற்று.

பாயிரம் உள்படத் திருவிருத்தம் – 149.

நிகண்டவாதி மதத் தொகுப்பு

தோற்றம்

சமண சமயப் பிரிவுகளுள் இதுவும் ஒன்று. வர்த்தமான மகாவீரரால் சுமார் 2500 ஆண்டுகளுக்கு முன் தோற்றுவிக்கப்பட்டது. திகம்பரசமணர் என்றழைக்கும் சமணர் இவ்வகையைச் சார்வர்[1]. கண்டம் - உடை; நிகண்டம் எனில் உடையின்மை; எனவே ஆடையற்ற சமணர்கள் இச்சொல் குறிக்கும் என்பது புலனாகிறது. இவர்களை ஞானசம்பந்தர் தமது தேவாரத்து,

"உடையினை விட்டுளோரும்"[2] என்றும்,

"வெற்றரை யுழல்பவர்"[3]

என்றும் குறிப்பிடுகிறார். இவர்கள் வழிபட்ட கோயில் நிக்கந்தக் கோட்டம் என்றழைக்கப்பட்டது. மேலும் சாத்தனார் சமயக் கணக்கருள் இவ்வகையினரை நிகண்டவாதி என்று குறித்தலும் அறியத்தகும். இம்மதத்தைச் சார்ந்த நற்றிணைப் புலவர் ஒருவர் நிகண்டன் கலைக்கோட்டுத் தண்டனார்[4] என்றழைக்கப்படுகிறார்.

இவர்கள் மணம் பொருந்திய அசோக மரத்தினைத் தெய்வம் போற் பேணுவர். தவத்தினை விரும்புவர். ஆடையில்லாததுடன் நீராடுதலையும் விட்டவர். இல்லறத்தை வெறுப்பவர். வயிறார உண்டு, பாயுடுத்து, மயிற்பீலியினைக் கையில் பிடித்திருப்பவர்.

கொள்கைகள்

இம்மதத்தின் கொள்கைகள் சிவஞான சித்தியார் பரபக்கத்தில் எட்டுப் பாடல்களால் எடுத்துரைக்கப்படுகின்றன.

அருகனின் அருங்குணங்கள்

குற்றமற்ற கடையிலா ஞானம் (முடிவில்லா அறிவு), தடையிலாக் காட்சி (முடிவில்லாக் காட்சி) கடையிலா வீரம் (முடிவில்லா ஆற்றல்) கடையிலா இன்பம் (முடிவில்லா இன்பம்) பெயரின்மை, குடிவழியின்மை, வயதின்மை, அழிவின்மை எனும் எண்குணங்களையும் நிலவுக்கு இயற்கை குளிர்ச்சியானாற் போல இயற்கையாகப் பெற்றுத் தீக்குணங்களான ஞானவாரணியம், தரிசனா வாரணியம், வேதநியம், மோகநீயம், ஆயுடிய நாமம், கோத்திர நாமம், ஆயவந்தராயம்,

---

1. தமிழும் தத்துவமும், பக். 59.
2. இரண்டாம் திருமுறை, பதிகம் 86, பாடல் 10.
3. இரண்டாம் திருமுறை, பதிகம் 120, பாடல் 10.
4. நற்றிணை, பாடல் 382.

சாயவந்தராயம் என்ற எட்டினையும் கைவிட்டு இந்திரன் முதலாய தேவர்களால் வணங்க நீடு வாழ்கின்ற அருகனே இறைவன் ஆவன். இத்தகையோன் பொறிகளால் அறிதலை நீங்கி, முக்காலத்தும் நடக்கும் செயல்களை ஒரு கணத்தே அறியும் பெருந்தவமுடையவன். தன்னை வழிபட்டார்க்கும், வழிபடாதார்க்கும் ஒரு தன்மையனாக விளங்குபவன்.

மேலும் இத்தகையோன் பசி, ஆசை, அச்சம், செற்றம், உவகை, மயக்கம், சிந்தனை, நோய், சாதல், வியர்வை, துன்பம், செருக்கு, அதிசயம், உண்டல், பிறப்பு, உறக்கம் என்பவற்றைக் கைவிட்டு, எண் குணத்தனாய், பொன்னெயில் வட்டத்திலிருந்து சித்த பரமேட்டிகளின் (பரம்பொருள்) சொல்லினுக்கு விடை அருளினான். அங்ஙனம் அருகன் கூறிய வாக்கினைச் சித்த பரமேட்டி யோக நூலாக இவ்வுலகத்தார் மயங்கா வகை சொன்னான். அந்நூலிடத்துக்காலம், உயிர், தன்மம், அதன்மம், புண்ணியம், பாவம், விண், புற்கலம், பந்தம், வீடு என்ற பத்தும் ஒருவரால் படைக்கப்படாது அநாதியே உள்ளன என்றுரைக்கப்படுகிறது.

மேற்கூறிய பத்தில் காலமானது நிகழ்காலம், இறந்தகாலம், எதிர்காலம் என மூன்றாகும். அதுமட்டுமல்லாது முக்காலத்தையும் ஒருகணப் பொழுதே செய்யும் செயற்பாடுடையது. அக்காலத்து வாழும் உயிர் எடுத்த உடம்பில் நிறைந்து குழவி, இளமை, முதுமை ஆகிய தன்மைகளினின்றும் பொருந்தி அறிவு பெற்று விளங்குவதாகும்.

தன்மமானது உடம்பை மேலும் பிறவி எடாதபடி அழிவித்து நிலையில்லாது செய்யும். அத்தன்மமானது உடம்போடு கூடி நிலைபெறுத்தும், மனம், மொழி, மெய்களால் செய்யப்பட்ட தன்மத்தைத் தருவது நன்மையாம். அதன்மத்தைத் தருவது தீமையாம்.

எவ்விடத்தும் வலியுடைய அணுக்கள் திரண்டு இரும்பு, கல், மரங்கள் முதலிய உருவமாயும், இவை இல்லாத உருவமாயும் அமைவது புற்கலமாகும். காமம், வெகுளி, மயக்கம், சுடும்பற்றுள்ளம், செருக்கு, பொறாமை எனும் அறுவகைத் தொழில்சுளே பந்தமாகும். அப்பந்தத்தை விடுவது தவமாகும். மேன்மேலும் வருகின்ற தவமாண்பினால் புண்ணிய பாவங்கள் கெடுதல் வீடாகும்.

சமணம் 6.(ஆ) நிகண்டவாதி மதமறுதலை

செய்யுள் - 150

அருக னுக்க னந்த ஞான
மாதி யாதி யாகவே
பெருக நிற்றல் சீத மாம
திக்க டைந்த பெற்றியேல்
ஒருவு மிட்ட வொப்ப வன்னு
யிர்த்தி றத்தி னுள்ளபின்
மருவு மிக்க குற்ற மேல
றத்தின் மன்னி னானெனில்.

பதவுரை

அருகனுக்கு அனந்த ஞானம் ஆதி ஆதி ஆகவே பெருக நிற்றல் சீத மா மதிக்கு அடைந்த பெற்றி ஏல்	அருக பரமனுக்கு ஞானாவரணியம் ஆதியாகிய தீக்குணங்கள் எட்டும் நீங்கப்பட்டு, அனந்தஞானம் ஆதியாகிய நற்குணங்கள் எட்டும் சந்திரனுக்குச் சைத்தியம் போல உண்டாம் என்று கூறினாய்; அதுவே முறையாயின்,
ஒருவும் இட்ட ஒப்பு	நீ கூறிய உவமையின் நீங்கப்படும்; அஃது எங்ஙனம்? என்னில்,
அவன் உயிர் திறத்தின் உள்ள பின் மருவும் மிக்க குற்றம்	கர்த்திரு குணம் இன்றியே சில குணத்தை விட்டுச் சில குணம் வந்து கூடிற்று என்பது ஆன்ம குணம் ஆகையால், அவனும் ஆன்ம குணத்தை உடையன் ஆவன்; ஆகவே, விடப்பட்ட தீக்குணங்கள் எட்டும் முன்பு உண்டாய் விட்டவாம்,
மேல் அறத்தின் மன்னினான் எனில்	அற்றன்று, அவன் ஞானாவரணியம் ஆதியாகிய குணங்களை நீங்கி அநந்த ஞானம் ஆதியாகிய குணங்களைக் கூடுதல் மேலான அறத்தின் கண்ணே பொருந்துகையினால் என்றவாறு.

விளக்கவுரை

நீ உன் கடவுளாகிய அருக பரமனுக்கு ஞானாவரணியம் முதலிய தீக் குணங்கள் நீங்க, அனந்த ஞானம் முதலிய நற்குணங்கள் எட்டும் சந்திரனுக்குக்

குளிர்ச்சி வந்தடைந்தது போல உண்டாம் என்றாய். நீ கூறிய அதுவே முறைமையாயின் அஃது உவமையின் நீங்கப்படும். எங்ஙனம் என்னில், கர்த்திருகுணம் இன்றியே சில குணத்தை விட்டுச் சில குணம் வந்து கூடின என்பதால் அஃது ஆன்ம குணமாம். ஆகையால், அவனும் ஆன்ம குணத்தை யுடையனே. ஆகவே, விடப்பட்ட தீக்குணங்கள் எட்டும் முன்பு உண்டாய்ப் பின்பு விட்டனவாம். ஞானாவரணியம் முதலிய குணங்களை நீங்கி அனந்த ஞானம் முதலிய குணங்களைக் கூடுதல் மேலான அறத்தின் கண்ணே கூடுகையால் என்னில், (1)

செய்யுள் - 151

அறத்தின் மன்னு வித்த வன்னொ
ருத்த னாய வன்னறத்
திறத்தி னிற்றன் மற்றொ ருத்த
னால்வி ளைந்த செய்தியா
மறத்தி னற்ற வர்க்கெ லாம்வ
ணக்க முன்னி றைக்குமேற்
பிறக்கு மிங்க வத்தை கொண்ட
தாரை யின்று பேசிடே.

பதவுரை

அறத்தின் மன்னுவித்தவன் ஒருத்தன் ஆய் அவன் அறத்திறத்தின் நிற்றல் மற்று ஒருத்தனால் விளைந்த செய்தி ஆம்	ஆங்கு அவன் அந்த தருமத்தினாலே பொருந்தினான் ஆயின் அந்தத் தன்மத்திலே நிலைபெறுவித்தவன் ஒருவன் உளனாய் அவனால் கூறப்பட்ட தன்மநெறியிலே நிற்கும் தகுதி ஒருவன் கற்பித்த தொழிலை ஒருவன் செய்த செய்தியாம்,
மறத்தின் அற்றவர்க்கு எலாம் வணக்கம் உன் இறைக்கு மேல் பிறக்கும் இங்கு அவத்தை	கொலையை நீங்கினவர்க்கெல்லாம் வணக்க மாகப்பட்ட உன் கர்த்தாவுக்கு மேலும் ஒருவன் உளன் என்பது ஓர் எல்லை உண்டாம் ஆகையால்,
கொண்டது ஆரை இன்று பேசிடு ஏ	முன்னர்க் கூறியவனையோ? அவன் கிழ் நின்று இந்திரியத் தொடக்குப்படாமல் தவம் செய்தவனையோ? நீ கர்த்தாவாகக் கொண்டது யாவரை என்று சொல்லுவாயாக இப்போது என்றவாறு.

விளக்கவுரை

மறத்தின் அற்றவர் - கொலைத்தொழிலைக் கை விட்டவர்.

நீ தலைவனாகச் சொல்லப்பட்டவன் கன்மத்தை வென்று பிறந்தவனோ? கன்மத்தை வென்று பிறவாதவனோ? பிறந்தவனாகில் தவவலிமையால் பெற்றவனாம்; கன்மத்தை வென்று பிறவாதவனாகில் உலகத்துள்ளார்க்கு ஒப்பாவன். அநாதியே முத்தனாகில் சிவவர்க்கத்தன் அல்லனாம் எனக்கொள்க.

இச்செய்யுள்கள் அருகன் சில குணங்களை நீங்கிச் சில குணங்களை வந்து கூடுகையானும், அப்படி உண்டாவது அறத்தினால் எனின், அவ்வறனும் ஒருவன் உண்டாக்கினான் ஆகவேண்டும். ஆகையாலும் கர்த்தா அல்லன் என்று மறுத்துக் கூறிற்று. (2)

செய்யுள் - 152

கருவி தன்றொ டக்கொ ழிந்து
கண்டு வாழு மென்றியேல்
உருவு கொண்டு நின்ற தென்னில்
உண்டு தான்ம நாதிகள்
ஒருவி நின்ற தென்னி லத்தம்
ஒன்றை யுமு ணர்ந்திடான்
பொருடெ ரிந்து போகை கால
மொன்றி லேபு ணர்ந்திடான்.

பதவுரை

கருவி தன் தொடக்கு ஒழிந்து கண்டு வாழும் என்றியேல்	உன் கர்த்தாவாகிய அருகபரமன் மனாதி களாகிய கருவிகளின் நின்று அறியும் அறிவை நீங்கிச் சர்வமும் கண்டிருக்கும் என்று கூறினாய்; அப்படியாயின்,
உருவு கொண்டு நின்றது என்னில் உண்டு தான் மனாதிகள்	அவனைச் சரீரம் பொருந்தி நின்றது என்று கூறின் மனம் முதலாகிய கருவிகள் உண்டாம், அவை ஒழிந்து காண்டற்கு வழியும் இல்லை,
ஒருவி நின்றது என்னில் அத்தம் ஒன்றையும் உணர்ந்திடான்	அவனைச் சரீரம் நீங்கிநின்றது என்று கூறின், அவன் எல்லாவற்றையும் கண்டு வாழும் என்று சொல்லுதலும் மித்தியா வாதமாய், மற்றொன்றையும் உணர்ந்ததில்லை ஆவன்,

பொருள் தெரிந்து போகை காலம் ஒன்றிலே புணர்ந்திடான்	ஒரு பொருளை அறிதற்குக் கருவியான மூன்று காலத்தையும் ஒரு காலத்திலே உணரும் தன்மையன் அல்லன் என்றவாறு.

விளக்கவுரை

இச்செய்யுள் அருகபரமன் கருவித் தொடக்கை ஒழிந்து சர்வமும் காண்பன் என்பதனையும், மூன்று காலத்தையும் ஒரு காலத்திலே நின்று உணர்வன் என்பதனையும் மறுத்துக் கூறிற்று. *(3)*

செய்யுள் - 153

ஆர்வ கோப மான வைய
டைந்தொ றுப்ப வர்க்கெலாம்
சேர்வ தின்மை செப்பி லின்று
சீவன் மேவு காயமால்
ஒரு மன்னர் போல வேயு
யிர்க்க ளித்த லென்றியேல்
ஏர்கொள் பொன்னெ யிலிடத்தி ருத்தல்
பெற்ற தென் கொலோ.

பதவுரை

ஆர்வம் கோபம் ஆனவை அடைந்து ஒறுப்பவர்க்கு எலாம் சேர்வது இன்மை செப்பில் இன்று சீவன் மேவு காயம் ஆல்	காமக் குரோதம் முதலியவற்றோடும் கூடி அதனைத்தீது என்று அறிந்து நீக்கப்படு வார்க்கு எல்லாம் இன்று முத்தி அடைதல் இல்லையாம், சொல்லுமிடத்து உன் அருக பரமனும் சிவனோடு கூடின காயம் உடைமையால்; அற்றன்று,
ஒரு மன்னர் போலவே உயிர்க்கு அளித்தல் என்றியேல்	கூத்திரிய தன்மமான சாத்திரத்தை ஆராய்ந்த ஒப்பற்ற அரசரைப் போல உயிர்க்குத் தலையளி செய்தலே அருகபரமனுக்கு முறைமை என்று கூறுவையாயின் அவ்வரசரைப் போலத் துஷ்ட நிக்கிரகமும் சிஷ்ட பரிபாலனும் செய்ய வேண்டும்,
ஏர் கொள் பொன் எயிலிடத்து இருத்தல் பெற்றது என் கொல் ஒ	அவ்வரசரைப் போல ஒரு நிலத்தில் இருந்து துஷ்ட நிக்கிரகமும் சிஷ்ட பரிபாலனமும் செய்யாது பொன்னெயில் வட்டத்து இருக்கப்

	பெற்றது யாது? அதுவுமன்றி, "மருவி நின்று வழிபட்டவர்க்கும் மலைவுற்றவர்க்கும் மன மொத்திடும் குரிசில்" என்று நீ முன்னர்க் கூறுகையானும், அரசர் இவ்வுலகத்து இருத்தலானும் உன் அருக பரமன் அரசரை ஒக்கும் தன்மையும் உடையன் அல்லன் என்றவாறு.

விளக்கவுரை

இச்செய்யுள் அருகபரமன் சரீரி ஆகையால் அவனை நோக்கித் தவஞ் செய்வார் முத்தி அடைதல் இல்லை என்றும், அரசனைப் போல என்னின் 'மன மொத்திடும் சூரிசில்' என்பது வழுவாம் என்றும் மறுத்துக் கூறிற்று.

'அருகன்' என்னும் செய்யுள் முதல் இச் செய்யுள் காறும் அருகபரமனைக் கர்த்தா அல்லன் என்று மறுத்துக் கூறிற்று. (4)

செய்யுள் - 154

சொல்ல தொன்று கொண்டி கலின்
ஆத்த னாட வேசொலின்
இல்லை யாம நாதி தானி
யம்பு மாற தெங்ஙனே
நல்ல வாம நாதி தான
வர்க்கு நாட வேயிலை
ஒல்லை யூம ரூம ருக்கு
ரைத்த வாற தொக்குமே.

பதவுரை

சொல் அது ஒன்று கொண்டு இகலின் ஆத்தன் நாடவே சொலின்	உன் அநாதி அருகபரமனாகிய சகலாத்தன் ஒரு சொல்லைக் கொண்டு ஆதி அருக பரமனாகிய இகலாத்தான் கேட்க மாறுபாடு இல்லாத பொருளைச் சொன்னான் என்று கூறின்,
இல்லையாம் அநாதி தான் இயம்பும் ஆறு அது எங்ஙனே	உன் ஆதி அருக பரமனுக்கு அநாதிகள் இல்லை என்று நீ கூறுகையால் அநாதியில் அருக பரமனுடன் ஒரு சொல் கேட்டுப் பலவிதமாக நூல் சொன்னபடி எப்படி? அஃதன்றியும்,

நல்ல ஆம் அநாதிதான் அவர்க்கு நாடவே இலை	உன் ஆதி அருகபரமனுக்கு நன்றாகிய மனம் முதலாகிய கருவியும் அறிதற்கு இல்லை, ஆகையால் அவன் கேட்டபடி எப்படி?,
ஒல்லை ஊமர் ஊமருக்கு உரைத்த ஆறு அது ஒக்கும் ஏ	அநாதி அருகபரமன் ஒரு சொல் சொல்ல அதனை ஆதி அருக பரமன் கேட்டுப் பலவிதமாக நூல் செய்தான் என்று நீ சொல்லுமது, ஊமர் சொல்ல ஊமர் கேட்டு நூல் செய்தார் என்னும் தன்மையை ஒக்கும் என்றவாறு.

விளக்கவுரை

அநாதியாகிய அருகபரமன் ஆகிய சகலாத்தன் கூறிய ஒரு சொல்லைக் கொண்டு ஆதி அருகபரமன் ஆகிய இகலாத்தன் கேட்க மாறுபாடில்லாத பொருளைச் சொன்னான் என்னில், ஆதி அருகபரமனுக்கு அநாதிகள் இல்லை என்று கூறினாய். அநாதியில் அருகபரமனுடன் ஒரு சொல் கேட்டுப் பலவிதமாக நூல் சொன்னவாறு எப்படி? அவனுக்கு மனம் முதலிய கருவியும் இல்லை, ஆகலின் அவன் கேட்டறிந்ததும் எப்படி? ஊமர் சொல்ல ஊமர் கேட்டு நூல் செய்தார் என்பது போல அநாதி அருகன் ஒரு சொல் சொல்ல ஆதி அருகன் கேட்டறிந்ததுமாம்.

ஒல்லை - விரைவு, ஒரு மாத்திரை, சொல்ல தொன்று என்பது பஞ்சாத்திமயம். *(5)*

செய்யுள் - 155

இன்ப பூமி சேரி கலில்
நாத னிவ்வி ருநிலத்
துன்ப மங்கு ணர்ந்தி டாமை
யிங்கு வந்த சொல்லிடான்
இன்ப பூமி யில்லி ருந்தி
ருந்தி யாவு மெய்திடில்
துன்ப பூமி யாமு ணர்ந்து
சொல்ல வல்ல தில்லையே.

பதவுரை

இன்ப பூமி சேர் இகல் இல் நாதன் இவ்விரு நிலத் துன்பம் அங்கு	புண்ணிய பூமியாகிய பொன்னெயில் வட்டத்து இருக்கிற மாறுபாடு இல்லாத

உணர்ந்திடாமை இங்கு வந்து சொல்லிடான்	அநாதி அருக பரமன் இந்தப் பெரிய பூமி யிடத்து உண்டாகிய துன்பங்களை அறியான் ஆகையாலும், அநாதிகள் இல்லை ஆதலானும் இந்தப் பூமியில் உண்டானவற்றை நீ இப்படிச் சொல் என்று சொல்லமாட்டான்,
இன்ப பூமியில் இருந்து இருந்து யாவும் எய்திடில்	புண்ணிய பூமிப் பொன்னெயில் வட்டத்து இருந்து அநாதி அருக பரமன் பூமியில் துன்பம் யாவையும் அறிந்து சாத்திரம் செய்யச் சொன்னான் என்று சொல்லின்,
துன்ப பூமி யாம் உணர்ந்து சொல்ல வல்லது இல்லையே	புண்ணிய பூமியாகிய பொன்னெயில் வட்டமும் துன்ப பூமி ஆகையால் நீ தலைமயங்கச் சொல்லும் சொல்லுக்கு யாம் அறிந்து சொல்லும் சொல் இல்லையாம் என்றவாறு.

விளக்கவுரை

புண்ணிய பூமியாகிய பொன்னெயில் வட்டத்தில் உள்ள அநாதி அருகபரமன் நிலவுலகத்துண்டாகிய துன்பங்களை அறியான், அநாதிகளும் இல்லை, ஆகலின் இப்பூமியில் உண்டானவற்றை இப்படிச் சொல் எனச் சொல்லமாட்டான். அப்புண்ணிய பூமியாகிய பொன்னெயில் வட்டத்திருந்து அநாதி அருகன் பூமியில் உள்ள துன்பம் யாவையும் அறிந்து சாத்திரம் செய்யச் சொன்னான் என்னில், அப்பொன்னெயில் வட்டமும் துன்ப பூமியேயாம். ஆகலின், மயங்கிச் சொல்லும் சொல்லுக்கு வேறு என்ன சொல்லவல்லேம். சகலாத்தர் ஆனந்த பூமியர் ஆகலின் அறிந்தது யாங்ஙனம்? என்க.

சொல்லவல்லதில்லை என்பது அருகன் தலை மயங்கிக் கூறுகையால் அவனை இகழ்ந்து கூறியது. இருந்திருந்து என்றது விரைவுச்சொல். சகலாத்தர் - ஆனந்தபூமியர் ஆதலால் அறிந்தது எங்ஙனம் என்றாயிற்று.

இச்செய்யுள் இரண்டும் நிகண்டவாதி சாத்திரத்தை மறுத்துக் கூறிற்று. (6)

செய்யுள் - 156

நிறைந்து காய மோடு சீவன்
நின்ற தாகி லிவ்வுடல்
குறைந்த போது தானு மித்தொ
டொக்க வேகு றைந்திடும்

இறந்து போகு மிக்க டமி
றந்த போது நீர்குடத்
துறைந்து டைந்தி டக்கு டமு
லர்ந்த வாற தொக்குமே.

பதவுரை

நிறைந்து காயமோடு சீவன் நின்றது ஆகில் இவ்வுடல் குறைந்த போது தானும் இத்தொடு ஒக்கவே குறைந்திடும்	இந்தத் சரீரத்தோடு ஆன்மாவானது நிறைந்து நிற்கும் என்று கூறினாய், அங்ஙனம் நிறைந்து நின்றதாகில் ஆன்மா நின்ற காயம் குறைந்த போது ஆன்மாவும் குறைந்து அறிவு குறைய வேண்டும்; அஃதன்றியும்,
இறந்து போகும் இக்கடம்	இந்தச் சரீரமானது கெட்டுப்போம்
இறந்த போது	இந்தச் சரீரம் கெட்டபோது,
நீர் குடத்து உறைந்து உடைந்திடஅக் குடம் உலர்ந்தவாறு அது ஒக்கும் ஏ	குடத்தின் கண் நிறைந்து நின்ற நீர் குடம் உடைய அந்நீரும் கெட்டாற்போல ஆன்மாவும்கூடக் கெட வேண்டும் ஆகையால், ஆன்மா சரீரம் முழுதும் நிறைந்து நிற்கும் என்று சொல்வாயல்லை என்றவாறு.

விளக்கவுரை

இந்தச் சரீரத்துடன் ஆன்மா நிறைந்து நிற்கும் என்றாய். அங்ஙனம் நிறைந்து நின்றதாயின் அந்தச் சரீரம் குறைந்தபோது ஆன்மாவும் குறையும், அறிவும் குறையும். சரீரம் அழிதலுள்ளது ஆகலின், சரீரம் அழியும்போது உயிரும் கூடக் கெடவேண்டும். அஃது எப்படி? என்னில், குடத்தில் நீர் நிறைந்துளது. அக்குடம் உடைந்து கெட அந்த நீரும் கெட்டொழிவது போல என்க. எனவே, ஆன்மா சரீரம் முழுவதும் நிறைந்து நிற்கும் என்பது பொருந்தாது.

இச்செய்யுள் ஆன்மா சரீரம் முழுதும் நிறைந்து நிற்கும் என்பதனை மறுத்துக் கூறிற்று. (7)

செய்யுள் - 157

கண்ட நூற ருந்தன் மாத்தி
காய மோட தன்மமும்
உண்டு மீது கீழு லாவி யுற்று
நின்றி டப்பொருள்

கொண்ட தென்னி லத்த மிவ்வி
ரண்டு தன்மை கூடிடா
வண்டு புட்கள் போலெ னின்வ
ழங்கி டாக ணத்திலே.

பதவுரை

கண்ட நூல் தரும் தன்மாத்தி காய மோடு அதன்மமும் உண்டு மீது கீழ் உலாவி உற்று நின்றிடப் பொருள் கொண்டது என்னில்	ஆன்மாவானது தான் செய்த புண்ணியத் தாலே தன்மாத்தி காயத்தை எடுத்துக் கொண்டு மேலாகப் பொருந்தி நன்மையைப் புசித்து அதிலே பரந்திடும் என்றும், தான் செய்த பாவத்தாலே அதன் மாத்திகாயத்தை எடுத்துக்கொண்டு கீழாகப் பொருந்தித் தீமையைப் புசித்து அதிலே பரந்திடும் என்றும் இப்படி இரண்டு காயத்தை ஒரு காலத்திலே மாறிமாறிக் கைக்கொண்டது என்று அருகபரமன் அருளிய நூல் சொல்லிற்று என்னில்,
அத்தம் இவ்விரண்டு தன்மை கூடிடா	ஆன்மா ஒரு காலத்திலே நின்று இரண்டு உரு எடுத்துக்கொள்ளமாட்டாது,
வண்டு புட்கள் போல் எனின்	மயிர்க்குட்டிப் புழு வண்டு ஆனாற் போலவும், மற்றொரு புழு வேட்டுவாளி ஆனாற் போலவும் வேறுபடக் காயம் எடுத்துக் கொள்ளும் என்று நீ கூறின்,
வழங்கிடா கணத்திலே	அந்த ஐந்துக்களும் கணப்பொழுதில் பேதித்தன இல்லையாம்; ஆகையால், ஆன்மா வேற்றுருவத்தை விரைய எடுத்துக்கொள்ள மாட்டாது என்றவாறு.

விளக்கவுரை

ஆன்மா தான் நின்ற தூலகாயத்தை விட்டுப்போய்ச் சூக்கும காயத்துடனே நின்று நன்மை தீமைப்பயனை அநுபவிக்குமது ஒழிந்து நின்ற தூயகாயத்திலே பேதப்பட்டு வேற்றுரு எடாது என்பது கருத்து.

அதன்மம் - அதன்மாத்திகாயத்தை. பொருள் அத்தம் இரண்டும் ஆன்மா. புட்கள் என்றது விகாரம். *(8)*

செய்யுள் - 158

நீடு பாவ புண்ணி யங்க
ளானி ரய வானகம்
கூடு வோர்க ளின்று நின்று
கூட்டு வோர்க ளின்மையின்
ஒடு மாக ணைத்தி றத்தின்
உற்ற வாறு ரைத்திரையேல்
வீடு மாக ணைக்கு நாடும்
வில்லி போல வேண்டுமே.

பதவுரை

நீடு பாவ புண்ணியங்களால் நிரய வானகம் கூடுவோர்கள் இன்று நின்று கூட்டுவோர்கள் இன்மையின்	ஆன்மாக்கள் செய்த புண்ணிய பாவங்களை அறிந்து நின்று அவற்றிலே செலுத்து விப்போன் ஒரு கர்த்தா இல்லை என்று நீ சொல்லின், மிக்க பாவங்களால் நரகங்களையும் மிக்க புண்ணியங்களால் சுவர்க்கங்களையும் பொருந்தி நின்று அநுபவிப்பார் இல்லையாம்,
ஒடும் மா கணைத் திறத்தின் உற்றவாறு உரைத்திரையேல்	விரைந்த செலவையுடைய பெரிய அம்பு இலக்கிலே பட்டாற்போலச் செய்யப்பட்ட புண்ணிய பாவங்கள் செய்தவனிடத்தே விரையத் தானே சென்று பற்றும் என்று நீ சொல்லுகின்றாய் ஆயின்,
வீடு மா கணைக்கு நாடும் வில்லி போல வேண்டும் ஏ	அப்படி விடப்பட்ட பெரிய கணைக்கும் இலக்கை நாடி எய்வான் ஒரு வில்லிபோல வேண்டும்; ஆதலால், ஆன்மாக்கள் செய்த கன்மங்களை அநுபவிக்கும்படி கூட்டுவான் ஒரு கர்த்தா வேண்டும் என்றவாறு.

விளக்கவுரை

ஆன்மாக்கள் செய்த புண்ணிய பாவங்களை அறிந்து அவ்வவற்றின் பயனைப் புசிக்கச்செய்வோன் ஒரு கர்த்தா இல்லை எனக் கூறினால், பாவப்பயனாக நரக நுகர்ச்சியையும் புண்ணியப்பயனாக சுவர்க்க அநுபவத்தையும் அநுபவிப்பார் இலராம். விரைந்து செல்லும் அம்பு இலக்கில் தப்பாமல் பட்டதுபோல, ஒருவன் செய்த புண்ணிய பாவங்களும் தப்பாமல் செய்தவனைச் சென்று பற்றும் என்பாய். அவ்வாறு சொல்லின், அப்படிச் செலுத்திய அம்புக்கும் இலக்கைக் குறித்து

எய்வோனாகிய ஒரு வில்லி வேண்டப்படும். அதுபோல, ஆன்மாக்கள் செய்த கன்மங்களை அறிந்து அவற்றின் பயனை அநுபவிக்கும்படி கூட்டுவதற்கு ஒரு கர்த்தா வேண்டும் என்று அறிவாயாக.

கூட்டுவோரும் இன்று என உம்மை தொக்கது. வீடு மா கணை விகாரம்.

இச்செய்யுள் நரக சுவர்க்கம் கர்த்தா இல்லை என்பதனை மறுத்துக் கூறிற்று. (9)

செய்யுள் - 159

ஏண தொன்று புற்க லத்தின்
எய்து மென்னி னாசமே
காண லாகு மக்க டங்க
ழிந்த தன்மை யில்லவை
பூண வேணு மேலு றும்பொ
ருத்த மின்மை யொன்றினின்
மாண வேய ணுப்பொ ருணி
கண்ட வாதி வைத்ததே.

பதவுரை

ஏணது ஒன்று புற்கலத்தின் எய்தும் என்னின்	நீ கூறிய புற்கலப் பொருளாகிய கல்லும் இரும்பும் மரமும் ஓர் அறிவை உடைத்து என்று நீ கூறின்,
நாசமே காணல் ஆகும் அக்கடம் கழிந்த தன்மை இல் அவை	ஓர் அறிவை யுடைய எல்லாம் தாமே கெடுதல் காணலாகும், அக் கல் இரும்புகள் தாமே வடிவுகெடும் முறைமை காண்டலில்லை; அஃதன்றியும்,
பூண வேணும் மேல் உறும் பொருத்தம் இன்மை	பொருந்த ஓர் அறிவு உண்டாயின் கல் இரும்பு மேல் நரக சொர்க்கம் பொருந்த வேண்டும், அது பொருந்தாமையும் காணலாகும்,
ஒன்றினின் மாணவே அணு பொருள் நிகண்டவாதி வைத்தது ஏ	ஒன்றினும் ஓர் அறிவு உடைத்து என்று சொல்லப்படாத கல் இரும்புகள் அணுப் பொருளாக மாட்சிமைப்படவைத்து நிகண்டவாதி! நீ சொன்னாய், இதனை வேறு சொல்வார் இல்லை என்றவாறு.

விளக்கவுரை

நீ கூறும் புற்கலப் பொருளாகிய கல், இரும்பு, மரம் முதலியன

ஓரறிவையுடைத்து எனக் கூறின், ஓரறிவையுடையன எல்லாம் தாமே கெடக் காணலாம். கல் இரும்பு முதலியன தாமே வடிவுகெடக் கண்டிலம். அன்றியும், அவை ஓரறிவுடைத்தாயின் கல் இரும்பு முதலியனவும் சொர்க்க நரகம் புகவேண்டும். அவை அவ்வாறு செல்லக் கண்டிலம். கல் இரும்பு முதலியவைகளை அணுப்பொருளாக வைத்து ஓரறிவு உடைத்து என உன்னையன்றிச் சொல்வார் வேறிலர். ஆகலின், கல் இரும்பு முதலியன அணுப்பொருளன்று என்க.

காணலாகும் என்பதை இரண்டிடத்தினும் கூட்டுக. பொருத்தமும் என்னும் உம்மை தொக்கு நின்றது. மாணவே என்றது இகழ்ச்சிக் குறிப்பு. ஏண தொன்று - பற்றினால் வலியுள்ளது.

இச்செய்யுள் கல், இரும்புகள் அணுப்பொருள் என்பதனை மறுத்துக் கூறிற்று. *(10)*

செய்யுள் - 160

ஆறு காரி யங்கண் மாற
வேத வங்க ளாமெனின்
மாறி வாணி கஞ்செ யாதி
ருக்க வந்தி டாதனம்
ஈறி லாத வூழ தென்னின்
எங்கு முள்ள தூழதே
பேறு காரிய யம்வி டப்பி
றப்ப தில்லை பேசிலே.

பதவுரை

ஆறு காரியங்கள் மாறவே தவங்கள் ஆம் எனின்	அறுவகை உவர்ப்புக்களும், நீங்கவே தவம் ஆம் என்று நீ கூறின்,
மாறி வாணிகம் செயாது இருக்க வந்திடா தனம்	பொருள்களைப் பரிவர்த்தனை செய்து வாணிகம் செய்யாது இருப்பப் பொருள் வந்தடையாது; அதுபோல, உவர்ப்பு மாறி ஒரு தவம் செய்யா திருந்தால் தவம் வந்து கூடாது,
ஈறு இலாத ஊழது என்னின் எங்கும் உள்ளது ஊழதே	கேடில்லாத முன்னை வினைப்பயனாலே தவமுண்டாம் என்று சொல்லின், உவர்ப்பைக் கைவிடுதல் முதலாயினவும் முன்னை வினைப்பயன் ஆம் ஆதலால்,

பேறு காரியம் விட பிறப்பு அது இல்லை பேசில் ஏ	தவமாகிய பேறு தவம் செய்தலாகிய காரியத்தை விட்டால் உண்டாகாது சொல்லுங் காலத்து என்றவாறு.

விளக்கவுரை

இச் செய்யுள் கந்த, ரச, ரூப, பரிச, சத்த, பரிணாமம் ஆகிய ஆறு உவர்ப்புக்களையும் விடுதலே தவம் என்பதனை மறுத்து, தவ ஒழுக்கங்களினின்று தவம் செய்தாலல்லது ஆறு காரியத்தை விடுதலினாலேயே தவம் சித்தியாது என்பது கூறிற்று.

ஆறு காரியம் - உழவு, தொழில், வரைவு, வாணிகம், சிகைஷ, சிற்பம் என்பாரும் உளர். (11)

செய்யுள் - 161

உடல்வ ருந்தல் மாத வங்க
ளுறுதி யென்று ரைத்திடில்
படவ ருந்து நோயி னோர்கள்
படர்வர் பொன்னெ யிலெனாய்
திடவ ருந்த லின்ப மிச்சை
செய்தல் செய்தல் செய்தியேல்
கெடவ ரிந்தி டாயு ணாசி
கேடி லின்ப முன்னியே.

பதவுரை

உடல் வருந்தல் மாதவங்கள் உறுதி என்று உரைத்திடில்	சரீரம் வருந்துதலே பெரிய தவத்திற்கு உறுதி என்று நீ சொல்லின்,
பட வருந்து நோயினோர்கள் படர்வர் பொன்னெயில் எனாய்	துக்கமாக உடல் வருந்தச் சரீர இன்பத்துக்கு மாறுபாடு செய்தலைச் செய்வதுவே கேடில்லாத மோட்சத்தின் செய்தி என்றமையான் நோயினால் மனோ துக்கிகளாய் மெலிவோர் பொன்னெயில் வட்டம் சேர்குவர் என்று நீ சொல்லாய்,
திட வருந்த இன்பம் இச்சை செய்தல் செய்தியேல்	முத்தியின்பத்தை ஆசை செய்தல் சரீரம் வருந்தச் செய்தல் தன்மையே என்னின்,
கெட அரிந்திடாய் உன் நாசி கேடு இல் இன்பம் உன்னியே	அந்த முத்தி இன்பத்தைக் கருதி உன் மூக்கை அறுத்திடுவாயாக என்றவாறு.

விளக்கவுரை

சரீரம், வருந்துதலே மோட்சம் என்னில், துக்கமொன்றால் உடல் வருந்தச் சரீர சுகத்துக்கு மாறுபாடாகிய ஒன்றைச் செய்தலே மோட்சம் என்று ஆம். நோயினால் மனோதுக்கிகளாய் மெலிவோர் பொன்னெயில் வட்டத்தில் சேர்வர் என நீ சொல்லாய். முத்தியின்பத்தை விரும்பி உடலை வருத்துதல் இயல்பாம் என்னில், நீ அம்முத்தியின்பத்தைக் கருதி உன்னுடைய மூக்கை அறுத்துக் கொள்வாயாக.

திடம் என்பது திட என நின்றது. வருந்த என்பது உடல் வருந்த என்றாயிற்று. செய்தி - தன்மை.

இச்செய்யுள் சரீரம் வருந்துதல் மோட்சம் என்பதனை மறுத்துக் கூறிற்று.

(12)

செய்யுள் - 162

பூர்வ கன்ம மற்றி டப்பு
சித்த பின்பு பொன்னெயில்
நேர்வ தென்னி னக்கன் மத்து
நிச்ச யமிலா மையிற்
தீர்வ தின்மை தீரின் வாயில்
சேர்வ தின்மை தெண்கடல்
நீர்வ றந்த பின்பு பூஞை
மீன ருந்த நின்றதே.

பதவுரை

பூர்வ கன்மம் அற்றிட புசித்த பின்பு பொன் எயில் நேர்வது என்னின்	முன் ஜெனனங்களில் உள்ள கருமம் தொலைய இந்த ஜெனனத்திலே புசித்தால் பொன்னெயில் வட்டத்தைச் சென்று பொருந்தும் என்று நீ சொல்லின்,
அக்கன்மத்து நிச்சயம் இலாமையில் தீர்வது இன்மை	அக்கன்மத்துக்கு அளவு இன்மையால் நியமிக்க அறிவது இல்லையாய்ப் புசித்துத் தொலையாதாம்,
தீரின் வாயில் சேர்வது இன்மை	கன்மம் புசித்துத் தொலைவு பெற்றால் இந்திரியங்களுடன் சத்தாதி கூடுவது இன்மையாம்; அவை கூடாதொழியவே மோக்ஷ உபாயமான தவம் செய்தலும் இல்லையாம்; ஆதலால், கன்மத்தைத்

	தொலையப் புசித்துப் பொன்னெயில் வட்டத்தை அடைவோம் என்று நீ கருதியிருத்தல்,
தெண் கடல் நீர் வறந்த பின்பு பூனை மீன் அருந்த நின்றது ஏ	பூனை தெளிந்த சமுத்திரத்து நீர் வற்றின வுடனே மீன் தின்னக் கடவோம் என்று கருதி அது வற்றுமளவும் பார்த்திருந்த தன்மைக்கு ஒக்கும் என்றவாறு.

விளக்கவுரை

முற்பிறப்புக்களில் உள்ள கன்மம் தொலைய இப்பிறப்பிலே அநுபவித்துத் தொலைத்தால் பொன்னெயில் வட்டத்தைச் சென்று கூடலாம் என்னில், அக்கன்மத்துக்கு அளவு இன்மையால் நியமிக்க அறிவதின்றிப் புசித்துத் தொலையாது. கன்மம் புசித்துத் தொலைந்தால் இந்திரியங்களுடன் சத்தாதி கூடுவது இன்றாம். அவை கூடாதொழியவே மோட்சத்துக்குக் காரணமான தவம் செய்தலும் இன்று. ஆதலால், கன்மத்தைத் தொலையப் புசித்துப் பொன்னெயில் வட்டத்தை அடைவோம் என்று கருதியிருத்தல் பூனையானது தெளிந்த கடல் நீர் முற்றும் வற்றினவுடன் மீனைப்பிடித்துத் தின்போம் எனக்கருதிக் கடல் நீர் வற்றுமளவும் காத்திருந்ததை ஒக்கும் என்க.

ஏகாரம், தேற்றம். தெண்கடல் என்றதனால் கன்மம் அளவில்லை என்பது கருத்து.

இச்செய்யுள் கன்மம் தொலையப் புசித்துவிட்டால் மோட்சம் அடையலாம் என்பதனை மறுத்துக் கூறிற்று. *(13)*

செய்யுள் - 163

கூறு கூவன் மன்னு மக்கு
டங்கு றித்து நீள்கரை
ஏற லுற்ற தன்மை நீயொ
ருத்த ரின்றி யேறுதல்
வேறொ ருத்த னக்கு டத்தை
மீது நின்றெ டுக்கவே
ஏற லுற்ற தன்மை யிற்சி
வன்றி றத்து நின்றிடே.

பதவுரை

கூறு கூவல் மன்னும் அக்குடம் குறித்து நீள் கரை ஏறல் உற்ற தன்மை நீ ஒருத்தர் இன்றி ஏறுதல்	சொல்லப்பட்ட கிணற்றின் உட்கிடக்கும் குடம் கரையை நோக்கித் தானே ஏறினாற் போலும், ஒரு கர்த்தா இன்றிப் பொன்னெயில் வட்டத்தை நீ சேர்குவம் என்னும் தன்மை,
வேறு ஒருத்தன் அக்குடத்தை மீது நின்று எடுக்கவே ஏறல் உற்ற தன்மையில் சிவன் திறத்து நின்றிடு ஏ	ஒருவன் அந்தக் கிணற்றில் கிடந்த குடத்தை மேலே நின்று எடுக்க அக்குடம் கரை ஏறிய தன்மை யொக்கக் கர்த்தா நின்று கன்மத்தைத் தொலைவித்து மேலாகிய வீடு பேற்றைக் கொடுக்க வேண்டும்; அப்படிக் கொடுப்பான் சிவனே ஆகையால், அந்தச் சிவனையே தெய்வமாகக் கொண்டு அவன் அருளிய வேதாகமங்களின் திறமாகிய சரியை கிரியா யோக ஞானத்தாலே நீயும் நிற்பாயாக என்றவாறு.

விளக்கவுரை

இச்செய்யுள் கர்த்தா கூட்டாமல் மோட்சம் கூடாது என்பது கூறிற்று.

அருகன் என்னும் செய்யுள் முதல் இச்செய்யுள் காறும் பதினான்கு திருவிருத்தம் நிகண்டவாதி மதத்தை மறுத்துக் கூறிற்று. *(14)*

ஆறாவது – நிகண்டவாதி மதமறுதலை முற்றிற்று.

பாயிரம் உள்படத் திருவிருத்தம் – **163.**

நிகண்டவாதி மறுப்புத் தொகுப்பு

1. அருகன் இறையன்று

அருகன் தீக்குணங்கள் எட்டும் நீங்கிய பின் எட்டு நற்குணங்கள் வாய்க்கப் பெற்றான் என்றால், அஃது இறைவனின் குணமன்று. மேலும் விடப்பட்ட தீக்குணங்கள் முன்பு உண்டென்பதும் பெறப்படும். இத்தகைய அருகன் தருமத்திலே பொருந்தினான் ஆயின், அவனை அத்தருமத்திலே பொருத்தினவன் யார்? இதனை ஆராயின் ஒருவன் கற்பிக்க ஒருவன் அவ்வழி நடத்தலாகும். எனவே அருகனுக்கு மேலும் ஒருவன் உளன் என்பது பெறப்படும். ஆகவே சமண சமயத்தார் கடவுள் என வழிபடுவது அருகனையா? அல்லது அவனது இறைவனையா? யாவர் என்று உரைப்பது?

அருகன் மனமுதலான கருவிகளின்றி உலக முழுவதும் அறியும் வல்லமையுடையனாயின், அவன் உடலோடு பொருந்தி நிற்றல் ஏன்? அவன் உடல் நீங்கி நிற்பன் எனின் அவன் யாவற்றையும் காண முடியாது. முக்காலத்தையும் ஒரு கணத்தே உணரவும் முடியாது.

அறநூல்களை ஆராய்ந்து ஒப்பற்ற அரசரைப் போல உயிர்க்குக் கருணை புரியவே உடலெடுத்தான் எனின், அவ்வரசரைப் போன்று உலகில் நின்று நீதி செலுத்தாது பொன்னெயில் வட்டத் திருப்பதேன்? எனவே அருகன் அரசனை ஒவ்வான்.

அருகனது ஒரு சொல்லைக் கொண்டு இகலாத்தன் (அநாதி அருகன்) நூலியற்றினான் எனின், அனாதியாகிய அருக பரமனுக்கு மனமுதலாகிய கருவிகள் இல்லையாதலால் அவன் சொல்ல இவன் கேட்பது எவ்விதம் பொருந்தும்? இவ்விதம் கூறுதல் ஊமர் சொல்ல ஊமர் கேட்டு நூல் செய்தலுக்கு ஒப்பாகும்.

இன்ப பூமியாகிய பொன்னெயில் வட்டத்திருப்பவன் இவ்வுலகத்தார் படும் துன்பங்களை அறியான். அறிதற்கு மன முதலிய கருவிகள் இல்லையாதலால் இப்பூமியில் உண்டாயவற்றைப் பற்றிச் சொல்ல மாட்டான். அவன் இன்ப பூமியில் இருந்து துன்பம் யாவற்றையும் அறிய வல்லனாயின் அவனது பொன்னெயில் வட்டமும் துன்ப பூமியாகும்.

2. உயிரின் நிலை

இவ்வுடம்போடு உயிர் நிறைந்து நிற்கு மெனின், உடல் தேயும் பொழுது உயிரும் அறிவும் குறைய வேண்டும். அன்றியும் உடல் அழியும்போது குடத்திலுள்ள நீர் குடம் உடைய அந்நீரும் சிதைதல் போல உயிரும் அழிய வேண்டும். ஆகையால் உடல் முழுதும் உயிர் நிறைந்து நிற்காது.

உயிரானது தான் செய்த புண்ணியத்தால் நன்மையை நுகர்ந்து மேற்செல்லு

மென்றும், தான் செய்த பாவத்தால் தீமையை நுகர்ந்து கீழ்ச் செல்லுமென்றும் இவ்விதம் ஒரே காலத்து இரண்டு உடலை எடுக்குமெனின், இவ்விதம் உயிர் ஒரே காலத்து இரண்டும் கொள்ளாது. மயிர்க்குட்டிப் புழு வண்டானாற் போலவும், புழு குளவியானாற் போலவும் மாற்றமடையுமெனின் அவை ஒரு காலத்து ஏற்படுவதில்லை. எனவே உயிர் வேற்றுருவை ஒரே காலத்தில் எடுத்துக் கொள்ளாது.

3. இறை உண்டு

உயிரை வினையோடு கூட்டும் இறைவன் இல்லை எனின் அறம் செய்தார் துறக்கத்திற்கும் மறம் செய்தார் நிரயத்திற்கும் தாமே செல்ல முடியாது. அம்பு குறித்த இலக்கிலே படுவது போல, புண்ணிய பாவங்கள் செய்தவனிடத்து விரையுமெனில் அவ்வம்பைச் செலுத்த ஒருவன் வேண்டுவது போல, உயிரை வினையிற் செலுத்த இறைவன் வேண்டும்.

4. கல்லும் மரமும் ஓரறிவன்று

அணுப்பொருளாகிய கல்லும், இரும்பும், மரமும் ஓரறிவுடையன எனின், ஓரறிவுடையன தாமே கெடுகின்றன. ஆனால் இக்கல் இரும்புகள் தாமே வடிவம் கெடுதலில்லை. மேலும் இதற்கு ஓரறிவுண்டாயின் துறக்க நிரயங்கள் செல்ல வேண்டும். அதுவும் பொருந்தவில்லை. எச்சமயத்திலும் ஓரறிவுடையன என்று கூறப்படாத இவைகளை உயிர்ப்பொருள் என்று நிகண்டவாதம் குறிப்பிடுவது பொருத்தமின்று. (எனினும் புல்லும் மரனும் ஓரறிவினவே எனத் தொல்காப்பியம் குறிப்பிடுகின்றது.)

5. தவம்

சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் அவற்றின் வளர்ச்சி ஆகிய அறுவகை உவர்ப்புகளும் நீங்கவே தவம் கிட்டுமெனின், பொருள்களைப் பண்டமாற்றி வாணிகம் செய்யவில்லையானால் பொருள் வந்தடையாது. அதுபோன்று உவர்ப்பு நீங்கித் தவம் செய்யாதிருந்தால் தவம் வந்து சேராது. வினைப்பயனால் தவமுண்டாமெனின் உவர்ப்பைக் கைவிடுதலும் முன்னை வினைப்பயனாதலால் தவப்பேறும் தவத்தைக் கைவிட்டால் உண்டாகாது.

உடல் வருந்துதலே தவமாகுமெனின், நோயினால் உடல் வருந்துபவர்களும், பொன்னெயில் வட்டஞ் சேரவேண்டும். வீடுபேற்றிற்காக உடலை வருத்துதல் நன்கெனின், அத்தகைய வீடுபேற்றிற்காக நமது மூக்கை அறிந்து கொள்ளலாமா?

முன் செய்த வினைப்பயனை முற்றிலும் உயிர் நுகர்ந்த பின்னரே வீடுபேறு கூடுமெனின், அவ்வினையை அளவிடுதல் முடியாது. அந்நிலையில் பொறிகள் புலன்களை நுகரவும் மாட்டா. தவஞ்செய்தலும் இயலாது. எனவே வினைப்பயனை முற்றிலும் நுகர்ந்தபின் வீடு அடையக் கருதுதல், பூனை கடல் நீர் வற்றிய பின் அதிலுள்ள மீனைத் தின்னுதற்கு நினைத்தல் போலாகும்.

இறையின்றி உயிர் பொன்னெயில் வட்டஞ்சேர நினைதல் கிணற்றினுள் கிடக்கும் குடம், தானே கரை சேருதற்கு ஒப்பாகும். இஃது இயலாது. எனவே கிணற்றுட் கிடக்கும் குடத்தை ஒருவன் எடுத்துக் கரை சேர்த்தல் போல, இறைவன் ஒருவன் வினையைப் போக்கி உயிர்க்கு வீடுபேறு அளிப்பன். அவ்விதம் அளிப்பவன் சிவபெருமானே. அவனைத் தெய்வமெனக் கொண்டு சரியை, கிரியை, யோக, ஞான நெறிகளில் நிற்க வேண்டும்.

7. ஆசீவகன் மதம் முன்னுரை

	வகை	சிவஞான சித்தியார் பரபக்கத்தில் கூறப்படும் சமணத்தின் இருபெரும் பிரிவுகளில் ஒன்று.
1.	தோற்றுவித்தவர்	மற்கலி. இவர் வர்த்தமான மகாவீரரின் மாணவர். ஆயினும் அவரோடு மாறுபட்டுச் செய்த சமயம் இதுவாகும்.
2.	மணிமேகலை நூற்குறிப்பு	"மற்கலி நூலின் வகை"
3.	பெயர்க்காரணம்	சீவகன் - ஜீவ வாழ்க்கை. ஆசீவகன் - ஜீவ வாழ்வின்மை. ஆசீவகன் - சீவனை உண்ணாதவர் என்றும் பொருள் கொள்ளலாம். புலால் உண்ணாதவர். உடை அணிபவர். ஆசீவ - வாழும் முறை என்றும் பொருள் உண்டு. தன் தலைமயிரைப் பறித்துக்கொண்டு பிறரும் அவ்வாறே செய்க என்று அறம் கூறுவன்.
4.	சிலப்பதிகாரம்	ஆசீவகனிடத்துத் துறவு பெறுதலைச் சிலப்பதிகாரம் கண்ணகி தாதை கடவுள் கோலத் தண்ணலம் பெருந்தவர் தாசீவகரமுன் புண்ணியதானம் புரிந்தறங்கொள்ளவும் என உரைக்கிறது.
5.	கொள்கைகள்	வைதீகப்புறக்கணிப்பு - வேதவேள்விகளையும், கடவுள் வழிபாட்டையும் மறுத்தல் - கடவுள் உண்மையை மறுத்தல் - கடவுளுக்குப் பதில் அண்ட அமைப்பில் நியதிகளை வரையறுத்தல் - இயற்கையை மதித்தல் அருக்கன் நூலைப் பின்பற்றுதல். பூதங்கள் 4 மட்டும் + உயிர் = அணுக்கள் ஐந்து. உயிரைக் கண்ணால் காண முடியாது. வினைப் பயனால் வேறு வேறு உடலெடுக்கும். அதனை மக்களால் காண முடியாது. அருகன் அறிவான். இவ்வுயிர் நான்கு பூத அணுக்களால் ஆன உடலைப் போய்ச் சேரும். வினைப்பயன் நுகர்ச்சியை இம்மதம் ஏற்றுக் கொள்கிறது. புண்ணிய + பாவம் + ஐவகை அணுக்கள் = ஏழுவகைப் பொருள்கள். முன்வினைப்பயன் நுகர்தல் உண்டு.

சமணம் 7.(அ) ஆசீவகன் மதம்

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரியவிருத்தம்

செய்யுள் - 164

என்னுயி ரதற்குப் போல
எவர்க்குமொத் திருப்ப னென்று
தன்னுயிர் வருந்தத் தானும்
தலையினைப் பறித்துப் பார்மேல்
மன்னுயி ரெவற்றி னுக்கும்
வருந்தவே யறங்கள் சொல்லும்
அன்னதோர் வாய்மை யாசீ
வகனம ணர்களிற் கூறும்.

பதவுரை

என் உயிர் அதற்குப் போல எவர்க்கும் ஒத்து இருப்பன் என்று	எனது ஆன்மாவுக்கு யான் கிருபை செய்யும் தன்மை போல எல்லா ஆன்மாக்களுக்கும் யான் கிருபை செய்திருப்பன் என்று சொல்லின்,
தன் உயிர் வருந்தத் தானும் தலையினைப் பறித்து	தன்னுடைய ஆன்மா வருத்தப்படத் தன் தலை மயிரைப் பறித்து,
பார் மேல் மன் உயிர் எவற்றினுக்கும் வருந்தவே அறங்கள் சொல்லும் அன்னது ஓர் வாய்மை ஆசீவகன் அமணர்களில் கூறும்	உலகின் கண் நிலைபெற்ற ஆன்மாக்கள் எல்லாவற்றினுக்கும் வருத்தம் உறுவதுவே அறங்களாகச் சொல்லும் என்னும் தன்மையாகிய சொல்லை அமணர் இருவகையரில் ஆசீவகன் சொல்லும் என்றவாறு.

விளக்கவுரை

என்னுயிர்க்கு யான் இரங்குவதுபோல, எவ்வுயிர்க்கும் யான் அருளுடையேன் என்று தன்னுயிர் வருந்தும்படி தன் தலைமயிரைப் பறித்து உலகில் நிலைபெற்ற ஆன்மாக்கள் எல்லாவற்றினுக்கும் வருத்தமுறவே அறங்கள் இயம்புவான் ஆசீவகன். அவன் சமணருள் ஒரு வகையினன்.

ஓர் - அசை. தலை - ஆகுபெயர். சினையும் முதலும் மயங்கிற்று.

மேல் ஆசீவகன் மதம் கூறுவார் அதனுள் இச்செய்யுள் ஆசீவகனது இயல்பு கூறிற்று. (1)

செய்யுள் - 165

வரம்பிலா வறிவ னாதி
வைத்தநூற் பொருள்க டாமும்
நிரம்பவே யணுக்க ளைந்து
நிலம்புன றீகால் சீவன்
பரந்திவை நின்ற பான்மை
பாரது கடினஞ் சீதம்
தரும்புனல் சுடுந்தீ வாயுச்
சலித்திடு முயிர்போ தத்தாம்.

பதவுரை

வரம்பு இலா அறிவன் ஆதி வைத்த நூல் பொருள்கள் தாமும் நிரம்பவே அணுக்கள் ஐந்து	அநந்தஞானன் ஆகிய அருகபரமன் ஆதியிலே உண்டாக்கப்பட்ட நூலின் பொருள் தானும் பூரணமாக ஆன்மாக்கள் ஐந்தென்று கூறும்; அவையாவன,
நிலம் புனல் தீ கால் சீவன்	பிருதிவி அப்பு தேயு வாயு ஆன்மா
பரந்து இவை நின்ற பான்மை பாரது கடினம் சீதம் தரும் புனல் சுடும் தீ வாயு சலித்திடும் உயிர் போதத்து ஆம்	அவ் ஆன்மாக்கள் ஐந்தும் விரிந்து நின்ற முறைமை சொல்லில் பிருதிவி கடினமாம் அப்பு சைத்தியமாம் அக்கினி உஷ்ணமாம் வாயு சலனமாம் ஆன்மா போதத்தை யுடைத்தாம் என்றவாறு.

விளக்கவுரை

அநந்த ஞானன் என்னும் அருகபரமன் ஆதியிற் கூறிய நூலில் பூரணமாக ஆன்மாக்கள் ஐந்தும் எனக் கூறப்படும். அவை: நிலம், நீர், தீ, கால், ஆன்மா என்பன. அவ்வைந்தின் குணங்கள் முறையே பிருதிவி கடினம், அப்பு குளிர்ச்சி, தேயு வெம்மை, வாயு சலனம், ஆன்மா அறிவுடையது ஆம் என்க.

ஈற்றில் நூல் கூறும் என ஒரு சொல் வருவித்துரைக்க. ஆம் என்பதனை ஐந்தினோடும் கூட்டுக.

இச்செய்யுள் ஆசீவகன் மதமாகிய அணுக்கள் ஐந்தின் பெயரும் குணமும் கூறிற்று. (2)

செய்யுள் - 166

பார்புனல் பரக்குங் கீழ்மேற்
படர்ந்திடுந் தேயு வாயுச்
சேர்வது விலங்கி னுள்ளம்
அவற்றொடுஞ் சேரும் வேறு
சார்வது பெற்ற போது
சார்ந்தவப் பொருளின் றன்மை
நேர்வது மாகி நிற்கும்
இதுபொரு ணிகழ்த்து மாறே.

பதவுரை

பார் புனல் பரக்கும் கீழ்	பிருதிவியும் அப்புவும் கீழே விரிவை யுடைத்தாய் நிற்கும்,
மேல் படர்ந்திடும் தேயு வாயு	தேயுவும் வாயுவும் மேலே விரிவை யுடைத்தாய் நிற்கும்,
சேர்வது விலங்கின் உள்ளம் அவற்றொடும் சேரும்	ஆன்மாவானது காயத்தோடும் சேரும் சேர்வையை நீங்கினால் பிருதிவி அப்புத் தேயு வாயுவாகிய நாலு ஆன்மாக்களோடும் கூடி நிற்கும்,
வேறு சார்வது பெற்ற போது சார்ந்த அப்பொருளின் தன்மை நேர்வதும் ஆகி நிற்கும்	இவற்றை வேறுபடக் காயத்தைச் செறிவாகப் பெற்ற இடத்துக் காயத்தை இடமாகக் கொண்டு அதனது தன்மை தான் ஆகப் பொருந்தி நிற்கும்,
இது பொருள் நிகழ்த்தும் ஆறு ஏ	இது பஞ்சான்மாக்கள் செய்தியைச் சொல்லும் வழி என்றவாறு.

விளக்கவுரை

பிருதிவியும் அப்புவும் கீழே பரவும் தன்மையுடையன. தேயுவும் வாயுவும் மேலே விரிந்து செல்லும் தன்மையுடையன. ஆன்மா உடம்புடன் கூடியிருக்கும். அதனை நீங்கின் உயிர் மற்றை நான்கு ஆன்மாக்களுடனும் கூடிநிற்கும். அவற்றைச் சார்தலின்றி உடம்பைப் பெற்ற இடத்து அதன் தன்மையைப் பொருந்தும்.

இச்செய்யுள் பஞ்சான்மாக்களும் நிற்கும் வழி கூறிற்று. (3)

செய்யுள் - 167

உணர்தரா வணுக்க ணான்கும்
ஒன்றுகெட் டொன்ற தாகா
புணர்தரா வொன்றிற் புக்கொன்
றாயினும் பொருந்தி வாழும்
அணைதரா புதிய வந்திங்
கழிதரா பழைய வான
இணைதரா வொன்றொன் றாகி
மாறுத லொன்று மின்றே.

பதவுரை

உணர்தரா அணுக்கள் நான்கும்	ஜீவனை ஒழிந்த நான்கு ஆன்மாக்களும் ஒன்றை யொன்று அறியும் தன்மை அல்லவாம்,
ஒன்று கெட்டு ஒன்றது ஆகா	அவ்ஆன்மாக்கள் நான்கும் ஒரொன்று கெட்டு ஒரொன்றுமாகா,
புணர்தரா ஒன்றில் புக்கு ஒன்று	ஓர் ஆன்மாவினிடத்திலே புக்கு ஓர் ஆன்மா கூடி நில்லாது,
ஆயினும் பொருந்தி வாழும்	அப்படிக் கூடாவாயினும் காயமாம் இடத்துப் பொருந்தியும் நிற்கும்,
அணைதரா புதிய வந்து இங்கு	அவ்வான்மாக்கள் அநாதியிற் கூட்டமின்றி இவ்விடத்துப் புதிதாக வந்து கூடுவதும் செய்யா,
அழிதரா பழைய ஆன	பழைய ஆன்மத்தன்மை கழிதலும் உண்டாகாது,
இணைதரா ஒன்று ஒன்று ஆகி	அவ்வான்மாக்கள் கூடுமிடத்துச் சேரக்கூடுவ தொழிந்து ஒரோ ஒன்றாகக் கூடுவதும் செய்யா,
மாறுதல் ஒன்றும் இன்று ஏ	இவையிற்றின் செய்தி ஒருக்காலும் ஒழிவதில்லை என்றவாறு.

விளக்கவுரை

உயிரை யொழித்து ஒழிந்த நான்கு ஆன்மாக்களும் ஒன்றையொன்று அறியும் தன்மையுடையன அல்ல; அறிவற்றன. அவை நான்கும் ஒன்று கெட்டு ஒன்றாகா.

ஒரு ஆன்மாவிலே புகுந்து ஒரு ஆன்மா கூடி நில்லாது. அப்படிக் கூடாவாயினும் உடம்பாமிடத்துக் கூடியும் நிற்கும். இவை அநாதியிற் கூட்டமின்றி இவ்விடத்துப் புதிதாக வந்து கூடுவன அல்ல. பழமையாகிய உயிர்த்தன்மை கெடுதலும் இன்று. அவ்வான்மாக்கள் கூடுமிடத்து ஒரு சேரக் கூடுவன. அல்லாமல் ஒவ்வொன்றாகக் கூடுவன அல்ல. இவற்றின் செயல் எக்காலத்தும் மாறுபடா.

இச்செய்யுள் ஆன்மா ஒழிந்த நாலுவகை அணுக்களும் வேறுபட்டு நிற்கும் முறைமையும் அறிவின்மையும் அழிவின்மையும் கூறிற்று. (4)

செய்யுள் - 168

கொண்டுமுன் விரித்த னீட்டல்
குறுக்குதல் குவித்த லூன்றல்
உண்டுதின் றுலர்த்தன் மீட்டல்
உடைத்திட லொன்று மொண்ணா
விண்டுபின் புறம்பும் போகும்
வேறுநின் றுள்ளு மேவும்
பண்டுமின் றென்று மெங்கும்
பரந்தொரு தன்மைப் பாலே.

பதவுரை

கொண்டு முன் விரித்தல் நீட்டல் குறுக்குதல் குவித்தல் ஊன்றல் உண்டு தின்று உலர்த்தல் மீட்டல் உடைத்திடல் ஒன்றும் ஒண்ணா	முன்கூறிய ஆன்மாக்களை முன்னே உண்டாக்கிக் கொண்டு பரப்புதலும், அதனை வர்த்திப்பித்தலும், அதனை எல்லையிலே குறுக்குதலும், சேர எடுக்குதலும், அவையிற்றிலே உற்று நிற்றலும், அதனை உண்டு தின்று கெடுத்தலும், மீள உண்டாக்கு தலும், இவையிற்றைப் பிளந்திடுதலும் என்னும் இவையிற்றின் ஒன்றும் செய்ய ஒண்ணாது,
விண்டு பின் புறம்பும் போகும்	விரிந்த அண்டகோள்கைக்கு அப்புறத்தும் போகும்,
வேறு நின்று உள்ளும் மேவும்	அதற்கு வேற்றுமைப்பட்டு உருக்கள் உள்ளும் பொருந்தும்,
பண்டும் இன்றும் என்றும் எங்கும் பரந்து ஒரு தன்மைப் பால் ஏ	முற்காலத்தும் இக்காலத்தும் எக்காலத்தும் எவ்விடத்தும் நிறைந்து ஒரு தன்மைப் பகுதியாய் இருக்கும் என்றவாறு.

விளக்கவுரை

விரித்தல் - பரப்புதல்; அஃதாவது படைத்தல். நீட்டல் - வர்த்திப்பித்தல்; அஃதாவது காத்தல். குறுக்கல் - ஒடுக்குதல். அஃதாவது சங்காரம். குவித்தல் - ஒன்றினுட் செறித்தல், அஃதாவது சருவசங்காரம். ஊன்றல் - உற்று நிற்றல்; அஃதாவது முத்தியின் கட்சேறல், உண்டு தின்று உலர்த்தல்; உண்டு தின்று கெடுதல்; தின்ற பகுதியும் உணவாகலான் உண்டு தின்று என்று கூறிற்று. மீட்டல் - மீளவிடுதல்; அஃது உமிழ்தல். உடைத்திடல் - சின்னப்படுத்தல்; அஃது அண்டங்களைக் கெடுத்தல்.

இச் செய்யுள் இவ்வணுக்கள் ஒருவரால் நியமிக்கப்பட்டன அல்ல என்று கூறிற்று. (5)

செய்யுள் - 169

கண்ணினிற் காண வொண்ணா
சனித்தந்தக் கன்மத் தாலே
நண்ணிடு முருக்க ளாகி
நின்றபின் நரரோ காண்பார்
விண்ணினிற் றேவர் காண்பார்
ஓரணு மிக்கு நான்காய்
எண்ணிய பொருள்க ளெல்லாம்
இசைவதென் றியம்பு மின்னே.

பதவுரை

கண்ணினில் காண ஒண்ணா சனித்து அந்த கன்மத்தாலே நண்ணிடும் உருக்கள் ஆகி	முற்கூறிய அணுக்கள் ஐந்தில் ஆன்மா என்னும் அணுப்பொருள் கண்ணில் காண்டற்கு அரிதாகி அக்கன்மத்தாலே ஜநித்து உருக்கள் ஆகப்பொருந்தி நின்றிடும்,
நின்ற பின் நரரோ காண்பார்	அக்கன்ம வுருவொடு நின்றபின் நரரோ காண்பார்,
விண்ணினில் தேவர் காண்பார்	விண்ணாகிய பொன்னெயில் வட்டத்தில் தேவனாகிய அருகபரமனே காணவல்லான்,
ஓர் அணுமிக்கு நான்கு ஆய் எண்ணிய பொருள்கள் எல்லாம் இசைவது என்று இயம்பும் இன்னே	ஆன்ம அணு ஒன்றும் தன்னை ஒழிந்த அணுக்கள் நான்குமாய் எண்ணப்பட்ட உருக்கள் எல்லாவற்றுள்ளும் இப்படிச் சென்று பொருந்தும் என்று கண்ட நூல் சொல்லும் என்றவாறு.

விளக்கவுரை

நான்காய் என்பதனை நான்குமாய் என உம்மைவிரிக்க.

இச்செய்யுள் அணுக்கள் ஐந்தில் ஆன்ம அணுவின் இயல்பு கூறிற்று.

நரரோ காண்பார் - உருவங்கள் கொண்டு நின்றால் நரரால் காணல் அரிது. விண்ணில் தேவர் காண்பார் - சுவர்க்கத்தில் உள்ள தேவர் காண்பாரோ? அணுவே மிக்க நான்காக - நிலஅணு முதலாக வண்ணப்படா நிற்கிற பொருள்கள் எல்லாம் இப்படிக்கே பொருந்தும் என்றவாறு. இவை பொருள் ஐந்தின் நிலைமை எனக் கொள்க. நான்காக எண்ணிய பொருள் நிலம், நீர், தீ, வளி. (6)

செய்யுள் - 170

ஒன்றினை யொருவி மூன்றங்
குற்றிடா திரண்டு விட்டு
நின்றிடா திரண்டு கூடும்
நெறிநில நான்கு நீர்மூன்
றின்றிரண் டழல்கா லொன்றா
யிசைந்திடும் பூமி யிவ்வா
றென்றுநீர் தீகா லாகி
ஈண்டுவ தென்றி யம்பும்.

பதவுரை

ஒன்றினை ஒருவி மூன்று அங்கு உற்றிடாது	ஆன்மா ஒழிந்து நிலன் ஆதியான அணுக்கள் நான்கும் தம்மில் கூடுமிடத்து ஓர் அணுவை விட்டு மூன்று அணுத் தம்மில்கூடி நில்லாது,
இரண்டு விட்டு நின்றிடாது இரண்டு	இரண்டணுவை விட்டு இரண்டணுக் கூடாது, (எனவே கூடும் இடத்து இவை நான்கும் கூடி நிற்கும் என்பது கருத்து)
கூடும் நெறி	இவை நான்கும் தம்மில் கூடி நிற்கும் என்று சொல்லும் முறைமையாவது எங்ஙனம்? என்னில்,
நிலம் நான்கு நீர் மூன்று இன்று இரண்டு அழல் கால் ஒன்றாய் இசைந்திடும்	இப்பொழுது பிருதிவியில் கந்த ரச ரூப பரிசம் நான்கும், அப்புவில் இரச ரூப பரிசம் மூன்றும், அக்கினியில் ரூப பரிசம் இரண்டும், வாயுவில் பரிசம் ஒன்றும் ஆகிய குணங்கள் பொருந்திய யிருக்கும்,

பூமி இவ்வாறு என்று நீர் தீ கால் ஆகி ஈண்டுவது என்று இயம்பும்	இந்த முறைமையிலே பிருதிவி அப்புத்தேயு வாயு என்று கூறும் அணுக்களின் குணங்கள் கூடி நிற்கும் என்று சொல்லும் நூல்கள் என்றவாறு.

விளக்கவுரை

ஆன்ம அணு ஒழித்து ஒழிந்த நில அணு, நீர் அணு, தீ அணு, வளி அணு என்னும் நான்கு அணுக்களும் ஓர் அணுவை விட்டு மூன்று அணுத் தம்மிற் கூடி நில்லா. இரண்டணுவை விட்டு இரண்டணுக் கூடா. எனவே, இவை கூடுமிடத்து நான்கும் கூடியே நிற்பன. பிருதிவியில் கந்தம் இரதம் ரூபம் பரிசம் என நான்கும், அப்புவில் இரதம் ரூபம் பரிசம் என மூன்றும், தேயுவில் ரூபம் பரிசம் என இரண்டும், வாயுவில் பரிசம் ஒன்றும் ஆகிய குணங்கள் முறையே பொருந்தி நிற்பன.

இச்செய்யுள் அணுக்கள் நான்கின் குணங்களே உருக்களில் கூடி நிற்கும் என்பது கூறிற்று. (7)

செய்யுள் – 171

வெண்மைநன் பொன்மை செம்மை
நீல்கழி வெண்மை பச்சை
உண்மையிவ் வாறி னுள்ளும்
கழிவெண்மை யோங்கு வீட்டின்
வண்மைய தாகச் சேரும்
மற்றவை யுருவம் பற்றி
உண்மையவ் வொட்டுத் தீட்டுக்
கலப்பினி னுணரு மென்றான்.

பதவுரை

வெண்மை நன்பொன்மை செம்மை நீல் கழி வெண்மை பச்சை உண்மை இ வ்வாறின் உள்ளும்	வெண்மையும் நன்றாகிய பொன்மையும் சிவப்பும் நீலமும் மிக்க வெண்மையும் பச்சையும் ஆகிய ஆறு வன்னம் உள; இவ்வாறு வன்னத்தினுள்ளும்,
கழி வெண்மை ஒங்கு வீட்டின் வண்மையது ஆகச் சேரும்	மிக்க வெண்மை என்று கூறிய வன்னமே பெரிய பொன்னெயில் வட்டத்துக்குச் சிறப்புடைத்தான வன்னமாகச் சேரும்,
மற்றவை உருவம் பற்றி	ஒழிந்த வெண்மை பொன்மை சிவப்பு நீலம்

	பச்சை என்னும் ஐந்து வன்னமும் மற்றை அணுக்கள் நான்கின் ஆன வடிவுகளைக் கூடி நிற்க,
உண்மை அவ்வொட்டுத் தீட்டு கலப்பினில் உணரும் என்றான்	அந்த ஆன்மாவானது இவ்வுருக்களைப் பற்றுதல் இழிதல் கூடுதல் இவையிற்றால் அறியும் என்றான் என்றவாறு.

விளக்கவுரை

வெண்மை, நல்ல பொன்மை, செம்மை, நீலம், பச்சை, மிக்க வெண்மை ஆகிய நிறங்கள் ஆறு உள்ளன. இவ்வன்னங்கள் ஆறனுள் மிக்க வெண்மை நிறமே பெரிய பொன்னெயில் வட்டத்துக்குச் சிறப்புடைய வன்னமாம். அதனை ஒழித்து ஒழிந்த வெண்மை, பொன்மை, சிவப்பு, நீலம், பச்சை என்னும் ஐந்து வன்னமும் மற்றை அணுக்கள் நான்கின் ஆன வடிவுகளைக் கூடி நிற்க அந்த ஆன்மாவானது இவ்வுருக்களைப் பற்றுதல் இழிதல் கூடுதல் ஆகிய இவற்றால் அறியும்.

உண்மை என்றது ஆன்மாவிற்கு ஆகுபெயர். அவ் என்றது சுட்டு; அவ்வுண்மை எனக் கூட்டுக. இன் ஐந்தன் உருபு, ஏதுப் பொருண்மைக்கண் வந்தது.

இச்செய்யுள் வன்னம் ஆறு என்பதூஉம், அவற்றுள் வீட்டுலகைப் பற்றி நிற்கும் வன்னம் இன்ன தென்பதூஉம், உருக்களைப் பற்றி நிற்கும் வன்னம் இன்னதென்பதூஉம் கூறிற்று. *(8)*

செய்யுள் - 172

பேறிழ விடையூ றின்பம்
பிரிவிலா திருக்கை மற்றும்
வேறொரு நாட்டிற் சேறல்
விளைந்திடு மூப்புச் சாதல்
கூறிய வெட்டு முன்னே
கருவினுட் கொண்ட தாகும்
தேறிய வூழிற் பட்டுச்
செல்வதிவ் வுலக மென்றான்.

பதவுரை

பேறு இழவு இடையூறு இன்பம் பிரிவு இலாது இருக்கை மற்றும் வேறு ஒரு நாட்டில் சேறல்	செல்வம் முதலிய கூடுதலும் அவை நீங்குதலும் துக்கம் உறுதலும் சுகமுறுதலும் உடலொடு நீங்காமையும் வேற்று நாட்டுச் சேறலும்

விளைந்திடும் மூப்பு சாதல் கூறிய எட்டும் முன்னே கருவினுள் கொண்டது ஆகும்	விருத்த அவத்தையும் மரணமும் என்று சொல்லப்பட்ட எட்டும் முற்பிறப்பின் வினையின் உள்ளவாய்க் கர்ப்பகோளகையிலே கைக்கொள்ளப்பட்டுள்ளவாம்,
தேறிய ஊழில் பட்டு செல்வது இவ் வுலகம் என்றான்	ஆதலால், தெளிவாக முற்பிறப்பில் செய்த வினையில் அகப்பட்டு இம்முறையிலே நடந்து செல்வது இவ்வுலகம் என்றான் என்றவாறு.

விளக்கவுரை

இச்செய்யுள் ஊழ்வினைப் பயன் எட்டு வகையாகக் கருவிலே வந்து பொருந்தும் என்பதூஉம், அவ்வூழ்வினைப் பயனில் அகப்பட்டுச் செல்வதே உலக முறைமை என்பதூஉம் கூறிற்று. (9)

செய்யுள் - 173

புண்ணிய பாவ மென்னும்
இரண்டணுப் பொருந்த வைத்தே
எண்ணிய விவற்றி னோடும்
ஏழென வெங்க ளோடும்
நண்ணிய வொருவன் கூறும்
ஞானமிவ் வாற தென்று
கண்ணிய கருத்தி னோர்கள்
கதியினைக் காண்ப ரென்றான்.

பதவுரை

புண்ணியம் பாவம் என்னும் இரண்டு அணு பொருந்த வைத்தே எண்ணிய இவற்றினோடும் ஏழ் என	புண்ணிய பாவம் என்னும் இரண்டினோடும் அணுக்கள் ஐந்தையும் கூடவைத்து இவற்றினோடும் ஏழ்என எண்ணி
எங்களோடு நண்ணிய ஒருவன் கூறும் ஞானம் இவ்வா றது என்று கண்ணிய கருத்தினோர்கள் கதியினை காண்பர் என்றான்	எங்கள் சமயத்தினோடு பொருந்திய கர்த்தா வான ஒப்பற்ற அருகப்ரமன் அருளிய ஞானம் இத்தன்மைத்து என்று அதனைக் கூடக் கருதும் கருத்தை உடையவர்களே நற்கதியாகிய பொன்னெயில் வட்டத்தைக் காணலுறுவார் என்றான் என்றவாறு.

விளக்கவுரை

ஏழ் என ஒருவன் கூறும் என்க. ஊழ் என்பதனை ஏழாம் வேற்றுமை ஆக்கி உரைப்பினும் அமையும். எண்ணிய என்பது வினையெச்சம்.

இச்செய்யுள் அணுக்கள் ஐந்தினுடன் புண்ணிய பாவத்தையும் கூட்டி ஏழ் என்பதே நூல் முடிவு என்றும் முத்தி முடிவு என்றும் கூறிற்று.

என்னுயிர் என்னும் செய்யுள் முதல் இச்செய்யுள் காறும் செய்யுள் பத்தினும் ஆசிவகன் மதம் கூறிற்று.

ஞானம் இவ்வாறு என்பது ஞானம் இவ்வாறது என்று பாடம். *(10)*

ஏழாவது – ஆசீவகன்மதம் முற்றிற்று.

பாயிரம் உள்படத் திருவிருத்தம் – 173.

ஆசீவகன் மதத் தொகுப்பு

தோற்றம்

இம்மதத்தை உண்டாக்கியவர் மற்கலியாவார்[1]. 'மற்கலி நூலின் வகை'[2] என மணிமேகலை குறிப்பிடுவதும் இதனை மெய்ப்பிக்கும். இவர் வர்த்தமான மகாவீரரின் மாணவராயினும், அவரோடு மாறுபட்டுச் செய்த சமயம் இதுவாகும். எனினும் சமண சமயத்து முதற்கண் ஆசீவகக் கொள்கையும், அடுத்து நிகண்டவாதக் கொள்கையும் காணப்படுகின்றது. தொல்காப்பிய எழுத்ததிகாரத்தில் நச்சினார்க்கினியர் உயர்திணைப் பெயருக்கு எடுத்துக்காட்டுத் தருங்கால் ஆசிவகப்பள்ளி, நிக்கந்தக் கோட்டம்[3], என்பனவற்றைக் குறிப்பிடுகிறார். மணிமேகலையில் சமயக் கணக்கர் தம்திறங்கேட்ட காதையில் முதற்கண் ஆசீவகக் கொள்கையும், பின் நிகண்ட வாதக் கொள்கையும் இடம் பெற்றுள்ளன. மேலும் இம்மதம் வைதீகத்தைப் புறக்கணித்துப் புரட்சி நெறியில் நின்றதொன்றாகும். அப்புரட்சியாவன வேத வேள்விகளையும் கடவுள் வழிபாட்டையும் மறுத்தல், கடவுள் உண்மையை மறுத்தல், கடவுளுக்குப் பதிலாக அண்ட அமைப்பியல் நியதிகளை வரையறுத்தல், இயற்கை இறந்த ஆற்றல்களைப் புறக்கணித்தல், இயற்கையை மதித்தல் என்பனவாம்[4].

பெயர்க்காரணம்

ஆசீவகன் எனும் பெயர் பெற்றதற்குரிய காரணங்களைப் பலர் பலவாறாக விளக்குவர்.

1. பர்னோவ் என்பார் சீவகன் - ஜீவ வாழ்க்கை; ஆசீவகன் - ஜீவ வாழ்வின்மை எனப் பொருள் காண்பர்.
2. லேசன் என்பார் ஆசீவகன் - ஜீவனை உண்ணாதார் எனப் பொருள் காண்பர். எனவே புலால் உண்ணாதவர் என்பது பொருளாகும்.
3. ஹார்ன்லே என்பார் ஆசீவ - வாழும்முறை எனப்பொருள் காண்பர். எனவே இல்லறத்தாராயினும் துறவறத்தாராயினும் பின்பற்றும் வாழ்க்கை முறையினை உரைக்கும் நெறி ஆசீவகம் எனப்படும் என்பது இவர் கருத்தாகிறது.

ஆசீவகன்

எனது உயிர்க்கு யான் அருள்செய்யும் தன்மை போல, எல்லா உயிர்களுக்கும் யான் அருள் செய்வன் என்பன்.

---

1. தமிழும் தத்துவமும், ப. 130.
2. மணிமேகலை, காதை 27, அடி 105.
3. தொல்காப்பியம், எழுத்ததிகாரம், நூற்பா 153 (நச்சினார்க்கினியர் உரை).
4. தமிழும் தத்துவமும், பக். 127 - 128.

ஆனால் தன் தலை மயிரையும் பறித்துக் கொண்டு பிறரும் அவ்வாறே பறித்துக் கொள்ள வேண்டுமென அறம் கூறுவன். இத்தகைய ஆசீவகனிடத்துத் துறவு பெறுதலைச் சிலப்பதிகாரம்,

> "கண்ணகி தாதை கடவுள் கோலத்
> தண்ணலம் பெருந்தவத் தாசீவகர் முன்
> புண்ணிய தானம் புரிந்தறங் கொள்ளவும்"[1]

என்றுரைக்கிறது.

கொள்கைகள்

ஐவகை அணு

எல்லையற்ற அறிவுடைய அருகன் ஆதியில் உண்டாக்கப்பட்ட நூலில் கூறும் அணுக்கள் ஐந்தாம். அவை நிலம், நீர், தீ, காற்று, உயிர் என்பன. அவ்வைந்தும் முறையே நிலம் கடினமாகவும், நீர் தண்ணியதாகவும், நெருப்பு வெப்பமுடைய தாகவும், காற்று இயங்குவதாகவும், உயிர் அறிவுடையதாகவும் விளங்குகின்றன.

இவற்றுள் நிலமும் நீரும் கீழே பரவும் தன்மையுடையன. தீயும், காற்றும் மேலே பரவும் தன்மையன. உயிரானது உடலோடு சேர்ந்திருக்கும். அப்புணர்ப்பை நீங்கினால் பின்னர் நால்வகை அணுக்களோடும் சேர்ந்திருக்கும். உயிர் உடம்பில் செறிந்து நின்ற வழி அதனது தன்மையைத் தான்பெற்று விளங்கும்.

உயிர் ஒழிந்த மற்ற நால்வகை அணுக்களும் ஒன்றையொன்று அறியும் தன்மையுடையன அல்ல. அவை ஒன்று கெட்டு மற்றொன்றாக மாறாது. ஒன்று மற்றொன்றில் கூடி நில்லாது. ஆனாலும் அவை உடம்பினைப் பொருந்தி நிற்கும். இவை தம்முள் கூடுவதன்றிப் புதிதாக வந்து எதுவும் கூடுவதில்லை. பழமையான இவற்றது தன்மை கழிதலில்லை. இவை ஒருசேரக் கூடுதலின்றி ஒரொன்றாகக் கூடாது. இவற்றின் செய்தியும் ஒருக்காலும் ஒழிவதில்லை.

இவ்வைந்து அணுக்களையும் விரித்தலோ, நீட்டலோ, குறுக்குதலோ, குவித்தலோ, உற்று நிற்றலோ, உண்டுதின்று கெடுதலோ, மீள உண்டாக்குதலோ, பிளத்தலோ என்று இத்தன்மையனவாக ஏதும் செய்ய முடியாது. அவை விரிந்த உலகிற்குப் புறத்தும், உருவின் உள்ளும் பொருந்தும். எக்காலத்தும் எவ்விடத்தும் ஒரு தன்மைத்தாகும்.

உயிரானது கண்ணால் காண முடியாதது. வினை வயத்தால் வேறுவேறு உடலெடுக்கும் தகையது. அதனை மக்கள் காண முடியாது. பொன்னெயில் வட்டத்து அருகனே காணவல்லான். இவ்வுயிர் ஏனைய நான்கு அணுக்களால் உண்டாகும் உருவிடத்துச் சென்று சேரும்.

---

1. சிலப்பதிகாரம், காதை - 27, அடி 98-100.

உயிரொழிந்த ஏனைய நான்கு அணுக்களும் தம்மின் கூடி நிற்குமேயன்றி ஓரணுவை விட்டு மற்ற மூன்றணுவோ, இரண்டணுவை விட்டு மற்ற இரண்டணுவோ கூடாது அங்ஙனம் கூடும் முறையில் நிலமானது நாற்றம், சுவை, ஒளி, ஊறு எனும் நான்கு குணங்களையும், காற்றானது ஊறு எனும் ஒரு குணத்தையும் பொருந்தி இருக்கும். இவை கூடும் கூட்டத்தால் ஆறு நிறங்கள் தோன்றுகின்றன. அவை வெண்மை, பொன்மை, சிவப்பு, நீலம், மிக்க வெண்மை, பச்சை என்பன. இவற்றுள் மிக்க வெண்மை எனும் நிறமே பொன்னெயில் வட்டத்திற்குரியது. மற்ற ஐந்து நிறங்களும் நான்கு அணுக்களின் வடிவங்களைக் கூடிநிற்கும். உயிரானது இவ்வணுக்களைப் பற்றுதல், தீண்டுதல், கூடுதல் என்பவற்றால் அறியும்.

செல்வம், வறுமை, துக்கம், இன்பம், உடலில் நிலை பெறுதல், வேற்றுநாடு சேறல், மூப்பு, இறப்பு எனும் எட்டும் முன்வினைப் பயனாய்க் கருவில் உள்ள உயிரின் கண்ணே அமைந்து விடுகின்றன. எனவே முன் செய்த வினையின் அகப்பட்டு இம்முறைமையாலே நடப்பது இவ்வுலகமாகும்.

புண்ணிய பாவமென்னும் இரண்டோடு ஐவகை அணுக்களும் கூடி பொருள்கள் ஏழென எண்ணி, அருகன் அருளிய ஞானத்தைப் பின்பற்றுவோர் பொன்னெயில் வட்டத்தைச் சேர்வர்.

திருமுறைகளும் சமணமும்

சைவ சமய குரவர்களுள் சம்பந்தர், அப்பர், சுந்தரர் தேவாரங்களில் சமணக் குறிப்புக்கள் இடம் பெற்றுள்ளன. சமணர்தம் பெயர்களைச் சமண், அமண், பிண்டியர், அருகர், குண்டர் எனக் குறிப்பதோடு அவர்தம் பழக்க வழக்கங்களையும் குறித்துச் செல்வது ஈண்டு எண்ணத்தக்கது.

ஞானசம்பந்தரும் சமணமும்

ஞானசம்பந்தர் தமது தேவாரத்தில் சமணர், சமண், சண்டையர் என 110 இடங்களிலும், அமணர், அமண், அமண் குண்டர் என 93 இடங்களிலும், பிண்டியர் என 10 இடங்களிலும், அருகர் என 5 இடங்களிலும், குண்டர் என 5 இடங்களிலும் குறிப்பிடுகிறார்.

நாவக்கரசரும் சமணமும்

நாவுக்கரசர் தமது தேவாரத்தில் சமணசமய இழிநிலையினை எடுத்துரைப்பதுடன் அவர்களைச் சமண் என 21 இடங்களிலும், குண்டர் என 18 இடங்களிலும், அமண் என 16 இடங்களிலும் குறித்துச் செல்கிறார்.

சமணம் 7. (ஆ) ஆசீவகன் மதமறுதலை

கலிவிருத்தம்

செய்யுள் - 174

வாராநெறி வீடானபின்
மண்மேலவன் வந்து
தாராமையி னூலானது
தானோவுள தின்றாம்
சேராமையி லணுவானவை
யைந்தும்மொரு தேயத்
தோராணொரு காலத்தினி
லொன்றாமுணர் வின்றாம்.

பதவுரை

வாரா நெறி வீடு	மோட்சம் என்பது மீண்டும் உடல் எடுத்து வாரா வழியால் அடையத்தக்கதாம்,
ஆன பின்	அப்படியான விடத்து வீடுபெற்றவன் பூமியிடத்து வாரான்,
மண்மேல் அவன் வந்து தாராமையின் நூலானது தானோ உளது இன்று ஆம்	வீட்டுலகத்து இருந்த அருகபரமன் பூமியிடத்து வந்து நூல்தரும் முறைமை இல்லை ஆகையால் நூலானது தான் உண்டாம்வழி இல்லையாம்,
சேராமையில் அணு ஆனவை ஐந்தும் ஒரு தேயத்து	ஒப்பற்ற தேசமாகிய பொன்னெயில் வட்டத்தில் ஐவகை அணுவும் சேராது ஆகையால் சரீரி ஆம் தன்மை இல்லையாகும்; அதனால்,
ஓரான் ஒரு காலத்தினில்	ஒன்றையும் ஒரு காலத்தில் விசாரிக்க மாட்டானாம்,
ஒன்று ஆம் உணர்வு இன்றாம்	அன்றியும் கிழான அணுக்கள் இரண்டின் செய்தியை அறியவும் மாட்டான்; ஆகையால் அணுக்கள் எல்லாவற்றையும் கூட்டி ஒன்றாகவும் உணரும் உணர்வையும் உடையன் அல்லன் என்றவாறு.

விளக்கவுரை

மோட்சம் என்பது மீண்டும் உடம்பு எடுத்து வாராவழியால் அடையத்தக்கது. வீடு பெற்றவன் மீட்டும் நிலவுலகத்துப் பிறவான். வீட்டுலகத்து இருந்த அருகபரமன் மண்மேல் வந்து நூல் அருளும் முறைமை இல்லை. ஆகலின், நூல் அருளும் முறைமை இல்லை. ஆகலின், நூல் உண்டாம் வழி இல்லை. ஒப்பற்ற பொன்னெயில் வட்டமாகிய இடத்து ஐவகை அணுக்களும் சேரா ஆதலால், சரீரியாம் தன்மை இல்லையாம். அதனால், ஒன்றையும் ஒரு காலத்து விசாரிக்க மாட்டான். அன்றியும், கீழான அணுக்கள் இரண்டின் செய்தியை அறியவும் மாட்டான். அணுக்கள் எல்லாவற்றையும் கூட்டி ஒன்றான உணரும் உணர்வையும் உடையனல்லன்.

பின் என்றது ஏழாம் வேற்றுமை இடப்பொருள். ஓகாரம் தெரிநிலை. உணர்வும் இன்றாம் என உம்மை விரிக்க.

ஆசீவகன் மதத்தை மறுப்பான் எடுத்துக்கொண்டார்; அதனுள், இச்செய்யுள் பொன்னெயில் வட்டத்து ஐவகை அணுவும் சேரா; ஆகையால், அவ் அருகபரமன் சரீரியாய் நூல்சொல்லும் தன்மை இலன் என்று மறுத்துக் கூறிற்று. (1)

செய்யுள் - 175

இருபான்மைய ரிவர்மண்டலர்
செம்போதக ரென்றே
வருபான்மைய ரிவர்மண்டலர்
மண்மேல்வரு நூலும்
தருபான்மைய ரெனினீதல
மதில்வாழ்பவர் தம்போல்
ஒருபான்மையி னுளராகுவ
ருணராதுரை செய்தாய்.

பதவுரை

இரு பான்மையர் இவர்	இவ்வருக சுவாமிகள் இரண்டு பகுதியராய் இருப்பர்,
மண்டலர் செம்போதகர் என்று ஏ	மண்டலர் என்றும் செம்போதகர் என்றும் அவ்விருவரின்,
வருபான்மையர் இவர் மண்டலர்	இப்படி வரும்பகுதியை உடைய இவர் மண்டலர்,
மண்மேல் வருநூலும் தருபான்மையர்	மண்டலராகிய இவர் உலகத்தின் கண்ணே

எனின் நீ	வந்து அணுக்கள் ஐந்தின் செய்தியும் ஒருங்கே அறிந்து உலகத்தின்கண் நடக்கும் நூல் செய்த பகுதியை உடையர் என்று நீ சொல்லுகின்றாய் ஆயின்,
தலம் அதில் வாழ்பவர் தம்போல் ஒரு பான்மையின் உளர் ஆகுவர்	அம்மண்டலர் பூமியில் வாழும் ஆன்மாக்களைப் போல் ஒரு பகுதியிலே ஆகுவர்; ஆகவே ஓர்உரு இரண்டு பேதப்பட்டதில் ஒன்று மானுடத்தன்மையும் ஒன்ற தெய்வத்தன்மையும் பெறுதல் இல்லையாம்; ஆதலால்,
உணராது உரை செய்தாய்	விசாரியாமல் சொன்னாய் என்றவாறு

விளக்கவுரை

இவ்வருகபரமர் இரு பகுதியினராய் இருப்பர். அவர் மண்டலர், செம்போதகர் எனப்படுவர். இப்படி வரும் பகுதியினையுடையார் மண்டலர். மண்டலராகிய இவரே உலகத்தில் வந்து அணுக்கள் ஐந்தின் செய்தியும் ஒருங்கே உணர்ந்து நூல் செய்தனர் என்னில், அம்மண்டலர் பூமியில் வாழும் ஆன்மாக்கள் போல ஒரு பகுதியினரே ஆவார் ஆகலின், ஓர் உரு இரு பேதப்பட்டதில் ஒன்று மானுடத்தன்மையும் ஒன்று தெய்வத்தன்மையும் பெறுதல் இல்லை. இதனை நீ ஆராயாமல் சொன்னாய்.

இவர் - ஒருவரைக் கூறும் பன்மை. இவர் இருபான்மையர் என மாறுக. மண்டலர் இவர் எனவும் மாறுக. மண்டலர் - பூமியில் உள்ளார். செம்போதகர் - மிக்க அறிவுடையார்.

இச்செய்யுள் அருகபரமர் இருவகைப்பட்டு மண்டலத்தின்கண் வந்த நூல் சொன்னார் என்பதனை மறுத்துக் கூறிற்று. *(2)*

செய்யுள் - 176

உயிரானவை யுடறீண்டிடல்
ஒட்டுக்கலப் பெய்தும்
பயில்வாலுணர் வெய்தும்மெனு
மொழியானவை பழுதாம்
துயிலார்தரு மவர்பாலகர்
தொடரார்றி வினைநீ
செயிரார்தரு முரையேதரு
மதுவோவுன செயலே.

பதவுரை

உயிர் ஆனவை உடல் தீண்டில் ஒட்டு கலப்பு எய்தும் பயில்வால் உணர்வு எய்தும் எனும் மொழி ஆனவை பழுது ஆம்	ஆன்மாக்களானவை உடலைப் பற்றியும் உற்றும் கலந்தும் செய்யும் தொழிலாலே அறிவைப் பொருந்தும் என்று நீ சொல்லும் சொல் குற்றம் உடைத்தாகும்; அஃது எங்ஙனம்? என்னில்,
துயில் ஆர்தரும் அவர் பாலகர் தொடரார் அறிவினை	மிக்க உறக்கம் பொருந்தினவரும் பால அவத்தை அடைந்தவரும் பற்றியும் உற்றும் கலந்தும் அறிவினை அறியமாட்டார்,
நீ செயிர் ஆர்தரும் உரையே தரும்	நீ சொல்லும் சொல்தானே குற்றத்தை மிகவும் தரும்
அதுவோ உன் செயல் ஏ	உன் தொழிலும் அத்தனையோ? என்றவாறு.

விளக்கவுரை

இச்செய்யுள் ஆன்மா உடலில் ஒட்டியும் தீண்டியும் கலந்தும் அறியும் என்பதனை மறுத்துக் கூறிற்று. *(3)*

செய்யுள் - 177

அணுவானவை கீழ்மேலுள
வானாலவ யவமும்
நணுகாவென லாமேவரின்
நாசம்மவை யெய்தும்
அணுகாவெனி னிவைதொள்ளைகொள்
ஆகம்முள வாகும்
துணிவாலிவை கலவாபல
தொகையாம்வகை யிலவாம்.

பதவுரை

அணு ஆனவை கீழ் மேல் உள ஆனால்	ஆன்மா ஒழிந்து அணுக்கள் என்று கூறப்பட்ட பிருதிவி முதலான நான்கிலே கீழே இரண்டு உளவாயும் மேலே இரண்டு உளவாயும் நிற்குமாயின்,
அவயவமும் நணுகா எனல் ஆம் ஏ	அவை காரணமான சரீர அவயவங்களும் கூடாவாய்க் கீழும் மேலுமாய் வேறுபட்டு

	நிற்கும் என்று சொல்லலாமே; அஃதன்றியும்,
வரின்	அவ்வணுக்கள் நான்கும் சரீர அவயவத்தில் கூடிவருமாயின்,
நாசம் அவை எய்தும்	அவ்வணுக்களை நித்தியம் என்று நீ முன்னர்க் கூறியது மித்தியை ஆம்,
அணுகா எனின்	அவை சரீர அவயவங்களிலே பொருந்தாது என்று நீ கூறின்,
இவை தொள்ளை கொள் ஆகம் உள ஆகும் துணிவால் இவை கலவா பல தொகை ஆம் வகை இலவாம்	அவ்வணுக்களின் குணங்களாகிய உதிரம் மாமிசாதிகளும் கலந்து நில்லாததுமாய், அணுக்கள் நான்கின் கூறு பலவும் கூடிய திரட்சியும் காயத்திற்கு இல்லையுமாய், துணிந்து அறியுமிடத்துச் சரீர முறைமை ஆகாததுமாய், புரைபட்டு நிகழ்ந்த தில்லையாம் என்றவாறு.

விளக்கவுரை

ஆன்மாவை ஒழித்து ஒழிந்த அணுக்கள் நான்கனுள்ளே பிருதிவி அப்பு என்னும் இரண்டும் கீழும்; தேயு வாயு என்னும் இரண்டும் மேலுமாய் நிற்குமாயின் அவை காரணமான சரீர அவயவங்களும் கூடாவாய்க் கீழும் மேலுமாய் வேறுபட்டு நிற்கும் எனச் சொல்லலாமே! அன்றியும், அவ்வணுக்கள் நான்கும் சரீர அவயவத்தில் கூடிவருமாயின் அவ்வணுக்களை நித்தியம் எனக் கூறியது மித்தியை அன்றோ? அவை சரீர அவயவங்களில் பொருந்தா என்னில், அவ்வணுக்களின் குணங்களாகிய குருதி தசை முதலியனவும் கலந்து நில்லா; பல பகுதியவாய்ப் பிரிந்து நிற்கும். எனவே, அவற்றின் திரட்சியும் இல்லையாம். சரீர முறைமையும் ஆகாதாம் என்க.

ஏ, ஓ - வினா. வகையும் இலவாம் என்ற உம்மை தொக்குகின்றது.

இச்செய்யுள் நான்கும் சரீரத்தோடு கூடாது என்பதனை மறுத்துக் கூடும் என்பதனானே பூதகாரியம் நித்தம் என்பதனையும் மறுத்துக் கூறிற்று. (4)

செய்யுள் - 178

மிகையாமணு வுளவாகையின்
அவையாமிக வென்னில்
தொகைநூலிடை யறலாலவை
தொகுமாறில வாகும்

பகையாகையின் மிசைதாழ்மையின்
நிலையாவகை பண்ணும்
நகையாமுரை கழியாயிர
மவைதூணென நண்ணா.

பதவுரை

மிகை ஆம் அணு உள ஆகையின் அவை ஆம் மிக என்னில்	இவ்வணுக்கள் நான்கும் அன்றி வேறே அறியத்தக்கது ஒரு மிக்க அணு உண்டாகையினாலே மிகவும் யோனி பேதங்களாகிய உருக்கள் ஆம் என்று நீ கூறின்,
தொகை நால் இடை அறலால் அவை தொகும் ஆறு இல ஆகும்	அணுக்கள் நாலின் கூட்டம் மிகவும் பொருந்தாமல் நடு நீங்கிக் கிடக்கையால் அறியும் அணு இவற்றைக் கூட்ட அவை கூடி நிற்கும் வழி இல்லையாம்; அஃதன்றியும்,
பகை ஆகையின் மிசை தாழ்மையின் நிலையாவகை பண்ணும்	அவ்வணுக்கள் நாலும் மேலும் கீழுமாய் நிற்கையாலும் தம்மில் பகை ஆகையாலும் ஆன்மா ஓரிடத்துக் கூடா வகையைச் செய்யா நிற்கும்,
நகை ஆம் உரை கழி ஆயிரம் தூண் என நண்ணா	கோல் ஆயிரம் கூடினாலும் தூண் ஆகாத தன்மைபோல அணுக்கள் கூடியது கொண்டே உருக்கள் ஆகாது, ஆகையால் நீ கூறியது நகையாம் என்றவாறு.

விளக்கவுரை

மேலே கூறப்பட்ட பிருதிவி முதலிய நான்கு அணுக்களேயன்றி அறியும் தன்மையையுடையன உயிராகிய அணுவும் உண்மையால் பலவகையான பிறப்புக்களும் உண்டாம் என்னில், அவ்வணு அறியும் தன்மையையுடையது, அல்லாமல் தம்முள்ளே கூடும் இயல்பல்லாதனவற்றைக் கூட்டுவிக்கும் இயல்புடையதன்று. அந்த அணுக்கள் நான்கும் மேலும் கீழுமாய் நிற்பன, தம்முட் பகையுடையன, ஆகலின் ஆன்மா ஓரிடத்துக் கூடாவகையைச் செய்யும். கோல் ஆயிரம் கூடினாலும் தூண் ஒன்றாகாதன்றோ? அதுபோல, அணுக்கள் கூடினது கொண்டே உருக்கள் ஆகா. எனவே, நீ கூறியது பரிகாசம் செய்தற்கு இடமாம்.

இச் செய்யுள் அணுக்கள் கூடியே உருக்கள் ஆம் என்பதனை மறுத்துக் கூறிற்று. *(5)*

செய்யுள் - 179

கூடாவணு வறியாமையின்
வளிகூட்டு தல்கூறின்
நாடாவளி யணுவானவை
நணுகசெயு மவரை
நீடாவினை தன்னாலெனின்
நினைவின்றது வின்றாம்
தேடாயொரு வனிநீயிவை
செய்வானுள னென்றே.

பதவுரை

கூடா அணு அறியாமையின்	நீ கூறிய ஐவகை அணுக்களும் தமக்கென அறிவில்லாதன ஆகையால் அவ்வடிவு எடுத்துக்கொள்ள வல்லன அல்ல,
வளி கூட்டுதல் கூறின்	வாயுவாகிய அணு ஒழிந்த அணுக்கள் மூன்றையும் ஆன்மாவாகிய அணுக் கூட்டும் படிக்குக் கூட்டும் என்று நீ கூறின்,
நாடாவளி அணு ஆனவை நணுக செய்யும் அவரை	வாயுவானது அவ்வணுக்களைக் கூட்டுதற்குக் கன்மம் செய்யும் ஆன்மாக்களை அறிய மாட்டாது
நீடா வினை தன்னால் எனின்	பழைய கன்மத்தினாலே வாயுக் கூட்டும் என்னில்,
நினைவு இன்று அது இன்றாம்	அந்தக் கன்மமும் அறிவையுடையதல்ல ஆகையால் தானும் கூடமாட்டாது, வாயுவைக் கொண்டு கூட்டுவிக்கவும் மாட்டாது,
தேடாய் ஒருவனை நீ இவை செய்வான் உளன் என்று ஏ	இவ்வணுக்கள் ஐந்தையும் கன்மத்தையும் கூட்டிக் காயம் உண்டாக்குவான் ஒரு கர்த்தா உளன் என்பதனை ஆராய்வான் என்றவாறு.

நீ கூறிய ஐவகை அணுக்களும் அறிவில்லாதன. ஆகலின், அவை வடிவுகள் எடுத்துக்கொள்ளும் வலியுடையன அல்ல. வாயுவாகிய அணு, ஒழிந்த மூன்று அணுக்களையும் ஆன்ம அணுக் கூட்டும்படி கூட்டும் என்னில், வாயுவானது அவ்வணுக்களைக் கூட்டுதற்குக் கன்மம் செய்யும் ஆன்மாக்களை அறிய மாட்டாது.

முன் வினையினாலே ஆன்மாக் கூட்டும் என்னில், அக்கன்மமும் அறிவுடையதன்று ஆகலின் அது கூட்டமாட்டாது; வாயுவைக் கொண்டு கூட்டுவித்தலும் கூடாது. எனவே, இவ்வணுக்கள் ஐந்தனையும் கன்மத்தையும் கூட்டிக் காயம் உண்டாக்கு வதற்கு ஒரு கர்த்தா உண்டு. இதனை ஆராய்ந்தறிவாயாக.

சம்சார ரோகம் தீர்ப்பது ஞானமே, கன்மத்தால் தீராது என்பது கருத்து.

இச்செய்யுள் அணுக்கள் நான்கும் காயமாகத் தாமே கூடும் என்பதனையும், வாயு காயத்தைக் கூட்டும் என்பதனையும், கன்மம் கூட்டும் என்பதனையும் மறுத்துக் கூறிற்று.

'வாரா நெறி' என்னும் செய்யுள் முதல் இச்செய்யுள் காறும் ஆசிவகன் மதத்தை மறுத்துக் கூறியதாம் என்க. (6)

ஏழாவது – ஆசீவகன் மதமறுதலை முற்றிற்று.

பாயிரம் உள்படத் திருவிருத்தம் – 179.

ஆசீவகன் மறுப்புத் தொகுப்பு

இம்மத மறுப்பு சிவஞானசித்தியார் பரபக்கத்தில் ஆறு பாடல்களில் மறுத்துரைக்கப்படுகிறது.

வீட்டுநெறி

வீட்டு நெறியானது மீண்டும் பிறவி எடுத்து வராது அடையத்தக்கதாகும். அவ்விதமாயின் வீட்டுலகத்து நின்ற அருகன் பூமியிடத்து வந்து நூல் இயற்றல் என்பது பொருந்தாது. மேலும் அருகன் பொன்னெயில் வட்டத்து ஐவகை அணுக்களுடன் சேராததால் உடம்பெடுத்தல் இல்லையாம். அதனால் ஒன்றையும் அறியமுடியாது. அருகன் மேலான இடத்தில் இருப்பதால் கீழணுக்களாலாய நிலம், நீர் என்பனவற்றை அறியாததால் எல்லா அணுக்களையும் கூட்டி உணரும் உணர்வும் அற்றவன்.

அருகனின் இரு உருவங்கள்

அருகர் செம்போதகர், மண்டலர் என இருவகைப்படுவர். அவருள் மண்டலர் இவ்வுலகத்து வந்து ஐந்து அணுக்களின் செய்தியையும் அறிந்து நூல் செய்தாரெனின், அம்மண்டலரும் பூமியில் வாழும் மக்களில் ஒருவர் ஆவர். ஆகவே ஒருருவாய மண்டலர் மக்களாயும் தெய்வமாயும் வேறுபடுதல் முடியாது.

உடல் ஐந்து அணுக்களின் சேர்க்கையன்று

உடலானது உயிரைப் பற்றியும் கலந்தும் நின்று அறிவைப் பெறுமெனின், துயில்வாரும், குழந்தையும் அவ்வுடலைப் பற்றியிருந்தும் அறிவு பெறாதது ஏன்?

உயிரொழிந்த ஏனை நான்கு அணுக்களில் இரண்டு கீழ்நோக்கியும், இரண்டு மேல் நோக்கியும் நிற்குமெனில் அவை இயைந்து உடம்பில் பொருந்தாது. மேலும் உடம்பில் அவை கூடி உறுப்புக்களாகா. அந்நிலையில் அவ்வுடம்பின் குணங்களான குருதி, தசை முதலியனவும் கலந்து நில்லா. அணுக்கள் நான்கும் பல பகுதியாய்ப் பிரிந்து நிற்குமெனில் உடலென்ற முழுவடிவம் தோன்றாது.

உயிரணுவால் பல்வகைப் பிறப்புக்கள் தோன்றுமெனில், அவ்வணு அறியும் தன்மை உடையதன்றி, மற்ற அணுக்களைத் தம்முன் கூட்டும் இயல்புடையதன்று. மேலும் அந்நால்வகை அணுக்களும் மேலும் கீழுமாய் நிற்பதாலும், தம்மிற் பகையாதலாலும் ஓரிடத்துக் கூடா. ஆயிரம் கோல்கள் கூடினாலும் அவை ஒரு தூணாக மாட்டா.

மேலும் அவ்வைந்து அணுக்களும் தமக்கென அறிவு இல்லாததால் வடிவெடுக்க முடியாது. காற்றானது மற்ற மூன்று பூதங்களையும் கூட்டுமெனின், அஃது வினைசெய்யும் உயிரை அறியாது. வினைகளும் அணுக்களைக் கூட்டும் அறிவுடைத்தன்று. எனவே தானுங்கூடாது காற்றைக் கொண்டும் கூட்டுவிக்காது. இவ்வைந்து அணுக்களையும் வினையையும் கூட்டி உடலை உண்டாக்கும் முதல்வன் ஒருவன் வேண்டும்.

சைவம் - சமணம் ஒப்பீடு

சமணத்தின் வகைகளான நிகண்டவாதி, ஆசீவகவாதி எனும் இரண்டிற்கும் இவ்வொப்பீடு பொருந்தும்.

சமணம்	சைவசித்தாந்தம்
1. அளவை காண்டல், கருதல் எனும் இருவகை அளவைகளைக் கொள்வர்.	உரையுடன் கூட்டி மூன்றையும் கொள்வர்.
2. இறை உயிர்ப்பொருள், உயிரில் பொருள் என இருபொருள்களே உண்டு. இவ்வுயிருடைப் பொருள்களில் ஒன்றாக இருந்த அருகர் உயர்ந்த ஞானத்தைப் பெற்றமையின் கடவுள் எனக் கருதத்தக்கவர் ஆயினார்.	இவற்றுக்கு மேலாக இறைவன் என்ற பொருளும் உண்டு. அவ்விறைவன் சிவ பெருமானே ஆவன்.
3. உயிர் உயிர் தான் எடுத்த உடலுக்கு ஏற்பப் பெருக்கவும் சுருக்கவும் பெறும்.	உயிர்க்கு வடிவு இல்லை. அதனால் பெருக்கமும் சுருக்கமும் என்றும் இல்லை.
4. உயிரினது இயல்பு சாந்தமும் ஞானமுமே. உடலொடு சேருங் கால் அவற்றின் தன்மை குறையும்.	உயிர்க்கு இயல்பாக அறியும் உணர்வு உண்டு. செய்த வினைக்கேற்ப எடுக்கும் உடல், கருவிகள் அதற்கு மேலும் விளக்கம் தருகின்றன.
5. மனித இனத்தவர் அநாதிசித்தன், முத்தன், பெத்தன் என மூவகைப் படுவர்.	மனித இனத்தவர் விஞ்ஞான கலர், பிரளயாகலர், சகலர் என மூவகைப் படுவர். எனினும் இவர் நிலை அவர் நிலையினும் வேறாம்.
6. உயிர் வீடு பேறடைய தனக்குத் தானே முயலல் வேண்டும்.	உயிர் வீடுபேறடையத் தனக்குத்தான் செய்யும் முயற்சியோடு திருவருள்

அம்முயற்சியின் பயனாய்க் கிடைக்கும் வீடுபேற்று நிலையில் உயிர் அருகரது நிலையைப் பெற்று நிற்கும்.	துணையும் வேண்டும். வீடுபேற்று நிலையில் உயிரும், இறைவனும் பிரிவின்றி நிற்ப, அவன் வழங்கும் இன்பத்தைத் துய்த்து நிற்கும்.
7. வினை: அவரவர் செய்த வினை அவரவரைச் சாரும். அதற்கொரு முதல்வன் வேண்டுவதில்லை.	முதல்வன் வேண்டும்
8. வினை இருவகைப்படும். ஒன்று உயிரோடு தொடர்புடையது. மற்றொன்று உடம்போடு தொடர்புடையது.	இவ்வாறு பாகுபடுத்தப் பெறவில்லை. எனினும் வினை உண்மையானதே.
9. மேற்கூறிய இரண்டனுள் முன்னையது பாவகன்மமென்றும் பின்னையது திரவியகன்ம மென்றும் அழைக்கப்படும். ஓர் உயிர் இறந்து மறுபிறப்பு எடுக்கும் வரை கன்மம் அவ்வுயிர்க்கு உடலாக அமைந்து விடும். அதனைக் கார்மணச் சரீரம் என்பர்.	வினை உயிருடன் மட்டுமே சார்புடையது. மறுபிறப்பு எடுக்கும் வரையுள்ள உடல் வினைக் கலப்பினால் வாயாது மாயையின் கலப்பினால் வாய்க்கும்.
10. **உலகம்:** உலகம் ஒருவனால் படைக்கப்பட்டதல்ல.	உலகம் ஒருவனால் தோற்றுவிக்கப் பட்டது.
11. இவ்வுலகத் தோற்றத்திற்கு அணுக்களும் அவற்றோடு ஆகாசமும், காலமும் காரணம் ஆம்.	இவ்வுலகத் தோற்றத்திற்கு மாயையே முதற் காரணம் ஆம். அதிலிருந்தே காலமும், ஆகாயமும் தோன்று மென்பர்.
12. ஆகாயத்தை லோகாகாசம், அலோகாகாசம் என இருவகைப் படுத்தி, இவற்றில் அலோகா காசத்தில் பொன்னெயில் வட்டம் உள்ளதென்பர்.	வீடுபேறென்பது இவற்றைக் கடந்த தென்பர்.

1. இந்திய தத்துவ ஞானம் - ப. 26.

13. இயக்கும் ஆற்றல், நிறுத்தும் ஆற்றல் என இருவகை ஆற்றல் உளவென்றும், இவையும் தொடக்க கால இயக்கத்திற்கும் நிறுத்தத்திற்கும் ஏதுவாகாமல் இயங்கிய ஒன்றை இயக்கவும், நிறுத்திய ஒன்றை நிறுவவும் பயன்படும் என்பர்.	இவ்வாறாய ஆற்றல் ஏதுமில்லை. அனைத்தும் திருவருட் செயலேயாம்.
ஒற்றுமை	
1. உயிர்கள் பல. அவை அழியாதவை.	இக்கருத்து இவர்களுக்கும் பொருந்துவதாகும்.
2. உலகப் பொருள்களை அறிவு உடையதும், அறிவற்றதுமாய சிவன், அசிவன் என இரு பிரிவில் அடக்குவர் இவர்.	இவை இவர்கள் கூறும் உயிர், தளை என்பவற்றோடு ஒருவாற்றான் இயைபுடையதாம்.
3. உயிர் வீடு பேறடைதற்கு இரு வழிகள் உள. ஒன்று பழவினையைக் கழிப்பது. பிறிதொன்று புது வினை மேலும் வாராமல் தடுப்பது.	இவற்றை முறையே பழவினை, வருவினை என அழைப்பர். இவை இரண்டும் ஒழிந்த பின்னரே உயிர் வீடு பேறடையும்.
4. வீடடைதற்கு நற் காட்சி, நன் ஞானம், நல்லொழுக்கம் மூன்றும் இன்றியமையாதன என்பர்.	கற்றல், கேட்டல், தெளிதல், நிட்டை கூடல் எனக் கூறுவனவற்றோடு ஒருவாற்றான் இவை இயைபுடையன.
5. அ, சி, ஆ, உ, சா என்ற ஐம்பதத்தைக் குரு முதன் முதல் மாணவர்க்கு ஓதுவிப்பர். இது அவர்களுக்கு உரிய மந்திரமாகும். ஆனால் இம் மந்திரம் இவர்கள் குறிக்கும் அவ்வச் சொல்லின் முதலெழுத்தாய் அமைந்துள்ளது.	திருவைந்தெழுத்தே இங்கு மந்திரமாம். எனினும் இத்திருமந்திரத்திற்குக் கூறப்படும் பொருளும் அவற்றின் அமைவும் வேறாம்.
6. மூலப்பொருள் பல என்று கொள்வோர் பன்மைவாதிகள் எனப்படுவர். இவ்வகையில் சமணரும் ஒருவர்.	இவர்களும் இக்கருத்தினரே.

8. மீமாம்சை மதம் முன்னுரை

	வகை	புறச்சமயங்களுள் இது இரண்டாவதாக எண்ணப்படும். வேதத்தை முழுக்க ஏற்றுக்கொள்ளும். ஆகமத்தை ஏற்காது.
1.	பெயர்க்காரணம்	மீமாம்சை என்பதற்கு முறையாக விசாரித்தல் (அ) ஆராய்தல் என்பது பொருளாகும். மறைகளில் கூறப்பட்ட கருத்துக்களையும் அவற்றின் விளக்கத்தையும் ஆராய்வது.
2.	உட்பிரிவுகள்	1) பூர்வ மீமாம்சை - பிரமாணங்களை மட்டும் ஒப்புக்கொள்ளும். பிரமாணம் - வேத மந்திரங்களைக் கூறுவோர் கடைப்பிடிக்கும் செயல்முறைகளைக் கூறுவது. 2) உத்தர மீமாம்சை - உபநிடதங்களை ஒப்புக் கொள்வதாம். உபநிடதங்கள் - வேதமந்திரங்கள், அவற்றைக் கூறுவோர் கடைபிடித்தற்குரிய செயல்கள் ஆகிய இரண்டின் மெய்ம்மைகளை விளக்குவன.
3.	தற்காலம்	பூர்வ மீமாம்சையே மீமாம்சை என அழைக்கப் படுகிறது.
4.	பழைய நூல்	கல்ப சூத்திரம் முதலில் வெளிவந்து பின் மறைந்தது. பின்வந்த சைமினி என்பவரால் இயற்றப் பட்ட மீமாம்ச சூத்திரமே இன்றைய நிலையில் முக்கியமாகக் கருதப்படுகிறது.
5.	காலம்	2300 ஆண்டுகளுக்கு முன்
6.	பேருரை (பாடியம்)	சபர முனிவர் 2000 ஆண்டுகளுக்கு முன்
7.	வழி நூல்கள், ஆசிரியர்கள், தாபித்த மதப் பிரிவுகள்	ஒருவர் ஆசிரியரான குமாரிலபட்டர் - சைமினி நூலை முழுமையாக ஏற்றுக் கொண்டார் - பட்டாச் சாரிய மதம். மற்றவர் அவர் மாணாக்கரான பிரபாகரர் - தமக்குப் பொருந்திய சில கொள்கைகளை மட்டும் ஏற்றார் - பிரபாகரன் மதம்.

பட்டாசாரியன் மதம் முன்னுரை

	வகை	புறச்சமய மதங்களின் ஒன்றான மீமாம்ச மதத்தின் ஒரு பிரிவு இதுவாகும். மீமாம்ச மதத்தின் இன்னொரு பிரிவு பிரபாகர மதமாகும்.
1.	தோற்றுவித்தவர்	பட்டாச்சாரியான், சைமினி முனிவர் செய்த நூல் வழி இவரும் சூத்திர மதம் பற்றி வழிநூலியற்றினார்.
2.	பெயர்க்காரணம்	பட்டாச்சாரியான் இயற்றிய நூல் வழி செயல்படும் மதமானதால் பட்டமீமாம்சம் (அ) பட்டாசாரிய மதம் எனப்படும்.
3.	கொள்கைகள்	கடவுள் உண்டென்பர். நூலைச் சிவ வணக்கத்தோடு தொடங்குகிறார். முக்கண், பிறை இலக்கணங்களைக் குறிக்கிறார். இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் எனனும் நான்மறைகளை முதன்மையாகக் கொள்ளும் அம்மறைகளையே இறையாகக் கொள்ளும். சுவர்க்கம் செல்லப் பொருட் செலவாகும். வேள்விகளைச் செய்ய வேண்டும் மறைதானே தோன்றியதாகும். மறை ஆறு அங்கங்களையும், மூன்று துணை வேதங்களையும் தன்னுள் அடக்கியது. ஆதி அந்தமில்லாதது அநாதி.
4.	வீடுபேறு	மறை விதித்தவாறு ஒழுகின் தளை நீங்கப்பெற்று வீடு அடையலாம்.

மீமாம்சை 8.(க) பட்டாசாரியன் மதம்

அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்

செய்யுள் - 180

வேதமே யோதி நாதன்
இல்லையென்று விண்ணி லேறச்
சேதமாங் கன்மஞ் செய்யச்
சைமினி செப்பு நூலின்
நீதியே கொண்டு பட்டா
சாரிய னிகழ்த்து நீர்மை
ஓதநீர் ஞாலத் துள்ளே
யுள்ளவா றுரைக்க லுற்றாம்.

முன்னுரை

இருக்கு, யசு, சாமம், அதர்வணம் என்னும் நாலு வேதத்தையும் ஓதி, அவ்வேதம் ஓழியக் கர்த்தா இல்லை என்று சுவர்க்கம் புகுதற்குத் தனச்சேதமாம்படி சோமயாகம் முதலாகிய கன்மங்களைச் செய்தற்குச் சைமினி பகவானாலே அருளப்பட்ட சூத்திரத்தின் வழியைக் கொண்டு பட்டாசாரியன் என்பான் பாட்டமாகச் சொல்லும் முறைமையை ஒலி பொருந்தின சமுத்திரத்தால் சூழப்பட்ட பூமியிடத்தே உள்ளபடி சொல்லாநின்றேம் என்றவாறு.

பட்டாச்சாரியன் மதம் கூறுவான் எடுத்துக் கொண்டார்; அதனுள், இச் செய்யுள் பட்டாச்சாரியன் மதம் சொல்லுகின்றேன் என்பதனைக் கூறிற்று. (1)

செய்யுள் - 181

உற்றிடுங் காம மாதி
குணங்கடா முயிர்கட் குண்டாம்
மற்றிவை தருமே யாகின்
மறைமொழி வாய்மை யின்றாம்
கற்றநூ லளவாற் போதம்
கலப்பது கல்வி யின்றேல்
பெற்றிடு மழவு மூங்கை
யென்னவே பேச லாமே.

பதவுரை

உற்றிடும் காமம் ஆதி குணங்கள் தாம் உயிர்கட்கு உண்டாம்	ஆன்மாக்களுக்கு அநாதியே பொருந்திய காமம் குரோதம் உலோபம் மோகம் மதம் மாற்சரியம் அகங்காரம் இடம்பம் ஆகிய குணங்கள் கூடி நிற்கும்,
மற்று இவை தருமே ஆகில் மறை மொழி வாய்மை இன்றாம்	இக்குணங்களே ஆன்மாவுக்கு அறிவைத் தருமாகில் வேத வசனத்தால் ஒரு நன்மையும் இல்லையாம்; ஆகையால்,
கற்ற நூல் அளவால் போதம் கலப்பது	ஆன்மாக்கள் கற்ற நூல் எவ்வளவோ? அவ்வளவே அறிவு உண்டாம்,
கல்வி இன்றேல் பெற்றிடும் மழவும் மூங்கை என்னவே பேசலாம் ஏ	நூல் கற்றல் இல்லாத ஆன்மாக்களைப் பிறந்து முதிராத பாலர் என்றும் ஊமை என்றும் சொல்லலாம் என்றவாறு.

விளக்கவுரை

இச்செய்யுள் கல்வியில்லாத ஆன்மாக்கள் அறிவதொன்றில்லை எனக் கூறிற்று. *(2)*

செய்யுள் - 182

உண்டொரு கடவுள் வேதம்
உரைத்திட வுயிரின் தன்மை
கொண்டவ னல்ல னென்றும்
கூறிடி னுருவங் கூடில்
பண்டைய வுயிரே யாகும்
படித்தநூ லளவு ஞானம்
கண்டிடு முருவ மின்றேல்
கருதுவ தில்லை யென்றான்.

பதவுரை

உண்டு ஒரு கடவுள் வேதம் உரைத்திட உயிரின் தன்மை கொண்டவன் அல்லன் என்றும் கூறிடின்	சுயம்புவாகிய வேதத்தைக் கூறுதற்கு ஒரு கர்த்தா உண்டு என்றும் அந்தக் கர்த்தா ஆன்மத்தன்மையன் அல்லன் என்றும் சொல்லின்,

உருவம் கூடில் பண்டைய உயிரே ஆகும்	வேதத்தைச் சொன்னான் என்ற கர்த்தா வானவன் வேதம் சொல்லுமிடத்துச் சரீரியாய்ச் சொல்லவேண்டும்; ஆகையால், அப்படிச் சரீரியாகில் ஆன்மத்தன்மையன் ஆவன்,
படித்த நூல் அளவும் ஞானம் கண்டிடும்	அப்படிச் சரீரியான ஆன்மா தான் கற்ற நூல் அளவே அறிவையுடைத்தாம் இத்தனையே,
உருவம் இன்றேல் கருதுவது இல்லை என்றான்	வடிவு இல்லையாயின் நூலைக் கருதிச் சொல்லும் தன்மையும் இல்லையாம்; ஆதலால், வேதம் சுயம்புவேயாம் என்றவாறு. சுயம்பு - தானே தோன்றியது.

விளக்கவுரை

வேதம் சுயம்பானது. அதனைக் கூறியது ஒரு கர்த்தா எனவும், அக்கர்த்தா ஆன்மாவன்று எனவும் கூறினால் வேதத்தைச் சொன்ன கர்த்தாவானவன் வேதத்தைச் சொல்லுமிடத்துச் சரீரியாய்ச் சொல்ல வேண்டும். சரீரியாயின் ஆன்மத்தன்மையுடையனாதல் வேண்டும். சரீரியான ஆன்மா கற்ற நூலின் அளவாகவே அறிவையுடைத்தாம். உருவமின்றேல் நூலைக் கருதிச் சொல்லும், தன்மையும் இல்லை. ஆதலால் வேதம் சுயம்புவேயாம் என்க. *(3)*

செய்யுள் - 183

தேவரு முனிவர் தாமும்
சித்தரு நரரு மற்றும்
யாவரு முரைப்பர் வேதம்
இயம்பின ரின்ன ரென்னப்
போவதன் றென்று நாளும்
பரம்பரை புகல்வ தாகும்
கூவனீ ரென்னிற் கொள்ளேம்
மறுமையைக் குறித்த லாலே.

பதவுரை

தேவரும் முனிவர் தாமும் சித்தரும் நரரும் மற்றும் யாவரும் உரைப்பர் வேதம் இயம்பினர் இன்னர் என்ன போவது அன்று என்று	பிரம விஷ்ணுக்கள் முதலாகிய தேவர்களும் அகத்தியர் வசிட்டராதி இருடிகளும் சித்தர்களும் ஒழிந்த வித்தியாதரர் கந்தருவர் கின்னரர் கிம்புருடர் பைசாசர் இயக்கர்

	முதலாயினாரும் நரர்களும் வேதம் இன்னார் சொன்னார் என்று தம்மால் அறியப்படுவ தன்று என்று சொல்லா நிற்பர்; ஆகையால்,
நாளும் பரம்பரை புகல்வது ஆகும்	காலந்தோறும் பழையதாக வரும் என்றே சொல்லப்படுவதாம்,
கூவல் நீர் என்னில் கொள்ளேம் மறுமையை குறித்தலால் ஏ	கூவலின் நீர் போலத் தானே வந்து தோன்றப் பட்டதென்று சொல்லும் உவமையும் கொள்ளேம், அஃது ஒருவனால் செய்யப்படுத லானும் மறுமை எய்தத்தக்கதாய் இருத்தலானும் என்றவாறு.

விளக்கவுரை

இச்செய்யுள் இரண்டும் வேதம் ஒருவரால் செய்யப்பட்டதல்ல சுயம்பு என்பது கூறின. *(4)*

செய்யுள் - 184

உன்னிய வங்க மாறும்
மூன்றுப வேதந் தானும்
தன்னுளே யடக்கி வேறு
தங்கிடா வகையைச் சார்ந்து
முன்னமோர் தோற்ற மின்றி
முடிவின்றி நித்த மாகி
மன்னியோ ரியல்பே யாகி
வழங்கிடு மறைய தென்றான்.

பதவுரை

உன்னிய அங்கம் ஆறும் மூன்று உபவேதம் தானும் தன்னுளே அடக்கி	வேதமானது கருதப்பட்ட ஆறு அங்கங் களையும் மூன்று உபவேதங்களையும் தனக்குள் அடக்கி
வேறு தங்கிடா வகையை சார்ந்து	அர்த்தங்கள் எல்லாம் தன்னிடத்து அடங்குவது ஒழிந்து வேறு ஒரு நூலின் அர்த்தம் தன்னிடத்து இல்லை என்னாமை யைப் பொருந்தி
முன்னம் ஓர் தோற்றம் இன்றி	ஆதியிலும் ஓர் இடத்தில் தோன்றிற்று என்னும் முறைமையும் இன்றி,

முடிவு இன்றி நித்தம் ஆகி	ஒரு காலத்திலும் கேடின்றி நித்தமும் ஆய்,
மன்னி ஓர் இயல்பே ஆகி	ஒரு தன்மையாய் நிலைபெற்றுப் போதிக்கப் படாததாய்,
வழங்கிடும் மறை அது என்றான்	இப்படி வழங்கா நிற்கும் வேதம் என்று கூறினன் என்றவாறு

விளக்கவுரை

ஆறங்கமாவன - சிக்ஷை, கற்பம், வியாகரணம், நிருத்தம், சோதிடம், சந்தோவிசிதி என்பன. மூன்று உபவேதமாவன - ஆயுர்வேதம், தநுர்வேதம், காந்தர்வவேதம் என்க. முடிவின்றி - அளவிறந்து. வேறு நூல்களின் பொருள் தன்னிடத்து இல்லை எண்ணாதபடி எல்லாப் பொருள்களும் நிறைந்தது. தோற்றக்கேடு இல்லாதது. நித்தமானது. ஒரு தன்மையாய் நிலைபெற்றது.

இச்செய்யுள் வேதம் தோற்றமும் முடிவும் இன்றி, அழிவின்றி, ஆறு அங்கத்தோடும் மூன்று உபவேதத்தோடும் கூடிநிற்கும் என்று கூறிற்று. (5)

செய்யுள் - 185

செய்தியு நெறியு மேவும்
தேவரும் பொருளு மெல்லாம்
எய்திய பன்மை யாலே
ஓரியல் பியம்பா தாகும்
ஐயமில் கால மூன்றும்
அறிந்தபின் னெஞ்ச கத்தாய்
மெய்யதாய் வந்து தோன்றி
விளங்கிடும் வேத நூலே.

பதவுரை

செய்தியும் நெறியும் மேவும் தேவரும் பொருளும் எல்லாம் எய்திய பன்மையால் ஏ ஓர் இயல்பு இயம்பாது ஆகும்	படைத்தல் காத்தல் அழித்தல் என்னும் பல செய்திகளும், செய்தி செய்யும் வழியும், அவ்வழியிலே மேவும் தேவரும், அவர்களால் கொடுக்கப்பட்ட இகலோக பரலோக சாத்தியமான அர்த்தங்களும் இவையெல்லாம் பன்மையாகப் பொருந்திநின்றன ஆகையாலும் இவற்றைச் சொல்ல வேண்டுகையாலும் வேதமும் ஒரு நெறிப்படச் சொல்லாதாம்,

ஐயம் இல் காலம் மூன்றும் அறிந்த பின்	அந்த மூன்று தொழிலாலே மூன்றுவிதப்பட்டு இறந்தகாலம் நிகழ்காலம் எதிர்காலம் என்று எல்லாராலும் அறியப்பட்டபின்,
நெஞ்சகத்தாய் மெய்யதாய் வந்து தோன்றி விளங்கிடும் வேத நூல் ஏ	வேதமானது ஒரு வடிவைப் பொருந்தி அவ்வடிவின் நெஞ்சகத்தே பொருந்தி உலகத்திலே விளங்கா நிற்கும் என்றவாறு.

விளக்கவுரை

படைத்தல், காத்தல், அழித்தல் முதலியவைகளும், கன்மங்கள் செய்யும் வழியும், அவ்வழியிலே பொருந்தும் தேவரும், அவர்களால் கொடுக்கப்படும் இகலோக பரலோக சாத்தியமான பொருள்களும், மற்றும் உள்ளனவெல்லாம் பன்மையாகப் பொருந்தியுள்ளன. ஆகையாலும், இவற்றைச் சொல்ல வேண்டுகையாலும் வேதமும் ஒரு நெறிப்படச்சொல்லா. அம்மூன்று தொழிலாலே மூன்று விதப்பட்ட இறப்பு நிகழ்வு எதிர்வு எனக் காலம் மூவகைத்தாய் அறியப்பட்டு வேதமானது ஒரு வடிவைப் பொருந்தி, அவ்வடிவின் நெஞ்சகத்தே பொருந்தி உலகத்திலே விளங்கும்.

காலம் மூன்றும் அறிந்த பின் வேதம் உருவாம் என்பதனால் அநாதியில் அருவாம் என்னும் பொருள் பயந்தது. செய்தியும் - கன்மங்களும். ஐயம் இல் காலம் - சந்தேகமற்ற காலம்.

வெஞ்சகத்தாய் எனப் பாடமாகில் விளக்கத்தையுடைத்தாய் என்க.

இச்செய்யுள் வேதம் நிற்கும் முறைமையும் சொல்லும் முறைமையும் கூறிற்று. *(6)*

செய்யுள் - 186

தப்பிலா வாகுந் தாதுப்
பிரத்தியந் தன்னி னோடே
ஒப்பிலா தாம்பி ராதி
பதிகமா முறுப்புங் கொண்டு
செப்புமாம் வேதஞ் சொன்ன
விதிப்படி செய்யச் சேம
வைப்பதாம் வீடு பாசம்
மருவலா மொருவ லாமே.

பதவுரை

தப்பு இலா ஆகும் தாது பிரத்தியம் தன்னினோடு ஏ ஒப்பு இலா தாம் பிராதிபதிகம ஆம் உறுப்பும் கொண்டு செப்பும் ஆம் வேதம்	வேதமானது தவறில்லாததாகிய தாதுப் பிரத்தியங்கள் இவையிற்றினோடும் உவமை இல்லாததாகிய பிராதிபதிகம் என்னும் உறுப்புக்களையும் தன்னிடத்திலே அடக்கிக் கொண்டு சொல்லுவதாம்,
சொன்ன விதிப்படி செய்ய சேமவைப்பது ஆம் வீடு பாசம் மருவலாம் ஒருவலாம் ஏ	அந்த வேதம் சொன்ன விதிப்படியிலே கன்மத் தைச் செய்யப் பாசக்கட்டு விட்டு நீங்கலாம், அது நீங்கவே வீட்டின்பமும் ஆப்ததனமாகக் கூடும் என்றவாறு.

விளக்கவுரை

சேம வைப்பதாம் என்பது அறத்தினாகிய அர்த்தம் ஆப்ததனமாகக் கூடும் என்பது கருத்து. தாதுவாவது - ஞானத்துக்கு அவபோதனம். பிரத்தியம் - ஏழு வேற்றுமையும், பிராதிபதிகம் - கிரியாவிகற்பங்கள்.

இச்செய்யுள் கன்மம் செய்யவே மோட்சம் ஆம் என்று கூறிற்று. (7)

செய்யுள் - 187

போக்கொடு வரவு கால
மொன்றினிற் புணர்வ தின்றி
ஆக்கவே றொரு வரின்றி
அநாதியா யணுக்க ளாகி
நீக்கிடா வினையிற் கூடி
நிலமுத லாக நீடி
ஊக்கமா ருலக மென்று
முள்ளதென் றுரைக்க லாமே.

பதவுரை

போக்கொடு வரவு காலம் ஒன்றினில் புணர்வது இன்றி	மிகுதியையுடைய பிரபஞ்சமானது சங்கார மும் சிருட்டியும் ஒரு காலத்தில் உண்டா காததாய்,
ஆக்க வேறு ஒருவர் இன்றி	இதனை இரட்சிக்க ஒரு கர்த்தாவும் இல்லையாய்,

அநாதி ஆய்	அநாதியேயுள்ளதாய்,
அணுக்கள் ஆகி	ஆன்மசம்பந்தியாய்,
நீக்கிடா வினையில் கூடி	நீக்கப்படாத புண்ணிய பாவங்களோடு கூடி,
நிலம் முதல் ஆக நீடி	பிருதிவி முதலாகிய தத்துவங்களாக நிலைபெற்று,
ஊக்கமார் உலகம் என்றும் உள்ளது என்று உரைக்கலாம் ஏ	உலகம் என்றும் உள்ளதென்று சொல்லலாம் என்றவாறு.

விளக்கவுரை

பிரபஞ்சமானது அழிவதும் ஆக்கமும் ஒரு காலத்து இல்லாததாய், அதனைக் காக்க ஒரு கர்த்தாவும் இல்லையாய், அநாதியே உள்ளதாய், ஆன்ம சம்பந்தியாய், புண்ணிய பாவங்களுடனே கூடி, பிருதிவி முதலிய தத்துவங்களாக நிலைபெற்று, என்றும் உள்ளதென்று சொல்லலாம். எனவே, கர்த்தா இல்லை; பிரபஞ்சம் அநாதி என்றபடி.

ஊக்கம் - மனவெழுச்சி மிகுதிப்பட்டது. வலி. அணுக்களாய் - அணு சம்பந்திகளாய்.

இச்செய்யுள் கர்த்தா இல்லை. பிரபஞ்சம் அநாதி என்பது கூறிற்று. (8)

செய்யுள் - 188

நித்தமா யெங்கு முண்டாய்
நீடுயி ரறிவு தானாய்ப்
புத்திதா னாதி யாய
கருவியின் புறத்த தாகிச்
சுத்தமா யருவ மாகித்
தொல்லைவல் வினையின் தன்மைக்
கொத்ததோ ருருவம் பற்றிப்
புலன்வழி யுணர்ந்து நிற்கும்.

பதவுரை

நித்தம் ஆய் எங்கும் உண்டாய் நீடு உயிர்	பிரபஞ்சத்திலே நிலைபெற்ற ஆன்மாவானது அழிவில்லாததாய் நிறைவையுமுடைத்தாய்,
அறிவு தான் ஆய்	அறிவே தனக்கு வடிவுமாய்,

புத்திதான் ஆதி ஆய கருவியின் புறத்ததாகிச்	புத்தி முதலாகிய தத்துவங்களிடத்துக் கலவாது நிற்பதுமாய்,
சுத்தம் ஆய்	தத்துவங்கள் நீங்கின இடத்து அழுக்கற்று நிற்பனவுமாய்,
அருவம் ஆகி தொல்லை வல்வினையின் தன்மைக்கு ஒத்தது ஓர் உருவம் பற்றி புலன் வழி உணர்ந்து நிற்கும்	அருவமாய்ப் பழையதாய் வரும் புண்ணிய பாவங்களினது முறைமைக்கு ஈடான காயத்துடனே கூடி இந்திரியங்கள் வழியாகக் கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்றறியா நிற்கும் என்றவாறு.

விளக்கவுரை

உலகத்திலே நிலைபெற்ற ஆன்மா அழிவில்லாதது, நிறைவையுடையது, அறிவே தனக்கு வடிவானது, புத்தி முதலிய தத்துவங்களில் கலவாது நிற்பது, தத்துவ நீக்கத்தில் சுத்தமானது, அருவானது, பழமையாய் வரும் புண்ணிய பாவங்களுக்கு ஈடாக உடம்புடன் கூடி இந்திரியங்களின் வழியாய்க் கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்றறிவதாய் உள்ளது.

புத்தி தான் ஆதியாய கருவிகளாவன - இந்திரியம் முதல் பிரகிருதி ஈறாய தத்துவம் இருபத்துநாலும். புறம் - ஏழாம் வேற்றுமை இடப்பொருள். ஒத்ததோர் உருவம் - வினைகளுக்கு ஏற்ற வடிவம். சுத்தமாகிறது கன்மவசமாய் உழலுமோ? என்னில், சுத்தமாகாதாகின் முத்தியிலும் சுத்தன் ஆகான். சத்காரியவாதமும் கெடும் என்பது கருத்து.

இஃது ஆன்மலக்கணம்.

இச்செய்யுள் ஆன்மா நிற்கும் முறைமை கூறிற்று. (9)

செய்யுள் - 189

செயறரு வினைகள் மாய்ந்து
சிந்தையிற் சேர்ந்து நின்று
பயனொடு பலியா நிற்கும்
பலாலமும் தழையு மெல்லாம்
வயறனின் மருவி நாசம்
வந்துபின் பலத்தை வந்திங்
கியல்பொடுந் தந்தாற் போல
வென்றும்பி னியம்பு கின்றான்.

பதவுரை

செயல் தரு வினைகள் மாய்ந்து சிந்தையில் சேர்ந்து நின்று பயனொடு பலியா நிற்கும்	முற் சனனத்தின் மன வாக்குக் காயங்களின் தொழில்களாலே உண்டாகிய புண்ணிய பாவங்கள் அந்தக் காயத்துடனே தூலம் கெட்டுச் சூக்குமமாக ஆன்மாவோடும் பொருந்தி இந்தச் சனனத்தில் பிரயோசனத் தோடு ஆன்மாவுக்கு உண்டாகா நிற்கும், (அஃது என்போல என்னின்)
பலாலமும் தழையும் எல்லாம் வயல் தனில் மருவி நாசம் வந்த பின் பலத்தை வந்து இங்கு இயல்பொடும் தந்தால் போல என்றும் பின் இயம்புகின்றான்	வைக்கோல் தழை முதலானவைகள் எல்லாம் கழனியைப் பொருந்தி நின்று தனக்கு வடிவுக் கேடு வந்தபின்பு அவ்வயலின் பயிருக்கு நன்மையைக் கொடுத்தாற் போல என்றும் கூறி வேறும் சில சொல்லா நின்றான் என்றவாறு.

விளக்கவுரை

முற்பிறவிகளில் செய்த நல்வினை தீவினைகளால் உளதாகிய புண்ணிய பாவங்கள் அவ்வுடம்புடன் தூலம் கெட்டுச் சூக்குமமாய் ஆன்மாவோடு பொருந்தி இப்பிறப்பில் அநுபவப்பயனாம். அஃது என்போல என்னில்; வைக்கோல் தழை முதலாயின எல்லாம் வயலைப்பொருந்தி நின்று வடிவக்கேடு வந்த விடத்து அவ்வயலின் பயிருக்கு நன்மை தருவது போல என்க.

இச்செய்யுள் உம்மை வினைப்பயன் இம்மையில் ஊட்டும் என்பது கூறிற்று. *(10)*

செய்யுள் - 190

நீதியா நித்த கன்மம்
நிகழ்த்திடச் சுபத்தை நீங்கார்
தீதிலா விச்சா கன்மம்
செந்தழ லோம்பிச் செய்ய
ஏதுதான் வேண்டிற் றெல்லாம்
எய்தலாஞ் சோம யாகம்
ஆதிதா னாசை வீசி
அமைத்திட வீட தாமே.

பதவுரை

நீதி ஆ நித்த கன்மம் நிகழ்த்திடச் சுபத்தை நீங்கார்	அவரவர் சூத்திர முறைமையிலே சந்தியா அநுஷ்டானம் காயத்திரி செபம் முதலிய பிராமணர் செய்ய ஏனைய வருணத்தாரும் தமக்குக் கற்பித்த விதி வழாமல் செய்யவே நன்மையை எப்பொழுதும் கைவிடார்,
தீது இலா இச்சா கன்மம் செந்தழல் ஒம்பி செய்ய ஏது தான் வேண்டிற்று எல்லாம் எய்தலாம்	குற்றமில்லாத இச்சா கன்மமாகிய வைசுவ தேவ பலி கரணாதிகளும் தட்சிணாக்கினி காருகபத்தியம் ஆகவநீயம் முதலிய அக்கினி களும் செய்யத் தான் விரும்பியது யாது? அவையெல்லாம் எய்தலாம்,
சோமயாகம் ஆதிதா ணாசை வீசி அமைத்திட வீட தாமே	சோமயாகம் முதலிய யாகங்களைச் செய்யு மிடத்து அர்த்தத்தை மிகவும் செலவழித்துச் செய்ய வீட்டின்பம் உண்டாகும் என்றவாறு.

விளக்கவுரை

அவரவர் சூத்திர விதிப்படி சந்தியா வந்தனம், காயத்திரி செபம் முதலியன அந்தணர் செய்ய ஏனைய வருணத்தாரும் தமக்குக் கற்பித்த வழியிலே விதி வழாமல் செய்ய நன்மையை என்றும் பெறுவர். குற்றமில்லாத கன்மங்களாகிய வைசுவதேவபலிகரணாதிகளும்; தட்சிணாக்கினி, காருகபத்தியம், ஆகவநீயம் முதலிய அக்கினிகளும் செய்யத் தாம் விரும்பியவற்றை யெல்லாம் பெறலாம்.

இச்செய்யுள் நித்திய நைமித்தியங்களாகிய கன்மங்களாலே போக மோட்சம் கிடைக்கும் என்பதாகக் கூறிற்று. (11)

செய்யுள் - 191

கருதிய கன்ம ஞானம்
இரண்டுங்கா லாகக் கொண்டு
மருவிட லாகும் வீடு
மதிதனை மதித்துச் செய்தி
ஒருவிடிற் பதித ணாகும்
பதிதனைக் கதியி னுய்க்கத்
தருவதோர் நெறிதா னில்லை
என்னவுஞ் சாற்றி ணானே.

பதவுரை

கருதிய கன்ம ஞானம் இரண்டும் கால் ஆக கொண்டு மருவிடல் ஆகும் வீடு	சூத்திர விதிகளாலே கருதப்பட்ட கன்மமும் வேதம் சுயம்பு என்னும் ஞானமும் ஆகிய இரண்டையும் இடமாகக் கொண்டு வீட்டின்பத்தைப் பொருந்தலாகும்,
மதி தனை மதித்து செய்தி ஒருவிடில் பதி தன் ஆகும்	வேதம் சுயம்பு என்று அறியும் ஞானம் மெய்ம்மையாம் என்று வெகுமானித்துக் கன்மத்தைக் கைவிடில் கன்ம சண்டாளன் ஆகும்,
பதிதனை கதியின் உய்க்கத் தருவது ஓர் நெறிதான் இல்லை என்னவும் சாற்றினான் ஏ	அக்கன்ம சண்டாளனை மீள நல்ல நெறியிலே ஏற விடுவதற்கு உண்டாவதோர் வழி வேதத்திலும் இல்லை என்று சொன்னான் என்றவாறு.

விளக்கவுரை

சூத்திர விதிகளாலே கருதப்பட்ட கன்மமும், வேதம் சுயம்பு என்னும் ஞானமும் ஆகிய இரண்டையும் இடமாகக் கொண்டு வீட்டின்பத்தைப் பெறலாம். வேதம், சுயம்பு என்று அறியும் ஞானமே மெய் என மதித்துக் கன்மத்தைக் கைவிடில் கன்ம சண்டாளன் ஆவான். அக்கன்ம சண்டாளனை உய்விப்பதாகிய ஒரு நெறி வேதத்தினும் இல்லை.

கால ஏழாம் வேற்றுமை இடப்பொருள்.

இதனால் ஞானமும் கன்மமும் இரண்டும் வேண்டும் என்பது கருத்து.

இச்செய்யுள் கன்மம் கூடாமல் ஞானத்தால் மோட்சம் கிடைக்காது என்பது கூறிற்று. *(12)*

செய்யுள் - 192

பசுப்படுத் தியாகம் பண்ணப்
புண்ணிய மாவ தென்று
வசிப்பினான் மறைகள் சொன்ன
வழக்கினால் வாய்மை யாக
நசிப்பிலா மந்தி ரங்கள்
நவிற்றிலி னின்ப மாகும்
பசிப்புளா னொருவ னுண்ணப்
பசியது தீர்ந்த பண்பே.

பதவுரை

பசு படுத்து யாகம் பண்ண புண்ணியம் ஆவது என்று	எப்பொழுதும் யாகப்பசுவைக் கட்டி யாகங்களைச் செய்வது புண்ணியம் ஆம் என்று,
வசிப்பினால் மறைகள் சொன்ன வழக்கினால் வாய்மை ஆக நசிப்பு இலா மந்திரங்கள் நவிற்றலின் இன்பம் ஆகும்	குற்றமில்லாத இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் என்னும் நாலுவேதங்களும் சொன்ன விதிப்படி உண்மையாகக் கொண்டு கேடில்லாத மந்திரங்களைச் சொல்லுதலால் போகம் மோக்ஷம் ஆகிய இன்பத்தைத் தரும். அஃது என்போல என்னில்,
பசிப்பு உளான் ஒருவன் உண்ண பசி அது தீர்ந்த பண்பு ஏ	மிகவும் பசிப்புளான் ஒருவன் உண்டல் செய்தால் பசி தீர்ந்து இன்பம் உற்ற தன்மைபோல என்றவாறு.

விளக்கவுரை

இச்செய்யுள் யாகங்களுக்கு உத்தமமான யாகப்பசுவைக் கட்டி யாகம் செய்யவே போக மோட்சம் கிடைக்கும் என்பது கூறிற்று.

வேதம் என்னும் செய்யுள் முதல் இச்செய்யுள் காறும் பட்டாசாரியன் மதம் கூறிற்று. *(13)*

எட்டாவது – பட்டாசாரியன் மதம் முற்றிற்று.

பாயிரம் உள்படத் திருவிருத்தம் – 192.

மீமாம்சை 8.(உ) பட்டாசாரியன் மதமறுதலை

எழுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்

செய்யுள் - 193

வேதஞ் சுயம்புவென வேதந்த வாய்மொழியில்
வேறும்ப்ர மாண முளதேல்
நீதந்து காணிங்கு மாதுங்க பாரதமும்
நேர்கண்ட தாகு மதுபோல்
ஒதுஞ் சொலாய்வருத லானுங்க டாதிபட
மோவந்தி டாவொ ருவரா
லேதந்த தாமறைக ளாய்வந்த வாய்மொழியும்
வேறிந்து சேக ரனதே.

பதவுரை

வேதம் சுயம்பு எனவே தந்த வாய் மொழியில்	வேதம் சுயம்பு என்று பட்டாசாரிய! நீ கூறிய உண்மை ஒழிய நான் சுயம்பு என்று அவ்வேதந்தான் கூறிற்றில்லையாம்; அஃதன்றியும்,
வேறும் பிரமாணம் உளதேல் நீ தந்து காண் இங்கு	வேதம் அநாதி என்பதற்கு வேறு பிரமாணம் இல்லை, உண்டாயின் நீ சொல்லிக் காண் இவ்விடத்து,
மாதுங்க பாரதமும் நேர் கண்டதாகும்	மிகவும் பெருமையை உடைய மகாபாரதம் பிரமாணம் என்று சொல்லின் அதுவும் வியாசராலே சொல்லப்பட்டு வேதத்திற்கு ஒப்பாய் ஐந்தாம் வேதம் என்று வழங்கப்படுவதாம்,
அது போல்	அந்த மகாபாரதம் போல,
ஒதும் சொல்ஆய் வருதலானும்	ஒருத்தனாலே சொல்லும் சொல்லாய் வருதலானும்,
கடாதி படமோ வந்திடா	மண் பாவையும் கிழிப்பாவை (சிலையில் எழுதிய ஓவியமும்)யும் செய்வார் ஒருவர் இன்றி வந்து தோன்றாமை யானும்,
ஒருவராலே தந்ததாம்	அவ்வேதமும் ஒருவனாலே சொல்லப் பட்டதே ஆம்,

மறைகளாய் வந்த வாய்மொழியும் இந்து சேகரனது ஏ	வேதம் ஒருவன் சொன்னான் என்று சொல்லப்பட்டு வேறு இரகசியங்களாய் வருகிற சத்தியவசனமும் சந்திர சேகரனிடத்ததே என்றவாறு

விளக்கவுரை

பட்டாசாரியா! நீ வேதம் சுயம்பு எனக் கூறுகின்றாய். அவ்வேதம் தான் சுயம்பு எனக் கூறிற்றில்லை. வேதம் அநாதி என்பதற்கு வேறு பிரமாணம் இல்லை; உண்டாயின் இப்போது சொல். பெருமைமிக்க மாபாரதம் பிரமாணம் என்னில், அதுவும் வியாசராலே சொல்லப்பட்டு வேதத்துக்கு ஒப்பாம் ஐந்தாம் வேதம் என வழங்கப்படுவது. வேதமும் மாபாரதம்போல ஒருவனால் சொல்லப்பட்டதாம். மண்பாவையும், கிழிப்பாவையும் அதனைச் செய்வோனையின்றி உண்டாகாது; ஆகலின், அஃது ஒருவனால் சொல்லப்பட்டது உறுதியாம். வேதம் ஒருவனால் சொல்லப்பட்டதென இரகசியமாய் வரும் சத்திய வசனமும் பரமேசுவரனே வேதம் அருளிச் செய்தான் என்பதே.

எனவே பரமேசுவரனே வேதம் அருளிச் செய்தான் என்பதாயிற்று. அதனாலும் என்பது தொக்கு நின்றது ஏகாரம் தேற்றம். கடாதி எனவே மண்பாவை முதலியனவும். படாதி எனவே கிழியிடத்து உண்டாகிய பாவை முதலியனவும் கொள்க. மகாபாரதம் போல வேதம் ஒருவன் சொல்லப்படுகை யாலும் ஒருவன் ஒத வேண்டுகையாலும் கடபடாதிகளை ஒருவன் இயற்றப்படுகை யாலும் சுயம்பு அல்ல என்க. (1)

செய்யுள் - 194

உரைதந்தி டானொருவ னெனிலிந்த வானினிடை
யொலிகொண்டு மேவி யுளதாம்
புரைதந்த வாமறைக ளபிவெஞ்ச மாயொளிர்கை
பொருடந்த தீப மதுவேல்
வரைதந்த தாலிவுரை கபிலன்சொ லாகுமது
மறைகின்ற வாறும் வரவும்
விரைவின்சொ லாயிதனை யேதுகொண்டு மேவுவது
விடைகொண்ட தாலு னுரையே.

பதவுரை

உரை தந்திடான் ஒருவன் எனில்	வேதம் தானே உண்டானதன்றி ஒருவன் சொல்லான் என்று நீ சொல்லின்
இந்த வானின் இடை ஒலி கொண்டு மேவி உளது ஆம்	இந்த ஆகாசத்தின் கண்ணே பொருந்திய ஓசையைக் கொண்டு உண்டானதாக வேண்டும், ஆகையால்
புரை தந்த ஆம் மறைகள்	வேதங்களும் சொல்லும் பொருளும் விளங்காமல் குற்றத்தை உடையவாம்,
அபிவெஞ்சமாய் ஒளிர்கை பொருள் தந்த தீபம் அது ஏல்	அற்றன்று, வேதம் சர்வத்தையும் விளக்கு வித்துத் தானே நின்று விளங்குகை பொருளைக் காட்டி நிற்கும் விளக்குத் தானே நின்று பிரகாசித்தாற் போல என்று கூறின்,
வரை தந்தது ஆல் இ உரை கபிலன் சொல் ஆகும்	வேதத்தின் பெருமை இல்லையாய் ஓர் எல்லைக்குள் அகப்பட்டதாம்; ஆகவே, நீ உவமை கூறல் அறிவில்லாத நீரிச்சுர சாங்கியன் சொல்லும் சொல்லாம்,
அது மறைகின்ற வாறும் வரவும்	அவ்வேதம் அருவாம் முறைமையும் தோன்றும் முறைமையும் இங்ஙனம் என்று,
விரைவின் சொலாய்	விரைவிலே சொல்லுவாயாக,
இதனை ஏது கொண்டு மேவுவது	வேதம் முன் அருவாய்ப் பின் உருவாய்த் தோன்றிச் சொல்லும் பொருளும் விளங்கச் சொல்லும் என்று நீ சொல்லுகின்ற இதனை யாது பிரமாணம் கொண்டு பொருந்துவது,
விடை கொண்டது ஆல் உன் உரை ஏ	ஆதலால், நீ சொல்லுகின்ற சொல் பயனற்றுப் போனதாம் என்றவாறு.

விளக்கவுரை

வேதம் தானே உண்டானது அல்லாமல் ஒருவன் சொல்லான் என்னில், ஆகாயத்தில் பொருந்திய ஓசையைக் கொண்டு அஃது உண்டானதாக வேண்டும். ஆகையால், வேதமும் சொல்லும் பொருளும் விளங்காமல் குற்றமுடையதாம். அற்றன்று, பொருள்களைக் காட்டி நிற்கும் விளக்குத்தானே நின்று பிரகாசித்தாற் போல, வேதம் எல்லாப் பொருள்களையும் விளக்கித் தானே நின்று விளங்கும் என்னில் வேதம் பெருமையில்லாததாய் ஓர் எல்லைக்குள் அகப்பட்டதாம். ஆகவே, நீ கூறும் உவமை அறிவில்லாத நிரீச்சுர சாங்கியன் கூறும் கூற்றே ஆம். அவ்வேதம்

அருவாம் வரலாறும், தோன்றும் வரலாறும் விரைவிற் கூறுக. வேதம் முன்னே அருவாய், பின்பு உருவாய்த் தோன்றிச் சொல்லும் பொருளும் விளங்கச் சொல்லும் என நீ சொல்லும் சொல்லை எந்தப் பிரமாணம் கொண்டு நிறுத்துவாய். ஆகலின், நீ சொல்லும் சொல் பயனிலதாம் என்க.

புரை - குற்றம், அபிவியஞ்சகம் - அபிவெஞ்சம் என நின்றது; அது பொருளை விளக்கித் தானும் விளங்கி நிற்பது; ஆதலால், விளக்கிற்கு உவமை ஆயிற்று. விரைவிற் சொலாய் என்பது 'விரைவின் சொலாய்' என மெலிந்து நின்றது.

வரை தந்ததால் உன் உரை என்பது விளக்குப் போல் என்பையாகில் ஓர் இடத்து உண்டுமாய் இல்லையுமாய் எல்லைகள் உடையவாய் அவ்வுரை பின்னாகிய சாங்கியன் மதம் போல அசற்காரியவாத மதமாகவேண்டும். (2)

செய்யுள் - 195

உருவின்க ணேமருவி வரிலின்று தேரையுரை
உளதுங்க ணூலின் மறையும்
தருகின்ற நாதரவ ரிவரென்று நாமமது
தரவந்தி டாமை யதனால்
வருமென்று நேடியெனில் வளர்கின்ற தீவதனில்
வருகின்ற வாடை பலவால்
ஒருதந்து வாயனவ னிவனென்ற போதிலிவை
உளதென்று நீடி யவையே.

பதவுரை

உருவின் கணே மருவி வரில்	வேதமானது யாதொரு உருவைப்பற்றி மனத்திடத்ததாய்ப் பிரகாசிக்கும் என்று நீ சொல்லில்,
இன்று தேரை உரை உளது உங்கள் நூல் இன்மறையும்	ஓர் உருவைப்பற்றி வரும் என்னும் நியமம் இல்லாதபடியாலே இப்பொழுது தேரையிடத்துண்டாகிய சத்தத்திலும் உங்கள் நூலாகிய இனிய வேதம் உண்டாகும்
தருகின்ற நாதர் அவர் இவர் என்று நாமம் அது தர வந்திடாமை அதனால் வரும் என்று நேடி எனில்	வேதத்தை உண்டாக்கியவன் இன்னான் என்று பேர் குறித்து வேதம் சொல்லாது; ஆகையால், தானே தன்னை ஓதத்தக்க உருவைத் தேடி அஃதிடமாகத் தோன்றும் என்று நீ சொல்லில்,

வளர்கின்ற தீவு அதனில் வருகின்ற ஆடை பல ஆல்	பல வளங்களும் வளர்கின்ற தீவின் கண்ணின்று வருகின்ற புடைவை பல பேதங்களையுடைத்து ஆகையால்,
ஒரு தந்துவாயன் அவன் இவன் என்ற போதில் இவை உளது என்று நீடி அவையே	பல பேதப்பட்ட புடைவைகளைக் கண்ட பொழுதே தந்துவாயன் என்று சொல்லப் பட்டவனாலே இப்புடைவை உண்டானது என்று அறிந்தாற் போல வேதமும் சத்தார்த்தம் ஆகையால் ஒருவனாலே செய்யப்பட்டது என்று அறிவாயாக என்றவாறு.

விளக்கவுரை

வேதம் ஏதாவது ஒரு உருவைப்பற்றி நின்று மனத்தினிடத்துப் பிரகாசிக்கும் என்னில், அஃது ஓர் உருவத்தைப் பற்றிவரும் என்னும் நியமம் இல்லை. ஆதலால், இங்கே தவளையிடத்து உண்டாகிய சத்தத்திலும் உங்கள் வேதம் உண்டாம். வேதத்தை உண்டாக்கினோர் யாவர்? எனக் குறித்து அவ்வேதம் கூறாது, அஃது தானே தன்னை ஓதத்தக்க உருவைத்தேடி அதனிடமாகத் தோன்றும் என்னில், பல தீவுகளினின்றும், வரும் புடவைகள் பல பேதமுடையன, அவைகளைக் கண்ட போதே தந்துவாயன் என்பவனாலே இப்புடவை உண்டாக்கப்பட்டது எனப் பிரித்து அறிவது போல வேதமும் சப்தார்த்தம் ஆகலின், அஃது ஒருவனால் உண்டாக்கப்பட்டதே என அறிவாயாக.

ஏகாரம் - வினா. ஆல் - அசை.

'உருவின்கணே மருவிவரில் இன்று தோன் உரை' எனப் பாடமாயின் உருக்களாலே உள்ளார்கள் இடங்களிலே நின்று பொருந்தி வரும் என்னில் சுகதன் உரை போல அனவத்தைப்பட்டு வேதத்தைத் தருவான் ஒரு கர்த்தா அவன் இவன் என்று சொல்ல இல்லாமையும் கால எல்லைபடாது என்பையாகில் தயித்திரியம் என்னும் நாமும் இல்லையாம். *(3)*

செய்யுள் - 196

மறைநின்று நாலுதிசை யவரொன்ற தாகவரும்
உரைதந்த வாய்மை யதனால்
நிறைவென்று நீடுமெனில் வனையுங்க டாதிபல
சொலவொன்றி நீடியு ளதாம்
குறைவின்றி நாடுமொழி யவைசென்று கூடுவதொர்
குணமுண்ட தாகு மலர்தான்

உறைகின்ற மாலைதனி னுளதென்ற தாகுமெனில்
உணர்வின்ற தாழி யொலியே.

பதவுரை

மறை நின்று நாலு திசையவர் ஒன்றது ஆக வரும் உரை தந்த வாய்மை அதனால் நிறைவு என்று நீடும் எனில்	நான்கு திக்கிலும் உரை போதிக்கப்பட்ட ஜாதிபேதங்களும் மற்றொரு நூல் போல் ஆகாமல் ஒருமைப்பட ஓதி வரும் உண்மை யாலே வேதம் அநாதியாய் நிறைவை யுடையதாய் நிலைபெறும் என்று கூறின்,
வனையும் கடாதி பல சொல ஒன்றி நீடி உளது ஆம் குறைவு இன்றி நாடும் மொழி அவை சென்று கூடுவது ஓர் குணம் உண்டது ஆகும்	குலாலனால் உண்டாக்கப்படும் கடாதிகள் பல பேதம் பொருந்தி அநாதியிலே உள்ளதாகிறது போலக் குற்றமின்றி அறியப்படும் சொல்லும் பொருளும் கூடும்படிக்குக் கூட்டுவது ஓர் கர்த்தா உண்டாக வேண்டும்; அற்றன்று,
மலர் தான் உறைகின்ற மாலைதனில் உளது என்றது ஆகும் எனில்	மாலையின் உறையும் பூவும் மணமும் அந்த மாலையினிடத்தின் உள்ளதல்லவாய் முன்பே உண்டாய் அதனைப் பின்பு மாலையாகக் கூட்டினாற் போலச் சத்தமும் அர்த்தமும் முன்பே உள்ளவாய்ப் பின்பு மூர்த்திகளாலே கூட்டப்பட்ட என்று கூறின்,
உணர்வு இன்று அ தாழி ஒலியே	அம்மூர்த்திகள் சத்தத்தை யறிந்து கூட்டப் பட்டார்கள் அல்லவாகில் உன்வேதம் கடைதலையுற்ற கடலின் ஓசைக்கு ஒக்கும் என்றவாறு.

விளக்கவுரை

நாலாபக்கங்களிலும் உள்ள மொழிகளால் உணர்த்தப்படும் சாதிபேதங்களும், மற்றை நூல்களைப் போலன்றி ஒரு தன்மைப்பட ஓதப்பட்டு வரும் நியமமும் உண்மையாலே வேதம் அநாதியாய், நிறைவையுடையதாய் நிலைபெறும் என்னில், குயவனால் உண்டாக்கப்படும் பண்டங்கள் பல வேறுபாடுகளை யுடைத்தாய் அநாதியிலே உளதாவதுபோல, குற்றமின்றி அறியப்படும் சொல்லையும், பொருளையும் கூட்டுதற்கு ஒரு கருத்தா வேண்டும். அற்றன்று, மாலையில் உள்ள பூவும் அதன் மணமும் அம்மாலையில் உள்ளன அல்ல. அவை முன்பே உளவாக அவற்றைப் பின்பு மாலையாகக் கூட்டக் கண்டோம். அதுபோல, சத்தமும் அர்த்தமும் முன்பே உளவாய்ப் பின்பு மூர்த்திகளாலே கூட்டப்பட்டன என்னில்,

சத்தத்தை அறிந்து அவர்களால் கூட்டப் பட்டதாதல் வேண்டும். அன்றேல், கடலில் உண்டாகின்ற சத்தத்தோடு அஃது ஒக்கும் என்க.

எனவே, வேதம் சப்தார்த்த மாகையால் சப்தம் தந்த சுர ஒலிகளாலே உண்டாக வேண்டுமாகலின் அவ்வேதம் சுயம்பு அன்று என்பது கருத்து.

உணர்வின்ற தாழி ஒலி என்பதற்குச் சமுத்திர சத்தம் போலத் தானே உள்ளதாம் என்னில் அதற்கு அறிவில்லை காண் எனப் பாடமோதுவாரும் உளர். அதன்கண் ஒலி வாயு காரணமாக எழும் என்க. அந்த வாயுவும் ஜடமல்லவோ எனில், அந்த வாயுவும் ஒரு கடவுளால் சேட்டைப்படும் என்க.

வேதம் என்னும் செய்யுள் முதல் இச்செய்யுள் காறும் வேதம் சுயம்பு என்பதனை மறுத்துக் கூறிற்று. (4)

செய்யுள் - 197

உடனின்று நாமுணரு மதுகண்ட வாறொருவன்
உலகங்க ளோடு ருவமாய்
இடைநின்று மாமறைக ளவையன்று வாய்மொழிய
இவைகொண்டு லோக நெறியின்
கடனின்று வாழுமது கருதும்பி னாணைவழி
கருமஞ்செய் காசி னியுளோர்
திடமென்று சீரரச னுரைதங்கு மோலைதிரு
முகமென்று சூடு செயலே.

பதவுரை

உடல் நின்று நாம் உணரும் அது கண்டவாறு ஒருவன் உலகங்களே உருவம் ஆய் இடை நின்று	சரீரத்தினின்று நாம் உணருமது கண்டபடியாலே ஒப்பற்றவன் ஒருவன் என்று சொல்லப்பட்ட கர்த்தாவானவன் பிரபஞ்சமே திருமேனியாய்ப் பிரபஞ்சத்திடையிலே எழுந்தருளி நின்று,
மா மறைகள் அவை அன்று வாய் மொழிய	மிகுதி யுடைய வேதங்களை அநாதியிலே அருளிச் செய்ய பின்
இவை கொண்டு உலக நெறியின் கடன் நின்று வாழும் அது கருதும்பின்	பின்பு அவ்வநாதியைக் கொண்டு பிரபஞ்சமானது அவ்வேதங்களின் முறையிலே நின்று வாழும் அதனைக் கருதி அநாதி

	என்றும் சுயம்பு என்றும் சொல்லா நிற்கும்; அஃது என்போல என்னின்,
ஆணை வழி கருமம் செய் காசினி உளோர் திடம் என்று சீர் அரசன் உரை தங்கு மோலை திருமுகம் என்று சூடு செயல் ஏ	மண்டல நாயகனாகிய அரசன் தனது ஆக்கினை வழியிலே நிற்கும் பிரபஞ்சத்தினுள் ளோர்க்கு அவ்வரசன் உரை பொருந்திய ஓலை வர அதனைத் திருமுகம் என்று மங்கல மரபினாற் கூறித் தலையில் தரித்து அவ்வரசனைப் போலச் சிறப்புச் செய்கை போல வழங்கும் கிரமங்காண் என்றவாறு.

விளக்கவுரை

உடம்பிலிருந்தே உயிர்கள் ஒன்றனை உணர்கின்றன. உலக முழுவதும் திருமேனியாகக் கொண்ட முதல்வன் அநாதியிலே வேதம் அருளிச் செய்யப் பின்பு அவ்வேதங்கள் சொன்ன முறையிலே நின்று உலகம் வாழும் எனக்கருதி அநாதி என்றும் சுயம்பு என்றும் சொல்லும் அவ்வளவே. அரசன் தன் ஆணைவழியிலே நடக்கும் குடிமக்களுக்கு அவ்வரசன் ஓலைவிடுக்க அதனைத் திருமுகம் என அவர் வணக்கத்துடன் பெற்றுத் தலைமேற்கொண்டு சிறப்புச் செய்வார்; அச்சிறப்பு அரசனுக்குரியதே; அதுபோல என்க. மாகனால் சொல்லப்பட்டது மாகம் எனவும், தொல்காப்பியனால் சொல்லப்பட்டது தொல்காப்பியம் எனவும் கூறப்படுவது போலவே சுயம்புவினாலே கூறப்பட்ட வேதத்தையும் சுயம்பு எனக் கொண்ட முறைமையுமாம் என அறிவாயாக.

சுயம்புவாலே கூறப்பட்ட வேதத்தையும் சுயம்பு என்று கொண்ட முறைமையும் அதனை உலகங் கொண்ட முறைமையும் மாகனால் சொல்லப்பட்டது மாகம் ஆனாற் போலவும், தொல்காப்பியனாற் சொல்லப்பட்டது தொல்காப்பியம் ஆனாற் போலவும் பிறவாற்றானுங் கொள்க. *(5)*

செய்யுள் - 198

முடிவின்றி வேதியர்கள் முதல்வந்த மூவர்களும்
மொழியுஞ்சொ லாரிய மெனில்
கடிவின்றி யேகணித ரவர்கண்ட வாறதுவென்
வடகண்ட சாதி கடியா
தொடிவின்றி யோதுவதெ னுரைதங்கு வேதமொழி
யுளதென்று கூறு மவர்தாம்

அடியின்று தானெனும தறிவின்றி யீனுமவர்
இலையென்ற வாத ரவதே.

பதவுரை

முடிவு இன்றி வேதியர்கள் முதல் வந்த மூவர்களும் மொழியும் சொல் ஆரியம் எனில்	ஆரியமாகிய வேதமே கேடில்லாத பிரம சத்திரிய வைசியர் என்னும் மூன்று சாதியும் ஓதும் சொல் என்று நீ சொல்லின்,
கடிவு இன்றியே கணிதர் அவர் கண்டவாறு அது என்	ஏனைய வருணத் துள்ளராய்ச் சோதிடம் சொல்லும் அவர்கள் வேதத்திற்கு அங்க மாகிய சாத்திரத்தை ஓதாமல் அறியும்படி எங்ஙனம்? அஃதன்றியும்,
வட கண்ட சாதி கடியாது ஒடிவு இன்றி ஒதுவது என்	இத்தத் தீவின் வடகூற்றின் உள்ளார் மற்ற வருணத்தார் வேதத்தை ஓதத் தக்கார் என்று நீக்கப்படாமல் எல்லாராலும் ஓதப்படுவா னேன்? ஆதலால் நீக்கப்படா தாயிற்று,
உரை தங்கு வேதம் மொழி உளது என்று கூறும் அவர் தாம்	எல்லார் சொல்லும் தன்னிடத்தே உடைத் தான வேதம் சத்தமாக உள்ளதென்று கூறுமவர் தாமும்,
அடி இன்று தான் எனும் அது	வேதத்திற்கு மூலகர்த்தா இல்லை என்று சொல்லும் அது,
அறிவு இன்றி ஈனும் அவர் இலை என்ற ஆதரவு அது ஏ	பிறந்த பிள்ளைக்குப் பெற்றவர் இல்லை என்று அறிவிலாது விரும்பிக் கூறுதல் போலும் என்றவாறு.

விளக்கவுரை

ஆரியவேதம் அந்தணர் அரசர் வணிகர் என்னும் மூவகை மரபினரே ஓதுதற்குரியது என்னில், ஏனைய வருணத்தராய் உள்ளோர் சொல்லும் ஜோதிட நூலுள் உள்ள விதியை வேதத்துக்கு அங்கமாகிய அந்நூலை ஓதாமல் அறியும்படி எப்படி? அன்றியும், வடநாட்டில் உள்ளார் எல்லாரானும் வேதம் ஓதத்தக்கது எனக்கொண்டு ஓதுவானேன்? ஆகலான் அது நீக்கப்பட்டதாயிற்று. யாவரானும் ஓதத்தக்கது எனக் கூறும் அவர் தாமும் அது சத்தமாக உள்ள தென்பார்; வேதத்துக்கு மூலகர்த்தா இல்லை என்பர். அச்சொல் 'பிறந்த பிள்ளைக்குப் பெற்றார் இல்லை' என்று கூறும் அறிவில்லாத சொல்லோடு ஒக்கும்.

கடிவு இன்றி - நீக்கமின்றி. ஒடிவு இன்றி - தவிர்தலின்றி. ஈனுமவர் -

உண்டாக்குமவர். முடிவு இன்றி வேதியர்கள் - அளவிறந்த பிராமணர்கள். முதல் வந்த மூவர்களும் - பழைய பிரம விட்டுணு ருத்திரர்களும். கடிவின்றியே கணிதர் அவர் கண்டவாறு அது என் - கடியாது கணித நூல்களும் ஒருவர் சொல்லாமல் வந்த தாம். வட கண்ட சாதி கடியா - வட பூமியில் உள்ளாரும் குறைபடாமல் வேதம் சுயம்பு என்றே சொல்லா நின்றார்கள். ஈனுமவர் இலை என்றல் - தாயின்றியே பிள்ளை பிறக்கும் வசனம்.

இச்செய்யுள் வேதம் எல்லாரும் ஓத ஒண்ணாது என்பதனையும் அதற்குப் பாதம் இல்லை என்பதனையும் மறுத்துக் கூறிற்று. *(6)*

செய்யுள் - 199

அறிகின்ற பான்மையவ யவநின்ற தாகிலணு
வழியுங்க டாதி யெனவே
செறிகின்ற வாறதிலை யெனின்வந்து சேருமது
திடமன்று கூட வொருவன்
குறிகொண்டு காரின்முளை வருகின்ற பீசமவை
குலையொன்றி வேனி லழியு
முறுகின்ற காலமவை யுடனின்று போயழியு
முலகென்று நீடி யிலதே.

பதவுரை

அறிகின்ற பான்மை அவயவம் நின்றது ஆகில் அணு அழியும் கடாதி எனவே	ஆன்மாவானது பேதப்பட்டுச் சரீர அவயவத்தைத் தான் அறியும் பகுதியிலே கூடி நின்றதாயின் அறியும் தகுதியை உடைய சரீராதிபோல ஆன்மாவும் அழிந்துபோம்,
செறிகின்ற வாறு அது இலை எனின் வந்து சேரும் அது	ஆன்மா அந்தச் சரீர அவயவத்தைச் சேராது சரீர அவயவம் தானே சென்று ஆன்மாவைச் சேரும் என்று கூறின்,
திடம் அன்று கூட ஒருவன் குறி கொண்டு	சரீர அவயவந்தானே ஆன்மாவைக் கூடும் நிலைமை உடைத்தன்று; கர்த்தா ஒருவன் குறிக்கோளாகக் கூட்டுகையாலே ஆன்மாவும் சரீரமும் கூடி வரும்,
பீசம் அவை காரின் முளை வருகின்ற வேனில் குலை ஒன்றி அழியும்	முளைகளானவை கார்காலத்து விதையினின்று முளைத்து வரும் வேனிற்காலத்துத் தகுதி வேறுபட்டு அழியும் அங்ஙனம் போல்,

உறுகின்ற காலம் அவை உடன் நின்று போய் அழியும் உலகு என்றும் நீடி இலதே	பிரபஞ்சமானது சிருஷ்டி திதி சங்காரம் என்று கூறப்பட்ட மூவகைத் தொழில் உற்ற காலத்து உடனே கூடித் தோன்றி நின்று கெடும்; ஆகையால், காலத்தோடும் கூடி வரும் பிரபஞ்சமானது எந்நாளும் நிலைபேற்றை உடைய அல்லவாம் என்றவாறு.

விளக்கவுரை

ஆன்மா பேதப்பட்டுச் சரீர அவயவத்தைக் கூடிநின்றதாயின் சரீரம் முதலியனபோல ஆன்மாவும் அழிந்துபோம். ஆன்மா சரீர அவயவத்தைக் கூடாது, சரீர அவயவமே சென்று ஆன்மாவைச் சேரும் என்னில், சரீர அவயவமும் தானே ஆன்மாவைக் கூடும் நிலைமையுடையதன்று; கர்த்தா ஒருவன் கூட்டுகையாலே ஆன்மாவும் சரீரமும் கூடும். முளைகள் விதையினின்று கார்காலத்திலே முளைத்து வருவன, வேனிற்காலத்துத் தன்மை வேறுபட்டு அழியும். அதுபோல, பிரபஞ்சம் படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய மூவகைத்தொழில் உற்ற காலத்துத் தோன்றி நின்று கெடும். ஆகையால், காலத்தோடு கூடிவரும் பிரபஞ்சம் என்றும் நிலை பேறுடையதன்று.

இச்செய்யுள் பிரபஞ்சம் அழியும் என்பதூஉம் அழிவில்லாத ஆன்மா பிரபஞ்ச பேதத்தில் அல்ல என்பதூஉம் கூறிற்று. (7)

செய்யுள் - 200

நிறைவெங்கு மாகிலுயிர் நெறிநின்று போய்வருத
லணைவின்ற தாமு டலிலே
குறைவின்றெ லாமுமுள குடகந்த மாகிலவை
விடநின்ற வாறு குறியா
உறைகின்ற மாதவர்க ளுடனின்று போய்வறிதொ
ருடல்கொண்டு மீள்வ துணராய்
மறைதந்த வாய்மைதனி னிறைவின்றி யேயுலகின்
மலைகின்ற தாலு னுரையே.

பதவுரை

நிறைவு எங்கும் ஆகில் உயிர்	ஆன்மாவானது பிரபஞ்சம் எங்கும் நிறைந்து நிற்குமாயின்,
நெறி நின்று போய் வருதல் அணைவு இன்றதாம்	ஆன்மாவானது நித்திய கன்மம் முதலாகிய நெறிகளிலே நின்று அந்த நெறிக்குத் தக்க

	சுவர்க்காதி பதங்களிலே சென்று புண்ணியத்தைப் புசித்துப் புண்ணிய கன்மம் தொலைந்தால் மீளவும் வரும் என்னும் வேத வாய்மை இல்லையாம்; அற்றன்று,
உடலிலே குறைவு இன்று எலாமும் உள குட கந்தம் ஆகில் (எலாமும் உடலிலே குட கந்தம் குறைவு இன்று உள ஆகில்)	எல்லா ஆன்மாக்களும் சரீரத்திலே குடத்தில் கட்டின பூமணம் போல நிறைந்து நிற்கும் என்று கூறுகின்றாய் ஆயின்,
அவைவிட நின்றவாறு குறியா	அவ்வான்மாக்கள் சரீரம் கெட்டபோது தான் கெடாமல் உடலைவிட்டு நிற்கிற வழியைக் குறிக்கொள்ள மாட்டா ஆகையால்,
உறைகின்ற மாதவர்கள் உடல் நின்று போய் வறிது ஓர் உடல் கொண்டு மீள்வது உணராய்	உடலின்கண் உறைதலைச் செய்யும் மகா யோகிகள் அவ்வுடலை விட்டுப் பரகாயப் பிரவேசம் செய்வதும் வருவதும் அறியாய்,
மறைதந்த வாய்மைதனில் நிறைவு இன்றியே உலகில் மலைகின்றதால் உன் உரை ஏ	வேதம் சொன்ன சத்தியமான அர்த்தத்தில் உனக்கு நிறைவு இல்லை ஆதலால் நீ சொல்லுகின்ற சொல்லும் உலகத்தின்கண் மாறுபாடு பொருந்திற்று என்றவாறு.

விளக்கவுரை

ஆன்மா பிரபஞ்சம் முழுவதும் நிறைந்து நிற்குமாயின், ஆன்மாவானது நித்தியகன்மம் முதலிய நெறிகளில் நின்று, அந்நெறிகளுக்குத்தக்க சுவர்க்காதி போகமாகிய புண்ணியப்பயன்களைப் புசித்து, அப்புண்ணியப்பயன் தொலைந்தால் மீளவும் பிறக்கும் என்னும் வேத உண்மை இல்லையாம். அற்றன்று, குடத்திலே கட்டின பூமணம் போலச் சரீரத்திலே எல்லா ஆன்மாக்களும் நிறைந்து நிற்கும் என்னில், சரீரம் கெட்டபோது எல்லா ஆன்மாக்களும் தாம் கெடாமல் சரீரத்தை விட்டு நிற்கும் வழியைக் குறிக்கொள்ளா, ஆகையால், உடம்போடு கூடிநின்றும் மகா யோகிகள் அவ்வுடம்பை விட்டுப் பரகாயப் பிரவேசம் செய்வதும் வருவதும் அறியாய்போலும். ஆகலின், வேதம் சொன்ன சத்தியமான அர்த்தத்தில் உனக்கு நிறைவின்று. எனவே, நீ சொல்லும் உலகத்தில் மாறுபாடுடையதாம் என்க.

குடகந்தமாகில் என்பதற்குப் போல என்பதோர் உவமைச் சொல் வருவித்துரைக்க. வறிதோர் உடல் - உயிர் போன மற்றோர் உடல்.

இச்செய்யுள் ஆன்மா எல்லாவற்றினும் சரீரத்தினும் நிறைந்து நிற்கும் என்பதனை மறுத்துக் கூறிற்று. *(8)*

செய்யுள் - 201

அழிகின்ற தால்வினைக ளாகின்ற வாறெனெரு
வதுமங்கி யான பரிசேல்
ஒழிவின்றி யோதநமு மறவுண்ண நாம்வினைகள்
உறுகின்ற வாற தெனலாம்
கழிகின்ற தாலறிவு வினைதந்தி டாவினைஞர்
கருமங்க ணாடி யுறுவோர்
பழுதின்றி யேயுதவு மதுபண்ப தாகவருள்
பரமன்க ணாகும் வினையே.

பதவுரை

அழிகின்றதால் வினைகள் ஆகின்ற வாறு என்	ஒருவன் செய்த கன்மங்கள் இக்காயம் கெடக் கூடக் கெடும் ஆகையால் கன்மம் மேலைக்கு வந்து உண்டாம்படி எங்ஙனம்?
எரு அது மங்கி ஆன பரிசு ஏல்	வயலுக்கு வைக்கோலும் தழையும் தனது தூல முறைமை கெட்டுச் சூக்கும முறைமை ஆகி வீரியம் கிடந்து பயிருக்கு நன்மை கொடுக்குமது போலச் செய்த கன்மம் உடலோடு தூல முறைமை கெட்டு ஆன்மாவோடு சூக்கும முறைமையாகிப் பொருந்துமென்று நீ சொல்லின்,
ஒழிவு இன்றி ஒத நமும் அற உண்ண நாம் வினைகள் உறுகின்ற வாறு அது எனல் ஆம்	நாம் நாடோறும் உண்ணும் உணவு செரித்துக் கழிந்த மலம் மீளவும் நமக்கு நன்மையைத் தரும் என்பார் கூறும் கூற்று எனலாம்,
வினை கழிகின்றதால் அறிவு தந்திடா	காயத்தோடும் செய்த வினை கெடுகையால் அவ்வினை ஆன்மாவை அறிந்து கூட மாட்டாது; அது கூடும்படி,
வினைஞர் கருமங்கள் நாடி உறுவோர் பழுது இன்றியே உதவும் அது பண்பது ஆக	தொழில் செய்தோர்க்குச் செய்த தொழில் கண்டு தொழில் கொள்வோர் அவ்வவர் தொழிற்குத் தக்க தொத்துப் பழுதறக் கொடுக்கும் தன்மை போல,
அருள் பரமன்கண் ஆகும் வினையே	ஆன்மாக்கள் செய்த புண்ணிய பாவங்களை அறிந்து அப்புண்ணிய பாவங்களுக்கு ஈடான புசிப்புக்களைக் கொடுத்தருளிப் புசிப்பிக்குந் தொழில் பரமேசுவரனதாகும் என்றவாறு.

விளக்கவுரை

ஒருவன் செய்த கன்மங்கள் இவ்வுடல் கெடக்கெடும். ஆகலின், மேலைக்கு வந்து பயன் தருவது எப்படி? வயலுக்கு இட்ட வைக்கோலும் தழையும் அதன் தூலம் கெட்டுச் சூக்குமமாய் நின்ற வீரியம் பயிருக்கு நன்மையைக் கொடுக்கும். அதுபோல, செய்த கன்மமும் உடம்போடு தூலமுறைமை கெட்டு உயிரோடு சூக்குமமாய்ப் பொருந்தும் என்னில், நாடோறும் நாம் உண்ணும் உணவு சீரணமாய்ப் பின்புள்ள மலம் மீட்டும் நமக்கு நன்மையைத் தரும் என்பார் கூற்றை ஒக்கும். செய்த வினை உடம்போடு கெடுதலால் கெட்ட அவ்வினை ஆன்மாவை அறிந்து கூடமாட்டாது. வேலை செய்தோருக்கு அவரவர் செய்த தொழிலை அறிந்து வேலை கொள்வோர் அதற்குத்தக்க கூலியைக் கொடுப்பார். அதுபோல, ஆன்மாக்கள் செய்த புண்ணிய பாவங்களை அறிந்து அப்புண்ணிய பாவங்களுக்கு ஈடான புசிப்புக்களைக் கொடுத்தருளிப் புசிப்பிப்பது பரமேசுவரனுடையதாம் என்க. இதனால், கன்மமும் ஆன்மாவும் தாமே கூடும் என்பது மறுக்கப்பட்டது.

இச்செய்யுள் கன்மமும் ஆன்மாவும் தாமேகூடும் என்பதனை மறுத்துக் கூறிற்று. *(9)*

செய்யுள் - 202

கருமங்கள் ஞானமது வுடனின்ற லான்மருவு
கதிதங்க லாகு மெனின்நீ
தருமங்க ராகமுத லவைதங்க மேலறிவு
தவிரும்பின் வீடு மணையா
பொருணின்று தேடிவரு பயனுண்டு போகவினை
புரிகின்ற வாற தெனவே
திருநின்ற போகம்வள ரவிசென்று மேவியது
செலவுண்டு சூழ்வ செயலே.

பதவுரை

கருமங்கள் ஞானம் அது உடல் நின்றலால் மருவு கதி தங்கல் ஆகும் எனின் நீ	நித்திய கன்மம் முதலிய கன்மங்களை ஞானம் கூடி நிற்றலாலே அழிவில்லாமையைப் பொருந்தின வீட்டின்பத்தைப் பொருந்தலாம் என்று நீ கூறின்,
தரும் அங்கு அராகம் முதல்	கன்மங்கள் செய்யுமிடத்துப் பொருள் வேண்டுகையாலே ஆசை முதலியன உண்டாம்,

அவை தங்க மேல் அறிவு தவிரும்	அவ்வாசை முதலிய உண்டாகவே ஆன்மா பாச ஞானமாய் நிற்கும்,
பின் வீடும் அணையா	அந்தப் பாசஞானத்தாலே மோக்ஷமும் அடையாது,
பொருள் நின்று தேடி வரு பயன் உண்டு போக வினை புரிகின்ற வாறு அது என ஏ	ஒருவன் பொருளைத் தேடி அதனால் உண்டாய பயனை அதிலே நின்று புசித்து அந்தப் பொருள் மாளவே மீளவும் பொருள் தேடுதற்கு முயல்கின்ற அதனை ஒப்ப,
வளர் அவி சென்று திரு நின்ற போகம் மேவி அது செல உண்டு சூழ்வ செயல் ஏ	வெகுவான ஆகுதி செய்கையினாலே அவ்வாகுதி சென்ற புண்ணியத்தால் மிக்க சுவர்க்க போகங்களைப் பொருந்தி அப்புண்ணியம் தொலையும் அளவும் புசித்துத் தொலைய மீளவும் புண்ணிய கன்மம் செய்ய நினைக்கின்ற செயல் காண் உன் செயல் என்றவாறு.

விளக்கவுரை

நித்தியகன்மம் முதலிய கன்மங்களைச் செய்தலால் ஞானம் வந்து கைகூட அழிவில்லாத வீட்டின்பத்தை அடையலாம் என்னில், கன்மங்கள் செய்யுமிடத்துப் பயனை வேண்டி நிற்றலால் ஆசை முதலியன உண்டாம். அவ்வாசை முதலியன உண்டாகவே ஆன்மா பாசஞானமாய் நிற்கும். அந்தப் பாசஞானத்தால் முத்தியை அடைதல் இல்லை. ஒருவன் பொருளை ஈட்டினான், அதனால் உண்டாகிய பயனை நுகர்ந்தான், அப்பொருள் தொலைந்தது மீளவும் அவன் பொருள் தேட முயற்சிக்கிறான். அதுபோல, வேள்விகள் பலவற்றையும் செய்தலால் புண்ணியம் மிகுதியாக உண்டாகிறது, அப்புண்ணியத்தால் அவன் பயனாகவுள்ள சுவர்க்க போகங்களும் மிகுதியாக உண்டாகின்றன. அப்புண்ணியப்பயன் தொலையுமளவும் அநுபவித்தான், மீளவும் புண்ணியச்செயல் செய்யக் கருதுகின்றான், அவ்வளவே உன் செயலாம். எனவே, கன்மம் செய்தலால் ஞானம் தோன்றி அதனால் முத்தியுண்டாம் என்பதனை இது மறுத்தபடி.

இச்செய்யுள் கன்மம் செய்யவே ஞானம் கூடி மோக்ஷம் உண்டாம் என்பதனை மறுத்துக் கூறிற்று.

வேதம் என்னும் செய்யுள் முதல் இச்செய்யுள் காறும் பட்டாசாரியன் மதத்தை மறுத்துக் கூறிற்று. *(10)*

எட்டாவது – பட்டாசாரியன் மதமறுதலை முற்றிற்று.

பாயிரம் உள்படத் திருவிருத்தம் – 202.

பட்டாசாரியன் மதமறுப்புத் தொகுப்பு

1. மறை அநாதியன்று

மறை தானாகத் தோன்றியது என்று மறையே கூறவில்லை. இம்மதமே மறை தானாகவே தோன்றியது என்று கூறுகின்றது. மேலும் அம்மறை தானே தோன்றிய தென்பதற்கு வேறு அளவையில்லை. அப்படியிருப்பின் இம்மதம் கூறியிருக்கும். மகாபாரதத்தை அளவையெனக் கூறின், அதுவும் வியாசராலே சொல்லப்பட்டு ஐந்தாம் மறை என அழைக்கப்படுகிறது. அதுபோன்று மறையும் ஒருவனால் சொல்லப்பட்டதாகும். குடம், உடை முதலாயின செய்வாரின்றித் தோன்றாமை போல, மறையும் செய்வாரின்றித் தோன்றாது. மனத்துட் பட்டு வழிவழி வருகின்ற மெய்ம்மொழிகளும் இறைவனுடையனவே. மறைதானே உண்டாயதாயின் வானிடத்து எழுந்த ஒலியைக் கொண்டு உண்டானதாக வேண்டும். எனவே வானிடத்து எழுந்த ஒலி எழுத்தோசையன்று. ஆதலின் அவ்வாறாய மறையும் சொல்லும் பொருளும் விளங்கா ஒலிக்கூட்டமாகும். மேலும் மறை இவ்வுலகப் பொருள்களை விளக்கித் தன்னையும் விளக்குவது எனில், அது விளக்குப் போல ஓர் எல்லைக்கு உட்பட்டதாய் வானிற்கு உட்பட்டவற்றை விளக்கி அதற்கு மேல் உள்ளவற்றை விளக்காததாய் அமையும். அக்கருத்து நிரீசுர சாங்கியனின் கருத்துமாகும். மறை அருவமாதலும், உருவமாதலும் எவ்வளவை கொண்டு அறியமுடியும்? ஆதலால் அது உண்மையாகாது.

மறை யாதானும் ஒரு ஒலி உருவைப்பற்றி வரும் எனில், தேரையின் ஒலியிலும் மறை உண்டாகலாம். மேலும் மறையையுண்டாக்கியவன் இன்னான் என மறை குறித்துச் சொல்லாமையால் தானே ஒரு உருவத்தைத் தேடி அதனை இடமாகக் கொண்டு தோன்று மெனில், அற்றன்று. பல்வளமும் பெற்ற தீவின்கண் பலநிற ஆடைகளைப் பார்த்த போது நெய்வோன் ஒருவனால் உண்டாதெனக் கொள்வோம். அதுபோன்று மறையும் ஒருவனால் செய்யப்பட்டதேயன்றித் தானாக உருவெடுத்ததில்லை என்று அறியலாம்.

மறைகளை, நான்கு திசையில் உள்ளவர்களும் வேறு நூல் போலன்றி ஒற்றுமையாகக் கூறிவருதலே அநாதியாய் உடையதெனின், மட்கலன்களும், வேறு பாடுகளுடன், பல இடங்களிலுள்ளன. மட்கலன்களை உண்டாக்கக் குயவன் வேண்டுவதுபோல, குற்றமற்ற மறைகளைச் செய்தற்கும் இறைவன் ஒருவன் வேண்டும். மேலும் மாலை கட்டுதற்குரிய மணமிக்க மலர்கள் முன்பேயிருந்தும், ஒருவனால் தொடுக்கப்படுகின்றன. அது போன்று பொருட்களுடன் கூடிய ஒலிகள் முன்பேயிருந்தாலும் அவற்றைக் கூட்டுதற்கு ஒருவன் வேண்டும். இல்லையெனில் அவ்வொலிகள் கடலொலியினை ஒக்கும்.

இறைவன் இவ்வுலகைத் திருமேனியாய்ப் பெற்று எழுந்தருளி மறைகளைத் திருவாய் மலர்ந்தருளினான். இறைவன் தானே தன் கருணையால் தோன்றியவன் ஆதலானும், அநாதியாதலானும், அவன் மொழிந்த மறையையும் அங்ஙனம் கூறுவர். அது அரசன் ஆணைமொழியாகிய ஓலையைக் குடிமக்கள் திருமுகமென்று கூறித் தலையில் வைத்து அவ்வரசனேயாகச் சிறப்புச் செய்வது போலாம்.

ஆரிய மறையானது வேதியர், அரசர், வணிகர் என்ற மூவகை இனத்தார்க்கே உரியதென்பாய். அங்ஙனமாயின் எல்லார்க்கும் பொதுவாய சோதிடம் முதலிய துணை நூல்களை அம்மறை உதவியின்றிக் கூற முடியுமா? அஃதன்றியும் மறை வடபகுதியில் அனைத்து இனத்தாராலும் கூறப்படுகிறது. எனவே எல்லார்க்கும் பொதுவானதாகும். எல்லாம் தன்னிடத்தே கொண்ட மறைக்கு மூலமாகிய இறைவன் இல்லையென்பது பிறந்த பிள்ளைக்குப் பெற்றவர் இல்லையென்று கூறுதலை ஒக்கும்.

உயிர்த்தன்மை

அறியும் தன்மை உடல் உறுப்புகளுக்கு உள்ளதாயின் அது அழியும் போது உயிரும் அழிந்துவிடும். உயிர் தானாகச் சென்று உடல் உறுப்பை அடையாது. அறிவற்ற உறுப்புகளும் உயிரைச்சேரும் நிலையுடையதன்று. இறைவனே உயிரை ஈடேற்ற வேண்டும் என்னும் குறிக்கோளால் கூட்டினால்அன்றி உயிர் உடலைச் சென்றடையாது. கார்காலத்தில் தோன்றிய வித்தின் முளைகளெல்லாம் வேனிற்காலத்து ஒருங்கு அழியும். அதுபோன்று இவ்வுலகமும் படைத்தல், காத்தல், அழித்தல் என்ற முத்தொழில் பட்டுக் காலத்தோடு பொருந்துமாதலால் ஒரு காலத்தில் ஒடுங்கும் தன்மையது.

உயிர் எங்கும் நிறைந்துள்ளதாயின் நாள் தோறும் செய்து வரும் நல்வினைக்கு ஏற்பத் துறக்கம் சென்று புண்ணியத்தினை நுகர்ந்து மீண்டும் வரவேண்டியதில்லை. உயிர் உடலிடத்து மலர் மணம் போன்று நிறைந்து நிற்குமெனின், உடல் அழிந்த விடத்துத்தானும் அழிய வேண்டும். அங்ஙனம் அழிவதில்லை. மன ஒருமையுடையோர் (யோகிகள்) ஓர் உடலை விட்டு மற்றொரு உடலை எடுப்பதும் அனைவரும் அறிந்ததே. மறை கூறும் உண்மையை இம்மதத்தார் அறியாமையின் அவர் கூறும் சொல்லும் உலகத்தார்க்கு மாறுபாட்டைக் கொடுக்கிறது.

உடலுடன் செய்யும் வினை அவ்வுடல் அழியத்தானும் கெடும் எனில். அது வரும் பிறவிக்கு வந்து ஊட்டுவது எங்ஙனம்? வயலிடத்து இட்ட எரு தனது பருவடிவு இழந்து நுண்வடிவாய சத்தாகிக் கிடந்து பயிருக்கு நன்மை செய்தல் போன்று, செய்த வினையும் உடலோடு பருப்பொருளாம் தன்மைகெட, நுண்பொருளாம் தன்மையுடன் உயிருடன் பொருந்தி நிற்குமெனின், உடலிலிருந்து

அழிந்த மலம் பின்னும் பயன் தருதல் போலாம். மேலும் வினையானது உயிரைத்தானே சென்று கூடாது. அது, தொழில் கொள்வோன் தொழில் செய்வோர்க்குத்தக்க கூலியினைக் கொடுத்தல் போல உயிர் செய்த வினைக்கீடான நுகர்வினை இறைவன் கொடுப்பன்.

உயிர் தன் அறிவால் நாள்தோறும் செய்யும் நாட்கடன்களைக் கூடியே வீடு பேற்றினை அடையுமெனின், வினைசெய்யுமிடத்துப் பொருள் வேண்டுதலாலே ஆசை முதலியன உண்டாகும். அவ்வாசையினால் உயிர் பாச ஞானப்பட்டு நிற்கும். ஆகையால் வீடுபேறும் அடைய முடியாது. பொருளினால் இன்பத்தை நுகர்வோன் அப்பொருள் ஒழியவே மீண்டும் பொருள் தேடுதற்கு முயல்வான். அதுபோன்று நல்வினையால் துறக்கத்தைப் பொருந்தியவன், அத்துறக்கப்பயன் ஒழியவும், மீண்டும் அதற்கேதுவான நல்வினை செய்ய முயல்வான். இவ்வாற்றான் பிறவிக்கு ஏதுவாய நிகழ்ச்சி தொடர்ந்து நிகழுமேயன்றி வீட்டிற்கு ஏதுவான நிலை எதும் கூடாதென்பதாம்.

பிரபாகரன் மதம் முன்னுரை

	வகை	புறச்சமய மதங்களின் ஒன்றான மீமாம்ச மதத்தின் இரண்டாம் பிரிவு.
1.	தோற்றுவித்தவர்	பிரபாகரன். பட்டாச்சார்ய மத மூலகர்த்தாவான குமாரிலபட்டரின் மாணாக்கர். மீமாம்ச மத நூலான சைமினி நூலில் தமக்குப் பொருந்திய கொள்கைகளை மட்டும் ஏற்றுக்கொண்டு இப்பிரபாகர மதத்தைப் படைத்தார்.
2.	பிரபாகரக் கொள்கைகள்	உயிரிடத்து வினை ஒழிந்தபின் அபூர்வமென்பது (முன்பு இல்லாத ஒன்று) உண்டாகும். தோன்றிய அவ்வபூர்வம் வினைக்குரிய பயனைத் தரும்.
3.	வீடுபேறு	உயிர் அறிவும் செயலும் அற்று மண் போலவும், கல்போலவும் கிடத்தலை வீடுபேறு என்பர்.

மீமாம்சை 9.(க) பிரபாகரன் மதம்

கொச்சகக் கலிப்பா

செய்யுள் - 203

அருந்தவனாம் சைமினிபண்
டாரணநூ லாய்ந்தானாய்த்
திருந்துமுல கினிற்கொண்டு
செப்பியநூற் றிறமதனைப்
பரிந்துபிர பாகரன்பட்
டாசானில் வேறாகிப்
புரிந்துரைசெய் நெறியதனைப்
புவனிமிசைப் புகன்றிடுவாம்.

முன்னுரை

அரிய தவத்தினையுடையன் ஆகிய சைமினி என்னும் மகா இருடி முன் வேதநூலை ஆராய்ந்தானாய் நல்ல உலகின்கண்ணே தான்சொல்லுகின்ற வழிக்குப் பொருந்தத் தக்கவற்றை வேதத்திலே நின்று எடுத்துக் கொண்டு சொல்லப் பட்டவனது சூத்திர முறைமையினைப் பொருந்திப் பிரபாகரன் பட்டாசாரியனால் சொல்லப்பட்ட பாட்டத்தின் நெறியிலே வந்து அதிற் சிறிது வேறுபடச் சொன்ன வழியதனை எடுத்து யானும் பூமியின் கண்ணே சொல்லா நின்றேன் என்றவாறு.

விளக்கவுரை

அரிய தவத்தையுடையவன் ஆகிய ஜைமினி முனிவன் முன்பு வேதநூலை ஆராய்ந்தான். உலகத்துக்குச் சில சொல்ல எண்ணினான். தன்னுடைய வழிக்குப் பொருந்தியவைகளை வேதத்தினின்று எடுத்துக்கொண்டு சூத்திரம் செய்தான். (அது மீமாஞ்சை எனப்படும்) சூத்திர முறைமைபற்றிப் பிரபாகரன் நூல் செய்தான். பாடிய மதம்பற்றிப் பட்டாசாரியன் நூல் செய்தான். பட்டாசாரியனால் சொல்லப்பட்ட பாட்டத்தின் நெறியிலே நின்று பிரபாகரன் சிறிது வேறுபட்ட கொள்கையையுடையான். அவன் மதம் பற்றிய செய்தி கூறப்படுகிறது.

பிரபாகரன் மதம் உணர்த்துவான் எடுத்துக் கொண்டார். அதனுள் இத்தலைச் செய்யுள் பிரபாகரன் நெறியைக் கூறுகின்றேன் என்று கூறிற்று. (1)

செய்யுள் - 204

அருஞ்செயலி னபாவத்தே
அபூர்வமெனு மதுதோன்றித்
தருஞ்செயனின் றழியிற்பின்
பலிப்பிப்ப தாகுமது
வருஞ்செயலொன் றின்றியே
மண்சிலைபோ லாமுத்தி
தருஞ்செயலீ தெனவுணர்ந்து
தாரணிமே லவன்சாற்றும்.

பதவுரை

அருசெயலின் அபாவத்தே அபூர்வம் என்னும் அது தோன்றி	அரிதாகச் செய்யும் கன்மத்தை ஒழிந்த இடத்திலே அபூர்வம் என்பது ஒன்று உண்டாய்,
தரும் செயல் நின்று அழியில்	அந்தக் கன்மத்திலே அறிவு கூடி நின்று தொழிற்பட்டுக் கன்மம் முடிந்தபொழுது,
பின் பலிப்பிப்பது ஆகும் அது	பின்பு தான் இருந்து பிரயோசனப்படுப் பிப்பதாம்,
வரும் செயல் ஒன்று இன்றியே	அவ்வறிவும் கன்மமும் கூடி வரும் தொழில் ஒன்றும் இன்றியே,
மண்சிலை போல் ஆம் முத்தி தரும் செயல்	வீட்டு நெறியைத் தருகிற செய்தியாவது மண் போலவும் கல்லுப் போலவும் அறியும் தொழிலும் அற்றிருத்தலாம்,
ஈது என உணர்ந்து தாரணி மேல் அவன் சாற்றும்	மண்போலவும் கல்லுப்போலவும் அறிவும் செயலும் அற்றிருப்பதே முத்தி என அறிந்து பூமியின்கண்ணே இத்தன்மைத்து என்று பிரபாகரன் சொல்லுவான் என்றவாறு.

இச்செய்யுள் இரண்டும் பிரபாகரன் நெறி கூறின. அபூர்வம் என்றொரு குருசொரூபம். அருஞ்செயல் என்பது செய்தற்கரிய சோம யாக வகை முதலியவற்றை. (2)

ஒன்பதாவது – பிரபாகரன் மதம் முற்றிற்று.

பாயிரம் உள்படத் திருவிருத்தம் – 204.

மீமாம்சை 9. (உ) பிரபாகரன் மதமறுதலை

செய்யுள் - 205

வேறுபலந் தருவதுதான்
வினையென்று வேதங்கள்
கூறவோ ரபூர்வந்தான்
கொடுக்குமெனக் கொண்டவுரை
மாறுதரும் மறையோடு
முன்பின்றி வந்ததால்
தேறியவின் பூமுடிமேற்
சேர்ந்துமணந் திகழ்ந்ததுவாம்.

பதவுரை

வேறு பலம் தருவது தான் வினை என்று வேதங்கள் கூற	முன் ஜனனத்திற் செய்த இருவினையும் இந்த ஜனனத்திலே பல பேதப்பட்டுச் சுக துக்கங்களைக் கொடுக்கும் என்று உன் வேதங்கள் சொல்லா நிற்கவும்,
ஓர் அபூர்வம் தான் கொடுக்கும் என கொண்ட உரை	முன் ஜனனத்தில் செய்த வினைக்கு இந்த ஜனனத்திலே பலத்தைக் கொடுப்பது அபூர்வம் என்பது ஒன்று என்று பிரபாகரா! நீ மெய்யாகக் கொண்டு சொல்லப்பட்ட சாத்திரம்,
மாறுதரும் மறையோடு	வேதத்தோடு மறுதலைப்படும்,
முன்பு இன்றி வந்ததால்	செய்த கன்மத்தினுடைய பலம் அநாதியில் இல்லையாய்ப் பின்பு அபூர்வம் என்பது ஒன்றினாலே வந்ததாயின்,
தேறிய விண் பூ முடிமேல் சேர்ந்து மணம் திகழ்ந்தது ஆம்	வாட்டமில்லாத குளிர்ந்த ஆகாயப்பூவுக்கு முன்பு மணமில்லாமல் தலையிலே சேர்ந்த பின்பு மணமுண்டானது என்று சொல்லும் தன்மை போலும் என்றவாறு.

விளக்கவுரை

பிரபாகரன் மதத்தை எடுத்துக்கொண்டார். அதனுள் இச்செய்யுள் **அபூர்வம்** என்பதனை மறுத்துக் கூறிற்று. (1)

செய்யுள் - 206

ஆனந்தம் கதியென்ன
அறிவழிகை வீடென்கை
ஊனம்பின் னுணர்விழந்தோர்க்
குளதாகு முயர்முத்தி
தானிங்குச் சிவப்பொழியத்
தழல்நிற்கு மாறில்லை
ஞானங்கெட் டுயிர்நிற்கும்
எனுமுறைதான் நண்ணாதால்.

பதவுரை

ஆனந்தம் கதி என்ன அறிவு அழிகை வீடு என்கை ஊனம்	பரமானந்தமே வீடு என்று வேதங்கள் சொல்லவும் நீ ஆன்மாவினது அறிவு கெட்டு மண்போலவும் கல்லுப்போலவும் ஆதல் வீட்டின்பம் என்று கூறியது குற்றமுடைத்து; அப்படி அறிவு கெட்ட ஆன்மா முத்தியடைவான் ஆயின்,
பின் உணர்வு இழந்தோர்க்கு உளது ஆகும் உயர் முத்தி	மூர்ச்சை வந்து அறிவு கெட்டவர்களுக்கும் மிக்க வீட்டின்பம் உண்டாக வேண்டும்; அஃதன்றியும்,
தான் இங்கு சிவப்பு ஒழிய தழல் நிற்கும் ஆறு இல்லை	இவ்விடத்து நெருப்பானது தன் சொரூபமாகிய சிவப்புக் கெட்டால் தானும் கூடக் கெடுதல் அன்றி அந்நெருப்பு நிற்கும்வழி இல்லையாம்; அதுபோல,
ஞானம் கெட்டு உயிர் நிற்கும் எனும் உரை தான் நண்ணாது ஆல்	ஆன்மாவானது தன் சொரூபமாகிய அறிவு கெட்டால் தானும் கூடக் கெடுதலன்றி ஆன்மா நின்று வீட்டின்பத்தை அனுபவிக்கும் என்று சொல்லும் சொல் பொருந்தாது; ஆகையால், அறிவு கெட்டுக் கல்லுப் போலவும் மண்போலவும் ஆய் முத்தியடையும் என்னுமது குற்றமுடைத்து என்றவாறு.

விளக்கவுரை

உணர்வு இழந்தோர் - மூர்ச்சித்தோர். உணர்வு இழந்தோர்க்கும் என உம்மை விரிக்க. புவனம் என்பதனைக் கடையிலும் கூட்டுக.

இச்செய்யுள் ஆன்மா அறிவுகெட்டு முத்தியடையும் என்பதனை மறுத்துக் கூறிற்று.

இச்செய்யுள் இரண்டும் பிரபாகரன் மதத்தை மறுத்துக் கூறின. *(2)*

ஒன்பதாவது – பிரபாகரன் மதமறுதலை முற்றிற்று.

பாயிரம் உள்படத் திருவிருத்தம் – 206.

பிரபாகர மீமாம்சம் மத மறுப்புத் தொகுப்பு

மறுப்பு


இம்மத மறுப்பு சிவஞான சித்தியார் பரபக்கத்தில் இரண்டு பாடல்களில் மறுத்துரைக்கப்படுகிறது.

வினைக்குரிய பயன் வினையால் விளைவதாகும். இதுவே மறையின் கருத்தாகும். அங்ஙனமாகவும், அபூர்வமென்பது தோன்றி வினைப் பயனைக் கொடுக்கும் என்றல் மறைக்கருத்திற்கு மாறாம்.

மறைகள் பரமானந்தமே வீடுபேறன்று உரைக்க. அதனின்று மாறுபட்டு உயிர் அறிவு நிலை கெட்டு மண் போலவும், கல்போலவும் கிடத்தலை வீடு பேறென்றல் எங்ஙனம்? அதுதான் வீடுபேறு எனில், மூர்ச்சை எய்தி உணர்வு இழந்தவர்களும், விடுபேறடைந்தவராவர். மேலும் நெருப்பானது தன்நிறமான சிவப்பு கெட்டால் தானும் கெடும். அதுபோல அறிவு கெட்டால் உயிர் தானும் நிலை பெறாது ஒழியுமேயன்றி வீட்டின்பத்தை நுகராது.

பட்டமீமாம்சத்திற்கும், பிரபாகர மீமாம்சத்திற்கும் உள்ள வேறுபாடு

பட்டமீமாஞ்சை	பிரபாகர மீமாஞ்சை
1. காட்சி, கருதல், உரை, உவமை, அருத்தாபதி, இன்மை எனும் ஆறு அளவையும் ஏற்பர்.	இன்மை தவிர முதல் ஐந்தை மட்டும் கொள்வர்.
2. உயிர் நன்மை, தீமைகளால் மாற்றமடையும்.	உயிர் மாற்றம் அடைவதில்லை.
3. அறிவு உயிரின் சிறப்பியல்பாகும்.	அறிவற்றுக் கிடப்பதே உயிரின் சிறப்பியல்பாகும்.
4. உயிர் அறியக்கூடிய பொருள் களுள் ஒன்று	உயிரை அறிய முடியாது.
5. நாள் வழிபாட்டைத் தன் கடனாக ஆற்ற வேண்டுமேயன்றிப் பயன் கருதிச் செய்யக்கூடாது.	நாள் வழிபாடு ஆற்றின் பழவினையும், வருவினையும் அகலும் என்பர்.
6. திரிபுக் காட்சியாவது ஒன்றை மற்றொன்றாகக் காணலாகும். இவ்வாறு திரிபுக்குக் காரணம் இரு பொருளுக்கும் உள்ள உண்மைத் தன்மையைத் தவறவிட்டமை, அல்லது கூட்டிக் கொண்டமை யாகும். இதில் மனம் செய்யும் வேலை அதிகம்.	திரிவுக் காட்சியில் மனம் செய்யும் வேலை குறைவு.
7. உயிர் வீடு பேற்று நிலையில் இன்பம் பெறும் என்பர்.	உயிர் ஞானம், இன்பம், துன்பம் என்ற ஒன்றுமே இன்றி வீடுபேற்று நிலையில் கல்போலக் கிடக்கும்.



வேதம் உண்டு. ஆகமம் இல்லை எனக்கூறும் புறச்சமய மதங்கள் ஆறனுள் மூன்றாவதாக வைத்து எண்ணப்படுவது. பிரமம் ஒன்றே உள்பொருள் எனக் கொண்டமையின் இது ஏகான்ம வாதம் எனப்பட்டது. இதைச் செய்தவர் வியாத முனிவர் ஆவர். இது நான்கு வகைப்படும்.

1. மாயா வாதம்
2. பாற்கரிய வாதம்
3. கிரீடாப்பிரமவாதம்
4. சத்தப்பிரமவாதம்

ஏகான்ம வாதம்

அத்வைதமும் அதன் பொருள் விளைவும்

மறைகளிலும், உபநிடதங்களிலும் காணப்படும் செய்திகள் பல. அவற்றுள் ஒன்றற்கொன்று முரண்படுவன போலக் காணப்படும் தொடர்களும் உள்ளன. எளிதில் உணர்தற்குரியன அன்றி அறிதுணர் பொருளனவாகக் காணப்படும் தொடர்களும் உள்ளன. அம்முரண்பாடுகளை நீக்கியும், கருகிய இடங்களை விளக்கியும், எழுந்த நூல் பிரம சூத்திரமாகும். இதனை இயற்றியவர் பாதநாயணர் என்பார். எனினும் இந்நூல் சுருங்கியதாய் அமைந்தமையின், அதற்கும் விளக்கம் வேண்டியது இன்றியமையாததாயிற்று. அவ்வாறு விளக்கம் கண்டவர்களில் மூவர் குறிப்பிடத்தக்கவர்கள். ஒருவர் சங்கரர். மற்றொருவர் இராமானுசர், மூன்றாமவர் மாத்துவர் என்பவராவர்.

இம்மூவரும் முரண்படுதற்கு ஏதுவாய் அமைந்தசொல் அத்வைதம் என்பதாகும். ந + துவிதம். இது தமிழில் அத்துவிதம் என வந்தது. துவிதம் என்னும் வடமொழியில் வந்த எண்ணுப் பெயரின் நகரம், அன்மை, இன்மை, மறுதலை என முப்பொருள் உணர்த்தும், அப்பிராமணன் என்ற இடத்து நகரம் அக்குலத்தில் பிறந்தும் அதற்குரிய தன்மையை உடையன் அல்லன் என அன்மைப் பொருள் குறித்தது. அசுத்தம் என்றவிடத்து அகரம் தூய்மையின்மையைக் குறித்தலின் இன்மைப் பொருளைக் குறித்தது. அதர்மம் என்ற விடத்து அகரம் இது அறம் அன்று என மறுதலைப் பொருள் குறித்தது. இந்நிலையில் அத்வைதம் என்ற சொல்லில் உள்ள அகரம், இன்மைப் பொருள் குறிப்பின் இரண்டில்லை ஒன்றே எனப் பொருள்படும். இவ்வாறு பொருள் கொண்டவர் சங்கரர், அவர் பிரமம் ஒன்றே எனப்பொருள் கொண்டார். அதர்மம் என்றவிடத்து இது அறம் அல்ல என மறுதலைப்பொருள் படுவதுடன் இதனால் தர்மம் என்ற ஒன்றும் உள்ளதெனத் தெரிகிறது. இவ்வாறு கொண்ட மாத்துவர் உயிரும், இறைவனும் வேறு வேறு என்றனர், சங்கரர் கொண்டவாறே இன்மைப் பொருள் கொண்ட இராமானுசர் பொருள் இரண்டில்லை ஒன்றே எனக்கொண்டு அவ்வாறு நிற்பது பிரமம் ஒன்றேயாகும் என்றும், அப்பொருளிடத்து உயிரும், உலகும் அடங்கி நிற்கும் என்றும் விளக்கம் கண்டனர். இரண்டல்ல என்பதற்குப் பொருள் உலகும் உயிரும் பலவானாற் போல கடவுளும் பலர் அல்லர், ஒருவரே என்பது இவர் தரும் விளக்கமாகும்.

இம்மூவரும், இவ்வாறு பொருள் கொண்டதால் இவர்களது கொள்கைகளை முறையே கேவலாத் வைதம், துவைதம், விசிஷ்டாத்வைதம் என்றனர். ஈண்டுக் கேவலம் என்றது உயர்ந்த பொருள் எனப்பொருள் படுவதாகும். துவைதம் என்பது

இரண்டு எனப் பொருள்படும். அஃதாவது இறை, உயிர் என்ற இரண்டும் வெவ்வேறேயாம் என்பது கருத்தாகும். விசிஷ்டாத்வைதம் என்பது உலகு, உயிர் ஆகிய இரண்டையும் இறைவன் தனக்குரிய விசேடமாகக் (உடலாகக்) கொண்டு அவற்றைத் தன்னுள் அடக்கியிருப்பன் எனக்கூறுவதால் இப்பெயர் பெறுவதாயிற்று. சைவ சித்தாந்தம் இறைவனும், உயிரும் சங்கரர் கூறுவது போல ஒன்றும் அல்ல. மாத்துவர் கூறுவது போல என்றுமே வேறுவேறாக இருப்பது அல்ல, இராமானுசர் கூறுவது போல உலகு, உயிர் இரண்டையும் தனக்கு உடலாகக் கொண்டிருப்பதும் அல்ல, எனக்கூறி இறைவன் உயிரோடு கலந்து நிற்கும் நிலையில் இம்மூவகை நிலையும் கொள்வன் எனக்காட்டுகின்றது. அந்நிலையே இறைவன் ஒன்றாயும், வேறாயும், உடனாயும் நிற்கும் நிலையாகும் எனக் கூறுகின்றது. அத்துவிதம் எனும் சொற்குச்சைவ சித்தாந்தம் இன்மைப் பொருளே கொள்கின்றது. அப்பிராமணன் என்றவிடத்துப் பார்ப்பனனாய் இருந்தும் பார்ப்பனத் தன்மை இல்லாமையைக் குறித்தல் போல, இறையும் உயிரும் இரண்டாய் இருந்தும் இரண்டாகப் பிரித்தறியவாராது, கண்ணொளியும் உயிரறிவும் போலக்கலந்து நிற்கும் எனப் பொருள் காண்பர். இவர்தம் கொள்கையைச் சுத்தாத்வைதம் என்பர்.

இவற்றுள் கேவலாத்வைதம் என்பதே இத்தலைப்பில் வரும் 'ஏகான்ம வாதம்' ஆகும். விசிஷ்டாத்வைதம் பாஞ்சராத்திரம் எனும் தலைப்பில் விளக்கப் பெறும். இடைநின்றதுவைதம் ஆராயப்படாமையின் அக்கொள்கையை ஈண்டுக் காணலாம்.

மாத்துவர் இறை உயிர் இரண்டோடு சடம் என்ற ஒன்றையும் சேர்த்து முப்பொருள் உள எனக் கூறுவர். இவை என்றும் உள்ளவை. இவற்றிடையே காணும் வேற்றுமையும் என்றும் உள்ளவை என்பர்.

மேலும் இவர், இறை, உயிர், சடம் என்ற மூவகைப்பொருள்களுக்கிடையே ஐவகைப் பேதங்களைக் குறிப்பர். அவை (1) உயிருக்கும் இறைக்கும் இடையேயுள்ள சிவேசுவரபேதம் (2) சடத்துக்கும் இறைக்குமுள்ள சடஈசுவரபேதம் (3) உயிருக்கும் சடத்துக்கும் உள்ள சிவசட பேதம் (4) ஓர் உயிருக்கும் மற்றொரு உயிருக்கும் உள்ள சிவபரஸ்பரபேதம் (5) ஒரு சடத்துக்கும் இன்னொரு சடத்துக்கும் இடையே உள்ள சடபரஸ்பரபேதம். இந்த ஐவகை வேற்றுமைகளும் ஒருபோதும் அழியா என்பர்.

3. ஏகான்மவாதம்

இது புறச்சமயங்கள் ஆறனுள் மூன்றாவதாக வைத்து எண்ணப்படுவதாகும். பிரமம் ஒன்றே உள்பொருள் எனக்கொண்டமையின் இது ஏகான்மவாதம் எனப்பட்டது. இதனைச் செய்தவர் வியாத முனிவர் ஆவர். இது நான்கு வகைப்படும். அவை 1. மாயாவாதம் 2. பாற்கரிய வாதம் 3. கிரீடாப்பிரமவாதம் 4. சத்தப்பிரமவாதம்

என்பன. இவ்ஏகான்மவாதக் கொள்கையைச் சிவஞான முனிவர் சுருங்க உரைப்பர். அது வருமாறு:

பிரமம் என்ற ஒன்றே மெய்ப்பொருள். அது நிலையானது. அறிவாயது, ஆனந்தமாயது, யாண்டும் பரவியிருப்பது. இதுவன்றிக் காணப்படும் பொருளெல்லாம் இப்பிரமத்தினிடம் வேறுபாடாய் நம் அறியாமையால் காணப்படும் பொருளேயாம். அவையனைத்தும் பொய்யே. இவ்வுலகத்திற்கு முதற்காரணம் மாயையாகும். அது பிரமம் போல உள்பொருளுமன்று. முயற்கோடு போல இல்பொருளும் அன்று. இத்தகையதெனச் சொல்லொணாதது. இம்மாயைக்கு வேறாய பிரமமே நான் என அறிவது வீடுபேறாம்.

சத்தப்பிரமவாதி மதம் முன்னுரை

	வகை	வேதத்தை ஏற்றுக்கொண்டு ஆகமத்தை ஏற்றுக் கொள்ளாத புறச்சமயங்கள் ஆறனுள் மூன்றாவதான ஏகான்மவாதத்தின் நான்கு பிரிவுகளில் ஒன்று.
1.	பெயர்க்காரணம்	ஒலியே உள்பொருள். அதுவே பிரமம் என்றலின் இது இப்பெயர் பெற்றது.
2.	கொள்கைகள்	இவ்வுலகிற்கு காரணம் பிரமமே. அப்பிரமம் ஊழி முடிவில் ஒலிவடிவாய் நிற்கும். அஃது அறியாமையால் அறிவில் பொருளும், அறிவுடையப் பொருளுமாய் உலகங்களாய் விரியும் எனினும் இறுதியாக நிற்பது ஒலி மட்டுமே என அறிவது வீடுபேறாகும்.
3.	தோற்றுவித்தவர்	வியாத முனிவர். சங்கரரின் கேவலாத்வைதத்தின் உட்பிரிவாகும்.

ஏகான்மவாதம் 10. (க) சத்தப்பிரமவாதி மதம்

கலி விருத்தம்

செய்யுள் - 207

உரையா னதுமை யலினா லுலகாம்
புரையோ ருணரும் பொருள்பொய் யிதனை
விரையா துணரும் அதுவீ டெனவே
வரையா துரைவா திவகுத் தனனே.

பதவுரை

உரை ஆனது மையலினால் உலகு ஆம்	*சத்தமானது மயக்கத்தினாலே பிரபஞ்சம் ஆம்,*
புரையோர் உணரும் பொருள் பொய்	*அறியாதார் அர்த்தமும் சத்தத்துக்கு உண்டு என்று விசாரிப்பது மெய்யல்லவாம்,*
இதனை விரையாது உணரும் அது வீடு எனவே	*சத்தமே பிரமமாவது அர்த்தமில்லை என்று அறியும் அறிவே வீட்டின்பம் ஆவது என்று,*
வரையாது உரை வாதி வகுத்தனன் ஏ	*சத்தப் பிரமவாதி பிரபஞ்ச பேதத்தை எல்லைப்பட அறியாது சத்தமே உள்ளதென்று வகுத்துச் சொன்னான் என்றவாறு.*

விளக்கவுரை

சத்தப்பிரமவாதி மதம் கூறுவான் எடுத்துக் கொண்டார் அதனுள் இச் செய்யுள் சத்தமே பிரபஞ்சமாக உள்ளது அர்த்தமில்லை என்பதனையும், அந்தச் சத்தமே பிரமம் என்பதனையும் கூறிற்று. (1)

செய்யுள் - 208

பரிணா மம்விவர்த் தநமா யமதில்
தருமா முலகுள் ளதுசத் தமதே
பொருளா வதுசொன் னலமல் லவெனில்
மருவா துபொருட் டிறமற் றிலையே.

பதவுரை

பரிணாமம் விவர்த்தனம் மாயம்	*சத்தத்தாலே பரிணமித்து உண்டாதலே மயக்கமாம்,*

அதில் தரும் ஆம் உலகு	அந்த மயக்கத்திலே உலகத்தை உண்டாக்கப் படுவதும் ஆகையால்,
உள்ளது சத்தம் அது ஏ	உள்ளதாகக் காணப்பட்டது சத்தம் ஒன்றுமே,
பொருளாவது சொல் நலம்	சத்தத்துக்கு அர்த்தம் என்று சொல்லப் பட்டது அச் சத்தத்தின் நன்மையே ஆகும்,
அல்ல எனில்	சத்தத்தின் நன்மை அல்ல அர்த்தம், அர்த்தத்தின் நன்மையே சத்தம் என்று கூறின்,
மருவாது பொருள் திறம் மற்று இலை ஏ	சத்தம் கூடாது ஒரு பொருள் உண்டாவது இல்லை; ஆதலால் சத்தத்தின் நன்மையே அர்த்தமாவது என்றவாறு.

விளக்கவுரை

மற்று வினைமாற்று. சொன்னலம் - பொன்னே பணியென்கை.

இச்செய்யுள் சத்தமே பிரபஞ்சமாவதும் சொன்னலமாவதும் என்பது கூறிற்று. (2)

செய்யுள் - 209

பூமா வெனவே யுரையும் பொருளும்
ஆமாம் பொருளொன் றிலணைந் திலதால்
நாமா தரவெய் துசொனன் கருவாய்த்
தாமாம் பொருணெற் பொரிதா னெனவே.

பதவுரை

பூ மா எனவே உரையும் பொருளும் ஆம்	பூ எனவும் மா எனவும் இரண்டு சொல் உளவாய் அவற்றிற்குப் பொருள் கூறுமிடத்துப் புட்பம் என்றும் இலக்குமி என்றும் கூறப்படும்,
ஆம் பொருள் ஒன்றில் அணைந்திலது ஆல்	அப்படிக் கூறப்படும் பொருள் எனவும் சொல்லப்பட்ட பொருளையும் கொள்ளப் படும் ஆதலால்,
நாம் ஆதரவு எய்து சொல் நன் கருவாய் தாம் ஆம் பொருள்	நாம் விருப்பத்தை எய்திக் கொண்டு சொல்லும் சொல்லே கருப்பமாகக் கொண்டு பல பொருள்களும் உண்டாம், அஃது என்போல? என்னில்.

நெல் பொரி தான் என ஏ	நெல்லில் தோன்றும் பொரிக்கு நெல்லே கருப்பம் ஆனாற் போல அர்த்தத்துக்குச் சத்தமே கருப்பமாம் என்றவாறு.

விளக்கவுரை

பொரிக்கு வன்ன பேதமும் நாமபேதமும் உண்டாயினும் நெல்லே அதற்குக் கருப்பம் ஆனாற்போல. அர்த்தம் பல பேதப்படினும் சத்தமே கருப்பமாம் என்பது கருத்து.

இச்செய்யுள் ஒரு சத்தம் பல அர்த்தத்தைக் கொண்டு நிற்கையால் சத்தமே பிரமம் என்பது கூறிற்று. (3)

செய்யுள் - 210

சொல்வந் தெழலும் பொருடோன் றுதலால்
சொல்லே பொருளென் றுதுணிந் திடுநீ
சொல்லும் பொருளும் முடனின் றதெனில்
சொல்லும் பொருளின் றுசொனின் றதுவே.

பதவுரை

சொல் வந்து எழலும் பொருள் தோன்றுதலால் சொல்லே பொருள் என்று துணிந்திடு நீ	யாதொரு சொல் தந்த சுர ஒலிகளாலே உண்டாக அந்தச் சொல்லிலே பொருளும் உண்டாம் ஆதலால் சொல்லே பிரதானம் என்று நீ தெளிந்திடுவாயாக, அற்றன்று,
சொல்லும் பொருளும் உடன் நின்றது எனில்	சொல்லும் பொருளும் உடன் நிற்கையால் பொருளும் தனியே ஒரு முதல் என்று கூறின்,
சொல்லும் பொருள் இன்று சொல் நின்றது ஏ	ஒரு சொற்குப் பொருளுரைக்கு மிடத்துப் பொருளும் சொல்லாம் ஆதலால், சொல் லொழிந்து பொருளென்று ஒன்று உண்டாவ தில்லை; அதனால், சத்தமே பிரமம் என்று கொள்வாயாக என்றவாறு.

விளக்கவுரை

இச்செய்யுள் சத்தமே அர்த்தமாவது என்று கூறிற்று.

உரை என்னும் செய்யுள் முதல் இச் செய்யுள் காறும் சத்தப்பிரமவாதி மதம் கூறிற்று. (4)

பத்தாவது – சத்தப்பிரமவாதி மதம் முற்றிற்று.

பாயிரம் உள்படத் திருவிருத்தம் – 210.

ஏகான்மவாதம் 10. (உ) சத்தப்பிரமவாதி மதமறுதலை

செய்யுள் - 211

உரையா னதுமை யலினா லுலகேல்
உரையா யொருமை யலுழுள் ளதென
வரையா துணரும் மதுவண் கதியேல்
வரையா மறையோ டுமலைந் தனையே.

பதவுரை

உரையானது மையலினால் உலகேல்	சத்தமானது பரிணாம விவர்த்தனம் ஆகிய மயக்கத்தினாலே பிரபஞ்சம் ஆம் என்று கூறினாய்; அங்ஙனமாயின்,
உரையாய் ஒரு மையலும் உளது என	சத்தமே சர்வமுமாம் என்ப தன்றிச் சத்தத்திலே நின்று உண்டாகத்தக்கதொரு மயக்கமும் உண்டென்று சொல்லாய்,
வரையாது உணரும் அதுவண் கதி ஏல்	அஃதன்றியும், பொருளை வரையாமல் சத்தத்தைப் பிரமம் என்று குறித்துணர்தலே முத்தி என்று கூறினாய்; அங்ஙனமாயின்,
வரையா மறையோடு மலைந்தனை ஏ	வேதத்திற் சொல்லப்பட்ட கன்மத்தையும் ஞானத்தையும் செய்வதும் உணர்வதும் செய்யாமல் முத்தி அடையும் என்று கூறுகையால் வேதத்தோடு மறுதலைப்பட்டுக் கூறினாய் என்றவாறு.

விளக்கவுரை

வேதம் சொன்னபடி கன்மம் செய்தானாயினும் ஞானம் உணராதார்க்கு முத்தியில்லை என்று வேதாகம சாத்திர புராணங்கள் சொல்லவும், சத்தமே பிரமம் என்று அறியும் அறிவால் முத்தி அடையலாம் என்பது மாறுபாடு என்க. விவர்த்தனம் - புரளல்.

சத்தப் பிரமவாதியை மறுப்பான் எடுத்துக் கொண்டார். அதனுள் இச் செய்யுள் **சத்தமே பிரபஞ்சம்** என்பதனையும் **சத்தத்தை அறிதலே முத்தி** என்பதனையும் மறுத்துக் கூறிற்று. *(1)*

செய்யுள் - 212

அருவம் முரையா தலினவ் வுருவாய்
மருவும் பரிணா மமறந் திடுமாம்
பருகுந் ததியா னதுபா லதெனில்
உருவம் மதுவா யழியும் முரையே.

பதவுரை

அருவம் உரை ஆதலின் அவ்வுருவாய் மருவும் பரிணாமம் மறந்திடும் ஆம்	அந்தச் சத்தமானது அரூபம் ஆதலால் பிரபஞ்ச ரூபமாய்ப் பரிணமித்துப் பொருந்துதலை நினைக்க மாட்டாதாம்; அற்றன்று,
பருகும் ததி ஆனது பால் அது எனில்	குடிக்கும் பகுதியான பாலானது தின்னும் பகுதியாகிய தயிராய் உருப் பெற்றாற் போல அருவமாகிய சத்தம் உருவமாகிய பிரபஞ்சமாய் உருப்பெறும் என்று நீ கூறின்,
உருவம் அது ஆய் அழியும் உரையே	அத்தயிர் மீளவும் பாலாகும் தன்மையின்றித் தயிராய் நின்று அழியும் தன்மை போலச் சத்தமும் பிரபஞ்சமாய் உருப்பெற்றால் மீளவும் சத்தமாகும் தன்மையின்றிப் பிரபஞ்சமேயாய் நின்று அழியும் என்றவாறு.

விளக்கவுரை

இச் செய்யுள் சத்தமே உருப்பெற்றுப் பிரபஞ்சம் ஆம் என்பதனை மறுத்துக் கூறிற்று. *(2)*

செய்யுள் - 213

ஆயம் முடனந் தவிவர்த் தநமு
மாயவ் வுளதென் றுசொலெவ் விடமும்
ஆய்நின் றமையின் னுரையின் னலமும்
ஆயும் பொருளுக் கறிநா மமதே.

பதவுரை

ஆயம் உடன் அந்த விவர்த்தநமும் மாய உளது என்று சொல்	சத்தத்தின் வரவு பிரபஞ்சமாய் வருதலும் பல ரூபங்களாய்ப் பரிணமித்து வருதலும் செய்கையால் சத்தத்துக்கு இப்போது

	அழிவுண்டாதல் வேண்டும் என்று சொல்லாய்; அஃதன்றியும்,
எவ்விடமும் ஆய் நின்றமையின் உரையின் நலமும் ஆயும் பொருளுக்கு அறி நாமம் அது ஏ	சத்தத்துக்கு நன்மை என்ற பொருள் எவ்விடமுமாய் நின்றமையின் அப்பொருளை ஆராயுமிடத்து அப்பொருளுக்குப் பெயர்ச் சொல்லாய் நின்று பொருளை விளக்குவதே நன்மை என்றறிவாயாக என்றவாறு.

விளக்கவுரை

எனவே, சத்தத்தினும் அர்த்தமே சிறப்பையும் நிலை பேற்றையும் உடைத்து என்பது கருத்து.

பரிணாமமாகின் நெருப்பு என்றபோது நெருப்பாய் எழுந்திருக்க வேண்டும்; விருத்தியாகின் நெருப்பு என்றபோதுவாய் வேகவேண்டும்; ஆதலால், தாதான்மியமும் அன்று, ததுற்பத்தியுமன்று; இடுகுறிப்பெயராம் என்றது எனக் கொள்க. (3)

செய்யுள் - 214

உரைபோற் பொருளுக் குருவின் மையினவ்
உரையே பொருளென் றனையின் றரியென்
உரையே கவிமா லவனுக் குளதாம்
உரையாய் கவியா கவொருமா லினையே.

பதவுரை

உரைபோல் பொருளுக்கு உரு இன்மையின் அவ்வுரையே பொருள் என்றனை	சத்தத்தைப் போல அர்த்தத்திற்கும் உருவம் இல்லாமையினால் சத்தமே அர்த்தம் என்று கூறினாய்,
இன்று அரி என் உரையே கவி மாலவனுக்கு உளது ஆம் உரையாய் கவி ஆக ஒரு மாலினை ஏ	இன்று அரியென்று சொல்லப்பட்ட சத்தம் திருமாலினுக்கும் குரங்குக்கும் மற்றும் பல பொருட்கும் பெயராகச் சொல்லலாம்; அதனைப் பொருட்டன்மையிலே நின்றும் சத்தம் கொள்ளாமல் சத்தத்தின் தன்மையிலே நின்றும் பொருள் கொள்ளலாமாகில், திருமாலைக் குரங்காகச் சொல்லுவாயாக என்றவாறு.

விளக்கவுரை

எனவே, சொல் வேற்றுமையும் பொருள் வேற்றுமையும் உண்டு என்பது ஆயிற்று. இதனால், சத்தமும் பொருளும் ஒன்றுபட்டிருந்தாலும் இரண்டும் வேறென்றே காண்க என்றதாம்.

இச்செய்யுள் சத்தத்தின் நன்மையே அர்த்தம் என்பதனை மறுத்துக் கூறிற்று. (4)

செய்யுள் - 215

நெல்லிற் பொரியா வதுநீ டழலில்
சொல்லிற் பொருளொன் றொடுதொக் கிடலால்
கல்வித் திறமா முரைகாட் சியினால்
மல்லற் பொருள்சா லவளந் தருமே.

பதவுரை

நெல்வில் பொரி ஆவது நீடு அழலில்	பொரிக்கு நெல்லே கர்ப்பம் ஆனாற்போலப் பொருட்கெல்லாம் சொல்லே கர்ப்பம் என்று கூறினாய்; அங்ஙனமாயின், நெல்லு மிக்க நெருப்பினைச் சேர்ந்தால் பொரி ஆவது ஆதலால் நீ கூறியது உவமையன்று,
சொல்வில் பொருள் ஒன்றொடு தொக்கிடலால் கல்வித்திறம் ஆம் உரை காட்சியினால் மல்லல் பொருள் சால வளம் தரும் ஏ	பூ மா முதலிய ஒரு சொல்லிலே பல பொருள் கூடி நிற்றலால் அதனை அறியத் கற்பதே சத்தம்; அப்பொருளைப் பிரித்து அறியப் பட்டால் நல்ல வளப்பத்தினை யுடைய பொருள் தானே நின்று மிகவும் நன்மையைத் தரும் ஆதலால் நீ கூறிய சத்தத்திலும் அர்த்தமே சிறப்புடைத்து என்றவாறு.

விளக்கவுரை

இச் செய்யுளும் சத்தத்திலும் அர்த்தமே சிறப்புடையது என்று கூறிற்று.(5)

செய்யுள் - 216

முன்கண் டபொருட் பெயரா தலினால்
பின்கண் டபிழம் புணரும் பெயரால்
நன்கண் டபொருட் கொருநா சமதின்
றென்கண் டனைகா ரணமின் றழிவே.

பதவுரை

முன் கண்ட பொருள் பெயர் ஆதலினால்	முன் அறிவினால் காணப்பட்ட அர்த்தமே சத்தமான பெயராய் நிற்கையாலும்,
பின் கண்ட பிழம்பு உணரும் பெயரால்	பின் காணப்பட்ட உருக்களைச் சத்தமான பெயரைக் கொண்டு அறிகையினாலும்,
நன் கண்ட பொருட்கு ஒரு நாசம் அது இன்று	நன்றாகக் காணப்பட்ட அர்த்தத்துக்குக் கேடு இல்லையாம்; எனவே, சத்தத்துக்குக் கேடு உண்டாம்,
என் கண்டனை காரணம் இன்று அழிவு ஏ	காரியமாகிய சத்தம் அழிதலே அன்றிக் காரணம் ஆகிய அர்த்தம் அழியும் என்று சொல்லுகை எங்கே? அறிந்தாய் என்றவாறு.

விளக்கவுரை

எனவே, அர்த்தம் காரணம் என்றும், பிரதானம் என்றும் ஆயிற்று. என் கண்டனை என்பது - ஏது கொண்டு கண்டாய் என வினாவியது.

இச் செய்யுளும் அர்த்தமே பிரதானம் என்று கூறிற்று. (6)

செய்யுள் - 217

பொருளிந் திரியம் முணர்வோ டுபுமான்
இருளின் றியிடும் மொளியித் தனையும்
மருவும் பொழுதில் வருஞா னமதின்
ஒருவும் பெயரத் தமுதித் திடுமே.

பதவுரை

பொருள் இந்திரியம் உணர்வோடு புமான் இருள் இன்றி இடும் ஒளி இத்தனையும் மருவும் பொழுதில் வரும் ஞானம்	ஆன்மா ஒரு விடயத்தை அறியும்போது அறியப்படுபொருளும், அதனைக் காட்டும் இந்திரியமும், அதனோடு கூடி உணரும் அந்தக்கரணங்களும், அவற்றிற்கு மூலமாகிய பிரகிருதியும், அவற்றை வெளியாகத் தோற்றுவிக்கிற திரோதான சத்தியுமாக இத்தனையும் கூடும் அளவில் ஆன்மாவுக்கு அறிவு உண்டாம்,
அதின் ஒருவும் பெயர் அத்தம் உதித்திடும் ஏ	அவ்விடத்தில் பெயர் நீங்கப்படும் பொருள் தோன்றப்படும் ஆதலால் அர்த்தமே பிரதானம் என்றவாறு.

விளக்கவுரை

இருளின்றி யிடும் ஒளி என்பது - கண்மத்துக்கு ஈடான புசிப்பில் செலுத்துகையால் திரோதாயி ஒளி என்றாயிற்று. ஒருவும் - நீங்கும். இதுவும் அது.

ஆண்பனையில் குரும்பை தோன்றினது பெரியோர் வசனமாகிய சத்தத்திலே யன்றோ? என்னில், அவர் சிவோகம் பாவனா பலத்தினால் உண்டானதொழியக் கேவலம் சத்தத்தில் உண்டானது அன்று; உண்டாகில் எல்லா வசனங்களிலும் உண்டாக வேண்டும் எனக் கொள்க. *(7)*

செய்யுள் - 218

அத்தந் தெளிதற் கொளியா னதுபோல்
சத்தம் பொருடா னறிதற் குளதாம்
நித்தம் மதுவன் றுரைநின் றழியும்
சித்தன் னொருவன் உரைசெய் தனனே.

பதவுரை

அத்தம் தெளிதற்கு ஒளி ஆனது போல்	இருளின்கண் கிடக்கும் பல பொருள்களைத் தெரிதற்குக் கைவிளக்கு உண்டான தன்மை யைப் போல,
சத்தம் பொருள்தான் அறிதற்கு உளது ஆம்	பல பேதப்பட்ட பொருள்களையும் அறிதற்குச் சத்தம் உண்டானதாம்,
நித்தம் அது அன்று உரை நின்று அழியும்	அந்தச் சத்தம் நிலை பேறுடைய தன்றாய்ப் பொருளாகிய காரணம் இல்லையாயின் தானும் காரியப்படாது அழியும் ஆகையால்,
சித்தன் ஒருவன் உரை செய்தனன் ஏ	இந்தச் சத்தம் சித்தனாகிய பரமேசுவரனாலே உண்டாக்கப்பட்டதாதலால், அதனைப் பிரமம் என்று நீ சொல்லக் கடவை அல்லை என்றவாறு.

விளக்கவுரை

இச் செய்யுளும் பிரமம் பரமேசுவரன் அல்லது சத்தம் பிரமமல்ல என்று மறுத்துக் கூறிற்று.

உரையானது என்னும் செய்யுள் முதல் இச் செய்யுள் காறும் சத்தப்பிரமவாதி மதத்தை மறுத்துக் கூறிற்று. *(8)*

பத்தாவது – சத்தப்பிரமவாதி மதமறுதலை முற்றிற்று.

பாயிரம் உள்படத் திருவிருத்தம் – 218.

சத்தப் பிரமவாதி மறுப்புத் தொகுப்பு

இம்மத மறுப்பு சிவஞான சித்தியார் பரபக்கத்தில் எட்டுப் பாடல்களில் மறுத்துரைக்கப்படுகிறது.

ஒலியாகிய சொல்லே அறியாமையால் இவ்வுலகாயிற்றெனில், சொல், அறியாமை ஆகிய இருபொருள் உண்டெனக் கொள்ளல் வேண்டும். அறியாமை சொல்லின் வேறன்று எனில், சொல் வடிவாய பரம் பொருளுக்கும் அறியாமை உண்டெனக் கொள்ளல் நேரும். ஆதலின் சொல்லுலகும் பொருளுலகும் வெவ்வேறாம் பால் தயிரானாற் போல, சொல் பொருளாய்ப் பரிணமிக்கிறது எனில், பால் தயிராகுங் கால் தன் முன்னைய வடிவம் கெட்டு வேறுபடும். அது போல, சொல்லும் தன் உருவம் கெட்டு வேற்றுருவம் கொண்டதெனக் கொள்ளல் வேண்டும். அங்ஙனம் கொள்ளின் பிரமம் என்றும் ஒரு தன்மைத்தாயது எனும் கூற்றுக்கு மாறாம். கயிற்றைப் பாம்பாகக் காணுங்கால் கயிற்றைக் காண்பதில்லை. அதுபோல, பொருளைக் காணும் தோறும் நாம் சொல்லைக் காணாதிருத்தல் வேண்டும். நாம் அவ்வாறின்றி இரண்டையும் உடன் உளம் கொள்கின்றோம் ஆதலின் பொருளைச் சொல் உண்டாக்குகிறது என்பதிலும் பொருளைச் சொல் நினைவுபடுத்துகிறது என்பதே பொருத்தமாகும். தீ இல்லாத போதும் அத்தீயின் உணர்வு நமக்கு உள்ளது. இவ்வுணர்வு வேறு. இவ்வுணர்விற்கு இலக்காகப் புறத்தே காணும் தீ வேறு. தீ என்றக்கால் வாய் சுடுவதில்லை. ஆனால் புறத்துக் காணும் தீயோ தொடில் சுடும். ஆதலின் சொல் வேறு. பொருள் வேறாம்.

ஒரு சொல் பல பொருள் படுதல், நெல் பொரியாதல் போலாம் என்பர். அற்றன்று. நெல் தானே பொரியாதல் இல்லை. தீயின் சேர்க்கையாலே பொரியாகும். அதுபோல எல்லாச் சொல்லும் பொருள் குறித்து நிற்கும் என அறிந்த ஒருவன், தான் கருதிய பொருளுக்குரிய சொல்லைச் சொல்லுகின்ற பொழுதே அப்பொருளும் உணர்வும் வெளிப்படுகின்றன. அன்றியும் சொல்லும் பொருளும் விளக்குவதும், விளக்கப் படுவதுமாய அமைவுடையதாகும். இதனை 'வாசக வாச்சிய சம்பந்தம்' என்பர்.

மாயாவாதம் முன்னுரை

	வகை	வேதத்தை மட்டும் ஏற்று ஆகமத்தை ஏற்காத புறச்சமயங்கள் ஆறனுள் மூன்றாவதான ஏகான்மவாதத்தின் நான்கு பிரிவுகளில் ஒன்றாகும்.
1.	வேறுபெயர்	வேதாந்தம். சங்கரரின் கேவலாத்வைதத்தின் உட்பிரிவு.
2.	பெயர்க்காரணம்	பிரமத்திலிருந்து தோன்றிய மாயை பிரமத்தை மறைக்கும் ஆற்றல் வாய்ந்தது. இது தூய சத்துவ குணத்தால் ஆனது மாயைக் கொண்டே அனைத்துக் கொள்கைகளையும் நிறுவுவதால் மாயாவாதி எனப்பட்டனர். வேதம் + அந்தம் = வேதாந்தம். அந்தம் – கடைசி. நான்மறைகள் – வேத வரிசையில் காலத்தால் முற்பட்டவை. பிரமாணங்கள் – வேத மந்திரங்களை உச்சரிப்போர் மேற்கொள்ளும் செயல்களைப் பற்றிக் கூறுவன. உபநிடதங்கள் – கடைசியாக எழுந்தவை. வேதாந்தம் உபநிடதத்தையே குறிக்கிறது. வேத மந்திரத்தையும் அதை ஒலிப்போர் ஆற்றும் செயல்களையும் உபநிடதங்கள் குறிக்கின்றன. வேதம் + பிரமாணம் + உபநிடதம் மூன்றையும் வேதமென்றே குறிப்பர்.
3.	கொள்கைகள்	1. பிரமம் ஒன்றே உள்பொருள் 2. இவ்வுலகம் பொய்யாகும்
4.	தோற்றுவித்தவர்	வியாத முனிவர்.

ஏகான்மவாதம் 11. (க) மாயாவாதி மதம்

செய்யுள் - 219

நானே பிரம மென் றுரைத்து
ஞாலம் பேய்த்தே ரெனவெண்ணி
ஊனே புகுந்து நின்றுயிர்கட்
குபதே சங்க ளுரைத்துவரும்
மானா மதிகே டனுமாய
மாயா வாதி பேயாகித்
தானே யுரைக்கு மந்நூலின்
உண்மை தன்னைச் சாற்றுவாம்.

பதவுரை

ஆன்மாவும் சிவமும் என்னாது அகம் பிரமம் என்று சொல்லிப் பிரபஞ்சம் எல்லாம் கானற்சலம் போலப் பொய் எனக் கருதிக் கருப்பாசயம் நீங்காமல் நின்று தான் மற்றுள்ள ஆன்மாக்களுக்கு உபதேசங்கள் சொல்லித் திரிகின்ற நாணமில்லாத அறிவீனன் ஆகிய மாயாவாதி பித்தேறி வேதாகமங்களுக்குப் பொருந்தாமல் தனக்குப் பொருந்தத் தானே சொல்லிக் கொள்ளும் அந்த நூலினது உண்மையின் தன்மையைச் சாற்றுவாம் என்றவாறு.

ஊனே புகுந்து நின்று என்பது - தான் பிரமம் ஆயின் ஊனிற் புகுத வேண்டா என்பது கருதி என்க. உயிர்கட்கு உபதேசங்கள் உரைத்து வரும் என்பது - சர்வ ஆன்மாக்களும் தன்னைப்போலப் பிரமம் ஆகையால் உபதேசம் சொல்ல வேண்டா என்பது கருதி என்க. பேய்த்தேர் - கானற்சலம்.

சத்தப்பிரமவாதியை நிராகரித்து, மாயாவாதி மதம் கூறுவான் எடுத்துக் கொண்டார். அதனுள், இச்செய்யுள் அவன் இத்தன்மையன் என்பது கூறிற்று. (1)

செய்யுள் - 220

அறிவா யகில காரணமாய்
அநந்தா நந்த மாயருவாய்ச்
செறிவா யெங்கு நித்தமாய்த்
திகழ்ந்த சத்தாய்ச் சுத்தமாய்க்
குறிதான் குணங்க ளொன்றின்றிக்
கூறும் வேதந் தனக்களவாய்ப்
பிறியா வநுபூ திகந்தனக்காய்
நின்ற தந்தப் பிரமந்தான்.

பதவுரை

அறிவு ஆய் அகில காரணம் ஆய் அனந்த ஆனந்தம் ஆய் அருஆய் செறிவுஆய் எங்கும் நித்தம் ஆய் திகழ்ந்த சத்து ஆய் சுத்தம் ஆய்	ஞானமே சொரூபமாய், பிரபஞ்சத்துக்குக் காரணமாய், எல்லையில்லாத ஆனந்தமாய், உருவமின்றி அருவமாய், எங்கும் நிறைந்து நிற்பதாய், கேடிலாதாய் விளங்கும் சத்தாய், அசுத்தத்துடன் கூடாது சுத்தமேயாய்,
குறிதான் குணங்கள் ஒன்று இன்றி கூறும் வேதம் தனக்கு அளவு ஆய் பிறியா அநுபூதிகம் தனக்கு ஆய் நின்றது அந்தப் பிரமம் தான்	ஓர் அடையாளமும் ஓர் குணமும் இல்லை யாய்ச், சொல்லத்தக்க வேதங்கட்கு வரம்பாய், நீக்கமில்லாத அநுபூதி தனக்கே யுடைத்தாய், நின்றது உயர்ந்த பிரமம் என்றவாறு.

விளக்கவுரை

பிறியா அநுபூதிகம் தனக்காய் என்றதனால் ஞாதுரு ஞான பேதமில்லை என்பதாயிற்று.

இச்செய்யுள் பிரமநிலை கூறிற்று. *(2)*

செய்யுள் - 221

ஒன்றா மிரவி பலபாண்டத்
துண்டா முதகத் தங்கங்கே
நின்றாற் போல உடறோறும்
நிகழ்ந்து நிற்கும் பொருண்மேற்கண்
சென்றாற் போலப் புலன்களுக்கும்
சிந்தை தனக்கும் தெரிவரிதாம்
என்றாற் காட்சி முதலாய
இருமூன் றளவைக் கெட்டாதால்.

பதவுரை

ஒன்று ஆம் இரவி பல பாண்டத்து உண்டாம் உதகத்து அங்கு அங்கே நின்றால் போல	ஓர் ஆதித்தன் ஆகாசத்திலே நிற்கப் பல பாத்திரங்களிலும் உண்டாகிய ஜலங்களிலே தனித்தனியே தோன்றுமாறு போல,
உடல் தோறும் நிகழ்ந்து நிற்கும் பொருள்	ஏகமாகிய பிரமம் உடல்கள் தோறும் தனித்தனியே தோன்றப்பட்டு நிற்கும்,
மேற்கண் சென்றால் போல புலன்களுக்கும் சிந்தை தனக்கும் தெரிவு அரிதாம்	அவ்வாதித்தன் பாத்திர உதகங்களில் அகப் படாமல் மேற்பட இயங்குகின்றாற் போல, அந்தப் பிரமமும் உடலில் அகப்படாது

	மேற்பட்டு இந்திரியங்களுக்கும் கரணங்களுக்கும் அறிதற்கு அரிதாய் நிற்கும்,
என்றால் காட்சி முதலாய இரு மூன்று அளவைக்கு எட்டாதால்	இப்படிச் சொல்லப்படுகையாலே காட்சி முதலாய ஆறு அளவைக்கும் தெரிதற்கு அரிதாம் என்றவாறு.

விளக்கவுரை

ஆல் - அசை. பொருண்மேற்கண் - பாத்திரத்திடத்துக் கண்ணானது ஓடிக் கண்டாற்போல அறிவுகளுக்கு இராவணன் பலதலையும் கொண்டு வியாபரித்தாற் போலவும், ஆயிரம் பணா முடியை உடைய அநந்தனைப் போலவும், ஒருவனுமே பல முகமாய் வழங்கா நின்றான். இரு மூன்று அளவை என்றது - பிரத்தியட்சம், அநுமானம், ஆகமம், உபமானம், அருத்தபத்தி, அபாவம்.

இச்செய்யுள் ஆன்மா என்று ஒன்றில்லை; சர்வமும் பிரமமே என்று கூறிற்று.

(3)

செய்யுள் - 222

இருளிற் பழுதை யரவெனவே
இசைந்து நிற்கு மிருங்கதிர்கள்
அருளப் பழுதை மெய்யாகி
அரவும் பொய்யா மதுவேபோல்
மருளிற் சகமுஞ் சத்தாகி
மருவித் தோன்று மாசில்லாத்
தெருளிற் சித்தே சத்தாகும்
பித்தாஞ் சகத்தின் செயலெல்லாம்.

பதவுரை

இருளில் பழுதை அரவு எனவே இசைந்து நிற்கும் இருங்கதிர்கள் அருளப் பழுதை மெய் ஆகி அரவும் பொய் ஆம் அது ஏ போல்	இருளின் கண் புற்றருகே ஒரு கயிறு கிடப்ப அதனைக் கண்டோர் பாம்பு எனவே பொருந்தி நிற்கும் அளவில் ஆதித்த கிரணங்கள் தோன்றக் கயிற்றை மெய்யாய்ப் பாம்பு பொய்யாம் அது போல,
மருளில் சகமும் சத்து ஆகி மருவித் தோன்றும்	பொய்யாகிய பிரபஞ்சத்தினுடைய செயலும் மயக்கத்தாலே மெய்யாகப் பொருந்தித் தோன்றும்,

மாசு இல்லா தெருளில் சித்தே சத்து ஆகும் பித்து ஆம் சகத்தின் செயல் எல்லாம்	மயக்கமற்ற பிரமஞானத்தாலே விளங்கின காலத்துப் பிரமமே உண்மையாகப் பிரபஞ்சத்தின் செயலெல்லாம் பொய்யாம் என்றவாறு.

விளக்கவுரை

இச்செய்யுள் பிரபஞ்சம் பொய் என்பது கூறிற்று. (4)

செய்யுள் - 223

உலகந் தானும் நிருவசனத்
துண்டா மின்றே லுதியாது
நிலவி யுண்டே லழியாது
நிற்ப தாகு மித்தையால்
இலகு சுத்தி கனல்சேர
வின்றாம் வெள்ளி நின்றதாம்
குலவு சகமு மவிகாரம்
பரமார்த் தத்திற் கொள்ளாதால்.

பதவுரை

உலகம் தானும் நிருவசனத்து உண்டாம்	பிரபஞ்சமானது வசனரகிதமான பிரமத்திலே நின்றும் தோன்றும்,
இன்றேல் உதியாது	அந்தப் பிரமத்தினின்றும் தோன்றாதாகில் வேறு ஒரு உபாதானம் உண்டாய்ப் பிரபஞ்சம் தோன்றுவதும் இல்லை,
நிலவி உண்டேல் அழியாது நிற்பது ஆகும்	பிரபஞ்சத்தை ஒருவர் தோற்றுவிக்காமல் தானே பிரகாசித்து உண்டாமாகில் அதுவும் ஒரு முதலாய் அழியாது நிற்கத் தகும்; அது அழியக்காணப்படும்; அஃது யாங்ஙனம்? என்னில்,
மித்தையால்	பிரபஞ்சம் மெய் போலத் தோன்றினும் பொய்யாகை நிச்சயமாகையால்; அஃதன்றிப் பிரபஞ்சம் மெய் போலத் தோன்றிப் பிரகாசிக்கிறபடியும், பாரமார்த்தத்தில் பொய்யாகியபடியும் எங்ஙனம்? என்னில்,

இலகு சுத்தி கனல் சேர இன்றாம் வெள்ளி நின்றதாம் குலவு சகமும் அவிகாரம் பரமார்த்தத்தில் கொள்ளாதால்	வெள்ளி போலப் பிரகாசிக்கும் இப்பியையும் வெள்ளியையும் கனலில் இட்டால் இப்பி கெட்டு வெள்ளி நின்றாற்போல மெய் போலத் தோன்றும் பிரபஞ்சமும் அவிகார மாகிய பிரமமே மெய்யாய்ப் பிரபஞ்சம் பொய்யாகக் கொள்ளப்படும் என்றவாறு.

விளக்கவுரை

அவிகாரமும் என உம்மை விரிக்க. நிருவசனம், அவிகாரம் என்பன பிரமத்துக்கு ஓர் ஆகுபெயர். சுத்தி - இப்பி, கிளிஞ்சல், சங்கு.

இச்செய்யுள் பிரபஞ்சம் தோன்றும் முறைமையும், பிரபஞ்சம் பொய் என்பதும் கூறிற்று. *(5)*

செய்யுள் - 224

தாங்கு முலகுக் குபாதானம்
சத்தாம் சிலம்பி நூறன்பால்
வாங்கி வைத்துக் காப்பதுபோல்
வையமெல்லாம் தன்பக்கல்
ஒங்க வுதிப்பித் துளதாக்கி
நிறுத்தி யொடுக்கத் திலதாக்கும்
ஆங்கு வந்த வாறதனால்
சத்தாஞ் சகத்தி னமைவெல்லாம்.

பதவுரை

தாங்கும் உலகுக்கு உபாதானம் சத்து ஆம்	ஆதாரமாகிய பிரபஞ்சத்துக்கு உபாதானம் சத்தாகிய பிரமமே ஆம்; அஃது என்போல? என்னில்,
சிலம்பி நூல் தன் பால் வாங்கி வைத்து காப்பது போல் வையம் எல்லாம் தன் பக்கல் ஒங்க உதிப்பித்து உளது ஆக்கி நிறுத்தி ஒடுக்கத்து இலது ஆக்கும்	சிலம்பியானது நூலைத் தன்னிடத்திலே நின்றும் தோற்றுவித்து அந்த நூலை ஓரிடத்திலே உண்டாக்கி வைத்துப் பாதுகாத்துப் பின்பு அந்த நூல் அழியும்படி தான் நீங்கும் தன்மை போலப் பிரமமும் பிரபஞ்ச பேதம் எல்லாவற்றையும் தன்னிடத்திலே நின்றும் விளங்கத் தோற்று

	வித்தும், அவற்றை உளதாக இரட்சித்தும், பின் இல்லையாம்படி சங்கரித்திடும்,
ஆங்கு வந்த ஆறு அதனால் சத்து ஆம் சகத்தின் அமைவு எல்லாம்	அப்படிப் பிரமத்திலே தோன்றி நின்று கெடுகையால் பிரமத்தினுடைய நியமமே பிரபஞ்சத்தின் செயலெல்லாம் என்றவாறு.

விளக்கவுரை

இச் செய்யுள் பிரமத்திலே பிரபஞ்சம் தோன்றி நின்று கெடும் என்பதூஉம், பிரபஞ்சம் அநித்தியம் என்பதூஉம் கூறிற்று. (6)

செய்யுள் - 225

மன்னும் பிரமம் தனின்வானாய்
வானின் வளியா யந்தவளி
தன்னி னழலா யழலின்பால்
சலமாய்ச் சலத்திற் றாரணியாய்ச்
சொன்ன விதனின் மருந்தாகித்
தோற்று மருந்தி லன்னமாய்
அன்ன மதனிற் றுவக்காதி
ஆறு தாது வாயினவால்.

பதவுரை

மன்னும் பிரமம் தனின் வான்ஆய் வானின் வளியாய் அந்த வளிதன்னின் அழலாய் அழலின்பால் சலமாய் சலத்தில் தாரணியாய்	கேடில்லாத பிரமத்திலே ஆகாசம் தோன்றி ஆகாசத்திலே வாயுத் தோன்றி அந்த வாயுவிலே அக்கினிதோன்றி அக்கினியிலே நீர் தோன்றி நீரிலே நிலமும் தோன்றி,
சொன்ன இதனில் மருந்து ஆகி தோற்றும் மருந்தில் அன்னம் ஆய் அன்னம் அதனில் துவக்கு ஆதி ஆறு தாது ஆயின ஆல்	கூறிய இந்நிலத்திலே மருந்துக்களும், அம்மருந்திலே உணவும், உணவிலே தோல், எலும்பு, நரம்பு, மச்சை, குருதி, வெண்ணீர் என்னும் ஆறு தாதுக்களும் தோன்றுவன என்றவாறு.

விளக்கவுரை

தாதுக்கள் ஆறாவன - தோல், எலும்பு நரம்பு, மச்சை, சோரி, சுக்கிலம் என்பவை. இவை காயத்தின் பகுதிக்கு ஓர் பொதுப்பெயர்.

இச் செய்யுள் பிரமத்திலே நின்றும் பிரபஞ்சம் தோன்றிவரும் முறைமை கூறிற்று. (7)

செய்யுள் - 226

ஆறு தாதுக் களுங்கூடி
வந்த கோச மன்னமயம்
மாறில் பிராண கோசமயம்
மன்னு மதனின் மனோமயந்தான்
வேறு வரும்விஞ் ஞானமயம்
மேவு மதனி னதுதன்னில்
கூறி வருமா நந்தமயங்
கோச மயம்பின் கூடியதால்.

பதவுரை

ஆறு தாதுக்களும் கூடி வந்த கோசம் அன்னமயம்	அவ்வாறு தாதுக்களும் கூடி உண்டாகியது அன்னமய கோசம்,
மாறு இல் பிராண கோசமயம் மன்னும் அதனில்	பொருந்திய அந்த அன்னமய கோசத்திலே மாறில்லாது வாயுப்பரந்து துடிப்புண்டானது பிராணமய கோசம்,
மனோமயம் தான்	அந்தப் பிராணமய கோசத்திலே மயக்கம் நீங்கிப் பழைய மனம் கூடுவது மனோமய கோசம்,
வேறு வரும் விஞ்ஞான மயம் மேவும் அதனின்	பொருந்திய அந்த மனோமய கோசத்திலே வேறாகவரும் சோத்திராதிகள் கூடி அறிவாய் இருப்பது விஞ்ஞானமயகோசம்,
அது தன்னில் கூறி வரும் ஆநந்தமயம்	அந்த விஞ்ஞானமய கோசத்திலே கூறுகின்ற வாக்காதிகள் கூடி ஆநந்தமாயிருப்பது ஆநந்தமய கோசம்,
கோசமயம் பின் கூடியதால்	மயமென்னும் சொல்லின் பின்னே கோசம் என்னும் சொல் கூடியதாம் என்றவாறு.

விளக்கவுரை

மயம் என்னும் சொல்லின்பின் கோசம் என்னும் சொற்பெயர் கூறாது பின் கோசம் எனக் கூடியது எனத் தொகுத்த ஒரு சொல்லாகக் கூறினார். கோசம் - உறுப்பு. இவற்றின் விவரங்களை ஞானாவரணச் செய்யுளிற் காண்க.

இச்செய்யுள் பஞ்ச கோசங்களும் கூடிய முறைமை கூறிற்று. *(8)*

செய்யுள் - 227

கோச வுருவிற் பிரமந்தான்
கூடித் தோன்று நீடுமொரு
காச மருவுங் கடந்தோறும்
நின்றாற் போலக் கதிரவன்றன்
வீசு கிரண முருவின்கண்
வெளிப்பட் டிடுவ ததிற்பற்றும்
பாச மதனுக் கின்றாகும்
என்றாற் பரத்திற் பற்றுண்டோ.

பதவுரை

கோச உருவில் பிரமம் தான் கூடி தோன்றும்	பஞ்ச கோசமாகிய உருவின்கண்ணே பிரமமானது கூடிப் பிரகாசிக்கும், அஃது என்போல? என்னில்,
நீடும் ஒரு காசம் மருவும் கடம் தோறும் நின்றால் போல கதிரவன் தன் வீசு கிரணம்	எட்டுதற்கரிதாய் ஒப்பற்ற ஆகாயத்தின் கண்ணே பொருந்தி நிற்கும் ஆதித்தனது மிகுந்த கிரணமானது பூமியின் கண் வைத்த கடந்தோறும் தனித்தனியே தோன்றுமா போல,
உருவின் கண் வெளிப்பட்டிடுவது	அந்தப் பிரமமும் ஆதித்தனைப் போல எட்டாதாயினும் உருக்கள் தோறும் தானாய் நிற்கும்,
அதில் பற்றும் பாசம் அதனுக்கு இன்றாகும்	பிரமம் அப்படிப் பாசத்தோடு கூடி நின்றதாயினும் பிரமத்தைப் பாசம் சென்று பற்றுவதில்லையாம்,
என்றால் பரத்தில் பற்று உண்டோ	பிரமத்தைப் பாசம் பற்றாதாகையால் அந்தப் பிரமத்துக்குப் பாசத்தோடு பற்றில்லை என்றவாறு.

விளக்கவுரை

ஆகாசம் காசம் எனத் தலைக் குறைந்து நின்றது. ஓ - எதிர்மறை.

இச் செய்யுள் பிரமம் காயத்தோடு கூடிப் பற்றிடும் முறைமையும், கூடி நிற்பினும் பாசப்பற்றில்லை என்பதுவும் கூறிற்று. (9)

செய்யுள் - 228

அலகின் மணிக ளவைகோவை
அடைந்த பொழுதி னங்கங்கே
நிலவு மொருநூல் பலநிறமாய்
நின்றாற் போல நீடுருவம்
பலவு மருவு பேதத்தாற்
பன்மை யாகும் பிரமந்தான்
குலவு போக போக்கியங்கள்
கொள்ளும் போன்று கொள்ளாதால்.

பதவுரை

அலகு இல் மணிகள் அவை கோவை அடைந்த பொழுதின் அங்கு அங்கே நிலவும் ஒரு நூல் பல நிறம் ஆய் நின்றால் போல நீடு உருவம் பலவும் மருவு பேதத்தால் பன்மை ஆகும் பிரமம் தான்	எண்ணிறந்த பலவன்னமாகிய மணிகளைக் கோவையாகக் கோத்த இடத்து ஒரு நிறப்பட்ட நூல் அம் மணிகளாலே பல நிறமாய் நின்றாற் போலப் பிரபஞ்சத்தில் தோன்றப்பட்ட யோனி பேதங்கள் பலவாகப் பேதிக்கப்படுகையால் அவற்றோடும் கூடிய பிரமமும் பல பேதப்பட்டாற் போல அங்கங்கே தோன்றும்,
குலவு போக போக்கியங்கள் கொள்ளும் போன்று கொள்ளாது ஆல்	ஆகையால் மணிகளில் பொருந்தின நூலும் தன் தன்மை கெடாது நின்றாற் போல பிரமமும் போக போக்கியங்கள் கொள்வாரைப் போன்று கொள்ளாதாய் நிற்கும் என்றவாறு.

விளக்கவுரை

இச்செய்யுள் பிரமம் பேதிக்கப்பட்டாற் போலத் தோன்றினும் பேதப்படாது என்பது கூறிற்று. (10)

செய்யுள் - 229

போற்றுஞ் செயலாற் பலநாமம்
புனைந்து போக போக்கியத்தில்
தோற்று நனவு கனவினுடன்
சுழுத்தி தூரிய மெய்துமிதற்
கேற்ற கரண நிரைநிரையே
ஈரேழ் நாலொன் றெல்லாமும்
மாற்றி நிற்குங் கேடி ன்றி
வந்த போக மாய்ந்திடவே.

பதவுரை

போற்றும் செயலால் பல நாமம் புனைந்து	பிரபஞ்சத்தோடு பொருந்தின தொழிலாலே பரமான்மா வென்றும் ஜீவான்மா வென்றும் அந்தரான்மாவென்றும் நரகான்மா வென்றும் திரிய ஆன்மாவென்றும் பல பெயர்களையும் பொருந்தி,
போக போக்கியத்தில் தோற்றும்	போகத்திலும் போக்கியத்திலும் கூடி அநுபவிப்பாரைப் போலத் தோன்றும்,
நனவு கனவினுடன் சுழுத்தி தூரியம் எய்தும்	சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி துரியம் என்னும் நாலவத்தையும் பொருந்தும்,
இதற்கு ஏற்ற கரணம் நிரை நிரையே ஈரேழ் நால் ஒன்று எல்லாமும் மாற்றி நிற்கும் கேடு இன்றி வந்த போகம் மாய்ந்திட ஏ	அவ்வவத்தை நாலிற்கும் கூடி நிற்கும் கரணம் அடைவே நிரை நிரையாகக் கொள்ளுமிடத்துச் சாக்கிரத்துக்குப் பதினாலும் சொப்பனத்துக்கு நாலும் சுழுத்திக்கு ஒன்றும் துரியத்துக்குக் கேடில்லாத அந்தப் புண்ணிய பாவங்கள் கெடும்படி எல்லாவற்றையும் நீங்கி நிற்கும் இடமும் ஆக நிற்கும் என்றவாறு.

விளக்கவுரை

சாக்கிரத்தில் பதினான்கு கருவியாவன - சோத்திராதி ஐந்து. சத்தாதி ஐந்து, அந்தக்கரணம் நான்கு ஆகப் பதினான்காம். சொப்பனத்தில் நாலாவன - அந்தக் கரணங்கள். சுழுத்தியில் ஒன்றாவது - உள்ளம். இதனையே சித்தம் எனக் கூறுவர். பிரகிருதி, புமான், மகான், புருடன், அவித்தை, அவ்வியத்தம், மூலப்பிரகிருதி என்பன ஒரு பொருட் கிளவி. பிரமம் ஒழிய எல்லாம் நீங்கி நின்ற இடம் துரியம். போகம் - புண்ணிய பாவம். போக்கியம் - மனம். இவை இரண்டிற்கும் சாட்சி பூதம் பிரமம் என்பது கருத்து. அவத்தை என்பது பிரமம் உபாதிகளோடும் கூடினால் பேதிக்கும் அவதரம். சாக்கிரம் - விழிப்பு. சொப்பனம் - பிரகிருதி அவதரம். சுழுத்தி - பிரகிருதி ரூபம். போக போக்கியம் என்பது - புசிப்பும் புசிப்புக்கு இடமாகிய பதார்த்தங்களும். துரியமாவது - கருவி நீங்கின இடமெனக் கொள்க. எனவே துரியத்தில் புண்ணிய பாவத் தொடர்பில்லை.

இச்செய்யுள் பிரபஞ்சத்தோடு பிரமம் பலபேதப்பட்டுப் போக போக்கியத்திற்கும் அவத்தைக்கும் சாட்சி பூதமாய் நிற்கும் முறைமை கூறிற்று.(11)

செய்யுள் - 230

கருவி யெல்லா நானெனவே
கருதல் பந்த மக்கருத்தை
ஒருவ முத்தி யுண்டாகும்
உள்ளம் வித்தாஞ் செய்தியினான்
மருவு மாயா காரியங்கள்
அவித்தை மாய வேமாயை
பிரியும் பிரிய ஞானமது
பிறக்கும் பிறவா பேதமே.

பதவுரை

கருவி எல்லாம் நான் எனவே கருதல் பந்தம்	கருவிகள் பதினாலோடும் கூடி அவற்றை நான் என்று கருதி நிற்பது பந்தமாம்,
அக்கருத்தை ஒருவ முத்தி உண்டாகும்	அக்கருவிகள் பதினாலோடும் கூடாமல் நீங்கித் துரியத்து நிற்கவே தற்சொரூபம் ஆகிய சிவோகம் பாவம் பிறந்து முத்தி யுண்டாம்,
உள்ளம் வித்தாம்	பந்தத்திற்கு வித்தாவது மூலப் பிரகிருதி,
செய்தியினால் மருவும் மாயா காரியங்கள்	அந்த மூலப் பிரகிருதியின் செயலாலே மாயா காரியங்களாகிய சுகதுக்கங்கள் பொருந்தும்,
அவித்தை மாயவே மாயை பிரியும்	அவித்தை யாகிய மூலப் பிரகிருதியின் செயல் கெடவே மாயை நீங்கும்,
பிரிய ஞானம் அது பிறக்கும் பிறவா பேதம் ஏ	அம்மாயை நீங்கவே ஞானம் உண்டாம்; அந்த ஞானம் பெந்தம் தோன்றாமல் சிவோகம் பாவம் பிறக்கும் என்றவாறு.

விளக்கவுரை

கருவியெல்லாம் என்றது தொண்ணூற்றாறு கருவிகளும். உள்ளம் வித்தாம் செய்தியினால் மருவும் என்பது - அவித்தையாகிய அறியாமையின் காரியத்திலே பொருந்தும் என்க.

இச்செய்யுள் உபாதிகளை விட்டு நீங்கும் முறைமை கூறிற்று. (12)

செய்யுள் - 231

ஆன கன்ம வநுட்டயங்கள்
அந்தக் கரண சுத்திதரும்
ஊன மின்றி யச்சுத்தி
ஞான மதனை யுண்டாக்கும்
ஞான மதுதான் பிரமத்தை
நானென் றுணர்த்தும் நான் பிறந்தால்
வான மதிநீர்த் துளக்கமெனக்
காணுந் தன்னை மாயையிலே.

பதவுரை

ஆன கன்ம அனுட்டயங்கள் அந்தக் கரண சுத்தி தரும்	உண்டான கன்மானுட் டானங்களாகிய வாகிய சுத்தியாலே அந்தக் கரணத்துக்குச் சுத்தியுண்டாம்,
ஊனம் இன்றி அச்சுத்தி ஞானம் அதனை உண்டாக்கும்	குற்றம் இன்றி அச்சுத்தியானது ஞானத்தை உண்டாக்கும்,
ஞானம் அது தான் பிரமத்தை நான் என்று உணர்த்தும்	அந்த ஞானந்தானே அகம் பிரமம் என்பதனை அறிவிக்கும்,
நான் பிறந்தால் வானம் மதி நீர் துளக்கம் எனக் காணும் தன்னை மாயையிலே	அங்ஙனம் தானான தன்மையிலே கருத்து முற்றினால் ஆகாசத்தில் உண்டாகிய சந்திரன் நீரின் கண்ணே நின்று விளங்கித் தோன்றும் உருவம் போலத் தற்சொரூபமும் தெரியும் என்றவாறு.

விளக்கவுரை

அனுட்டயம் அந்தக்கரண சுத்திதரும் என்பது கன்மானுட்டானங்கள் ஆனவற்றான் அந்தக் கரண சுத்தி யுண்டாம். துளக்கப்பாடு சகலத்துக்கொழியச் சந்திர பிரதிபிம்பத்துக்கு இல்லாமை போல் அலைவு கருவிகளுக்கு ஒழியப் பிரமத்திற்கு இல்லை என்க.

இச்செய்யுள் பிரம நிட்டை கூடும் முறைமை கூறிற்று. (13)

செய்யுள் - 232

தானே தானா யநுபோகந்
தன்னிற் றன்னை யநுபவித்திட்
டூனே யுயிரே யுணர்வேயென்
றொன்று மின்றி யுரையிறந்து
வானே முதலாம் பூதங்கள்
மாய மாயா தேமன்னி
நானே பிரம மெனத்தெளியும்
ஞானம் பிரம ஞானமே.

பதவுரை

தானே தான் ஆய் அநுபோகம் தன்னில் தன்னை அநுபவித்திட்டு	அகம்பிரமமாய் அநுபூதியும் தன்னிலே தன்னை அநுபவித்து,
ஊனே உயிரே உணர்வே என்று ஒன்றும் இன்றி உரை இறந்து	காயமென்றும் கரணமென்றும் வாயுவென்றும் ஒரு பேதமுமின்றி இன்னபடி யென்று சொல்லுதற்கு ஓர் சொல்லும் இன்றி,
வானே முதல் ஆம் பூதங்கள் மாய மாயாதே மன்னி	ஆகாசம் முதலாகிய பூதங்கள் கெடவும் தான் ஒருக்காலும் கெடாதே நிலைபெற்று,
நானே பிரமம் என தெளியும் ஞானம் பிரம ஞானமே	அகம் பிரமம் எனத் தெளியும் ஞானமே பிரம ஞானம் என்றவாறு.

விளக்கவுரை

தானே தானாய் - கருவி கரணாதிகளை நீங்கி.

இச்செய்யுள் பிரம ஞானத்தில் நிற்கும் கருத்துக் கூறிற்று. *(14)*

செய்யுள் - 233

சாற்று மறைதத் துவமசிமா
வாக்கி யங்க டமையுணர்ந்தால்
போற்றி யதுநீ யானாயென்
றறைவ தல்லாற் பொருளின்றே
தேற்று மிதனைத் தெளியாதார்
தெளியப் பஞ்ச வாதநமேல்
ஏற்ற வியம நியமாதி
யோக மிருநான் கியற்றுவரால்.

பதவுரை

சாற்றும் மறை தத்துவமசி மா வாக்கியங்கள் தமை உணர்ந்தால் போற்றி அது நீ ஆனாய் என்று அறைவது அல்லால் பொருள் இன்று ஏ	முதலாகிய மகாவாக்கியங்கள் சொல்லும் பகுதியை உணரும் காலத்து விரும்பி அதுநீ ஆனாய் என்பது அல்லாது மற்றொரு பொருள் சொல்லுதற்கு இல்லையாம் ஆதலால்,
தேற்றும் இதனை தெளியாதார் தெளிய பஞ்ச ஆதனம் மேல் ஏற்ற இயமம் நியமாதியோகம் இரு நான்கு இயற்றுவர் ஆல்	இப்படித் துணியச் சொல்லும் மகாவாக்கியத்தின் உண்மையைக் கொண்டு சோகம் பாவகமாக அறியாதார் அந்த முறையைக் கூடித் தெளியவேண்டிப் பஞ்ச ஆதனம் முதலாகிய பூசிக்கும் கிரியையையும் மேலாகிய இயமம் முதலாகிய அட்டாங்க யோகத்தையும் செய்து திரிவர் என்றவாறு.

விளக்கவுரை

எனவே சரியை கிரியை யோகமாகியவை பிரமஞானம் கூட வேண்டிச் செய்யும் தவம் என்பது கருத்து.

பஞ்ச ஆதனமாவன - கூர்மாசனம், அநந்தாசனம், சிங்காசனம், பத்மாசனம், யோகாசனம் ஆம். அஷ்டாங்க யோகமாவன - இயமம், நியமம், ஆசனம், பிராணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி என இவை.

பஞ்சசாதனம் எனப் பாடமாயின் ஆசனமும், யோக பட்டமும், தண்டும், கமண்டலமும், செப மாலையும் எனப் பொருள் கொள்க.

இச்செய்யுள் பிரமஞானங் கூடாதார் சரியை, கிரியை, யோகம் இவற்றைச் செய்து ஞானம் கைகூடுவர் எனக் கூறிற்று.

நானே பிரமம் என்னும் செய்யுள் முதல் இச்செய்யுள் காறும் மாயாவாதி மதம் கூறிற்று.

(15)

பதினொன்றாவது – மாயாவாதி மதம் முற்றிற்று.

பாயிரம் உள்படத் திருவிருத்தம் – 233.

ஏகான்மவாதம் 11.(உ) மாயாவாதி மதமறுதலை

செய்யுள் - 234

ஏக நானென வியம்பி யிப்படி
அறிந்து முத்தியடை மின்னென
மோக மானவுரை சோக மின்பொடு
முடிந்தி டாதுமல டாகிய
காக மானது கருங்க லின்றசை
பறித்த ழுங்கரிய குஞ்சியின்
தாக மார்பசி தவிர்க்க வாயிடை
கொடுத்ததென் றுரைசெய் தன்மையே.

பதவுரை

ஏகம் நான் என இயம்பி இப்படி அறிந்து முத்தி அடைமின் என மோகம் ஆன உரை சோகம் இன்பொடு முடிந்திடாது	மாயாவாதி! நீ நான் ஏகப் பிரமம் என்று சொல்லிப் பின்பு கருவிகளை நீங்கி இப்படித் தரிசித்து முத்தி அடையுங்கள் எனறு மயங்கிச் சொல்லும் சொல் நீ எடுத்துக் காட்டின சோகம் பாவனையேல், அங்ஙனம் கூறும் இனிய ஆன்ம வாக்கியத்தோடு கூடி முடியாது; அஃது எங்ஙனம்? என்னில், அவ்வாக்கியம் அது நான் ஆனேன் என்கையால், இரண்டு பட்டுப் பெறுவானும் பேறுமாய் ஒன்று கையால்; அஃதன்றியும், பிரமத்தை விகாரம் அற்றதாகவும் கூறி, மீளவும் மயங்கி, அந்தப் பிரமம் சீவான்மாவாகப் பேதித்ததாகவும் கூறினாய்; அதற்குக் கன்மம் என்று முதல் இன்றி, இல்லாததனையும் உண்டாக்கி, அதனைக் கூடிற்று என்றும் கூறியது மயக்கம். அஃது என்போல? என்னில்,
மலடு ஆகிய காகம் ஆனது கருங்கலின் தசை பறித்து அழும் கரிய குஞ்சியின் தாகம் ஆர் பசி தவிர்க்க வாயிடை கொடுத்தது என்று உரை செய் தன்மை ஏ	ஒரு மலட்டுக் காகமானது தனது கரிய நிறத்தையுடைய குஞ்சினுக்கு மிக்க பசியைத் தணிப்பான் கரிய கல்லின் உண்டான இறைச்சியை வாங்கிக் குஞ்சின் வாயிலே கொண்டு வந்து கொடுத்தது என்று சொல்லும் தன்மைக்கு ஒக்கும் என்றவாறு.

விளக்கவுரை

எனவே, நிர்விகற்பமாகிய பிரமத்திற்கு உவமை மலட்டுக்காகம். அப்பிரமத்திலே சிவான்மாவாகப் பேதித்தது என்றதற்கு உவமை அக் குஞ்சு. அந்தச் சிவான்மாவுக்குக் கன்மாதிகள் உண்டாக்கிக் கொடுத்ததற்கு உவமை கல்லின்மாம்சம்.

'மோகமானவுரை கொம்பு மூன்றொடு' எனவும் பாடம்; இதன் கருத்து மூன்று கொம்போடும்கூடி அழிவில்லாத மலட்டுக் காக்கையானது என்னும் ஆட்சேபயுக்தி எனக் கொள்க.

மாயாவாதிமதம் கூறி அதனை மறுப்பான் எடுத்துக் கொண்டார்; அதனுள், இச் செய்யுள் ஆன்மா உண்டு என்பதற்கு ஓர் பிரமாணத்தால் தொகுத்துக் கூறிற்று. (1)

செய்யுள் - 235

நீடு வேதமள வாக வேகமெனும்
நீதி தானிகழ்வ தாகுமேல்
நாடி ஞாதிருவு ஞான ஞேயமுடன்
நாளு நான்மறையு மோதலால்
ஒடு மாகுமுன தேக மோதுமிவை
யூன மாகியுரை மாறுகோன்
கூடு மாகுமநு பூதி தானுமது
கூடி டாதறிவி லாமையால்.

பதவுரை

நீடு வேதம் அளவு ஆக ஏகம் எனும் நீதிதான் நிகழ்வது ஆகும் ஏல்	அநாதியே உண்டாகிய வேதம் வரையறையாகப் பிரமம் ஒன்றே என்று சொல்லுவதாக நீ சொன்னாய்; அப்படியாயின்,
நாடி ஞாதிருவும் ஞானம் ஞேயமுடன் நாளும் நான்மறையும் ஓதலால்	அந்த வேதத்தில் ஞாதிரு ஞானம் ஞேயம் ஆகிய மூன்று முதலும் உண்டு. எனவே தெரித்து நாடோறும் சொல்லுதலால்,
ஒடு மாகும் உனது ஏகம்	நீ ஒன்று என்று சொல்லும் சொல் அவ்வேத வாக்கியம் கொண்டே பின்னிடா நிற்கும்,
ஒதும் இவை ஊனம் ஆகி உரை மாறுகோள் கூடும் ஆகும்	இன்னும் நீ பிரமம் ஒன்றே என்றும், அகம் பிரமம் என்றும் சொல்லும் சொற்கள் குற்றப்பட்டுத் தத்துவமசி என்னும் வாக்கியத்தோடு மாறுகோடலைப் பொருந்தும்,

அநுபூதி தானும் அது கூடிடாது அறிவு இலாமையால்	உனக்கு ஆன்மா இல்லை ஆகையாலே அநுபூதி தானும் உண்டாகமாட்டாது என்றவாறு.

விளக்கவுரை

அறிவிலாமையால் அநுபூதி தானும் கூடிடாது என மாறுக. நான்மறையும் என்கையால் ஆகமத்துணிவும் பெற்றது. உரை - மகாவாக்கியம். அறிவு - ஆன்மா. ஞாதிரு - ஆன்மா. ஞானம் - ஆன்மாவிற்குச் சகாயபூதமான சிவசத்தி. ஞேயம் - அந்தச் சத்தியால் அறியப்படும் பிரமேயமான சிவம்.

இச்செய்யுள் ஞான ஞேயங்களன்றி ஞாதிருவும் உண்டு என்பதனை மறுத்துக் கூறிற்று. (2)

செய்யுள் - 236

நீதி யாலொளிகொள் பானு வானதகல்
நீரி லேநிகழு மாறுபோல்
ஆதி தானுருவ மாய காயமதின்
மேவி யாவதிலை யாகுமாம்
தீதி லாவருவ மாத லானிழல்கள்
சேர வேறிடமி லாமையால்
ஒதி லோரகலி னீரி லே யொருவர்
காண லாலிலது னேகமே.

பதவுரை

நீதியால் ஒளி கொள் பானுவானது அகல் நீரிலே நிகழும் ஆறு போல்	கிரணங்களையுடைய ஆதித்தனது சாயை பாத்திரோதகங்கள் தோறும் முறைமையாலே விளங்குமா போல,
ஆதி தான் உருவம் ஆய காயம் அதில் மேவி ஆவது இலை ஆகுமாம் தீது இலா அருவம் ஆதலால்	சர்வத்துக்கும் முதலாயிருக்கிற பிரமம் குற்ற மில்லாத அரூபம் ஆகையால் உபாதி களோடும் கூடி உரூபமாகிய காயத்திலே பொருந்தி உண்டாவதில்லையாம்; அன்றியும்,
நிழல்கள் சேர வேறு இடம் இலாமையால்	பாத்திரோதகம் நிழலின்கண் இருந்தால் ஆதித்த கிரணம் செல்லாதாற் போலப் பிரமம் கூடாத காயமும் உண்டாக வேண்டும்; ஆகையாலும்,

ஒதில் ஓர் அகலின் நீரிலே ஒருவர் காணலால் இலது உன் ஏகமே	பாத்திரோதகத்திலே ஆதித்தனைக் காண்பான் ஒருவனைப் போலக் காயத்திலே பிரமத்தைக் காண்பான் ஓர் ஆன்மா உண்டாகையால் சொல்லுங்காலத்து உனது அகம்பிரமம் என்பது இல்லையாம் என்றவாறு.

விளக்கவுரை

அருவம் ஆதலாலும், இடம் இல்லாமையாலும், ஒருவர் காணலாலும் என உம்மை கூட்டுக. நிழல் சேர வேறு இடம் இலாமையால் என்பது பிரமம். அருவம் ஆதலால் நிழல் சேர்தற்கு இடமில்லையாம் என்க.

இச் செய்யுள் ஆதித்தன் சாயை பாத்திரோதகங்கள் தோறும் தோன்றுமா போலக் காயங்கள் தோறும் பிரமம் நிற்கும் என்பதனைக் காண வேறோர் ஆத்மா வேண்டும் என்று மறுத்துக் கூறிற்று. (3)

செய்யுள் - 237

வேறு வாயில்புல னோடு மேன்மனமும்
மேவி டாதுபிர மாணமும்
கூறி டாதறிவு தானெ னாவுணர்தல்
கோடு நீமுயலி னாடினாய்
ஈறி லாதபர மேக மேயென
இயம்பு நீயிசையு ஞானமும்
பேற தாவதிலை பேத மானவிது
பேண வேயுளது பேசிலே.

பதவுரை

வேறு வாயில் புலனோடு மேல் மனமும் மேவிடாது பிரமாணமும் கூறிடாது அறிவு தான் எனா உணர்தல் கோடு நீ முயலின் நாடினாய்	ஒன்றோடொன்று கூடாமல் உணரும் பொறி களும் புலன்களும் அதன்மேல் உண்டாகிய மனமும் கூடாமல் உடலில் ஓர் அறிவு தனித்து நின்று அறியா திருக்கவும், அறியும் என்று சாத்திரப் பிரமாணங்களும் சொல்லாதனவாய் இருக்கவும், நீ பிரமம் காயத்தோடு கூடித் தானே தானாய் நின்றறியும் என்று சொல்லிய அறிவு கோடு இல்லாத முயலுக்குக் கோடு உண்டு என்று அறிந்த அறிவிற்கு ஒக்கும்; அன்றியும்,

ஈறு இலாத பரம் ஏகமே என இயம்பும் நீ இசையும் ஞானமும் பேறு அது ஆவது இலை	கேடில்லாத பிரமம் சிவான்மாவுமாய் நிற்கும் என்று சொல்லுகிற நீ பொருந்தும் ஞானத்தால் உனக்குப் பயனுண்டாவதும் இல்லையாம்; அஃது எங்ஙனம்? என்னில், பரப்பிரமமே சிவான்மாவும் என நீ சொல்லுகையால்,
பேதம் ஆன இது பேணவே உளது பேசில் ஏ	நீ இங்ஙனம் சொல்லும் முறைமையின்றிப் பரமான்மாவும் அதனை அறியப்படும் சிவான்மாவும் என இரண்டு முதல் உண்டு என்று சொல்லும் முறைமையே போற்ற உளது என்றவாறு.

விளக்கவுரை

இச் செய்யுள் ஆன்மாவுக் கொழியப் பிரமத்துக்குப் பந்தம் உண்டாகாது; ஆகையால் ஆன்மா ஒன்று உண்டு என்று கூறிற்று. (4)

செய்யுள் - 238

இலகு சோதிமணி யெனவு மேகமெனின்
இதனி லேகமது விலகினாய்
குலவு காசுமொளி யதுவு நீடிவளர்
குணமு நாடுவதொர் குணியுமாம்
பலவு மானகுண மொருவு மேகமது
வெனவும் நீபகரில் நிகரிலா
உலக மானதனை உதவு மாறதிலை
உணர்வு தானுமிலை யுணரிலே.

பதவுரை

இலகு சோதி மணி எனவும் ஏகம் எனில்	மிக்க ஒளியும் மணியும் போல ஒன்றாய் இருக்கும் என்று நீ சொல்லின்,
இதனில் ஏகம்அது விலகினாய்	இந்த உவமை தன்னிலே ஒன்று என்பதனை மறுத்துக் கூறினாய்; அஃது யாங்ஙனம்? எனின்,
குலவு காசும் ஒளி அதுவும் நீடி வளர் குணமும் நாடுவது ஓர் குணியும் ஆம்	விளங்குகின்ற மணியும் பிரகாசமும் மிக உண்டாகின்ற குணமும் ஆராய்ந்து அறியத் தக்க குணியும் ஆகையால்,

பலவும் ஆன குணம் ஒருவும் ஏகம் அது எனவும் நீ பகரில்	அன்றியும் ஒன்றான பிரமமானது இச்சா ஞானக் கிரியைகளாகிய பல குணங்களை நீங்கி நிற்கும் என்று நீ சொல்லின்,
நிகர் இலா உலகம் ஆனதனை உதவும் ஆறு அது இலை உணர்வு தானும் இலை உணரில் ஏ	அந்தப் பிரமத்துக்கு இச்சா ஞானக் கிரியை களாகிய பல குணங்கள் இல்லையாகில் ஒப்பில்லாத பிரபஞ்சத்தை உண்டாக்கும் தொழில் இல்லையாய் அதனைக் காக்க வேண்டும் என்னும் அறிவும் இல்லையாம் விசாரிக்கும் காலத்து என்றவாறு.

விளக்கவுரை

மணியும் ஒளியும் குணமும் குணியும் ஆகையால் இரண்டுபடும் என்பது கருத்து.

இச்சா ஞானக் கிரியைகளை நீங்கிய நிர்விகற்பம் என்னில், இச்சா ஞானக் கிரியையோடும் கூடியே பிரபஞ்சத்தின் சிருஷ்டி திதி சங்காரம் கண்டு நடத்த வேண்டுகையால், அவை நீங்கி நிற்கும் என்னில், அறிவும் இல்லையாய்க் கர்த்தாவும் அன்றாம் என்பது கருத்து.

இராவணனையும் சகத்திர வாகுவையும் ஒன்று பல ஆனதுக்கு உவமையிட்டாய், இராவணன் ஒரு முகத்தாற் கண்டது ஒரு முகத்தாற் சொல்லுமா போல உலகத்தில் ஒருத்தன் கண்டது ஒருத்தன் அறிந்து சொல்லக் கண்டதில்லை. சகத்திரவாகுவும் பல கரங்களாலும் இயற்றப்பட்ட வில்லும் அம்பும் வலிக்கும் காலத்து வேறுபடுகை வழங்கலும் வினை ஒன்றின் மேலாம். இது அப்படி அன்று என்று கண்டு கொள்க. *(5)*

செய்யுள் - 239

புற்றி னோர்பழுதை தொக்க போதுமபிர்
புளக மாகவர விரவிலே
உற்ற தாமதனை யொக்க வேபுல
குதிக்கு மாறுமொரு சத்திலே
பெற்ற தாகுமெனி னப்பி ராந்தியுடை
யோரு மப்பிரம பேதமாய்
நிற்பர் நீபகரின் முற்று மையநிலை
பெற்று மின்பம் திலாததாம்.

பதவுரை

புற்றின் நேர் பழுதை தொக்க போது மயிர் புளகம் ஆக அரவு இரவிலே உற்றது ஆம் அதனை ஒக்கவே உலகு உதிக்குமாறும் ஒரு சத்தியிலே பெற்றது ஆகும் எனின்	புற்றின் கண்ணே கயிறு கிடப்ப, இருளிடத்தே அந்தக் கயிற்றைக் கண்டவர்க்குப் பயத்தாலே மயிர் புளகித்துப் பாம்பெனவே நினைக்கப்படுவதாம் அதுபோல, பிரபஞ்சமும் ஒப்பற்றதாகிய பிரமத்திலே தோன்றுமாறும் அதன் அயிக்கத்தாலே அப் பிரபஞ்சமும் மெய்போலத் தோன்றும் முறைமையும் பெற்றதென்று நீ சொல்லின்
அப்பிராந்தி உடையோரும் அப்பிரம பேதமாய் நிற்பர்	அங்ஙனம் மயங்கின அறிவையுடைய ஆன்மாக்களும் இச்சா ஞானக்கிரியை உண்டாய்ப் பிரபஞ்ச கிருத்தியம் செய்வதில்லை என்று நீ கூறும் பிரமத்தின் பேதமாய் நிற்பராம்,
நீ பகரில் முற்றும் ஐயநிலை பெற்றும் இன்பம் அது இலாதது ஆம்	இப்படி நீ சொல்லின் நினக்கு மிக்க மயக்க அறிவே உண்டாய்ப் பிரமம் ஆம் இன்பம் உண்டாகாது என்றவாறு.

விளக்கவுரை

பெற்றும் - உம்மை அசை.

'முற்றும் ஐயநிலை பெற்று நின்மலமிலாததாம்' எனப் பாடமாயின், முற்றும் மயக்க நிலைபெற்று நின்மலமாகையில்லையாம் எனக் கொள்க.

கயிற்றைப் பாம்பு என்று பிரமித்தது பிரமமாக வேண்டும் அதுதான் விகாரம் என்னில், கரணங்களுக்கு அறிவில்லையாம். பிரமத்தின் சந்நிதி மாத்திரத்திலே சலிக்கும் என்னில், தெளிந்த காலத்தில் சந்நிதியில் சேட்டித்தல் இல்லையாக வேண்டும். அது பின் சலித்துத் தத்துவமும் கூடாது எனக் கொள்க.

இச் செய்யுள் பிரமத்துக்கு நிர்விகாரம் என்பதனை மறுத்துக் கூறிற்று. (6)

செய்யுள் - 240

ஒதி யேயுலக மதனை நீயுநிரு
வசந மாகவுரை செய்வதென்
பேதை யோஉளது மிலது மல்லபொருள்
பேசு வாருமுள ரோசொலாய்
ஆதி யேயுளது வருத லாலிலதி
லாவ தின்மைய தழிந்துபோம்
நீதி யாலுளதி லாமை நேர்வதெனின்
நேர்மை யாகியது நின்றதே.

பதவுரை

ஒதியே உலகம் அதனை நீயும் நிருவசனம் ஆக உரை செய்வது என்	நீ வேதத்தை ஓதியிருந்தும் பிரபஞ்சத்தை முன்பு இல்லையென்றும், பின்பு நிருவசனமாகிய பிரமத்திலே தோன்றப்பட்டது என்றும் சொல்லுதல் உண்டானது என்,
பேதையோய் உளதும் இலதும் அல்ல பொருள் பேசுவாரும் உளரோ சொலாய்	ஒரு பொருள் இல்லதும் அன்று உள்ளதும் அன்று என்று சொல்லுவாரும் உளரோ? ஆகையால், அறியாதவனே! சொல்லாய்; அற்றன்று,
ஆதியே உளது வருதலால் இலதில் ஆவது இன்மையது உளது அழிந்து போம்	ஆதிதோறும் தோன்றிவருதலால் இல்லை என்பது இல்லையாய் உள்ளதானது அழிந்து போம்,
நீதியால் உளது இலாமை	பின் இல்லையாம்படி அழிந்து போம் முறைமையாலே இல்லாமை உண்டானது; ஆகையால்,
நேர்வது எனின்	உள்ளதும் இல்லாததும் பிரபஞ்சத்துக்குப் பொருந்திற்று என்று நீ கூறின்,
நேர்மை ஆகியது நின்றது ஏ	அப்படி அழிந்துபோம் பிரபஞ்சம் மீளவும் பிரமத்திலே உண்டாமிடத்து முன்பு போலத் தோன்றுகையால் அதற்கு மூலகாரணம் கிடந்து அழியாமல் நிற்கும் என்றவாறு.

விளக்கவுரை

ஒதியே உலகம் அதனை நீயும் நிருவசனமாக உரை செய்வது என் - உலகத்தை விவகார மாத்திரையாய்ச் சொல்லா நின்றாய். பேதையே - போம். அறிவில்லையோ ஒன்றை உண்டு என்குதல் இல்லை என்குதல் அல்லாத பொருள் சொல்வாரும் உண்டோ? சொல்லாய் உள்ளது முன்னே உண்டாய் வருதலால் இல்லாதது இல்லையாயே போமாதல் நீதியாலே உள்ளதல்லாதது உண்டாம் என்னில் சுருங்கி நின்றதாம் என்றவாறு.

இவ்வுரைக்கு உலகம் விவகாரம் ஒழியப் பரமார்த்தத்து இல்லை என்றதனை நிராகரித்தது எனக் கொள்க.

இச்செய்யுள் பிரபஞ்சம் அநாதியில் உள்ளதல்ல என்றதனை மறுத்துக் கூறிற்று. (7)

செய்யுள் - 241

வேற தாகியது போலி ருந்தமையில்
வெள்ளி சுத்தியெனி லையமே
கூற லாமொரு பரத்தொ டொத்தபொருள்
கொண்டு விண்டநிலை கண்டனம்
மாறி லாதுநில நீர தாகியனல்
வாயு வாகியவை மாறியும்
சேறி லாதுவிவ கார மன்றுபர
மார்த்த மாயவை செறிந்ததே.

பதவுரை

வேறது ஆகியதுபோல் இருந்தமையில் வெள்ளி சுத்தி எனில்	பொய்யாகிய பிரபஞ்சம் பிரமம்போல மெய்யாகத் தோன்றினமையால் இப்பியானது வெள்ளியை ஒக்கப் பிரகாசித்தாற் போலும் என்று கூறின்,
ஐயமே கூறலாம்	அந்த இப்பியை வெள்ளி என்று ஐயப்பட்டாற் போலப் பிரபஞ்சத்தையும் பிரமமோ? (பொய்யோ) மித்தையோ? என்று ஐயப் பட்டே சொல்லலாம்,
ஒரு பரத்தோடு ஒத்த பொருள் கொண்டு விண்டநிலை கண்டனம்	முன்பு இந்தப் பிரபஞ்சம் ஒப்பற்ற பிரமத்தோடு ஒத்த பொருளாகக் கைக் கொள்ளப்பட்டு இப்பொழுது மித்தியையாக மாறிக் கண்டனம் என்னில்,
மாறு இலாது நிலம் நீர் அது ஆகி அனல் வாயு ஆகி	நிலம் நீர் ஆகியும் அனல் வாயு ஆகியும் மாறிநில்லாது,
அவை மாறியும் சேறிலாது	நீர் நிலனாகியும் வாயு அக்கினியாகியும் மாறியும் செல்லாது,
விவகாரம் அன்று பரமார்த்தம் ஆய் அவை செறிந்தது ஏ	ஆதலால், இப்பிரபஞ்சமும் விவகாரத்திலே மெய்யாதல் அன்றிப் பரமார்த்தத்திலும் மெய்யாகச் செறிந்தது என்றவாறு.

விளக்கவுரை

வெள்ளிக்கு வேறதாகிய சங்கு (அ) கிளிஞ்சல் வெள்ளி போலத் தோன்றினது; அதுபோல் பிரபஞ்சம் எனில் சந்தேகம் சொல்லலாம்.

இச்செய்யுள் விவகாரத்தின் மெய்யாய்ப் பரமார்த்தத்தில் பொய்யாம் என்றதனை மறுத்துக் கூறிற்று. *(8)*

செய்யுள் - 242

மாய நூலதுசி லம்பி வாயினிடை
வந்த வாறதனை மானவே
ஆய தேயுலக மான தும்பிரம
மதனி லேயெனில டங்கிநின்
றேயு மாகுமொரு சித்து மத்துடன்
நிலாத தென்றுபி னியம்பின்நீ
பேய னேகடம் மிருத்தில் வந்தது
பிறப்ப தாவதிலை பேசிலே.

பதவுரை

மாயம் நூல் அது சிலம்பி வாயின் இடை வந்த ஆறு அதனை மான ஏ ஆயதே உலகம் ஆனதும் பிரமம் அதினிலே எனில்	பொய்நூலானது சிலம்பியின் வாயிடத்தே நின்று தோன்றிநின்று கெட்ட இடத்து மீளவும் அதனிடத்தே இந்த நூலாகத் தோன்றி வந்தாற்போல உலகமானதும் பிரமத்திலே தோன்றிநின்று கெட்டபின் மீளவும் பிரமத்திலே முன்புபோலே தோன்றிவரும் என்று நீ கூறின்,
அடங்கி நின்று ஏயும் ஆகும் ஒரு சித்தும்	அரூபமாய் அவிகாரம் ஆகிய பிரமமும் பிரபஞ்சத்திலே அகப்பட்டு மயங்கவும் ஆகும் ஆதலால் நீ கூறியது உவமை அன்று,
அத்துடன் நிலாதது என்று பின் இயம்பின் நீ	அந்த நூலாகிய சேடத்துக்குள் அச்சிலம்பி அகப்படாது நின்றாற்போலப் பிரபஞ்சம் ஆகிய சேடத்துக்குள்ளும் பிரமம் கூடி நில்லாது காரணமாய் நிற்கும் என்று கூறின்,
பேயனே கடம் மிருத்தில் வந்தது பிறப்பது ஆவது இலை பேசில் ஏ	அறியாதவனே! கடத்துக்கு மண் காரணமாய் இருக்கவும் காரணமாகிய மண்ணில் கடம் தானே தோன்றாது; தோன்றுமிடத்து ஆதி காரணமாகிய மண்ணும், நிமித்த காரணமாகிய குலாலனும், துணைக் காரணமாகிய திரிகையும் கூடித் தொழில் செய்யக் கடம் தோன்றுமாபோலப் பிரபஞ்சத்துக்கும் ஆதிகாரணம் உண்டாய்த் தோன்றவேண்டும் என்றவாறு.

விளக்கவுரை

எனவே, ஆதிகாரணம் இன்றிப் பிரமமே ஆதிகாரணமாகத் தோன்றும் என்னில் சித்திலே அசித்துத்தானே தோன்றாது என்பது கருத்து.

மிருத்து - மண். மாயநூல் என்பது - இல்லாதொன்று தோன்றுவது. மாயை என்பது அவன் கருத்து ஆதலினால் 'மாய நூல்' என்றான். 'பேயனே படம்' என்பது பாடமாயின், புடைவையானது மண்ணினிடத்து உண்டாகாது எனப் பொருள் கொள்க. அஃதாவது ஒன்றின் காரணத்தில் ஒன்றின் காரியம் உண்டாகாது என்பதாம்.

இச்செய்யுள் 'பிரபஞ்சத்துக்குக் காரணம் பிரமம்' என்பதனை மறுத்துக் கூறிற்று. *(9)*

செய்யுள் - 243

வேற தாகுமுரு வத்தி லேபரம்வெ
ளிப்ப டும்மென விளம்பின்நீ
ஊறி லாவுருவ சத்தி லேபிரம
முண்டு தானுணர்வி லாததென்
மாறி வாயுவும் மனாதி யானவையும்
வந்தி டாமையினி லின்றெனில்
ஈறு தானுடைய தாய தோபிரம
மென்கொ லோவிவையி றப்பதே.

பதவுரை

வேறது ஆகும் உருவத்திலே பரம் வெளிப்படும் என விளம்பில் நீ	வன்னபேதமாகிய வேற்றுமைப்பட்ட உருவத்திலே பிரமம் வெளிப்பட்டு நிற்கும் என்று நீ கூறின்,
ஊறு இலா உரு அசத்திலே பிரமம் உண்டு தான் உணர்வு இலாதது என்	குற்றமில்லாத ஜடத்தினிடத்திலே பிரமம் உண்டாயிருக்க அந்த ஜடம் அவத்தைப்பட்ட இடத்து அறிவின்றிக் கிடப்பானேன்?
மாறி வாயுவும் மனாதி ஆனவையும் வந்திடாமையினில் இன்று எனில்	வாயுவும் அந்தக்கரணங்களும் நீங்கி வந்து கூடாமையினாலே அறிவில்லையானது என்று கூறின்,
ஈறு தான் உடையது ஆயதோ பிரமம் என் கொல் ஒ இவை இறப்பது ஏ	பிரமத்தின் அறிவு கெடத்தக்கதாயிற்றோ? அதுவுமின்றிப் பிரமம் நிற்க வாயுவும் அந்தக் கரணங்களும் நீங்கிய ஆயினவோ? ஆதலால், பிரமம் அறிவும் அறியாமையுமாகி உருக்களிலே நில்லாது என்றவாறு.

விளக்கவுரை

இச் செய்யுள் 'பிரமம் உருவை எடுத்து நிற்கும்' என்பதனை மறுத்துக் கூறிற்று. *(10)*

செய்யுள் - 244

பற்ற தின்றியுடல் நின்றி டும்பரம்
எனப்ப கர்ந்தனை பரிந்துடன்
உற்று டம்புநரை திரைக ணோய்சிறை
உறுப்ப ழிந்தவையு முள்ளபின்
குற்ற மென்றிதனை விட்டி டாதுவிட
வென்ற லுங்குலைவு கொண்டிடும்
பெற்றி கண்டுமொரு பற்ற றும்பரிசு
பேச வேயுளதுன் ஆசையே.

பதவுரை

பற்று அது இன்றி உடல் நின்றிடும் பரம் என பகர்ந்தனை	*பிரமமானது காயத்திலே நின்றதாயினும் அக்காயத்தோடு பற்றில்லாமல் நிற்கும் என்று கூறினாய், அஃது அங்ஙனமாயின்,*
பரிந்து உடன் உற்று உடம்பு நரை திரைகள் நோய் சிறை உறுப்பு அழிந்து அவையும் உள்ள பின் குற்றம் என்று இதனை விட்டிடாது	*பிரமம் ஆர்வத்துடனே கூடி நின்ற உடம்பு நரை திரை நோய் சிறை இவையிற்றினால் உறுப்பழிவு உண்டான பின்பும் இவ் வுடம்பைப் பொல்லாதது என்று நீங்கி நிற்க மாட்டாது,*
விட என்றலும் குலைவு கொண்டிடும்	*அவ்வுடல் நீங்கப்படும் என்னும் இடத்தும் மிகவும் வியாகுலப்பட்டு நடுநடுங்கா நிற்கும்; ஆகையால்,*
பெற்றிகண்டும் ஒரு பற்று அறும் பரிசு பேசவே உளது உன் ஆசை ஏ	*இப்படிக் காயத்தோடும் பற்றி நிற்கும் முறைமையை எவ்விடத்தினும் கண்டிருந்தும் காயத்தோடு பிரமத்துக்குப் பற்றில்லை என்று உன் ஆசையால் சொல்ல உள்ளதன்றிப் பற்றுவிட்டதில்லை என்றவாறு.*

விளக்கவுரை

இச் செய்யுள் 'காயத்தோடு பிரமத்துக்குப் பற்றில்லை' என்பதனை மறுத்துக் கூறிற்று. *(11)*

செய்யுள் - 245

சோதி மாமணிக ளூடு போனதொரு
நூலு மானநிலை சொல்லிடும்
நீதி யான்மணிகள் பேத மாகியொரு
நூலி னின்றமை நிகழ்த்தினாய்
ஆதி தானொருவ னாகி யேபல
அனந்த யோனியி லமர்ந்தவன்
பேதி யாதநிலை பேசி னாயுலகு
பேத மேயிலத பேதமே.

பதவுரை

சோதி மா மணிகள் ஊடு போனது ஒரு நூலும் ஆன நிலை சொல்லிடும் நீதியால் மணிகள் பேதம் ஆகி ஒரு நூலின் நின்றமை நிகழ்த்தினாய்	பிரகாசத்தை யுடைய மிக்க பல மணிகளுக் குள்ளே உருவி ஒன்றாய் நின்ற நூலையும் சொல்லத்தக்க முறைமையிலே கோத்த மணிகளின் நிறமாகப் பேதித்து ஒரு நூலிலே பேதப்பட்டு நின்றமையும் போலப் பிரமத்துக்கும் பிரபஞ்சத்துக்கும் உவமை கூறினாய்; அங்ஙனம் கூறிய உவமையால்,
ஆதி தான் ஒருவன் ஆகியே பல அனந்த யோனியில் அமர்ந்தவன் பேதியாத நிலை பேசினாய்	கர்த்தாவானவன் ஒருவனாய்ப் பல பேதப்பட்டு எண்ணிறந்த யோனிகள்தோறும் நின்றவன் பேதியாத நிலையே கூறினாய்; ஆகையால்,
உலகு பேதமே இலது அபேதம் ஏ	மணிகள் பேதம் போலப் பிரபஞ்சம் பேதமாக உள்ளது பிரமத்துக்குப் பேதம் இலதாம் என்றவாறு.

விளக்கவுரை

எனவே, பிரமம் சிவான்மாவாகவும், பரமான்மாவாகவும் பேதிக்கும் எனவும் கூறி; இவ்விடத்துப் பிரமம் பேதியாது எனவும் கூறியது வழுவாம். உலகானது பேதம் என்றபடியோ? இல்லையாகில் அபேதம் என்றபடியோ? சொல்லாய், இதனால், நீ அபேதம் என்றது விருத்தமாம். பேதமே உள்ளதென்க.

இச்செய்யுள் 'பிரபஞ்சமே பேதமாவது பிரமத்துக்குப் பேதமில்லை' என்பதனை மறுத்துக் கூறிற்று. (12)

செய்யுள் - 246

ஒத்து நின்றுடலி னின்ப துன்பமவை
உற்று முற்றிடுவ தின்றெனும்
பித்த வுன்னுரையி னுற்ற தேயிலது
பெற்ற தின்றிலது பெற்றதேல்
துய்த்த லென்னுறுதல் சீவ பாவமது
சொல்லினொன் றினுந்தோய் விலாமைநீ
வைத்து நித்தமன வாக்கி றந்தபர
மென்ன மானமிலை யின்னமே.

பதவுரை

ஒத்து நின்று உடலின் இன்ப துன்பம் அவை உற்றும் உற்றிடுவது இன்று எனும் பித்த	அஞ்ஞானமாகிய காயத்தோடு கூடிப் பிரமமும் அஞ்ஞானமாய்ச் சுகதுக்கங்களை அநுபவித்து நிற்கவும் பிரமம் காயத்தோடு கூடுவதில்லை என்று சொல்லும் பேயனே! நீ அநுபவமில்லை என்னும் வார்த்தை,
உன் உரையின் உற்றதே	உன் சாத்திரத்திலேயும் பொருந்தினதே,
இலது பெற்றது இன்று இலது	சாத்திரத்தின் அல்லது அனுபவத்தினும் அல்லாமல் உண்டானதல்ல; அஃதன்றியும்,
பெற்றதேல்	அனுபவத்தினும் இல்லாமல் உண்டான தாயின்,
துய்த்தல் என உறுதல்	காட்சியிலே நீ அநுபவத்தை உறுவானேன்,
சீவ பாவம் அது சொல்லின்	பரமான்மா அநுபவிப்பதில்லை, ஜீவான்மாவினுடைய பாவனை என்று நீ கூறின்,
ஒன்றினும் தோய்வு இலாமை நீ வைத்து நித்தம் மன வாக்கு இறந்த பரம் என்ன மானம் இலை இன்னம் ஏ	இப்படி அநுபவிக்கிற ஜீவான்மாவை ஒன்றினும் தோய்விலாத பரமான்மாவாகக் கொண்டு நித்தமாய் மனவாக்கு இறந்தது என்றும் அகம்பிரமம் என்றும் சொல்ல உனக்கு வெட்கமில்லை இன்னமும் என்றவாறு.

விளக்கவுரை

'உன்னுரையில் உற்றதே இலது பெற்றதின்றிலது பெற்றதே' என்பது உன்னுடைய வசனத்துக்குப் பெற்றது ஏதெனில்? அதில் பற்றற்று நிற்கையாகிய

இல்லாமை பெற்றதில்லையாம். பற்றில்லாமை பெற்றதாகில் புசிப்பற்றிருக்க வேண்டும்.

இச்செய்யுள் பரமான்மா சீவான்மாவாய் நின்று புசிக்கும் என்பதனை மறுத்துக் கூறிற்று. *(13)*

செய்யுள் - 247

எங்கு நின்றிடி லவத்தை யின்றிடும்
இசைந்தி டுங்கரண மென்னில்நீ
அங்கு நின்றபர மெங்கொ ளித்தது
நின்ற தேலவை யடங்கிடா
இங்கு நின்றதொரு காந்த மானகல்
இரும்பு சந்நிதி யியங்குநேர்
தங்கி நின்றதெனி னீங்கி மீளும்வகை
தங்கி டாதுனுரை தப்பதே.

பதவுரை

எங்கும் நின்றிடில் அவத்தை இன்றிடும்	பிரமம் ஜீவான்மாவாய்க் காயந்தோறும் நிறைந்து நிற்கும் என்று கூறின் நீ கூறிய அவத்தையில் அகப்பட்டு அடங்குவதில்லை யாம்,
இசைந்திடும் கரணம் என்னில் நீ	அப்படி அவத்தைப்படுவது ஜீவான்மா அன்று அந்தக் கரணங்களினது சம்பந்தம் என்று நீ கூறின்,
அங்கு நின்ற பரம் எங்கு ஒளித்தது	கரணங்கள் அவத்தையைப் பொருந்தி இடத்து அவ்விடத்து நின்ற ஜீவான்மா எங்கே மறைந்து நின்றது,
அது நின்றதேல் அவை அடங்கிடா	அந்தக்கரண நாயகன் ஆகிய ஜீவான்மா அவ்விடத்து நின்றதாயின் அவன் வழித்தாய கரணங்களும் அடங்க மாட்டா,
இங்கு நின்றது ஒரு காந்தம் ஆன கல் இரும்பு சந்நிதி இயங்கும் நேர் தங்கி நின்றது எனில்	அற்றன்று; இவ்விடத்து உண்டானது ஒரு காந்தக்கல்லின் சந்நிதியிலே இரும்பு அசைந்து அடங்கும் தன்மைபோல, ஜீவான்மாவின் சந்நிதியிலே அந்தக் கரணங்களும் சேட்டைப் பட்டு அடங்கின என்று நீ கூறின்,

நீங்கி மீளும் வகை தந்திடாது உன் உரை தப்பு அது ஏ	நீ கூறிய இரும்பு காந்தத்தோடு கூடினால் காந்தத்தை இரும்பு நீங்கமாட்டாத தன்மை போல அந்தக்கரணங்களும் ஜீவான்மாவோடு கூடினால் நீங்கப்படாது ஆகையால் நீ கூறிய உவமையும் பிறழக் கூறினாயாம் என்றவாறு.

விளக்கவுரை

இச் செய்யுள் 'கரணங்கள் அவத்தைப்படும்' என்பதனை மறுத்துக் கூறிற்று.

(14)

செய்யுள் - 248

இருள்பொ திந்ததொரு பரிதி யிவ்வுலகில்
இசையி லின்றுடல நானெனும்
மருள்பொ திந்ததொரு பிரம மிங்குளது
மருவி நின்றவுரு வொருவியே
தெருள்பொ திந்துபரம் நானெ னுந்தெளிவு
சென்ற போதுகதி யென்றிடும்
பொருள்பொ திந்ததெனி லமல னுக்குமலம்
வருத லாலுளது புன்மையே.

பதவுரை

இருள் பொதிந்தது ஒரு பரிதி இ உலகில் இசையில் இன்று உடலம் நான் எனும் மருள் பொதிந்தது ஒரு பிரமம் இங்கு உளது	இருளால் மூடப்பட்டதோர் ஆதித்தன் இந்த உலகின்கண் உண்டாகி நின்றதனை ஒக்கும் காயங்கள்தோறும் நான் என்று மருட்சியாலே மூடப்பட்ட பிரமம் இவ்விடத்து உண்டாய் நின்றது,
மருவி நின்ற உரு ஒருவி ஏ	அப்படி மருட்சி பொருந்தி நின்ற காயம் நீங்கி,
தெருள் பொதிந்து பரம் நான் எனும் தெளிவு சென்றபோது கதி என்றிடும் பொருள் பொதிந்தது எனில்	அறிவு சூழப்பட்டுப் பரப்பிரமம் நானே என்னும் தெளிவு உண்டான பொழுது முத்தியாய் நிற்கும் பொருளும் தானாம் என்று கூறின்,
அமலனுக்கு மலம் வருதலால் உளது புன்மையே	மலரகிதமாகிய பிரமத்துக்கு மலம் கூடுதலும் நீங்குதலும் உண்டாகையாம் என்று நீ கூறிய உரை வெளிற்றுரை என்றவாறு.

விளக்கவுரை

உளது புன்மையே என்பது - நின்மலமாயிருக்கிற பிரமத்துக்கு மலமானது கூடுதலால் ஆபாசமாகை உண்டாம் என்க. இது கூடாது என்பது கருத்து.

இச்செய்யுள் 'பிரமந்தானே மருட்சியால் ஜீவான்மா என்றும், தெருட்சியால் பரப்பிரமம் என்றும் நிற்கும்' என்பதனை மறுத்துக் கூறிற்று. (15)

செய்யுள் - 249

சுத்த மானது பரத்தி னுக்கணைவ
தின்று சுத்தமத நாதிநீ
வைத்த மாயமுறு சித்த சுத்தமுற
மற்ற தற்குமலம் வைத்தனை
ஒத்த சீவன்மல கன்ம மாயையுறு
கின்ற காரண முணர்ந்திடாய்
பித்த னேவிறகி னிற்பி றப்பதெரி
யென்னில் வேறுபொருள் பெற்றதே.

பதவுரை

சுத்தம் ஆனது பரத்தினுக்கு அணைவது இன்று சுத்தம் அது அநாதி	பரப்பிரமத்துக்குப் புதிதாகச் சுத்தம் உண்டாயது அன்று அநாதியே சுத்தம் உள்ளது,
நீ வைத்த மாயம் உறு சித்து அசுத்தம் உற மற்று அதற்கு மலம் வைத்தனை	நீ ஜீவான்மா என்று பிரமத்திலே பேதித்துச் சொல்லப்பட்ட சித்தானது மயக்கமுற்று அசுத்தத்தைப் பொருந்தவே அதன் பேதமாகிய பரப்பிரமத்துக்கு மலம் உண்டென்று தோற்றுவித்தனை,
ஒத்த சீவன் மல கன்ம மாயை உறுகின்ற காரணம் உணர்ந்திடாய் பித்தனே	காயத்தோடு பொருந்தின ஆன்மா மலமும் கன்மமும் மாயையும் கூடி அநுபவிக்கும் காரியத்துக்கு காரணமாகிய முதலை அறியாய் ஆதலால் பேயனே! நீ அற்றன்று,
விறகினில் பிறப்பது எரி என்னில்	விறகிலே அக்கினி மறைப்புண்டு நின்று தோன்றிப் பிரகாசித்தாற்போலக் காயத்திலே மறைப்புண்டு நிற்கும் பொழுது ஜீவான்மா என்று நின்று பிரகாசிக்கும் பொழுது பரப்பிரமமாக நின்று பிரகாசிக்கும் என்று கூறின்,
வேறு பொருள் பெற்றது ஏ	ஓர் அக்கினி இரண்டாகப் பிரிந்து விறகிலே நிற்பதன்றி வேறொரு பொருளாய்த் தோன்றுமா போல ஜீவான்மாவும் வேறொரு முதல் என்று அறிவாயாக என்றவாறு.

விளக்கவுரை

வேறு பொருள் பெற்றதே என்பதற்கு - விறகில் நெருப்புத் தோன்றும் தன்மை என்பையாகில் அந்நியப் பொருளைக் காட்டி நிற்கும்.

இச் செய்யுளும் 'மருட்சியால் ஜீவான்மாவுமாய், தெருட்சியால் பரப்பிரமமும் ஆம்' என்பதனை மறுத்துக் கூறிற்று. (16)

செய்யுள் - 250

உன்னி னீயுமநு போக மென்றபொழு
துற்றி டுந்துவித மற்றதிங்
கென்னி லில்லையெனி லில்லை நீயுமறி
வின்மை கண்டவிட முண்மையேல்
மன்னு மோருணர்வு வந்தி டும்முணர்வெ
லாமு மாயையெனின் மாயையே
சொன்ன தோர்பிரம மாயி டும்பிரமம்
மாயை யாயறிவு சோருமே.

பதவுரை

உன்னின் நீயும் அநுபோகம் என்ற பொழுது உற்றிடும் துவிதம்	நானே நானாய் அநுபவிப்பன் என்னும் இடத்துப் பெறுவானும் அநுபவிப்பதும் உண்டாய் இரண்டாம்,
மற்று அது இங்கு என்னில் இல்லை எனில் இல்லை நீயும்	பெறுவானாக என்னிடத்தில் கண்டதில்லை என்னில் பேறாகிய நீயும் இல்லையாம்,
அறிவு இன்மை கண்ட இடம் உண்மையேல் மன்னும் ஓர் உணர்வு வந்திடும்	அஞ்ஞானம் கெட்ட இடமே உண்மை என்று நீ கூறின் அந்த மயக்க அறிவுகெட்டுக் கூடு மிடத்து ஆன்ம அறிவு சிறிது உண்டா யிருக்கும்; அற்றன்று,
உணர்வு எலாமும் மாயை எனில்	அப்படி அறியும் அறிவெல்லாம் மாயை அறிவாம் என்று கூறின்,
மாயையே சொன்னது ஓர் பிரமம் ஆயிடும்	மாயை நீங்கின இடத்தில் தோன்றும் அறிவும் மாயை அறிவு என்னின் அந்தப் பிரமம் மாயை ஆகவேண்டும்,
பிரமம் மாயை ஆய் அறிவு சோரும் ஏ	ஆகையால் பிரமமும் மாயையாய் அம்மாயை யாலே அறிவும் கெடும் என்பதே ஆம் என்றவாறு.

விளக்கவுரை

இச் செய்யுள் 'பெறுவான் இன்றியே அநுபவம் உண்டு' என்பதனை மறுத்துக் கூறிற்று. (17)

செய்யுள் - 251

ஆர ணங்கள்தரு தத்து வம்மசி
பதங்க ளின்பொரு ளறிந்திடாய்
கார ணம்மதுவு நீயு மென்றிருமை
கண்டு வேறதின்மை கருதிடாய்
நார ணன்பிரம னாலு நாடரிய
நாய கன்கழல்கள் நண்ணிநீ
ஏர ணைந்துபொலி சாத னங்கள்கொடு
யோக ஞானமு மியற்றிடே.

பதவுரை

ஆரணங்கள் தரு தத் துவம் அசி பதங்களின் பொருள் அறிந்திடாய்	வேத முடிவிலே சொல்லப்பட்ட 'தத்துவமசி' என்னும் மகாவாக்கியத்தையும் அதனால் தரிசிக்கப்பட்ட பத பதார்த்தங்களையும் அறியாய்,
காரணம் அதுவும் நீயும் என்று இருமைகண்டு வேறது இன்மை கருதிடாய்	காரணமாகிய கர்த்தாவும் காரியமாகிய ஆன்மாவும் இரண்டு பட்டு நின்றமையும் கண்டு கூடிநிற்கும் அதுவும் அறிந்திடாய்; ஆகையால்,
நாரணன் பிரமனாலும் நாட அரிய நாயகன் கழல்கள் நண்ணி நீ ஏர் அணைந்து பொலி சாதனங்கள் கொடு யோக ஞானமும் இயற்றிடு ஏ	பிரம விஷ்ணுக்களாலும் நாடுதற்கரிய கர்த்தாவினுடைய திருவடிகளைப் பொருந்துதற்கு அழகு பொருந்திப் பொலிவினையுடைத்தாகிய சிவசாதனங்களையும் பொருந்திக் கொண்டு யோக ஞானங்களை அறிந்து செய்வாயாக என்றவாறு.

விளக்கவுரை

எனவே, யோகத்தாலே மனத்தைப் பிரித்து ஞானத்தாலே திருவடியைச் சேர்க என்பது கருத்தாம்.

இச்செய்யுள் மாயாவாதியை அமைதியாக்கிப் 'பெறுவானும் பேறும் உண்டு' என அறிவித்தது.

'ஏகனான்' என்னும் செய்யுள் முதல் இச் செய்யுள் காறும் மாயாவாதி மதத்தை மறுத்துக் கூறிற்று. *(18)*

பதினொன்றாவது மாயாவாதி மதமறுதலை முற்றிற்று.

பாயிரம் உள்படத் திருவிருத்தம் – 251.

மாயாவாத மறுப்புத் தொகுப்பு

இம்மத மறுப்பு சிவஞான சித்தியார் பரபக்கத்தில் பதினெட்டுப் பாடல்களில் மறுத்துரைக்கப்படுகிறது.

பிரமம் மயங்கும் என்பது

பிரமம் விகாரமற்றது எனக்கூறி மீளவும் அதுமயங்கி உயிராக வேறுபட்டது என்றும், அவ்வுயிர்க்கு முன்பு ஒரு முதலும் இல்லாததொருவினை கூடிற்று என்று கூறுவதும் மயக்காம்: இவ்வாறு கூறுவது ஒரு மலட்டுக்காகம் அழுகின்ற தன் குஞ்சுக்கு அதன் பசியை நீக்கக் கல்லில் உண்டாய இறைச்சியைக் கொடுவந்து தந்தது போலாம். (மலட்டுக்காகம் - பிரமம்; குஞ்சு - உயிர்; இறைச்சி - வினை).

உலகம் உள்பொருள்

பிரமம் ஒன்றே உள் பொருள். அது ஒன்றாயும், பலவாயும் காணப்படுவது தோற்றமேயாகும் என்பர்.

பிரமத்திலிருந்து உலகம் தோன்றியதாகக் கொள்ளலாம் எனின், பிரமம் அறிவுடைய பொருள், உலகம் அறிவற்ற பொருள், அறிவுடைப் பொருளிலிருந்து அறிவற்ற பொருள் தோன்றியது என்பது பொருந்தாது. இவ்வறிவற்ற பொருளான உலகைத் தோற்றுவித்ததும் ஓர் அறிவற்ற பொருள் எனக் கொண்டால், மூலப் பொருள்கள் இரண்டு என்ற நிலை ஏற்படும். மேலும் மூலப் பொருள்கள் ஒன்றே எனும் உபநிடதக் கூற்றுக்கு வேறுபடும். இவ்விதம் கூறும் இரண்டாவது மூலப் பொருள் பிரமத்திற்குப் புறம்பானதல்ல எனில், அது பிரமத்தின் ஒரு பகுதியாகவோ, அல்லது பிரமம் முழுவதுமாகவோ ஆதல் வேண்டும். இதுவும் பொருந்தாது. அறிவுடைப் பொருளாகிய பிரமமும், அறிவற்ற பொருளைப் போன்று பகுதிகளையுடையது என்ற நிலை ஏற்படும். பகுதிகளையுடைய பொருள் அழியும் தனமையது. எனவே பிரமமும் அழிந்துபடும். பிரமம் முழுவதும் அறிவற்ற பொருள் எனக் கொண்டால் பிரமம் உலகாக மாறி உலகத் தோற்றத்திற்குப் பின் பிரமம் என்ற ஒன்று இல்லையாகும். எனவே இதுவும் பொருந்தாது.

இவ்வுலகம் உயிர் தம் வினைப் பயன்களை நுகர்வதற்காக இடையிட்டுப் படைக்கப் பட்டதாகும், எனில். எல்லா உயிர்களும் வீடு பேற்றை அடையும் பொழுது உலகம் இல்லையாக வேண்டும். இவ்விதம் தொடக்கத்திலும் முடிவிலும் இல்லாத தொன்றை இடையில் மட்டும் இருப்பதாகக் கொள்வது பொருந்தாது. உலகம் ஒரு தோற்றம் என்பதைக் கயிறு, பாம்பாகத் தோன்றும் உவமை கொண்டு விளக்குவர். (கயிறு - பிரமம், பாம்பு - உலகம்) இவ்வுவமையில் இரண்டும் உள் பொருளாகும். ஆனால் பிரமம் உலகம் எனும் இரண்டில் உலகம் இல் பொருளாகும்:

பிரமம் உள் பொருளாகும். எனவே இவ்வுவமை பொருந்தாது. மேலும் கயிற்றைப் பாம்பாகக் காணுதற்கு ஒருவன் வேண்டும். ஆனால் பிரமம் உலகமாகத் தோன்றுவதைக் காண யார் உளர்? என்ற வினா எழும். பிரமத்திற்குப் புறம்பாக ஒரு பொருளும் இல்லை யாகலின் பிரமத்திற்கே பிரமம் உலகாகத் தோன்றுவ தொன்றாகும்.

பிரமம்

மறை பிரமம் ஒன்றே உளது எனக் கூறும் என்றனை. ஆனால் அம்மறை உயிர், அதற்குத் துணை நிற்கும் ஞானம் அதனால் அறியப்படும் சிவம் ஆகிய மூன்றும் உளவென்று கூறுகின்றதை அறிந்திலை. 'அது நீயானாய்' எனும் தொடரே உயிர். பிரமம் ஆகிய இருபொருள் உண்மையைக் குறிக்கின்றது.

ஆதித்தனின் நிழல் நீருடைய பாத்திரங்களில் தோன்றுவது, அது வடிவுடையதாலேயாம். ஆனால், பிரமமோ அருவாயது. அவ்வருவம் உருவமாய வுடலில் எங்ஙனம் பொருந்தும்? அன்றியும் அவ்விரண்டும் அல்லாத கதிரவனது நீரில் காணும் நிழலை வேறொருவன் பார்த்தே அறிதல் வேண்டும். அது போல உடலில் இருக்கும் பிரமத்தை அப்பிரமத்தின் வேறாய ஒருவனே காண வேண்டும். அவ்வாறாக பிரமம் ஒன்றே உள்பொருள் என்றல் தவறாகும்.

பொறிகளும், புலன்களும், மனமும் கூடவே உடலில் உயிர் அறியும், அங்ஙனமாகப் பொறி, புலன் முதலியவை இல்லாத பிரமம் உடலில் கூடி அறியும் என்றல் எங்ஙனம்? அங்ஙனம் கூறுவது கோடற்ற முயலுக்குக் கோடு உண்டென்றல் போலவாம். அன்றியும் கேடில்லாத பிரமமும், ஏகமாய் நிற்கும் என்று கூறுவதால் அதனால் உயிருக்குப் பயன் ஏதும் இல்லையாம்.

ஒளியும் மணியும் போல் ஒன்றாக இருக்கு மெனின், அவ்விரண்டும் குணமும், குணியுமாதலால் இரண்டாவதன்றி ஒன்றாவதில்லை. ஒன்றாய் நிற்கும் பிரமம், அறிவு இச்சை செயல் ஆகிய மூன்றையும் நீங்கி நிற்குமெனில், அத்தகைய பிரமம் உலகைத் தோற்று விக்கும் தொழிலையும் காக்கும் அறிவையும் பெற்றிருத்தல் எங்ஙனம்?

உலகம்

இவ்வுலகு முன்பு இல்லையாய்ப் பின்பு உள்ளதும் இல்லதுமாய பிரமத்திலே தோன்றிற்று எனின், ஒரு பொருள் இல்லதுமன்று, உள்ளதுமன்று என்று யாவரும் சொல்லார்.

இப்பியானது வெள்ளியை ஒப்ப ஒளிவிடுவது போல, இவ்வுலகும் பிரமம் போல மெய்யாகத் தோன்றுகின்றது எனின், இப்பியை வெள்ளி என்று ஐயப்பட்டாற்போல இவ்வுலகையும் பிரமமோ அன்றி மயக்கமோ என்று ஐயுறலாம். முன்பு பிரமம் போல் இருந்த உலகம் பின்பு மாயையாகக் காணப்பட்ட

தெனின், ஒன்று ஒன்றாக மாறுதல் என்பது எங்ஙனம்? ஆதலின் வீடு பேற்று நிலையிலும் இவ்வுலகம் மெய்யேயாம்.

இருளில் கயிறு பாம்பாகவும், ஒளியில் கயிறு கயிறாகவும் தெரிவதுபோல, வீட்டு நிலையில் பிரமம் பிரமமாகவும், கட்டு நிலையில் இப்பிரமத்தினின்றும் தோன்றிய உலகாகவும் தெரிகின்றதெனில், அவ்வுவமையே தவறாகின்றது. உவமையில் பழுதென்ற ஒன்றுதான் பிறிதொன்றாகக் காட்சியளிக்கின்றது. அங்குப் பொருள் ஒன்றேயாக இருக்கிறது. ஆனால் இங்கே கட்டுநிலையில் தெரியும் உலகும் உலகாக உள்ளது. வீட்டு நிலையில் உள்ள பிரமமும் பிரமமாக உள்ளது. எனவே இரு பொருளும் உளதாகின்றன. ஆதலின் இவ்வுவமை பொருத்தமின்றாம். அன்றியும் காணும் உலகைப் பொய்யென்றலும், காண்டல் விரோதமாகும். வீட்டு நிலையில் உயிர்க்கு உலகம் தோன்றாது என்பது உண்மையே. ஆனால் அவ்வுயிர்க்குப் புலனாகாத நிலை, அது பிரமத்தோடு ஒன்றியதாலேயாம். ஆயினும் அப்பொழுதும் உலகம் இல்லாமலில்லை.

சிலந்தியினிடத்து நூல் தோன்றினும் அந்நூலை மீண்டும் அது தன்பால் ஒடுக்கும் ஆற்றல் உடையதன்று. ஆனால் பிரமமோதன்கண் தோன்றிய உலகை மீண்டும் தன்பால் ஒடுக்கிக் கொள்ளும் தகையது. அதனால் சிலந்தி உவமையாகாது.

நிறமுடைய மணிகளினூடு இருக்கும் நூலைப் பேதமற்ற பிரமத்திற்கு ஒப்புமை கூறின், நூலும் மணியும் தாமாகக் கோர்க்கப்படுவதில்லை. பிறிதொருவர் கூட்டவே கோர்க்கப்படும். அதுபோல, பிரமத்தையும், அதினின்று தோன்றுகின்ற உலகையும் இணைத்துக் காண வேறொருவன் வேண்டும். அன்றியும் நூல் அறிவற்றதும், பிரமம் அறிவுடையதும் ஆதலின் இவ்வுவமையும் பொருந்துவதன்றாம்.

உயிர் கனவு, நனவுநிலைகளைப் பெற்றுத் துன்புறுதல் வினைப்பயனாலாம். பிரமமே இவ்வுயிராயின் அவ்வாறு துன்பப்படக் காரணமில்லை.

தத்துவ மசி என்பதற்கு 'அது நீ ஆகின்றாய்' என்பதே பொருளாகும். இரண்டறக் கலந்த நிலையில் அதனின் வேறாகாது உயிர் நிற்கும் என்பதே இதன் பொருளாகும். 'நான் நோயாய்க் கிடந்தேன்' என்றவிடத்திலும் நோயும் கிடந்தவனும் ஒன்றெனக் கருதுதல் ஆகாது. அதுபோல 'அது நீயாகின்றாய்' எனின் இரண்டும் ஒன்றல்ல என அறியத் தக்கதாம்.

இம் மாயாவாத மதத்தின் கருத்தை உமாபதி சிவம் சங்கற்பநிராகரணத்திலும் கூறி மறுத்துள்ளார்.

பாற்கரியன் மதம் முன்னுரை

	வகை	புறச்சமயங்கள் ஆறனுள் மூன்றாவதாக வைத்து எண்ணப்படும் ஏகான்ம வாதத்தின் நான்கு பிரிவுகளில் ஒன்று. ஏகான்மவாதம் கேவலாத் வைதம் என அத்வைதத்தில் வகைப்படுத்தப்பட்டு சங்கரர், வியாத முனிவர் போன்றவரால் இயற்றிப் பேணப்பட்ட மத வரிசைகளில் வருவனவாம்.
2.	பெயர்க்காரணம்	சங்கரர்க்குப் பின் தோன்றி பிரமசூத்திரத்திற்கு உரை எழுதியோரில் ஒருவரான பாஸ்கரர் என்பவர்தம் கொள்கையே பாற்கரியவாதம் எனப்பட்டது.
3.	வேறுபெயர்	பரிணாம மாயாவாதம்.
4.	கொள்கைகள்	அறிவுடைப் பொருளும், அறிவில் பொருளுமாய அனைத்தும் பிரமத்தின் பரிணாமமேயாம். இவ்வாறு அதன் வளர்ச்சியே அவை என்பதை அறியாமையால் உயிர் பிறப்பு நிலையில் கட்டுற்றது. வேதாந்தத்தின் (உபநிடதத்தின்) அறிவால் உடலின் வேறாய உயிர்களிடத்துத் தன்னியல்பு விளங்கும். அதுவே பிரமம் என உணர்ந்து ஒன்றுபடுவதே வீடுபேறாகும். பிரமத்தில் இருதன்மைகள் உள்ளன. 1. போக்கிய சக்தி 2. போத்திரு சத்தி. முன்னையது உடல், கருவி, உலகு, நுகர்வாக மாறும். பின்னையது அவற்றை நுகரும் உயிராகத் திரியும்.

ஏகான்மவாதம் 12.(க) பாற்கரியன் மதம்

அறுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்

செய்யுள் - 252

மன்னு மறையின் முடிவென்று
மாயா வாதி யுடன்மலைந்து
பின்ன மாகிப் பிரமத்தைப்
பேதா பேதஞ் சாதித்துப்
பன்னு மொருநூ லதுவாகப்
பாரின் மீது பாற்கரியன்
சொன்ன விதனை யிந்நூலி
னகத்தே தோன்றச் சொல்லுவாம்.

பதவுரை

மன்னும் மறையின் முடிவு என்று மாயாவாதியுடன் மலைந்து பின்னம் ஆகி	சுயம்புவாக நிலைபெற்ற வேதம் இத்தன்மைத்து என்று மாயாவாதியோடு மாறுபட்டு நீங்கி,
பிரமத்தை பேத அபேதம் சாதித்து	மாயாவாதி கூறிய பிரமத்தைப் பேதமாகவும் அபேதமாகவும் நிலைநிறுத்தி,
பன்னும் ஒரு நூல் அது ஆகப் பாரின் மீது பாற்கரியன் சொன்ன இதனை இந்நூலின் அகத்தே தோன்றச் சொல்லுவாம்	ஒதும் நூலும் வேதமுமாய் இருக்க அதன் உண்மையை அறியாது பூமிமீதே பாற்கரியன் சொன்ன மதத்தை இந்தச் சிவஞான சித்தியினிடத்தே தெளியச் சொல்லுவாம் என்றவாறு.

விளக்கவுரை

பாற்கரியன் என்பான் ஓர் இருடி. பாற்கரியம் எனினும் பரிணாம மாயாவாதம் எனினும் ஒக்கும்.

மாயாவாதி மதம் கூறி அமைதியாக்கிப் பாற்கரியன் மதம் கூறுவான் எடுத்துக் கொண்டார்; அதனுள், இச் செய்யுள் வேதநூலும் மாயாவாதி கொள்ளத்தக்கதாய் இருக்க அவனோடு வேறுபட்டுப் பாற்கரியன் கூறுவான் என்பது கூறிற்று. (1)

செய்யுள் - 253

சித்தே யுலகாய்ப் பரிணமித்துச்
சீவ னாகித் திகழ்ந்தமையால்
சத்தே யெல்லா முத்தியினைச்
சாரக் கண்ட ஞானங்கள்
வைத்தே மொழியு மாமறைகள்
சொன்ன மாபே வந்தக்கால்
ஒத்தே கெட்டுப் பிரமத்தோ
டொன்றாய்ப் போமென் றுரைத்தனனே.

பதவுரை

சித்தே உலக ஆய்ப் பரிணமித்துச் சீவன் ஆகித் திகழ்ந்தமையால் சத்தே எல்லாம்	அறிவாகிய பிரமமே பிரபஞ்ச பேதமாய்த் தோன்றி வளர்ந்து ஆன்மாக்களுமாய் விளங்கும் தன்மையால் சர்வமும் அந்தப் பிரமமேயாம்,
முத்தியினை சாரக் கண்ட ஞானங்கள் மொழியும் மா மறைகள்	வீட்டின்பத்தைச் சேர அறியும் ஞானங்களை வேத வாக்கியங்கள் சொல்லும்,
சொன்ன மாபே வைத்து ஏ வந்த கால் ஒத்தே கெட்டு பிரமத்தோடு ஒன்று ஆய் போம் என்று உரைத்தனன் ஏ	அந்த வாக்கியங்களைச் சொன்னபடியே வைத்துத் தத்துவமசி பதபதார்த்தம் கண்டால் அந்தப் பிரமத்தோடே ஆன்மாக் கூடி ஆன்மத் தன்மை கெட்டு ஒன்றிப் பிரமமாயே போம் என்று பாற்கரியன் கூறினான் என்றவாறு.

விளக்கவுரை

வாக்கியம் - தத்துவமசி. சத்து - நிலைநின்றது. அசத்து - நிலைநில்லாதது. ஆதலால், சத்தே சர்வமும் ஆம் என்பது அவன் கருத்து.

இச்செய்யுள் பாற்கரியன்மதம் கூறிற்று.

'மன்னுமறை' என்னும் செய்யுளும், இச் செய்யுளும் பாற்கரியன்மதம் கூறின. *(2)*

பன்னிரண்டாவது – பாற்கரியன் மதம் முற்றிற்று.

பாயிரம் உள்படத் திருவிருத்தம் – 253.

ஏகான்மவாதம் 12. (உ) பாற்கரியன் மதமறுதலை

எழுசீர்க்கழி நெடிலடியாசிரியவிருத்தம்

செய்யுள் - 254

இயம்பு கின்றதுல காயி டாதுசட
மின்றி நின்றுசட மாகியே
முயங்கு கின்றமையி லிலவ ணத்திரத
முழுதுமே கனதை முயல்கைபோல்
பயந்த தென்னிலறி யப்ப டும்பொருளு
மறிவு மென்றுபல வாகுமோ
தியங்கு கின்றதெ னுரைத்தி டாய்கடின
மாதி யாகிவரு சித்தனே.

பதவுரை

இயம்புகின்றது உலகு ஆயிடாது	நீ சொல்லுகின்ற பிரமம் பிரபஞ்சபேதம் ஆயிடமாட்டாது; ஆகையாலே
சடம் இன்றி நின்று சடம் ஆகி ஏ முயங்குகின்றமை இல்	பிரமம் சடத்தை நீங்கி நின்றது, சடந்தானும் தானாகவே கூடி நின்றமை உண்டாகாது; அற்றன்று,
இலவணத்து இரதம் முழுதுமே கனதை முயல்கை போல் பயந்தது என்னில்	உப்பானது நீரோடுகூடி ஒருதன்மைப் பட்டாற்போல, பொருளும் ஒன்றாய் நின்றது என்னில்,
அறியப்படும் பொருளும் அறிவும் என்று பல ஆகுமோ	நீரோடு கூடிய உப்பும் பேதியாது ஏகத்துவமாய் நின்றாற்போல, பிரமமும் ஒன்றாய் நிற்கையின்றி அறியப்படும் பொருளாகிய சடமும் அறிவாகிய ஞானமுமாகப் பேதித்து நிற்குமோ,
தியங்குகின்றது என் உரைத்திடாய் கடினம் ஆதி ஆகி வரு சித்தனே	இப்படி மயங்குவானேன், மாபூதங்கள் முதலானவையும் நானே ஆவேன் என்று வரும் அறிவனே என்றவாறு.

விளக்கவுரை

கடினம் - பூதகுணம்; அது குணிமேல் நின்றது.

இலவணத்து இரதம் முழுதுமே கனதை முயல்கை போல் என்றது -

மண்ணின் சாரமானதை ஜலமானது கொண்டு உப்பான தொழியச் சிற்சொரூபம் திரண்டு பரிணமியாது என்பது நோக்கியாம்.

பாற்கரியன் மதத்தை மறுப்பான் எடுத்துக் கொண்டார் அதனுள் இச் செய்யுள் 'பிரமமே பிரபஞ்சம்' என்பதனை மறுத்துக் கூறிற்று. (1)

செய்யுள் - 255

உன்னு கின்றபிர மத்தி லேசிறிதிவ்
வுலக மானதென வோதின்நீ
மன்னு கின்றசில கால மோடழியும்
அழிய வந்துதவு மாயையால்
தன்னி லொன்றுமெனில் வருத லோடிறுதி
தருத லாலதுச டத்ததாம்
உன்னொ டச்சகமு முண்மை யன்றுசட
மென்ன வேயுறுதி மன்னுமே.

பதவுரை

உன்னுகின்ற பிரமத்திலே சிறிது இ உலகம் ஆனது என ஒதின் நீ	யாவரும் நினைக்கப்படாநின்ற பிரமம் சேரப் பிரபஞ்சம் ஆகாது, சிறிது பேதித்துப் பிரபஞ்சம் ஆனது என்று நீ சொல்லுகின்றா யாகில்,
மன்னுகின்ற சில காலமோடு அழியும்	அங்ஙனமாயின், பிரபஞ்சம் சிறிதுகாலம் நிலைபெற்று நின்று அழியா நிற்கும்,
அழிய வந்து உதவும் மாயையால்	அப்படி அழிந்து மீளவும் மாயையிலே தோன்றி வருகையால் மாயையிலே ஒடுங்கி மாயையிலே தோன்றும்; அற்றன்று,
தன்னில் ஒன்றும் எனில்	ஒடுங்கும் காலத்திலும் பிரமத்திலே ஒடுங்கித் தோன்றும் காலத்திலும் பிரமத்திலே தோன்றும் என்னில்,
வருதலோடு இறுதி தருதலால் அது சடத்தது ஆம்	இப்படித் தோன்றி ஒடுங்குவதாகிய பிரபஞ்சம் பிரமத்திலே பேதமாயின் பிரமமும் அசேதனமாக வேண்டும்; ஆகையால்,
உன்னோடு அச்சகமும் உண்மை அன்று சடம் என்னவோ உறுதி மன்னும் ஏ	அகம் பிரமம் என்கிற உன்னுடனே பிரபஞ்சமும் தோன்றுகையும் ஒடுங்குகையும் செய்கையால் மெய் அன்று, ஜடம் என்றே சொல்லுதலை மெய்யாக உடைத்து என்றவாறு.

விளக்கவுரை

'வந்துவந்து தவு மாயையால்' எனவும் பாடம்.

இச் செய்யுள் 'பிரமத்தில் சிறிது பேதம் பிரபஞ்சம்' என்பதனை மறுத்துக் கூறிற்று. *(2)*

செய்யுள் - 256

வித்தெ ழுந்துமர மாய்வி ளைந்தமை
விளம்பி னாயுவமை வேறுநீ
நித்த மென்றவுரை பொய்த்து நீடுசட
மாயெ ழுந்தழியும் நின்பரம்
ஒத்தெ ழும்பொழுது வித்தி னுக்கவனி
யுண்டு தாரகமு னக்கெனா
பித்த னென்றுல குரைத்தி டும்பிரம
மாயி னாயிவை பிதற்றிலே.

பதவுரை

வித்து எழுந்து மரம் ஆய் விளைந்தமை விளம்பினாய் உவமை	மரம் கெட்ட இடத்து வித்திலே நின்றும் மரம் உண்டானாற்போலப் பிரபஞ்சம் அழிந்த இடத்தும் பிரமத்திலே நின்று பிரபஞ்சம் உண்டாம் என்று உவமை கூறினாய்; அங்ஙனமாயின்,
வேறு நீ நித்தம் என்ற உரை பொய்த்து நீடு சடம் ஆய் எழுந்து அழியும் நின் பரம்	அந்த வித்து மரத்திலேயுள்ளதுமாய்ப் பின்பு தானே பரிணமிக்கும் காலத்து மரம் தோன்றத் தான் கெட்டுத் தோன்றினதற்குப் பரிணாமம் உண்டாய் அந்த மரம் மீளவும் வித்தை உண்டாக்கினாற்போலப், பிரமமும் பிரபஞ்சத்துக்கு வேறாய் நித்தமாய் நிற்கும் என்ற உரையும் பொய்யாய்ப் பிரமமும் பிரபஞ்சத்தை உண்டாக்கியும், பிரபஞ்சமும் பிரமத்தை உண்டாக்கியும் சடத்தின் பகுதியாய்த் தோன்றிக் கெடும் நின்பிரமம்; அதுவுமன்றி,
ஒத்து எழும்பொழுது வித்தினுக்கு அவனி உண்டு தாரகம் உனக்கு என் ஆ	அந்தவித்து மரமாம் பொழுது பூமி ஆதாரமாக/இருப்பிடமாகத் தோன்றும், அதுபோல உன்னுடைய பிரமம் பிரபஞ்சம் ஆம் பொழுது இருப்பிடம் யாது,

பித்தன் என்று உலகு உரைத்திடும் பிரமம் ஆயினாய் இவை பிதற்றில் ஏ	பிரமம் ஆயினாய்! இப்படி மயங்கக் கூறுவை யாயின் உன்னைப் பேயன் என்று மிக்கோர் சொல்லாநிற்பர் என்றவாறு.

விளக்கவுரை

பிரமமாயினாய் என்பது - இழிவு. உலகம் என்பது - உயர்ந்தோரை. உலகம் என்னும் வாய்பாடு உரைத்திடும் என்னும் வாய்பாடு பெற்றது.

இச் செய்யுளும் 'பிரமத்திலே பிரபஞ்சம் தோன்றும்' என்பதனை மறுத்துக் கூறிற்று. (3)

செய்யுள் - 257

சூட கங்கடக மோதி ரஞ்சவடி
தொடரொ டாரமுடி தோடுநாண்
ஆட கந்தருவ தாகு மப்படி
அனைத்து மப்பிரம மாகுமேல்
நீடு மப்பணிகள் செய்து ளோரவை
புனைந்து ளோர்களை நிகழ்த்திடும்
நாடி டுஞ்சகமி யற்று வோர்கொடு
நடத்து வோருளர் நவிற்றிலே.

பதவுரை

சூடகம் கடகம் மோதிரம் சவடி தொடரொடு ஆரம் முடி தோடு நாண் ஆடகம் தருவது ஆகும்	சூடகம் (கைவளை) முதல் நாண் ஈறாகச் சொல்லப்பட்ட பலவிதமான அணிகலன்களைப் பொன் ஒரு முதலாக நின்று வேறுபடுத்தி வைத்தாற் போலப், பிரமமும் பிரபஞ்சபேதம் எல்லாமாக வேறுபடுத்தி வைத்து முதல் கெடாமல் நிற்கும் என்று கூறின்,
அப்படி அனைத்தும் அப்பிரமம் ஆகுமேல்	அவ்வணிகலன் போல வேறுபட்டு எல்லாம் பிரமமாய் நிற்குமாகில்,
நீடும் அப்பணிகள் செய்துளோர் அவை புனைந்துளோர்களை நிகழ்த்திடும்	அவ்வணிகலன் பேதம் செய்தோரையும் அவ்வணிகலன் அணிந்தோரையும் அவ்வணிகலன் தானே உண்டாக்கி நிற்றலால் அதுபோல,
நாடிடும் சகம் இயற்றுவோர் கொடு நடத்துவோர் உளர் நவிற்றில் ஏ	ஒரு முதலைக் கொண்டு உலகை உண்டாக்கு வோரையும், அதனை நடத்துவோரையும், சங்கரிப்போரையும் சொல்லும் காலத்து அறிந்திடும் தன்மையை உடைத்து என்றவாறு.

விளக்கவுரை

இச்செய்யுள் பொன்னும் அணிகலனும் போலப் 'பிரமமும் பிரபஞ்சமாகப் வேறுபடுத்தி வைக்கும்' என்பதனை மறுத்துக் கூறிற்று. *(4)*

செய்யுள் - 258

அறிவி னோடுசெயல் மாறில் வீடதனை
அணுகொ ணாதவையி ரண்டினால்
உறுதி யானபிர மத்தி னோடழிய
ஒன்ற லாமெனவு ரைத்திகாண்
இறுதி யேலதனொ டிசைவ தின்றிசைவ
துள்ள தாயிடினவ் வின்பமே
பெறுதி நீயுடலொ டுயிர்க ளாயறிவு
பிரியு மாறுசெயல் பெறுவதென்.

பதவுரை

அறிவினோடு செயல் மாறில் வீடு அதனை அணுக ஒணாது அவை இரண்டினால் உறுதி ஆன பிரமத்தினோடு அழிய ஒன்றலாம் என உரைத்தி காண்	ஞானக் கிரியைகளை மாற்றினால் வீட்டின்பம் அணைதற்கு அரிது; ஞானக் கிரியைகள் இரண்டினாலும் சென்று அவற்றிற்கு ஆதாரம் ஆகிய பிரமத்திலே அழியக்கூடலாம் என்று கூறினாய் காண்,
இறுதியேல் அதனொடு இசைவது இன்று	ஞானக்கிரியைகள் நிற்கப் பிரமத்தைச் சென்று கூடுதலும் இல்லை, அந்த ஞானக்கிரியைகள் கெட்டால் பிரமத்தோடு கூடுதற்கு ஒருமுதலும் இல்லையாம்; அன்றி,
இசைவது உள்ளது ஆயிடின்	அந்த ஞானக்கிரியைகள் கெடாமல் ஒன்றுவது உள்ளதாமாயின்,
அவ்வின்பமே பெறுதி நீ உடலொடு உயிர்கள் ஆய் அறிவு பிரியும் ஆறு செயல் பெறுவது என்	எப்பொழுதும் அந்தச் சுகத்தை அநுபவிப்ப தன்றிக் காயத்தோடு உயிர்களின் மிக்க அறிவு நீங்கும்படி அவத்தையின் செய்தியைப் பெறுவானேன்? ஆதலால், ஆன்மா என்று ஒன்று உண்டுகாண் என்றவாறு.

விளக்கவுரை

'உடலோடு உயிர்களாயது பிறக்குமாறு செயல் பெற்றியால்' எனப் பாடமாயின், இன்பத்தைப் பெற்று நிற்றலன்றி நீயும் உடலோடு உயிர்களாய் வந்து

பிறக்கும் மரபு பெற்றாய் எனப் பொருள் கொள்க. இதனால், உலகமும் உயிருமாய்ப் பிறந்து இறந்து உழலும் அவனன்றோ! நீ என்றது எனக் கொள்க.

இச் செய்யுள் அறிவும் செயலும் கெடாமல் பிரமத்திற் சென்று அழியக்கூடும் என்பதனை மறுத்து 'ஆன்மா என்று ஒரு முதல் உண்டு என்றும், அறிவும் செயலும் கெட்டுக் கூடவேண்டும்' என்றும் கூறிற்று.

'இயம்புகின்றது' என்னும் செய்யுள் முதல் இச்செய்யுள் காறும் பாற்கரியன் மதத்தை மறுத்துக் கூறிற்று. (5)

பன்னிரண்டாவது பாற்கரியன் மதமறுதலை முற்றிற்று.

பாயிரம் உள்படத் திருவிருத்தம் – 258.

பாற்கரியன் மதமறுப்பு

இம்மதமறுப்பு சிவஞானசித்தியார் பரபக்கத்தில் ஐந்து பாடல்களில் மறுக்கப்பட்டுள்ளது.

கடலின் கண் இருக்கும் நீரும், நிலத்தின் கூறாக விளங்கும் உப்பினது நுண்நிலையும் அறிவில் பொருள்களாம். ஆனால் பிரமத்தில் தோன்றிய இவ்விரு பொருள்களுள் உயிர் அறிவு உடையது; ஏனையது அறிவற்றதாகும். பிரமமாகிய ஒன்றே அறிவுடையதும் அறிவற்றதுமாய பொருள்களாகத் திரியுமென்றால் பொய்க் கூற்றேயாம். பிரமத்தின் ஒருவழி உறுப்பு (ஏகதேச உறுப்பு) உலகாக மாற்ற மடையுமெனில், அவ்வுலகம் தோற்றமும் ஈறும் உடையது. அவ்வாறாகப் பிரமத்தின் ஒருவழி உறுப்பும் தோற்றமும் ஈறும் உடையதும். அவ்வாறாகப் பிரமத்தின் ஒருவழி உறுப்பும் தோற்றமும் ஈறும் உடையதாதல் வேண்டும். வித்திலிருந்து மரமுண்டானால்போலப் பிரமத்தில் இருந்து உலகம் தோன்றுமெனில், வித்து அழிந்து மரமாதல் இன்றி வித்துத்தனித்து நிற்பதில்லை அவ்வாறு தோன்றிய மரம் அழிய அதன்கண் வேறு பல வித்துக்களும் உண்டாகின்றன. அன்றியும் வித்திலிருந்து மரம் தோன்ற அவ்விரண்டிற்கும் வேறாய மண்ணும், நீரும் உளவாதல் வேண்டும். இவ்வனைத்தையும் காணுங்கால் பிரமம் அழிந்தே உலகாக வேண்டும். அவ்வுலகிலிருந்து பிரமம் தோன்ற வேண்டும் என்ற கருத்துக்கள் உருவாகும். ஆனால் பிரமமோ அழிவதுமில்லை அது பிறிதொன்றிலிருந்து தோன்றுவதுமில்லை. அன்றியும் விதை மரமாதற்கு நிலமும், நீரும் வேண்டுவது போலப் பிரமத்தினின்று இவ்வுலகு தோன்றுதற்கு அவ்விரண்டிற்கும் வேறாயதொரு பொருளும் வேண்டும்.

பிரமமே உலகாக வளர்ச்சிபெறும் என்பதற்குப் பிறிதொரு உவமையும் காட்டுவர். அது பொன் முடி, வளை முதலிய பல அணிகளாக வேறுபடுவது போலாம் என்பதாகும். பொன் முடியாகவோ, வளையாகவோ வேறுபடுதற்கு பொன்னின் வேறாக அவற்றைச் செய்வான் ஒருவன் வேண்டும். அவ்வணிகளைக் கொள்வாரும் வேண்டும். அங்ஙனமாகவே பிரமத்தினின்று உலகு தோன்றப் பிரமத்தின் வேறாக ஒருவன் வேண்டும் என்பதாய் முடியும். அவ்வாறு கூறுவது அடைவுடைத்தன்றாம். அன்றியும் அணிகளைப் பயன்கொளக் கொள்வார் வேண்டுதல் போல இவ்வுலகைப் பயன் கொளப் பிரமத்தின் வேறாகப் பிறிதொருவர் வேண்டும்.

உயிரது அறிவினாலும், செயலாலும், பிரமத்தை அடைகின்ற போது உயிர் கெடும் என்பர். அறிவும் செயலும் இல்லையாக உயிரும் இல்லையாம். அங்ஙனமாகப் பிரமத்தைக் கூடுவது எது என்ற வினாஎழும்.

13. நிரீச்சுர சாங்கியன் மதம் முன்னுரை

	வகை	வேதத்தை மட்டும் ஏற்றுக்கொண்டு ஆகமத்தை ஏற்றுக் கொள்ளாத புறச்சமயங்கள் ஆறனுள் நான்காவதான சாங்கிய மதத்தின் முதன்மைப் பிரிவாகும்.
1.	தோற்றுவித்தவர்	கபில முனிவர்
2.	முக்கியக் கொள்கை	1. கடவுள் இல்லை என்னும் நாத்திக மதங்களுள் ஒன்று. 2 சைவ சித்தாந்தத்தில் தத்துவங்களாகக் குறிக்கப்படும் மூலப்பிரகிருதி, புரியட்டகம் முதலியவை இவர்கள் நிறுவியனவேயாகும். 3. மும்மாயைகளுள் ஒன்றான பிரகிருதி மாயை மூலப் பிரகிருதி, புரியட்டகம், விகிர்தி என மூவகைப்பட்டு முறையே எங்கும் நிறைந்த பொருள் (பரம்), நுண்ணுடம்பு (சூக்குமம்), பருவுடம்பு (தூலம்) என்று நிற்கும். 4. இருபத்து நான்காம் தத்துவம் மூலப்பிரகிருதி. 5. இருபத்தைந்தாம் தத்துவம் உயிர் (புருடன்). புருடன் பல. 6. உள்ளது அழியாது. இல்லது தோன்றாது என்ற சற்காரிய வாதத்தை ஏற்றுக்கொள்ளும். 7. புருடன் சந்நிதியில் எல்லாம் தோன்றி ஒடுங்குகின்றன எனக் கூறுவதால் புருடன் மேலாகப் பொருள் யாதுமில்லை என்று ஆகிறது. ஆகவே இச்சமயம் கடவுள் உண்டு எனக் கொள்ளவில்லை. இதுபற்றி இது நிரீச்சுர சாங்கியம் எனப்படுகிறது.
3.	கேசுர சாங்கியம்	25 தத்துவங்களையும் நிரீச்சுவர சாங்கியம் கூறுவதைப் போல ஏற்றுக்கொண்டு இறைவனை 26ஆவது தத்துவமாக் கொள்வது கேசுவர சாங்கியம் எனப்படுகிறது. இது யோகமதம் என்றும் சொல்லப்படுகிறது.
4.	வீடுபேறு	பிரகிருதியின் சார்பால் உயிர் அறியாமையுறும். உலகச் செயல்களையெல்லாம் பிரகிருதிக்குரியன. தனக்குள்ளவல்லவென்ற அறிந்து உயிர் தன்னிலை தெளிவுமாயின் அஃதே வீடுபேறாம்.

சாங்கியம் 13. (க) நிரீச்சுரசாங்கியன் மதம்

அறுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்

செய்யுள் - 259

மூலம் புரியட் டகம்விகிர்தி
யாகி மூன்றாய்ப் பிரகிருதி
தூல சூக்கம் பரமாயச்
சுத்த புருடன் சந்நிதியில்
பாலன் சேட்டை புரிந்துலகம்
யோனி பலவாய்ப் பரந்தொடுங்கும்
சால வென்று நிரீச்சுவர
சாங்கி யன்றான் சாற்றிடுமே.

பதவுரை

மூலம் புரியட்டகம் விகிர்தி ஆகி மூன்று ஆய்ப் பிரகிருதி	பிரகிருதி, புமான் என்னும் இரண்டில் பிரகிருதியானது மூலம் என்றும், புரியட்டகம் என்றும், விகிர்தி என்றும், மூன்று பெயரை உடைத்தாகி,
தூலம் சூக்கம் பரம் ஆய்	அந்தப் பிரகிருதி தூலமாயும் சூக்குமமாயும், பரமாயும் நிற்கும்,
சுத்த புருடன் சந்நிதியில் பாலன் சேட்டை புரிந்து உலகம் யோனி பல ஆய் பரந்து	புமானாகிய சுத்தபுருடன் பிரகிருதியின் சந்நிதியிலே மழவின் செய்தியைப்போல அறியாமையைப் பொருந்திப் பிரபஞ்சமும் யோனிபேதங்களும் நான் என விரிந்து நின்ற இடத்து,
ஒடுங்கும் சால என்று	தனக்கு விவேகஞானம் வந்து சர்வமும் பிரகிருதிக்குள்ளது தனக்குள்ளது அன்று என்று காணவே பிரபஞ்ச வியாபாரம் நன்றாக நீங்கும் என்று,
நிரீச்சுரசாங்கியன் தான் சாற்றிடும் ஏ	நிரீச்சுரசாங்கியன் இப்படிச் சொன்னான் என்றவாறு.

விளக்கவுரை

மூலம் - சித்தம். புரியட்டகம் - சத்தாதிகள் ஐந்து மனம் புத்தி அகங்காரம்

மூன்று ஆக எட்டாம். விகிர்தி - தூலதேகமும், பிரபஞ்சமும். இம்மூன்று வகையாகப் பிரகிருதி பேதிக்க இதனைப் புமான் தனது என்று கொண்டு நிற்பன். இந்தப் பதினாறு கருவிகளோடும் கூடிப் பிரபஞ்சத்தைப் பிரகிருதிக்கு உள்ளது என்று நீங்கப் புமான் என்றும், புருடன் என்றும் வேறற்று நிற்பன்; அதுவே முத்தியாம் என்பது கருத்து.

நிரீச்சுரசாங்கியம் - கபிலன்மதம். இதில் விகிர்தி என்றமையால், ஆங்கார பேதத்தில் தோன்றிய ஞானேந்திரிய கன்மேந்திரியங்களும், சத்தாதிகளில் தோன்றிய பூதங்களும், இருபத்துநாலு தத்துவங்களும் அதிற்பேதமும் எனக் கொள்க.

இதில் ஈச்சுரசாங்கியன் என்றும், நிரீச்சுரசாங்கியன் என்றும் இரண்டு வகையர். இதிலே சிவசாங்கியரையும், விஷ்ணு சாங்கியரையும் ஈச்சுரசாங்கியர் எனக் கொள்க.

இச் செய்யுள் சாங்கியன் மதம் கூறிற்று. *(1)*

பதின்மூன்றாவது நிரீச்சுரசாங்கியன் மதம் முற்றிற்று.

பாயிரம் உள்படத் திருவிருத்தம் – 259.

சாங்கியம் 13.(உ) நிரீச்சுரசாங்கியன் மதமறுதலை

செய்யுள் - 260

சுத்தன் அறிவன் புருடனெனில்
சூழா தாகும் பிரகிருதி
பெத்த நீங்கி னாலும்பின்
பெத்த னாவன் பேரறிவால்
கத்த மேவும் பிரகிருதி
கண்டு கழிக்க மாட்டானேல்
முத்த னாகான் சுத்தனுக்கு
மூலப் பிரகி ருதியிலையாம்.

பதவுரை

சுத்தன் அறிவன் புருடன் எனில் சூழாது ஆகும் பிரகிருதி	ஆன்ம புருடன் சுத்தமான அறிவையுடையனா மாகில் அவனை அசுத்தமாகிய பிரகிருதி வளையாதாகும்; அன்றியும்,
பெத்தம் நீங்கினாலும் பின் பெத்தன் ஆவன்	பெத்தனாய் நின்ற விடத்தினும் இவனைப் பந்தியாது அஞ்ஞானம் அது பிரகிருதிக்கு உள்ளதாய் நிற்கும் என்னில், பெத்தம் நீங்கின இடத்திலும் அறியாமல் நின்றான் ஆகையால் பெத்தத்தைப் பொருந்தினவன் ஆவன்,
பேர் அறிவால் கத்தம் மேவும் பிரகிருதி கண்டு கழிக்க மாட்டானேல்	மிக்க அறிவாகிய பரையோடு கூடிநின்றும் பொல்லாங்கைப் பொருந்தின பிரகிருதியின் செயலைத் தெரிசித்து நீங்கமாட்டானாயின் அஞ்ஞானப் பிரகிருதிக்கு உள்ளது என்று காணும் தகுதியுடையன் அல்லன் ஆகையால்,
முத்தன் ஆகான்	பரையுடனே கூடிநின்று பிரகிருதியை நீங்கானாயின் முத்தியடையும் ஆன்மா ஆகான்,
சுத்தனுக்கு மூலப்பிரகிருதி இலை ஆம்	சுத்தனாய் இருக்கிற பிரமத்துக்கு மூலப் பிரகிருதி கூடுவதும் நீங்குவதும் ஆன்மாவுக்கு என்று அறிவாயாக என்றவாறு.

விளக்கவுரை

கத்தம் - பொல்லாங்கு.

சாங்கியன் மதத்தை மறுப்பான் எடுத்துக் கொண்டார்; அதனுள், இச் செய்யுள் பரமபுருடன் பிரகிருதிக்குள் அகப்படுவன் என்பதனை மறுத்துக் கூறிற்று. *(1)*

செய்யுள் - 261

புருடன் பிரகி ருதிபெற்றால்
போதஞ் சிறிதங் குண்டாகிக்
குருடன் முதுகின் முடவனிருந்
தூர்ந்தாற் போலப் பிரகிருதி
இருட னிடத்தே யிருந்தியங்கும்
கன்மா லிறையன் றிரண்டினையும்
மருட னுருவாய்ச் சேட்டிப்பித்
தறியு மமல னரனேயாம்.

பதவுரை

புருடன் பிரகிருதி பெற்றால் போதம் சிறிது அங்கு உண்டாகி	சுத்த புருடன் என்ற ஆன்ம புருடன் பிர கிருதியைக் கூடின இடத்துப் பிரகிருதியாலே சிறிது அஞ்ஞான அறிவு உண்டாய்,
குருடன் முதுகில் முடவன் இருந்து ஊர்ந்தால்போல பிரகிருதி இருள் தன் இடத்தே இருந்து இயங்கும் கன்மால்	அந்தகன் முதுகிலே முடவன் இருந்து அந்தகனை நடத்தினாற்போலக் கன்மத்துக்கு ஈடான பிரகிருதியாலே சிறிது அஞ்ஞானம் பெற்ற புருடனைப் பிரகிருதி கூடி அவனிடத்தேயிருந்து கன்மத்துக்கு ஈடான தொழிலை நடத்தும்,
இறை அன்று	ஆகையால் பிரகிருதியுடன் கூடி நிற்பான் ஆன்மாவே ஆம்; கர்த்தா அன்று,
இரண்டினையும் மருள் தன் உரு ஆய் சேட்டிப்பித்து அறியும் அமலன் அரனே ஆம்	அந்த ஆன்ம புருடனையும் அவனைக் கூடி நிற்கிற பிரகிருதியையும் கூட்டி அஞ்ஞானமே தனக்கு உருவமாகக் கொண்டு நடக்கும் படியாக நடாத்துவித்து ஆன்மாக்கள் செய்த கன்மத்தையும் அறிந்து அதற்குத்தக்க பயனையும் கொடுப்பான் மலரகிதனாகிய அரனே காண் என்றவாறு.

விளக்கவுரை

பிரகிருதிக்கு அஞ்ஞானமே சொரூபம்; ஆகையால், அவ் அஞ்ஞானத்தைப் பொருந்தி நின்ற புருடனை மருடன் என்று கூறப்பட்டது. அமலன் என்கையால் கர்த்தா மலர கிதன் என்பது கருத்து.

புருடனாவான் பிரகிருதி கூடினால் சிறிது அறிவு உண்டாய்க் குருடனுடைய முதுகிலே முடவன் இருந்து நடத்தினாற்போலப் பிரகிருதியாகிய இருள்தனிடத்தே புருடன் இருந்து வழங்கும் கன்மத்தாலே வேறு கர்த்தாவால் அன்றென்று எனில், அப்பிரகிருதி புருடனாகிய இரண்டையும் மருள் தன்உருவாய் நின்று சேட்டிப்பித்து அறியாநிற்கும் அமலனாகிய பரமேசுவரன் என்க. குருடன் முதுகில் முடவன் இருந்து ஊர்கையாவது ஒன்றுக்குள்ள குணம் ஒன்றுக்கு இல்லாமல் சேட்டை கூடாதாம்.

இச் செய்யுள் 'பிரகிருதியுடனே கூடி நிற்பவன் ஆன்மாவே, கர்த்தா அல்லன்' என்று மறுத்துக் கூறிற்று. (2)

செய்யுள் - 262

அறியான் புருடன் பிரகிருதி
அசேத னங்கா ரியத்தினுக்குக்
குறியாய் நாத னுளனென்று
கூறு முத்தி விவேகமெனில்
செறிவாந் தளைபோ காதறியில்
சேர்த்தோன் வேண்டும் செயலிற்போம்
நெறியாற் பணிசெய் துடற்பாசம்
நீக்கிக் கொள்நீ நின்மலனால்.

பதவுரை

அறியான் புருடன்	ஆன்மபுருடன் தானாய் ஒன்றையும் அறிய மாட்டான்,
பிரகிருதி அசேதனம்	பிரகிருதியும் சடம் ஆதலால்,
காரியத்தினுக்கு குறியாய் நாதன் உளன் என்று	இவை காரியப்படுதற்குக் காரணமாகிய கர்த்தா ஒருவன் உளன் என்று குறிப்பாயாக.
கூறும் முத்தி விவேகம் எனில்	நீ முத்தியென்று சொல்லப்பட்டது பந்தம் நமக்குள்ளதல்ல என்று அறியும் விவேக ஞானம் என்னில்,

செறிவு ஆம் தளை போகாது அறியில்	எல்லாவற்றையும் அறியுமிடத்துப் பாச ஞானமும் பசு ஞானமும் கூடி அறியவேண்டும் ஆகையால் பாசபந்தம் நீங்காதாம்,
சேர்த்தோன் வேண்டும்	அந்தப்பாசம் நீங்குமிடத்து முன்பு கூட்டினோனே நீக்கவேண்டும்,
செயலில் போம்	அந்தப்பாசத்தைக் கூட்டின கர்த்தாவின் காருண்ணியத்தாலே பாசபந்தம் நீங்கும், அது நீங்கும்படிக்கு,
நெறியால் பணி செய்து உடல் பாசம் நீக்கிக்கொள் நீ நின்மலனால்	சரியை கிரியா யோக ஞானங்களாகிய வழிகளிலே நின்று தொண்டு செய்து நீ கர்த்தாவினாலே உன் பாசபந்தத்தை நீக்கிக் கொள்வாயாக என்றவாறு.

விளக்கவுரை

இச்செய்யுள் புருடனையும் பிரகிருதியையும் நடத்துவோன் ஒருவன் உளன் என்றும் அப்படி நடத்துவோனை வழிபடுவதே முத்தி என்றும் கூறிற்று.

'சுத்தன்' என்னும் செய்யுள் முதல் இச்செய்யுள் காறும் நிரீச்சுரசாங்கியன் மதத்தை மறுத்துக் கூறிற்று. (3)

பதின்மூன்றாவது நிரீச்சுரசாங்கியன் மதமறுதலை முற்றிற்று.

பாயிரம் உள்படத் திருவிருத்தம் – 262.

வைணவம்

பெயர்க்காரணம்

விட்டுணுவை முதன்மையாகக் கொண்டு வழிபடுவதால் இது வைணவம் எனப் பெயர் பெற்றது. விட்டுணு என்பதற்கு எங்கும் பரந்துள்ளவன், நன்மை செய்பவன், அடியவர்களை மாயையினின்று விடுவிப்பவன், எப்பொருள்களிலும் இயைந்து உறைபவன் என்றெல்லாம் பொருள் காண்பர்[1]. இவ்விட்டுணுவை வழிபடுவர் வைணவர் ஆவர். இவ்வைணவர் எனும் சொல்,

"குறிகொள் ஆயிரத்துள் இவை பத்தும்
திருக்குறுங்குடி யதன் மேல்
அறியக் கற்று வல்லார் வைட்ணவர்
ஆழ்கடல் ஞாலத்துள்ளே"

"வன்மை யாவதுன் கோயிலில் வாழும்
வைணவன் என்னும் வன்மை கண்டாயே"

எனப் பெரியாழ்வாரால் எடுத்தாளப் பெற்றுள்ளதாகும். வைணவன் பிற உயிர்கள் படும் துன்பத்தைக் கண்டு இரங்குவானாயின் அவன் திருவருள் தொடர் புடையன் ஆவன்; அவ்விரக்கமற்றவனாயின் திருவருள் தொடர்புடையவன் ஆகான் என்பர்.

பாஞ்சராத்திரம்

இம்மதத்திற்குப் பாஞ்சராத்திரம் எனும் பெயரும் உண்டு. இதற்கு ஐந்து இரவுகள் எனப் பொருள் காண்பர். ஐந்து இரவுகள் திருமால் திருமகளுக்கு இம்மத உண்மைகளைக் கூறினமையின் இப்பெயர் பெற்றது என்பர். ஐந்து இரவுகள் திருமால் இம்மத உண்மைகளை நாரதருக்குக் கூறினமையின் இப்பெயர் பெற்றதென்றும் கூறுவர். இவையன்றி அறியாமையை விலக்கி உண்மைப் பொருளைக் காட்டுவதால் இப்பெயர் பெற்றதெனப் பிரம்ம சம்ஹிதை கூறுவதாகவும் கூறுவர். பாஞ்சம் - ஐந்து. இத்தொகை உண்மைக்கேற்ப பிறவாறும் கூறுவர். வைணவர்கள் நாள்தொறும் ஐந்து வேளைகளில் செய்ய வேண்டிய அறநெறிகளைக் கூறுதலின் இப்பெயர் பெற்றதென்பர். திருமாலின் ஐவகை நிலைகளைக் (பரம், வியூகம், விபவம், அந்தர் யாமித்வம், அரிச்சை) கூறலின் இப்பெயர் பெற்றதென்றும், வைணவர்களுக்குரிய தாபம், புண்டரம் நாமம், மந்திரம், யாகம் ஆகிய ஐந்து கடன்களையும் கூறலின் இப்பெயர் பெற்றதென்றும், ஜீவநிலை, இறைவன் நிலை, நெறி, தடை, பயன் எனும் ஐந்து பொருண்மைகளை இம்மதம் கூறலின் இப்பெயர் பெற்றதென்றும் கூறுவர். [2]**இதற்கு விசிஷ்டாத்வைதம்** என்ற பெயரும் உண்டு. இதன் காரணம் முன்னர் விளக்கப்பட்டுள்ளது.

---

1. வைணவ சமயம், ப. 15.
2. வைணவ வினாவிடை, பக். 28-29.

தோற்றமும் வளர்ச்சியும்

இம்மதம் மிகவும் தொன்மை வாய்ந்தது. வேதங்கள் இதிகாசங்கள் ஆகியவற்றில் திருமாலைப் பற்றிய குறிப்புக்கள் உள்ளன. வைணவ ஆகமங்களாக **வைகானசம், பாஞ்சராத்திரம்** எனும் இரு ஆகமங்கள் குறிக்கப்படுகின்றன.

வேதங்களில் விட்டுணுவை முக்கிய தெய்வமாகச் சொல்லவில்லையென்றும், அவற்றை ஒட்டி எழுந்த பிராமண, உபநிடதங்களில்தான் விட்டுணுவின் நிலை உயர்ந்தது என்றும் கூறுவர். இவ்வுபநிடதங்கள் எழுந்த காலம் 1500-600 என்பர். இதனை அடுத்து வந்த இதிகாச புராண காலத்தில் தான் (கி.மு. 1000 - கி.பி. 100) மும்மூர்த்திகளில் ஒருவராக விட்டுணு குறிக்கப்பட்டனர். விட்டுணுவும் வாசுதேவனும் ஒருவராகக் கருதப்பட்டமையே இதற்குக் காரணமாகும். எனவே தொடக்க காலத்தில் வாசுதேவனும், விட்டுணுவும் வேறுவேறானவர் எனக் கருதப்பட்டதாகத் தெரிகிறது[1].

பௌத்த சமண மத விளைவுகளால் இவ்விரு தெய்வங்களையும் ஒன்றாகக் கருதும் நிலை காலப்போக்கில் வந்துவிட்டது என்றும் கருதுவர். கி.பி. 100இல் வாசுதேவ கிருட்டிணன், விட்டுணு, நாராயணன் ஆகிய மூன்று பெயர்களும் ஒரே கடவுளைக் குறிப்பனவாகக் கொள்ளப்பட்டன. பிஷ் நகரிலுள்ள ஹீலியோ டோரஸின் கல்வெட்டுக்களும், சங்ககாலக் கல்வெட்டுக்களில் சிலவும், வாசுதேவருக்குக் கோயில்கள் இருந்தன என்று குறிக்கின்றன. இவற்றுள் முன்னைய கல்வெட்டு கி.மு. 200ம், பின்னைய கல்வெட்டுக்கள் கி.மு. 185-72யும் சார்ந்தன. குப்த காலக் கல்வெட்டுக்களும், (கி.பி. 320-600) சக்ரதாரி, சனார்த்தனன், சாரங்கன் போன்ற பெயர்களில் விட்டுணுவிற்குக் கோயில்கள் கட்டப்பட்டன எனக் கூறுகின்றன.

இவையன்றித் தமிழில் தொன்னூலாய தொல்காப்பியத்துள் திருமாலைப் பற்றிய குறிப்புக்கள் காணப்படுகின்றன.

"மாயோன் மேய காடுறை உலகமும்"[2]

எனும் தொடரால் முல்லை நிலக் கடவுள் திருமால் எனத் தெரிகிறது.

"மாயோன் மேய மன்பெருஞ் சிறப்பின்
தாவா விழுப்புகழ்ப் பூவை நிலையும்"[3]

என வரும் தொடரால் திருமாலின் நிற அழகு புலப்படுகின்றது. திருக்குறளில் அடியளந்தான், [4]தாமரைக் கண்ணான் உலகு என வரும் தொடர்கள் திருமாலைக் குறிப்பனவாகும்.

---

1. கலைக்களஞ்சியம், தொகுதி, ப.
2. தொல். பொருள். அகம், நூற்பா. 5.
3. தொல். பொருள். புறம். நூற்பா. 5.
4. திருக்குறள் - 610

'புள்ளணி நீள் கொடிச் செல்வனும்'[1]

'மாயோன் அன்ன மால்வரைக் கவான்'[2]

'நெடியோன் அன்ன நல்லிசை'[3]

என்றாற் போல வரும் தொடர்கள் திருமாலைப் பற்றியனவாய் உள்ளன. எட்டுத் தொகையுள் ஒன்றாகிய பரிபாடலில் திருமாலே முழுமுதற் பொருள் எனப் பேசப்படுகின்றது.

'நாறிணர்த் துழாயோன் நல்கின் அல்லதை
ஏறுதல் எளிதோ வீறுபெறு துறக்கம்'[4]

என வரும் பரிபாடல் பகுதி வீடுபேற்றை வழங்க வல்ல உரிமை திருமாலுக்கே உரியதென்று குறிப்பிடுகிறது.

'தாமரைப் பூவினுட் பிறந்தோனும் தாதையும்
நீயென மொழியுமால் அந்தணரருமறை'

என வரும் பரிபாடல் பகுதி திருமாலுக்குரிய தலைமையை விளக்குகின்றது. திருமால் புகழப் படுமாறு திருமகளும் சங்க இலக்கியங்களில் புகழப்படுகிறாள். **திருமாலின் அவதாரங்களுள் இராமாவதாரமும் கண்ணன் அவதாரமும் சிறப்புடையன என்பர்.** இவ்விரு அவதாரச் சிறப்புக்களையும் பரிபாடலும் சங்கம் மருவிய நூல்களான சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகிய நூல்களிலும் விதந்து பேசப்படுகின்றன. இவற்றின் பின் வந்த நாலாயிர திவ்யப பிரபந்தம் என்னும் அரிய நூல் திருமாலைப் பற்றி எழுந்த அரிய பக்திப் பனுவலாகும். காலப்பழமை வாய்ந்த இவ்வைணவம் ஆழ்வார்கள் காலத்தில் அரும்பி மலர்ந்து காய்த்தது என்றால், பின்வந்த இராமானுசர் காலத்தில் கனிந்து பழுத்தது எனலாம். கம்பராமாயணம், வில்லிபாரதம் ஆகிய இருபெரு நூல்களாலும் இவ்வைணவம் மேலும் தழைத்துச் செழித்து வளர்வதாயிற்று[5].

வைணவத்திற்குரிய நூல்கள்

வைணவக் கோட்பாட்டிற்கு அடிப்படையாக உள்ள நூல்கள் பலவேனும் குறிப்பிடத்தக்கன வேதங்களாகும். அவ்வேதங்களிலும் இருக்கு வேதத்திலுள்ள புருஷசூக்தம் என்பது இவர்களுக்குரிய இன்றியமையாத பகுதியாகும். இவையன்றிய 'பிரஸ்தானதிரயம்' எனக் குறிக்கப்பெறும் உபநிடதங்கள், வேதாந்த

1. திருமுரு காற்றுப்படை
2. நற்றிணை
3. பதிற்றுப் பத்து - 2, 5 அடி - 39.
4. பரிபாடல்
5. கலைக்களஞ்சியம்.

சூத்திரம், பகவத்கீதை எனும் மூன்று நூல்களையும் மிகச்சிறப்பாகப் போற்றுவர். ஆகமங்களில் வைகானசம், பாஞ்சராத்திரம் எனும் இரண்டும் குறிப்பிடத் தக்கனவாம். பதினெண் புராணங்களுள் விஷ்ணு புராணம், பாகவதம், நாரதீயம், காருடம் ஆகிய நான்கும் குறிப்பாக இவர்களால் போற்றப்பெறும் நூல்களாம். இதிகாசங்களில் பாரதமும், இராமாயணமும் குறிப்பிடத்தக்கனவாம். தோத்திர நூல்களில் விஷ்ணு சகஸ்ரநாமம் என்பது குறிப்பிடத்தக்கதாம். இவற்றோடு பன்னிரண்டு ஆழ்வார்களும் பாடி அருளிய நாலாயிர திவ்யப்பிரபந்தம் மிகச் சிறப்பாக இவர்களால் போற்றப்பட்டு வருகிறது[1]. வைணவர்களால் பெரிதும் போற்றப்பெறும் இத்திவ்யப்பிரபந்தத்தில் நம்மாழ்வார் அருளியவற்றை வேதங்களாகவும், திருமங்கைமன்னர் அருளியவற்றை வேதங்களின் அங்கங்களாகவும் கருதிப் போற்றும் மரபு உண்டு. இவற்றிற்கு அமைந்த உரைகளும் இவர்களால் போற்றப்பெற்று வருகின்றன.

நம்மாழ்வார் பாடியவை

1. திரு விருத்தம் - இருக்கு வேதசாரம்
2. திரு வாசிரியம் - யசுர் வேதசாரம்
3. பெரிய திருவந்தாதி - அதர்வண வேதசாரம்
4. திருவாய்மொழி - சாம வேதசாரம்

திருமங்கை மன்னன் பாடியவை

1. பெரிய திருமொழி
2. திருக்குறுந்தாண்டகம்
3. திருநெடுந்தாண்டகம்
4. திருவெழுகூற்றிருக்கை
5. சிறியதிருமடல்
6. பெரியதிருமடல்

இவை வேத அங்கங்களாகக் கருதப்படுபவை.

வைணவக் கோட்பாடுகள்

24வது தத்துவத்திற்கு மேல் உள்ள 25-வது தத்துவம் வாசுதேவனாவன் அவனே பரம் பொருள். அவனிடத்தினின்றும் கண்ணன், அனிருத்தன், மகரத்துவசன், இரௌகிணேயன் என நால்வரும் உலகங்களைப் படைத்தல் பொருட்டு தோன்றினர். இந்த் நால்வரால் அறிவுடையதும், அறிவற்றதுமாய இவ்வுலகங்கள் அனைத்தும் படைக்கப் பெற்றன. இவையனைத்தும் வாசுதேவன்

1. வைணவ சமயம், ப. 43

வளர்ச்சியாம். இத்தத்துவத்தைக் கூறும் பாஞ்சராத்திரிகமே உயிர்க்கு உறுதி கூறுவதாகும். இந்நூலினின்று தீக்கை பெற்று வாசுதேவனை வழிபட்டு அப்பெருமானின் உருவில் ஒன்று படுதலே வீடுபேறாகும்' என இம்மதக் கோட்பாட்டைக் சிவஞான முனிவர் சுருங்கக் கூறுவர்.

வைணவர்கள் தம் தத்துவங்களை அறுவகைப்படுத்தி விளக்குவர். 1. இறைவன் 2. உயிர் 3. பிரகிருதி 4. காலம் 5. சுத்த தத்துவம் 6. தர்ம பூத ஞானம். இவ்வறு வகைப் பொருள்களையும் சடதிரவியம், அசடதிரவியம் என இருவகைப் படுத்துவர். தானே ஒளி செய்வது அசடம் ஆகும். அதற்கு மாறாயது சடம் ஆகும். முற்கூறிய அறுவகைப் பொருள்களுள் பிரகிருதியும், காலமும் சடம் ஆகும். ஏனைய அசடம் ஆகும்[1].

1. இறைவன்

திருமாலே இம்மதத்தின் முதற்கடவுள் ஆவர். இவ்வாறு இவர்கள் கருதுதற்குப் பின்வரும் காரணங்களைக் காட்டுவர். 1. வேதத்தில் ஓரிடத்தில் உருத்திரன் பிறப்பு வகைப்பட்டவன் எனக் கூறுவதால் அவன் ஒரு காலத்தில் வினைநீக்கம் பெறப் பிறந்தவன் ஆகின்றான். 2. வேதத்தில் பிறிதோரிடத்தில் ஊழிக் காலத்தில் ஈசானன் (உருத்திரன்) இல்லை எனக் கூறப்படுவதால் ஊழி முடிவின்காறும் இருக்கும் நிலை அவனுக்கு இல்லை என்று ஆகிறது. 3. வேதங்களில் நான்முகன் பிறப்புடையவன்: அழிக்கப்பட்டவன் எனக் கூறப்படுவதால் அவனும் முழுமுதற் பொருளாதற்கு இல்லை. 4. இனி இந்திரன், கதிரவன், வருணன் முதலாயவர்களும் பிறப்பு, இறப்புக்கு உட்பட்டவர்கள் என வேதம் கூறுதலின் அவர்களும் முழுமுதற் பொருளாதற்கு இல்லை. 5. வேதத்தில் சிவம் எனும் சொல் குறிக்கப்பட்டிருப்பினும் அச்சொல் மங்கலம் உடையவன் எனும் பொதுப் பொருண்மையே குறித்து நிற்கின்றது. திருமாலும் மங்கலம் உடையவன் ஆதலின் அவனும் சிவனே யாவன் என்பர்.[2] இவ்வாறு கூறப்பெறும் திருமால் ஒருவனே எனினும் தான் கொள்ளும் திருமேனி வேறுபாட்டால் ஐவகைப் படுவன். அவை பரம், வியூகம், விபவம், அந்தர்யாமித்துவம், அர்ச்சை என்பன.

1. **பரம்** - மேலான வடிவம். திருவைகுந்தத்தில் திருமகளோடு வீற்றிருக்கும் நிலை இதுவாம். இதனைத் திவ்ய மங்கள சொரூபம் என்பர்.
2. **வியூகம்** - வெளிப்பட்ட வடிவம். திருப்பாற்கடலில் தேவர்கள் வழிபட நிற்கும் திருக்கோலம் இதுவாம்.
3. **விபவம்** - அவதாரத் தோற்றம் பெற்ற வடிவம். அறத்தைக் காக்கவும், மறத்தை அழிக்கவும் அவ்வப்போது தோன்றி உருக்கொள்ளும் வடிவம் இதுவாம்.

---

1. வைணவத் தத்துவ ஞான அடிப்படைகள், ப. 102 - 103.
2. வைணவத் தத்துவ ஞான அடிப்படைகள், ப. 184 - 185.

4. **அந்தர் யாமித்துவம்** - உள்ளுறை வடிவம். இயங்கு திணை, நிலைத்திணை ஆகிய பொருள்களில் எல்லாம் உள்ளுறைந்து நிற்கும் நிலை இதுவாம்.

5. **அர்ச்சை** - வழிபடுதற்குரிய வடிவம். திருக்கோயில்களிலும், இல்லங்களிலும் தொழப்படும் வடிவம் இதுவாம்[1].

அவதாரங்கள்

அறத்தைக் காக்கவும் மறத்தை அழிக்கவும் திருமால் கொண்ட அவதாரங்கள் பலவாம். அவற்றுள் மீன், ஆமை, பன்றி, நரசிங்கம், நெடியோன், பரசுராமன், இராமன், பலராமன், கண்ணன், குதிரை என்பன குறிப்பிடத்தக்கனவாம். இவற்றைத் தசாவதாரங்கள் என்பர். இவையன்றிக் கபிலர், வியாசர், புத்தர் முதலியவர்களாகவும் அவதரித்தான் எனக்கூறுவதுண்டு.

திருமால் இவ்வாறு வடிவு கொண்டருளிய நிலையை அவதாரம், ஆவேசம், அமிசம் எனப் பிரித்துக் கூறுவதுண்டு. இராமன், கண்ணன் ஆகிய இவ்வடிவுகளே அவதாரம் என்பர். பரசுராமன் வடிவினை ஆவேசம் என்பர் திருமங்கையாழ்வார், பொய்கையாழ்வார் ஆகிய இவ்விருவரையும் முறையே வில், சங்கு ஆகியவற்றின் அம்சம் என்பர்[2].

உருக்கொள்ளும் நிலை

திருமால் பகவான் எனும் சொல்லால் பெரிதும் அழைப்பர். பகம் - ஆறு. ஞானம், சக்தி, பலம், ஐசுவரியம், வீரியம், தேஜஸ் எனும் அறுவகைக் குணங்களும் உளவாதல் பற்றிப் பகவன் என்றார் என்பர்[3].

1. ஞானம் - எக்காலங்களிலும் எல்லாவற்றையும் அறிந்திருப்பது.
2. சக்தி - அளவில் ஆற்றல்; தம்முள் பகையுடையவற்றையும் பகைமை நீக்கிக் காக்கும் திறன்.
3. பலம் - தன் நினைவு மாத்திரையில் அனைத்தையும் தாங்கிக் கொள்ளும் தகவு.
4. ஐஸ்வரியம் - அனைத்தையும் நியதிக்கும் தகுதி.
5. வீரியம் - தன் செயல்களில் என்றும் தளர்ச்சியின்றி இருத்தல்.
6. தேஜஸ் - பிறரை வெற்றி கொள்ளும் வல்லமை.

இவையன்றித் தம்மில் தாழ்ந்தவனுடன் பழகும் தன்மையும், அடியார்கள் குற்றத்தையும் குணமாகக் கொள்ளும் தன்மையும், அடியவரின் பிரிவைப்

---

1. வைணவத் தத்துவ ஞான அடிப்படைகள், பக். 196 - 204.
2. வைணவ சமயம், ப. 14 - 15.
3. வைணவ வினாவிடை, ப. 14.
4. வைணவ வினாவிடை, ப. 11.

பொறுக்கலாகாத்தன்மையும், மனம், மொழி, மெய்கள் ஒருபடித்தாக இருக்கும் நேர்மை முதலான தன்மைகளும் அவனுக்கு உண்டென்பர்[1].

மூவகைக் காரணமுடையவன்

ஊழிக்காலத்தில் நுண்ணியநிலை அமைந்த (சூட்சுமநிலை) அறிவுடைப் பொருள்களையும் அறிவில் பொருள்களையும் உடலாகக் கொண்டவன். அவற்றிலிருந்து மீண்டும் அறிவுடைப் பொருள்களையும் அறிவில் பொருள்களையும் தோற்றுவித்தலின் அவனே முதற்காரணமாகின்றான். இவ்விரு பொருள்களினோடும் உள்நின்று இயக்குதலின் அவனே துணைக் காரணமு மாகின்றான். அறிவுடையதும், அறிவற்றதுமாய அப்பொருள்களை மீளவும் தன்னிடத்தினின்றும் படைத்தலின் நிமித்த காரணமும் ஆகின்றான்.

கைக்கொள்ளும் கருவிகள்

திருமால் கைக்கொண்டிருக்கும் கருவிகள் ஐந்தென்பர். அவை சங்கு, சக்கரம், கதை, வில், கத்தி என்பனவாம்[2].

தேவியர் மூவர்

திருமாலின் தேவியர்கள் மூவர் ஆவர். அவர் திருமகள், நிலமகள், ஆயர்மகள் (நீளாதேவி) என்பர். திருமகளோடு கூடிய திருமாலை நினைத்து வணங்குவதே ஸ்ரீ வைஷ்ணம் ஆகும். இப்பெருமகள் செல்வத்திற்கு மட்டும் தலைவி அல்லள். வீடுபேற்றை அடையவும் துணைபுரிபவள். இரத்தினம் ஒளியைவிட்டு இராது. அதுபோலப் பெருமானும் பிராட்டியை விட்டு இரான் என்பர். திருமகள் உயிர்களின் குற்றத்தைப் பொறுக்கத் திருமாலிடம் பரிந்துரை செய்பவள் என்றும், நிலமகள் உயிர்களின் குற்றத்தைக் குற்றம் என்றே கருதாது அருள வேண்டுமெனப் பரிந்துரை செய்பவள் என்றும், ஆயர்மகள் தன் இன்ப மயக்குகளால் உயிர்களின் குற்றங்களைத் திருமாலின் கண்களுக்குப் புலப்படாமலே செய்பவள் என்றும் கூறுவர்[3].

உயிர்

உயிரும் இறைவனும் தம்மைப் பிறர்க்கு அறிவித்துக் கொண்டே இருக்கும் வகையில் ஒப்புமை உடையராவர். எனினும் உயிர்க்கெனப்பல தனித்தன்மைகள் உள்ளன. உயிர் நெல் நுனியில் பல்லாயிரத்தில் ஒரு பகுதியின் பகுதியாகிய அணுவளவாயது. இன்ப துன்பங்களை நுகர்தற்குரியது. இறைவனின் உடலாகவும் வினைவழி வந்த உடலைத் தாங்குவதாகவும் விளங்குவது உயிர் அறிபவனாயும்,

1. வைணவத் தத்துவஞான அடிப்படைகள், பக். 137 - 138.
2. வைணவ வினாவிடை, ப. 18.
3. வைணவ வினாவிடை, ப. 11-12.

அறிவாயும், அறியப்படுவதாயும் இருக்கும் இறைவனால் படைக்கப்பட்டது. அழியாதது, அறிவாயது[1].

இத்தகைய பல சிறப்புக்கள் இருப்பினும் ஒரு சிறுமையும் அதற்குண்டு. எதனையும் தானே செய்ய இயலும் எனும் தலைமைச் செருக்கு (கர்த்திருத்துவம்) உடைமையே அது. ஈதொன்றே அது மீண்டும் பிறப்பு எடுத்தற்குக் காரணமாகின்றது என்பர். இதுவன்றி இறைவன் தன் விளையாட்டால் (லீலையால்) இவ்வுலக உயிர்களைப் படைக்கின்றான் என்று கூறுவதுமுண்டு.

'உலகம் யாவையும் தாமுள வாக்கலும்
நிலைபெறுத்தலும் நீக்கலும் நீங்கலா
அலகிலா விளையாட்டுடையான் அவன்
தலைவன் அன்னவர்க்கே சரணாங்களே'

எனக் கம்பர் கூறுவதும் காணத்தக்கது.

வினைவயப்பட்ட பிறப்பு, இறப்புக்களால் வினை மாசு நீங்கிய உயிர் மீண்டும் ஒளிவிட்டு விளங்கும். அதாவது அறிவு பெற்று விளங்கும். இது அழுக்குப் படிந்த வயிரமணி அவ்வழுக்கை நீக்க ஒளிவிட்டு ஒளிர்வது போலவும், நிலத்தடியில் மூடிக் கிடக்கப்பட்ட நீர் அதன் மேலுள்ள மண்ணையும் பாறையையும் அகழ அந்நீர் வெளிப்படுவது போல்வதுமாம். இவ்வாறாய உயிர்கள் ஒன்றல்ல பலவாம்.

உயிர்களைப் பெத்தர், முத்தர், நித்தியர் என மூவகைப்படுத்துவர்.

1. பெத்தர்

இவர்கள் உலகியல் வயப்பட்டவர்கள். அதனோடு கட்டுண்டவர்கள். பதினான்கு உலகங்களிலும் உள்ள அயன் முதல் புழுக்கள் வரையுள்ள உயிர்கள் பெத்தர் எனப்படுவர். இவர்கள் தேவர், மனிதர், திரியக்குகள் (விலங்கு, பறவைகள்) தாவரங்கள் என நால்வகைப்படுவர். இவ்வுயிரினங்கள் பிறக்குமிடங்களும் கருப்பை, முட்டை, முளை, வியர்வை என நான்குவகைப்படும்[1].

மனித உயிர்களுள் அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நான்கனுள் ஒரோ ஒன்றையே விரும்புபவரும் உண்டு. ஒன்றுக்கு மேற்பட்ட வற்றை விரும்புவோரும் உண்டு. இவர்களுள் வீடுபெற விரும்புவோர் பக்தர், பிரபன்னர் என இருவகைப் படுவர்.

பக்தர்

இவர்கள் மறைகளைக் கற்பர். பொறிவாயில் ஐந்தவிப்பர். உலகியற் சூழல்களை விடுத்துப் பரம பதத்தை அடைதற்கு விரும்புவர். இதற்கென இவர்கள் மேற்

1. வைணவத் தத்துவஞான அடிப்படைகள், ப. 164.

கொள்ளும் வழிகள் மூன்றென்பர். அவை, கரும யோகம், ஞான யோகம், பக்தி யோகம் என்பனவாம். இவற்றுள் முன்னைய இரண்டும் பக்தி உண்டாதற்குரிய கருவிகளேயாம். இம் மூவகை நிலைகளும் ஒருவர்க்குப் படிப்படியாக அமைதலும் உண்டு. கரும யோகத்தாலேயே பக்தி ஏற்படுவதும் உண்டு.

கரும யோகம்

இறை வழிபாடு, தவம், வேள்வி, தீர்த்த யாத்திரை, தானம் முதலிய செயல்களில் பயன் கருதாது ஈடுபடுதலே இவ்யோகமாகும்.

ஞான யோகம்

மனமாசின்றி உலகியல் தொடர்புடைய உயிரை இறையடிக்கு ஆளாக்குவதே இவ்யோகமாகும்.

பக்தியோகம்

இது இயமம் முதலாகத் தியானம் ஈறாக ஏழுபகுதிகளை உடையது. இவ்வேழு நிலையிலும் பயின்ற திறத்தால் சமாதி நிலை கைகூடும். இவையன்றி விவேகம், விமோகம், அப்பியாசம், கிரியை, கல்யாணம், அனவசாதம், அனுதர்ஷம் ஆகிய சாதனங்களும் வேண்டும் எனக் கூறுவதும் உண்டு.

1. **விவேகம்** : இறைவன் வாழும் உடலைச் சத்துவகுணம் முதலியவற்றால் தூய்மையுறச் செய்வது இது புறத்தூய்மை எனப்படும்.
2. **விமோகம்** : உலகியற் பொருள்களில் விருப்பின்றி வாழும் அகத்தூய்மை.
3. **அப்பியாசம்** : இறைவன் உண்டு என்றும், அவன் உயிர்க்குயிராய் உறைபவன் என்றும் இடையறாது நினைந்து வாழ்தல்.
4. **கிரியை** : தேவயக்ஞம் (தேவர்களுக்குச் செய்யும் வழிபாடு), பிரமயக்ஞம் (ஓதலும் ஓதுவித்தலும்), பித்துரூயக்ஞம் (தென் புலத்தார்க்குச் செய்யும் கடன்), மனுஷயக்ஞம் (ஐயம் இடுதல்), பூதயக்ஞம் (உயிர்கள் மாட்டு அருளுடைமை) எனும் ஐவகை வேள்விகளையும் ஆற்றுதல்.
5. **கல்யாணம்** : வாய்மை, தீயன நினைதலும் சொல்லுதலும் செய்தலும் இன்மை, எஞ்ஞான்றும் திருத்தகவிற்றாயதோர் உள்ள நிகழ்ச்சி முதலான நற்பண்புகளைக் கொண்டிருத்தல்.
6. **அனவசாதம்** : துன்பத்துள் துன்பப்படாமை.
7. **அனுதர்ஷம்** : இன்பத்துள் இன்பம் விழையாமை[1].

---

1. வைணவத் தத்துவஞான அடிப்படைகள், ப. 144-147.

இவ்வாறு கருமயோகம், ஞானயோகம் ஆகியவற்றால் உண்டாகும் பத்திமையைச் சாதன பக்திஎன்பர். இறைவனின் வற்றாத கருணையே காரணமாகப் பிறக்கும் பத்திமையைச் சாத்திய பக்தி என்பர். நம்மாழ்வார் போன்றோருக்கு வந்த பத்திமை இத்தகைமையதேயாம்.

பிரபன்னர்

பத்திமைக்குரிய நெறிகளைக் கையாளும் ஆற்றலும் வேறு யாதொரு பற்றுக்கோடும் இல்லாது திருமாலின் திருவடித் தாமரைகளையே சரணடைபவர் பிரபன்னர் ஆவர். இவரும் மறைகளை நன்கறிந்திருப்பர். எவ்வுயிரும் தன்னுயிர் போல் எண்ணி இரங்குவர். தாம் கொண்ட கொள்கையில் உறைப்பாக நிற்பர். தக்க குருவினை அடைந்து அவர்வழிப் பிராட்டியாரிடத்து முன்னர்ச் சரணடைந்து பின்னர்த் திருமாலைச் சரணடைவர். இவரும் ஸ்வநிஷ்டன், ஆசாரிய நிஷ்டன், உக்தநிஷ்டன் என மூவகைப்படுவர். இவருள் முன்னவர் துவய மந்திரத்தின் பொருளை நன்கறிந்து தாமாகவே திருமாலைச் சரணடைந்தவர் ஆவர். இரண்டாமவர் தம் குருவானவர் சரணடைந்ததையே தமக்கும் அமைவதாகக் கருதி திருமாலைச் சரணடைந்தவர் ஆவர். மூன்றாமவர் துவயத்தின் பொருளை ஆழமாக உணராது, தம் நாவில் உச்சரித்த வண்ணம் திருமாலைச் சரணடைந்தவர் ஆவர். இம்மூவரில் இரண்டாமவரே ஆழ்வார்களாலும் ஆசிரியர்களாலும் பாராட்டப்படுபவர் ஆவர்[1].

பக்தர், பிரபன்னர் ஆகியோர் கொள்ளும் நெறிகளில் பல வேற்றுமைகள் உள்ளன. அவை வருமாறு:-

பக்தர்	பிரபன்னர்
1. பக்தர் தம் நுகர்வினையைத் துய்த்தே தொலைத்தல் வேண்டும்.	1. பிரபன்னர்க்கு எஞ்சிய நுகர்வினையை இறைவன் கழித்து விடுவன்.
2. பக்தர் இறக்கும் பொழுதும் இறைவனையே நினைத்தல் வேண்டும்.	2. பிரபன்னர்க்கு இந்நிலை இல்லை.
3. பக்தர் தம் வாழ்நாள் முழுதும் இறைவனிடத்துப் பத்திமை பூண்டிருக்க வேண்டும்.	3. பிரபன்னர்க்குச் சரணடைதலே சாலும்.
4. பத்திமை நெறி, தேவர்களும் முதல் மூன்று வர்ணத்து ஆண்பாலார் களும் மட்டுமே கைக்கொள்ளுதற் குரிய நெறியாகும்.	4. இந்நெறி யாவர்க்கும் உரியது.[2]

1. வைணவத் தத்துவஞான அடிப்படைகள், ப. 170-172.
2. வைணவத் தத்துவஞான அடிப்படைகள், ப. 153-154.

ஒற்றுமை

உயிர் நிறைவாக வீடு பெற வேண்டும் என்பதில் இருவர்க்கும் கருத்து வேற்றுமையில்லை.

முத்தர்

இவர் வீடு பேற்றில் விழைவுடையவர். அதற்குரிய நெறிகளைப் பற்றிய பின் உலகப் பற்றை முழுமையாக விட்டு விடுவர். சிறப்பொடு பூசனை செய்வர். இறைவனின் உவப்பையே பலனாகக் கருதிச் செய்வர். இவ்வனைத்தையும் குருவருள் துணை கொண்டே செய்வர். இறைவன், அவன் அடியவர், குரு ஆகியோர்க்கு மனத்திலும் தீங்கு செய்ய நினையார். முற்கூறிய பெத்தர் தாம் செய்யும் செயல்களுக்கு வீடுபேற்றைப் பயனாகக் கருதுவர். இம்முத்தரோ தாம் இறைவற்குச் செய்ய நேர்ந்த செயல்களையே பயனாகக் கருதிச் செய்வர். இவர் துறக்கம் புகுங்கால், இவர் செய்த இருள்சேர் இருவினையும் அவரைச் சேரா[1].

நித்தர்

மலர்தலும் கூம்பலும் இல்லது அறிவு என்பர். அத்தகைய அறிவு வாய்க்கப் பெற்றவர் இவர். இறைவன் உவக்கும் செயலையே செய்து நிற்பர். அனந்தன், கருடன் முதலியோர் இவ்வகையினர் ஆவர். இறைவன் தமக்கு வகுத்த பணியை இவர்கள் செய்து நிற்பர். இவர்கள் தம் இச்சையால் அவதாரம் செய்தலும் உண்டு[2].

பிரகிருதி

சத்துவம், இராசசம், தாமசம் ஆகிய முக்குணங்களையும் சமனாகப் பெற்றிருப்பது பிரகிருதி ஆகும். இது அழிவற்றது. சமனாக உள்ள இக்குணங்களே ஏற்றத்தாழ்வு ஏற்பட்டு மற்றவற்றைப் படைக்கும் பொழுது அது அவ்வியக்தம் எனப் பெயர் பெறும். பிரகிருதி எனப்படும் இவ்வுலகம் இறைவன் விளையாடுதற்குரிய இடமாக இருத்தலால் இதனை லீலாவிபூதி என்பர். லீலை - விளையாட்டு இவ்வுலகிற்கு அப்பாற்பட்டதாய் இறைவன் வீற்றிருக்கும் பரமபதத்தை நித்திய விபூதி என்று அழைப்பர்.

ஏற்றத் தாழ்வான பிரகிருதியிலிருந்து மகான் தோன்றும். அதிலிருந்து அகங்காரம் தோன்றும். அவ்வகங்காரம் சாத்துவிக அகங்காரம், தாமச அகங்காரம், இராசச அகங்காரம் என மூவகைப்படும். இராசச அகங்காரத்தின் துணையினால் சாத்துவிக அகங்காரத்திலிருந்து அறிகருவிகளும், (மெய், வாய், கண், மூக்கு, செவி) தொழிற் கருவிகளும் (கை, கால், வாய், எருவாய், கருவாய்) தோன்றும். உயிர் அறிவு பெறுதற்கு அறி கருவிகள் ஐந்தும் மனமும் பயன்படும்.

---

1. வைணவத் தத்துவஞான அடிப்படைகள், ப. 174.
2. வைணவத் தத்துவஞான அடிப்படைகள், ப. 178.

அம்மனம் ஒரு பொருளை உறுதிசெய்யும் வகையில் புத்தி எனப்படும். ஒன்றை ஒன்றாகக் கருதி தடுமாறும் நிலையில் அகங்காரம் எனப்படும். ஒரு பொருளைச் சிந்தித்து ஆராய்கின்ற பொழுது சித்தம் எனப்படும். இங்குக் கூறப்பெற்ற மனமும், அது செயற்படுங்கால் புத்தி, அகங்காரம், சித்தம் என வேறுபடுவன மூன்றும் அகக்கருவிகள் (அந்தக்கரணங்கள்) எனப் பெயர் பெறும்.

இனி ஐம்பெரும் பூதங்களும் தோன்றுதற்குக் காரணமாக இருப்பன தன்மாத்திரைகள் ஆகும். அவை ஒலி, ஊறு, ஒளி, சுவை, மணம் என்பன. இவை முறையே விண், காற்று, தீ, நீர், நிலம் ஆகியவற்றிற்குக் காரணமாகும் என்பர். ஒலி முதலிய குணங்கள் மிகவும் நுட்பமானவை. இவற்றிற்கு இருப்பிடமாக இருப்பனவே இத்தன்மாத்திரைகளாகும்.

இவ்வைம் பெரும் பூதங்களின் கூட்டே இவ்வுலகாகும். ஐம் பெரும் பூதங்களும், பிரகிருதி, மகான், அகங்காரம் ஆகிய எட்டும் உடல் தோற்றத்திற்கு முதற்காரணம் ஆகும்[1].

காலம்

இது கண்ட காலம். அகண்ட காலம் என இருவகைப்படும். ஒரு காலத்தின் பகுதியாக இருப்பது கண்ட காலமாம். நாழி, பகல், இரவு என்பன இவ்வகையில் அடங்கும். அகண்ட காலம் என்பது ஒரு காலத்தின் உட்பகுதியாகவன்றிப் பொதுவாக நிற்பதாம். அவை இறப்பு, எதிர்வு, நிகழ்வு என்பனவாம். இறைவனின் படைப்பிற்கு இக்காலம் ஒரு துணைக்காரணமாம்[2].

சுத்த தத்துவம்

இது இவ்விலகிற்கு அப்பாற்பட்டதாகும். இறைவன் வீற்றிருப்பதற்கு உரியதாகும். இதனை நித்திய விபூதி என்பர்[3].

தர்ம பூதஞானம்

இறைவனுக்கும் உயிருக்கும் எப்பொழுதும் இயல்பாக உள்ள அறிவைத் தர்ம பூத ஞானம் என்பர். தர்மம் - இயல்பாக உள்ளது. இவ்வறிவு தானாகவே காட்டிக் கொண்டிருக்கும். பொருள்களை அறிவிக்கும். எங்கும் பரவியிருக்கும். ஒரு பொருளின் குணமாக இருக்கும். அழியாததாக இருக்கும். இவ்வறிவு அஜடம், அசேதனம் என்று இருவேறு இயல்புகளையுடையது. மற்றொன்றில் உதவியின்றி உயிர்க்குத் தானே தன்னை அறிவிப்பதால் அஜடம் ஆகின்றது. தனக்கோர் குணமின்றி வேறோர் அறிவைப் பெறாமல் இருப்பதால் அது அசேதனமும் ஆகின்றது[4].

---

1. வைணவத் தத்துவஞான அடிப்படைகள், ப. 103.
2. வைணவத் தத்துவஞான அடிப்படைகள், ப. 118.
3. வைணவத் தத்துவஞான அடிப்படைகள், ப. 121.
4. வைணவத் தத்துவஞான அடிப்படைகள், ப. 130.

இத்தத்துவங்களைத் திருமால் தன் அணிகலனாகக் கொண்டுள்ளார் என விஷ்ணு புராணம் கூறுகின்றது.

கௌத்துவம்	-	புருட தத்துவம்
ஸ்ரீ வத்சம்	-	பிரகிருதி தத்துவம்
கதாயுதம்	-	புத்தி தத்துவம்
நாந்தகவாள்	-	தர்ம பூதஞானம்
வாளின்உறை	-	அஞ்ஞானம்
சார்ங்க வில்	-	சாத்துவிக அகங்காரம்
பாஞ்ச சன்யம்	-	தாமச அகங்காரம்
சுதரிசனசக்கரம்	-	அதி சஞ்சல மனம்
பத்து அம்புகள்	-	பத்து இந்திரியங்கள்
துளசி மாலை	-	ஐம்புலன்கள், ஐம்பூதங்கள்[1]

திருமந்திரம்

வைணவர்கள் சிறப்பாகக் கூறும் மந்திரங்கள் மூன்றாம். அவற்றை மந்திரத் திரயம் என்பர். 1. ஓம் நமோ நாராயணாய என்பது. இதனை எட்டெழுத்து மந்திரம் என்பர். இத் திருமந்திரம் ஒன்றே அனைத்துப் பேறுகளையும் நல்க வல்லது என்பர். இத் திருமந்திரத்தின் முதலில் விளங்குவது ஓம் என்பதாகும்.

இதனைப் 'பிரணவம்' என்பர். அ + உ + ம் என மூன்றெழுத்துக்கள் இதன்கண் உள்ளன. இவ்வகரம், அனைத்தும் நாராயணனின் உடைமை என்பதைக் குறிக்கும். உகரம் உயிர்கள் அனைத்தும் தம் வயத்தன அல்ல என்பதைக் குறிக்கும். மகரம் உயிரைக் குறிக்கும். அடுத்த தொடர் நார + அயண + ஆய என மூன்று சொற்களாகப் பிரிக்கப்படும். நார - அழியாப் பொருள்; அயண - இருப்பிடமாய் உள்ளவன்; ஆய - எல்லாவிதமான தொண்டுகளையும் செய்யும் கடமை யுடையவனாய் இருப்பவன் எனப் பொருள்படும். எனவே 'அழிவில் பொருள் அத்தனைக்கும் இருப்பிடமாய் உள்ள நாராயணனுக்கு அனைத்துத் தொண்டுகளையும் செய்யக் கடவேன் ஆகுக' என்பது இதன் பொருளாகும். நம என்பது நான் தன் வயத்தனல்லன் என்பதைக் குறிக்கும். இவ்வாறன்றி இதற்கு வேறு பொருள் கூறுவதும் உண்டு. நம்மை இன்றி அவனில்லை; அவனின்றி நாமில்லை என்பதும், அவனுக்கே ஆட்பட்டு வாழ வேண்டும் என்பதும், செய்பவனும் செய்விப்பவனும் அவனே என்பதும் இதன் சுருக்கமான பொருளாகும் என்றும் கூறுவர்.

2. **துவைய மந்திரம்:-** இது இரண்டு அடிகளால் அமைந்திருத்தலின் இப்பெயர் பெற்றது.

"ஸ்ரீமத் நாரயண சரணௌ சரணம் பிரபதயே
ஸ்ரீமதே நாராயணாய நம"

3. **சரம சுலோகம்:-** இறுதியாக இருப்பது. அஃதாவது பகவத் கீதையின் இறுதியில் இருப்பது.

"சர்வ தர்மான் பரித் யஜ்ய ஏகம் சரணம் வ்ரஜ|
அஹம் த்வா சர்வ பாவேப்யோ மோஷயிஷ்யாமி மாசுச||

இதன் பொருளாவது: இறைவனை அடைதற்குரிய சாதனங்களை முழுதும் விட்டு என் ஒருவனையே சரணாகப் பற்று. நான் உன்னை எல்லாப் பாவங்களினின்றும் விடுவிப்பேன், வருந்தாதே' என்பதாகும். பின்னைய இரு மந்திரங்களையும் முறையே ஐயைந்து, நாலெட்டு எனவும் கூறுவர்.

வினை:- உயிர் அறிவு மயமாயது. எனினும் தானெ அனைத்தும் செய்ய வல்லமை யுண்டு எனக் கருதும் தன்முனைப்பு அதன் பால் உண்டு. இதனைக் 'கர்த்திருவம்' என்பர். இவ்வறிவுக் குறைவினாலேயே உயிர், நலம், தீங்குகளைச் செய்கின்றது. நீர் நெருப்பின் சேர்க்கையால் வெப்பம் கொள்வது போல இவ்வறியாமையின் கூட்டால் உயிர் வினையைப் பெறுகிறது. இவ்விருவினையே பிறப்பிற்கு வித்தாகிறது.

இவ்வினை பூர்வாகம், உத்தராகம் என இருவகைப்படும். பூர்வாகம் என்பது உயிர் அளவின்றி ஈட்டப்பட்ட வினைகளுள் பிறந்த உடம்பால் முகந்து நின்றன போக எஞ்சிய வினையாகும். உத்தராகம் என்பது வினைக்கு ஈடாய உடலெடுத்த உயிர் அறியாமையாலும், முன்னைய பழக்கத்தாலும் மேலும் செய்து கொள்ளும் வினைகளாகும். இவ்விரு வினைகளையும் பாவம் என்ற பொதுப் பெயராலும் அழைப்பர்.

''போய பிழையும் புகுதருவான் நின்றனவும் தீயினில் தூசாகும்' என ஆண்டாள் குறிப்பிடுவதும் இவ்விருவகை வினைகளேயாகும். நுகர்வினை, (பிராரத்த வினை) எடுத்த உடலொடு முடிவதாகும். முத்தர்கள் வீடுபேறு அடையுங்கால் அவர் செய்த நல்வினை நண்பர்களுக்கும், அவர் செய்த தீவினை பகைவர்க்கும் சேரும் என்பாரும் உண்டு.

மேலும் உயிர் அறிவில் பொருளோடு கொண்ட தொடர்பால் அதற்கு ஒருவகை மயக்கம் ஏற்படும் என்றும், அம்மயக்கம் வீடுபேற்றிற்குத் தடையாகும் என்றும் கூறும் இவர்கள் அத்தடையை ஐவகைப்படுத்தியும் விளக்குவர்.

1. **சொரூபஞானத்தடை:-** இறை இயல்பை அறிதற்குத் தடையாக இருப்பதை இவ்வாறு குறிப்பிடுவர். உடலையே உயிராகவும், அவ்வுயிரையும் தன்வய முடையதாகவும் கருதும் மயக்கமே இதுவாகும்.

2. **இறைஞானத்தடை:-** நாராயணனே பரம் பொருள் எனத் துணியாமையும், அப்பொருளொடு ஒப்பப் பிறதெய்வங்களும் உளவெனக் கருதுதலும், அவதாரத் திருமேனியை மனிதத் திருமேனியாகக் கருதுவதும்,

திருக்கோயிலிலும், வீட்டிலும் இருக்கும் இறையுருவங்களை அறிவற்ற பொருளெனக் கருதுதலும் இறைஞானத்தடையாகும்.

3. **வாழ்க்கைப்பயணத்தடை:-** இறைபணி அன்றித் தன் பணி செய்தல் வாழ்க்கைப் பயணத்திற்குத் தடையென்பர்.

4. நெறிக்குத்தடை:- இது சரணாகதி நெறியில் ஐயுறுவதாகும்.

5. பேற்றுக்குத்தடை:- உலகியல் பற்றால் இறைவனையும், அவன் அடியார்களையும் போற்றாது இருப்பதாகும்.

வீடுபேறு

வீடுபேறடையத்தக்க முத்தன் இப்பருவுடலை விட்டு விடுவன். தன் இதயத்திலிருக்கின்ற பரம்பொருளிடம் ஓய்வு பெறுவன். வீட்டுலகிற்கு முதல் வாயிலான அக்னி உலகிற்குச் செல்வன். வழியில் பகல், சுக்கில பட்சம், உத்தராயணம், ஆண்டு ஆகியவற்றின் தேவதைகளும், வளியும் வந்து எதிர் கொண்டு போற்றச் சூரியமண்டலம் சேர்வன். அந்தச் சூரியனின் தேர் உருளில் இருக்கும் துளை போல ஒருதுளை இருக்கும். அவ்வழியாகச் சூரிய மண்டலத்திற்குள் செல்வன். பின் சந்திரன், மின்னல், வருணன், இந்திரன், வியாழன் ஆகியோர் கையுறைகொண்டு எதிர்கொள்வர். அவர்களின் உலகங்களைத் தாண்டி இத்தகைய உலகிற்கும் வைகுந்தத்திற்கும் எல்லையாக உள்ள விரசயாற்றைக் கடப்பன், அது பொழுது இவனது நுண் உடல் விலகும். அங்குள்ள அமானவன் எனும் தெய்வம் தன் கைகளால் இவனைத் தீண்டுவன். அது பொழுது உலகியல் தொடர்பு முழுவதும் இவனிடத்து இல்லாததொரு உயரிய உடல் ஒன்றைப் பெறவன். அந்நிலையில் நான்கு கைகளும், பிரமத்துக்குரிய அலங்காரங்களும் உடையவனாய் இருப்பன். இந்திரன், துவாரபாலகர் ஆகியோர் தம் அனுமதியுடன் வைகுந்த நகரத்து உள்புகுவன். அப்பொழுது ஐராவதம் எனும் அமுதவாவியும், சோம வனம் என்னும் அரசமரத்தையும் காண்பன். அங்குள்ளோர் நூற்றுவராக நின்று மாலை முதலியன ஏந்திப் பிரமசந்தம் முதலியவற்றால் இவனை அழகுபடுத்துவர். அதன்பின் அனந்தன், கருடன், விசுவசேனர் ஆகியோரை வணங்கித் திருமாமணி மண்டபத்தைச் சார்வன். அம்மண்டபம் ஆயிரம் கால்களையுடையது. அம்மண்டபத்தில் திருவனந்தன் எழுந்தருளி இருப்பன். அவன் மேல் தர்மம், அதர்மம், ஞானம், அஞ்ஞானம், வைராக்கியம், ஐஸ்வரியம், அனைஸ்வரியம் எனும் எட்டுக் கால்களையுடைய சிரிய சிம்மாசனம் இருக்கும். அச்சிம்மாசனத்தின் மீது வீற்றிருப்பன் திருமால்.

குணக்குன்றாடி விளங்கும் இறைவன் இடத்திருவடியை நீட்டி வலத்திருவடியை மடககி, வலத்திருக்கை வலமுழந்தாளில் இருக்க, இடத்திருக்கை பாம்பணையில் ஊன்ற இருப்பவன். அந்நிலையில் சென்ற முத்தன் அப்பெருமானின் திருவடிகளை வணங்கிவிட்டுப் பின் அக்கட்டிலில் ஏறுவன். ஏறும் முத்தனைத் தம்மடியில்வைத்து, நீயாரென்று கேட்பன். நான் பிரமத்திற்கு உடலாக இருப்பவன் என அவன்கூற, இறைவனும் மகிழ்ந்து அருள்வழங்குவன். முத்தன் அவ்வருட்

பேற்றால் இறைவனின் அழகையும், குணங்களையும் நுகர்ந்து இன்புறும் நிலையில் மகிழ்ச்சியில் திளைப்பன்.

இம்மகிழ்ச்சிப் பெருக்கில் திளைத்து நிற்கும் முத்தன் தன் இச்சை வழிப் பற்பல திருமேனிகளைத் தாங்கிக்கொண்டு அனைத்துலகங்களிலும் சென்று உலாவி வருவன். அவ்வடிவு இறைவனின் அருள் பயனாகப் பெற்றதேயாம். இறைவனைப் போல முத்தன் அவதாரம் கொள்ளுதலும் உண்டு. அவ்வவதாரச் செயல்கள் அனைத்தும் இறைவனுக்குச் செய்யும் செயல்களாகவே அமையும். அவ்வாறு சென்றோன் மீண்டும் இங்கு வந்து வினைப் பிறவிசாரான்[1].

கைவல்யம்

மேற்கூறியவாறு அன்றிப் பரம பதத்தில் கைவல்யம் எனும் நிலையைப் பெற விரும்புவோரும் உண்டு. கைவல்யம் என்பது பரம பதம் சென்று இறையனுபவம் ஏதுமின்றி ஒரு மூலையில் இருந்து கொண்டு, தன்னை மட்டுமே அனுபவித்துக் கொண்டிருக்கும் நிலையாகும். இதனை நம்மாழ்வார் பெருந்துன்பச்செயலென்றும், திருமங்கை மன்னன் இறப்போடு ஒத்தது என்றும் கூறுவர். உலகில் நடைபிணமாக இருப்போரைப் போலப் பரம பதம் சென்றும் நடைப்பிணமாக இருக்கும் நிலை இதுவாம் என்பர்[2].

வைணவர்க்குரிய சமயக் கடன்கள்

ஸ்ரீ வைணவன் ஆவதற்கு மேற்கொள்ள வேண்டிய ஐந்துசமயக் கடன்களைப் பாஞ்சராத்திர ஆகமங்கள் கூறுகின்றன. அவை வைணவ சமய உண்மைகளை அறிவதற்கான தீட்சைகளாகும். 1. தாபம் - திருமாலின் சின்னங்களான சங்கு சக்கரங்களைத் தோள்களில் தரித்துக் கொள்வதாம். 2. புண்டரம்; நெற்றியிலும், நெஞ்சிலும் திருமண்ணும், சூரமும் கொண்டு நாமமிட்டுக் கொள்வது. 3. நாமம் - கடவுளுடைய அடியார் என்பதைக் காட்டும் பொருட்டு அவனுடைய திருநாமங்களில் ஒன்றுடன் தாசன் என்னும் சொல்லைச்சேர்த்துப் புதிதாகப் பெயர் கொள்ளுவது. 4. மந்திரஉபதேசம் - தீட்சை பெறும் போது குருசெவியில் கூறும் தெய்வீக மந்திரம் 5. யோகம் - வழிபாடு செய்யும் முறை. இவ்வைந்தும் எப்பொழுதும் இறைவன் சந்நிதியில் இருப்பதாக எண்ணி வாழ்வதற்கான வழியை வகுக்கும்.

பாகவதர் நாள்தோறும் செய்ய வேண்டிய ஐந்து சரியைகளுக்குப் பஞ்சகலை என்று பெயர். அவை அபிகமனம், உபாதானம், இச்யம், சுவாத்யாயம், யோகம் என்பன. அபிகமனம் நீராடலும், காலைவழிபாடுமாகும். உபாதானம் - உடலைக் காத்தற்கு வேண்டிய அளவு உணவோ, பொருளோ தேடும் தொழிலைச் செய்தல். இச்யம் - வீட்டுக் கோயிலில் அமைந்துள்ள திருமால் சிலையினை நாள் தோறும்

1. வைணவத் தத்துவஞான அடிப்படைகள், ப. 175-177.
2. வைணவத் தத்துவஞான அடிப்படைகள், ப. 169.

வழுவாது வணங்குதல். சுவாத்யாயம் - வைணவ வேத நூல்களைப் பக்தியுடன் - ஆராய்தல். யோகம் - எந்நேரமும் இறைவனைத் தியானம் செய்தல்.

ஆகம வகைகள்

வைணவத்தில் வைகானசம், பாஞ்சராத்திரம் என இருவகை ஆகம நெறிகள் உள்ளன. இவை இறைவனுக்குச் செய்யும் வழிபாட்டு நெறிகளில் வேறுபட்டதாகும்.

வைகானசம்

விகனசர் என்பவரால் அருளப் பெற்றதாகும். இவர் திருமாலின் திருமார்பிலிருந்து தோன்றியவராவர். இவர் தமது மாணாக்கராய மரீசி, பிருகு, அத்திரி, காசியபர் என்ற நால்வருக்கும் நான்கு இலக்கம் செய்யுட்களின் மூலம் அருளப் பெற்றதே இவ்வாகமம் ஆகும். திருப்பதியில் செய்யப் பெறும் வழிபாட்டு முறை இவ்வாகமத்தைப் பின்பற்றியதாகும்.

பாஞ்சராத்திரம்

இவ்வாகமம் மறை நூல்போல அநாதியென்பர். இதனைத் திருமால் நாரதருக்கு ஐந்து இரவில் கூறியதால் இப்பெயர் பெற்றது. இதனை மறைகளின் முடி எனப் பிரச்சன்ன சம்கிதை கூறும், ஆளவந்தார் தமது ஆகமப் பிராமாண்யம் எனும் நூலில் இவ்வாகமத்தின் தொன்மையையும், சிறப்பையும் விளக்கியுள்ளார்[1].

இவ்விரு வகை நெறிகளிலும் காணும் சில வேறுபாடுகள்:

பாஞ்சராத்திரம்	வைகானசம்
1. வைணவர்க்குரிய ஐம்பெரும் கடன்களையும் வற்புறுத்தி, இவ் வழிபாடு அனைவர்க்கும் உரித்தென்பர்.	1. இரு பிறப்பாளர்க்கே உரித் தென்பர்.
2. இதனை அக்கினியோடு தொடர்பு படுத்தி அக்னேயம் என்பர்.	2. இதனைச் சூரியனோடு தொடர்பு படுத்திச் சௌரம் என்பர்.
3. வாசுதேவனை முதல்வன் எனக்கூறி அவன் வடிவங்களாகச் சங்கர்ஷன், பிரத்தியும்நன், அனிருத்தன் எனும் மூவரைக் குறிக்கும்.	3. விஷ்ணுவே முதல்வன் எனக்கூறி அவன் வடிவங்களாகச் சத்தியன், அச்சுதன், அநிருத்தன் எனும் மூவரைக் குறிக்கும்.
4. இந்நெறியமைந்த கோயில்கள் மலைகளிலும், ஆற்றங்கரை களிலும் அமைந்திருக்கும்.	4. இந்நெறியமைந்த கோயில்கள் திருமலை தவிரப் பெரும்பாலும் நகர்ப்புறங்களிலும், கிராமங் களிலும் அமைந்திருக்கும்.

1. வைணவ சமயம், பக். 21-22.

பாஞ்சராத்திரம்	வைகானசம்
5. வீடுபேறு ஒன்றையே சிறப்பித்துக் கூறும்.	5. இம்மை, மறுமை நலன்களையும் சிறப்பித்துக் கூறும்.

வடகலையும், தென்கலையும்

வேதாந்த தேசிகர் வைணவர்களுக்குக் கொடுத்த சில விளக்கங்களால் வைணவர் இரு பிரிவினராயினர். இப்பிரிவு ஏற்படக் காரணம் மொழியும், இனமும் பற்றிய கருத்து வேறுபாடே ஆகும். எனினும் இவ்விருவகைக் கருத்து வேற்றுமைகளோடு வேறுவேற்றுமைகளையும் கொண்டுள்ளனர். இவ்வேறுபாடு ஆழ்வார்கள் காலத்தன்றிப் பின்பே வந்ததாகும்.

வடகலை	தென்கலை
1. வேதாந்த தேசிகரைச் சிறப்பித்துப் பாராட்டுவர்.	1. பிள்ளை லோகாசாரியரையும் மணவாள மாமுனிகளையும் சிறப்பித்துப் பாராட்டுவர்.
2. ஞானநெறி, பக்திநெறி போன்று பிரபக்தி நெறியும் ஒரு நெறியே என்பர். எனினும் இதனை ஒப்பற்ற நெறியாகக் கொள்வதில்லை. தாய்க் குரங்கு, குட்டிக் குரங்கை எடுத்துச் சென்றாலும் குட்டியும் தாயைப் பற்றிக் கொள்ள வேண்டும். அது போல உயிர் உய்தி பெற இறைவன் அருளினும் உயிரும் அதனைப் பெற முயற்சி செய்ய வேண்டும்.	2. இறைவன் கருணைக்கு எல்லை இல்லை. ஆதலின் பூனை தன் குட்டியைத் தானேதன் வாயில் கவ்விச் செல்லுதல் போல இறைவனும் தானே உயிர்களைப் பேணிக் காப்பன். எனவே உய்தி பெற உயிரது முயற்சி தேவையின்று, இறைவனின் கருணையே சாலும் என்பதாம். இத்தகைய இறைவனை அடையப் பிரபத்தி நெறியே சிறந்தது என்பர்.
3. இறைவன் உயிர்களை ஆட்கொள்ளுங்கால் உயிர்களின் குற்றங்களைத் தான் ஏற்பதில்லை.	3. உயிர்களின் ஈடேற்றத்திற்காக அவற்றின் குற்றங்களையும் தான் ஏற்பன்.
4. வீடுபேற்றிற்கு ஏதுவாகத் திருமாலைப் போற்றுவது போன்றே திருமகளையும் போற்றுவர்.	4. திருமகளின் தெய்வத்தன்மையைப் போற்றினும், அரசு, அமைச்சு என்ற நிலையிலேயே திருமாலையும் திருமகளையும் கொள்வர்.

வடகலை	தென்கலை
5. கங்கையின் பிறப்பிடமாய திருமாலின் வலது திருவடியை எண்ணி 'U' வடிவில் நாம மிட்டு அதன் நடுவில் செந்நிறக் கோடும் இடுவர்.	5. திருமாலின் இருதிருவடிகளும் தாமரைப் பீடத்தில் அமைந் திருக்கும் நிலையில் 'U' இட்டு அதன் நடுவில் செந்நிறக் கோடு இடுவர்.
6. விதவைப் பெண்கள் தலையை மழித்துக் கொள்ள வேண்டு மென்பர்.	6. இதனை விரும்புவதில்லை.

சிவஞான சித்தியாரில் பாஞ்சராத்திரி மதம்

இம்மதம் சிவஞான சித்தியார் பரபக்கத்தில் ஏழு பாடல்களில் எடுத்துரைக்கப்படுகிறது. எனினும் மற்றைய மதங்களைப் போன்று இம்மதக் கொள்கைகளைக் கூறாது திருமாலின் அவதாரச் சிறப்பும், ஆற்றலும், முதன்மையுமே பேசப்படுகின்றன.

இறைக்கொள்கை

ஆதியாய், அருவமாய், எவ்விடத்தும் நீக்கமற நிறைந்து நிற்கும் ஞானவடிவானவன் திருமாலாவன். இவன் உயிர்கள் மாட்டுக் கொண்ட கருணையால் தன் விருப்பப்படி மீன் முதலான திருமேனிகளை எடுத்தும், திருப்பாற்கடலில் யோக நித்திரை செய்தும், வேதத்தை அருளியும் கருணை செய்தான்.

இத்தகையோன் தனது உந்தித் தாமரையில் அயனை உண்டாக்கி அவனால் இவ்வுலகையும் உண்டாக்கினன். அவ்விதம் உண்டாக்கிய உலகை அளித்தற்கு அரசனையும் படைத்தனன். அதனைக் காத்தற்குக் கடவுளாகவும் விளங்கினன்.

திருவவதாரங்கள்

திருமால் இவ்வுலகைக் காத்தற் பொருட்டுக் கொண்ட அவதாரங்கள் மீன், ஆமை, பன்றி, நரசிங்கம், வாமனன், பரசுராமன், இராமன், பலராமன், கிருஷ்ணன், குதிரை என்பன. இவ்விதம் அவதாரங் கொள்ளும்போது தேவர்களுக்கு அரசனாய் இருப்பன்.

அவதாரச் சிறப்பு

திருமால் மீன்வடிவு எடுத்தபோது ஏழுகடலையும் ஒரு செதிளிலே

அடக்கியும், ஆமைவடிவு எடுத்தபோது மாமேருவை முதுகிலே தாங்கியும், பன்றி வடிவு எடுத்தபோது தாழ்ந்த பூமியைப் புகுந்து எடுத்தும், நரசிங்கவடிவு எடுத்த போது இரணியனை அழித்தும், வாமன வடிவு எடுத்தபோது உலகளந்தும், பரசுராம வடிவு எடுத்தபோது தன் தந்தையைக் கொன்ற வழியினரான இருபத்தொருவரைக் கொன்றும், இராம வடிவு எடுத்தபோது இராவணனை அழித்தும், பலராமன் வடிவு எடுத்தபோது உலகத்தைக் காத்தும், கண்ணன் வடிவு எடுத்தபோது அசுரர்களை அழித்தும், இவ்வுலகத்தைக் காத்தான். இனியும் குதிரை வடிவு எடுத்துக் காப்பான்.

ஆதிமூலனின் அருள்

பொய்கையிடத்தான யானை அவ்விடத்து முதலைவாய் அகப்பட்டுக் கரையேற மாட்டாது, ஐயனே! தலைவனே! ஆதிமூலமே! என்றழைப்ப, நம்மால் வணங்கப்படும் திருமால் மிக்க அருளுடன் ஓடிச்சென்று முதலையின் கொடிய வாயினின்றும் விடுவித்து வீடுபேறு அளித்தனன்.

அமுதீந்த வள்ளல் பிரான்

திருமால் தேவர்களுக்கு நிலைபெற்ற வாழ்வளிக்க வேண்டி மேருவை மத்தாகவும், வாசுகியை நாணாகவும் கொண்டு பாற்கடலைக் கடைந்து அமுதத்தினை அளித்தவன். கொடிய கொலைத் தொழிலினைச் செய்யும் அசுரர்களைக் கொன்று உலகங்களைக் காத்தும், மெய்ப் பொருள்களை அடியார்க்கு அருளியும், எல்லாவற்றிற்கும் தலைவனாய் விளங்குபவன்.

திருமால் சிறப்பு

இவ்வுலகத்தைப் படைக்கும் காலத்தில் மாயையாயும், அதன் வழி மயங்கும் உயிர்களாயும், அவ்வுயிர்களைக் கட்டும் தத்துவமாயும் நிலைபெற்றுப்பின் அம்மாயையினின்றும் உயிர்களை நீக்குவன். மாயனது அருளின்றி மாயை நீங்காது. அவனை வணங்கி வழிபடவே மாயை நீங்கும். அம்மாயை நீங்கவே இறைவன் உயிர்களை வைகுண்டத்தில் சேர்ப்பன்.

இனிப் பாஞ்சராத்திரத்துடன் மற்ற மதங்களை ஒப்பிட்டுக் காணலாம்.

பாஞ்சராத்திரம்	மாத்துவம்
1. இறைவனுக்கு இவ்வுலகும், உயிர்களும் உடலாகின்றன. இறைவனே முதல், துணை, நிமித்த காரண மாகின்றான்.	1. இறைவன் இவற்றைக் கடந்தவன். ஆதலால் உலகிற்கு நிமித்த காரண மாகின்றான்.

பாஞ்சராத்திரம்	மாத்துவம்
2. உயிர்கள் ஒத்த இயல்புடையன.	2. உயிர்கள் அடிப்படையில் ஒத்த இயல்புடையன அல்ல. நிரயத்து உள்ளவர் நிரயத்திலேயே வதிவர்.
3. உயிர் இறைவனை நேரே அணுகலாம்.	3. உயிர் இறைவனை நேரே அணுகாது. இறைமகனான வாயுவின் மூலமே அணுக முடியும்.
4. வீடுபேற்றில் உயிர்கள் ஒரே வித இன்பத்தைப் பெறும்.	4. வீடுபேற்றில் உயிர்கள் அனுபவிக்கும் இன்பம் அவற்றின் இயல்புக்குத் தக ஏற்றத்தாழ்வு பெறும்.

பாஞ்சராத்திர மதம் முன்னுரை

	வகை	வேதத்தை ஏற்றுக்கொண்டு, சிவாகமங்களை ஏற்றுக் கொள்ளாதவை.
1.	பெயர்க்காரணம்	விட்டுணுவை முதன்மையாகக் கொண்டு வழிபடுவதால் வைணவம் எனப் பெயர் பெற்றது. விட்டுணு என்றால் பரந்துள்ளவன், நன்மை செய்பவன், அடியவர்களை மாயையினின்று விடுவிப்பவன் என்றெல்லாம் பொருள் காண்பர். விட்டுணுவை வழிபடுவர் - வைணவர்.
2.	வேறு பெயர்	விசிஷ்டாத்வைதம் என்ற பெயரும் இராமானுசரால் ஏற்பட்டது.
3.	காரணம்	அ) ஐந்து இரவுகளில் திருமால் திருமகளுக்கு இம்மத உண்மைகளைக் கூறியதால். ஆ) ஐந்து இரவுகளில் திருமால் நாரதருக்கு இம்மத உண்மைகளைக் கூறியதால் இ) அறியாமையை விலக்கி உண்மைப் பொருளைக் காட்டுவதால் ஈ) பாஞ்சம் - ஐந்து உ) திருமாலின் ஐ வகை நிலைகள் ஊ) வைணவரின் ஐந்து கடமைகள்
4.	நூற் குறிப்புகள்	வேதங்கள் விட்டுணுவை முக்கிய தெய்வமாகச் சொல்லவில்லை. அவற்றையொட்டி எழுந்த பிரமாண, உபநிடதங்களில்தான் விட்டுணு நிலை உயர்ந்தது. ''மாயோன் மேய காடுறை உலகமும்'' தொல்காப்பியம், பரிபாடல், திருக்குறளில் சில இடங்களில் சொல்லப்பட்டுள்ளன. சிலப்பதிகாரம், மணிமேகலை, நாலாயிரத் திவ்யபிரபந்தம், கம்பராமாயணம், வில்லிபாரதம் போன்ற நூல்களிலும் வைணவம் பற்றி பேசப்பட்டுள்ளது.
5.	வைணவ நூல்கள்	இருக்கு வேதத்திலுள்ள புருஷ சூக்தம். பிரஸ்தான திரயம் எனப்படும் உபநிடதம், வேதாந்த சூத்திரம், பகவத்கீதை, பதினெண் புராணங்களுள் விட்டுணு புராணம், பாசுவதம், நாரதீயம், காருடம்.

		இதிகாசங்களுள் இராமாயணமும், மகாபாரதமும் தோத்திர நூல் - விட்டுணு சகஸ்ரநாமம் ஆகம நூல்கள் இரண்டு 1. பாஞ்சராத்திரம் 2. வைகானசம் 12 ஆழ்வார்களும் போற்றிப் பாடியது நாலாயிரத் திவ்விய பிரபந்தம், நம்மாழ்வார் பாடியவை வேதங்கள் திருமங்கை யாழ்வார் பாடிய வேதாகமங்கள்.
6.	திருமாலின் வேறு பெயர்கள்	வாசுதேவக் கிருட்டிணன், விட்டுணு, நாராயணன், சக்ரதாரி, ஜனார்த்தனன், சாரங்கன் போன்ற பெயர்களில் விட்டுணுவுக்கு கோயில்களும் வாசுதேவருக்குத் தனிக்கோயில்களும் எழுப்பப் பட்டன.
7.	வைணவக் கோட்பாடுகள்	24 ஆன்மத்தத்துவங்களுக்கு மேல் உள்ள 25-வது தத்துவம் வாசுதேவனாவான். அவனே பரம்பொருள் அவனிடத்தினின்றும் கண்ணன், அனிருத்தன், மகரத்துவகன், இரௌளகீணேயன் என நால்வரும் உலகங்களைப் படைத்தல் பொருட்டுத் தோன்றினார்.
8.	வைணவம் கூறும் வீடுபேறு	பாஞ்சராத்திர நூல் வழி தீக்கைப்பெற்று வாசுதேவனை வழிபட்டு அப்பெருமானின் உருவில் ஒன்றுபடுதலே வீடுபேறாகும்.
9.	அவதாரங்கள்	அறத்தைக் காக்கவும், மறத்தை அழிக்கவும் திருமால் கொண்ட அவதாரங்கள் பல. அவற்றுள் மீன், ஆமை, பன்றி, நரசிங்கம், நெடியோன், பரசு இராமன், பலராமன், இராமன், கண்ணன், குதிரை என்பன குறிப்பிடத்தக்கன.
10.	உருக்கொள்ளும் நிலை	உயிர்கட்கு அருளுதற் பொருட்டுத் திருமால் கொண்ட நிலை மூன்றாம் 1. நின்ற திருக்கோலம் 2. இருந்த திருக்கோலம் 3. கிடந்த திருக்கோலம்
11.	கைக்கொள்ளும் கருவிகள்	சங்கு, சக்கரம், கதை, வில், கத்தி என்ற 5
12.	தேவியர் மூவர்	திருமகள், நிலமகள், ஆயர்மகள் என்ற மூவர்

13.	திருமந்திரம்	வைணவர்கள் சிறப்பாகக் கூறும் மந்திரங்கள் மூன்று. அவற்றை மந்திரத் திரயம் என்பர். 1. ஓம் நமோ நாராயணாய என்னும் எட்டெழுத்து மந்திரம். இம்மந்திரம் ஒன்றே அனைத்துப் பேறுகளையும் நல்கவல்லது. ஓம் - பிரணவம் நமோ - நம்மையின்றி அவனில்லை. அவனின்றி நாமில்லை - நான் தன வயத்தனல்லன் நாராயணாய - நார + அயன் + ஆய நார - அழியாப் பொருள் அயன் - இருப்பிடமாய் உள்ளவன் ஆய - எல்லாவிதமான தொண்டுகளையும் செய்யும் கடமையுடையவனாய் இருப்பவன். மற்ற இரண்டு மந்திரங்களும் துவைய மந்திரம், சரமசுலோகம் எனப்படும்.

வைணவம் 14.(க) பாஞ்சராத்திர மதம்

அறுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்

செய்யுள் - 263

ஆதியா யருவ மாகி
அகண்டபூ ரணமாய் ஞானச்
சோதியாய் நின்ற மாயன்
சுவேச்சையா லுருவு கொண்டு
நீதியார் கருணை யாலே
நீள்கடற் றுயின்று நூலும்
ஒதினா னென்று பாஞ்ச
ராத்திரி யுரைப்ப னுற்றே.

பதவுரை

ஆதி ஆய் அருவம் ஆகி அகண்ட பூரணம் ஆய் ஞானச்சோதி ஆய் நின்ற மாயன்	ஆதி பூதனாய் அரூபியாய் எவ்விடத்தும் நிறைந்து நிற்பவனாய் ஞான சொரூபியாய் நின்ற விட்டுணுவானவன்,
சுவேச்சையால் உருவு கொண்டு	ஆன்மாக்களை இரட்சிக்க வேண்டித் தனது இச்சையாலே மீன் ஆமை பன்றி சிங்கம் வாமனம் இராமர் மூவராயும் கிருஷ்ணனாயும் மேனிகளை எடுத்துக்கொண்டும்,
நீதி ஆர் கருணையால் ஏ நீள் கடல் துயின்று	இரட்சிக்க வேண்டும் முறைமையாகப் பொருந்தின கருணையாலே நெடிய திருப்பாற் கடலிலே யோகநித்திரை செய்து,
நூலும் ஒதினான் என்று	அநாதியாகிய வேதத்தையும் அருளினான் என்று,
பாஞ்சராத்திரி உரைப்பன் உற்று ஏ	பாஞ்சராத்திரி என்னும் சமயி சொல்லுவன் என்றவாறு.

விளக்கவுரை

உருவு கொண்டும், துயின்றும் என உம்மை விரிக்க. ஆதி - எல்லார்க்கும் முதல்.

நிரீச்சுரசாங்கியன் மதத்தை நிறைவுசெய்து பாஞ்சராத்திரி மதம் கூறுவான் எடுத்துக் கொண்டார்; அதனுள், இச் செய்யுள் 'விட்டுணுவே தலைவன்' என்று கூறிற்று. (1)

செய்யுள் - 264

உந்தியி லயனை யீன்றும்
அவனைக்கொண் டுலகுண் டாக்கி
அந்தநல் லுலக ழிக்க
அரனையு மாக்கு வித்துத்
தந்திடும் சகத்தி னுக்குத்
திதிகர்த்தா தானே யாகி
வந்திடும் தோற்ற மீறும்
நிலைமையும் பண்ணு மாயன்.

பதவுரை

உந்தியில் அயனை ஈன்றும் அவனை கொண்டு உலகு உண்டாக்கி அந்த நல் உலகு அழிக்க அரனையும் ஆக்குவித்து	வைகுண்டத்திலே இருக்கும் பரமபுருடன் சிருட்டி காரணமாகத் தனது திருவுந்தித் தாமரையிலே பிரமாவை உண்டாக்கி அவனாலே பிரபஞ்சத்தை உண்டாக்குவித்து, அப்படி அழகுபெறப் படைத்த பிரபஞ்சத்தைச் சங்காரித்தற்குப் பிரமாவினிடத்திலே நின்றும் உருத்திரனை உண்டாக்கி அவனைக் கொண்டு சங்காரிப்பித்து,
தந்திடும் சகத்தினுக்கு திதி கர்த்தா தானே ஆகி	தன்னால் உண்டாக்கப்பட்ட பிரபஞ்சத்துக்குத் தலைவன் தானே ஆகி,
வந்திடும் தோற்றம் ஈறும் நிலைமையும் பண்ணும் மாயன்	இப்படி வரப்பட்ட சிருஷ்டி திதி சங்காரங்களையும் செய்வன் பரமபுருஷோத்தமன் என்று பாஞ்சராத்திரி சொல்லுவன் என்றவாறு.

விளக்கவுரை

பஞ்சராத்திரியில் நூல் செய்கையால், பாஞ்சராத்திரி என்று பெயராயிற்று.

அரனையும் ஆக்குவித்து என்றது - பிரமாவின் முகத்திலே அரனைத் தோற்றுவித்தது.

இச் செய்யுள் விட்டுணுவாகிய புருடோத்தமனே மூன்று காரியத்துக்கும் தலைவன் என்று கூறிற்று. (2)

செய்யுள் - 265

மீனாமை கேழல் நார
சிங்கம்வா மனனாய் வென்றி
ஆனாத விராமர் மூவர்
ஆயனா யளித்தான் கற்கி
தானாயும் வருவ னின்ன
மென்றவன் சாற்றித் தேவர்
கோனாயு நிற்ப னென்று
கூறுவன் குறிப்பி னோடே.

பதவுரை

மீன் ஆமை கேழல் நாரசிங்கம் வாமனன் ஆய்	பிரபஞ்சத்தை இரட்சிக்க வேண்டி மீனாகியும் ஆமையாகியும் பன்றியாகியும் நாரசிங்கமாகியும் வாமனனாகியும்,
வென்றி ஆனாத இராமர் மூவர் ஆயன் ஆய் அளித்தான்	வெற்றி கெடாத பரசுராமனாகியும் சிராமனாகியும் பலபத்திரராமனாகியும் கிருஷ்ணனாகியும் இரட்சித்தான்,
கற்கி தானாயும் வருவன் இன்னம் என்று அவன் சாற்றி	மேற் குதிரையாகியும் வந்து இரட்சிப்பன் என்று பாஞ்சராத்திரி சொல்லி,
தேவர் கோன் ஆயும் நிற்பன் என்று கூறுவன் குறிப்பினோடு ஏ	இப்படித் தசாவதாரம் பிறக்கச் செய்தேயும் முத்தி தேவன், தேவர்களுக்குக் கர்த்தாவுமாய் இருப்பன் என்று அறிவோடும் சொல்லா நிற்பன் என்றவாறு.

விளக்கவுரை

கற்கி - பெட்டைக் குதிரையாவன் என்றது. குறிப்பினோடே என இழித்துக் கூறியது.

இச்செய்யுள் புருஷோத்தமனது தசாவதாரம் கூறிற்று. *(3)*

செய்யுள் - 266

ஏழ்கடல் செலுவில் ஏற்றும்
இருங்கிரி முதுகி லேற்றும்
தாழ்தல முழுதுங் கண்டும்
தபநிய னுடல்பி ளந்தும்

வாழுல களந்து மன்னாய்
மன்னர்க்கு மன்ன ராயும்
பாழ்பட வுழறிப் பாரும்
நோக்கும்பின் பரியு மாயே.

பதவுரை

ஏழ்கடல் செலுவில் ஏற்றும் இருங் கிரி முதுகில் ஏற்றும் தாழ் தலம் முழுதும் கண்டும் தபனியன் உடல் பிளந்தும் வாழ் உலகு அளந்தும்	மச்ச ரூபமாய்ச் சத்த சமுத்திரங்களையும் ஓர் மீன் சிறையிலே அடக்கியும், அமுத மர்த்தனத்தில் கூர்மரூபமாய் மகாமேருவை முதுகிலே தாங்கியும், பிரளயத்திலே தாழ்ந்துபோன பூமியை வராகரூபமாய்ப் புகுந்தெடுத்தும், நாரசிங்க ரூபமாய் இரணியவதை செய்தும், வாமனரூபமாய்த் திரிவிக்கிரமம் செய்தும்,
மன் ஆய் மன்னர்க்கு மன்னர் ஆயும் பாழ்பட உழறிப் பாரும் நோக்கும்	இருபத்தொரு கால் சத்திரியரைச் சங்கரித்து மண்டல நாபியாய்ப் பரசுராமனாயும், இராமனாய் இராவணனை வதை செய்தும், பலபத்திர ராமனாய் லோக ரட்சார்த்தமாய் யோகத்தினின்றும் வாசுதேவனாய் அசுரர் மாயை பாழ்படச் சிதறியும் பிரபஞ்சத்தை ரட்சிக்கும்,
பின் பரியும் ஆய் ஏ	இனி வரும் பிரளய காலத்துக்குக் குதிரையாய் வந்து ரட்சிக்கும் மாயன் என்றவாறு.

விளக்கவுரை

மன்னர்க்கு மன்னராயும் என்றது - இராமாவதாரம் மூன்றிலும் பொருந்தாத இராசாக்களை வென்று அவர்களுக்கு இராசாவாயும் இருந்தது என்க.

இச்செய்யுள் முன்கூறிய அவதாரத்துச் செய்தி கூறிற்று. (4)

செய்யுள் - 267

பொய்கைவாய் முதலை வாயிற்
போதகம் போத மாட்டா
தையனே நாதா வாதி
மூலமே யென்ற ழைப்ப
உய்யயாம் பணிமா லோல
ஒலவென் றோடிச் சென்று

வெய்யவாய் முதலை வீட்டிக்
கரிக்கும்வீ டருளி னானே.

பதவுரை

பொய்கை வாய் முதலை வாயில் போதகம் போதமாட்டாது	பொய்கையிடத்தில் தங்கிய யானை அப் பொய்கையின் கண் உண்டாகிய முதலை வாயிலே அகப்பட்டுக் கரை ஏறமாட்டாமல்,
ஐயனே நாதா ஆதிமூலமே என்று அழைப்ப	சுவாமியே! கர்த்தாவே! ஆதிமூலமே என்று நொந்து கூப்பிட்டழைப்ப,
உய்ய யாம் பணி மால் ஒலஒல என்று ஒடிச் சென்று வெய்ய வாய் முதலை வீட்டி	யாம் ஈடேறும்படி வணங்கப்பட்ட பரம புருடன் கிருபை செய்து ஓடிச்சென்று கொடிய வாயினையுடைய முதலை வாயினின்றும் விடுவித்து,
கரிக்கும் வீடு அருளினான் ஏ	அந்த யானைக்கும் முதலைக்கும் வைகுண்ட பதம் அளித்தருளினான் என்றவாறு.

விளக்கவுரை

ஒல ஒல என்றது - விரைவுச்சொல். கரிக்கும் என்ற உம்மையால் முதலைக்கும் என்றதாயிற்று. போதகம் போத மாட்டாது - யானை மீறிப் போதமாட்டாது.

இச் செய்யுள் 'ஆதிமூலமே பரமபுருடன்' என்பது கூறிற்று. (5)

செய்யுள் - 268

அலைகடல் கடைந்து வானோர்க்
கமுதினை யளித்தும் தீய
கொலைபுரி யசுரர் தம்மைக்
கொன்றுல கங்கள் காத்தும்
கலைமலி பொருளன் பர்க்குக்
கருணையா லுரைத்து மிக்க
தலைமையி னிற்பன் மாய
னென்றும்பின் சாற்றி னானே.

பதவுரை

அலை கடல் கடைந்து வானோர்க்கு அமுதினை அளித்தும்	தேவர்களுக்கு நித்தியத்துவம் உண்டாக வேண்டி மகாமேரு மத்தாகவும் வாசுகி

	நாணாகவும் சமுத்திரத்திலே அமுதமர்த்தனம் செய்து தேவர்களுக்கு அமுதம் கொடுத்தும்,
தீய கொலைபுரி அசுரர் தம்மை கொன்று உலகங்கள் காத்தும்	பிரபஞ்சத்திலே கொடிய கொலைத் தொழிலைப் பொருந்தின அசுரரைக் கெடுத்துத் தேவர் முதலாகிய ஆன்மாக்களை இரட்சித்தும்,
கலை மலி பொருள் அன்பர்க்கு கருணையால் உரைத்தும்	சர்வ கலைகளும் பொருந்தின அர்த்தத்தைத் தனது கருணையாலே அடியவர்களுக்கு அருளியும்,
மிக்க தலைமையில் நிற்பன் மாயன் என்றும் பின் சாற்றினான் ஏ	இப்படி மிக்க கர்த்திருத்துவம் குன்றாமல் நிற்பன் பரமபுருடன் என்று சொன்னான் பின்னும் பாஞ்சராத்திரி என்றவாறு.

விளக்கவுரை

இச் செய்யுள் 'பரமபுருடன் கர்த்திருத்துவம்' கூறிற்று. (6)

செய்யுள் - 269

மாயையா யுயிராய் மாயா
காரிய மாகி மன்னி
மாயையாற் பந்தஞ் செய்து
வாங்கிடு மவனா லன்றி
மாயையோ காதென் றெண்ணி
மாயனை வணங்கப் பின்னை
மாயையோம் போனால் மாயன்
வைகுண்டம் வைப்ப னன்றே.

பதவுரை

மாயை ஆய் உயிர் ஆய் மாயா காரியம் ஆகி மன்னி	பரமபுருடன் பிரபஞ்ச சிருஷ்டி காலத்தில் மாயா சொரூபியுமாய்த், தன்வழி மயக்கும் ஆன்மாக்களுமாய், அவ்வான்மாக்களைப் பந்திக்கும் தத்துவ ஜாலங்களும் தானேயாய் நிலைபெற்று,
மாயையால் பந்தம் செய்து வாங்கிடும் அவனால் அன்றி மாயை போகாது என்று எண்ணி	அம்மாயையாலே ஆன்மாக்களைப் பந்தித்து மீளவும் நீக்குவன் மாயன் ஆகையால் அவனால் அன்றி மாயை நீங்காது என விசாரித்து,

மாயனை வணங்க பின்னை மாயை போம்	பதிவிரதையைப் போல மற்றொரு தெய்வத்தை நினையாமல் பரம புருடனையே வணங்கி வழிபாடு செய்யவே அந்தப் பந்தமாகிய மாயை நீங்கும்,
போனால் மாயன் வைகுண்டம் வைப்பன் அன்று ஏ	அம்மாயை நீங்கவே பரமபுருடன் விரசை ஆற்றினிடத்ததாகிய நன்னீராலே ஆன்மாவைச் சுத்தமாக்கி வைகுண்டத்திலே சாரூப்பியமாக வைப்பன் என்று பாஞ்ச ராத்திரி கூறினான் என்றவாறு.

விளக்கவுரை

இச் செய்யுள் 'பரமபுருடன் அளிக்கும் முத்திநிலைமை' கூறிற்று.

'ஆதி' என்னும் செய்யுள் முதல் இச் செய்யுள் காறும் பாஞ்சராத்திரிமதம் கூறிற்று. *(7)*

பதினான்காவது – பாஞ்சராத்திரி மதம் முற்றிற்று.

பாயிரம் உள்படத் திருவிருத்தம் – 269.

வைணவம் 14. (உ) பாஞ்சராத்திர மதமறுதலை

அறுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்

செய்யுள் - 270

ஆதிதா னாகி லாதிக்
கந்தமுண் டாகு மந்தக்
கோதிலா னிறைவ னென்று
கூறிடும் வேதம் ஞானச்
சோதியாய் நின்றா னாகில்
தோய்ந்திடான் மாயை ஞானத்
தீதிலா வுருவ மென்னில்
சேர்ந்திடான் தாதுச் சென்றே.

பதவுரை

ஆதி தான் ஆகில் ஆதிக்கு அந்தம் உண்டாகும்,	பாஞ்சராத்திரீ! நீ உன் கர்த்தாவை ஆதி என்று கூறினாய்; அங்ஙனம் ஆதியாயின், ஆதிக்கு முடிவு உண்டாய்க் கர்த்தாவும் அல்லனாவன்; அஃது யாங்ஙனம்? என்னில்,
அந்த கோது இலான் இறைவன் என்று கூறிடும் வேதம்	வேதநூலும், ஆதியும் அந்தமும் இல்லாதவனே கர்த்தா என்று சொல்லா நிற்கும் ஆதலால்,
ஞானச்சோதி ஆய் நின்றான் ஆகில் தோய்ந்திடான் மாயை	ஞானப்பிரகாசமாயும் அரூபியாயும் பரிபூரணமாயும் நின்றானாயின், மாயையின் அகப்பட்டு மாயாரூபம் ஆகான்; அற்றன்று,
ஞானத்தீது இலா உருவம் என்னில்	அப்படி எடுத்துக்கொண்ட திருமேனிகளும் குற்றமில்லாத ஞான சொரூபமே என்னில்,
சேர்ந்திடான் தாதுச் சென்றே	அவன் ஞான சொரூபியாயின், அந்த ஞான ஸ்வரூபத்துக்குத் தாதுக்கள் உண்டாகா; இவன் எடுத்துக் கொண்ட வடிவெல்லாம் தாதுக்கள் உண்டாய்ச் சங்காரப் படுகையால் கர்த்தா அல்லன என்றவாறு.

விளக்கவுரை

பாஞ்சராத்திரிமதம் கூறி, அவனை முறையானே மறுப்பான் எடுத்துக் கொண்டார். அதனுள் இச் செய்யுள் 'ஆதியாய் அருவமாகி' என்பதனை மறுத்துக் கூறிற்று. (1)

செய்யுள் - 271

தாதுவா னதுவே தென்னில்
சங்கரன் பலிக்குச் செல்லத்
தீதிலாக் கோதண் டத்தைத்
திறந்தவன் விட்ட போது
போதுவ துதிர மன்றோ
போந்துமூர்ச் சித்து வீழ்ந்தான்
நாதனா ரெழுப்பப் பின்னே
நடந்தனன் கிடந்த வன்தான்.

பதவுரை

அவனுக்குத் தாதுக்கள் உண்டானபடி எங்ஙனம்? என்னில், பரமேசுவரன் விஷ்ணுவின் அகந்தையைக் கெடுப்பது காரணமாகப் பிட்சாபாத்திரம் வாங்கிப் பிட்சைசெய்ய, அநேகம் பலிகளால் பாத்திரம் நிறையாததால், அவ்விடத்துப் புருடோத்தமன் கருவத்தாலே யான் இதனை நிறைப்பேன் என்று நெற்றியின் நரம்பினைத் திறந்துவிடப் புறப்பட்டது இரத்தமன்றோ? அந்த இரத்தம் போதுகையாலே விட்டுணு மூர்ச்சித்துக் கிடப்பப், பிரமாதிகள் தோத்திரம் செய்யப், பரமேசுவரன் அருள் செய்து எழுப்ப எழுந்திருந்து பரமேசுவரன் பிறகே நடந்து சென்றான்; திருப்பாற்கடலிலே பள்ளிகொண்ட மூர்த்தியாகையால், தாதுக்கள் பரமேசுவரனால் உண்டு என்று அறிவாயாக என்றவாறு.

விளக்கவுரை

இதனால் சொல்லப்பட்டது பரமேசுவரன் பிட்சைக்கு எழுந்தருள விட்டுணுவின் அம்சமாகிய விண்டுசேனன் துவாரத்தே நின்று தகையப் பரமேசுவரனோடு போந்த காலவேகர் அந்த விண்டுசேனனைப் பிடித்து அடித்துத் திரிசூலத்தே ஏற்றினார். அந்த ஆரவாரத்திலே விட்டுணு எழுந்திருந்து ஈசுவரனை வணங்கி இலாடத்தைத் திறந்து கபாலம் பூரணமாக்கக் கடவேன் என்று உதிரம்விட, அவ்வுதிரம் பாதிக் கபாலமும் நிறைக்கப்பெறாமலே மூர்ச்சித்து வீழ்ந்தான்; பின்பு ஈசுவரன் அவன் பத்திகண்டு பிரியப்பட்டுப் பலம் கொடுக்க எழுந்திருந்து பின்னே சென்றான் என்பது நூல் வரலாறு.

இச் செய்யுள் புருடோத்தமனுக்குத் தாதுக்கள் பரமேசுவரனால் உண்டாயின என்று கூறிற்று. *(2)*

செய்யுள் - 272

இச்சையா லுருவம் கொள்வன்
அரியெனி விகழ்வேள் விக்கண்
எச்சனா யுண்ணப் புக்கங்
கிருந்தவன் றீச னாலே

அச்சமார் தலைய றுப்புண்
டான்தலை யாக்கிக் கொள்ளான்
நச்சினார் போற்ற நாதன்
நாரணன் தலைகொ டுத்தான்.

பதவுரை

இச்சையால் உருவம் கொள்வன் அரி எனில்	புருடோத்தமன் சுவேச்சையாலே உரு எடுத்துக் கொண்டான் என்னில்,
இகழ் வேள்விக் கண் எச்சன் ஆய் உண்ணப் புக்கு அங்கு இருந்த அன்று ஈசனாலே அச்சம் ஆர் தலை அறுப்புண்டான் தலை ஆக்கி கொள்ளான்,	பரமேசுவரியை இகழப்பட்ட வேள்வி யிடத்தே எக்கிய மூர்த்தியாய் அவிகொள்ள இருக்க ஞான்று, வீரபத்திரதேவர் அச்ச முண்டாம்படி தலையில் தாக்க, அந்தத்தலை இழந்தவிடத்து தலை உண்டாக்கிக் கொள்ளாதவன் ஆனான்,
நச்சினார் போற்ற நாதன் நாரணன் தலை கொடுத்தான்	பின்பு பத்தராகிய தேவர்கள் துதிப்ப நாரண னுக்கு மீளவும் பரமேசுவரனே தலையை உண்டாக்கினான் ஆதலால் சுவேச்சையால் உரு எடுத்தான் என்று சொல்வாயல்லை என்றவாறு.

விளக்கவுரை

இகழ் வேள்வி - பொல்லாங்குபட்ட வேள்வி.

இச் செய்யுள் சுவைச்சையால் உருவெடுத்தான் என்பதனை மறுத்துக் கூறிற்று. *(3)*

செய்யுள் - 273

நூலினை யுரைத்து வேத
நூலினை நுவலும் வண்ணம்
மாலருள் செய்தா னென்றாய்
மறைநீதி யுலகி யற்கை
சாலவே தெரியா தாகிக்
கிடந்தநாள் சகத்தி யார்க்கும்
ஆலின்கீ ழிருந்து வேதம்
அருளினா னறைந்தா னூலே.

பதவுரை

நூலினை உரைத்து வேத நூலினை நுவலும் வண்ணம் மால் அருள் செய்தான் என்றாய்	புருடோத்தமன் வேதத்தையும் அருளிச் செய்து அந்த வேத நூலில் ஆராயும் பொருள்களையும் அருளிச் செய்தான் என்று கூறினாய்,
மறை நீதி உலகு இயற்கை சாலவே தெரியாது ஆகி கிடந்த நாள் சகத்து யார்க்கும் ஆலின் கீழ் இருந்து வேதம் அருளினால் அறைந்தான் நூல் ஏ	வேதநூல் ஒழுங்கும் உலக இயற்கையும் தெரியாதாகித் தலைமயங்கிக் கிடப்பப் பிரபஞ்சத்துள்ளோர் யாவர்க்கும் பெரிதும் தெரிய வேண்டி வடவாலின் கிழிருந்து வேதநூலையும் அருளிச்செய்து அதன் பொருள் தெளியவேண்டி ஆகமநூலும் அருளினான்; ஆதலால், பரமேசுவரனாலே உண்டாக்கப்பட்டன காண் வேதாகம புராணங்கள் என்றவாறு.

விளக்கவுரை

'நூலினை யுரைத்த வேத நூலய னுவலும்' என்பது - சாத்திரத்தில் சொல்லிய அந்த வேத நூலைப் பிரமா ஓதும்படி புருடோத்தமன் அருளிச் செய்தான் எனவும் பாடம்.

இச் செய்யுள் புருடோத்தமன் வேதம் அருளினான் என்பதனை மறுத்துக் கூறிற்று. *(4)*

செய்யுள் - 274

அயன்றனைப் பயந்தா னென்றாய்
அரியயன் சிரஞ்சே திப்பப்
பயந்திடான் தலைமால் தானும்
படைத்திடான் சிரத்தைக் கிள்ளும்
சயந்தரு மரனைத் தந்தான்
அயனென்கை தப்பே யன்றோ
தியங்கிடா துணரா யெல்லாம்
சிவன்செய லென்று தேர்ந்தே.

பதவுரை

அயன்தனை பயந்தான் என்றாய் அரி	பிரமாவைப் புருடோத்தமன் படைத்தான் என்று கூறினாய்,
அயன் சிரம் சேதிப்பப் பயந்திடான் தலைமால் தானும் படைத்திடான்	பிரமாவைப் புருடோத்தமன் படைத்தான் என்று கூறின் அஞ்சு முகம் உடையம் ஆதலாலே நாமும் பரமேசுவரனுக்கு ஒப்போம் என்று கருவித்த இடத்துப் பிரமாவினுடைய நடுத்தலையைப் பரமேசுவரன் அறுக்கக் கண்டு நின்ற பிதாவாகிய விட்டுணு பயப்படானாய்ப் பிரமாவின் தலையை உண்டாக்க மாட்டுகிலன்,
சிரத்தை கிள்ளும் சயம் தரும் அரனை தந்தான் அயன் என்கை தப்பே அன்றோ	பிரமாவின் தலையைக் கிள்ளிப் போடத்தக்க வெற்றியை உண்டாக்கப்பட்ட பரமேசுவரன் கர்த்தா அல்லனாய்த் தலைஇழந்த பிரமா பரமேசுவரனைப் படைத்தான் என்பது தவறல்லவோ?
தியங்கிடாது உணராய் எல்லாம் சிவன் செயல் என்று தேர்ந்து ஏ	ஆதலால், எல்லாம் பரமேசுவரன் செயலே என்று விசாரித்து மயங்காமல் அறிவாயாக.

விளக்கவுரை

அதற்குக் காரணம் மேலே சொல்லா நின்றோம் என்றவாறு.

இச்செய்யுள் பிரமாவைப் படைத்தான் அரி என்பதனையும், பிரமா உருத்திரனைப் படைத்தான் என்பதனையும் மறுத்துக் கூறிற்று. (5)

செய்யுள் - 275

சீவன்கள் சனனம் போலச்
சிலர்வாயிற் றுதித்த மாலைத்
தேவென்றே யுலகங் காக்கச்
சுவேச்சையால் சனித்தா னென்பீர்
பூவன்பின் படைக்க மாட்டா
தரனடி போற்ற வேதக்
கோவந்து முகத்தில் தோன்றிச்
சிருட்டியைக் கொடுத்தல் கூறும்.

பதவுரை

சீவன்கள் சன்னம் போல சிலர் வயிற்று உதித்த மாலை தே என்று என்று ஏ உலகம் காக்க சுவேச்சை யால் சனித்தான் என்பீர்	ஆன்மாக்களது பிறப்புப் போலே யோனி சாதனான புருடோத்தமனைப் பிரபஞ்சத்தை இரட்சிக்க வேண்டிச் சுவேச்சையாலே உரு எடுத்துக் கொண்டான் என்றும் அவனிடத்திலே பிரமா தோன்றிப் பிரமா வாலே பிரபஞ்சம் தோன்றிற்று என்றும் கூறுவீர்,
பூவன் பின் படைக்கமாட்டாது அரன் அடி போற்ற வேதக்கோ வந்து முகத்தில் தோன்றி சிருட்டியை கொடுத்தல் கூறும்	சர்வசங்காரம் செய்து பரமேசுவரன் மீளவும் பிரமா முதலான காரணேசுவரரை உண்டாக்கிப் பிரபஞ்சப் படைப்பைச் செய்விக்கப் பிரமாவும் பிரபஞ்சத்தைப் படைக்க அறியாமல் மயங்கிப், பரமேசுவரனை நோக்கித் துதிக்கவே கர்த்தாவான பரமேசுவரன் பஞ்ச கிருத்தியம் நடப்பிப்பது காரணமாகப் பிரமாவின் இலாடத்திலே தோன்றிப் பிரமாவுக்கு படைப்பை உண்டாக்கிக் கொடுத்தலைச் சர்வ புராணங்களும் சொல்லும்; ஆதலால், பரமேசுவரன் பிரமாவாலே தோற்றப் பட்டவன் அல்லன் என்று அறிவாயாக என்றவாறு.

விளக்கவுரை

இச் செய்யுள் பிரமாவினிடத்திலே பரமேசுவரன் தோன்றினான் என்பதற்குக் காரணம் காட்டி மறுத்துக் கூறியது. (6)

செய்யுள் - 276

நாரண னயனை யீன்றும்
அயனுநா ரணனை யீன்றும்
காரண மொருவ ருக்கங்
கொருவர்தா மிருவ ருக்கும்
வாரண முரித்த வள்ளல்
காரண னென்று மன்ற
ஆரண முரைக்கும் பக்கத்
தவர்களு மடைந்தா ரன்றே.

பதவுரை

நாரணன் அயனை ஈன்றும்	நாரணன் பிரமாவை உண்டாக்கியும்,
அயனும் நாரணனை ஈன்றும்	பிரமா நாரணனை உண்டாக்கியும்,
காரணம் ஒருவருக்கு அங்கு ஒருவர்தாம்	ஒருவருக்கொருவர் காரணமாய்க் காரியப் பட்டு வருவர்,
இருவருக்கும் வாரணம் உரித்த வள்ளல் காரணன் என்று மன்ற ஆரணம் உரைக்கும்	அப்படி ஒருவருக் கொருவர் காரியப்பட்டு வருவதற்கு முதற்காரணம் ஆவான் யானையை உரித்துப் போர்த்த பரமேசுவரன் என்றே தெளிய வேதம் சொல்லா நிற்கும்,
பக்கத்து அவர்களும் அடைந்தார் அன்றே	பரமேசுவரன் காரணம் ஆகையாலே விட்டுணு வலப்பாகமும் பிரமா இடப்பாகமுமாக அடங்குவார்கள் அநாதியே என்றவாறு.

விளக்கவுரை

ஆரணம் உரைக்கும் பக்கத்தவர்களும் அறைந்தார் - நிச்சயம். நான்கு வேதமாகிய வைதிக நூல் ஆராய்வோரும் சொல்லா நின்றார் என்க.

இச் செய்யுள் பரமேசுவரன் காரணமாகப் பிரமா விட்டுணு காரியப்படுவார்கள் என்பது கூறிற்று. (7)

செய்யுள் - 277

அழிப்பரி யேவ லென்றாய்
அரிதனை யழிக்கு மன்றங்
கழிப்பது தவிர்க்க மாட்டான்
அங்கமு மழித்ததே பூண்டான்
அழிப்பரி யேவ லென்றங்
கறைந்தது மழிந்த தன்றோ
அழித்திடு மரனே யாக்கம்
நோக்கமு மாக்கு வானே.

பதவுரை

அழிப்பு அரி ஏவல் என்றாய்	சங்காரமும் புருடோத்தமன் ஆக்கினை என்றாய்; அப்படியாயின்,

அரி தனை அழிக்கும் அன்று அங்கு அழிப்பது தவிர்க்கமாட்டான்	சர்வசங்காரத்துப் பிரம விட்டுணுக்கள் முதலாகச் சங்காரப்பட்ட விட்டுணு தன்மேல் வராமல் நீக்கிக் கொள்ளமாட்டான்; அஃதன்றியும்,
அங்கமும் அழித்ததே பூண்டான்	பிரம விட்டுணுக்களைச் சங்கரித்த அவதரங்களில் மீன் சேல் பன்றிக்கோடு சிங்கப்பல் ஆமைஓடு கொக்கிறகு அன்னத்தூவி முதலியன அணிகையால் புருடோத்தமன் ஆக்கினையால் சங்கரித்ததன்றித் தான் கர்த்தாவாய்ச் சங்கரித்தவனாம்,
அழிப்பு அரி ஏவல் என்று அங்கு அறைந்ததும் அழிந்தது அன்றோ	ஆதலால், சங்காரம் விட்டுணுவினுடைய ஆக்கினை என்று கூறியதும் அழிந்ததாம்,
அழித்திடும் அரனே ஆக்கம் நோக்கமும் ஆக்குவான் ஏ	சங்கரிப்பிப்பதும் பரமேசுவரனே ஆகையால், படைத்தலும், காத்தலும் அவனாலே உண்டாம் என்று அறிவாயாக என்றவாறு.

விளக்கவுரை

இச் செய்யுள் சங்கரிப்பவனே கர்த்தா என்பது கூறிற்று. (8)

செய்யுள் - 278

வானம்கீழ் மண்ணு மெல்லாம்
மாயனே காப்பா னென்றாய்
தானஞ்சும் சலந்த ரன்றன்
உடல்கீண்ட சக்க ரத்தை
ஆனஞ்சு மாடு வான்பால்
பெற்றுல களித்த வார்த்தை
தானெங்கு மாகு மெல்லாம்
சங்கரன் காப்பே யாமே.

பதவுரை

வானம் கீழ் மண்ணும் எல்லாம் மாயனே காப்பான் என்றாய்	ஆகாசம் முதல் கீழ்ப் பிருதிவி ஈறாக உள்ள பிரபஞ்சம் எல்லாம் புருடோத்தமனே இரட்சிப்பன் என்று கூறினாய்,

தான் அஞ்சும் சலந்தரன் தன் உடல் கீண்ட சக்கரத்தை ஆன் அஞ்சும் ஆடுவான்பால் பெற்று உலகு அளித்த வார்த்தை தான் எங்கும் ஆகும்	சலந்தரன் என்னும் அசுரனுக்கு விட்டுணு தான் பயப்பட்டுப் பரமேசுவரனை நோக்கித் தவஞ் செய்ய அந்தத்தவசு செய்கிற விட்டுணு-வைத் தவத்தைக் கெடுப்பதாக வந்த சலந்தரனைச் சக்கரத்தாலே பிளந்துபோடப் பரமேசு வரனிடத்தில் அந்தச் சக்கரத்தைப் பெறவேண்டிப் பரமேசுவரனை நெடுங்காலம் அர்ச்சித்தும் அவன் அநுக்கிரகம் செய்யாமை யால் பின்பு விட்டுணு கண்ணை இடந்து மலராக அர்ச்சிக்கப் பஞ்சகவ்வியத்தில் மூழ்கும் பரமேசுவரன் மாட்டுச் சக்கரம் பெற்று அதனைக் கொண்டு மாலி சுமாலி மாலியவான் முதலாகிய அசுரரை வென்று பிரபஞ்சத்தை இரட்சித்தான் என்னும் புராணம் பிரமாவாலே சொல்லப்பட்டுப் பிரபஞ்சம் எங்கும் உண்டாயதாகையால்,
எல்லாம் சங்கரன் காப்பு ஏ ஆம் ஏ	பிரபஞ்சத்தை விஷ்ணு இரட்சிப்பது பரமேசுவரன் இரட்சையே என்று அறிவாயாக என்றவாறு.

விளக்கவுரை

ஆனஞ்சும் ஆடுதல் - பஞ்சகவ்வியம் ஆடுதல். வானம் கீழ் மண் - சொர்க்க பாதாள பூமி.

இச்செய்யுள் புருடோத்தமன் இரட்சையும் பரமேசுவரனது ஆக்கினை எனக் கூறிற்று. (9)

செய்யுள் - 279

மாலினார் சேலி னாராய்
வாரிக ளடக்கிக் கொண்டன்
றாலியா வுலக மெல்லாம்
அழிப்பவ னானே யென்னச்
சேலினார் தமைப்பி டித்துச்
செலுவினை யிடந்து கண்ணைச்
சூலியார் மேல ணிந்தான்
சூலிதா னாகு மன்றே.

பதவுரை

மாலினார் சேலினார் ஆய் வாரிகள் அடக்கி கொண்டு அன்று ஆலியா உலகம் எல்லாம் அழிப்பவன் நானே என்ன	பிரளய காலத்திலே பிரபஞ்சத்தை இரட்சிக்க வேண்டி மச்சவடிவுகொண்டு சத்த சமுத்திரங் களையும் ஒரு (செதிளுள்) மீன் சிறையிலே அடக்கின ஞான்று கருவித்துப் பிரபஞ்சத்துக்குச் சங்கார கர்த்தாவும் நானே என்று சொல்ல,
சேலினார் தமை பிடித்து செலுவினை இடந்து கண்ணை சூலி ஆர் மேல் அணிந்தான் சூலிதான ஆகும் அன்று ஏ	விட்டுணுவின் கருவத்தை அடக்கவேண்டி அந்த மச்சத்தைப் பிடித்துச் செதிளையும் கண்ணினையும் இடந்து கூரிய திரிசூலத்தின் மேலே அணியாக அணிந்தான் சூலபாணி யாகிய பரமேசுவரன்தானும் என்றவாறு.

விளக்கவுரை

சூலிக்கை - கண்ணைப் பிடுங்குதல்.

இச் செய்யுள் மச்சரூபத்தைச் சங்கரித்தது கூறிற்று. (10)

செய்யுள் - 280

ஆமையாய் மேருத் தாங்கி
அடைகலாய்க் கிடந்த போது
நாமெனா வுலகா தார
நாதனென் றகந்தை பண்ண
ஆமெனா ரன்று மென்னார்
அமரரு மானார் பார்த்துத்
தாமநா ளாமை யாரைத்
தகர்த்தோடு தரித்தா ரன்றே.

பதவுரை

ஆமை ஆய் மேருத் தாங்கி அடைகல் ஆய்க் கிடந்தபோது நாம் எனா உலக ஆதார நாதன் என்று அகந்தை பண்ண	ஒரு காலத்துப் பிரளயம் வந்தவிடத்துப் பிரபஞ்சத்துக்கு ஆதாரம் ஆகிய மேருமலை சலித்தபோது புருடோத்தமன் கூர்மரூபமாய் மாமேருவைத்தாங்கி ஆதாரசிலைபோற் கிடந்து பிரபஞ்சத்துக்கு ஆதாரமும் அதற்குக் கர்த்தாவும் நாமே என்று அகங்கரித்த இடத்து,

ஆம் எனார் அன்றும் என்னார் அமரரும் ஆனார் பார்த்துத் தாம் அந்நாள் ஆமையாரை தகர்த்து ஒடு தரித்தார் அன்றே	விட்டுணுவின் கருவத்தைப் பார்த்தருளிக் கர்த்தாவாம் என்றும் அன்றென்றும் சொல்லாராய் அந்தநாளிலே ஆமையைத் தகர்த்து அந்த ஓட்டை என்புமாலையோடு அணிந்தார் தேவரூபருமாய் அல்லருமாகிய பரமேசுவரர்; ஆதலால், இவரே கர்த்தா என்று அறிவாயாக என்றவாறு.

விளக்கவுரை

ஆமையாய் என்பது அமிர்தம் கடைகிறபொழுது மேருவைத்தாங்கி அடைகல்லாய்க் கிடந்த பலத்தாலே நாமே ஆதாரம் என்று கெருவித்த கதைக்கும் ஆம். ஆம் எனார் அன்றும் என்னார் அமரரும் அரனார் பார்த்து என்பது தேவர்களும் ஆம் அன்று என்று சொன்னார்களில்லை, அரனும் பார்த்தருளி எனப் பொருளுரைப்பினுமாம் அரனார் எனவும் பாடம்.

இச் செய்யுள் கூர்மரூபத்தைச் சங்கரித்தது கூறிற்று. (11)

செய்யுள் - 281

எழுதல மிடந்து பன்றி
யாயிருங் கொம்பி லேற்றுத்
தொழுதுல கிறைஞ்ச நின்ற
சோதிநா னென்ற போதன்
றழுதல மந்து வீழ
அருங்கோடு பறித்த ணிந்தான்
கழுதல மந்து காட்டில்
ஆடிடுங் கடவு ளன்றே.

பதவுரை

எழு தலம் இடந்து பன்றி ஆய் இரு கொம்பில் ஏற்றுத் தொழுது உலகு இறைஞ்ச நின்ற சோதி நான் என்றபோது	ஒரு பிரளயத்து விஷ்ணு வராக மூர்த்தியாய் அதல விதல சுதல தராதல இரசாதல மகாதல பாதலம் என்னப்பட்ட ஏழு பூமிகளையும் கிண்டு பெரிய கொம்பிலே ஏற்றுக் கொண்டு நின்ற பராக்கிரமத்தினாலே பிரபஞ்சத்தாரால் வணங்கி வழிபாடு செய்தற்கு வீடுபேறாய் நின்ற கர்த்தா யானல்லது வேறில்லை என்று கர்வித்தபோது,

அன்று அழுது அலமந்து வீழ அருங் கோடு பறித்து அணிந்தான் கழுது அலமந்து காட்டில் ஆடிடும் கடவுள் அன்றே	உடனே சோகத்தினால் துக்கித்துப் பூமியிலே விழும்படி அப்பன்றிக் கோட்டைப் பறித்து அணியாக அணிந்து கொண்டான் பேய் சுழன்றாடும் காட்டில் ஆடலை விரும்பின கர்த்தா என்றவாறு.

விளக்கவுரை

அலமந்து - பிரமித்து, கழுது அலமந்து - பேய் உழன்று .

இச் செய்யுள் வராக மூர்த்தியைச் சங்கரித்தது கூறிற்று. (12)

செய்யுள் - 282

இங்கடா வுளனோ மாலென்
றிரணியன் தூணை யெற்ற
உங்கள்தா மோத ரன்றான்
உருநர சிங்க மாகி
எங்கடா போவ தென்னா
உடல்பிளந் திறையா னென்ன
அங்கடா சிம்பு ளாகி
எடுத்தடர்த் தான ரன்றான்.

பதவுரை

இங்கு அடா உளனோ மால் என்று இரணியன் தூணை எற்ற உங்கள் தாமோதரன் தான் உரு நரசிங்கம் ஆகி எங்கு அடா போவது என்னா உடல் பிளந்து இறை யான் என்ன	ஒரு காலத்திலே இரணியனாகிய அசுரன் இவ்விடத்தில் உங்கள் புருஷோத்தமன் உளனோ? என்று தூணைத் தட்டிக் காட்ட உங்கள் தாமோதரனாகிய புருஷோத்தமன் அந்தத் தூணிலே நாரசிங்க ரூபமாகத் தோன்றி இரணியனை, ஏட! இனி எங்கே போவாய் என்று பிடித்து உடலைப் பிளந்து போடுதலால் உண்டான கருவத்தாலே பிரபஞ்சத்துக்கு நாமே கர்த்தா என்ன,
அங்கு அடா சிம்புள் ஆகி எடுத்து அடர்த்தான் அரன் தான்	அவ்விடத்துச் சிம்புள் என்னும் வடிவு கொண்டு நாரசிங்கத்தை எளிதாகத் தூக்கிச் சங்கரித்துத் தோலை ஆசனமாகக் கொண்டான் பரமேசுவரன் என்றவாறு. சிம்புள் - எண்காற்புள்; சரபம்.

விளக்கவுரை

இச் செய்யுள் நாரசிங்கத்தைச் சங்கரித்தல் கூறிற்று. *(13)*

செய்யுள் - 283

தானமென் றிரந்து செல்லத்
தனக்குமூ வடிகொ டுப்ப
வானமு மளந்து கொண்டு
மாபலி தன்னைப் பின்னை
ஈனமாஞ் சிறையி லிட்டான்
இறையன்றொன் றீந்தோர் தங்கட்
கூனஞ்செய் திடுவோர் தாங்கள்
உத்தம ரல்ல ராகும்.

பதவுரை

தானம் என்று இரந்து செல்ல தனக்கு மூ அடி கொடுப்ப	ஒரு காலத்திலே புருடோத்தமன் வாமன வடிவைக்கொண்டு மாபலியிடத்திலே தானம் என்று சொல்லி இரந்து கொண்டு செல்ல அவன் தானமாக மூவடி மண் கொடுப்ப,
வானமும் அளந்து கொண்டு மாபலி தன்னை பின்னை ஈனம் ஆம் சிறையில் இட்டான் இறை அன்று	தானம் என்று பெற்றுப் பூமி அந்தர சுவர்க்கங்களையும் ஓரடியாலே அளந்து கொண்டு மற்றை அடிக்கு இடமில்லை என்று மாபலியைக் குற்றமான சிறையிலிட்டான் ஆதலால் அவன் கர்த்தா அல்லன்; அஃது யாங்ஙனம்? என்னில்,
ஒன்று ஈந்தோர் தங்கட்கு ஊனம் செய்திடுவோர் தாங்கள் உத்தமர் அல்லர் ஆகும்	ஒருவர் ஒன்றனைத் தானம் செய்தால் அதனை ஏற்றுக்கொண்டவர் தானம் செய்தவருக்கு நன்மை செய்தலன்றித் தீமை செய்வோர் உத்தமரல்லர்; ஆதலால், அவன் கர்த்தா வல்லன் என்றவாறு.

விளக்கவுரை

வாமனரூபம் - குள்ளனாகிய வடிவம். ஊனம் செய்திடுகை - செய்ந்நன்றி கோறல்.

இச்செய்யுள் தானம் செய்தார்க்குத் தீமை செய்வான் கர்த்தா அல்லன் என்று மறுத்துக் கூறிற்று. *(14)*

செய்யுள் - 284

மாயமான் தன்னைப் பொய்ம்மான்
எனவறி யாத ரக்கன்
மாயையி லகப்பட் டுத்தன்
மனைவியைக் கொடுத்தான் றன்னை
மாயைக்குக் கர்த்தா வென்பை
மதிகெட்டங் கவனைக் கொன்று
நாயனார் தமைப்பூ சித்தான்
கொலைப்பாவ நணுகி டாதே.

பதவுரை

மாயமான் தன்னை பொய்ம்மான் என அறியாது அரக்கன் மாயையில் அகப்பட்டு தன் மனைவியை கொடுத்தான் தன்னை மாயைக்கு கர்த்தா என்பை	ஒரு காலத்திலே இராமனாய் அவதரித்து இலக்குமியும் தானும் வனசரிதராகித் திரியும் நாளில் இராவணன் இராமனை நீக்கி இலக்குமியை அபகரித்துக் கொள்வான் ஓர் பொய்ம்மானை ஏவ அந்த மானை இராட்சத மாயை என்று அறியாமல் அம்மானின் பின்னே போய்த் தன் மனைவியைப் பிடி கொடுத்தானை மாயைக்குக் கர்த்தா என்று கூறுவாய்,
மதி கெட்டு அங்கு அவனை கொன்று நாயனார் தமைப் பூசித்தான் கொலைப் பாவம் நணுகிடாது ஏ	இலக்குமி நீங்குகையாலே மயக்கத்தை யுடையனாய் இலங்கையிற் சென்று, இராவணனையும் அவன் சேனையையும் கொன்று கொன்ற பாவம் நீங்கச் சேதுவிலே வந்து, பரமேசுவரனை அருச்சித்து வினையைக் கெடுத்துக் கொண்டான் கர்த்தா அல்லன் என்றவாறு.

விளக்கவுரை

இச்செய்யுள் இராமனாய் இரட்சித்தான் என்பதனை மறுத்துக் கூறிற்று.

(15)

செய்யுள் - 285

பரசுடன் பிறந்தான் தானும்
பத்தனாய்ப் பரசி னாலே
அரசறுத் தரனை நோக்கி
அருந்தவம் புரிந்தா னன்று

பரசிய பரசு ராமன்
பலதேவ னுலக மெல்லாம்
முரைசெயு முமையாள் கோனை
உண்ணினைந் தியோகி னின்றான்.

பதவுரை

பரசுடன் பிறந்தான் தானும் பத்தன் ஆய் பரசினாலே அரசு அறுத்து அரனை நோக்கி அருந்தவம் புரிந்தான் அன்று	ஒரு காலத்திலே விஷ்ணு மழுவுடன் பிறந்து பரசுராமன் எனப் பெயரை உடையனாய்ச் சிவபத்தனாய் மழுவைக்கொண்டு இராசாக் களை அறுத்து, அந்த இரத்தத்திலே குளியல் செய்து, அந்தப் பாவம் தீரப் பரமேசுவரனை நோக்கி அருந்தவம் புரிந்தான் அன்று,
பரசிய பரசுராமன்	பிரபஞ்சம் போற்றத்தக்க பரசுராமனும்
(பரசிய) பலதேவன் உலகம் எல்லாம் உரை செயும் உமையாள் கோனை உள் நினைந்து யோகில் நின்றான்	(பிரபஞ்சம் போற்றத்தக்க) பலபத்திர ராமனும் முப்பத்து முக்கோடி தேவர்களும் பிரபஞ்சங் களும் வழிபாடு செய்யும் உமையவள் மணாளனை ஞானக் கண்ணாலே கண்டு யோகத்தில் இருந்தே இராச்சியம் செய்தான் என்றவாறு.

விளக்கவுரை

அன்று - அந்நாளில், பலதேவன் - பலபத்திர ராமன். உலமெல்லாம் - உயர்ந்தோ ரெல்லாம்.

இச் செய்யுள் பரசுராமனாய் இரட்சித்தான் என்பதனை மறுத்துக் கூறிற்று. *(16)*

செய்யுள் - 286

ஒதிய வாசு தேவர்
தமையுப மனியு தேவர்
தீதிலா நோக்கஞ் செய்து
சிவகரஞ் சிரத்திற் சேர்த்தி
ஆதிபா லடிமை யாக்க
அரியுடல் பிராண னத்தம்
ஈதெலாங் கொண்ணீ யென்றங்
கிறைஞ்சினா ரறிந்தி டாயே.

பதவுரை

ஒதிய வாசுதேவர் தமை உபமனியு தேவர் தீது இலா நோக்கம் செய்து	புருடோத்தமன் வாசுதேவராய்த துவாரகா புரியிலே யிருக்க வியாக்கிர பாத முனிவர்

சிவகரம் சிரத்தில் சேர்த்தி ஆதி பால் அடிமை ஆக்க	புத்திரராகிய உபமன்னியு மாமுனி கயிலாயத்துக்கு எழுந்தருள அவரை வாசுதேவர் கண்டு 'எங்கே எழுந்தருளுவது' என்று கேட்ப, அவரும் 'கயிலாயத்துக்குப் போகிறோம்' என்ன, வாசு தேவரும் 'கயிலாயத்துக்குச் செல்லாமல் இங்கே கண் டிருக்க அருள் செய்யவேண்டும்' என்று வணங்க, உபமன்னியு மாமுனியும் குற்றமற்ற ஞானக்கண்ணாலே தீட்சை செய்து சிவஹஸ்தம் சிரத்தில் வைத்துத் தரிசிப்பித்து அவரைச் சிவபத்தராக்க,
அரி உடல் பிராணன் அத்தம் ஈது எல்லாம் கொள் நீ என்று அங்கு இறைஞ்சினார் அறிந்திடாய் ஏ	வாசுதேவரும் ஞானபூரணராய் என் சரீரம் அர்த்தம் பிராணன் இவையெல்லாம் கொண்டருள வேண்டும் என்று தோத்திரம் செய்து வணங்கிச் சிவபத்தராய் இருந்தார் என்று அறிவாயாக என்றவாறு.

விளக்கவுரை

இச் செய்யுள் வாசுதேவரையும் கர்த்தா அல்லர் என்று மறுத்துக் கூறிற்று. *(17)*

செய்யுள் - 287

பின்வரும் பரிதா னாகி
அரியென்றாய் பின்பு வந்தால்
என்வரு மீச னாலென்
றறிகிலோ மிவுளி யார்க்கு
முன்வரு மவதா ரங்கள்
முடிந்தமை யறிந்தா யன்றே
பொன்வருஞ் சடையி னான்றன்
புகழெங்கும் புக்க தன்றே.

பதவுரை

பின் வரும்பரி தான் ஆகி அரி என்றாய் பின்பு வந்தால் என் வரும் ஈசனால் என்று அறிகிலோம் இவுளியார்க்கு	அந்த விட்டுணு வருகிறயுகத்துக் குதிரையாக வருவன் என்றாய் அப்படி வந்தால் பரமேசு வரனாலே அந்தக் குதிரைக்கு யாது வரும்? என்று அறிகிலோம்,

முன் வரும் அவதாரங்கள் முடிந்தமை அறிந்தாய் அன்றே பொன் வரும் சடையினான் தன் புகழ் எங்கும் புக்கது அன்று ஏ	முன்பு வந்த அவதாரங்களில் உண்டானமை நீ கேட்டறிந்தாய்; யாம் இங்ஙனம் சொன்ன முறைமையால் பொன்போன்ற கொன்றைப் பூவைத் தரிக்கப்பட்ட திருச்சடா பாரத்தை யுடையவன் கீர்த்தியே எங்கும் விளங்கிற்று என்றவாறு.

விளக்கவுரை

பொன்வரும் - பொற்பிரபை வரும் என உரைப்பினுமாம். என்வரும் என்பது - நிக்கிரகமோ? அநுக்கிரகமோ? என்றது.

இச் செய்யுள் குதிரையாய் வந்து இரட்சிப்பான் அரி என்பதனை மறுத்துக் கூறிற்று. (18)

செய்யுள் - 288

கைவரை மூல மேயோ
எனக்கரிக் குதவுங் காட்டின்
மொய்வரை யெடுத்தான் மூல
மாயிட வேண்டு மோதான்
ஐயனே முறையோ வென்றால்
அரசனோ வங்குச் செல்வான்
வையகங் காப்பான் செய்கை
வழக்கன்றோ வூர்காப் பான்போல்.

பதவுரை

கைவரை மூலமே ஓ என கரிக்க உதவும் காட்டில் மொய்வரை எடுத்தான் மூலம் ஆயிட வேண்டுமோ தான்	ஒரு யானை மடுவின்கண் முதலை வாயில் அகப்பட்டு, மூலமே! என்று கூப்பிட, ஓடிச் சென்று, அவ்வியானையினது இடரைக் கெடுத்தது கொண்டே வனத்தில் வரையை எடுத்து, ஆன்நிரையைக் காத்த விட்டுணு கர்த்தா ஆயிடவேண்டுமோ? அவன் கர்த்தா அல்லன், அஃது எங்ஙனம்? என்னில்,
ஐயனே முறையோ என்றால் அரசனோ அங்கு செல்வான் வையகம் காப்பான் செல்கை வழக்கு அன்றோ ஊர் காப்பான் போல்	இராஜாவை நோக்கி ஒருவன் முறையோ! என்று கூப்பிட்டால், அம்முறை கேட்பான் இராஜாவோ? அன்றே! பிரபஞ்சத்தைப் பரமேசுவரன் ஆக்கினையினாலே இரட்சிப் பானாகிய விஷ்ணு ஓர் ஆன்மாவுக்கு இடர் வந்தால் அதனை ஒழிக்குமது என்போல?

	என்னில், அரசனது ஆக்கினையாலே நின்று ஊரைக் காக்கும் காவற்காரன் ஒருவர்க்குத் தீமை வந்த வழி அதனைச் சென்று தீர்ப்பது போலாம் என்றவாறு.

விளக்கவுரை

அன்று ஓ - அசை.

இச் செய்யுள் ஆனை மூலம் என்றது பரமேசுவரனை நோக்கியே என்று கூறிற்று. *(19)*

செய்யுள் - 289

அன்றியு மானை மாலுக்
கடிமையாய் மூல மேயோ
என்றிடு மதனால் மால்தான்
இறைவனென் றியம்ப வேண்டா
உன்றனக் கடிமை யானார்
உன்னையெம் பெருமா னென்றால்
இன்றுநீ வணங்கு முன்றன்
எம்பெரு மானோ நீயே.

பதவுரை

அன்றியும் ஆனை மாலுக்கு அடிமை ஆய் மூலமே ஓ என்றிடும் அதனால் மால்தான் இறைவன் என்று இயம்ப வேண்டா	அது அன்றியும் விஷ்ணுவுக்கு யானையானது அடிமையானபடியாலே தன் கர்த்தாவை மூலமே என்று கூப்பிட்டதாயின் அது கொண்டு விட்டுணுவை மூலமாகிய கர்த்தா என்று சொல்லவேண்டா; அஃது எங்ஙனம்? என்னில்,
உன்தனக்கு அடிமை ஆனார் உன்னை எம்பெருமான் என்றால் இன்று நீ வணங்கும் உன்தன் எம்பெருமானோ நீ ஏ	உன் அடியான் உன்னை எம்பெருமான்! என்று அழைத்தால் இப்பொழுது நீ வணங்குகிற உன்னுடைய புருடோத்தமன் ஆவையோ நீ? அன்றே! ஆதலால், யாவர்க்கும் மூலம் என்பது பரமேசுவரனே ஆம் என்றவாறு.

விளக்கவுரை

இச் செய்யுள் இரண்டும் ஒரு தொடர்ச்சியாய் மூலம் என்பதனையும், புருடோத்தமன் உதவினான் என்பதனையும் மறுத்துக் கூறிற்று. *(20)*

செய்யுள் - 290

ஞாலமுண் டவனா லுண்டார்
நல்லமு தமர ரென்றாய்
வேலைநஞ் செழுமா லாதி
விண்ணவர் வெந்து சென்ற
காலமின் றெமக்குக் காவாய்
கடவுளே யென்ன நாதன்
ஆலமுண் டிலனேல் தேவர்
அமுதமுண் டிடுவ தெங்கே.

பதவுரை

ஞாலம் உண்டவனால் உண்டார் நல் அமுது அமரர் என்றாய் வேலை நஞ்சு எழ மால் ஆதி விண்ணவர் வெந்து சென்ற அக்காலம் இன்று எமக்கு காவாய் கடவுளே என்ன	பூமியை விழுங்கிய சாமர்த்தியத்தை உடைய வனாலே தேவர்கள் நல்ல அமுதத்தைப் புசித்தார்கள் என்றாய்; சமுத்திர மர்த்தனத் திலே விடம் பிறக்க விட்டுணு முதலாகிய தேவர்களெல்லாம் வெப்பம் பொறுக்க மாட்டாமல் ஓடிவந்து அகால மரணம் எங்களுக்கு இன்று சம்பவித்திருக்கிறது எங்களை இரட்சித்து அருளவேண்டும் கர்த்தாவே! என்ன கிருபை பண்ணி,
நாதன் ஆலம் உண்டிலனேல் தேவர் அமுதம் உண்டிடுவது எங்கே	பரமேசுவரன் அந்த விடத்தை அமுது செய்தி லனாயின் விட்டுணு முதலிய தேவர் களெல்லாம் பிழைத்துப் பின்பு அமுதத்தை உண்டாக்கி அதனை உண்பது எங்ஙனம்? சொல்வாய் என்றவாறு.

விளக்கவுரை

இச் செய்யுள் பரமேசுவரனே கர்த்தா என்பது கூறிற்று. (21)

செய்யுள் - 291

அஞ்சியன் றரிதா னோட
அசுரனைக் குமர னாலே
துஞ்சுவித் தொருபெண் ணாலே
தாரக னுடறு ணிப்பித்
தஞ்சிடப் புரந்தீ யூட்டிச்
சலந்தர னுடல்கீண் டோத
நஞ்சினை யுண்டு மன்றோ
நாயக னுலகங் காத்தான்.

பதவுரை

அஞ்சி அன்று அரி தான் ஓட அசுரனைக் குமரனாலே துஞ்சுவித்து	சூரபன்மாவுக்குப் பயப்பட்டு விட்டுணு திருப் பாற்கடலை நீங்கிப் போய்ப் பரமேசுவரன் பால் முறையிடச் சுப்பிரமணியக்கடவுளை உண்டாக்கி அக்கடவுளாலே சூரபன்மாவைச் சங்கரிப்பித்தும்,
ஒரு பெண்ணாலே தாரகன் உடல் துணிப்பித்து	தாரகன் என்னும் அசுரனுக்கு விட்டுணு முதலாகிய தேவர்களெல்லாம் பயப்பட்டுப் போய்ப் பரமேசுவரன் பால் முறையிட அப்போது காளி என்னும் சத்தியைக் கொண்டு தாரகன் உடலைச் சேதிப்பித்தும்,
அஞ்சிட புரம் தீ ஊட்டி	திரிபுரத்து அசுரர்க்குப் பயப்பட்டு விட்டுணு முதலாகிய தேவர்கள் எல்லாரும் பரமேசுவரன் பால் முறையிடத் திரிபுரத்தைச் சுட்டும்,
சலந்தரன் உடல் கீண்டு	சலந்தரன் என்னும் அசுரன் விட்டுணுவைத் திருப்பாற் கடலில் பள்ளிகொள்ள வொட்டாமல் ஒட்டித்திரிய விட்டுணு சலந்தரனுக்குப் பயப்பட்டுப்போய்ப் பரமேசுவரன்பால் முறையிடச் சக்கரத்தாலே சங்கரன் உடலைப் பிளந்தும்,
ஒத நஞ்சினை உண்டும்	சமுத்திரமர்த்தனத்திலே பிறந்த விடம் பதினாலு உலகத்தையும் சுட அந்த விடத்தை அமுது செய்தும்,
அன்றோ நாயகன் உலகம் காத்தான்	இப்படியன்றோ! பரமேசுவரன் பிரபஞ்சத்தை இரட்சித்தான் என்றவாறு.

விளக்கவுரை

உண்டும் என்ற உம்மை கடைநிலைத் தீபகம்.

இச் செய்யுள் பிரபஞ்சத்துக்கு இரட்சை கர்த்தாவும் பரமேசுவரனே என்பது கூறிற்று. *(22)*

செய்யுள் - 292

பார்த்தனா ரிரத மேறிப்
படைதனைப் பார்த்துச் சார்பைக்
கூர்த்தவம் பாலே யெய்து
கொன்றர சாளே னென்னத்

தேர்த்தனி லிருந்து மாயை
செய்துமால் கொல்லச் செப்பும்
வார்த்தைநூ லாக்கிக் கொண்டாய்
புரங்கொனூன் மதித்தி டாயே.

பதவுரை

பார்த்தனார் இரதம் ஏறிப் படைதனைப் பார்த்து சார்பை கூர்த்த அம்பாலே எய்து கொன்று அரசு ஆளேன் என்ன	அருச்சுனன் யுத்தம் செய்வதாகத் தேரில் ஏறி நின்று சத்துருக்களைப் பார்த்துச் சத்துருக் களாகத் தோன்றினாரெல்லாம் என்னுடைய மித்துருக்களாக இருத்தலால் இவர்களைக் கூரிய அம்பாலே கொன்று இராச்சியம் செய்வதில்லை யென்று சொல்ல,
தேர்தனில் இருந்து மாயை செய்து மால் கொல்ல செப்பும் வார்த்தை நூல் ஆக்கி கொண்டாய் புரம் கொல் நூல் மதித்திடாய் ஏ	அவனுக்குத் தேர்ப்பாகனாகிய கிருட்டிணன் அவன் மனம் தேறிடக் கொல்வது காரணமாகச், சர்வமும் நாமே கொல்லு வோம், நீ அன்று, என்று மயங்கச் சொன்ன சொல்லையே, நூலாக்கிக் கொண்டாய் ஆயின்; திரிபுரத்துள்ளார் சிவபூசையைக் கைவிடும் பொருட்டாக, விட்டுணு புத்த முனியாக இருந்து, தெய்வம் ஒன்று இல்லை என்று மயக்குவித்துச் சிவலிங்கத்தைக் கைவிடுவித்த நூலையும் நீ நூலாகக் கொள்வாயாக என்றவாறு.

விளக்கவுரை

இதனால் திரிபுரத்து அசுரர்களைச் சிவபத்தி குலைத்தும், தேரிலிருந்து அருச்சுனனை மயக்குரையால் பேதித்தும் ஜயித்தது கர்த்தாவுக்கு இயல்பன்று என்பது கருத்து. சத்துரு - பகைவர்கள், மித்துரு - நண்பர்கள்.

இச் செய்யுள் ஞானநூல் உரைத்தான் என்பதனையும், கிருட்டிணன் கர்த்தா என்பதனையும் மறுத்துக் கூறிற்று. (23)

செய்யுள் - 293

மாயைதா னுயிர்க ளாகா
துயிர்கடா மாயை யாகா
மாயவ னிவைதா னாகான்
இவைதானு மாய னாகா

ஏயுமா மநாதி யாக
இறைபசு பாச மென்றே
தூயவன் கலப்பி னாலே
எல்லாமாய்த் தோன்று வன்காண்.

பதவுரை

மாயை தான் உயிர்கள் ஆகாது	மாயையானது சடமாகையால் ஆன்மாக்கள் ஆகாது,
உயிர்கள் தாம் மாயை ஆகா	ஆன்மாவும் இச்சா ஞானக் கிரியைகளை உடைத்து ஆகையால் சடமாகிய மாயை ஆகா,
மாயவன் இவை தான் ஆகான்	புருஷோத்தமன் ஞானசொரூபி என்று நீ கூறுகையால் சடமாகிய மாயையும், சுத்தனாகிய ஆன்மாவும் ஆகி நில்லான்,
இவை தானும் மாயன் ஆகா	மாயையும் ஆன்மாவும் கூடிப் புருடோத்தமன் ஆகமாட்டா,
ஏயும் ஆம் அநாதி ஆக இறை பசு பாசம் என்று ஏ	மாயையாகிய பாசமும் ஆன்மாவாகிய பசுவும் இவையிற்றை நடத்துவானாகிய பதியும் அநாதியிலே பொருந்தின ஆகையால்,
தூயவன் கலப்பினால் ஏ எல்லாம் ஆய் தோன்றுவன் காண்	நின்மலனாகிய கர்த்தா சம்பூரணன் ஆகையாலே சர்வமும் தானாகித் தோன்றுவன் அல்லது சடமும் ஆன்மாவுமாய்ப் பிரிந்து நில்லான் என்றவாறு.

விளக்கவுரை

சித்து அசித்தாகாது. அசித்துச் சித்தாகாது, சித்திற் சேஷ்டிதனே கர்த்தா; மாயவன் ஆன்மவர்க்கம் என்க.

இச் செய்யுள் புருடோத்தமன் மாயையாயும், மாயைக்குக் கர்த்தாவாயும் நிற்பன் என்பதனையும் மறுத்துக் கூறிற்று. *(24)*

செய்யுள் - 294

பாசத்தைப் பசுக்கள் விட்டுப்
பதியினை யடைய முத்தி
ஆசற்ற வாக மங்கள்
அறைந்திட வறிவின் றிங்கே

மாசற்ற மால்மா சாகி
மாயையு முறுவ னென்னில்
கூசிப்பின் கொள்ளார் நல்லோர்
உனக்காமிக் குழப்பு நூலே.

பதவுரை

பாசத்தை பசுக்கள் விட்டு பதியினை அடைய முத்தி ஆசு அற்ற ஆகமங்கள் அறைந்திட	பாசமாகிய அஞ்ஞானங்களைப் பசுவாகிய ஆன்மாக்கள் கைவிட்டுப் பதியாகிய கர்த்தாவைக் கூடுதலே முத்தி என்று குற்றமில்லாத ஆகமங்கள் சொல்லா நிற்ப,
அறிவு இன்று இங்கே மாசு அற்ற மால் மாசு ஆகி மாயையும் உறுவன் என்னில்	இங்கே மாலாகிய புருடோத்தமன் அஞ்ஞானமுமாய், அஞ்ஞானத்தோடு கூடிய ஆன்மாவுமாய் நிற்பன் என்று நீ அறிவின்றியே சொல்லின்;
கூசிப் பின் கொள்ளார் நல்லோர் உனக்கு ஆம் இக் குழப்பு நூல் ஏ	இப்படி வேதாகமங்களுக்குப் பொருந்தாத மயக்கநூல் உனக்கே ஆவது, இதனை நூல் என்று சொல்ல நாணிப் பின்பு இதன் அர்த்தமும் கொள்ளார் அறிவுடையோர் என்றவாறு.

விளக்கவுரை

இச்செய்யுள் பதி பசு பாசமும் தானேயாகி நிற்பன் என்பதனை மறுத்துக் கூறிற்று. (25)

செய்யுள் - 295

பிரமநா னென்ற போது
பிரமனோ டரியும் கூடிப்
பரமனா ரிகலி டாமே
பார்த்திடர் பண்ணி நின்ற
உரமனா ரழலு ரூபம்
தன்னையு முணர மாட்டான்
கரமனா டிகிரி யேற்றான்
கடவுளென் றறைவ தென்னே.

பதவுரை

பிரமம் நான் என்றபோது பிரமனோடு அரியும் கூடி	ஒரு காலத்துப் பிரமாவும் விஷ்ணுவும் கூடித் தங்களில் மாறுபட்டுப் படைத்தலாலே நானே

	கர்த்தா என்றும் காத்தலாலே நானே கர்த்தா என்றும் சொல்ல,
பரமனார் இகலிடாமே பார்த்து	பிரம விட்டுணுக்கள் தம்மில் மாறுபடாமல் இவர்கள் அகந்தையைக் கெடுப்பான் திருவுளம்பற்றி,
இடர்பண்ணி நின்ற உரம் அனார் அழல் உருபம் தன்னையும் உணர மாட்டான்	உங்களில் நம்முடைய அடிமுடி அறிந்தவன் கர்த்தா என்றருளி, ஒரு தழற்பிழம்பாய் நிற்கப், பிரமா திருமுடியைக் கண்டுவருவேன் என்று அன்னமாகப் பறந்து தேடியும், விட்டுணு சீர்பாதம் காண்பேன் என்று பன்றியாய்ப் பாதாளத்தைக் கீண்டும், காணாமல் இருவருக்கும் வியாகூலத்தை உண்டாக்கி நின்ற உரத்தையுடைய பரமேசுவரனது திருவுரு இன்னபடி என்று அறியமாட்டானானான்,
கரம் மன் ஆள் திகிரி ஏற்றான் கடவுள் என்று அறைவது என் ஏ	சக்கரத்தைக் கையிலே ஆட்சி நிலைபெற ஏந்தின விட்டுணுவைக் கர்த்தா என்று சொல்லுவது நீ ஏதுகொண்டு? என்றவாறு.

விளக்கவுரை

இச்செய்யுள் புருடோத்தமன் பன்றியாய் இடந்தும், பிரமா அன்னமாய்ப் பறந்தும் காண்டற்கரிய பரமேசுவரனே கர்த்தா என்பது கூறிற்று. (26)

செய்யுள் - 296

தேரரி யிறையன் றென்றே
சிவமுனி ததீசி யோடே
போர்புரிந் திகல மாலைப்
புக்கவன் பிடித்த டித்து
மார்பினி லுதைத்து மால்தன்
சக்கரம் வயிற்றில் வைத்திட்
டேர்மலி படைப டைத்திட்
டரிபட வெறிந்தா னன்றே.

பதவுரை

சிவமுனி ததீசியோடே போர்புரிந்து இகல மாலை	புருடோத்தமனுக்கும் சிவபத்தனாகிய ததீசி மாமுனிக்கும் ஓர் காரணத்தால் யுத்த முண்டாய் மகாயுத்தம் செய்யப் புருடோத்தமனை,

புக்கு அவன் பிடித்து அடித்து மார்பினில் உதைத்து மால்தன் சக்கரம் வயிற்றில் வைத்திட்டு	*ததீசி மாமுனி உள்புக்குப் புருடோத்தமனைப் பிடித்துப் பிரகரித்து, மார்பிலே உதைத்துச், சக்கரத்தைப் பறித்து முறித்து அப் புருடோத்தமன் வயிற்றிலே வைத்து,*
ஏர் மலி படை படைத்திட்டு அரி பட எறிந்தான் அன்று ஏ	*அழகு பொருந்தினதோர் ஆயுதத்தைத் தானே உண்டாக்கிப் புருடோத்தமன் மயங்கிவிழ எறிந்தான் மாமுனி; ஆதலால்,*
அரி இறை அன்று என்று தேர்	*புருடோத்தமன் கர்த்தா அல்லன் என்று தெளிவாயாக என்றவாறு.*

விளக்கவுரை

அவன் விட்ட சக்கரம் உடைந்துபோகத் தருப்பையைப் படையாகப் படைத்து, அவன் ஐயம் தொலைத்தான் என்றது.

இச் செய்யுள் ததீசி மாமுனிக்குப் புருடோத்தமன் சளைப்புப் பட்டமை கூறிற்று. *(27)*

செய்யுள் - 297

சூலிகா ணிறைமா லல்லன்
சூலியைத் தொழுந்துர் வாசன்
மாலினார் மார்மி திப்பத்
திருமறு மார்ப னாகி
நூலினார் மார்ப னோன்றாள்
பட்டிடஞ் சுத்த மென்று
பாலினார் கடலா னாங்கே
பரிவொடுந் திருவை வைத்தான்.

பதவுரை

சூலிகாண் இறை மால் அல்லன் சூலியைத் தொழும் துர்வாசன் மாலினார் மார் மிதிப்பத் திரு மறு மார்பன் ஆகி	*சூல பாணியே! கர்த்தா விஷ்ணு அல்லன், சூலபாணியை வழிபாடு செய்யும் துருவாச மாமுனி விட்டுணுவை ஓர் காரணமாகக் கோபித்து மார்பிலே மிதிப்ப அத்துருவாச மாமுனி பாதம்பட்ட தழும்புகொண்டே திருமறு மார்பன் என்னும் பெயரை யுடையனாகி,*
நூலினார் மார்பன் நோன் தாள் பட்டிடம் சுத்தம் என்று பாலின் ஆர்	*திருப்பாற் கடலிலே பள்ளிகொள்ளுமவன் பிரமமுனியின் பாதம்பட்ட இடம் சுத்தம்*

கடலான் ஆங்கே பரிவொடும் திருவை வைத்தான்	என்று பிரியத்துடன் மகாலட்சுமியை அந்த மார்பிலே வைத்தான் ஆகையால் புருடோத்தமன் மலசம்பந்தி என்று அறிவாயாக என்றவாறு.

விளக்கவுரை

இச் செய்யுள் புருடோத்தமன் துர்வாச மாமுனிக்குச் சளைப்பு அடையப்பட்டமை கூறிற்று. *(28)*

செய்யுள் - 298

தவகுண னாய்மால் சென்று
தீவியைச் சக்க ரத்தால்
அவகுணஞ் செய்தன் றோடப்
பிருகுவந் தவளைப் பார்த்துச்
சிவனல தறியே னாகில்
இதுசெய்தோன் செறிக பத்துப்
பவமென மொழிய மாலும்
பயப்பட்டுப் பதறி வீழ்ந்தான்.

பதவுரை

தவ குணன் ஆய் மால் சென்று தீவியை சக்கரத்தால் அவகுணம் செய்து அன்று ஓட	சிவபத்தரான பிருகு என்னும் மகாமுனியினுடைய பத்தினியாகிய திவ்வியையைப் புருடோத்தமன் ஆசைப்பட்டு அவளைப் புணர்வதற்கு இருடி இல்லாத சமயத்திலே செல்ல அந்தத் திவ்வியை உடன்படாத படியினாலே அவள் உடம்பிலே சக்கரம் கொண்டு குணரகிதமாகிய குறிகளையிட்டுப் போக,
பிருகு வந்து அவளைப் பார்த்து சிவன் அலது அறியேன் ஆகில் இது செய்தோன் செறிக பத்துப்பவம் என மொழிய மாலும் பயப்பட்டு பதறி வீழ்ந்தான்	பிருகுமகாருஷி அவள் உடம்பைக் கண்டு ''யான் சிவனல்லது வேறொரு கடவுள் இல்லை என்னும் சிவபத்தன் மெய்யே ஆகில் இது செய்தவன் பத்துப்பிறப்புப் பிறக்கக் கடவன்" என்று சபிக்கப் புருடோத்தமனும் பயப்பட்டுத் துக்கித்து வீழ்ந்தான் என்றவாறு.

விளக்கவுரை

தவகுணம் - தவவேடம். அவகுணம் - துர்க்குணம். *(29)*

செய்யுள் - 299

பயப்பட்டுப் பரனை நோக்கித்
தவம்பண்ணப் பரனுந் தோன்றி
நயத்தஞ்ச லென்று வேண்டிற்
றென்னென நார ணன்றான்
பெயர்த்தருள் பிருகு சாபம்
எனவன்பன் பிருகு வென்ன
உயக்கொணீ பவந்தோ றென்ன
ஒமென்றா னுலக நாதன்.

பதவுரை

பயப்பட்டு பரனை நோக்கித் தவம் பண்ணப் பரனும் தோன்றி நயத்து அஞ்சல் என்று வேண்டிற்று என் என	அந்தப் பிருகு முனிவர் சாபத்தினாலே பயப் பட்டுப் பரமேசுவரனை நோக்கித் தவசு பண்ணப் பரமசுவரனும் அநுக்கிரகித்துப் பயப்படாதே! உனக்கு வேண்டியது யாது? என்று கேட்ப,
நாரணன் தான் பெயர்த்து அருள் பிருகு சாபம் என அன்பன் பிருகு என்ன உயக்கொள் நீ பவம் தோறும் என்ன ஓம் என்றான் உலகநாதன்	புருடோத்தமன் பிருகு சாபத்தைத் தீர்த்தருள வேண்டும் என்று விண்ணப்பம் செய்யப், பரமேசுவரனும் பிருகு என்னுடைய பத்தன் என்று அருள, ஆனால் அவன் சாபத்தாலே எடுக்கும் பிறப்புத் தோறும் என்னை இரட்சித்தருள வேண்டும் என்ன, ஜகந்நாதனாகிய பரமேசுவரனும் அப்படியே இரட்சிக்கிறோம் என்றான் என்றவாறு.

(30)

செய்யுள் - 300

இப்படிப் பிருகு சாபத்
தீரைந்து பிறப்பின் வீழ்ந்து
மெய்ப்படு துயர முற்று
வருபவன் விமல னல்லன்
எப்படி யானுஞ் சொன்னேன்
இறையரி யல்ல னென்றே
மைப்படி கண்ட னண்டன்
மலரடி வணங்கி டாயே.

பதவுரை

இப்படி பிருகு சாபத்து ஈர் ஐந்து பிறப்பின் வீழ்ந்து மெய்ப்படு துயரம் உற்று வருபவன் விமலன் அல்லன்	இந்த முறைமையிலே பிருகு சாபத்தாலே ஒன்பது பிறப்புப் பிறந்து சரீர வருத்தமுற்று மேலும் குதிரையாகப் பிறந்தும் ஜனன மரணப் படுபவன் மலரகிதனான கர்த்தா அல்லன்,
எப்படியானும் சொன்னேன் இறை அரி அல்லன் என்று ஏ	வேதாகம சாத்திரங்களானும் சொன்னேன் மோட்ச கர்த்தா விட்டுணு அல்லன் என்றே; இனி, மோட்ச கர்த்தா யாவன்? என்ன விரும்புதியாயின்,
மைப்படிகண்டன் அண்டன் மலர் அடி வணங்கிடாய் ஏ	நீலகண்டன் ஆகிய மேலானவனே கர்த்தா, அவனது தாமரை மலர்போன்ற சீர் பாதத்தைச் சரியை கிரியா யோக ஞானத்தாலே வணங்கி நினது பவத்தை நீக்கிக் கொள்வாயாக என்றவாறு.

விளக்கவுரை

'தவகுணனாய்' என்னும் செய்யுள் முதல் இச் செய்யுள்காறும் பிருகுவுக்குப் புருடோத்தன் அபசெயப்பட்டமை கூறிற்று.

'ஆதிதானாகி' என்னும் செய்யுள் முதல் இச்செய்யுள் காறும் பாஞ்ச ராத்திரி மதத்தை மறுத்துக் கூறிற்று. (31)

பதினான்காவது பாஞ்சராத்திரி மதமறுதலை முற்றிற்று.

பாயிரம் உள்படத் திருவிருத்தம் – 301.

பாஞ்சராத்திரம் – மறுப்புத் தொகுப்பு

இம்மத மறுப்பு, சிவஞான சித்தியார் பரபக்கத்தில் முப்பத்தொரு பாடல்களில் மறுக்கப்பட்டுள்ளது.

1. திருமால் முதன்மைக் கடவுளன்று

1. திருமால் ஆதியானவன் எனின், எந்த ஒன்றும் ஆதியாயின் முடிவு உண்டாம். அத்தகைய ஆதியும் அந்தமும் இல்லாதவனையே வேத நூல்கள் இறைவன் என்று இயம்பும். அறிவு வடிவாயும், அருவாயும், யாண்டும் நிறைந்ததாயும் நின்றானாயின், அவன் மாயையில் அகப்பட்டு மாயா வடிவு கொள்வான். மேலும் அவன் எடுக்கும் திருமேனிகள் ஞான வடிவம் எனில், அத்தகைய வடிவிற்குத் தோல், குருதி முதலாய உடற்கூட்டுப் பொருள்கள் வேண்டா. ஆனால் திருமால் கொண்ட வடிவெல்லாம் அவ்வாறாய உடற்கூட்டுப் பொருளேயாய்த் தோன்றி அழிந்தமையால் அவை ஞான வடிவம் ஆகா.

2. சிவன் திருமாலின் முனைப்பை அழிக்க வேண்டி, ஏற்கும் கலம் கொண்டு பிச்சை ஏற்க உணவால் கலம் நிறையாததால் அவ்விடத்துத் திருமால் யான் நிறைப்பேன் என்று நெற்றி நரம்பினைத் திறந்தனன். அதனால் குருதி பெருகி மூர்ச்சித்தனன். தேவர்கள் சிவனை வேண்ட அவன் அருளில் திருமால் எழுந்து திருப்பாற் கடலில் பள்ளி கொண்டனன். எனவே திருமாலின் உருவம் உடற் கூட்டால் ஆயதேயாம்.

3. திருமால் தன் விருப்பத்தால் திருவுருக் கொள்வானெனில், தக்கன் வேள்வியினிடத்தே அவிகொள்ள இருந்தபோது வீரபத்திரரால் தன் தலையிழந்தான். அவ்வாறு இழந்த தலையைத் தான் மீட்க இயலாதவன் ஆயினான். பின்பு தேவர்கள் வேண்டச் சிவனே இழந்த தலையைப் பெறச் செய்தான். எனவே தன் விருப்பத்தால் உருவெடுப்பான் என்று சொல்ல முடியாது.

4. திருமாலிடத்துத் தோன்றியவன் அயன் என்பர். அயனது ஒரு தலையைச் சிவன் கிள்ளியபோது அத்தலையைத் திருமால் காக்கவும் இல்லை. பின் தோற்றுவிக்கவும் இல்லை. எனவே எல்லாவற்றையும் படைக்கும் முழுமுதற் கடவுளே அயன் படைத்தா னென்றல் தவறாகும்.

5. உயிர்களின் பிறப்பினைப் போன்று சிலர் வயிற்றிடத்துத் தோன்றி திருமாலைத் தன் விருப்பினால் வடிவு கொண்டான் என்றல் பொருந்தாது. அயன் உலகைப் படைக்க அறியாது மயங்கிச் சிவபிரானை வேண்டச் சிவபெருமான் உலகத்தில் படைத்தல் முதலான ஐந்தொழில்களும் நடக்க வேண்டி அயனது

தியானத்திற்குரிய இடமான நெற்றியிலே தோன்றி உலகை உண்டாக்கினன். எனவே அயன் சிவபிரானைப் படைத்தான் என்றல் தவறாகும்.

6. திருமால் அயனைப் படைத்தும், அயன் திருமாலைப் படைத்தும் ஒருவருக்கொருவர் காரணமாய்க் காரியப்பட்டும் வருவர். இவ்விருவருக்கும் முதற்காரணம் யானைத்தோல் போர்த்த சிவபிரானேயாவான். மேலும், இச் சிவனே காரணமாதல் திருமால் அவனது வலப்பக்கத்தும், அயன் அவனது இடப்பக்கத்தும் தோன்றினன் என்பதாலும் அறியலாம்.

7. திருமாலது ஏவலால் சிவபெருமான் அழிப்பானாயின், சிவபிரான் இறுதிக் காலத்தே எல்லாவற்றையும் ஒடுக்கும் போது திருமாலும் அயனும் ஒடுங்குவது ஏன்? ஆதலால் அழித்தல் தொழில் திருமால் ஏவலால் நடப்பதன்று. முத்தொழிற்கும் முதல்வன் சிவபெருமானே யாவன்.

திருமால் மறையை யருளியவன் அல்லன்

திருமால் மறையையும் அருளி அதன் பொருள்களையும் செய்தான் என்பர். ஆனால் மறைநூல் ஒழுங்கும், உலகவியற்கையும் தெரியாது மயங்கிக் கிடக்கும் இவ்வுலக மக்கள் யாவரும் அறியும்படி ஆலின் கீழிருந்து மறை நூலை அருளியவன் சிவபெருமானேயன்றிப் பிறர் இல்லை. அதன் பொருள் தெரிய ஆகம நூலையும் அவனே அருளினான். ஆதலால் சிவபெருமானால் உண்டாக்கப் பட்டவையே மறையும் ஆகமங்களுமாகும்.

தோற்றச் சிறப்பின்மை

1. திருமால் விண்ணுலகம், மண்ணுலகம், பாதாளம் என்ற மூவுலகையும் காப்பன் என்பர். இத்தகைய திருமால் சலந்தரனுக்குப் பயந்து சிவபெருமானை நோக்கித் தவம் செய்ய, அத்தவத்தைக் கெடுத்த சலந்தரனைச் சிவபெருமான் சக்கரத்தால் அழிக்க, அச்சக்கரத்தைச் சிவனிடமிருந்து பெறவேண்டி நீண்ட காலம் திருமால் தவமிருந்தான். அவன் அருளாமையினால் திருமால் தன் கண்ணையே மலராகக் கொண்டு வழிபட, சிவன் அருள் செய்து சக்கரத்தை அளித்தான். அச்சக்கரத்தால் அசுரர்களை அழித்து உலகத்தைக் காத்தான். எனவே இத்தகைய காத்தல் தொழிற்கும் மூலமாய் நின்று காப்பவன் சிவனேயாவான்.

2. திருமால் மீன்வடிவு கொண்டு ஏழுகடலையும் தனது செதிலுள் அடக்கிய போது தானே அழித்தற் கடவுளென்று செருக்குற, சிவபெருமான் அம்மீனின் செதிலையும் கண்ணினையும் பிடுங்கித் தமது திரிசூலத்தின் மேல் அணியாக்கிக் கொண்டனன்.

3. மேலும் திருமால் ஆமைவடிவு எடுத்து மேருவைத் தாங்கி நின்று தானே உலகிற்கு அடிநிலையும், இறையுமென்று செருக்குற, அதற்கு ஒன்றும்

சொல்லாது, சிவபெருமான் ஆமையைத் தகர்த்து அதன் ஓட்டை எலும்பு மாலையோடு அணிந்து கொண்டான்.

4. அவ்விதமே பன்றி வடிவு எடுத்து ஏழுலகங்களையும் தனது கொம்பிலே ஏற்றிக் கொண்டு இவ்வுலகத்தார் புகழ்ந்து வணங்கும் இறைவன் யானே என்று செருக்குற்றபோது, துன்புற்று விழுமாறு அப்பன்றியின் கோட்டினைப் பறித்துச் சிவபெருமான் அணிந்து கொண்டான்.

5. தூணினின்றும் தோன்றிய நரசிங்க வடிவுடன் இரணியனை அழித்துச் செருக்குற்ற போது, அவ்விடத்துச் சிவபெருமான் சிம்புளென்னும் வடிவு கொண்டு அந்நரசிங்கத்தைக் கொன்று அதன் தோலைத் தன் இருக்கைக் குரியதாகக் கொண்டான்.

6. ஒருமுறை திருமால் குறுகிய வடிவு கொண்டு மாவலியிடம் மூவடிமண் தானங்கேட்க, அதனைப் பெற்று நெடியோனாகி, பூமி முழுவதையும் ஓரடியால் அளந்து, மறுஅடியால் விண்ணையும் அளந்து, மூன்றாமடிக்கு இடமில்லாத தால் மாவலி மன்னனைச் சிறையிலிட்டான். இவ்விதம் இறைவன் செய்யான். மேலும் ஒருவர் ஒன்றினைக் கொடுக்கும் போது அதனை ஏற்பவர் கொடுத்தவருக்கு நன்மை செய்தலன்றித் தீமை செய்யார். அஃது செய்ந்நன்றி கொன்ற தன்மைத் தாகும்.

7. திருமால் இராமன் என்னும் வடிவு கொண்டு சீதையுடன் காடு சென்ற காலத்து, இராவணனால் ஏவப்பட்ட பொய்மானை மெய்யென்று நம்பித் தன் மனைவியைப் பிரிந்தான். அவனை இறையென்று கூறுதல் தவறுடையதாம். மேலும் இலங்கை சென்று இராவணனையும் அவன் படையையும் கொன்று அப்பாவம் நீங்க இராமேசுவரம் வந்து சிவபெருமானை வழிபட்டு அப்பாவத்தைப் போக்கியவன் இறைவனல்லன்.

8. திருமால் பரசுராமன் வடிவு கொண்டு தம்மை மருவிய அரசர்களைக் கொன்றனன். அப்பாவம் தீரச் சிவபெருமானை நோக்கித் தவம் செய்தனன். இவ்வாறே பலராமனாய் வடிவு கொண்ட காலத்தும் சிவபெருமானை நோக்கி யோகிருந்தனன். இவ்வாறு பிறவிதொறும் சிவபெருமானை நோக்கி வழிபட்ட திருமாலுக்கு முதன்மை கூறுதல் எங்ஙனம்?

9. வாசுதேவனான கண்ணன், உபமன்னிய முனிவரிடம் தீக்கை பெற்றதனால் அவருக்குத் தனது உடல், பொருள், ஆவி அனைத்தும் கொடுத்து அவரால் சிவபக்தன் ஆனான் என்ற வரலாறும் காணப்படுகின்றது.

10. திருமால் இனிக் குதிரை வடிவு எடுப்பன் என்பர். அவ்விதம் வரும் குதிரைக்கு யாது வருமோ? ஏனெனில் முன்பு வந்த பிறப்புக்களில் ஏற்பட்ட முறைமையை அறிந்தால் முழுமுதற் கடவுளான சிவபெருமானின் புகழே எங்கும் விளங்கும்.

திருமால் முதலையின் வாய்ப்பட்ட யானையின் இடரைக் களைந்தமை யானும், மலையை எடுத்தமையாலும், ஆநிரையைக் காத்தமையாலும் இறைவனாகான்.

அரசனே! முறையோ என்று ஒருவன் அழைத்தக்கால் அரசன் அழைத்தவன்பால் தானே நேரில் ஓடிச் செல்வதில்லை. அவனிடத்து உள்ள காவலாளனே அவ்வாறு முறையிட்டாரிடத்துச் சென்று அக்குறையைத் தீர்ப்பன். அந்நிலை போன்றதே கஜேந்திரன் என்னும் யானை ஆதிமூலமே என்று அழைத்தவழி திருமால் சென்று உதவியது மாகும். எனவே திருமால் ஆதியானவன் என்றல் பொருந்தாது. அன்றியும் யானை, மூலமே! என்று அழைத்தமையால் திருமால் மூலமாகிய இறைவன் என்று கூறமுடியுமா? உனக்கு அடிமையாய் உள்ளான் உன்னை எம்பெருமான் என்று அழைத்தால் நீ இறைவனாக முடியுமா? ஆதலால் அனைவருக்கும் மூலம் சிவபெருமானேயாவான்.

திருப்பாற் கடலைக் கடைந்த போது எழுந்த நஞ்சினை வெப்பம் தாக்கித் திருமால் முதலான தேவர்கள் சிவபெருமானிடம் முறையிட அப்பெருமான் விடத்தைக் கண்டத்தில் அடக்கித் திருமால் முதலான தேவர்களை உயிர் பிழைக்கச் செய்தான்.

மேலும் சூரபதுமனுக்குப் பயந்து திருமால் திருப்பாற்கடலைவிட்டு நீங்கிச் சிவபெருமானிடத்து முறையிட, முருகனால் அவனைக் கொன்றும், தாரகன் என்னும் அசுரனைக் காளியென்னும் சக்தியால் கொன்றும், பின் தானே திரிபுரத்தசுரர், சலந்தரன் முதலானவரைக் கொன்றும், பாற்கடலில் உண்டான விடத்தை அமுதாக்கியும் இவ்வுலகைக் காத்தான்.

அருச்சுனன் பாரதப்போர் செய்யும் போது தனது உறவினரே பகைவராக உள்ளதால் கொல்ல மாட்டேன் என்ற போது, தேர்ப்பாகனான கண்ணன் அவனது எண்ணத்தை மாற்றிக் 'கொல்வது நான் நீயன்று' எனக்கூறி கொல்வித்தான்; அதனை நூலாகவும் கொண்டனர். அதனை நூலெனக் கொண்டால் திருமால் புத்தனாக இருந்து திரிபுரத்துள்ளார் சிவலிங்கத்தைக் கைவிடும் பொருட்டுச் சிவபெருமான் இறைவன் அல்ல என அவர்களை மயக்குவித்தற்குக் கூறிய நூலையும் நூலெனக் கொள்ள வேண்டும்.

மாயை அறிவற்றதாகையால் உயிராகாது. உயிர் அறிவுடைய தாகையால் மாயையைச் சேராது. இறைவன் இவ்விரண்டுமாகான். திருமால் இறைவனாயின் எல்லாம் தானாகித் தோன்றுவதல்லது அறிவாயும் அறிவற்றதாயும் பிரிந்து நில்லான்.

உயிர் பாசத்தை நீங்கி இறைவனைக் கூடுதலே வீடுபேறாகும். என்று ஆகமங்கள் இயம்பும் ஆனால் திருமால் அறிவற்ற பாசமாயும், பாசத்தோடு கூடிய உயிராகவும் நிற்பனென்று அறிவின்றிக் கூறின் வேதாகமங்களுக்கு மாறான மயக்க நூல் ஆகும்.

அயனும், திருமாலும், படைத்தல், காத்தல் தொழிலால் தாமே இறைவனென்று செருக்குற, அச்செருக்கை அடக்கச் சிவபெருமான் நம்முடைய அடிமுடியை அறிந்தவனே இறைவன் எனக்கூறி நெருப்பு வடிவாய் நிற்க, அயன் திருமுடியைக் காண அன்னமாக வடிவெடுத்துப் பறந்து தேடியும், திருமால் திருவடியைக் காணவேண்டிப் பன்றி வடிவாய்ப்பாதளத்தை அகழ்ந்தும் அடிமுடியை அறிய முடியவில்லை. இங்ஙனம் தேடிய இருவருள் ஒருவராய திருமாலை இறைவன் என்று கூறுதல் பொருந்தாது.

மேலும் திருமால் ததிசி முனிவரோடு போர் செய்த போது அம்முனிவர் அவரது சக்கரத்தைப் பறித்து முறித்தார். அன்றியும் தருப்பையால் ஆக்கிய ஆயுதத்தால் திருமாலை மயங்கி விழவுஞ் செய்தார். துருவாச முனிவர் மார்பிலே மிதித்தமையால் ஏற்பட்ட தழும்பால் 'திருமறுமார்பன்' என்ற பெயரையுடையவனான். அம்முனிவரது காலடி தூய்மையுடையது என்று கருதி விருப்புடன் அவ்விடத்துத் திருமகளை வைத்து உள்ளான்.

திருமால் பிருகு முனிவரின் மனைவியுடன் உறவு கொண்டமைக்காக அம் முனிவரால் பத்துப் பிறவி எய்துமாறு சாபம் பெற்றனன். அச்சாபம் பெற்ற திருமால் சிவபெருமானிடத்துச் சாபம் நீங்க வேண்ட, அப்பெருமானும் சாபத்தாற் எடுக்கும் பத்துப் பிறவிகளிலும் ஆட்கொண்டு அருளுவதாகக் கூறினன். எனவே இவ்விதம் எடுத்த ஒன்பது பிறவிகளிலும் உடலெடுத்து வருத்தமுற்றுப் பிறந்தும் இறந்தும் வந்த திருமால் இறைவனல்லன். எனவே வீடுபேற்றை வழங்குதற்கு உரியவன் சிவபெருமான் ஒருவனே எனத் தெளிதல் வேண்டும். உயிர்கள் அத்தகையோனது திருவடியைச் சரியை, கிரியை, யோக, ஞான நெறிகளில் நின்று வணங்கினால் பிறவிப் பிணியினின்றும் நீங்கி வீடுபேற்றை அடையலாம்.

பாஞ்சாத்திரிகள் கூறும் தத்துவம் இருபத்துநான்கும் ஆன்மதத்துவமாகும். இவற்றிற்கு மேல் வித்தியாதத்துவங்கள் ஏழும், சிவ தத்துவங்கள் ஐந்தும் உள. வாசு தேவனே முதல்வனாகக் கொள்ளின் இப்பன்னிரண்டு தத்துவங்களும் இவற்றைச் சிவபெருமானின் ஏவல்வழிச் செயற்படுத்தும் தலைவர்களும் இம்மூலப் பகுதியில் ஒடுங்கார். ஆதலின் அவற்றையும் தம்பால் ஒடுக்கும் அழித்தற் கடவுளாகிய சிவபெருமானே முழுமுதற் கடவுளாவர்.

ஸ்ரீ அருணந்தி தேவநாயனார்

அருளிச் செய்த

சிவஞான சித்தியார் பரபக்கம் மூலமும், உரையும் முற்றிற்று.

இதுகாறும் சிவஞானசித்தியார் பரபக்கத்துட் சுட்டப்பட்ட பதினான்கு பிற சமயங்களைப் பற்றி ஆராய்ந்து தெரிந்து கொண்டோம். மாதவச்சிவஞான சுவாமிகள் சிவஞானபோத மாபாடியத்துள் 24 மதங்களைப் பற்றி இயம்பியுள்ளார். சிவஞானசித்தியார் பரபக்கத்தில் விடுபட்ட அகப்புற, அகச்சமயங்கள் பற்றிய சில கருத்துக்களையும், இன்று உலகந்தழுவி நிற்கும் கிறித்துவம், இசுலாம் ஆகியவற்றின் கொள்கைகளையும் எதிர்காலத் தலைமுறைக்கு ஆவணம் செய்து நூலை நிறைவாக்குகிறோம்.

அகப்புறச் சமயங்கள்

1. பாசுபதம்

இது அகப்புறச் சமயங்கள் ஆறனுள் ஒன்று. இக்கொள்கையை உருவாக்கியவர் 'மாயை' எனும் தத்துவத்தில் வைகும் உருத்திரர் ஆவர். இக் கொள்கையுடையார் 'சங்கிராந்த சமவாதி' எனவும் அழைக்கப் பெறுவர்.

சிவபெருமான் யோக வடிவில் வந்து குரு, ததீசி, அகத்தியர், உபமன்யு ஆகிய முனிவர்கட்கு ஞானத்தை அருள, அந்நால்வரும் தமக்குப் பின் வந்த பலர்க்கும் அருளினர் என்றும், அவ்வாறு வழிவழியாக வளர்ந்துவரும் மதமே இதுவென்றும் கூறுவர்[1].

கொள்கைகள்

உயிர்கள் பல. அவை என்றும் அழியாதவை. ஆணவ மலம் என்ப தொன்றில்லை. மாயை கன்மங்களால் பிணிக்கப்பட்ட உயிர் அவற்றின் வழிவரும் இன்ப துன்பங்களை நுகரும். இவ்வின்ப துன்பங்களில் உவர்ப்புத் தோன்றவும், சிவபெருமானின் இன்னருள் பெறவும் நூல் நெறியானே தீக்கை பெற வேண்டும். அவ்வாறு தீக்கை பெற்றவர்பால் சிவபெருமானின் அருள் ஞானம் சென்று பற்றும். அப்பொழுது குடும்பப் பொறையைத் தம் மக்கள் பால் வைத்தொழித்துத் துறவறத்தில் செல்வார் போல, இறைவனும் தன் குணங்களை அவர் பால் பற்று வித்துத் தன் ஆணையினின்றும் ஒழிவு பெற்று இருப்பன்[2].

நடைமுறை ஒழுக்கங்கள்

இவர்கள் தம் உடம்பில் சாம்பலையும் களிமண்ணையும் பூசிக் கொள்வர். கருப்பு உடைகளை அணிவர். முடியிடாமலும், முடியிட்டும் இருப்பர். பசுபதி வழிபாடுடையர். சிவபெருமானுடன் அவரது கணங்களையும், பேய்களையும் சேர்த்து வழிபடுவர். முகம், தோள், கொப்பூழ், மார்பு ஆகிய இடங்களில் சிவலிங்க இலச்சினையைக் குறித்துக் கொள்வர்.

இக்கொள்கை யுடையார்க்குச் சிவபெருமான் நேரில் காட்சியளிப்பன் என்பர். இவர்கள் புற, அக, ஒன்றிய, ஞான (சரியை, கிரியை, யோகம், ஞானம்) வழிபாடுகளை உடையவர். மந்திரங்களை எண்ணுவது, அதன் வழித் தம் உள்ளத்தை ஒருமைப்படச் செய்வது முதலிய நாள் ஒழுக்கங்கள் (அனுட்டானம்) இவர்க்கு இன்றியமையாதனவாம். இக்கொள்கை இதிகாசங்களில் காணப்படுதலின் அக்காலம் முதலே இக்கொள்கை இருந்ததென அறிய முடிகிறது[3].

---

1. சைவசமய வளர்ச்சி, ப. 81
2. சிவஞான போதப் பேருரை, ப. 12.
3. சைவசமய வளர்ச்சி, ப. 81

2. மாவிரதம்

இக்கொள்கையை உருவாக்கியவர் 'வித்தை' எனும் தத்துவத்தில் வைகும் உருத்திரர். இக்கொள்கையுடையார் 'உற்பத்திவாதி' எனவும் அழைக்கப் பெறுவர். இதுவும் பாசுபதம்போல் பழைமையானது[1].

கொள்கைகள்

மாயை கன்மங்களால் கட்டப்பட்ட உயிர் அவற்றின் வழி இன்ப துன்பங்களை நுகரும். இத்தகைய உயிர்கள் உய்தி பெற வேண்டின் நூல் நெறியானே தீக்கை பெறுதல் வேண்டும். என்புமாலை அணிதல் முதலிய விரதங்களை மேற்கொண்டு புறவழிபாட்டினைச் (சரியை) செய்துவரின் அவர் வீடுபேற்றிற்குரியராவர். அவருக்கு அந்நிலையில் சிவபெருமானோடு ஒத்த எல்லா குணங்களும் தோன்றி நிற்கும்[2].

நடைமுறை ஒழுக்கங்கள்

நெற்றியில் மூன்று நீற்றுக்களாகத் திருநீறு அணிவதோடு அதனை உடல் முழுதும் பூசுவர். தலையின் உச்சியில் எலும்புகளைக் கட்டி வைப்பர். அதனைக் குண்டலங்களாகவும் காதில் அணிவர். கழுத்திலும் முன்கையிலும் கூட எலும்புகளைக் கட்டியிருப்பர். யோகப் பட்டியையும், கருப்பு மயிரினால் ஆன பூணூலையும் அணிவர். கோவணமும் அதன் மேல் அசைந்தாடும் சிறிய உடையும் இடையில் காணப்படும்[3].

மானக்கஞ் சாறரிடத்து அவர்தம் மகளாரின் திருமுடி கேட்டுவந்த இறைவனின் கோலம் இம்மாவிரதியர் கோலம் என்பது ஈண்டு எண்ணத்தக்கது.

3. காபாலம்

இக்கொள்கையை உருவாக்கியவர் 'காலம்' எனும் தத்துவத்தில் வைகும் உருத்திரர் ஆவர். இக்கொள்கையுடையார் 'ஆவேசவாதி' எனவும் அழைக்கப் பெறுவர்[4].

கொள்கைகள்

உயிர்கள் மாயை, கன்மங்களில் கட்டப்பட்டு இன்ப துன்பங்களை நுகருகின்றன என்பது இவர்க்கும் கருத்தாகும். அந்நெறியினின்றும் உய்தி பெற

1. சிவஞான போதப் பேருரை, ப. 21.
2. சைவசமய வளர்ச்சி, ப. 82.
3. சைவசமய வளர்ச்சி, ப. 82.
4. சிவஞான போதப் பேருரை, ப. 21.

நூல் நெறியானே தீக்கை பெறவேண்டும் என்பதும் இவரது கொள்கையாகும். இவர் பச்சைக்கொடி ஒன்றைக் கைக்கொண்டு நாள்தொறும் மனிதல் தலையோட்டில் பிச்சை ஏற்று உண்பர். இறைவனையே எண்ணியவாறு வாழ்வு கொண்ட இவர்களிடத்துச் சிவபெருமான் ஆவேசித்து நிற்பர். அந்நிலையில் அப்பெருமானுக்கு உளவாய குணங்கள் அனைத்தையும் பெற்றுச்சிவபெருமானோடு ஒரு தன்மைத்தாக வைத்து எண்ணப்படுவர்[1].

நடைமுறை ஒழுக்கங்கள்

சிவபெருமானைப் பைரவ வடிவத்தில் வணங்குவர். உடம்பெல்லாம் நீறு பூசுவர். தலைமாலை அணிவர். சடையுடையர். புலித்தோலால் ஆகிய கோவணத்தை அணிவர். இடதுகையில் மண்டையோட்டை ஏந்தி நிற்பர். நரபலியும் செய்வர்[2].

4. வாமம்

அறிவுடையதும், அறிவற்றது மாய அனைத்துலகும் சக்தியின் வளர்ச்சி (பரிணாமம்)யேயாகும். வாமநூலில் விதித்தவாறு ஒழுகிச் சத்தியில் ஒன்றுபடுவதே வீடுபேறு ஆகும். இந்நூல் செய்தார் சித்தபுருடர் என்பார்[3].

இவர் புலாலுண்ணுதல், மகளிரொடு இன்புறுதல், மதுவருந்துதல் ஆகிய பழக்க வழக்கங்களைக் கொண்டிருப்பர்.

5. வயிரவம்

இது பெரும்பாலும் வாமமதக் கொள்கையோடு ஒத்தது. சிறுபான்மை ஒழுகலாறுகளால் (ஆசாரங்களால்) வேறுபட்டிருப்பது. வயிரவனே பரம்பொருள். அவனடியிற் சேருவதே வீடுபேறு என்பது இதன் கொள்கையாகும்[4]. வயிரவக் கடவுளரிடமிருந்து எட்டுக்கலைகள் தோன்றி உயிர்களுக்குப் பந்தமும் வீடும் அளிக்கும். இம்மதத்தில் கூறப்பெறும் போகமார்க்கமே வீடுபேற்றை அளிக்கும்.

நரபலி இடுதல், மண்டையோட்டில் உணவருந்துதல், மதுவருந்துதல் ஆகிய பழக்கம் இவர்களுக்குண்டு. சிறுத்தொண்டரிடத்துப் பிள்ளைக்கறி கேட்டுவந்த இறைவனின் திருக்கோலம் பைரவக்கோலம் என்பதும் ஈண்டு எண்ணத்தக்கது.

6. ஐக்கிய வாத சைவம்

மாயை, கன்மம் எனும் இருமலங்களே உள்ளன. இவற்றால் கட்டப்பட்ட உயிர்கள் தாம் செய்த அறம். பாவங்கட்கு ஏற்ப உடல், கருவி, உலகு, நுகர்வு

---

1. சிவஞான போதப் பேருரை, ப. 21.
2. சைவசமய வளர்ச்சி, ப. 82.
3. சிவஞான போதப் பேருரை, ப. 21.
4. சிவஞான போதப் பேருரை, ப. 21.

ஆகியவற்றைப் பெற்றிடும். இவற்றை நுகர்ந்த வழிப் பெற்ற இருவினை ஒப்பாலும், இறையருளாலும் மலம் நீங்கப் பெற்று இறைவனை அடையும். உயிர் இயற்கையிலேயே அறிவுள்ளது என்பது இவர்கள் கருத்தாகும்[1].

பாசுபதர் முதலிய ஐவரும், வேதம் சிவாகமம் இரண்டிற்கும் பொதுவகையால் பிரமாணங் கொள்ளினும், அவ்விரண்டிற்கும் புறமாகிய பாசுபதம் முதலிய நூல் கட்குச் சிறப்பு வகையால் பிரமாணம் கோடலானும், வேதம் சிவாகமம் இரண்டிலும் ஆகா என விலக்கப்பட்டனவற்றை ஆதரித்தலானும், ஐக்கியவாத சைவர் வேதம் சிவாகமம் இரண்டிற்கும் சிறப்பு வகையால் பிரமாணங் கொண்டு அவற்றில் விலக்கியன ஒழித்து விதித்தவழி ஒழுகுவாராயினும், எல்லாப் பெருங் கேட்டிற்கும் மூல காரணமாகிய ஆணவமலத்துண்மை கொள்ளாமையாலும், அதன்உண்மை சாதிக்கும் சிவாகம வாக்கியங்களை இகழ்தலாலும் அவ்வறுவகைச் சமயமும் அகப்புறச் சமயம் என வேறுவைத்து எண்ணப்பட்டன எனச் சிவஞான முனிவர் கூறுவதும் ஈண்டு எண்ணற்குரியதாம்.

அகச்சமயங்கள்

அகச்சமயங்கள் அறு வகைப்படும். அவை 1. பாடாணவாதசைவம் 2. பேதவாதசைவம் 3. சிவசமவாதசைவம் 4. சிவசங்கிராந்த வாத சைவம் 5. ஈசுவர அவிகார வாத சைவம் 6. சிவாத்துவித சைவம் என்பன.

1. பாடாண வாத சைவம்

வீடு பேற்று நிலையில் உயிர் யாதொரு நுகர்வும் இன்றிக் கல் எனக் கிடக்கும் எனும் கொள்கை யுடைமையின் இவர் பாடாணவாதி என அழைக்கப் பெறுவர்[2]. பாடாணம் - கல்.

காலப் பழமைக்கு எட்டாத காலத்தேயே உயிரொடு ஆணவமலம் இயைந்து நிற்கும். அதனால் மாயையும் வினையும் உயிரொடு கூடும். இறைவன் அவ்வுயிர் செய்த வினைக்கிடாக உடலைக் கொடுப்பன். உயிர் அதன் வழி இன்ப துன்பங்களை நுகரும். கண்ணொளியை இருட் படலம் மறைத்து விடுதல் போல உயிரறிவை அவ்வாணவமலம் மறைத்து நிற்கும். அதனால் பிறவித் துன்பம் மிகும். அம் மிகுதியால் உயிர் காலப்போக்கில் உலகு, பொறி முதலியவற்றான் வந்த அறிவை, அறிவு அன்றென உவர்த்துத் திருவருள் வழி வீடுபேற்றிற்கு இலக்காகும். அவ்வாறு வீடு பெற்ற வழியும் உயிரிடத்து ஆணவ மலம் நீங்குதல் இல்லை. அதனால் உயிர் யாதொரு இன்ப துன்ப நுகர்வும் இன்றிக் கல்லெனக் கிடக்கும் என்பது இவர்தம் கொள்கையாகும்[3].

---

1. சிவப்பிரகாசம், நூ. 2, பாடல் 16.
2,3. சங்கற்ப நிராகரணம், ப. 13.

2. பேதவாத சைவம்

வீட்டு நிலையிலும் உயிரும், இறையும் வேறு வேறாகவே நிற்கும் எனும் கொள்கை யுடைமையின் இவர் பேதவாதி என்றழைக்கப்படுவர்[1].

பேதம் - வேறுபட நிற்றல்.

செம்பினிடத்து உள்ள களிம்பு இரத குளிகை பொருந்தக் கெட்டுப் பொன்னாகும். அது போல மலங்களோடு சேர்ந்த உயிரும் இறைவன் இன்னருளால் அம்மலங்கெட வீடு பெறும். அந்நிலையில் உயிர் பெறுவானாய், வீடு அவ்வுயிர் பெறும் பேறாய் நிற்கும் என்பது இவர் கொள்கையாகும்[2].

3. சிவசமவாதம்

வீட்டு நிலையில் உயிர் இறைவனோடு ஒத்திருக்கும் எனும் கொள்கை யுடைமையின் இவர் சிவசமவாதியென அழைக்கப் பெறுவர்.

உயிர் தன்னறிவானும் (பசுஞானம்), ஏனைய இறை, தளை ஆகியவற்றின் அறிவானும் (பதி ஞானம், பாச ஞானம்) அறியும் அறிவுடையது. உயிர் தன்னறி வானும், தளையறி வானும் பெற்ற அறிவு கெட்ட விடத்துக் கொழுந்து விட்டு எரியாத செந்நெருப் பென ஒன்றையும் சுட்டியறியாத அறிவு மாத்திரையாய் இருக்கும். அதுபொழுது வேட்டுவன் புழுவை எடுத்துக் கொள்ளுவது போல, இறை ஞானம் உயிரை எடுத்துக் கொள்ளும். புழு வேட்டுவனை நினைந்து அதன் வடிவாகும்; அன்றியும் அதன் தொழிலையும் இயற்றும். அது போல உயிரும் இறையை நினைந்து அதன் வடிவாகும்; அவன் தொழிலையும் இயற்றி நிற்கும் என்பது இவர் தம் கொள்கையாகும்.

4. சிவசங்கிராந்த வாதம்

வீட்டு நிலையில் உயிர் இறைவனின் இயல்புகள் அனைத்தையும் பெற்று ஒன்றாய்க் கலந்து விடும் எனும் கொள்கை யுடைமையின் இவர் சிவசங்கிராந்த வாதி என அழைக்கப் பெற்றார். சங்கிராந்தம் - கலத்தல்[3].

காந்தத்தின் முன் இரும்பு செயற்படுதல் போல உயிர் முன் உடல் செயற்படும். அவ்வுடற்கண் இருக்கும் கருவிகளே பொருள்களை நுகரும். மலம் நீங்கிய வழிக் கண்ணாடியில் முகவொளி தோற்றுவது போல, உயிரிடத்து முதல்வன் திருவருள் கலந்து தோன்றும். அது பொழுது உப்பளத்தில் இட்டவை

1. சங்கற்ப நிராகரணம், ப. 14.
2. சிவஞானபோதப் பேருரை, ப. 22.
3. சங்கற்ப நிராகரணம், பக். 18, 19.

யெல்லாம் உப்பாமாறு போல, உயிரும் சிவமேயாய் உயிர் அறிதற்குக் காரணமாய கருவிகளெல்லாம் சிவகருவிகளாய் மாறிச் சிவத்தையே அறியும் என்பது இவர் கொள்கையாகும்[1].

5. ஈசுவர அவிகார வாதம்

வீட்டு நிலையில் உயிர் இறைவனுடன் வேற்றுமையற்றுக் கலந்து விடும் எனும் கொள்கை யுடைமையால் இவர் ஈசுவர அவிகாரவாதி என்றழைக்கப் பெற்றனர்[2].

அவிகாரம் வேற்றுமையின்மை.

பல துளைகளையுடைய குடத்தில் ஏற்றிய விளக்குப் போல ஒன்பது துளைகளையுடைய உடம்பில் உயிர் அறிவாய் நிற்கும். நிற்பினும் அவ்வப் பொறிகள் அளவில் நின்று அவ்வவற்றைக் கூடி அறியும். இருவினை ஒப்பையும், அருள் வீழ்ச்சியையும் உயிர் பெற்றவழி முதல்வன் பேரருளால் உயிர் ஞானத்தைப் பெறும். வெயிலில் திரிந்தான் ஒருவன் மரநிழல் கண்டு ஆறுவது போலப் பிறவி வெப்பத்தில் உழன்ற உயிர், அம் முதல்வனின் திருவருள் பெற்று நிற்கும். அவ்வாறு இறைவன் திருவருளோடு கூடிய வழி பின் அம் முதல்வனின் உதவியை அவாவாது நிற்கும் என்பது இவர் தம் கொள்கையாகும்[3].

6. சிவாத்து வித வாதம்

உயிரும், தளையும், இறைவன் வியாபகத்தில் அடங்கி நிற்கும். எனவே அவை அதனின் வேறல்ல என ஒற்றுமைப்படுத்தி உரைத்தலின் இக் கொள்கை சிவாத்துவித சைவம் என அழைக்கப்பட்டது.

உயிர், தளை ஆகிய இரண்டிற்கும் இறைக்கும் உள்ள வேற்றுமை குணமும் அவனுடைய குணிக்கும் உள்ள வேற்றுமையைப் போல உள் வேறுபாடுடைமையே யன்றிப் புற வேறுபாடு இல்லை. கவடும், கோடுகளும் மரமன்றி அதனின் வேறாதல் இல்லை. அது போன்றே உயிரும் தளையும் இறைவனின் வேறன்று. அனைத்தும் உள்பொருளே உயிர்க்கு அறியும் தன்மை இல்லை. அதனிடமாக நின்று அறிவது சிவமேயாம். மாயை முதல்வனின் வேறன்று, இருவினை காரணமாக வரும் மீளப் படைத்தலும் உயிரின் பொருட்டுச் சிவத்துக்கேயாகும். இறையின் தன்மையே உயிரின் தன்மையாதல் இன்றி வேறில்லை. முதல்வனைத் தலைப்பட்ட உயிர் அம்முதல்வனோடு ஒன்றாகவே ஆகிவிடும். அவ்விடத்து அறிவதும்,

1. சிவஞானபோதப் பேருரை, ப. 22-23.
2. சங்கற்ப நிராகரணம், ப. 20.
3. சிவஞானபோதப் பேருரை, ப. 23.

அறியப்படுவதும் என வேறுபடுத்திக் காண்டற் கில்லை. முதல்வன் தன் இன்பத்தைத் தானே துய்ப்பன். நிமித்த காரணமாகிய முதல்வன் மாயையோடும் கூடி முதற் காரணமும் ஆவன். இவை இவர் தம் கொள்கைகளாம்.

நிமித்த காரணமானவன் முதற் காரணமும் ஆவன் என நிமித்த காரணத்திற்குப் பரிணாமம் கூறுதலின் நிமித்த காரண பரிணாம வாதம் எனவும் இம்மதம் அழைக்கப்பெறும்.

அகப்புற, அகச்சமய மதமறுப்பு

பாசுபத மத மறுப்பு

ஆணவம் என்பது ஒன்று இல்லையாயின், உயிர்க்கு அறியாமையைத் தரும் பொருள் ஒன்றும் இல்லை. அஃது இல்லையாகவே அதன்வழி உயிர்க்கு வரும் விருப்பு வெறுப்புக்களும் உளவாகா. அஃது இன்றாகவே நலம், தீங்குகள் விளையக் காரணமும் இல்லை. அவை இன்றாகவே உயிர்கள் பிறப்பெடுத்தற்கும் காரணமில்லை. எனவே உயிர்க்கு இவையெல்லாம் நிகழ ஆணவம் உண்டென்பது அறியத்தக்கது. ஐக்கிய மத சமயத்தார்க்கும் இம் மறுப்புப் பொருந்துவதாகும்.

உயிர்க் குற்ற வினைமாசு நீங்கிய வழி இறைவன் திருவடியில் அணையப் பெற்று ஆராஇன்பத்தில் திளைத்து நிற்கும். அவ்வாறாய வீட்டு நிலையை உயிர்கள் பெறுவதும் தொடர்ந்து அவ்வின்பத்தில் திளைப்பதும் இறைவனின் ஆணையும் அருளும் முன்னின்று அருளுவதாலேயாம். அவ்வாறாக அவன்தன் ஆணையின் நீங்கி ஓய்வுபெறுதல் என்பது இல்லை.

மாவிரதமத மறுப்பு

உயிர் தம் பாச நீக்கத்தைப் பெறுதற்குப் புறவழிபாடு முதற்படியேயாகும். அதற்கு மேலாக அகவழிபாடு (கிரியை), ஒன்றிய வழிபாடு (யோகம்) ஆகியவற்றைச் செய்தலும், அவற்றின் பயனாக ஞானத்தைப் பெறுதலும், அதன் பயனாக வீடு அடைதலும் வேண்டும். இவ்வாறாகப் புறவழிபாடாகிய முதற் படியில் நின்ற அளவானே வீடு பெறுதல் என்பது உளவாகாது. வீட்டு நிலையிலும் இறைவனால் வழங்கப்பெறும் ஆரா இன்பத்தைத் துய்த்தல் அன்றி, அவனோடு ஒத்த நிலை அடைதல் என்பதும் இல்லை.

காபாலமத மறுப்பு

இம்மதத்தார்க்கும் முற்கூறிய மறுப்புப் பொருந்துவதாகும். சிவபெருமான் தன் இன்னருளை வழங்கி உயிர்களை நெறிப்படுத்தியும் இன்புறுத்தியும் வாழ்விப்பதன்றி உயிர்களை ஆவேசித்து நிற்றல் என்பது இல்லையாம்.

வாமமத றறுப்பு

இறைவன் உயிர்களை உய்யக் கொள்ளும் வகையில் கொள்ளும் கருணையே சத்தியாகும். கதிரவனும் அதன் ஒளியும் என்றும் பிரிவின்றி இயைந்திருத்தல் போல, இறைவனும் இவ்வருட் சத்தியும் பிரிவின்றி இயைந்து நிற்பதாம். ஆதலின் இறைவனின் வேறாகச் சத்தியைத் தலைமைப்படுத்திக் கூறுவதும், அதன் வழி உயிர் உயர்வடையும் என்பதும் தவறாகும். புலால், மது, மாது இவற்றையெல்லாம் ஏற்றுக் கொள்ளவே முடியாது.

வைரவமத மறுப்பு

இம்மதத்தார்க்கும் முற்கூறிய மத மறுப்புப் பொருந்துவதாகும். இறைவன் உயிர்களை உய்யக் கொள்ளுதற்கெனக் கொள்ளும் வடிவங்கள் பலவாம். அவை அனைத்தும் நம்தம் கருமேனி கழிக்க வந்த கருணையின் வடிவங்களேயாகும் ஆதலின் இறைவனின் வேறாகப் பைரவக்கடவுளே அனைத்தும் செய்பவர் எனக் கருதவேண்டுவது இன்று.

பாடாண வாத மறுப்பு

ஆணவமல இயைபால் சுட்டி ஒன்றை உணரா நிலையையும் இன்பத் துன்ப நுகர்வற்ற நிலையையும் உயிர் பெறுவது தன்னிலையில் (கேவலநிலை) நிற்குங்காலும் பெறக்கூடியதாம். அன்றியும், இறந்தவர்களும், புல் பூண்டு முதலாய உயிரினங்களும் கூட இந்நிலைக்கு உரியவாம். ஆதலின் யாவற்றிற்கும் மேலாய வீடு பேற்றின்பத்தை இவ்வாறு கல்போலக் கிடத்தலாகக் கருதுவது சிறிதும் பொருத்தமின்றாம்[1].

பேதவாத மத மறுப்பு

மறை முதலாய நூல்கள் அனைத்தும் இறை, உயிர், தளை ஆகிய மூன்றும் என்றும் நிலையானவை என்று கூறும். அங்ஙனமாக வீட்டு நிலையில் மலம் அழிந்து விடும் என்றல் பொருந்துவதன்றாம். இரத குளிகை செம்பை அழித்துப் பொன்னாக ஆக்கி விடுகிறது. ஆனால் இறைவனின் இன்னருள் உயிரை அழித்துப் பிறிதொன்றாக ஆக்குவதில்லை. ஆதலின் இவ்வுவமையும் பொருந்துவதன்றாம்[2].

சிவசமவாத மறுப்பு

உயிர் ஒன்றை யறிதற்குத் தன்னறிவு (பசுஞானம்), இறையறிவு (பதிஞானம்), தளையறிவு (பாச ஞானம்) ஆகிய மூன்றும் முன்னிற்க அறிய வேண்டுவதில்லை. இவற்றுள் யாதானும் ஒன்றே அமையும். அவ்வாறன்றி இம்மூன்றுமே துணையாக

1. சங்கற்ப நிராகரணம், ப. 13.
2. சங்கற்ப நிராகரணம், ப. 15.

வேண்டுமெனில் கண் பார்த்தற்கும், கதிரவன், திங்கள், விளக்கு ஆகிய மூன்றன் துணை வேண்டுமெனக் கூறல் வேண்டும். அம் மூன்றனுள் ஒன்றே கண்ணிற்குப் போதுவது போல, உயிர்க்கும் இம் மூன்றனுள் ஒன்றே போதுவதாகும்.

கருவிகளை நீங்கிய நிலையில் உயிர் கொழுந்து விட்டு எரிதலின்றிக் கிடக்கும் நெருப்பை ஒக்குமெனில், உயிர் தன்னைவிட்டு நீங்காத இறைவனை அந்நிலையில் தானே காண்டல் வேண்டும். அவ்வாறு காண்டல் இல்லை ஆதலின் அதுவும் பொருந்துவதன்றாம். உயிரை ஆட் கொள்ளும் இறைக்குப் புழுவை எடுத்துக் கொள்ளும் குளவியை உவமை கூறலும் சாலாது. இறைவன் உயிரை ஆட் கொள்ளுங்கால் திருவைந்தெழுத்தை அருளி ஆட் கொள்ளுவன். அவ்வாறு புழுவை எடுத்துக் கொள்ளும் குளவி அதற்கு யாதொரு திருமந்திரமும் அருளுவதில்லை. புழு குளவி யாதல் அச்சுமாறிப் பிறத்தற்கு உவமையாதல் அன்றி வீட்டு நிலையைப் பெறுதற்கு உவமையாகாது. யோகத்தின் பயன் தான் நினையும் ஒரு பொருளொடு ஒத்த வடிவு கோடலாகும். வீடு பேற்று நிலையோ உயிர் தான் நினைந்த வடிவோடு ஒன்றுபட்டு நிற்பதாகும். இறைவனுக்கு உளதாய ஐந்தொழில்களையும் அவனருள் பெற்ற உயிர்களும் செய்யும் என்றல் மறைப்பொருட்கு மாறாயதாம். **முதலையுண்ட பாலனை அழைத்த சுந்தரரும், இறைவனை வேண்டி அப்பாலனை மீட்டனர் அன்றித் தாமாகச் செய்து விடவில்லை. ஆதலின் உயிர் எந்நிலையிலும் தாமே ஐந்தொழில் செய்தல் இல்லை**[1]. அது என்றும் மீளா அடிமையே.

சிவசங்கிராந்த வாத மறுப்பு

கண்ணாடி, பார்த்தவர்களின் முகத்தைத் தான் வாங்கிக் கொண்டு எதிர் நிழற்றும். ஆனால் உயிர்க்கு அவ்வாறு கொடுத்ததைக் கொள்ளும் தன்மையில்லை. உப்பளத்தில் காணும் புல்லும் வைக்கோலும் அறிவற்றன ஆதலின் அவை தம் தன்மையை விடுத்து உப்பின் தன்மையை ஏற்றன. ஆனால் உயிரோ அறிவுடையது. ஆதலின் கொடுப்பக் கொள்ளும் தன்மை அதற்கில்லை. உடற்கண் உள்ள கருவிகள் மாயைவழித் தோன்றியவை. ஆனால் இறைவனோ இதற்கு மறுதலையானவன். அருளுருவாயும், விளங்கிய அறிவினனாயும் நிற்கும் இயல்பினன். எனவே உயிரது கருவிகளெல்லாம் சிவகருவிகளாதலில்லை. அன்றியும் இறைவன் கருவி, கரணங்களைக் கடந்தவன். அவற்றுக்கு அப்பாலானவன் என்பதும் அறியத் தக்கதாம்[2].

ஈசுவர அவிகார வாத மறுப்பு

உயிர் தாமாகவே பொறிகளைக் கூடிப் பொருள்களை உணரும், நுகரும் என்றல் சாலாது. அவ்வாறு அது கூடுதற்கும், உணர்தற்கும் திருவருள் துணை

1. சங்கற்ப நிராகரணம், ப. 15, 16, 17.
2. சங்கற்ப நிராகரணம், ப. 19.

வேண்டும். மரம் அறிவற்றது. அது வெயிலில் இளைத்தோரை வாவென்றழைப்பதும் இல்லை. தன்னை வெட்டுபவரை வெறுப்பது மில்லை. வெயில் மிகுதியால் சாலையில் நடப்பவன் காலில் கொப்புளம் ஏற்பட்ட வழி, அவன் முன் சென்று மரம் அத்துன்பத்தை அகற்ற முற்படுவதுமில்லை. அன்னதாக அம்மர நிழலை இறைவன் திருவடி நிழலுக்கு உவமையாகக் கூறல் சாலாது[1].

சிவாத்துவித மத மறுப்பு

உயிர் உணர்த்த உணரும் இயல்பினது. இறைவனோ முற்றறிவினன். உயிர் வினைக்கிடாக இறைவன் கொடுக்கும் உடலைப் பெறுவது. இறைவன் இயல்பாகவே வினையின் நீங்கியவன். அவன் பிறவான். இறவான், தளையோ, அறிவற்றது. ஆதலின் உயிரும் தளையும் இறைவனுடன் ஒன்றாகக் கருதுதற்கு இல்லை. உயிர் அறிவுடையது. எனினும் அவ்வறிவு இறைவனின் அறிவைப்போல முற்றறிவாய் இன்றிச் சிற்றறிவாய் உள்ளது. உணர்த்த உணரும் இயல்பினது. அவ்வளவின்றி உயிர்க்கு அறியும் தன்மை இன்று என்றல் சாலாது. மாயை அறிவற்றது. உலகு உடல் ஆகியவற்றிற்கு இடனாக இருப்பது. இறைவன் அதன்வழி உலகு, உடல் கருவிகளைப் படைத்து நிற்பன். ஆதலின் இறைவனின் மாயை வேறாம். இறைவன் வினையின் நீங்கியோன். உயிரோ வினைவயப்பட்டது. வினை வழி வரும் இன்ப துன்பங்கள் உயிர்க்கன்றி இறைக்கில்லை என்பது உணரத் தக்கது. இறைவன் உலகை மீளப் படைத்தல் உயிர் வினைமாசு கழிந்து வீடு பெறுதற் பொருட்டேயாம். ஆதலின் மீளப்படைத்தல் உயிரின் பொருட்டன்றி இறைவன் பொருட்டன்று. இறைவன் இன்ப வடிவினன். அன்னோன் தன்னின் வேறாக இன்பத்தைக் காணவும் துய்க்கவும் செய்வன் என்பது எங்ஙனம்? குடம் தோன்ற மண் முதல் காரணமாகும். அதன் வழி குடம் உருவாவதற்குக் கழியொடு கூடிய உருள் (தண்டசக்கரம்) துணைக்காரண மாகும். குயவன் நிமித்த காரணமாவன். இவ்வாறு ஒருவினை நிகழ்ச்சிக்கு முக்காரணங்களும் வேறுவேறாய் இருத்தலின்றி நிமித்த காரணமாய் இருப்பவனே முதற் காரணமும் ஆவன் என்றல் சிறிதும் பொருந்துவதன்றாம்.

சங்கற்ப நிராகரணத்தில் இவ்வகச் சமயங்களின் கொள்கைகளும் மறுப்பும் விரிவாகக் கூறப்பட்டுள்ளன. ஈண்டு அவை ஓராற்றால் சுருங்கக் கூறப்பட்டன.

ஏனைப்பாடாண வாதசைவர் முதலிய அறுவரும் பொருளுண்மை எல்லாம் சித்தாந்த சைவரோ டொப்பக் கொள்ளும் அந்தரங்க உரிமையுடையராயினும், அவ்வப் பொருள்கட்குக் கூறும் தன்னியல்பு பொதுவியல்பு மாத்திரையின் முரணுதலான் அவர் சமயம் அகச்சமயம் என வேறுவைத்தெண்ணப்பட்டன, எனச் சிவஞான முனிவர் கூறுவதும் ஈண்டு எண்ணற்குரியதாம்.

இதனின் வேறாயது சுத்தசைவம் ஆகும். நுட்பப் பொருள் உணராமை மாத்திரையால் சுத்தசைவம் சித்தாந்த சைவத்தினின்றும் வேறு வைக்கப் பட்டதன்றி இரண்டும் வேறன்று. சுத்த சைவம் சித்தாந்த சைவத்துள் அடங்குவதாகும், எனச் சிவஞானமுனிவர் அருளுவதும் எண்ணத்தக்கதாம்.

---

1. சங்கற்ப நிராகரணம், ப. 21.

இசுலாம்

இன்றைய உலகச் சமயங்களுள் இசுலாமும் ஒன்றாகும். இம்மதம் இவ்வுலகத்தில் எல்லாக் காலத்தும் இறைவனால் தம் தூதுவர்கள் வாயிலாக அறிவிக்கப்பட்டு வந்திருக்கிறது. அவ்விதம் வந்த ஒரு இலக்கத்து இருபத்து நாலாயிரம் நபிமார்களுக்கும் முகம்மது நபி இறுதி நபியாக விளங்கினார். இவருள் 33 திருத்தூதர்களின் (தீர்க்கதரிசி) பெயர்கள் குர்ஆனில் உள்ளன. சுமார் 1400 ஆண்டுகளுக்கு முன்வந்த முகம்மது நபிகள் மீண்டும் அதை நிலைநிறுத்தினார்.

பெயர்க்காரணம்

இஸ்லாம் என்னும் அரபு மொழிக்குச் சாந்தி பெறுவதற்குரிய வழி என்பது பொருள் ஆகும். சாந்தி எனும் பொருள் படும் ஸலாமத் என்னும் சொல்லே இசுலாம் என்னும் சொல்லாய்த் தோன்றியது. அந்தச் சாந்தியை இவ்வுலகினும் மறுஉலகினும் ஒருவன் பெறவேண்டு மாயின், அவன் இறைவனுக்குக் கட்டுப்பட்டுத் தீது என விலக்கப்பட்டவற்றைத் தவிர்த்து மன்னுயிர்களுக்கு எவ்வகையிலும் உதவியும், நன்மையும் செய்தல் வேண்டும். இதனால் அவனுக்கு இறைவனுடைய அருள் கிடைப்பதுடன் அச்சமோ, துன்பமோ அடைய வேண்டியதில்லை. இத்தகைய சீரான வழியே இசுலாமியர் கூறும் சுவர்க்கத்துக்குரிய வழியாகும். இச்சொர்க்கமே தாருஸ்ஸலாம் - சாந்தி இல்லம். இந்நெறியைக் கடைப்பிடித்து ஒழுகுபவர் முஸ்லீம் என்று அழைக்கப்படுவர். முஸ்லீம் - இறைவன் அடிபணிபவர். இறைவன் இல்லை யென்போர் முஸ்லீம் என அழைக்கப்படார். முகம்மது நபியைப் பின்பற்றுவதால் இவர்களுக்கு முஸ்லீம் எனும் பெயர் ஏற்பட்டது.

இனி இஸ்லாம் என்ற சொல்லுக்கு அடிபணிதல் கீழ்ப்படிதல் என்றும் பொருள் உண்டு[1]. இது போதித்தவரது பெயரைக் கொண்டு வராது பொதுவாக இடப்பட்ட பெயராகும். இவர்கள் சகமார்க்கம், சரணாகதி மார்க்கம், சாந்தி மார்க்கம் என்ற மூன்றையும் பின்பற்றுவர்.

தோற்றமும் வளர்ச்சியும்

இம்மதம் இந்தியாவில் பல நூற்றாண்டுகளுக்கு முன்னே வந்தது எனினும், தமிழகத்திற்கு வந்தது எட்டு அல்லது ஒன்பதாம் நூற்றாண்டு ஆகும் என வரலாற்று ஆசிரியர்கள் கூறுவர். முகம்மது நபி இசுலாத்தின் போதகராக ஏற்பதற்கு முன்பே தமிழகத்திற்கும் அரபு நாட்டிற்கும் வாணிகத் தொடர்பு இருந்து வந்துள்ளது. இத்தகைய வாணிகத்தோடு இசுலாம் மதத்தைப் பரப்பும் குறிக்கோளையும் கி.பி. 8ஆம் நூற்றாண்டிலிருந்து அரபியர் கொண்டனர். இவ் 8ஆம் நூற்றாண்டில் அரபியர் கொங்கணக்கரை, மலையாளக்கரை, பாண்டி நாட்டுக்கரையோரப் பகுதி,

1. இஸ்லாமும் தமிழும், ப. 4.

மஹல்லதீவு, இலங்கை ஆகிய இடங்களில் தங்கினர். இந்தியருடனும், இலங்கையருடனும் அமைதியாகக் கலந்து வாழ்ந்தனர். இந்நாட்டுப் பெண்களையும் மணந்து கொண்டனர்[1].

மேலும் 9ஆம் நூற்றாண்டில் சமயம் பரப்பும் நோக்கத்துடன் அரபு நாட்டிலிருந்து முஸ்லீம்கள் குழு ஒன்று மலையாளக் கரைக்கு வந்தது. ஷேக்ஷரப் இப்து மலிக் என்பார் அக்குழுவின் தலைவராவர். அவருடன் மேலும் மூன்றாம் சேரமான் பெருமாள் என்ற சேர மன்னர் முஸ்லீம் குழுவுடன் வந்தனர். அவர் அரபு நாடு சென்று திரும்புமுன் அங்கேயே இறந்து போனார். இறக்கும் முன் மலிக் பின் தீனார் தலைமையிலான சமயம் பரப்பும் குழுவைத் தென்னகம் சென்று பரப்புமாறு வேண்டினர். அதன்படி அக்குழு மீண்டும் மலையாளம் வந்தது. அக்குழுவே முதன் முதலாக இந்திய மண்ணில் இசுலாத்தைப் பரப்பிய தாகும்[2].

இஸ்லாம் என்பது ஒரு பிரச்சாரமார்க்கம். முகமது நபி உலக மக்களுக்கு இறைத்தூதராக விளங்கியது போல, ஒவ்வொரு இறை நம்பிக்கை யாளரும் இசுலாமியத் தூதினைக் கொண்டு செல்லக் கடப்பாடு உடையவர்களாக இசுலாம் கருதுகிறது. அதன்விளைவாக இஸ்லாமியப் பிரசார இயக்கம் உலகெங்கும் பரவியது[3].

இஸ்லாம் தோன்றிய காலம் முதல் இசுலாமியப் பிரசாரம் உலகெங்கும் நடந்து வந்திருப்பதை வரலாறு காட்டுகிறது. அண்மையில் இங்கிலாந்து, அமெரிக்கா, ஆஸ்திரேலியா, ஜப்பான் ஆகிய நாடுகளில் இஸ்லாம் பெருகி வருவதற்குக் காரணம் அவர்களது தூய உழைப்பே யாகும்.

தமிழகத்தில் இசுலாம் தழைக்கச் செய்த சான்றோர்களில் சுல்தான் சையது இபுராஹீம் வலியுல்லாஹ் குறிப்பிடத்தக்கவர் ஆவர்[4].

இம்மதத்தினர் தம் மதம் மேலும் வளர்வதற்குச் சொற்பொழிவு செய்தும், நூல் வெளியிட்டும் வருகின்றனர்.

இறை

இறைவன் அன்பும், அருளும் உடையவன். அனைத்தும் அறிந்தவன். பிறவா யாக்கையன். யாரும் பெற்றவனல்லன். உலகனைத்தும் அவன் படைப்புக்களேயாகும். அழியாத்தன்மையன். ஆக்கலிலும் அழித்தலிலும் வல்லவன். இவ்விறைப் பண்புகளைத் திருக்குர்ஆன் எடுத்தியம்புகிறது.

மேலும் இறைவனையன்றி அவன் படைத்த படைப்புக்களான மண்ணையோ, பொன்னையோ கடவுளாக அமைத்து வணங்குவதும், கதிரவன்,

---

1. இஸ்லாமும் தமிழும், ப. 62.
2. மேற் நூல், பக். 66-67.
3. இஸ்லாமும் தமிழும், ப. 74.
4. இஸ்லாமும் தமிழும், ப. 77.

விண்மீன் போன்றவைகளைக் கடவுள் தன்மையுடையவையாக வணங்குவதும் பாவமாகும்.

உயிர்

உயிர் இறைவனால் படைக்கப்பட்டது. உயிர்களிடையே காணப்படும் ஏழை, பணக்காரன், அறிவுடையோன், அறிவற்றவன் எனும் வேறுபாடுகளுக்குக் காரணம் அவனது முயற்சியும், முயற்சியின்மையுமே ஆகும். இத்தகைய உயிருக்கு மறுபிறவி என்பது கிடையாது. இம்மை மறுமை எனும் நம்பிக்கை உண்டு. அவரவர் செய்த நல்வினை தீவினைக் கேற்ப உயிர் உடலோடு எழுப்பப்பட்டு நீதி வழங்கப்படுகிறது. இறைவனை அடைய வேண்டுமானால் மக்களுக்குப் பயன் உள்ள வகையில் நடந்து கொள்ள வேண்டும். ஹஜ் யாத்திரை, விரதம் மேற்கொள்ளல், அன்புடன் பழகுதல், உயிர் இரக்கம் என்பன இவ்வகையில் அடங்கும்.

மனித வாழ்விற்காக இறைவன் கொடுத்த வாழ்வுநெறி உயிர், உடல் என்பன. மனிதனுக்கு இறைவன் கொடுத்த பொருள்களை உண்ணவும் பருகவும் தடையில்லை.

மனிதனுடைய இயல்பான வாழ்வு இல்லறமேயாகும். இல்லறத்தில் முழுமையாக வாழ்ந்து ஆன்ம நிலையில் முன்னேற்றம் கண்ட முகம்மது நபி, தாம் மேற்கொண்ட இல்லறத்தையே இறையடியார் அனைவரும் பின்பற்றக் கூறுகின்றார். எனவே பெண்ணையும், குடும்பத்தையும் துறந்து வாழும் துறவுநெறிக் கோட்பாட்டை இசுலாம் ஏற்றுக் கொள்ளவில்லை[1].

வினை

கடவுள் ஆணையை மீறுமாறு செய்பவன் சாத்தான் ஆவன். தீமையைத் தூண்டும் மனம் ஆணவம் ஆகும்.

உலகம்

இறைவனைப் புரிந்துகொள்ள இறைவனால் இவ்வுலகம் படைக்கப்பட்டது. இவ்வுலகைக் கொண்டுதான் மறுஉலகம் பெறவேண்டும். இவ்வுலகம் மறுஉலகம் பெறுதற்குரிய வெள்ளாமை ஸ்தலம் ஆகும். மறுஉலகம் என்பது வீடுபேறாகும். இவ்வுலகம் ஒருகாலத்து அழிந்தே விடும்.

இம்மையும் மறுமையும்

இறைமொழி, இம்மையில் செம்மையுடன் வாழ்ந்தால் மறுமை வெற்றியைத் தரும் என்கிறது. இம்மையும், மறுமையும் இரு வேறுபட்ட வாழ்வுநிலையன்று. இரண்டும் ஒன்றோடொன்று தொடர்பு கொண்டது. இம்மை தொடக்கமும், மறுமை முடிவுமாகும். இம்மைக்காக மறுமையையும், மறுமைக்காக இம்மையையும்

1. இஸ்லாமும் தமிழும், ப. 21-22.

இழத்தலாகாது என்று நபிகள் கூறுகின்றார். இரண்டையும் முறையாகப் போற்றி நிறைவாக வாழ்வதே இறைவிருப்பத்திற்கு உரியது. மறுமைக்கு முன்பு பல பிறப்புகள் எடுத்தல் என்ற கொள்கை கிடையாது. மனிதனுக்குப் பிறப்பு ஒன்றே. ஒருபிறப்பில் செய்யும் நன்மை தீமைக்கேற்ப மீண்டும் ஒருமுறை எழுப்பப்பட்டு உயர்வோ, அன்றித் தண்டனையோ பெற்று மறுமை வாழ்வு அடைகிறான்[1].

இறை நம்பிக்கையின் அடிப்படைக் கூறுகள் ஆறாம். அவை இறைவன், வானவர், இறை வேதங்கள், இறைத்தூதர்கள், இறுதித் தீர்ப்புநாள் ஆகிய ஐந்தின் மீது நம்பிக்கையும், இறை விதிப்படி நன்மை தீமைகளை எந்நிலையிலும் ஏற்றுக் கொள்வதும் ஆகிய ஆறுமாகும்[2].

இஸ்லாத்தின் ஐந்து அடிப்படைக் கடமைகள்

இறை நம்பிக்கை கொண்ட ஒவ்வொரு இசுலாமியரும் புறத்தே மேற்கொள்ள வேண்டிய கடமைகள் ஐந்தாகும்.

1. கலிமா

அல்லாஹ்ற ஒருவனை மட்டுமே வணங்க வேண்டும் என்னும் ஓரிறைக் கொள்கையை இனிது விளக்குவது கலிமாவாகும். இக்கொள்கையின் மூலமந்திரம்,

"லாயிலாஹ இல்லல்லாஹீ முஹம்ம மதுர் ரசூல்லாஹ்ற" என்பதாகும். இதன் பொருள் வணக்கத்திற்குரிய இறைவன் அல்லாவைத் தவிர வேறுஇல்லை. முகமது இறைவனின் இறுதித்தூதர் ஆவர் என்பதாகும்.

இஸ்லாமிய வாழ்க்கை நெறியின் அடிப்படையான உயிர்க் கொள்கை ஏகனாய் விளங்கும் இறைவனுக்குப் பன்மை காணுதலோ, அவ்விறைவனுக்கு இணையாகப் பிறரைக் கூறுதலோ மன்னிக்க முடியாத குற்றமாகும்[3].

2. தொழுகை

'சிலாதத்' என்ற அரபுச் சொல்லுக்கு அடிபணிதல், வழிபடுதல் என்பது பொருளாகும். இறைவணக்கத்தின் மூலம் எப்பொழுதும் இறைவனுக்கு அடிபணிந்து வாழ முயற்சி செய்ய வேண்டும். தொழுகையை இறைமார்க்கத்தின் தூணாக நபிகள் மொழிகிறார். இறைவனை வழிபடும் முறைகளை நான்காகப் பகுத்துள்ளனர். அவை சலாத் (தலை சாய்த்து உடல் வளைத்துத் தொழுதல்), துஆ (வேண்டல்), திகர் (நினைத்தல்), தஸ்பிஷ் (புகழ்தல்) என்பன. தொழுகை என்னும் அரபுச் சொல்லுக்கு நினைவு என்பது பொருள் ஆகும். இறைவனையும் அவன் தந்த வாழ்வு நெறியையும் மீண்டும் மீண்டும் நினைவு கொள்ளத் தூண்டுவது தொழுகையாகும்.

---

1. இஸ்லாமும் தமிழும், ப. 20.
2. இஸ்லாமும் தமிழும், ப. 5.
3. இஸ்லாமும் தமிழும், ப. 9.

எனவே ஒவ்வொரு நாளும் ஐந்து வேளைகளில் தொழுகை மேற்கொள்வது இன்றியமையாத கடமையாகும். அவையாவன: 1. வைகறை (மரணத்திலிருந்து எழுவதால் கடவுளுக்கு நன்றி செலுத்துவது) 2. நண்பகல் (உடல் நலம், செல்வத்துக்காக நன்றி செலுத்துவது) 3. பிற்பகல் (பொழுது நல்ல முறையில் கழிந்தது என்பதற்கு நன்றி செலுத்துவது) 4. ஞாயிறு மறைந்த பின் (இறைவனால் நல்ல பாதுகாப்புத் தரப் பெற்றமைக்கு நன்றி செலுத்துவது). 5. இரவு (நல்லுறக்கம் வேண்டி நன்றி செலுத்துவது) என்பன. "அல்லாஹ் ஒருவனே" எனும் உறுதியுடன் மக்கா நகரிலுள்ள கஃபா என்ற ஆலயம் இருக்கின்ற திசையை நோக்கி இத் தொழுகைகளைச் செய்யவேண்டும்.

மனிதன் இறைவனோடு உறவாடும் வழியாகவே தொழுகை அமைந்துள்ளது. மேலும் முறைகேடான காரியங்களையும், விலக்கப்பட்ட செயல்களையும் தடுக்கிறது. தனித்த நிலையில் செய்யும் தொழுகையை வற்புறுத்துவதோடு, கூட்டுத் தொழுகையையும் நடைமுறைப்படுத்த வேண்டுகிறது. இத்தொழுகை கூட்டு வாழ்க்கைக்குத் துணை செய்கிறது.

3. நோன்பு

இறை வணக்கத்தில் தொழுகையை அடுத்துச் சிறப்பாக மேற்கொள்ளத் தக்கது நோன்பாகும். பன்னிரண்டு திங்களுள் ஒன்பதாம் திங்களை ரமலான் என்று அரபியர் அழைப்பர். இத்திங்களின் மூன்றாம் பிறை முதல், அடுத்து வரும் மூன்றாம் பிறை வரையுள்ள ஒரு திங்கள் முழுவதும் ஒவ்வொரு நாளும் கதிரவன் தோன்றுதற்கு முன்பிருந்து கதிரவன் மறையும் வரை ஒவ்வொரு முஸ்லீமும் ஏதொன்றையும் உண்ணாமலும், பருகாமலும் இல்லறக் கூட்டுறவு இல்லாமலும் இருத்தல் வேண்டும். மேலும் பசி, தாகம், காமம், வெகுளி, பெருவிருப்பு, செருக்கு, பொய், புறங்கூறல் போன்ற தீமைகளையும் அகற்ற வேண்டும். இந்நோன்பு இறையடியார்கள் அல்லாவிற்கு அஞ்சி வழிபாடு ஆற்றுவதற்கும், தீயவைகளி னின்றும் தம்மைத் தற்காத்துக் கொள்ளுதற்கும் இறைவனால் கடமையாக்கப் பட்டுள்ளது. இப் புனிதத் திங்களிலே தான் நபிகள் பசித்திருந்து, தனித்திருந்து, விழித்திருந்து அருந்தவம் புரிந்தார்கள். இத் திங்களின் 26ஆம் நாள் இரவு, திருக்குரானின் ஒரு சில உரைகள் ஆண்டவனுடைய அமரர் ஜிப்ரில் வாயிலாக நபிகளுக்கு அருளப்பட்டன.

4. ஏழைவரி

ஜகாத் என்ற அரபுச் சொல்லுக்குத் தூய்மை என்பது பொருள் ஆகும். இறையடியார்கள் தமது உள்ளத்தையும் உடைமையையும் தூய்மையாக்கும் பொருட்டுத் தன் செல்வத்தில் நூற்றுக்கு இரண்டரைப் பங்கை இல்லாதார், துன்புறுவோர், வழிப்போக்கர், அனாதைகள் போன்றோர்க்கு வழங்கவேண்டும்.

---

1. இஸ்லாமும் தமிழும், ப. 11, 12, 14.

ஆண்டுக்கு ஐம்பத்திரண்டரை ரூபாய்க்கு மேற்பட்ட வருமானம் உள்ளவர்கள் அதினின்று இரண்டரை விழுக்காடு தானம் செய்தல் இன்றியமையாததாகும். இத்தானம் இஸ்லாம் மதத்திலுள்ளவர்க்கு மட்டுமே வழங்கப்படும் என்பது ஈண்டு எண்ணத்தக்கது. தொழுகையும், ஏழை வரியும், இறை மறையில் பல்வேறு இடங்களில் இணைத்தே பேசப்படுகின்றன. இறையடியார்களின் இலக்கணங்களைக் கூறும் பொழுதும் இவ்விரண்டிற்கும் முதலிடம் தரப்பட்டுள்ளது. இவ்விரண்டையும் நிறைவேற்றாதவர் இறை அடியார் அல்லர்.

5. புனித மக்காப் பயணம் (ஹஜ்)

இதுவே இஸ்லாத்தின் இறுதிக் கடமையாகும். இஃது இறையடியார்களுக்கு நிறைவைத் தரும் மிகப் பெரிய வணக்கமாகும். செல்வமும், உடல் உறுதியும், துணிவும் உள்ள முஸ்லீம்கள் மக்கா சென்று கஃபா என்னும் புனித ஆதி ஆலயத்தைத் தங்களின் வாழ் நாளில் ஒரு முறையேனும் தரிசித்தல் வேண்டும். இவ்வாலயத்துள் உருவமுள்ள பொருளோ வேறு பொருள்களோ இல்லை. அருவ வழிபாடேயாகும்[1].

பழக்கவழக்கங்கள்

இறைமறை நற்பண்புகள் சிலவற்றை எடுத்தியம்புகிறது. இறைவனை நம்புவது, தொழுகை, பிறர்க்கு உதவுதல், புன்முறுவல் செய்தல், உண்மை பேசுதல், வாக்குறுதியைக் காப்பாற்றல், நீதிநெறி பேணல், பிறர் குற்றங்களை மன்னித்து விடும் மனப்பக்குவம், செருக்கின்றிப் பணிவோடு உறவாடல் என்பன அப்பண்புகளாகும்.

தீயஒழுக்கங்களைத் தடுக்கக் கூடியவை என்றும், விரும்பத்தகாதவை என்றும் இரு பிரிவாக்குவர். முன்னதில் கொலை, களவு, விபசாரம், கையூட்டு, பொய், புறங்கூறல், பொறாமை, பிறர் உள்ளத்தைப் புண்படுத்தல் முதலானவை அடங்கும். இவற்றைக் கைக்கொள்வது பிணத்தை உண்பதற்கு ஒப்பாகும். முறைகேடாகப் பொருளீட்டல், பிறர் பொருளைக் கவர்தல், அளவைகளில் குறைத்தல் என்பவை பின்னையதில் அடங்கும்[2].

இம்மதத்தில் புலால் உண்ணுதல் மறுக்கப்படவில்லை. மாறாகப் போற்றப்படுகிறது. சிலபொருள்கள் அழிந்தால் தான் சிலபொருள்கள் தோன்றும். எடுத்துக்காட்டாக விதை அழிந்தால் தான் மரம் தோன்றும் என்பதைக் காட்டுவர்.

எந்த ஒரு இந்தியனும் இஸ்லாம் மதத்தைச் சார்வதற்கு எவ்வித மதச்சடங்கும் கிடையாது. அவ்வாறு சேர்பவர்களை முஸ்லீம்களாக ஏற்றுக் கொள்வர்.

இவ்விதம் வளர்ந்த இஸ்லாம் மதம், இன்று இந்தோசினா, இந்தியா, அரேபியா, மலேசியா, சிங்கப்பூர் போன்ற ஐம்பதுக்கும் மேற்பட்ட நாடுகளில் வளர்ந்து வருகிறது.

---

1. இஸ்லாமும் தமிழும், ப. 9-16.
2. இஸ்லாமும் தமிழும், ப. 23-24.

கிறித்துவம்

இன்றைய உலக சமயங்களில் கிறித்துவமும் ஒன்று. சுமார் இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன் இயேசுவால் நிறுவப்பட்ட சமயம் இச்சமயமாகும். கிறித்து என்பதற்கு அர்ச்சிக்கப்பட்டது அல்லது அபிஷேகம் செய்யப்பட்டது என்பது பொருளாகும். பரமபிதாவால் இயேசு அபிஷேகம் செய்யப்பெற்றவர். அவர்க்குப் பின்வந்த பல்லோராலும் அர்ச்சிக்கப் பெற்றவர். ஆதலின் அவரால் தோற்றுவிக்கப்பட்ட சமயம் கிறித்துவ சமயம் என்று அழைக்கப் பெறுவதாயிற்று.

இயேசு என்பார் யூதேய நாட்டில் பெத்லேகம் எனும் ஊரில் இறையருளால் கன்னிமேரியின் திருவயிற்றில் தோன்றியவராவர். இவருக்குமுன் ஏறத்தாழ இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பே யூதேய மதம் அந்நாட்டில் தோன்றி வளர்ந்திருந்தது. அம்மதத்தில் கூறப்பட்ட கருத்துகள் பலவற்றிற்கு மேலும் சில விளக்கம் தந்து அம்மதத்தின் நெறிமுறைகளை எளிமைப் படுத்தியவர் இயேசு ஆவர். அவருக்கு முன் தோன்றியிருந்த இம்மதம் பழைய ஏற்பாடு எனப்படும். இயேசுவின் விளக்கமும், எளிமையும் பெற்று உருவாகிய இம்மதம் புதிய ஏற்பாடு எனப்படும். மேற்கண்ட இரு ஏற்பாடுகளுக்கும் இடையே அடிப்படையான வேற்றுமைகள் சில உள. அவையாவன:

பழைய ஏற்பாடு	புதிய ஏற்பாடு
1. கடவுள் மக்களுக்கு நலம் தருபவர் ஆயினும் தீயோரைப் பெரிதும் அவர் ஒறுப்பர்.	1. கடவுள் இரக்கமே உருவானவர். தீயோரும் திருந்தியவழிப் பெரிதும் கருணை காட்டுபவர்.
2. கண்ணுக்குக் கண், பல்லுக்குப் பல் பழிவாங்கலாம் என்று கூறும்.	2. வலது கன்னத்தில் அடித்தால் இடது கன்னத்தைக் காட்டுக எனக்கூறும்.
3. பாவம் செய்பவர்களைக் கண்டு வெறுக்கும்.	3. பாவம் செய்பவர்களுக்காக ஜெபிக்க வேண்டும் எனக்கூறும்.
4. கடவுள் அருவானவர் எனக் கூறும்.	4. இயேசுவின் வடிவில் கடவுள் உருவம் உடையவர் எனக் கூறும்.
5. கடவுள் ஒருவரே எனக் கூறும்.	5. கடவுள் ஒருவராக இருப்பினும் பிதா, சுதன், பரிசுத்த ஆவி எனும் மூவராகவும் இருப்பர் எனக் கூறும்.
6. விண்ணகம் நல்லோருக்கு மட்டுமே உண்டு. தீயோருக்கு என்றும் இல்லை.	6. தீயோரும் திருந்தி விடின் அவர்களுக்கும் விண்ணகம் உண்டு.

பழைய ஏற்பாடு	புதிய ஏற்பாடு
7. இரக்கமும் ஒறுப்பும் உடையவர் கடவுள். எனினும் அவர்பால் விஞ்சி இருக்கும் ஆற்றல் ஒறுப்பேயாகும்.	7. தீயோர் திருந்தும் வரை அவரை ஒறுக்க நினையினும், இரக்கமே உருவாயவர் இறைவர் என்று கூறும்.
8. ஓய்வு நாட்களில் பணி செய்தல் ஆகாது. கைகழுவிய பின்னரே உண்ணல் வேண்டும். பத்தில் ஒரு பகுதி ஏழைகளுக்குக் கொடுத்து உதவுதல் வேண்டும் என்பன போன்ற நீதிகளிலும் புறச்சடங்கு களிலும் மிகவும் கட்டுப்பாடாக இருக்கும்.	8. புறச் சடங்குகளினும், அக வுணர்வும், இரக்கமும் மீதூர்ந்த அகச்சடங்குகளுக்கே இன்றியமை யாமையைக் கொடுக்கும்.

இனைய பல காரணங்களே இயேசு புதிய ஏற்பாட்டைச் செய்யவும், அதன்வழிக் கிறித்துவம் என்றொரு மதத்தை ஏற்படுத்தவும் காரணமாயிற்று. இப்புதிய ஏற்பாட்டை உலகிற்குத் தந்தமையே அவர் சிலுவை வாய்ப்படவும் காரணமாயிற்று.

2. இந்தியாவில் கிறித்துவம்

யூதேய நாட்டில் இவ்வாறு தோன்றி வளர்ந்த சமயம் இந்தியாவிற்கு வந்தது தோமையராலே என்பர். இவர் இயேசுவின் பன்னிரு மாணாக்கரில் ஒருவர் என்றும், இவர்தாம் இயேசுவின் கொள்கையை இந்தியாவில் பரப்பியவர் என்றும் கூறுவர். இதற்குச் சான்றாக மயிலாப்பூரில் தோமையர் ஆலயம் உள்ளது என்பதையும் காட்டுவர். தோமையர் காலம் முதலே அதாவது இயேசுவின் காலத்திலேயே இந்தியாவில் இச்சமயம் வந்திருக்குமாயின் இற்றைக்கு இருக்கும் இலக்கியங்களில் யாதேனும் ஒரு குறிப்பு அதற்கு இருத்தல் வேண்டும். அவ்வாறாய குறிப்புகள் ஏதும் இல. தனித்ததொரு சமயமாக வளர்ந்த சமயங்கள் மட்டுமன்றிக் கருத்து வகையில் வேறுபடும் கொள்கை வகைச் சமயங்களைக் கூட உமாபதி சிவம் எடுத்து மறுத்துள்ளார். இவர்க்கு முன் அருள்நந்தி சிவாசாரியாரும் பல்வேறு சமயங்களை எடுத்து மறுத்துள்ளார். இவ்வகையில் இக் கிறித்துவ மதம் இயேசுவின் காலத்திலேயே இந்தியாவிற்கு வந்திருக்குமாயின், அருள்நந்தி சிவாசாரியார்

1. சீமோன் இராயப்பர் 2. பெலவேந்திரர் 3. மகன் யாகப்பர் 4. அருளப்பர் 5. பிலிப்பு 6. பர்த்தொலோ மேயு 7. தோமையர் 8. ஆயக்காரர் மத்தேயு 9. அபேல்யுவின் மகன் யாகப்பர் 10. ததேயு 11. கனானேயசீமோன் 12. யூதாஸ் இஸ்காரி யோத்.

உமாபதி சிவம் போன்ற அருளாளர்களால் எடுத்துத் தெளிவாக மறுக்கப்பட்டிருக்கும். ஆதலின் இச்சமயம் இந்தியாவில் 14-ஆம் நூற்றாண்டுவரை நுழைந்திலது என்பது தெளிவாகிறது.

பதினைந்தாம் நூற்றாண்டின் இறுதியில் நமது நாட்டிற்கு வாணிகம் செய்ய வந்த போர்ச்சுகீசியர் தம் வணிகத்தைப் பரப்பியதோடு இம்மதத்தையும் பரப்பினர். இயேசுவின் சபை பாதிரிமார்களான சவேரியார், தத்துவபோதக சுவாமி, ஜான்டி, பிரிட்டோ, வீரமாமுனிவர் என்பார் இந்துக்களைக் கிறித்துவராக்கினர்[1].

இவர்களேயன்றி டேனிஷ்காரர்களும் இந்துக்களைக் கிறித்துவராக்கும் பொருட்டுப் பாதிரிமார்கள் பலரை ஐரோப்பாவிலிருந்து அழைத்து வந்தார்கள். இவர்களுக்கு இந்திய மொழி தடையாக இருந்ததால் அதனைக் கற்று அதில் பேசவும் சொற்பொழிவு செய்யவும் தொடங்கினார்கள்[2].

கிறித்துவ சமயநூல்களை அச்சிடுதற்காக அச்சுப் பொறி நிலையம் உரோமாபுரியில் அமைக்கப்பட்டிருந்ததாக ஐரோப்பியர் எழுதியுள்ள பழைய நூல்களினால் தெரிகிறது. தமிழ் மொழியில்தான் முதன்முதல் அச்சுப்புத்தகம் உண்டானது. இதைத்தவிரக் கிறித்துவமதம் சார்பாகத் 'தென்னிந்திய சங்கம் என்னும் கிறித்துவப் பாடசாலைப் புத்தக சங்கம்'" 19 ஆம் நூற்றாண்டில் சிறப்பாகச் செயற்படத் தொடங்கியது[3].

கிறித்துவ சமயநூல்கள்

இச்சமயநெறியில் தமக்குரிய மேலெல்லையாகக் கூறப்படும் நூல்கள் 75 ஆகும். இவற்றுள் பழையை ஏற்பாட்டை விளக்கும் நூல்கள் 47 ஆகும். 1. ஆதி ஆகமம் 2. யாத்திராகமம் 3. லேவியர் ஆகமம். 4. எண் ஆகமம். 5. உப ஆகமம் 6. யோசுபா ஆகமம் 7. நீதிபதிகள் ஆகமம். 8. ரூத் ஆகமம் 9. சாமுவேல் ஆகமம் - 1. 10. சாமுவேல் ஆகமம் - 2. 12. அரசர் ஆகமம் - 1, 13. அரசர் ஆகமம் - 2 14. நாள் ஆகமம் 1, 15. நாள் ஆகமம் - 2. 16. யஸ்ராஆகமம், 17. நெகேமியா ஆகமம், 18. தொபியாசி ஆகமம், 19. யூதித் ஆகமம் 20. யஸ்தர் ஆகமம் 21. யோபு ஆகமம் 22. சங்கிதங்கள் 23. பழமொழி ஆகமம் 24. சங்கத்திரு உரை ஆகமம் 25. உன்னதசங்கிதம், 26. ஞானஆகமம், 27. சிராக் ஆகமம், 28. இசையாஸ் ஆகமம், 29. எரேமியாஸ் ஆகமம், 30. புலம்பல் ஆகமம், 31. பாருக் ஆகமம், 32. எசேக்கியல் ஆகமம், 33. தானியேல் ஆகமம் 34. ஓசே ஆகமம், 35. யோவேல் ஆகமம், 36. ஆமோஸ் ஆகமம், 37. அஸ் தியாஸ் ஆகமம், 38. யோனாஸ் ஆகமம், 39. மிக்கோயாஸ் ஆகமம், 40. தாகும் ஆகமம், 41. அபாக்டக் ஆகமம் 42. செப்போனியாஸ் ஆகமம், 43. ஆகாய

---

1. கிறித்துவமும், தமிழும், ப. 9.
2. கிறித்துவமும், தமிழும், ப. 12.
3. மேற். நூல். ப. 34, 49.

ஆகமம், 44. சக்ரியாஸ் ஆகமம், 45. மலாக்கியா ஆகமம், 46. மக்கபே ஆகமம்-1 47. மக்கபே ஆகமம் 2.

புதிய ஏற்பாட்டை விளக்கும் நூல்கள் 26 ஆகும். 1. புனிதமத்தேயு, 2. புனிதமார்க்கு, 3. புனித லூக்காண், 4. புனித அருளப்பர், 5. அல்போஸ் தவாபணி. புனித சின்னப்பர் திருமுகங்கள் 6. உரோமய்யர், 7. கொரிந்தியர்-1 8. கொரிந்தியர்-2. 9. காலத்தியர், 10. எபேசியர், 11. பிலிப்பியர், 12. ஏகலோசேயர், 13. தேசலோண் தேயு-1, 14. தேசலோன் கோலர் - 2, 15. திடமாத்தேயு-1, 16. திடமாத்தேயு-27. 17. தீத்து, 18. பிலமோன், 19. எபிரேயர், பொதுத் திருமுகங்கள், 20. யாகப்பர், 21. இராயப்பர்-1, 22. இராயப்பர்-2, 23. அருளப்பர்-1, 24. அருளப்பர்-2, 25. அருளப்பர்-3, 26. புனிதயூதர்-2.

இவையன்றிக் கிறித்துநாதர் அனுசாரம், இரண்டாம் வத்தின் காண் சங்க ஏடுகள் - 16 என்ற இந்நூல்களும் இவர்களுக்கு மேலெல்லையாக உள்ளவையாகும். இவற்றுள் முன்னையது கிறித்துவத்தைப் பின்பற்றுவது எப்படி? என்பதை விளக்குவதாம். பின்னையது இத்தாலிய நகரில் கிறித்துவ மதம் குறித்து ஆயர்களால் எடுக்கப்பட்ட முடிவுகளாகும். இவ்வேடுகளுக்கு அவ்வக் காலத்திலும் தோன்றிவரும் ஆயர்கள் விளக்கம் தந்து கொண்டு வருவர். அவையும் கிறித்துவர் பின்பற்றுவதற்கு உரியனவாம்.

கிறித்துவக் கடவுளர்

பிதா, குமாரன், தூய ஆவி ஆகிய மூவரும் கடவுளாவர். கடவுள் மனுக் குலத்தின் தந்தை ஆவர். மக்கள் எல்லோரும் அவருடைய பிள்ளைகள். இயேசுவும் தம்மையே பரமபிதாவின் ஏகுமாரன் என்று கூறுவதும், ஈண்டு எண்ணத்தக்கது. இவ்வாறு இயேசு பரமபிதாவின் திருமகனார் எனக் குறிக்கப்பெறினும், அவர் பரமபிதாவோடு முன்னும் இருந்தவராவர். இது ஐந்தாவது வசனத்தில் 'உன் தாய் வயிற்றில் இருந்து உன்னை உருவாக்கும் முன்பே நாம் உன்னை அறிந்திருந்தோம். கருப்பையில் இருந்து வெளிப்படும் முன்பு உன்னை அர்ச்சித்திருக்கிறோம். மக்கள் இனத்திற்கு இறைவாக்கினராக ஏற்படுத்தினோம்'[1] என்று கூறப்படுகிறது. கடவுளோடு நம்மைப் பிணைக்கும் அன்பே தூய ஆவியாகும். இம்மூன்றையும் கிறித்துவம் திரித்துவம் என்று அழைக்கும்[1]. மூவொரு கடவுளர் எனும் பெயரால் இவர்கள் அழைக்கப்படுவர்.

உயிர்

பிறப்பு வகையில் மனிதனே உயர்ந்தவன். அவனே உயிருடையவன். இவன் கடவுள் சாயலானவன். கடவுளை அறியவும், நேசிக்கவும் பிறந்தவன். ஏனைய பிறப்பு

1. விவிலியம் இறைமியாஸ் ஆகமம், அதிகாரம் - 1. வசனம் 5.

வகைகள் அனைத்தும் இவனது ஆட்சிக்கு உட்பட்டன. இவனது மகிழ்விற்காகவே அவை படைக்கப்பட்டன. உயிர்கட்குப் பிறப்பு ஒன்றேயாம்.

கிறித்துவ மதத்தின் வகைகள்

இம்மதத்தில் இடைக்காலத்தில் கருத்து வேறுபாடுகள் உண்டாயின. 1054-இல் கிரேக்கக் கத்தோலிக்கர் வேறாகவும், உரோமன் கத்தோலிக்கர் வேறாகவும் பிரிந்தனர். 16-ஆம் நூற்றாண்டில் உண்டான சமய சீர்திருத்த இயக்கம் பிராட்டஸ்டெண்டு என்ற மற்றொரு பிரிவை ஏற்படுத்தியது. இப்பிரிவினர் பின்னர் பல சிறு பிரிவுகளாகப் பிரிந்தனர்[2].

கத்தோலிக்க மதம்

இப்பிரிவு கிறித்துவத்தின் முதல் பிரிவாகும். இதனை ஏற்படுத்தியவர் கிறித்துவின் பன்னிரண்டு மாணவர்களில் முதன்மையானவரான அர்ச்சிய அஷ்ட இராயப்பர் என்பவர் ஆவார். இம்மதம் இயேசு கிறித்துவின் கொள்கைகளைக் கொண்டுள்ளது. "கத்தோலிக்க மதம்" என்பதற்கு எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்படும் மதம் என்பது பொருளாகும். இயேசு பரலோகம் சென்ற பத்தாம் நாள் பரிசுத்த அரூபியை மாணவர்களிடம் அனுப்பினார். அதன் வல்லமையினால் அவர்கள் கிறித்துவின் உபதேசங்களைப் பரப்பியதுடன் பல அற்புதங்களையும் செய்தனர். இதனால் பலர் கிறித்துவர்களாயினர். இத்தகைய உபதேசங்களை வாழ்க்கை நெறியாக ஏற்றுக் கொள்ளும் கிறித்துவர்கள் திருச்சபையினர் ஆவார்கள்.

ஆறாம் நூற்றாண்டில் அர்ச்-ஆசீர்வாதப்பர் (செயின்ட் பெனடிக்ட்) மடங்களைச் செம்மைப்படுத்தி ஒழுங்குபடுத்தினர். இம்மடத்திலிருந்த துறவிகள் மக்கட்குக் கல்வி அளித்ததுடன் அவர்கட்கு வேலை கொடுத்துப் பிழைக்கும் வழியையும் கற்பித்தனர். இத்தகைய அரிய முயற்சிகளால் கத்தோலிக்க மதம் விரைவாகப் பரவியது[3].

இறை

கர்த்தா ஆதியும் அந்தமும் இல்லாதவர். வடிவு இல்லாதவர் நன்மையின் இருப்பிடமாக இருப்பவர். எங்கும் நிறைந்து இருப்பவர். எல்லாவற்றிற்கும் ஆதிகாரணமாகவும் இருப்பவர். இவ்வுலகத்தைப் படைத்தவர். தாம் படைத்து மகன் வழி மீட்டுப் பரிசுத்த ஆவியின்வழிக் காத்து வருகிறார். இத்தூய ஆவி

---

1. கலைக்களஞ்சியம், தொகுதி-3, ப. 720.
2. மேலது
3. மேலது, தொகுதி-3, ப. 165

உயிர்களை உருவாக்கும். தூய்மைப்படுத்தும். மகிழ்ச்சிப்படுத்தும். இவற்றிற்கு அடையாளமாகப் புறா, அனல், காற்று ஆகிய மூன்றையும் கொள்வர்.

மேலும் இயேசு மனுக்குலத்தைக் (உயிர்ப் பொருள்கள், உயிரில் பொருள்கள்) காப்பாற்ற மனிதனாகப் பிறந்த கடவுளாவர். கண்ணால் காணும் உயிரினங்களுக்கு அன்பு செய்யாது கண்ணால் காண இயலாத கடவுளுக்கு அன்பு செய்தல் பொய் என்பர்.

பழக்கவழக்கங்கள்

எல்லோரும் கடவுளின் குழந்தைகள், ஆகையால் எல்லோரிடமும் அன்பு செலுத்த வேண்டும். எத்தகைய தீங்குக்கும் மன்னிப்பு உண்டு. இல்லறம், துறவறம் எனும் இரு நிலையும் உண்டு. இவற்றுள் துறவறத்தார்க்கு ஏழ்மை (எளிமை), கற்பு (திருமணமின்மை), கீழ்ப்படிதல் ஆகிய முக்குணங்களும் இருத்தல் வேண்டும் என்பர். இறைவனை வழிபடும் வகை மூன்றாம். அவை நன்றி கூறல், புகழ்தல், வேண்டல் என்பன.

சமய வாழ்க்கை

இவர்கள் கொள்ளும் சமயவாழ்வில் கடைப்பிடித்தற்குரிய ஏழு செயல்கள் உள. 1. ஞானஸ்நானம் (தம்குரு அளிக்கும் மந்திர நீரால் நீராடுதல்) 2. உறுதி பூசுதல் (இது கடவுள் ஆவியைப் பெறுவதாகும்). 3. நற்கருணை (இது இயேசு உடலைப் பெறுதலாகும்) 4. ஒப்புரவு (இறைவனிடம் மன்னிப்புக் கோருதல்) 5. நோயில் பூசுதல் (இறைவனிடம் மன்னிப்பையும், உடல் நலத்தையும் பெறுவதாகும்) 6. குருத்துவம் (துறவு பூண்டு நற்பணி செய்வதாகும்) 7. மெய் விவாகம் (ஒருவனும் ஒருத்தியுமாக இயைந்து இல்லறம் இயற்றுவதாகும்). இவ்வேழனுள் பின்னைய இரண்டில் யாதேனும் ஒரு நெறியில் நின்று முன்னையவற்றைக் கடைப்பிடித்தல் வேண்டும்.

பிராட்டஸ் டெண்டுமதம்

பிராட்டஸ் டெண்டு என்பது கிறித்துவச் சீர்திருத்தச்சபை எனப் பொருள்படும். கத்தோலிக்க மதத்திலிருந்த சில மாறுபட்ட அறிவுரைகளையும், பழக்கவழக்கங்களையும் எதிர்த்து இப்புதிய மதம் தோன்றியது.

16-ஆம் நூற்றாண்டில் திருச்சபையில் கருத்து மாறுபாடான கோட்பாடுகளும், சமயப் பழக்கவழக்கங்களும், வழிபாட்டு முறைகளும் ஏற்படலாயின. இத்தாலியர் தலைநகரான ரோமில் இருந்த போப்புகள், தங்களைப் போப்பின் பிரதிநிதிகள் எனக் கூறி, அச்சமயத்தின் விரிவாக்கப் பணிகளுக்கு வேண்டிய பணத்தை வற்புறுத்தி வாங்கிவந்தனர்.

மக்கள் செய்யும் பாவங்களுக்கு ஏற்ற அநித்திய தண்டனையை (மீட்புக்குரிய தண்டனையை) மரணத்துக்குப் பின்செல்லும் பாப நீக்கத்தலத்திலும், நித்திய தண்டனையை (மீளாநரகம்) நரகத்திலும் அனுபவிக்க வேண்டும் என்றும், பாவங்களைக் குருவினிடம் கூறி மன்னிப்புப் பெற்றால் நரகத்திற்குச் செல்ல வேண்டாமென்றும், புண்ணியச் செயல்களைச் செய்பவன் அநித்திய தண்டனையைப் பெறமாட்டான் என்றும் போதித்தார்கள். புண்ணியச் செயல்களாகத் தான தருமம் செய்தல், தலயாத்திரை செய்தல், சிலுவையின் துண்டுகள் முன் செபம் செய்தல், புனித நீரால் நெற்றியில் சிலுவை வரைதல் என்பன மேற்கொள்ளப்பட்டன. காலம் செல்லச் செல்ல இந்தச் செயல்களை விட்டு அதற்கான ஒறுப்புக் கட்டணம் கட்டினால் புண்ணியப்பயன் பெற்று விடலாம் என நம்பினர். இவ்வாறாய பழக்க வழக்கங்களை எதிர்த்து லூத்தர் (1483-1546) எனும் ஜெர்மானியர் கிறித்துவச் சீர்திருத்தச் சபையை நிறுவினார்[1].

கொள்கைகள்

மக்கள் தம்முடைய புண்ணியச் செயலால் மட்டும் இறையருளைப் பெற முடியாது. பாவங்களுக்காக வருந்தி கடவுளிடம் நம்பிக்கை கொண்டு எவன் பாவ மன்னிப்புக் கேட்கின்றானோ அவனைக் கடவுள் மன்னித்து நீதிமானாகச் செய்கிறார். கடவுளின் திருவருளன்றி நம்முடைய முயற்சியால் எதுவும் நடப்பதில்லை. கடவுளை வழிபடுவதற்கு எவ்விதக் கட்டுப்பாடும் தேவையில்லை. உண்மையாக வாழ்பவன் கடவுளின் தொண்டனாகின்றான். துறவி, குரு, மக்கள் எல்லோரும் கடவுளிடத்து ஒரு தன்மையரே. கடவுளை மக்கள் நேரடியாக வணங்கலாம். குருவின் வழியாக வணங்கினால்தான் அருள் கிட்டும் என்பது பேதைமை. இயேசுவின் அன்னையும் பரிசுத்தவான்களும் நமக்காகக் கடவுளிடம் வேண்டுவது என்பது கடவுளுக்கும், மனிதருக்கும் உள்ள தொடர்புக்குத் தடையானதாகும். மக்களுக்கு விவிலிய நூலைப் புகட்டவும், ஞானஸ்நானம், நற்கருணை என்ற ஞானத்தை வழங்கவும், குருமார் அவசியம் ஆகின்றனர். எனினும் மக்கள் கடவுளைப் பற்றி விவிலிய நூலிலிருந்து அறிந்து கொள்ளவும், தாமாகக் கடவுளிடம் பாவமன்னிப்புப் பெறவும் முடியும். அதற்குத் தலயாத்திரை, செபம், போப்பின் அதிகாரம் தேவையற்றது. இப்போதனைகளை உலகில் பல பாகங்களிலும் உள்ள திருச்சபையினர் இப்பொழுதும் பின்பற்றுவதோடு இயேசுவைக் கடவுளின் திருமகன் எனக் கொண்டு வாழ்ந்து வருகின்றனர்[2].

---

1. கலைக்களஞ்சியம், தொகுதி-7, ப. 304.
2. மேற் நூல். ப. 304-305.

கத்தோலிக்க – பிராட்டஸ்டெண்டு வேறுபாடுகள்

கத்தோலிக்கம்	பிராட்டஸ்டெண்டு
1. மக்கள் தம் புண்ணியச் செயலால் விண்ணகம் அடையலாம் என்பர்.	1. மக்கள் தம் புண்ணியச் செயலால் மட்டுமன்றித் தம் பாவத்திற்காக உண்மையிலேயே வருந்திக் கர்த்தரை வழிபட்டு அக்கர்த்தாவின் அருளாலே விண்ணகம் அடைய முடியுமென்பர்.
2. குருவின் மூலம் வழிபாடு செய்தல் தக்கது என்பர்.	2. குரு இன்றியமையாதவராயினும் மக்கள் தாமாகவே கர்த்தாவை வழிபட்டுப் பாவநீக்கமும் விவிலிய நூல் உணர்வும் பெற்று விண்ணகம் அடையலாமென்பர்.
3. அப்பத்தில் (நற்கருணையில்) என்றும் இயேசு வீற்றிருப்பர் என நம்புவர்.	3. இதனை நம்பார்.

வீடுபேறு

இறைவனை நேசித்தும் அவனது அன்புக்கட்டளைகளைக் கடைப்பிடித்தும் வாழ்ந்துவரின் விண்ணகம் கிட்டும். அவனது அன்புக் கட்டளைகளாவன: 1. நீர் வேட்கையுடையவர்களுக்கு நீர் அளித்தல் 2. பசியுடையவர்க்கு உணவளித்தல் 3. உடையற்றவர்களுக்கு உடை நல்குதல் 4. நோயுற்றாருக்கு உதவியும் ஆறுதலும் தருதல் 5. சிறைப்பட்டவர்க்கு ஆறுதலும், அறவுரையும் வழங்குதல் 6. அன்னியரையும் வரவேற்றல் என்பனவாம்.

இவையன்றி, விசுவாசம் (தன் எதிர்பார்ப்பு கிடைக்கும் எனக் கருதுவது). நம்பிக்கை (கொண்ட கருத்தில் உறுதிப்பாடு, அன்பு என்ற மூன்றும்) இன்றியமையாதனவாகும். இம்மூன்றும் கடவுள், உயிர், தான் எனும் முப்பொருள்கள் மீதும் அமைதல் வேண்டும். இம் மூன்றிலும் இறுதியாகக் கூறப் பெற்ற அன்பே முன்னைய இரண்டினும் இன்றியமையாததாகும். அவ் அன்புக் கட்டளைகளை நிறைவேற்றியோர்க்குத் தம் உடலும், தம் தீய எண்ணங்களும் அழியும். அந்நிலையில் அவ்வுயிர் இறைவனுக்கு உகந்த இடத்தில் இருக்கும். பின் தீர்ப்பு வழங்குங்கால் ஒரு ஒளி உண்டாகும். அதுபொழுது தாம்செய்த பாவங்களைக் கர்த்தர் மன்னித்து அருள்புரிவன் என நினைப்பவர்க்கு விண்ணகம் கிட்டும். விண்ணகத்தில் கர்த்தாவும் உயிரும் நேருக்கு நேராக இருந்து மகிழும்.

உ

சிவஞான சித்தியார் பரபக்கம்
செய்யுள் முதற்குறிப்பகராதி

செய்யுள் முதற்குறிப்பு	செ.எண்	செய்யுள் முதற்குறிப்பு	செ.எண்
அங்கியான	51	அறிகின்ற	199
அங்குரம்வித்தின்	107	அறிந்திடா	77
அஞ்சியன்	291	அறியான்புரு	262
அணுவானவை	177	அறிவதேபொரு	136
அத்தம்தெளி	218	அறிவாயகி	220
அநாதியேலமை	49	அறிவினோடு	258
அநாதிமுத்த	133	அறிவுபூதம்	41
அந்தவாய்	146	அறிவுடற்குண	42
அயன்றனை	274	அறிவுதானுட	52
அரியினொடு	99	அனைத்தினையும்	94
அரிசனநூறு	140	அன்றியுமா	289
அருமறையா	4	ஆசையுற்றுழல்	59
அருவமே	22	ஆதிதானாகி	270
அருகனுக்கன	150	ஆதிநடு	1
அருஞ்செயலி	204	ஆதியாயருவ	263
அருந்தவனாம்	203	ஆமையாய்	280
அருவம்முரை	212	ஆயம்முட	213
அருவுணர்வு	124	ஆரணங்க	251
அருவெனில்	88	ஆர்வகோபமான	153
அலகின்மணி	228	ஆறுகாரிய	160
அலகிறந்த	98	ஆறுதாதுக்	226
அலைகடல்	268	ஆனகன்ம	231
அவயவம்	137	ஆனந்தம்	206
அழிகின்றதா	201	ஆனவைம்பொறி	39
அழித்திடும்	93	இங்கடா	282
அழிந்துணர்வை	112	இச்சைவெறுப்	125
அழிப்பரி	277	இச்சையா	272
அறத்தின்	151	இடித்துமின்னி	33

செய்யுள் முதற்குறிப்பு	செ.எண்	செய்யுள் முதற்குறிப்பு	செ.எண்
இந்திரபுரோ	11	உயிரானவை	176
இந்திரியவீதி	122	உயிரினை	79
இந்நூலைச்	102	உருவமு	19
இப்படிப்பி	300	உருவியல்	66
இப்படியன்றி	16	உருவொடு	87
இயல்புகாணிலை	44	உருவமெலாம்	110
இயம்புகின்ற	254	உருவாதி	119
இயம்பூர	3	உருவின்கணே	195
இருபான்மைய	175	உரைதந்திடா	194
இருளிற்பழு	222	உரைபோற்	214
இருள்பொதிந்த	248	உரையானது	207
இலகுசோதி	238	உரையான	211
இல்லது	85	உலகினைப்	83
இறந்திடு	53	உலகந்தா	223
இறைவனையு	10	உள்வழக்கில்	72
இன்பமெய்தி	48	உள்ளதாவது	32
இன்பபூமி	155	உள்ளது	84
இன்பொடு	20	உற்றிடும்	181
ஈங்குவான்	75	உற்றெழு	90
ஈசனரு	2	உன்னிய	184
ஈசனாரய	26	உன்னினீயு	250
ஈண்டளவை	12	உன்னுகின்ற	255
ஈறிலா	143	ஊடுவதுணர்வ	30
உடல்பூத	108	எங்கள் நூல்	89
உடல்வருந்த	161	எங்குநின்றிடி	247
உடனின்று	197	எங்குமாய்	80
உணர்வுகாரண	116	எப்பொருட்கு	126
உணர்வுசார்ந்	73	எப்பொருளு	106
உணர்தரா	167	எழுதல	281
உண்டொரு	182	எனக்குநீ	82
உந்தியிலயனை	264	என்றுமிலா	109

செய்யுள் முதற்குறிப்பு	செ.எண்	செய்யுள் முதற்குறிப்பு	செ.எண்
என்னுயிரத	164	கழிந்தவுணர்	121
ஏகநானென	234	காணொணா	50
ஏணதொன்று	159	காண்டலோ	34
ஏணுமொன்று	149	காமமாதி	61
ஏழ்கடல்	266	காயத்தின்	21
ஐந்துகந்த	132	காயமுட	120
ஐந்துநான்கொரு	40	காரணகாரிய	70
ஒத்துநின்றுட	246	காரணம்மவை	45
ஒத்துறு	14	காரியமாயுல	127
ஒருகாலத்தோ	123	குடை நிழலுங்	131
ஒருகாலத்துண	115	குரோதமேகுண	60
ஒருகோட்ட (விநாயகர் காப்பு, பக்கம் 33)		குற்றவீடராக	68
ஒருபொருளை	100	கூடாவணு	179
ஒருமரத்தி	129	கூறுகூவன்	163
ஒருவனென்றோ	69	கூறுசேர்வை	38
ஒன்றாமிரவி	221	கேடிலாச்சந்	113
ஒன்றினை	170	கைவரை	288
ஒங்கியவுரு	92	கொண்டுமுன்	168
ஒதிய	286	கொன்றிடலா	91
ஒதியேயுல	240	கோசவுரு	227
கடத்தினி	138	சந்தானம்	114
கண்டநூறரு	157	சாற்றியகால	81
கண்ணினிற்	169	சாற்றுபெய	13
கந்தம்வெம்மை	47	சாற்றுமறை	233
கரணம்வாயு	54	சித்தேயுல	253
கருதிய	191	சிலபொருளை	95
கருமங்கள்	202	சீவன்கள்	275
கருவிகண்படு	144	சுத்தமானது	249
கருவி தன்	152	சுத்தவடி	8
கருவியுமொளி	139	சுத்தனறிவ	260
கருவியெல்	230	சூடகம்கடக	257

செய்யுள் முதற்குறிப்பு	செ.எண்	செய்யுள் முதற்குறிப்பு	செ.எண்
சூலிகா	297	நீதியாநித்த	190
செய்திடும்	17	நீதியார்வேத	63
செய்தியு	185	நீதியாலொளி	236
செயறருவினை	189	நீரின்வந்தெழு	37
சொல்வந்	210	நீர்போல	97
சொல்லதொன்று	154	நூலினை	273
சொன்னநால்	74	நூலுரைத்தா	105
சோதிமாமணி	245	நெல்லிற்	215
ஞாலமுண்	290	பசித்தல்தாக	145
ஞானஞேயங்க	78	பசுப்படுத்	192
தப்பிலாவாகு	186	படிக்குநூல்க	62
தவகுண	298	பண்டைமறை	5
தாங்குமுலகு	224	பயப்பட்டு	299
தாதுவானது	271	பரசுடன்	285
தானமென்	283	பரந்துமீது	148
தானேதானா	232	பரிணாமம்	208
தின்னுமது	130	பழுதிலாமறை	35
தோறறி	296	பற்றதின்றி	244
தேவருமுனி	183	பாசத்தை	294
தையலாரூட	27	பார்த்த	292
தோலிரத்த	58	பார்புனல்	166
தோற்றிய	71	பிரமநா	295
நாரண	276	பின்வரு	287
நானேபிரம	219	புண்ணியபாவ	173
நித்தமாயெங்	188	புத்தனவன்	104
நிறைந்துகாய	156	புருடன்பிரகிரு	261
நிறைவெங்கு	200	புற்றினோர்	239
நிற்றலோடு	147	பூதத்தே	23
நீடுபாவ	158	பூதமதி	15
நீடுபுக	7	பூதமா	55
நீடுவேத	235	பூதமானவை	36

செய்யுள் முதற்குறிப்பு	செ.எண்	செய்யுள் முதற்குறிப்பு	செ.எண்
பூதமேவு	46	மாய்ந்துபின்	18
பூமாவென	209	மாலயன்மா	6
பூர்வகன்ம	162	மாலினார்	279
பெறுவதிங்கென்	86	மிகையாமணு	178
பேயுநரகரு	118	மீனாமை	265
பேறிழவிடை	172	முடிவின்றி	198
பொய்கைவாய்	267	முத்திநிலம்	96
பொருளதுபுற	141	முழுதுணர்ந்	64
பொருளிந்திரி	217	முன்கண்ட	216
பொன்குலாவு	57	முன்னாகப்பல	101
போகத்தை	24	முன்னூலும்	103
போக்கொடு	187	மூலம்புரியட்ட	259
போதமிகுத்தோ	9	வரம்பிலா	165
போதமுண்டு	76	வாசமாமல	142
போதமும்தவிர	135	வாசமார்குழ	28
போதமும்மெலி	43	வாராநெறி	174
போதமேபொரு	134	வாழவே	25
போற்றும்	229	வானங்கீழ்	278
மண்புனல்	67	வித்தெழுந்து	256
மதிநிலா	29	வினையுணர்வு	117
மரங்களுயிரல்	128	வீட்டினை	31
மருத்தெண்ணெய்	111	வெண்மை	171
மருவிய	65	வேதஞ்சுயம்பு	193
மறைநின்று	196	வேதமேயோதி	180
மன்னுமறை	252	வேதனாரண	56
மன்னும்பிரம	225	வேறதாகு	243
மாயநூலது	242	வேறதாகியது	241
மாயமான்	284	வேறுபலம்	205
மாயைதா	293	வேறுவாயில்	237
மாயையாயுயி	269		